# நன்னூல்

# உரை வளம்

5

## பதவியல்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

# நன்னூல் உரைவளம் (தொகுதி-5)

# பதவியல்

பதிப்பாசிரியர்
முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
இரண்டாம் முதன்மைச் சாலை,
தரமணி, சென்னை—600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Pataviyal (Vol. 5)** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 693 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 320 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 140/- (Rupees One hundred and forty only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

**முனைவர் கரு.அழ. குணசேகரன்**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை – 113**

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப்புலவர், வை.மு.சடகோப ராமானு சாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம்

பிள்ளை, கொ.இராம லிங்கத்தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவர் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் இரா.கண்ணன், சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரை வளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

கரு.அழ.குணசேகரன்

சென்னை – 113.

12.10.2010.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக்கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக்கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன. நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன

இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளை யேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

# நன்னூல் உரைவளம் – 5

## எழுத்ததிகாரம்

## பதவியல்

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| *அவி* | – | *அவிநயம்* |
| *இடள்* | – | *இதன் பொருள்* |
| *இல, விள* | – | *இலக்கண விளக்கம்* |
| *உ–ம்* | – | *உதாரணம்* |
| *உணர்–ற்று* | – | *உணர்த்துதல் நுதலிற்று* |
| *எ–டு* | – | *எடுத்க்காட்டு* |
| *எ–று* | – | *என்றவாறு* |
| *எ–னின்* | – | *என் நுதலிற்றே எனின்* |
| *சுவாமி* | – | *சுவாமிநாதம்* |
| *சூ–ம்* | – | *சூத்திரம்* |
| *தொல், எழு* | – | *தொல்காப்பியம் எழுத்ததிகாரம்* |
| *தொல், சொல்* | – | *தொல்காப்பியம் சொல்லதிகாரம்* |
| *தொல், பொருள்* | – | *தொல்காப்பியம் பொருளதிகாரம்* |
| *தொன்* | – | *தொன்னூல் விளக்கம்* |
| *நச்* | – | *நச்சினார்க்கினியர்* |
| *ந.பா* | – | *நவநீதப் பாட்டியல்* |
| *நேமி* | – | *நேமிநாதம்* |
| *பா–டு* | – | *பாட வேறுபாடு* |
| *பொ–ரை* | – | *பொழிப்புரை* |
| *மா.அலங்* | – | *மாறனலங்காரம்* |
| *து.வீ* | – | *முத்துவீரியம்* |
| *வீர* | – | *வீரசோழியம்* |
| *வெண், பாட்* | – | *வெண்பாப் பாட்டியல்* |

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ, ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே** a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au, k͟h **எனவும்,**

**க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல் , வ், ழ், ள், ற் , ன் - வ்வெழுத்துக்கள் முறையே** k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p , m , y , r , l , v ,ḻ ,ḷ, ṟ , ṉ, k͟h

**எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.**

## எழுத்ததிகாரம்

# பதவியல்

127. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

எழுத்து ஏ தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின்
பதம் அது பகாப்பதம் பகுபதம் என
இருபால் ஆகி இயலும் என்ப.

eḷuṭṭu ē ṭaṉiṭṭum ṭotarnṭum poruḷ ṭariṉ
paṭamām aṭu pakāppaṭam pakupaṭam eṉa
irupāl āki iyalum eṉpa.

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

CHAP. II. WORDS

1.WORD

**Word defined and its kinds**

Letters are termed words, when they denote a meaning either singly, or two or more taken together; and (the learned) say that words are of two kinds, viz., Simple and Compound.

### ஒப்புமைப் பகுதி

எழுத்தே தனித்து மிணைந்துந் தொடர்ந்தும்
பதமாம் பொருடரி னதுபகாப் பதம்பகு
பதமென வாயிரு பகுதித் தென்ப

(இ.வி.:38)

எழுத்தொன்று பலபொருளைத் தரிற்பதம் பகாமையி
னைப் பகுமையாம்.............

( சுவாமி.:23:1)

### மயிலைநாதர்

என்பது சூத்திரம். இவ் வோத்து என்னுதலியதோ வெனின், ஒத்து நுதலியதும், ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின், இவ் வோத்து என்ன பெயர்த்தோ வெனின், பதங்களினது இயல்பு உணர்த்ததிற் றாதலாற்

பதவிய லென்னும் பெயர்த்து. மேலோத்தினோடு இதற்கு இயைபு என்னையோ வெனின், மேல் எழுத்திலக்கணம் பன்னிரு பகுதியான் உணர்த்தப்படு மென்றவற்றுள் எழுத்திற்கே யுரிய பத்திலக்கணமும் போனவோத்தினா னுணர்த்தி, அவற்றின் பின்னின்றது அவ் வெழுத்தினானாகிய பதமாகலின், அதனை ஈண்டுணர்த்துதலின், இயைபுடைத் தென்க.

இவ்வோத்தினுள் இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், பொதுவகையாற் பதமாமாறும் அதன் பகுதியும் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.**: மேற் சொன்ன எழுத்துத் தானே தனியே நின்றும் தொடர்ந்து நின்றும் பொருளை விளக்குமே யெனின் அது பதமென்பதாம்; அது பகாப்பதமும் பகுபதமுமென இரு பகுதியாய் நடக்கு மென்று சொல்லுவர் புலவர், **எ–று.**

எனவே எல்லா மொழியும் ஓரெழுத்துப்பதம் தொடரெழுத்துப்பத மெனவும் பகாப்பதம் பகுபத மெனவும் இவ் விரண்டாய் அடங்கு மென்பதாம். இறிஞி, மிறிஞி முதலாயின தொடர்ந்தனவேனும் பொருள்தாராவாகலிற் பதமாகா வென்பதாயிற்று. பதமெனினும் மொழியெனினும் சொல்லெனினும் ஒக்கும்.

> **"தன்னை யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச்**
> **சுட்டுதற் கண்ணேயாஞ் சொல்"**

என்பது அவிநயப் புறநடை.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ–னின்,** நிறுத்த முறையானே பதத்தினது இலக்கணம் உணர்த்துவான் தொடங்கி, எழுத்தால் பதமாதலும் அஃது இத்துணைய என்பதூஉம் **உணர்–ற்று.**

**இ–ள்.**: எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்று தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிறபொருளைத் தருமாயின் அது பதமாமம்; அப்பதம் பகாப்பதம் எனவும், பகுபதம் எனவும் இரண்டு பகுதியவாகி நடக்கும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

எழுத்தானாய பதம் அரிசனம் முதலியவற்றால் சமைத்த சுண்ணம் போலாது மலரால் சமைத்த மாலைபோல் நிற்றலின் எழுத்தே என்றும், ஓரெழுத்தேனும் பிறபொருள் தருதலின் பதமாம் என்பார் தனித்து என்றும், ஒன்று இரண்டு பல என்பன வடநூல் வழக்கு, ஒன்றல்லன எல்லாம் பல என்பது தமிழ்நடை யாகலின் வடநூல் வழக்குப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர்,

> **"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி இரண்டிறந்**
> **திசைக்கும் தொடர்மொழி உளப்பட மூன்றே மொழிநிலை**
> **தோன்றிய நெறியே"**

***★எனக் கூறினாரேனும், கல் வில் என்றற் றொடக்கத்து ஈரெழுத்தொருமொழிகளும் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நின்றே பிற பொருள் உணர்த்தலின் இவற்றைத் தொடர்ந்தன அல்ல எனக் கூறினாரல்லர் என்பதற்குத் தொடர்மொழி என வாளா கூறாது***

*"இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி" என அடை கொடுத்து ஓதியதே சான்றாகலால் தமிழ்நடைபற்றி,*

> *"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"★*

என்றார்க்கு இரண்டெழுத்துத் தொடர்ந்தனவல்ல எனின் அது மொழியும் அன்று என்பார் தனிநிலை ஒழிந்தனவற்றைத் தொடர்ந்து என்றும், இறிஞி மிறிஞி எனின் தொடருமேனும் தன்னை உணர்த்துமன்றிப் பிறபொருள் தாராமையின் பதம் ஆகாது என்பார் பொருள்தரின் என்றும்,

> **"தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற் கண்ணேயாம் சொல்"**

என்பவாகலின் பொருள் என்றது பிறபொருள் என்பார், உணர்த்தின் என்னாது தரின் என்றும், அணு என்னும் ஒலி நுட்பத்தான் எழுத்தானாற் போல் எழுத்தென்னும் ஒலி நுட்பத்தான் மொழியாம் என்பார் பதமாம் என்றும், இப் பதவியலுக்கு மேற்கோள் ஆரியம் என்பார் மொழி என்னாது பதம் என்றும் கூறினார். இச் சூத்திரத்துள் தொடர்ந்தும் என்றது **பிறர் நூற்குற்றங் காட்டல்** என்னும் மதம்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** நிறுத்தமுறையானே பொது வகையாற் பதம் ஆமாறும் அதன் பகுதியும் கூறுகின்றது.

**இ-ள்.: எழுத்தே தனித்தும்** -மேற்சொன்ன எழுத்துத் தானே தனித்து நின்றும், **தொடர்ந்தும்**-அவ்வெழுத்து இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்றும், **பொருள் தரில்**-பொருள் விளக்குமெனின், **பதமாம் அது** - பதமென்பதாம்; அப்பதம், **பகாப்பதம் பகுபதமென**-பகாப்பதம் பகுபத மென்னும், **இருபாலாகி இயலுமென்ப** - இரண்டு பகுதியாய் நடக்கு மென்று சொல்லுவர் புலவர், **எ-று.**

> **"தன்னை யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச்**
> **சுட்டுதற் கண்ணே யாஞ் சொல்"**

என்பது அவினயப் புறநடை. எல்லா மொழியும் ஓரெழுத்துப் பதம் தொடரெழுத்துப் பதமெனவும் பகாப்பதம் பகுபதமெனவும் இவ்விரண்டாய் அடங்கும் என்ப. இறிஞி, மிறிஞி முதலாயின தொடர்ந்தனவேனும் பொருள் தராவெனிற் பதமாகாததென மறுக்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** நிறுத்தமுறையினாலே பதத்திலக்கணத்தை அறிவிக்கத் தொடங்கி எழுத்தினாலே பதமாதலும் அது இத்தனை வகைப்படு மென்பதும் உணர்த்துகின்றது.

**இ-ள்.: எழுத்தே**-எழுத்துகள் தாமே, **தனித்தும்**-ஒவ்வொன்றாகத் தனித்தாகிலும், **தொடர்ந்தும்**-இரண்டு முதலாகத் தொடர்ந்தாகிலும், **பொருள்**-பிறபொருளை, **தரின்**-காட்டுமே யானால், **பதமாம்**-பதமாகும், **அது**-அப் பதமானது, **பகாப்பத** (மென) - பகாப்பத மெனவும், **பகுபதமென**-

பகுபத மெனவும், **இருபாலாகி**–இரண்டு வகையினை யுடையதாகி, **இயலும்** – நடக்கும், **என்ப**–என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

1. பதமின்னதென்பதும் அதன்வகையும் கூறுஞ் சூத்திரம் யாது.

எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
விருபா லாகி யியலு மென்ப.

(எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதம் ஆம்; அது பகாப்பதம் பகுபதமென இருபாலாகி இயலுமென்ப).

**இ–ள்.: எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதம் ஆம்** – எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிறபொருளைத் தருமாயின் அது பதமாம்; **அது பகாப்பதம் பகுபதம் என இருபால் ஆகி இயலும் என்ப–** அப்பதம் பகாப்பதமெனவும் பகுபதமெனவும் இரண்டு வகையினை யுடையதாகி நடக்கும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

2.பதமாவது யாது?

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருடரிற் பதமாம்"

3.அப்பத மெத்தனைவகைப்படும்?

"அது பகாப்பதம் பகுபதமென விருபாலாகி வியலுமென்ப"

4. பொருடரிற் பதமாம் என்பதனாற் பெறப்படுவது யாது?

எழுத்துத் தனித்துநின்ற வழியும் தொடர்ந்துநின்ற வழியும் பொருள் தராவிடத்துப் பதமாகா. ங என்றவிடத்தும் ஙஞணநமன என்றவிடத்தும் தம்பெயரையன்றி வேறு பொருளுணர்த்தாமையின் பதமாகாமை காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** நிறுத்தமுறையே பதத்தின் இலக்கண முணர்த்தத் தொடங்கி எழுத்தினாற் பதமாவதும் அதன் வகையு முணர்த்துகின்றது.

**இ–ள்.: எழுத்தே** – (மேலே சொல்லிய பத்திலக்கணத்தையுமுடைய) எழுத்துக்களே, **தனித்துந் தொடர்ந்தும்**–ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்தும், **பொருடரிற் பதமாம்**–பிற பொருளைத் தருமாயின் அது பதமாம், **அது**–அந்தப் பதம், **பகாப்பதம் பகுபத மென விருபாலாகி**–பகாப்பத மெனவும்; பகுபத மெனவும் இரண்டு வகையாகி, **இயலுமென்ப** – நடக்கு மென்று சொல்லுவர் புலவர், **எ–று.**

'தன்னை யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற் கண்ணேயாஞ் சொல்' என்றா ராதலால், இறிஞி மிறிஞி எனில், தொடரு மாயினுந் தன்னை யுணர்த்துவ தன்றிப் பிற பொருளைத் தராததினாலே அது பதமாகாதென்று சொல்ல வந்தவர் பொருடரிற் பதமாமென்றார்.

"ஓரெழுத்தொருமொழி யீரெழுத்தொருமொழி

யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட
முன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் இரண்டலல்லவை பலவென்னும் வடநூல் நடைபற்றி இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழியுளப்பட மொழிநிலை மூன்றென்றார். இவர், ஒன்றலல்லவை பலவென்னுந் தமிழ் நடைபற்றி மொழிநிலை யிரண்டென்றாரெனக் காண்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

எழுத்தின் புறத்திலக்கணமாய பதம் புணர்பு என்னும் இரண்டனுள் எழுத்தாலாகிய பதத்திலக்கணத்தைக் கூறும் இயல். இவ்வியலுக்கு வடநூலின் மொழியிலக்கணத்தை ஆதாரமாகக் கொண்டாராதலின் இதனை 'மொழியியல்' என்னாது 'பதவியல்' என்றார்.

உரை :– **எழுத்தே** – எழுத்துக்கள் தாமே, **தனித்தும் தொடர்ந்தும்**– (ஒவ்வொன்றாகத்) தனித்தாகிலும் (இரண்டு முதலாகத்) தொடர்ந்தாகிலும், **பொருள் தரின்** – பிறபொருளைத்தருமாயின், **பதம் ஆம்** – பதமாகும்; **அது**– அப்பதமானது, **பகாப்பதம் (என)** – பகாப்பதமெனவும், பகுபதம் என – பகுபதமெனவும், **இருபால் ஆகி** – இரண்டுவகையினை யுடையதாகி, **இயலும் என்ப** – நடக்கு மென்று சொல்வர் (புலவர்).

குறிப்பு :– பகாப்பதம் – பிரிக்கக்கூடாதபதம்; **பகுபதம்** – பிரிக்கக் கூடியபதம். இவ்வாசிரியர் "ஸுப்திஙந்தம்பதம்" என்னும் வையாகரணர் மதத்தைத்தழுவாது, "சக்தம்பதம்" என்னும் கையாயிகர்மதத்தைத் தழுவி, 'பொருள்தரிற் பதமாம்' என்றார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதம் ஆம்**–எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிற பொருளைத் தருமாயின் அது பதமாம், **அது பகாப்பத (மென) பகுபதமென இருபாலாகி இயலும்**–அப்பதம் பகாப்பத மெனவும் பகுபத மெனவும் இரண்டு வகையினை யுடையதாகி நடக்கும், **என்ப**–என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். எழுத்தே** – எழுத்துக்கள் தாமே, **தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்** – ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிறபொருளைத் தருமாயின் பதமாம், **அது பகாப்பதம் (என) பகுபதமென இருபாலாகி இயலும்** – அப்பதம் பகாப்பதமெனவும் பகுபதமெனவும் இரண்டு வகையினையுடையதாகி நடைபெறும், **என்ப** – என்று சொல்லுவர் புலவர். **எ–று.**

எழுத்தே தனித்தும் பதமாம், தொடர்ந்தும் பதமாம் பிறபொருள் என்பதனாற் பலவெழுத்து மொழியுங் கருதப்பட்டன.

**உ–ம்.** ஆ, ஈ என ஓரெழுத்து மொழிகள் காண்க. கிளி, அணி; மரம், காலம்; அரக்கு, கஞ்சம்; பம்பரம், தரங்கம்; உத்திராடம், சதபத்திரி எனப் பலவெழுத்துமொழி காண்க.

எழுத்தே பொருடரின் பதமாம் எனவே பொருடராவிடிற் பதமாகாதென்று எதிரதுமறுத்து மீட்சிமொழியாயிற்று.

**உ–ம்.** கி, என்று தனித்துவந்து பொருடராமையிற் பதமாகாமை காண்க.

இறிஞி என்று பலவெழுத்துத் தொடர்ந்துவந்து பொருடராமையிற் பதமாகாமை யுணர்க.

கி என்பது தனியே நின்று கிகரம் என்னும் எழுத்தாகிய பொருளைத் தரும், இறிஞி என்று தொடர்ந்த மூவெழுத்துக்களும் இகரறிகர ஞிகர எழுத்துக்கள் என்னும் பொருளைத் தருமே இங்ஙனமாகவும் பதமாகா வென்னலாமோவெனின் இங்கே பொருளென்றது எழுத்தாகிய பொருளை யன்று பிறபொருளையாதலின்; பிறபொருளையுணர்த்தாமையிற் பதமாக வில்லை யென்றறிக.

இங்கே எழுத்தைக் காட்டும் போதும் பதமாமென்று ஆசிரியர் கருதினாராயின் பொருடரின் என்பதைவிட்டு எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பதமாம் என்று கூறுவர். இவ்வாறு கூறாமற் பொருடரின் என்பதைக் கூடிக் கூறினமையாற்றான் எழுத்தல்லாத பிறபொருளையே ஈண்டுப் பொருளென்று கருதினாரென்பது தெளிவாயிற்று. "தன்னை யுணர்த்தினெழுத்தாம் பிறபொருளைச், சுட்டுதற்கண்ணே யாஞ்சொல்" என்று பிறர் வகுத்துணர்த்தியதும் அறிக.

### வை.மு. சடகோபராமானுசாசாரியார்
### சே. கிருஷ்ணமாசாரியார்

எழுத்தின் புறத்திலக்கணம் இரண்டிற் பதத்தின் இலக்கணத்தைச், சொல்லும் இயல். இவ்வியலுக்கு ஆதாரம் பெரும்பாலும் வடமொழியாதலால் அது தோன்ற, 'மொழியியல்' எனப் பெயர் குறியாமல் 'பதவியல்' எனப் பெயர் குறித்தார்போலும். (மொழி–தமிழ்ச்சொல்; பதம் – வடசொல்).

இ–ள்.:– **எழுத்தே** – எழுத்துக்கள் தாமே, **தனித்தும்**–(ஒவ்வொன்றாகத்) தனித்தாயினும், **தொடர்ந்தும்**–(இரண்டு முதலாகத்) தொடர்ந்தாயினும், **பொருள் தரின்**–பொருளைத் தருமாயின், (அது), **பதம் ஆம்**–பதமாகும்; **அது** – அப்பதம், **பகாப்பதம் பகுபதம் என**– பகாப்பத மென்றும் பகுபத மென்றும், **இரு பால் ஆகி**– இரண்டு வகையை யுடையதாகி, **இயலும்**–நடக்கும், **என்ப**– என்று சொல்வர், (புலவர்;) **எ–று.** பகாப்பதம் – பிரிக்கக் கூடாத பதம், பகுபதம் – பிரிக்கக் கூடிய பதம்.

### பவானந்தம் பிள்ளை

இ–ள். எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் – எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத்

தொடர்ந்தும் பிற பொருளைத் தருமாயின், பதம் ஆம் – (அது) பதம்ாம். அது பாகப்பதம் – (என) பகுபதமென இருபாலாகி இயலும் – அப்பதம் பாகப்பதமெனவும் பகுபதமெனவும் இரண்டு வகையினை யுடையதாகி நடக்கும், என்ப – என்று சொல்லுவர் புலவர். எ–று.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இஃது எழுத்தின் புறத்திலக்கணம் இரண்டில் பதத்தின் இலக்கணத்தைச் சொல்லும் இயல்.

இவ் வியலுக்கு ஆதாரம் பெரும்பான்மையும் வடமொழி யாதலால், அது தோன்ற 'மொழியியல்' எனப் பெயர் கூறாது பதவியலெனப் பெயர் கூறினார். (மொழி–தமிழ்ச்சொல், பதம்–வடசொல்.)

(இ–ள்.) எழுத்தே–எழுத்துக்கள் தாமே, தனித்தும் தொடர்ந்தும்–ஒவ்வொன்றாகத் தனித்தாகிலும் (இரண்டுமுதலாகத்) தொடர்ந்தாகிலும், பொருள் தரின் – பிறபொருளைக் காட்டுமேயானால், பதம் ஆம்–பதமாகும்; அது–அப் பதமானது, பகாப்பதம் பகுபதம் என– பகாப்பதமெனவும் பகுபதமெனவும், இருபால் ஆகி–இரண்டு வகையினை யுடையதாகி, இயலும் என்ப–நடக்கும் என்றுசொல்லுவர் (புலவர்). **எ–று.**

**பொ–ரை.:** எழுத்துக்கள் தனித்தாவது, தொடர்ந்தாவது, அருத்தத்தைத் தந்தால் பதம் ஆகும்; அது பகாப்பதம், பகுபதம் என இரண்டு வகைப்பட்டு நடக்கும் என்பார் அறிவுடையோர்.

பகாப்பதம்–பிரிக்கக் கூடாதபதம், பகுபதம்–பிரிக்கக் கூடிய பதம். (பகுத்தல்–பிரித்தல்.)

## கா. நமசிவாய முதலியார்

பதவியல், முற்கூறிய எழுத்துக்களாலாகிய பதத்தின் இலக்கணத்தைக் கூறும் இயல். இவ்வியல் வடமொழி பற்றிய இலக்கணத்தையுந் தழுவிச் சொல்கின்றதாதலால், இதற்குப் பதம் என்னும் வடமொழியை முற்கூட்டிப் பெயரிடுவாராயினர். **பதம், மொழி, சொல், கிளவி** என்பன ஒரு பொருட் சொற்கள்.

**எழுத்தே** – எழுத்துக்கள் தாமே, **தனித்தும்** – (ஒவ்வொன்றாகத்) தனித்தாகிலும், **தொடர்ந்தும்** – (இரண்டு முதலாகத்) தொடர்ந்தாகிலும், **பொருள்** – பொருளை, **தரின்** – தந்தால், **பதமாம்** – பதமாகும்; **அது** – அப்பதமானது, **பகாப்பதம்** (என) – பகாப்பதம் எனவும், **பகுபதம் என** – பகுபதம் எனவும், **இருபால் ஆகி** – இரண்டு வகையினையுடையதாகி, **இயலும்** – நடக்கும், **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்).

## மோசகு பொன்னையா

எழுத்தின் அகத்திலக்கணத்தை எழுத்தியலில் கூறிப் புறத்திலக்கணத்தைப் பதம், புணர்ப்பு என இரண்டாகப் பகுத்துக் கூறுவாராய்,

முதற்கண் அது மொழிப்பட்டு நிற்கும் நிலையில் விளங்கித் தோன்றும் அதன் புறத்திலக்கணத்தைப் பதவியலிற் கூறுகின்றார். இவ்வாசிரியர் சொற்களை முன்னையோர் கண்ட மரபு நிலைப்படி யல்லாமல், புதுமுறையில் பகாப்பதம், பகுபதம் என நாட்டி, பகுபதங்களைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறாகப் பகுத்து வடமொழி மரபு பற்றி உணர்த்துகின்றார் ஆதலின், இவ்வியலுக்கு மொழியியல் எனப் பெயரிடாது, பதவியல் எனப் பெயரிட்டு வழங்கினார் என்பர். தம் காலத்தும், அதற்கு முன்னரும் ஆரியச் சொற்கள் தமிழில் புகுந்து வழக்கில் இடம் பெற்றமையின், பொதுவெழுத்தாலும் சிறப்பெழுத்தாலுமாகிய அவை தமிழ் மொழியில் வடசொல்லாமாறும் இவ்வியலின் இறுதியில் இவ்வாசிரியராற் கூறப்படுகின்றது.

இவ்வாசிரியர் இவ்வியலில் பதத்தின் உறுப்புக்களாகக்கொள்ளும் பகுதி, விகுதி,இடைநிலைகளை உருபன்கள் என்றும் ஏனைய சாரியை, சந்தி, விகாரம் முதலியவற்றை ஒலித்திரிபுகள் என்றும் மொழியியல் வல்லார் கொள்வர். தாம் பகுதி எனக் கொண்டதனை அடிப்படையாகக் கொண்டே சொற்கள் பிற உறுப்புக்களை இவர் பிரித்துக் காட்டினாராக, கால்டுவெல் முதலிய மொழியியல் வல்லார், வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் பிரித்துக் காட்டினர்.

**தெளிவுரை**

எழுத்து, தனித்து நின்றும், இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து நின்றும், தனிப் பொருள் உணர்த்துமாயின் பதமெனப் படும். பதம், பகாப்பதம், பகுபதம் என இருவகையவாய் வழங்கும், **எ–று.**

தனியே ஒரெழுத்தாக நின்று தனிப்பொருள் உணர்த்தின் அதுவும் பதமேயாகும்.பொருளாதி ஆறன் முன்னின்று சுட்டிக்காட்டிச் சுட்டுப்பொருள் உணர்த்தின் அல்லது அ இ உ என்பன தனித்து நின்று தனிப்பொருள் உணர்த்தாமையின், அவை மொழி நிறைபிலவாகிப் பதமாந் தன்மையற்றனவாயின. மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்தானாற்போல, அவ்வெழுத்துத் தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம் என்றார் எனக் கொள்க.

ஒன்று பல என்று எண்ணும் முறையே தமிழ் வழக்காயினாற்போல, ஒன்று, இணை, தொடர் எனக் கோடலும் தமிழ் வழக்கே.எழுத்துக்கள் மொழியாங்கால் தனித்தும், இரண்டாக இணைந்தும், முதலெழுத்தினை இரண்டாவதும் இரண்டாவதினை மூன்றாவதும் எனவிவ்வாறு தொடர்ந்தும் நிற்பனவாகி மூவகைப்பட்டு நிற்கும் எனக் கோடலும் பழந்தமிழ் வழக்கேயாம். தொல்காப்பியர்,

*ஒரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி*
*யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட*
*மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.*

என்ற நூற்பாவில், அவ்வாறு மூன்றாகக் கோடல் தமிழ் நெறி என்று வலியுறுத்துக் கூறவே மூன்றே மொழி நிலை தோன்றிய நெறியே என்றார் எனக் கொள்ளலே உண்மை நிலை. இவ்வாசிரியர் பதவியல் என்ற ஒன்றைப் படைத்துக்கொள்வதும், பகாப்பதம், பகுபதம் என்றும், பகுதி,விகுதி,

இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்றும் வகுத்துரைப்பதும், தனித்தும், தொடர்ந்தும் பதமாம் என்பதும் தாஅனாட்டித் தனாது நிறுப்பு என்னும் மதத்தின்பாற்படும்.

ஒலியியலில் ஒலி, ஒலியன், மாற்றொலி என்ற மூன்றையும் விளக்குவதே போல், உருபனியலில் உருபு, உருபன், மாற்றுருபு என்ற மூன்றையும் மொழியியலார் விளக்குவர். அவற்றுள் உருபு எனப்படுவது பொருட்குறிப்புடைய மிகக் குறைந்த ஒலியக் கூறாகும். மொழி வழக்கிற்கு இன்றியமையாத இலக்கணப் பொருட்குறிப்பில் துணைநிலைவழக்குப் பெறும் உருபுகள் அனைத்தும் ஓர்உருபனின் மாற்றுருபுகளாகும். அம்மாற்றுருபுகளில் இலக்கணப் பொருள் விளக்கத்திற்குத் தெளிவாக உள்ள மாற்றுருபு எதுவோ, அதுவேஅவ்வுருபனின் வகைக்குரிய உருபு ஆகும்; அதனையே உருபன் எனச் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

நன்னூலார் 'எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்' என்று இந்நூற்பாவிற் கூறியதை, ஒலியன் தனித்தும், தொடர்ந்தும் பொருள் தரின் உருபாம் எனச் சிறிதுமாற்றினால் அதுவே 'உருபு' என்பதின் விளக்கமாக அமைகின்றது. சிறுகச் சிறுக உருமாற்றம் பெற்றும், அன்றி முழு உருமாற்றம் பெற்றும் பொருட்குறிப்பில் தம்முள் எதிர்நிலை பெறாது, துணைநிலை வழக்கில் அமையும் உருபுகளின் குடும்பப் பெயரே உருபன் என்று கொள்ளும் முறையன்றித், தனித்தனி உருபையே உருபன் எனக் குறிப்பிடம் ஒரு சாரார் வழக்குப் போல், நன்னூலாரின் 'பதம்' என்ற சொல்லாட்சி அமைகின்றது.

ஒலியன்களைப் பிரிந்தறியும் முறை போன்றே உருபன்களையும் குற்றுறழ் இணைகளால் எளிதிற் கண்டறியலாம்.

ஆ போகிறது, ஈ போகிறது என்று குற்றுறழ் இணைகளில் ஆ, ஈ என்னும் ஒலியன்கள் பெயர்ப்பொருள் தந்து அவ்வுறழ் இணையில் தனித்தனி உருபன்களாக உள்ளன. அவை ஒற்றை ஒலிய உருபன்கள், போகிறது, சாகிறது என்ற குற்றுறழ் இணையை முறையே போ + கிற + து; சா + கிற + து எனப் பிரித்தால், போ, சா என்பவை தனித்தனியே வினைப்பொருள் தந்து, இரண்டிரண்டு ஒலியன்களால் ஆன உருபன்களாக அமைந்துள்ளன. கிற என்பது காலப்பொருள் தந்து இரண்டிற்கு மேற்பட்ட ஒலியன்களால் அமைந்துள்ளது; து என்பது பாற்பொருள் தந்து இரண்ட ஒலியன்களால் அமைந்துள்ளது. இவை இலக்கணப் பொருட்குறிப்புள்ள உருபன்கள் என இவற்றைப் பிரித்தறிந்து கொள்ளலாம். தமிழ் உருபன்கள் அனைத்தையும் இவ்வாறு பிரித்துத் தொகுத்துக் கொள்ளலாம்.

உருபன்கள் சொற்களில் அமையும் இயல்பு பற்றி அவற்றை இரண்டாகப் பகுப்பர். ஆடுகள், மாடுகள், வீடுகள்; போகிறான், சாகிறான், ஆழ்கிறான் என இவ்வாறுஅமையும் சொற்களில் ஆடு, மாடு, வீடு; போ,சா, ஆழ் என்னும் உருபன்கள் மேற்காட்டப்பட்டவாறு ஆக்கச் சொற்களில் அமைந்தாலும், தனித்து நின்றாலும் தனித்தனியே, பிற உருபன்களின் சார்பு வேண்டாது, பொருட்குறிப்புடன் வழங்குகின்றன. இவ்வாறு அமையும் உரிமை உருபன்களைத் தனி உருபன்கள் என்று குறிப்பிடுவர். கள், கிறு, ஆன், என அமைந்துள்ள ஏனை உருபன்கள் தனித்து வழங்கும் ஆற்றலின்றித் தனி உருபன்களுடன் கட்டப்பட்டு வழங்குவன ஆதலின், அவற்றைக் கட்டு

உருபன்கள் என்பர். தனி உருபன்களை நன்னூலார் குறிப்பிடும் பகுதிகளோடு ஓராற்றான் ஒப்பவைத் தெண்ணலாம். கட்டு உருபன்களை, அவர் குறிப்பிடும் இடைநிலை, அல்லது விகுதிகளோடு ஒப்பிடலாம்.

பாடகிறான், பாடுகின்றான், பாடாநின்றான் என்ற சொற்களைப் பாடு + கிறு + ஆன்; பாடு + கின்று + ஆன்; பாடு + ஆநின்று + ஆன் என இவ்வாறு பகுத்துக் கொண்டால், கிறு, கின்று, ஆநின்று என்பவை ஒரே சொல்லில் வெவ்வேறு உருவில் அமைந்த வெவ்வேறு உருபுகளாகக் காணப்படினும், ஒரே பொருட்குறிப்பையே, அதாவது நிகழ்கால இலக்கணப் பொருட்குறிப்பையே மூன்றும்பெற்றுத் தம்முள் எதிர்நிலை பெறாது, துணைநிலை வழக்கெய்தி அமைந்துள்ளதால், அம்மூன்றும் ஒரே உருபனின் மாற்றுருபுகள் எனப்படும். இவ்வாறே மாற்றுருபுகளை வகைப்படுத்தல் எளிதாம்.

போகிறான், சாகிறான், பாய்கிறான் என்ற சொற்களில் ஆன் என்னும் கட்டு உருபன் முறையே போகிறு, சாகிறு, பாய்கிறு என்னும் அடிகளோடு இணைந்து ஒட்டிநிற்கின்றது; போகிறு, சாகிறு, பாய்கிறு என்றஅடிகளில்உள்ள கிறு என்னும்கட்டு உருபன் முறையே போ, சா, பாய் என்னும் அடிகளோடு இணைந்து ஒட்டிநிற்கின்றது. போ, சா, பாய் என்பவை கட்டு உருபன்களை ஏற்கும் அடிகளாக இருப்பதோடு, தாம் வேறு எந்தத் தனி உருபனோடாவது ஒட்டி இணைந்துநிற்க வேண்டிய தேவை இல்லாது தனி நிலை பெற்றுள்ளதால் அவை தனித்தனியே வேர்கள் எனவும் குறிப்பிடப்படும். இதனால், வேர்கள் எல்லாம் தனி உருபன்களாகவும், அடிகளாகவும் எப்பொழுதும் இருக்கும்; ஆனால் அடிகள் எல்லாம் வேர்களாகவோ அல்லது தனி உருபன்களாகவோ இருக்க வேண்டிய நியதி இல்லை என்ற உண்மை விளங்குவதறிக.

வேர்கள், முன் ஒட்டாகவோ, பின் ஒட்டாகவோ, இடை ஒட்டாகவோ கட்டு உருபன்களைப் பெறுவதாலேயே சொற்கள் ஆக்கப்படுகின்றன. முன்னர்க் காட்டப்பட்ட போகிறான், சாகிறான், பாய்கிறான் என்ற சொற்கள் பின் ஒட்டுக்களாகக் கட்டு உருபன்களைப் பெற்று ஆன சொற்கள். தமிழில் பின் ஒட்டுச் சொற்களே மிகுதியாக உள்ளன. பகுபத உறுப்பிலக்கணம் அதை விளக்கும். அபூர்வம், நிர் மலம், நிராசை, விரசம் முதலிய வடசொற்களின் வேர்கள் முன் ஒட்டாக கட்டு உருபன்களைப் பெற்றவை. தமிழில் எவ்வளை, கொன்னூர் என இவ்வாறு இடைச்சொற்றொடர்களாய் வருவன முன் ஒட்டுப்பெற்றவை எனக் கொள்ளலாம். துருக்கி முதலிய மொழிகளில் உள் ஒட்டாகக் கட்டு உருபன்கள் அமையுஞ் சொற்கள் உண்டு என்பர்.

(1)

**128.** **உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்**
**கவசவி னாலும் யவ்வி லொன்றும்**
**ஆகு நெடினொது வாங்குறி லிரண்டோ**
**டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.**

உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகு நெடினொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

uyirmavil āṟum ṭa pa navil ainṭum
ka va savil nālum yavvil oṉṟum
ākum netil noṭuām kuṟil iraṇōtu
ōr eḷuṭṭu iyal paṭam āṟu ēḷ siṟappiṉa

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Monoliteral words

Of monoliteral words, there are forty-two important ones, viz., of the Vowels, Six; of the Vowel consonants in the 'm' series, six; of those in the t, p and n series, five each; of those in the k, v and c series, four each; and of those in the 'y' series, one to these (Long Vowel consonants) must be added the two short ones, no and tu.

## ஒப்புமைப் பகுதி

நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி
**(தொல்.பொருள்.:43)**

குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே
**(தொல்.பொருள்.:44)**

நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி
குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே
**(இ.வி.:39)**

உயிர்நெடி லேழு மோரெழுத் தொருமொழி
**(மு.வீ.:116)**

குற்றெழுத் தைந்துங் கொளாமொழி யென்ப
**(மு.வீ.:117)**

உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில்நொது ஆம்குறில் இரண்டோடு
ஓர்எழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின

(தொ.வி.: 48:1–4)

உயிர்போற் கசதந பமவ வென்மொழி
ஆகுமென்மனா ரறிந்திசி னோரே

(மு.வீ.:114)

## மயிலை நாதர்

**எ–ன்**, மேல் எழுத்துத் தனியே நின்றும் பதமாமென்றார், அவை இவை யென்பதூஉம் இத்துணைய வென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.**: உயிரிலும் மகரத்திலும் அவ்வாறும், தவ்விலும் பவ்விலும் நவ்விலும் ஐவைந்தும்,கவ்விலும் வவ்விலும் சவ்விலும் நந்நான்கும், யவ்வில் ஒன்றும் ஆகு நெட்டெழுத்தும், நொவ்வும் துவ்வுமாம் குற்றெழுத் திரண்டுமாக ஓரெழுத் தொருமொழி நாற்பத்திரண்டும் சிறப்புளவாம், **எ–று.**

**வ–று.**: ஆ, ஈ, ஏ, ஐ, ஓ, ஔ; மா, மீ, மூ, மே, மை, மோ; தா,தீ, தூ, தே, தை; பா, பூ, பே, பை, போ; நா, நீ, நே, நை, நோ; கா, கூ, கை, கோ; வா, வீ, வே, வை; சா, சீ, சே, சோ; யா; நொ, து என வரும். இவை சிறப்புள வெனவே, சிறப்பில்லனவும் சிலவுளவாயின. அவை ஆறாமுயிரும், பகர வீகாரமும், சி, சூ, சை, கௌ, வௌ, என்பன போல்வனவு மெனக் கொள்க. 'உயிர் மவிலாறும்' என்றதனை, அவ்வவ் வருக்கங்களி லெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** மேல் எழுத்துத் தனித்தும் தொடர்ந்தும் ஒரு மொழியாம் என்றார்; அவற்றுள் ஓரெழுத்தொருமொழி இவை என்பதூஉம் இத்துணைய என்பதூஉம் **உணர்–ற்று.**

**இ–ள்.**: உயிர் வருக்கத்தும் மவ் வருக்கத்தும் அவ்வாறும், தவ் வருக்கத்தும் பவ் வருக்கத்தும் நவ் வருக்கத்தும் ஐவைந்தும், கவ் வருக்கத்தும் வவ் வருக்கத்தும் சவ் வருக்கத்தும் நந்நான்கும், யவ்வருக்கத்து ஒன்றுமாகும். நெட்டெழுத்தானாகிய மொழி நாற்பதும், நொவ்வும் துவ்வு மாகும் குற்றெழுதானாகிய மொழி இரண்டுடனே, ஓரெழுத்தானாகிய மொழி இந் நாற்பத்திரண்டும் சிறப்பினவாம், **எ–று.**

**உ–ம்.**: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும், மா மீ மூ மே மை மோ எனவும், தா, தீ, தூ, தே, தை எனவும் பா, பூ, பே, பை, போ எனவும் நா, நீ, நே, நை, நோ எனவும் கா, கூ, கை, கோ எனவும் வா வீ வை வௌ எனவும், சா, சீ, சே, சோ எனவும், யா எனவும், நொ, து எனவும் வரும்.

இவற்றுள், ஊ– இறைச்சி; ஓ –மதகுநீர் தாங்கு பலகை; பே–நுரை;

நே–அன்பு; சோ–அரண்; நொ, து என்னும் குறில் இரண்டும் துன்பி, புசி என்னும் ஏவல்.

இவை சிறப்பின எனவே, வகர வீற்றுச் சுட்டுப்பெயர்ப் பொருளை ஒப்புமையான் உணர்த்தி நிற்றலான் ஒள என்னும் ஒரெழுத் தொருமொழியும், சுட்டு வினா உவமைப்பொருளைத் தரும் இடைச்சொல் லாதலால் குற்றுயிர் ஐந்தானாகிய ஒரெழுத் தொருமொழிகளும், கௌ என்னும் உயிர்மெய்யானாய ஒரெழுத் தொருமொழியும், இவை போல்வன பிறவும் சிறப்பில்லன எனக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** ஒரெழுத்துப் பதமாவன இவையெனக் கூறியது.

**இ–ள்.: உயிர் மவிலாறும்** – உயிர் வருக்கத்தில் ஆறும் மகரத்தில் ஆறும், **தபநவில் ஐந்தும்**– தகரத்தில் ஐந்தும் பகரத்தில் ஐந்தும் நகரத்தில் ஐந்தும், **கவசவில் நாலும்** – ககரத்தில் நாலும் வகரத்தில் நாலும் சகரத்தில் நாலும், **யவ்வில் ஒன்றும்** – யகரத்தில் ஒரெழுத்தும், **ஆகுநெடில்** – ஆகிய நெட்டெழுத்தில் ஒரெழுத்துப் பதம் நாற்பதும், **நொ து வாங் குறிலிரெண்டொடு** – நொவ்வும் துவ்வு மாகும் குற்றெழுத்தில் ஒரெழுத்துப் பதம் இரண்டினுடன்,.... **ஆறேழ் சிறப்பின** – நாற்பத்திரண்டும் சிறப்பினவாம், **எ–று.**

"உயிர் மவில்" என்றதனை அவ்வவ் வருக்கங்களில் எனக் கொள்க.

**உ–ம்.:** ஆ, ஈ, ஏ, ஐ, ஓ, ஔ; மா, மீ, மூ, மே, மை, மோ, தா, தீ, தூ, தை, தோ, பா, பூ, பே, பை. போ, நா, நீ, நே, நை, நோ, கா, கூ, கை. கோ, வா, வீ, வே, வை; சா, சீ, சே, சோ; யா, நொ, து. எனவும் இவை சிறப்புளவெனவே சிறப்பில்லனவும் சிலவுளவாயிற்று. அவை ஆறாமுயிரும், பகர வீகாரமும். சீ, சூ, சை, கௌ, வெள என்பன போலவும் எனக் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஒரெழுத்தொருமொழி இவை யென்பதும் இத்தனை யென்பதும் உணர்த்துகின்றது.

**இ–ள்.: உயிர் மவில்** – உயிர் வருக்கத்திலும் மவ் வருக்கத்திலும், **ஆறும்** –அவ்வாறும், **தபநவில்** –தவ் வருக்கத்திலும் பவ் வருக்கத்திலும் நவ் வருக்கத்திலும், **ஐந்தும்**–ஐவ்வைந்தும், **கவசவில்**–கவ் வருக்கத்திலும். வவ் வருக்கத்திலும் சவ் வருக்கத்திலும், **நாலு**–நந்நான்கும், **யவ்வில்**–யவ் வருக்கத்தில், **ஒன்றும்**–ஒன்றும், **ஆகுநெடில்**–ஆகுநெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், **நொ**–நொவ்வும், **து**–துவ்வும், **ஆங்குறில்**–ஆகுங் குற்றெழுத்தாலாகிய மொழி, **இரண்டோடு**–இரண்டுடனே, **ஒரேழுத்தியல் பதம்**–ஒரெழுத்தாலாகிய மொழிகள், **ஆறேழ்**–நாற்பத்திரண்டும், **சிறப்பின**– சிறப்பினவாம், **எ–று.**

**உ–ம்.:** ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும், மா மீ மு மே மை மோ எனவும், தா தீ தூ தே தை எனவும், பா பூ பே பை போ எனவும், நா நீ நே நை நோ எனவும், கா கூ கை கோ எனவும், வா வீ வை வெள எனவும், சா சீ சே சோ எனவும், யா எனவும், நொ து எனவும், வரும். இவற்றுள் ஊ இறைச்சி, ஓ மதகுநீர் தாங்கும் பலகை. பே நுரை, நே அன்பு, சோ மதில், நொ துன்பப்படு, து உண், இவை 'சிறப்பின' வெனவே, கு கெள பீ வே எனச் சிறப்பில்லாதவைகளுஞ் சிலவுள வென்றறிக.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

ஒரெழுத் தொருமொழிக ளெத்தனை?

உயிர்மவி லாறுந் தபநவி லைந்துங்
கவசவி னாலும் யவ்வி லொன்று
மாகு நெடினொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

(உயிர் மவில் ஆறும் த ப நவில் ஐந்தும்
க வ சவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும்நெடில் நொ து ஆம்குறில் இரண்டோடு
ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின)

**இ–ள்.: உயிர் மவில் ஆறும்** – உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும், **அவ்வாறும் தப நவில் ஐந்தும்** – தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் ஐவ்வைந்தும், **கவசவில் நாலும்** – கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும் நந்நான்கும், **யவ்வில் ஒன்றும் ஆகும் நெடில்** – யவ்வருக்கத்தில் ஒன்றும் ஆகு நெட்டெழுத்தாலாய மொழி நாற்பதும். நொ து ஆம் குறில் இரண்டோடு – நொவ்வுந் துவ்வும் ஆகுங் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டுடனே, **ஓர் எழுத்து இயல் பதம் ஆறேழ் சிறப்பின** – ஒரெழத்தாலாகிய மொழிகள் நாற்பத்திரண்டுஞ் சிறப்பினவாம், எ–று.

உயிர்நெட்டெழுத்தினாலும் உயிர்மெய் நெட்டெழுத்தினாலும் ஆய ஒரெழுத்தொருமொழி யெத்தனை?

"உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும் கசவில் நாலும் யவ்வில் ஒன்றும் ஆகுநெடில்" என்றமைபால் நாற்பது

உயிர்வருக்கத்தினும் மவ்வருக்கத்தினு மெத்தனை?

"உயிர் மவிலாறும்"

**உ–ம்.:** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, எனவும் மா, மீ, மூ, மே, மை, மோ எனவும் வரும்

தபநவி லெத்தனை?

"தபநவிலைந்து"

**உ—ம்.:** தா, தீ, தூ, தே, தை எனவும் பா பூ பை போ எனவும் நா நீ நே நை நோ எனவும் வரும்.

கவசவிலெத்னை?

"கவசவினாலும்"

**உ—ம்.:** கா, கூ, கை, கோ எனவும் வா, வீ, வை, வெள எனவும் சா, சீ, சே, சோ எனவும் வரும்

யகரதிலெத்தனை?

"யவ்விலொன்று"

**உ—ம்.:** யா.

குற்றெழுத்திலெத்தனை?

"நொ து வாங் குறிலிரண்டு"

உ—ம்.: நொ, து (நொ— துன்பப்படு. து— புசி)

இவை சிறப்பின என்றமையாற் சிறப்பிலாதனவு முண்டோ?

கெள, பீ, வே என நெடிலும் கு எனக் குறிலுமாக இவை சிறப்பிலாதன.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** ஒரெழுத் தொருமொழி யிவை யென்பதும் இவ்வளவின வென்பது முணர்த்திற்று.

**இ—ள்.: உயிர்மவி லாறும்** — உயிர் வருக்கத்தும் மவ் வருக்கத்தும் அவ்வாறும், **தபநவிலைந்தும்**—தவ் வருக்கத்தும் பவ் வருக்கத்தும் நவ் வருக்கத்தும் ஐவைந்தும், **கவசவினாலும்**—கவ் வருக்கத்தும் வவ் வருக்கத்தும் சவ் வருக்கத்தும் நந்நான்கும், **யவ்விலொன் றும்**—யவ் வருக்கத்தி லொன்றும், **ஆகுநெடில்**—ஆகிய நெட்டெழுத்து நாற்பதும், **நொது வாங்குறிலிரண்டோடு** — நொவ்வும் துவ்வுமாகிய குற்றெழுத்து இரண்டுடனே, **ஒரெழுத்தியல்பதம்** — ஆக ஒரெழுத்தால் முடிந்த பதங்கள், **ஆறேழ்சிறப்பின**— நாற்பத்திரண்டுஞ் சிறந்தனவாம், **எ—று.**

**உ—ம்.:** ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும், மா மீ மு மே மை மோ எனவும், தா தீ தூ தே தை, பா பூ பே பை போ, நா நீ நே நை நோ எனவும், கா கூ கை கோ, வா வீ வே வை, சா சீ சே சோ, எனவும், யா எனவும். நொ து எனவும் முறையே காண்க. இவற்றுள், பே—நுரை, நே—அன்பு, சோ—அரண், நொ—து—என்பன, ஏவல்வினை. துன்பி, பொசி என்பன பொருள், ஒழிந்தனவற்றிற்குப் பொருள் மேலே சொல்லப்பட்டன.

இவை சிறப்பின வெனவே அவ்—என்னுஞ் சுட்டுப்பெயர்ப் பொருளை ஒப்புமையாற் காட்டுகின்ற ஔ என்பதும், சுட்டிடைச் சொல்லும் வினாவிடைச் சொல்லும் முதனிலை யிடைச்சொல்லுமாய் வருகின்ற அ,இ,உ,எ,ஒ என்னுங்

குற்றுயிரைந்தினாலாகிய ஓரெழுத்தொருமொழிகளும், கௌ, வெள, பீ, ரு, சை என்பனவும், இவை போல்வனவுஞ் சிறப்பிலவெனக் காண்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– **உயிர் மவில் ஆறும்**– உயிர் வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும் அவ்வாறும், **த ப நவில் ஐந்தும்** – தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும் ஐவ்வைந்தும், **க வ சவில் நாலும்**– கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும் நந்நான்கும், **யவ்வில் ஒன்றும்** – யவ்வருக்கத்தில் ஒன்றும், **ஆகும் நெடில்** – ஆகும்நெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், **நொ து** – நொவ்வும் துவ்வும், **ஆம்குறில் இரண்டோடு** – ஆகும் குற்றெழுத்தாலாகிய மொழி யிரண்டுடனே, **ஓரெழுத்து இயல் பதம்** – ஓரெழுத்தாலாகிய மொழிகள், **ஆறு ஏழ் சிறப்பின** – நாற்பத்திரண்டும் சிறப்பினவாம்.

உ–ம் :– ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும்; மா, மீ, மூ, மே, மை, மோ எனவும்; தா, தீ, தூ, தே, தை எனவும்; பா, பீ, பே, பை, போ எனவும்; நா, நீ, நே, நை, நோ எனவும்; கா, கூ, கை, கோ எனவும்; வா, வீ, வை, வௌ எனவும்; சா, சீ, சே, சோ எனவும்; நொ, து எனவும் வரும், (இவற்றுள் ஊ – இறைச்சி; ஓ – மதகுநீர் தாங்கும் பலகை; பே–நுரை; நே–அன்பு; சோ–மதில்; நொ–துன்பப்படு; து–உண்.)

குறிப்பு :– இவை 'சிறப்பின' எனவே சிறப்பில்லாதவைகளும் சில உள எனக்கொள்க. அவை : அ, இ, உ, எ, ஒ; ஔ; கு; கௌ; சை; பீ; வே என்பன.

## ஆறுமுக நாவலர்

இ–ள் .: **உயிர் மவில் ஆறும்** – உயிர் வருக்கத்திலும் மவ் வருக்கத்திலும் அவ்வாறும், **த ப நவில் ஐந்தும்** – தவ் வருக்கத்திலும் பவ் வருக்கத்திலும் நவ் வருக்கத்திலும் ஐவ்வைந்தும், **க வ சவில் நாலும்** – கவ் வருக்கத்திலும் வவ் வருக்கத்திலுஞ் சவ் வருக்கத்திலும் நந்நான்கும், **யவ்வில் ஒன்றும்** – யவ் வருக்கத்தில் ஒன்றும், **ஆகும் நெடில்**–ஆகும் நெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், **நொ து ஆம் குறில் இரண்டோடு**– நொவ்வுந் துவ்வும் ஆகுங் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டுடனே, **ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின**–ஓரெழுத்தாலாகிய மொழிகள் நாற்பத்திரண்டுஞ் சிறப்பினவாம், **எ–று.**

உ–ம்.: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, எனவும். மா, மீ, மூ, மே, மை, மோ, எனவும். தா,தீ, தூ, தே, தை, எனவும். பா, பூ, பே, பை, போ எனவும், நா, நீ, நே, நை, நோ, எனவும், கா, கூ, கை, கோ, எனவும், வா, வீ, வை, வௌ, எனவும். சா, சீ, சே, சோ, எனவும். யா, எனவும், நொ, து, எனவும், வரும். இவற்றுள், ஊ–இறைச்சி. ஓ–மதகு நீர் தாங்கும் பலகை, பே–நுரை, நே–அன்பு, சோ–மதில், நொ–துன்பப்படு, து–உண். இவை சிறப்பினவெனவே, கு, கௌ, பீ, வே எனச் சிறப்பில்லாதவைகளுஞ் சிலவென்றறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். உயிர் மவில் ஆறும்** – உயிர் வருக்கத்திலும் மவ்வருககததிலும் அவ்வாறும், – **த ப ந வி ல் ஐந்தும்** – தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும் ஐவைந்தும், – **கவசவில் நாலும்** – கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலுஞ் சவ்வருக்கத்திலும் நந் நான்கும், – **யவ்வில் ஒன்றும்** – யவ்வருத்தத்தில் ஒன்றும், – **ஆகும் நெடில்** – ஆகுநெட்டெழுத்துமொழி நாற்பதும், – **நொது ஆம் குறில் இரண்டோடு** – நொவ்வுந் துவ்வும் ஆகுங் குற்றெழுத்துமொழி இரண்டுடனே, – **ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின** – ஓரெழுத்தாலாகியமொழி நாற்பத்திரண்டுஞ் சிறந்தனவாம். எ–று.

உ–ம். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, எனவும், மா, மீ, மூ, மே, மை, மோ, எனவும், தா, தீ, தூ, தே, தை, எனவும், பா, பூ, பே, பை, போ, எனவும், நா, நீ, நே, நை, நோ, எனவும், கா, கூ, கை, கோ எனவும், வா, வீ, வை, வௌ எனவும், சா, சீ, சே, சோ எனவும், யா எனவும், நொ, து எனவும், வரும். இவற்றுள் ஊ–இறைச்சி. ஓ–மதகுநீர் தாங்கும் பலகை. பே – நுரை. நே – அன்பு. சோ – மதில். நொ – துன்பப்படு. து – உண்.

இவை சிறப்பின எனவே கு, கௌ, பீ, வே என்பனவும் அவ் என்னுஞ் சுட்டுப்பெயர்ப்பொருளை ஒப்புமைபாற் காட்டுகின்ற ஔ என்பது ம், அ, இ, உ என்னுஞ் சுட்டிடைச் சொல்லும், எ என்னும் வினாவிடைச் சொல்லும், ஒ என்னும் முதனிலை இடைச்சொல்லும் ஆகிய உயிர்க்குற்றெழுத்தாலாகிய ஓரெழுத்து மொழிகளும், கு, கௌ, வௌ, பீ, கு, சை என்பனவும் இவைபோல்வனவும் சிறப்பில்லாத ஓரெழுத்துமொழிகளெனக்காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்

## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: உயிர் மவில் ஆறும்** – உயிர் வருக்கத்திலும் மவ் வருக்கத்திலும் அவ்வாறும், **த ப ந வில் ஐந்தும்** – தவ் வருக்கத்திலும் பவ் வருக்கத்திலும் நவ் வருக்கத்திலும் ஐவைந்தும், **க வ ச வில் நாலும்** – கவ் வருக்கத்திலும் வவ் வருக்கத்திலும் சவ் வருக்கத்திலும் நந்நான்கும், **யவ்வில் ஒன்றும்** – யவ் வருக்கத்தில் ஒன்றும், **ஆகும் நெடில்** – நெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், **நொ து ஆம் குறில் இரண்டோடு** – நொவ்வும் துவ்வும் ஆகும் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டுடனே, **ஓர் எழுத்து இயல் பதம்** – ஓரெழுத்தாலாகிய மொழிகள், **ஆறுஏழ்** – நாற்பத்திரண்டும், **சிறப்பின**– சிறப்பையுடையனவாம், **எ–று.**

**உ–ம்.:** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும்; மா,மீ, மூ, மே, மை, மோ எனவும்; தா, தீ, தூ, தே, தை, எனவும்; பா, பூ, பே, பை, போ எனவும்; நா, நீ, நே, நை, நோ எனவும்; கா, கூ, கை, கோ எனவும்; வா, வீ, வை, வௌ எனவும்; சா, சீ, சே, சோ எனவும்; யா எனவும்; நொ, து எனவும் வரும்.

இவை, 'சிறப்பின' எனவே – அ, இ, உ, எ, ஒ, ஔ; கு; கௌ; சை; பீ; வீ எனச் சிறப்பில்லாதவைகளும் சில உள வெனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். உயிர் மவில் ஆறும் – உயிர் வருக்கத்திலும் மவ்விருக்கத்திலும் அவ்வாறும், தப நவில் ஐந்தும் – தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும் ஐவைந்தும், க வ ச வில் நாலும் – கவ்வருக்கத்ஸலம் வவ்வருக்கத்திலுஞ் சவ்வருக்கத்திலும் கவ்வருக்கத்திலும் நந்நான்கும், யவ்வில் ஒன்றும் – யவ்வருக்கதில் ஒன்றும், ஆகும் நெடில் – ஆகிய நெட்டெழுத்து நாற்பதும், நொ து ஆம் குறில் இரண்டோடு – நொவ்வுந் துவ்வும ஆகிய குற்றெபத்து இரண்டுடனே, ஓரெழுத்து இயல் பதம் ஆறேழ் சிறப்பின – ஓரெபத்தாலாகிய மொழிகள் நாற்பத்திரண்டுஞ் சிறப்பினவாம். எ–று.

உ–ம்.: உயிர்மவிலாறு: ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, மா, மீ, மூ, மே, மை, மோ.

தபநவிலைந்து: தா, தீ, தூ, தே, தை, பா, பூ. பே, பை, போ, நா, நீ, நே, நை, நோ.

கவசலினாலு: கா, கூ, கை, வா, வீ, வை, வௌ, சா, சி, சே, சோ.

யவ்விலொன்று: யா. குளில் இரண்டு: நொ. து.

(ஊ–இறைச்சி. ஓ–மதகுநீர் தாங்கும் பலகை. பே–நுரை, நே–அன்பு. சோ–மதில், நொ– துன்பப்படு. து–உண்.)

இவை சிறப்பினவெனவே, அ, இ, உ, எ, ஒ, கு, கௌ, பி, வே எனச் சிறப்பில்லாதவைகளுஞ் சிலவுளவென் றறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்) பகுப்பால் பயன் அற்று–பிரிக்கப்படுதலினாலே (பகுதி விகுதி முதலாகிய) பயனில்லாமல், இடுகுறி ஆகி– (காரண மில்லாமல்) இடப்பட்ட குறியாகி, முன்னே ஒன்று ஆய்–படைப்புக்காலம் தொட்டு ஒன்றாகி, முடிந்து இயல்கின்ற–முடிந்து நடக்கின்ற, பெயர் வினை இடை உரி நான்கும்–பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச் சொல்லுமாகிய நான்கும், பகாப்பதம்–பகாப்பதங்களாகும். **எ–று.**

**பொ–ரை.:** பிரிக்கப்படுதலினால் பகுதி, விகுதி முதலிய பிரயோசனதில்லாமல், இடுகுறியாகி, முற்காலந் தொடுத்து ஒன்றாய்முடிந்து நடக்கின்ற பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கும் பகாப்பதங்களாகும்.

எனவே பகாப்பதம் நான்கு வகைப்படும். பகுபதத்திற்கு மறுதலைப்பட்டது என்பார். இவ்வாறு கூறினார். இடுகுறி–இட்ட பெயர்.

(உ–ம்.) நிலம், நீர், நெருப்பு, காற்று – பெயர்ப் பகாப்பதம்.

நட, வா, உண், தின், பார் – வினைப் பகாப்பதம்.

மன், கொல், போல், மற்று – இடைப் பகாப்பதம்.

உறு, கழி, தவ, அன்பு, அழகு – உரிப் பகாப்பதம்.

இனி, புளி கடு முதலிய ஆகு பெயர்களும் காரணத்தால் வருமாயினும் பகுத்தற்கு விகுதி முதலிய உறுப்பில்லாததினாலே பகாப்பத மென்றே கொள்க.

பயனற்று என்பதற்குப் பொருள்விளைவு இன்றி எனினும் அமையும்.

## கா. நமசிவாய முதலியார்

**உயிர் மவில்** – உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும், **ஆறும்** – அவ்வாறும், **தபநவில்** – தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும், **ஐந்தும்** – ஐவைந்தும், கவசவில் – கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும், **நாலும்** – நன்னான்கும், **யவ்வில் ஒன்றும்** – யவ்வருக்கத்தில் ஒன்றும், **ஆகும் நெடில்** – ஆகியநெட்டெழுத்தாலாகிய மொழி நாற்பதும், **நொ** – நொவ்வும், **து**–துவ்வும், **ஆம் குறில்** – ஆகும் குற்றெழுத்தாலாகிய மொழி, **இரண்டொடு** – இரண்டுடனே, **ஓரெழுத்து இயல்பதம்** – ஓரெழுத்தால் ஆகிய மொழிகள், **ஆறேழ்** – நாற்பத்திரண்டும், **சிறப்பின** – சிறப்பினவாம்.

**உதாரணம்**

**உயிர்வருக்கம்**

ஆ (பசு)
ஈ
ஊ (இறைச்சி)
ஏ (அம்பு)
ஐ (அழகு)
ஓ (மதகுநீர் தாங்கும்) (பலகை)

**மவ்வருக்கம்**

மா (மிருகம்)
மீ (மேல்)
மூ (மூப்பு)
மே (அன்பு)
மை (அஞ்சனம்)
மோ (மோத்தல்)

**தவ்வருக்கம்**

தா
தீ
தூ (வெண்மை)
தே (கடவுள்)
தை

**பவ்வருக்கம்**

பா (பாட்டு)
பூ
போ
பை
போ

**நவ்வருக்கம்**

நா
நீ
நே (அன்பு)
நை
நோ

**கவ்வருக்கம்**

கா (சோலை)
கூ (பூமி)
கை
கோ (அரசன்)

**வவ்வருக்கம்**

வா
வீ (மலர்)
வை
வௌ (கவர்)

**சவ்வருக்கம்**

சா
சீ (சீத்தல்)
சே (எருது)
சோ (மதில்)

யா (ஒரு மரம்) நொ (துன்பப்படு) து (உண்)

இவை சிறப்பின வெனவே, கு – கௌ – பீ – வே எனச் சிறப்பில்லாதவைகளும் சிலவுள என்றறிக.

## மோசசு பொன்னையா

உயிரெழுத்துக்ளில், | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | என்ற ஆறும், மவ்வருக்கத்தில் | மா, மீ, மூ, மே, மை, மோ | என்ற ஆறும், தவ்வருக்கத்தில், | தா, தீ, தூ, தே, தை | என்ற ஐந்தும், பவ்வருக்கத்தில், | பா, பூ, பே, பை, போ | என்ற ஐந்தும், கவ்வருக்கத்தில், | கா, கூ, கை, கோ | என்ற நான்கும், வவ்வருக்கத்தில், | வா, வீ, வை, வௌ | என்ற நான்கும். சவ்வருக்கத்தில், | சா, சீ, சே, சோ | என்ற நான்கும், யவ்வருக்கத்தில், | யா | என்ற ஒன்றும்; குற்றெழுத்துக்களில், | நொ, து | என்ற இரண்டுமாக ஒரெழுத்தானாம் சிறப்புடை மொழிகள் நாற்பத்திரண்டு, எ–று.

எகரவினா சுட்டு என்பன சிறப்பில் மொழிகளாம். தொல்காப்பியர், குற்றெழுத்தைந்தும் மொழிநிறைபிலவே எனக் கூறியுள்ளமையும், அதன் உரையில் உரையாசிரியர்கள் ஒகர மொழிந்தவை சுட்டு வினா இடைச்சொற்களாகப் பெயரைச் சார்ந்துநின்று சுட்டுப்பொருளும் வினாப் பொருளும் உணர்த்துதலால் மொழிநிறைபிலவாயின என விளக்கியுரைத்ததும் இவண் நோக்கத் தக்கன. உயிர்களை ஓர் ஒலிய உருபுகள் என்றும், உயிர்மெய்களை ஈரொலிய உருபுகள் என்றும் கொள்க.

(2)

**129.** **பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்**
**எழுத்தீ றாகத் தொடரு மென்ப.**

**பகாப் பதம் ஏழ்உம் பகுபதம் ஒன்பதுஉம்**
**எழுத்து ஈறுஆகத் தொடரும் என்ப.**

pakāp paṭam ēḷum pakupaṭam oṉpaṭuum
eḷuṭṭu īṟu ākaṭ ṭotarum eṉpa.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Simple and compount word

Simple words may consist (at the most ) of seven and compount words (at the most) of nine letters.

## ஒப்புமைப் பகுதி

**பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்**
**எழுத்து ஈறாகத் தொடரும் என்ப**

**(தொ.வி.:48:5–6)**

மொழியே
ஒரெழுத் தாதியொன் பானெழுத் தந்தமாம்

(மு.வீ.:124)

## மயிலை நாதர்

**எ—ன்,** மேல் நிறுத்த முறையானே தொடரெழுத்துப் பதத்திற்கு வரையறை யுணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத் தீறாகவும் பகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத் தீறாகவும் தொடரு மென்பர் புலவர், **எ—று.**

**வ—று.:** அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனப் பகாப்பதம் தொடர்ந்தவாறு, கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், அத்திகோசத்தான், உத்திரட்டாதியான் எனப் பகுபதந் தொடர்ந்தவாறு. கங்கை கொண்ட சோழபுரம், இரதநூபுர சக்கரவாளம் (சூளா. இரதநூபு. 12), பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றற் றொடக்கத்து ஒட்டுப்பெயர்க்கு வரையறை யில்லை யெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** தொடரெழுத்தொரு மொழியாமாறு **உணர்—ற்று.**

**இ—ள்.:** பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்து ஈறாகவும், பகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பது எழுத்து ஈறாகவும் தொடரும் என்று சொல்லுவர் புலவர், **எ—று.**

**உ—ம்.:** அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனவும்; கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான். உத்திரட்டாதியான் எனவும் வரும்.

எழுந்திருக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார், நடத்து விப்பிக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார்கள், நடத்துவிப்பிக்கின்றார்கள், நடத்துவிப்பிக்கின்ற வர்கள் எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ் வரையறை இல்லை என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** நிறுத்த முறையானே தொடரெழுத்துப் பதத்துக்கு வரையறை கூறியது.

**இ—ள்.: பகாப்பதம் ஏழும்** — பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தீறாகவும், **பகுபதம் ஒன்பதும் எழுத்தீறாக** — பகுபதம்

இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகவும், **தொடரும் என்ப–** தொடருமென்று சொல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:** அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனப் பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தீறாகத் தொடர்ந்து தொடரெழுத்துப் பதமாயினவாறு காண்க. கூனி, கூனன், கூழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், அத்திகோசத்தான், உத்திரட்டாதியான் எனப் பகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகத் தொடர்ந்து தொடரெழுத்துப் பதமாயினவாறு காண்க. கங்கைகொண்ட சோழபுரம், இரதநூபுரச் சக்கரவாளம், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (என்றற் றொடக்கத்து ஒட்டுப் பெயர்க்கு வரையறை இல்லை யெனக் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது தொடரெழுத்து மொழியாமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: பகாப்பதம்** – பகாப்பதங்கள், **ஏ (ழெழுத்தீறாக)வும் –** இரண்டெழுத்து முதலேழெழுத் தீறாகவும், **பகுபதம்** – பகுபதங்கள், **ஒன்பதெழுத்தீறாகவும்** – இரண்டெழுத்து முதலொன்பதெழுத் தீறாகவும், **தொடரும்** – தொடரும், **என்ப** – என்று செல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:** அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனவும், கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் எனவும், வரும், ('நடத்துவிப்பிக்கிறான்' எனப் பகுதி முதலிய வுறுப்பு வேறுபட்டு வருகின்றவைகளுக்கு எவ் வரையறை யில்லை யென்றறிக.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

பலவெழுத்தாலாகுந் தொடர்மொழிகளுக்கு எழுத்து வரையறை கூறுஞ் சூத்திரம்யாது?

பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப
(பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்து ஈறாகத் தொடரும் என்ப)

**இ–ள்.: பகாப்பதம் ஏழும்** – பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத் தீறாகவும், **பகுபதம் ஒன்பதும் எழுத்து ஈறாகத் தொடரும் என்ப** – பகுப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகவும் தொடரும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

உ–ம்.: அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்தரட்டாதி எனவும், கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான்,

உத்தராடத்தான், உத்தரட்டதியான், எனவும் வரும். நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறை இல்லையென்றறிக.

பகாப்பதம் எத்தனையெழுத்தீறாகத் தொடரும்?

பகாப்பதம் ஏழெழுத் தீறாகத் தொடரும்.

பகுபத எத்தனையெழுத்தீறாகத் தொடரும்?

பகுபத மொன்ப தெழுத்தீறாகத் தொடரும்

## முகவை இராமானுச கவிராயர்

இது, தொடரெழுத்தொருமொழி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: பகாப்பதமே ழெழுத் தீறாகவும்** – (தொடருங்கால்) பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்து வரைக்கும், **பகுபத மொன்பதெழுத் தீறாகவும்** – பகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்து வரைக்கும், **தொடரு மென்ப** – தொடருமென்று சொல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:** அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி என வருமிவை பகாப்பதம். கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான், என வருமிவை பகுபதம். எழுந்திருக்கின்றார், நடத்துவிப்பிக்கின்றார், நடத்துவிப்பிகிறார், நடத்துவிப்பிக்கின்றவர்கள் எனப் பகுதி முதலிய வேறுபட்டு வருவனவற்றிற்கு இந்த வரையறை யில்லை யென்க. இதனுள் பயனிலை குறைந்து நின்றது.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– பகாப்பதம்** – பகாப்பதங்கள், ஏழு (எழுத்தீறாக) **உம்** – இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தீறாகவும், **பகுபதம்** – பகுபதங்கள், **ஒன்பது எழுத்து ஈறாகவும்**– இரண்டெழுத்து முதல் ஒன்பது எழுத்தீறாகவும், **தொடரும் என்ப** – தொடரும் என்று சொல்லுவர் (புலவர்)

குறிப்பு :– பகாப்பதம் : யானை, உயிர், உடம்பு, கருப்பம், உத்திராடம், உத்திரட்டாதி, பகுபதம் : கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான். இனி 'நடத்துவிப்பிக்கிறான்' எனப் பகுதிமுதலிய உறுப்பு வேறுபட்டு வருகின்றவைகளுக்கு இவ்வரையறையில்லை என்றறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** பகாப்பதம் ஏ (ழெழுத்து) ஈறு ஆக–பகாப் பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத் தீறாகவும், **பகுபதம் ஒன்பது எழுத்து ஈறு ஆக** – பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத் தீறாகவும், **தொடரும் என்ப** –தொடரும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

உ–ம்.: அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனவும். கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் எனவும் வரும். நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ் வரையறை யில்லை யென்றறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **பகாப்பதம் ஏ** (ழெழுத்து) **ஈறு ஆக**–பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தீறாகவும், – **பகுபதம் ஒன்பது எழுத்து ஈறாக** – பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகவும், – **தொடரும் என்ப** – தொடருமென்று சொல்லுவர் புலவர். **எ–று.**

இச்சூத்திரத்தாற் கூறப்படுவன பலவெழுத்து மொழியாதலின் இரண்டெழுத்து முதல் என்பது வருவித்துரைக்கப்பட்டது தொடர்தற்கின்றியமை யாமையின் எழுத்தென்பதை ஏழென்பதனோடுங் கூட்டியுரை செய்யப்பட்டமையால் எண்ணும்மைகள் உரையில் எழுதப்படவில்லை.

**உ–ம்.** அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி என்பன பலவெழுத்துப் பகாப்பதங்கள்.

கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் என்பன பலவெழுத்தாய் வந்த பகுபதங்கள். நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதிமுதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறையில்லை, ஒன்பதெழுத்தின் மேற்பட்டும் வருமென்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: பகாப்பதம்**–பகாப்பதங்கள், **ஏழும்** – (இரண்டெழுத்து முதல்) ஏழெழுத்துக்களும், **பகுபதம்**–பகுபதங்கள், **ஒன்பது எழுத்து உம்** – (இரண்டெழுத்து முதல்) ஒன்பதெழுத்துக்களும், **ஈறு ஆக** – எல்லையாக, **தொடரும் என்ப** – என்று சொல்வர், (அறிவுடையோர்); **எ–று.**

**உ–ம்.:** அணி, கலம், பொருப்பு, இறும்பூது, குங்கிலியம், உத்தரட்டாதி எனப் பகாப்பதமும்; கூனி, கூனன், அறிஞன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்தராடத்தான், உத்தரட்டாதியான் எனப் பகுபதமும் வரும்.

'நடத்துவிப்பிக்கப் படுகின்றவர்கள்' எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருகின்றவைகட்கு இவ் வரையறை இல்லை யென்று அறிக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். பகாப்பதம் ஏழு (எழுத்து ஈறு ஆகவும்) – பகாப்பதங்கள் இரண்டெபத்து முதல் ஏழெழுத்தீறாகவும், பகுபதம் ஒன்பது எழுத்து ஈறு ஆகவும் – பகுபதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகவும், தொடரும் என்ப தொடரும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

உ–ம். (பகாப்பதங்கள்:) அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்தரட்டாதி, (பகுபதங்கள்) கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்தராடத்தான், உத்தரட்டாதியான்.

நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறை யில்லை யென்றறிக.

## கா. நமசிவாய முதலியார்

**பகாப்பதம்** – பகாப்பதங்கள், **ஏழ் எழுத்தும்** – இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தும், **பகுபதம்** – பகுபதங்கள், **ஒன்பது எழுத்து** – இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தும், **ஈறாக** –எல்லையாக, **தொடரும் என்ப**– தொடரும் என்று சொல்லுவர். (புலவர்).

**உதாரணம்**

| **பகாப்பதம்:** | | **பகுபதம்** | |
|---|---|---|---|
| அணி | – 2 | கூனி | – 2 |
| அறம் | – 3 | கூனன் | – 3 |
| அகலம் | – 4 | குழைன் | – 4 |
| அருப்பம் | – 5 | பொருப்பன் | – 5 |
| தருப்பணம் | – 6 | அம்பலவன் | – 6 |
| உத்திரட்டாதி | – 7 | அரங்கத்தான் | – 7 |
| | | உத்திராடத்தான் | – 8 |
| | | உத்திரட்டாதியான் | – 9 |

நடத்துவிப்பிக்கின்றான் எனப் பகுதி முதலிய வுறுப்பு வேறு பட்டு வருகின்றவைகளுக்கு இவ்வரையறை இல்லையென்றறிக.

## மோசகு பொன்னையா

பகாப்பதம், பகுபதம் என்பன முறையே இரண்டு முதல் ஏழு, ஒன்பது எழுத்துக்கள் வரை தொடரப்பெறும், **எ – று.**

**எ–டு.**

அணி, அறம்,அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி – இவை பகாப்பதங்கள். கூனி, கூனன், அறிஞன். பொருப்பன் அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் – இவை பகுபதங்கள்.

எழுந்திருக்கின்றவர்கள், நடத்துவிக்கின்றவர்கள் முதலிய சொற்கள் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவன ஆதலின், இவ்வரையறையுட் படாவாயின.

(3)

**130. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி**
**முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற**
**பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.**

**பகுப்பாற் பயன் அற்று இடுகுறி ஆகி**
**முன்னே ஒன்றுஆய் முடிந்து இயல்கின்ற**
**பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்.**

pakuppāl payan̲ ar̲r̲u itukur̲i āki
mun̲n̲ē on̲r̲u āy mutinṭu iyalkin̲r̲a
peyar vin̲ai itai uri nān̲kum pakāppaṭam.

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### SIMPLE WORDS

Simple words are those Nouns, Verbs. particles and qualifying Terms, which cannot be divided into significant parts, and which being arbitrarily formed, have been employed as indivisible words from the commencement (of literature).

### ஒப்புமைப் பகுதி

பகாஅப் பதம்பகாஅப் பண்பிற் பயின்று
பெயர்வினை யிடையுரி யெனநால் வகைத்தே

(இ.வி.:40)

பகாப்பதம் என்ப பயனால் குறியால்
பகாது ஒன்றாகிப் பகுப்பின் பயனிலா
நிகழ்ந்து இயல்கின்ற நால்வகைச் சொல்லே

(தொ.வி.:46)

....... அதிற்பகாமை யிடுகுறியாய்

**மொழிப் பகுப்பாற் பயனில் பெயர்வினையொடு இடைஉரியாம் முயல்பகாப் பதம்..........**

**(சுவாமி.: 23:1–20)**

## மயிலைநாதர்

**எ–ன்,** நிறுத்தமுறையானே பகாப்பதமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** ஒன்றாய் நின்று ஒருபொருள் தருமொழியைப் பலவாகப் பிரித்தால் அதனால் வருவதோர் பயனற்று இடுகுறியாய்த் தொன்றுதொட்டு ஒருபிண்டமாய் நடக்கின்ற பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லு மென்று வழங்குகின்றவை பகாப்பதம், **எ–று.**

**வ–று.:** நம்பி, நங்கை, சாத்தன், சாத்தி, கொற்றன், கொற்றி, தந்தை, தாய், யானை, குதிரை, உயிர், உடம்பு, மலை, வெற்பு, தீ, நீர், ஒன்று, கழஞ்சு, கலம் எனவும் ; வான், நிலம், அகம், புறம் எனவும்; யாண்டு, வேனில், பங்குனி, ஆதிரை, பகல், இரா, காலை, மாலை, [1]நெருநல், இன்று எனவும்; கண், செவி, மூக்கு, கை, கால், கோடு, சினை, தளிர், பூ, காய், கனி, எனவும்; செம்மை, வெண்மை, கருமை, நெடுமை, குறுமை, இன்மை, உண்மை எனவும்; உணல், தினல், செலவு, வரவு, கூத்து, பாட்டு எனவும். வரும் இத் தொடக்கத்துப் பொருளாதி யறுவகைப்பொருட் பெயர்களெல்லாம் பெயர்ப் பகாப்பதம். உண், தின், நட, கிட, போ, வா, உரை, இரு, செல் என்றற் றொடக்கத்தன வினைப் பகாப்பதம். மன், மற்று, தில், அம்ம, கொல், மியா, இக, மோ, மதி என்றற் றொடக்கத்தன இடைப் பகாப்பதம். சால, உறு, தவ, நனி, கழி, கவி, ஒலி, முழக்கு என்றற் றொடக்கத்தன உரிப் பகாப்பதம், பெயருள்ளும் சாத்தை யுடையான் சாத்தன், கொற்றை யுடையான் கொற்றன், கூத்தை யுடையான் கூத்தனென்று இவ்வாறு பொருள்படின் அவை பகாப்பதமாகா; இடுகுறி மாத்திரையாய் நிற்கிலே பகாப்பத மாவதெனக் கொள்க. அவன், அவள், அவர் என்றற் றொடக்கத்தன ஈறு பகுக்க வேறுபால் காட்டலிற் பகுபதமாம். பிறவெனின், அவை ஒன்றாய் நின்று ஒருபொருளாவ தல்லது ஈறு பிரித்தாற் பகுதி வேறு பொருள் படாமையின், அவற்றிற்குப் பகுதி விகுதித் தன்மை யின்மையின் ஆகாவென்க.

இனி, சொல் நான்காக வேண்டியது என்னையோ வெனின், பெயர்ச்சொல் பொருளை விளக்குதலானும், வினைச்சொல் பொருளது தொழிலை விளக்குதலானும், இடைச்சொற்கள், இவ் விரண்டிற்கும்[2] விகுதி

---

பாட வேறுபாடு.:–

1. நெருநை
2. விகுதி யுருபுதவலானும்

யுருபுகளாகியும், வேற்றுமை உவமை சாரியை யுருபுகளாகியும், சில பெயராகியும், சில வினையாகியும், தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிப்பு, கழிவு, ஆக்கம், இசை நிறை, அசைநிலை, குறிப்பு முதலான பொருண்மை விளக்குதலானும், உரிச்சொல், [1]பெயராமெனினும் பொருளை விளக்கலும் பெரும்பான்மையும் உருபேற்றலு மின்றிப் பொருட் குணத்தையே விளக்குதலானும், சில வினைபோல் வருதலானும் சொல்லிற்கு இந் நாற்பகுதியும் இவட்கிடப்பும் வேண்டு மெனவே கொள்க. அன்றியும்,

**"பெயரினும் வினையினு மொழிமுத லடங்கும்"**

என்ற மிகத்தெளிகேள்வி அகத்திபனாரும்,

**"சொல்லெனப்படுப [2]பெயரே வினையென்**
**றாயிரண் டென்ப வறிந்திசி னோரே"**

என்ற ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனாரும், "அவைதாம், பெயர்ச் சொலென்றா தொழிற் சொலென்றா, [3]இரண்டன் பாலா யடங்குமன் பயின்றே" என்ற அளவறுபுலமை அவிநயனாரும் பின்பும் இப் பகுதியும் இம் முறையும் வேண்டினாரெனக் கொள்க.

## சங்கரநமச்சிவாயர்

**எ–னின்,** மேல் பதம் பகாப்பதம் பகுபதம் என இரண்டு பகுதியவாய் நடக்கும் என்றார். அவற்றுள் பகாப்பதம் இனைய என்பதூஉம், இத்துணைய என்பதூஉம் **உணர் – ற்று.**

**இ–ள்.:** பகுபதம் போலத் தன்னைப் பகுத்துப் பார்க்கின் அப்பகுப்பால் பகுதி விகுதி முதலிய உறுப்பின் பயன் விளைவதின்றிக், காரணத்தான் வரும் அப்பதம் போலாது இடுகுறியாய், பகுதி விகுதி முதலிய ஆறு உறுப்பானும் பின்பு முடிக்கப்படும் அப்பதம் போலாது படைப்புக்காலந் தொட்டு ஒன்றாய் முடிந்து நடக்கின்ற பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்னும் நான்கும் பகாப்பதமாம், **எ – று.**

பகுபதத்திற்கு மறுதலைப்பட்டது என்பார், இவ்வாறு கூறினார்.

**உ–ம்.:** நிலம்நீர் எனவும், நடவா எனவும், மன் கொல் எனவும், உறு கழி எனவும் வரும். பிறவும் அன்ன.

---

**பாட வேறுபாடு.:–**

1. **பெயரேயெனினும்**
2. **பேரே**
3. **இரண்டின்.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்**, நிறுத்த முறையானே பகாப்பதம் ஆமாறு கூறியது.

**இ—ள்.: பகுப்பாற்**—ஒன்றாய் நின்று ஒரு பொருள் தருமொழியைப் பலவாகப் பிரித்தால், **பயனற்று**—அதனால் வருவதோர் பயனுமற்று, **இடுகுறியாகி**—இதற்கு இது பெயர் என்றிட்ட இடுகுறியாகி, **முன்னே ஒன்றாய் முடிந்து** – தொன்று தொட்டு ஒரு பிண்டமாய் முடிந்து, **இயல்கின்ற பெயர் வினை இடை உரி**—நடக்கின்ற பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமென, **நான்கும் பகாப்பதம்** – வழங்குகின்ற நால்வகைச் சொல்லும் பகாப்பதமாம் எ—று.

**வ—று.**: ஈ, கள், ஆண், பெண், தந்தை, தாய், மிருகம், பட்சி, கிருமி, கீடம், ஆனை, குதிரை, உயிர், உடம்பு எனப் பொருட்பெயர்ப் பகாப்பதம்; வானம், பூமி, அகம், புறம் என இடப்பெயர்ப் பகாப்பதம்; வருடம், மாதம், இரா, பகல் எனக் காலப்பெயர்ப் பகாப்பதம்; கண், செவி, மூக்கு, தளிர், பூ, காய், கனி எனச் சினைப்பெயர்ப் பகாப்பதம்; செம்மை, கருமை, நெடுமை எனப் பண்புப் பெயர்ப் பகாப்பதம்; உணல், தினல், செலவு, வரவு, கூத்து, பாட்டு எனத் தொழிற் பெயர்ப் பகாப்பதம்; இவை ஆறும் பெயர்ப் பகாப்பதம். உண், தின், நட, கிட,.போ, வா என வினைப் பகாப்தம். மன், மற்று, தில், கொல், மியா, இக, அம்ம, மதி என இடைப் பகாப்பதம். உறு, தவ, நனி, கழி, ஒலி, முழங்கு என உரிப் பகாப்பதம். சாத்தன், கொற்றன், கூத்தன் என்பன சாத்தையுடையான் சாத்தன், கொற்றையுடையான் கொற்றன், கூத்தையுடையான் கூத்தன் என இவ்வாறு பொருள் ஏலாவிடில் அவை பகாப்பதமாய் இடுகுறி மாத்திரையாய் நிற்குமென்க.

## விசாகப் பெருமாளையர்

**இது**, முன் பகாப்பதம் பகுபத மென்பவற்றுள்ளே பகாப்பதங்கள் இப்படிப்பட்டவைகளென்பதும், இத்தனை வகைப்படு மென்பதும், உணர்த்துகின்றது.

**இ—ள்.: பகுப்பால்** – பிரிக்கப்படுதலினாலே, **பயனற்று** – பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல், **இடுகுறியாகி**—காரணமில்லாமல் இடப்பட்ட குறியாகி, **முன்னே யொன்றாய்**—படைப்புக்காலந் தொட்டு ஒன்றாகி, **முடிந்து**—முடிந்து, **இயல்கின்ற**—நடக்கின்ற, **பெயர்**—பெயர்ச்சொல்லும், **வினை**—வினைச்சொல்லும், **இடை**—இடைச்சொல்லும், **உரி**—உரிச்சொல்லு மாகிய, **நான்கும்** – நான்கும், **பகாப்பதம்**—பகாப்பதங்களாகும், **எ—று.**

**உ–ம்.:** நிலம், நீர், நெருப்பு, காற்று என்பன பெயர்ப் பகாப்பதம். நட, வா, உண், தின் என்பன வினைப் பகாப்பதம். மன், கொல், போல், மற்று என்பன இடைப் பகாப்பதம். உறு, கழி, அன்பு, அழகு என்பன உரிப் பகாப்பதம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பகாப்பதவியல்பும் அதன்பகுதியுங் கூறுஞ் சூத்திரம்யாது?

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

(பகுப்பால் பயன் அற்று இடுகுறி ஆகி
முன்னே ஒன்று ஆய் முடிந்து இயல்கின்ற
பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்)

**இ–ள்.: பகுப்பால் பயன் அற்று** – பகுத்தலால் பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல். **இடு குறி யாகி** – காரணமின்றி இடப்பட்ட குறியாகி, முன்னே ஒன்று ஆய் முடிந்து இயல்கின்ற – படைப்புக் காலந்தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற, **பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்** – பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மாகிய நான்கும் பகாப்பதங்களாம், **எ–று.**

**உ–ம்.:** நிலம், நீர், நெருப்பு, காற்று என்பன பெயர்ப்பகாப்பதம், நட, வா, உண், தின் என்பன வினைப்பகாப்பதம். மன், கொல், போல் மற்று என்பன இடைப் பகாப்பதம். உறு, கழி, நனி, தவ என்பன உரிப்பகாப்பதம்.

நெருப்பு என்பதைப் பகுக்கப்புகின் நெரு ப் பு என நிற்கு மாயினும் அக்கூறுகள் யாதும் பொருளைத்தராமலும் காரணம் புலப்படாமலும் நிற்றலால் ஆதிதொட்டு ஒரே கூற்றினையுடையதாய் முடிந்து நிற்றல் காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** பகாப்பதம் இன்னவென்பதும் இவ்வளவினவென்பது முணர்ந்துகின்றது.

**இ–ள்.: பகுப்பாற் பயனற்று** – பகுத்துப் பார்த்ததினாலே பகுதி விகுதி முதலிய பொருள் விளைவு இன்றி, **இடுகுறியாகி**–காரணமில்லாமல், **முன்னே யொன்றாய்**–பூருவந் தொடங்கித் தானொரு பதமேயாகி, **முடிந்தியல்கின்ற**–முடிந்து நடக்கின்ற, **பெயர் வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்** – இந் நான்கு சொல்லும் பகாப்பதமாம், **எ–று.**

**உ–ம்.:** நிலம், நீர் என்றாற் போல்வன பெயர்ப் பகாப்பதம். நட, வா என்றாற் போல்வன வினைப் பகாப்பதம். மன், மற்றும், உம், என்றாற் போல்வன இடைப் பகாப்பதம். உறு, கழி–நனி–என்றாற் போல்வன உரிப்பகாப்பதம், பிறவுமிவ்வாறு காண்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– பகுப்பால் பயன் அற்று** – பிரிக்கப்படுதலினாலே (பகுதி விகுதி முதலாகிய) பிரயோசனமில்லாமல், **இடுகுறி ஆகி** – (காரணமில்லாமல்) இட்டகுறியாகி, **முன்னே ஒன்று ஆய்** – படைப்புக்காலந் தொடங்கி ஒரே தன்மையனவாய், **முடிந்து இயல்கின்ற** – முடிந்து நடக்கின்ற, **பெயர் வினை இடை உரி நான்கும்** – பெயர் வினை இடை உரி என்னும் நான்கு சொற்களும், **பகாப்பதம்** – பகாப்பதங்களாம்.

குறிப்பு :– பகுபதத்திற்கு மறுதலைப்பட்டதென்பார் இவ்வாறு கூறினார்.

உ–ம் :– பெயர்ப்பகாப்பதம் – நிலம், நீர், நெருப்பு, பொன்.
வினைப்பகாப்பதம்–நட, வா. உண், தின்.
இடைப்பகாப்பதம் – மன், கொல், போல், மற்று.
உரிப்பகாப்பதம் – உறு, கழி, நனி, தவ.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **பகுப்பால் பயன் அற்று** – பிரிக்கப்படுதலினாலே பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல், **இடுகுறி ஆகி முன்னே ஒன்று ஆய்முடிந்து இயல்கின்ற** – காரணமின்றி இடப்பட்ட குறியாகிப் படைப்புக் காலந் தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற, **பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்** – பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய நான்கும் பகாப் பதங்களாம், **எ–று.**

**உ–ம்.:** நிலம், நீர், நெருப்பு, காற்று என்பன பெயர்ப் பகாப்பதம். நட, வா, உண், தின் என்பன வினைப் பகாப்பதம். மன், கொல், போல், மற்று என்பன இடைப் பகாப்பதம். உறு, கழி, நனி, தவ என்பன உரிப் பகாப்பதம்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பகுப்பால் பயன் அற்று** – பிரிக்கப்படுதலாற் பொருட்பயனின்றி, – **இடுகுறியாகி** – காரணமின்றி இடப்பட்ட குறியாகி, – **முன்னே ஒன்றாய் முடிந்து இயல்கின்ற** – தோன்றிய காலந்தொட்டு ஒரு பதமாய் முடிந்து நடக்கின்ற, – **பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்** – பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய நான்கும் பகாப்பதங்களாம். **எ–று.**

**உ–ம்.** வாழை, நீர், நெருப்பு, பொன், மரம், வேர் என்பன பெயர்ப்பகாப்பதம், நட, வா, அடி, மிதி, உண். தின், வெஃகு என்பன வினைப்பகாப்பதம். மன், கொல், போல், மற்று, பிறிது என்பன இடைப்பகாப்பதம். உறு, கழி, நனி, தவ, கடி என்பன உரிப்பகாப்பதம்.

உறு, கழி, நனி, தவ என்பன மிகுதிப் பொருளன. கடி – மணமுதலிய பொருளது. ஏற்புழிக் கோடலென்னுமுத்தியால் இடுகுறியாகி என்பதைப்

பெயருக்கு மாத்திரங்கொண்டு, மற்றெல்லாவற்றையும் நால்வகைக்குங் கொள்க.

**நிரூபணம்:** வாழை என்னும் பகாப்பதத்தை வா+ழை எனப் பிரித்தால் பிரித்திருக்கிற அவ்விரண்டு பங்கும் பொருளிழந்து அநர்த்தமாயினமை காண்க. (அநர்த்தம் – பயனின்மை, வீண்) வா என்னும் பங்குக்கு வாராயென்று பொருளில்லையோவெனில் அது பிறிது சொல்லின் பொருளன்றி வாழை என்னும் பொருளின் பங்காயியையும் பொருளில்லை யென்றறிக.

பயனற்று என்பதற்குப் பகுதி விகுதிகளாகிய பயனில்லாமல் என்றுரைக்கிற் பகுதி விகுதி இல்லாமை பயனின்மை என்றாகி அவை இல்லாதனவாகிய பகாப்பதம் பயனற்றனவென்று முடிந்து விபரீதமாகுதலறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:** **பகுப்பால்** – பிரிக்கப்படுதலினாலே, **பயன் அற்று**–(பகுதி விகுதி முதலிய) பிரயோசன மில்லாமல், **இடுகுறி ஆகி** – (காரணமில்லாமல்) இடப்பட்ட குறியாய், **முன்னே ஒன்று ஆய்**–அநாதி காலமாய் ஒரே தன்மையனவாகி, **முடிந்து இயல்கின்ற** – முடிந்து நடக்கின்ற, **பெயர் வினை இடை உரி நான்கும்** – பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச் சொல்லும் ஆகிய நான்கும், **பகாப்பதம்** – பகாப் பதங்களாம்; **எ–று.**

எனவே, பகாப்பதம் நான்கு வகைப்படும். பகுபதத்திற்கு மறுதலைப்பட்ட தென்பார், இவ்வாறு கூறினார்.

**உ–ம்.:** கலம், சோறு, நெருப்பு, காற்று – பெயர்ப்பகாப்பதம்.

நட, வா, உண், தின், பார் – வினைப்பகாப்பதம்.

மன், கொல், போல், மற்று – இடைப்பகாப்பதம்.

உறு, கழி, நனி, தவ, கூர் – உரிப்பகாப்பதம்.

இனி, புளி, கடு முதலிய ஆகுபெயர்கள், காரணத்தால் வருவனவாயினும், விகுதி முதலிய உறுப்பு இல்லாததனால், பகாப்பதமென்றே கொள்க. 'பயன் அற்று' என்பதற்கு–பொருட் பயனில்லாமல் என்றும் உரைக்கலாம்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். பகுப்பால் பயன் அற்று – பிரிக்கப் படுதலினாலே (பகுதி விகுதி முதலாகிய) பயனில்லாமல், இடுகுறி ஆகி முன்னே ஒன்று ஆய் முடிநது இயல்கின்ற – (காரணமின்றி) இடப்பட்ட குறியாகிப் படைப்புக் காலந்தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற, பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம் – பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய நான்கும் பகாப்பதங்களாம். எ–று.

உ–ம். நிலம், நீர், நெருப்பு, காற்று – பெயர்ப்பகாப்பதம்.

நட, வா, உண், தின் – வினைப்பகாப்பதம்.

மன், கொல், போல், மற்று – அடைப்பகாப்பதம்.

உறு, கழி, நனி, தவ – உரிப்பகாப்பதம்.

## கா. நமசிவாய முதலியார்

**பகுப்பால்** – பிரிக்கப்படுதலினாலே, **பயன் அற்று** – (பகுதி விகுதி முதலிய) பயன் இல்லாமல், **இடுகுறியாகி** – (காரணமில்லாமல்) இடப்பட்ட குறியாகி, **முன்னே ஒன்றாய்** – பண்டைக்காலந் தொட்டு ஒன்றாகி, **முடிந்து இயல்கின்ற** – முடிந்து நடக்கின்ற, **பெயர்** – பெயர்ச்சொல்லும, **வினை**– வினைச்சொல்லும், **இடை**–இடைச்சொல்லும், **உரி**–உரிச்சொல்லும் ஆகிய, **நான்கும்** – நான்கும், **பகாப்பதம்** – பகாப்பதங்களாகும்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| மண், நீர், நெருப்பு, காற்று | – | பெயர்ப்பகாப்பதம். |
| நட, வா, உண், தின் | – | வினைப்பகாப்பதம். |
| மன், கொல், போல், மற்று | – | இடைப்பகாப்பதம். |
| உறு, கழி, சால, நனி | – | உரிப்பகாப்பதம். |

புளி, கடு முதலிய ஆகுபெயர்கள் காரணத்தான் வருவனவாயினும், விகுதி முதலிய உறுப்புக்கள் இன்மையால். அவை பகாப் பதமென்றே கொள்ளப்படும்.

## மோசசு பொன்னையா

பகுப்பதால் பெறும் பொருட்பயன் எதுவும் இல்லாமல், இடுகுறியாகிப் பண்டு தொட்டே ஒன்றாய் நடக்கின்ற பெயர். வினை. இடை, உரிச் சொற்கள் நான்கும் பகாப்பதங்களாம், **எ–று.**

**எ–டு.**

நிலம், நீர், தீ – பெயர் பகாப்பதங்கள்.

நட, வா, உண் – வினைப் பகாப்பதங்கள்.

மண். கொல், போல் – இடைப் பகாப்பதங்கள்.

உறு, கழி, நனி – உரிப் பகாப்பதங்கள்.

இவ்வாசிரியர் பகாப்பதத்திற்குக் கூறும் விளக்கம் மொழி இயலார் உருபன் பற்றிக் கூறும் விளக்கத்தோடு ஓராற்றான் ஒத்து வருகிறது.

நிலம் என்ற பெயர்ச்சொல்லை நில் + அம் என்றும், நட என்ற வினைச்சொல்லை நட் + அ என்றும் பகுக்கலாம். எனினும் பகுத்துக் காணுமவற்றாற் பொருட்பயன் இல்லை யாதலின் பகுப்பாற் பயனற்று என்றும்.

இவ்வாறு அடிச்சொற்களே பெயரும், வினையும் இடையும், உரியுமாகப் பண்டுதொட்டு இயல்பாக வழங்கிவருவனவாயின; காலப்போக்கிலே அவை விகுதியும் பிறவும் பெற்று வடிவ மாற்றம் பெற்றன எனக் கொளல் வேண்டும் என்றுங் கூறுவாராய், இடுகுறியாகி முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற பெயர் வினை யிடையுரி என்றார்.

(4)

**131. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.**

பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினை பகுபதம் ஏ

poruḻ itam kālam siṉai kuṇam toḷiliṉ
varupeyar poḷutukoḻ viṉai pakupaṭam ē

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

COMPOUND WORD

Nouns which are derived from names of objects, places, times, members, qualities and actions, and Verbs which indicate tense, are termed Compound words.

ஒப்புமைப் பகுதி

பகுபதம் பகுக்கும் பண்பிற் றாகி
வினையே வினைப்பெய ரெனவிரு பாற்றே

(இ.வி.:41)

பகுபதம் ஒன்றாய்ப் பல ஒருங்கு உணர்த்தி
பொழுதுகொள் வினையும் பொருளிடம் காலம்
சினை குணம் தொழில் ஆறும் சேர்ந்து பெயருமாம்

(தொ.வி.:47)

.................. தொடர்ச்சொல் இரண்டினுட் படாமல்
விளைத்தபெயர் முற்று எச்சம் பிறவுமாய் பகுதிவிகுதி
இடைநிலையே சாரியை சந்தி விகாரம்
பழுத்த கருவிகளின் ஏற்பன கொண்டுமுடியும்
பகுபதம் முன் மூன்றிவைக் காம் ஏனைசில புலுமே.

(சுவாமி.:23:2–4)

## மயிலைநாதர்

**எ–ன்,** பகுபதமாவன உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** பொருளே இடனே காலமே உறுப்பே பண்பே தொழிலே என்றிவ்வாறும் காரணமாக வரும் பெயர்ச்சொற்களும், காலம் பற்றி வரும் வினைச்சொற்களும் பகுபதங்களாம், **எ–று.**

பொருண்முதன் மூன்றும் முதலும், சினைமுதன் மூன்றும் சினையுமா யடங்கு மென்பத றிவித்தற்கு இம்முறை வைத்தாரென்க. 'பொருளிடங்காலஞ் சினைகுணந் தொழிலின், வருபெயர் பொழுதுகொள்வினை' எனவே, இவைதாமன்றி இவை காரணமாகப் பிறவற்றிற்காம் பெயர்வினைகளே பகுபதமாவன வெனக் கொள்க. பொருளாதி [1]ஏழினையுந் தொடர்ந்து ஒன்றாய் நின்ற மொழியைப் பகுதி விகுதி இடைநிலை யெனப் பிரித்துக் காரணங்காட்டி மீட்டுங்கூட்டி ஒரு மொழியாகவே ஆக்கிக் கோடலிற் பகுபதமெனக் காரணப்பெயரா மென்க: உதாரணம் மேற்காட்டுதும், பெயர்ப் பகுபதத்தோடும் ஆகுபெயர்ப் பதத்தோடும் தொகைப் பதத்தோடும் [2]வினைப் பெயரோடும் முற்றுவினைப் பதத்தோடும் வேற்றுமைதோ வெனின், பெயர்ப் பகுபதம், பிரித்தால், பகுதி பகாப்பதமும் விகுதி வேறுபொருளில் இடைச்சொல்லுமாய்த் தொடர்ந்து நின்று பொருளை விளக்கும்; அவை:– ஊரன், வெற்பன், வில்லி, வாளி யென்றற் றொடக்கத்தன. ஆகுபெயர்ப் பதமும் காரணத்தினான் ஆமேயெனினும் விகுதி யின்றிப் பகுதியான பகாப்பதந்தானே பிறிதும் ஒருபொருளை விளக்கும். அவை: தெங்கு, கடு, புளி, குழிப்பாடி, சீனம், ஏறு, குத்து, நாழி என்றற் றொடக்கத்தன. தொகைப்பதம் இரண்டும் பலவும் பகாப்பதமும் பகுபதமும் நிலைமொழி வருமொழியாய்த் தொடர்ந்து இரண்டு முதலிய பொருள் தோன்ற நிற்கும்; அவை; யானைக்கோடு, கொல்யானை, கருங்குதிரை என்றற் றொடக்கத்தன. ஒரு தொழிற்சொல் எட்டு வேற்றுமை யுருபு மேற்கின் [3]வினைப்பெயராம்; அன்றித் தன்னெச்சமான பெயர்கொண்டு முடியின் முற்றுவினைச் சொல்லாம். உதாரணம் உண்டான், என்பது; உண்டானை உண்டானொடு எனவும், உண்டான்சாத்தன் உண்டான்தேவனெனவும் வரும். அன்றியும் எடுத்தலோசையாற் சொல்ல வினைப்பெயராம்; படுத்தலோசையாற் சொல்ல முற்று வினைப்பதமா மெனக் கொள்க.

---

பாட வேறுபாடு.:–

1. ஆறனையும்
2. பொழுது கொள்வினைப் பெயர்
3. தொழிற் பெயர்

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

**எ–னின்,** பகுபதம், இனைய என்பதூஉம், இத்துணைய என்பதூஉம் **உணர்–ற்று.**

**இ–ள்.:** இங்ஙனம் கூறிய பொருளாதி யாறும் காரணமாக வரும் பெயர்ச்சொற்களும் தெரிநிலையாயும் குறிப்பாயும் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களுமாகிய இரண்டும் பகுபதமாம், **எ–று.**

பொழுதுகொள் வினை பகுபதம் எனவே, அவ் விருவகை வினையாலணையும் பெயரும் பகுபதமாம் என்பது **அருத்தாபத்தியால்** கூறினார் என்க.

**உ–ம்.:** பொன்னன், அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன் எனப் பெயர்ப் பகுபதம் வந்தன. நடந்தான், நடக்கின்றான், நடப்பான் எனவும், நடந்த, நடக்கின்ற நடக்கும் எனவும், நடந்து நடக்க நடக்கின் எனவும் நடவான் எனவும், நடவாத எனவும், நடவாமல் எனவும், தெரிநிலையுடன்பாட்டு வினைமுற்றும் எச்சமும், எதிர்மறை வினைமுற்றும் எச்சமுமாய வினைப் பகுபதங்கள் முறையே வந்தன. பொன்னன், அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன் எனவும், கரிய பெரிய எனவும், அன்றி இன்றி எனவும் குறிப்புவினைமுற்றும் எச்சமுமாய வினைப் பகுபதங்கள் வந்தன. நடந்தான் நடந்தவன் எனத் தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் வந்தன. பொன்னன் ஊணன் எனக் குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம் வந்தன. பிறவும் அன்ன.

***★இனி, இங்ஙனம் பொருளாதி ஆறும் அடியாகத் தோன்றிய அவ் வினைக்குறிப்புப் பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் வேற்றமையாதோ எனின், வினைக்குறிப்புச் சொல்லெல்லாம் தெரிநிலைவினை போல முதல்நிலையில் பொருள் சிறந்து நிற்கும்; வினைக்குறிப்புப் பெயர்ச்சொல் அவ்வாறன்றி விகுதியில் பொருள் சிறந்து நிற்கும் என அறிக. எனவே, பொருளாதி யாறும் காரணமாக வரும் பெயர்ச்சொற்கள் முதல்நிலை விகுதியாகிய அவ் விரண்டினும் பொருள் சிறந்து நிற்கும் என உய்த்துணர்ந்து கொள்க. எல்லாச் சொற்களையும் கூறுங்கால், பொருள் சிறக்கும் இடத்து எழுத்தினை எடுத்தும், அயலெழுத்தினை நலிந்தும், ஏனையெழுத்துக்களைப் படுத்தும் கூறுக. ★***

அவன் இவன் உவன் என்னும் சுட்டுப்பெயரும், எவன் யாவன் என்னும் வினாப்பெயரும், தமர் நமர் நுமர் என்னும் கிளைப்பெயரும், தந்தை எந்தை நுந்தை என்னும் முறைப்பெயரும், இவை போல்வன பிறவும், சுட்டுப்பொருளும் வினாப்பொருளும் கிளைப்பொருளும் முறைப்பொருளும் காரணமாகப் பிற பொருட்கு வரும் பெயராய்ப் பகுதி விகுதி முதலிய உறுப்பும் உறுப்பின் பொருளும் தந்து, வெள்ளிடைக்கிடக்கும் பகுபதமாய்ப் பகுக்கப்படுதலால், இவற்றைப் பகுபதம் என்னாது பகாப்பதம் எனக்கூறின் அது பொருந்தாது என்க.

இனிப் பகுதி விகுதி முதலிய உறுப்பும் உறுப்பின் பொருளும் தரும் ஒரு சொல்லைப் பகுபதம் என்றமையின், சொன்மை பொருண்மை இன்மை செம்மை சிறுமை நடத்தல் வருதல் முதலிய சொற்கள், பகுதி விகுதியாகப் பகுக்கப்படுதலானும், விகுதிக்கு வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதியாய் நிற்றலானும், சொல்நிலையால் பகுபதம் என்றும் பொருள் நிலையால் பகாப்பதம் என்றும் கொள்ளப்படும் என்க.

மேல் சொல்லதிகாரத்துள், திணை பால் இடம் முதலிய இலக்கணங்களான் விதந்து 'கிளைஎண் குழூஉ முதற் பல்பொருள்' என்னும் சூத்திரம் முதலியவற்றான் நான்கியலுள்ளும் உணர்த்த, ஆண்டு உணரவரும் பெயர் வினை இடை உரிகள் ஈண்டு உணரவாராவேனும், உரைத்தும் என்னும் உத்தியால் பகாப்பதம் பகுபதம் என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** நிறுத்தமுறையே பகுபதம் ஆமாறு கூறியது.

**இ—ள்.: பொருள்** – பொருள் காரணமாக வரும் பெயரும், **இடம்** – இடம் காரணமாக வரும் பெயரும், **காலம்**–காலம் காரணமாக வரும் பெயரும், **சினை**–சினை காரணமாக வரும் பெயரும், **குணம்**–குணம் காரணமாக வரும் பெயரும், **தொழிலின் வருபெயர்**–தொழில் காரணமாக வரும் பெயரும், **பொழுது கொள்வினை**–காலத்தைக் கொண்டு முடியும் வினையும், **பகுபதமே** – இவையெல்லாம் பகுபதம், **எ—று.**

பொருள் முதல் மூன்றும் முதலும் சினைமுதல் மூன்றும் சினையுமாய் அடங்குதற்கு இம்முறை வைத்தார் என்க.

**உ—ம்.:** குழையன், வாணன், உத்திரட்டாதியான், கூனன், கரியன், கூத்தன் எனப் பெயர்ப் பகுபதம் ஆறும் வந்தன. நடந்தான், நடக்கின்றான், நடப்பான் என முக்காலமும் காட்டும் வினைப் பகுபதம் வந்தன.

## விசாகப் பெருமாளையர்

**இது,** பகுபதங்கள் இப்படிப்பட்டவைகளென்பதும், இத்தனை வகைப்படு மென்பதும் உணர்த்துகின்றது.

**இ—ள்.: பொருள்** – பொருளும், **இடம்** – இடமும், **காலம்** – காலமும்; **சினை** – உறுப்பும், **குணம்**–குணமும், **தொழிலின்**–தொழிலுங் காரணமாக, **வரு** – வருகின்ற, **பெயர்** – பெயர்ச்சொற்களும், **பொழுதுகொள்** – தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக் கொள்ளும், **வினை** – வினைச்சொற்களும், **பகுபதம்**–பகுபதங்களாகும், **எ—று.**

"பொழுது கொள்வினை பகுபதம்" எனவே அவ்வினைகொண்டு வினையாலணையும் பெயர்களும் பகுபதமா மென்பது அருத்தாபத்தியாற் சொன்னாரென வறிக.

உ–ம்.: பொன்னன் – அகத்தன், ஆதிரையான் – கண்ணன், கரியன்– ஊணன் எனப் பெயர்ப் பகுபதம் வந்தன. நடந்தான், நடக்கிறான், நடப்பான் எனவும்; நடந்த, நடக்கிற, நடக்கும் எனவும், நடந்து, நடக்க, நடக்கின் எனவும், நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் எனவும்; நடவாத–எனவும்; நடவாமல்– எனவும்; உடன்பாட்டிலும் எதிர்மறையிலுங் கூடிய முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய தெரிநிலை வினைப்பகுபதம் வந்தன. பொன்னன்– ஊணன் எனவும், கரிய–பெரிய எனவும், அன்றி–இன்றி எனவும், முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய குறிப்புவினைப் பகுபதம் வந்தன, நடந்தான்–நடந்தவன் – பொன்னன்– பொன்னவன் என விருவகை வினைபாலணையும் பெயர்ப் பகுபதம் வந்தன.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

பகாப்பதம் எத்தனை வகைப்படும்?

“பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம்”

பகுபத வியல்பும் அதன்பகுதியும் கூறுஞ் சூத்திரம் யாது?

பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்

வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே

(பொருள் இடம் காலம் சினை குணம் தொழிவின் வருபெயர் பொழுதுகொள் வினை பகுபதமே)

**இ–ள்.: பொருள் இடம் காலம் சினை குணம் தொழிவின் வருபெயர்** – பொருளும் இடமும் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலும் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும், **பொழுது கொள்வினை** – தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும் பகுபதமே – பகுப்பதங்களாகும், **எ–று.**

பொழுது கொள்வினை பகுபதமெனவே, அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் கூறினாரெனவறிக

பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்?

“பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர் என்றதனாற் பொருட்பெயர்ப் பகுபதம், இடப்பெயர்ப் பகுபதம், காலப்பெயர் பகுபதம், சினைப்பெயர்ப் பகுபதம். குணப்பெயர்ப் பகுபதம், தொழிற்பெயர்ப் பகுபதம் என ஆறாம்.

**உ–ம்.:**

(1) பொன்னன் என்பது பொருட்பெயர்ப் பகுபதம்

(2) அகத்தன் என்பது இடப்பெயர்ப் பகுபதம்.

(3) ஆதிரையான் என்பது காலப்பெயர்ப் பகுபதம்.

(4) கண்ணன் என்பது சினைப்பெயர்ப் பகுபதம்.

(5) கரியன் என்பது குணப்பெயர்ப் பகுபதம்..

(6) ஊணன் என்பது தொழிற்பெயர் பகுபதம்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** பகுபதம் இன்ன வென்பதும் இவ்வளவின வென்பது முணர்த்துகின்றது.

**இ—ள்.: பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர்** – இவ்வாறுங் காரணமாக வரும் பெயர்ச் சொற்களும், **பொழுது கொள்வினை பகுபதம்** – (தெரிநிலையாகவுங் குறிப்பாகவும்) காலத்தைக் கொண்டு வருகின்ற வினைச்சொற்களும் பகுபதங்களாம், **எ—று.**

புளி, கடு முதலிய ஆகுபெயர்களுங் காரணத்தால் வருமாயினும், நட, வா முதலிய ஏவல்வினைகளும் பொழுதுகொள் வினையாமினும், பகுத்தற்கு விகுதி முதலிய உறுப்பில்லாததினாலே இவையொழிந்தன வற்றையே வருபெயரென்றும், பொழுதுகொள் வினையென்றுங் கூறினாரெனக் காண்க.

**உ—ம்.:—**

பொன்னன்—பொருள், அகத்தன்—இடம், ஆதிரையான்—காலம், கண்ணன்—சினை, கரியன்—குணம், ஊணன்—தொழில் என முறையே பொருளாதி ஆறுங் காரணமாகப் பெயர்ப்பகுபதம் வந்தன. நடந்தான், நடக்கின்றான், நடப்பான் என முக்கால வினைமுற்றுப் பகுபதம் வந்தன. நடந்த நடக்கின்ற நடக்கும் எை முக்காலப் பெயரெச்சப் பகுபதம் வந்தன. நடந்து நடக்க நடக்கின் என வினையெச்சப் பகுபதம் வந்தன. இவையெல்லா முடன்பாடு. நடவான், நடவாத, நடவாது இவை யெதிர்மறை; இவை முறையே உடன்பாட்டு வினைமுற்றும் பெயரெச்ச வினையெச்சங்களும், எதிர்மறை வினை முற்றும் பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய, தெரிநிலை வினைப் பகுபதங்கள். பொன்னன், அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன், அற்று, இற்று, எற்று என இவை குறிப்புவினைமுற்று. கரிய—பெரிய— என இவை குறிப்புப் பெயரெச்சம் (இவையுடன்பாடு). அல்லன், இல்லன், அன்று, இன்று எனவிவை முற்று. அல்லாத—இல்லாத—இவை வினையெச்சம். இவை முறையே எதிர்மறைமுற்றும், எதிர்மறைப் பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய குறிப்பு வினைப் பகுபதங்கள் வந்தன. நடந்தான், நடந்தானை, நடந்தவனை எனத் தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம் வந்தன. பொன்னன், பொன்னனை, ஊணன், ஊணனை எனக் குறிப்பு வினையாலனையும் பெயர்பகுபதம் வந்தன. பொன்னன் என்பது குறிப்பு வினைமுற்றாயின் பொன்னை யுடையனாயினானென விரிந்து உருபு ஏறாது நிற்பதும், குறிப்பு வினையாலணையும் பெயராயின் உருபேறி நிற்பதும், தம்முள் வேற்றுமை, இது தெரிநிலை வினையாலணையும் பெயர்க்கும் ஒக்கும்.

அவன், இவன், உவன், எவன், யாவன், தமர், நமர், நுமர், தந்தை, எந்தை, நுந்தை என வரும். இவை முறையே சுட்டுப்பொருளும் வினாப்பொருளும், கிளைப்பொருளும், முறைப்பொருளுங் காரணமாகப் பிற பொருளுக்கு வரும் பெயராய்ப் பகுதி விகுதி முதலிய உறுப்பும் உறுப்பின் பொருளுந் தந்து வெளிப்பட்டு நிற்கும் பகுபதங்களாய்ப் பகுக்கப்படுதலால் இவற்றைப் பகுபதமென்னாது பகாப்பத மென்பாருமுளர், அது பொருந்தாதென மறுக்க. சொன்மை, பொருண்மை, செம்மை, வின்மை, நடத்தல், வருதல் முதலியன பகுதி விகுதியாகப் பகுக்கப்படினும், விகுதிக்கு வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் நிற்பதினாலே சொல்நிலைப் பற்றிப் பகுபத மென்றும் பொருள்நிலைப் பற்றிப் பகாப்பத மென்றுங் கொள்ளப்படு மென்க. இச்சூத்திரத்தை பெயர், வினைபகுபதமென முடிந்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– **பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின்** – பொருளும் இடமும் காலமும் உறுப்பும் குணமும் தொழிலுங் காரணமாக, **வரு பெயர்** – வருகின்ற பெயர்ச்சொற்களும், **பொழுது கொள்வினை** – (தெரிநிலையாகவும் குறிப்பாகவும்) காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும், **பகுபதம்** – பகுபதங்களாம்.

குறிப்பு :– எனவே பகுபதம் – பெயர்ப்பகுபதம் வினைப்பகுபதம் என இரண்டாகும். தொழிலும் பண்பில் அடங்கும் என்பது தோன்ற அதனைப் பண்போடு கூட்டி இறுதியிற் கூறினார். 'பொழுதுகொள்வினை பகுபதம்' எனவே அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமா மென்பது **அருத்தாபத்தியாற்** பெறப்படும்.

**பெயர்ப்பகுப்பதங்கள் வருமாறு :**

உ–ம் :– பொருள் – பொன்னன்.
இடம் – ஊரன்.
காலம் – வேனிலான்.
சினை – கையன்.
குணம் – கரியன்.
தொழில் – நடையன்.

தெரிநிலைவினைப்பகுபதங்கள் :– நடந்தான், நடந்த, நடந்து, நடவான்.

குறிப்புவினைப்பகுபதங்கள் :– பொன்னன், பெரிய, மெல்ல, அல்லன்.

தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுப்பதம் :– நடந்தான், நடந்தவன், நடவாதவன்.

குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம் :– பொன்னன், பொன்னவன், இல்லாதவன்.

பெயர்ப்பகுபதம் காலத்தைக் காட்டாமல் வேற்றுமையுருபைப் பெற்றுவரும் : உ–ம் : **பொன்னனால்** (பொன்னையுடையவனால்).

குறிப்புவினைமுற்றுப்பகுபதம் காலத்தைக் குறிப்பாற் காட்டி வேற்றுமையுருபைப் பெறாதுவரும். உ–ம் : இராமன் இப்போது **பொன்னன்** (பொன்னையுடையவனாயிருக்கிறான்)

குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம் காலத்தைக் குறிப்பாற் காட்டி வேற்றுமை உருபைப் பெற்றுவரும். உ–ம் : முன்பு **பொன்னனைக்** கண்டேன். (பொன்னையுடையவனாயிருந்தவனை)

(இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம்.)

தெரிநிலைவினைமுற்றுப் பகுப்பதம் காலத்தை வெளிப்படையாற் காட்டி வேற்றுமையுருபைப் பெறாதுவரும். உ–ம் : இராமன் **நடந்தான்.**

தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதம் காலத்தை வெளிப்படையாற்காட்டி வேற்றுமை உருபைப் பெற்றுவரும். உ–ம் : **வந்தானைக்** கண்டேன்; **வந்தவனைக்** கண்டேன்.

(இவையே இவ்விரண்டிற்கும் வேறுபாடாம்)

அவன் இவன் என்னும் சுட்டிடப்பெயர்களும், எவன் யாவன் என்னும் வினாவடிப்பெயர்களும், பிறன் மற்றையான் என்னும் வேறிடைச் சொற்பெயர்களும், தமர் நுமர் எந்தை என்னும் கிளைப் பெயர்களும் பொருள் முதலிய ஆறனுள் ஒன்றிலடங்கிய பகுபதங்களேயாம் எனவறிக. செம்மை முதலிய பண்புப்பெயர்களும், நடத்தல் முதலிய தொழிற்பெயர்களும் பகுதி விகுதிகளாகப் பகுக்கப்படுதலின் சொல்நிலைபற்றிப் பகுபதம் என்றும், பகுக்கப்படினும் விகுதிக்கு வேறுபொருளின்றிப்பகுதிப் பொருள் விகுதியாய் நிற்பதால், பொருள்நிலை பற்றிப் பகாப்பதம் என்றுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர்** – பொருளும் இடமுங் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலுங் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும், **பொழுது கொள்வினை** – தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும், **பகுபதம்** – பகுபதங்களாகும், **எ–று.**

பொழுதுகொள்வினை பகுபத மெனவே, அவ் விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமா மென்பது **அருத்தாபத்தியாற்** கூறினா ரென வறிக.

**உ–ம்.:** பொன்னன் என்பது பொருட்பெயர்ப் பகுபதம். அகத்தன் என்பது இடப்பெயர் பகுபதம். ஆதிரையான் என்பது காலப்பெயர்ப் பகுபதம். கண்ணன் என்பது சினைப்பெயர்ப் பகுபதம். கரியன் என்பது குணப்பெயர்ப் பகுபதம். ஊணன் என்பது தொழிற்பெயர்ப் பகுபதம்.

நடந்தான் நடக்கின்றான் நடப்பான் என்பன உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம். நடந்த நடக்கின்ற நடக்கும் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.

நடந்து நடக்க நடக்கின் என்பன உடன்பாட்டுத் தெரிநிலை வினைபெச்ச பகுபதம். நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் என்பன எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம். நடவாத என்பது எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம். நடவாது நடவாமல் என்பன எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம். பொன்னன் ஊணன் அற்று இற்று எற்று என்பன உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம். கரிய பெரிய என்பன உடன்பாட்டுக் குறிப்பு வினைப் பெயரெச்சப் பகுபதம். பைய மெல்ல என்பன உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம். அல்லன் இல்லன் அன்று இன்று என்பன எதிர்மறைக் குறிப்புவினைமுற்றுப் பகுபதம். அல்லாத இல்லாத என்பன எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம். அன்றி இன்றி அல்லாமல் இல்லாமல் என்பன எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம். நடந்தான் நடந்தவன் என்பன தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம். பொன்னன் பொன்னவன் என்பன குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம்.

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதி யிரண்டிலும் பொருட் சிறப்புடையதாய்க் காலங்கொள்ளாது வேற்றுமையுரு பேற்று வரும். வினைக்குறிப்பு முற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேலாது வரும். வினைக்குறிப்பு முற்றாலணையும் பெயர்ப்பகுபதம் விகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமை யுருபேற்று வரும். இவையே இம் மூன்றுக்கும் வேறுபாடாம்.

**உ–ம்.:** பொன்னனை வணங்கினான், சாத்தன் பண்டு பொன்னன், பண்டு பொன்னனைக் கொணர்ந்தேன் என வரும்.

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை யுருபேலாது வரும்; தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை யுருபேற்று வரும். இவையே இவ் விரண்டிற்கும் வேறுபாடாம்.

**உ–ம்.:** சாத்தன் நடந்தான்; நடந்தானைத் தடுத்தேன் என வரும்.

எல்லாச் சொற்களையுங் கூறுங்காற் பொருள் சிறக்குமிடத் தெழுத்தை எடுத்தும், அயலெழுத்தை நலிந்தும், மற்றை யெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

மேற்கூறிய பெயர்ப் பகுபதங்களுள் அடங்காது வேறாய் வருவனவும் சிலவுள; அவை தொழிற்பெயரும், பண்புப்பெயரும், பிற பெயருமாம்.

**உ–ம்.:** நடத்தல், வருதல், உண்டல், சேறல், எனவும்; செம்மை, கருமை எனவும்; சேர்ந்தார்க்கொல்லி, உடுக்கை, எனவும்; வரும்.

**வ. குமாரசாமிப் புலவர்**

**இ–ள். பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர்**

பொருளும் இடமுங் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலுங் காரணமாக வருகின்ற பெயர்ச் சொற்களும் – **பொழுது கொள் வினை** – தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும், – **பகுபதம்** – பகுபதங்களாகும். **எ—று.**

பொழுதுகொள்வினை பகுபதமெனவே அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் கூறினாரெனவறிக. அவ்விருவகை வினையாலணையும் பெயர்களாவன: தெரிநிலை வினையாலணையும் பெயர், குறிப்பு வினையாலணையும் பெயர் என்னுமிரண்டும் என்றறிகி.

**உ—ம்.** பொன்னன் என்பது பொருட்பெயர்ப்பகுபதம்

அகத்தன் என்பது இடப்பெயர்ப்பகுபதம்

ஆதிரையான் என்பது காலப்பெயர்ப்பகுபதம்

கண்ணன் என்பது சினைப்பெயர்ப்பகுபதம்

கரியன் என்பது குணப்பெயர்ப்பகுபதம்

ஊணன் என்பது தொழிற்பெயர்ப்பகுபதம்.

நடந்தான், நடக்கின்றான், நடப்பான் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம்.

நடந்த, நடக்கின்ற, நடக்கும் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைப் பெயரெச்சவினைப் பகுபதம்.

நடந்து, நடக்க, நடக்கின் என்பன உடன்பாட்டுத் தெரிநிலை வினையெச்சப் பகுபதம்.

நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் என்பன எதிர்மறைத் தெரிநிலை வினை முற்றுப் பகுபதம்.

நடவாத என்பது எதிர்மறைத் தெரிநிலை வினைப்பெயரெச்சப் பகுபதம்.

நடவாது, நடவாமல் என்பது எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.

பொன்னன், ஊணன், அற்று, இற்று, எற்று என்பன உடன்பாட்டுக் குறிப்புவினை முற்றுப் பகுபதம்.

கரிய, பெரிய என்பன உடன்பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

பைய, மெல்ல என்பன உடன்பாட்டுக் குறிப்பிவினை வினையெச்சப் பகுபதம்.

அல்லன், இல்லன், அன்று, இன்று என்பன எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.

அல்லாத, இல்லாத, என்பன எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

அன்றி, இன்றி, அல்லாமல், இல்லாமல் என்பன எதிர்மறைக்குறிப்பு வினை வினையெச்சப் பகுபதம்.

நடந்தான், நடந்தவன் என்பன தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

பொன்னன், பொன்னவன் என்பன குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதி யிரண்டிலும் பொருட் சிறப்புடையதாய்க் காலங்கொள்ளாது வேற்றுமையுருபேற்று வரும். வினைக் குறிப்பு முற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேலாது வரும் வினைக் குறிப்பு முற்றாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம். உ–ம். பொன்னனை வணங்கினான்; சாத்தன் பண்டுபொன்னன்; பண்டு பொன்னனைக் கொணர்ந்தேன் எனவரும்.

தெரிநிலைவினை முற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேலாது வரும். தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இவ்விரண்டற்கும் வேறுபாடாம். உ–ம். சாத்தனடந்தான்; நடந்தானைத் தடுத்தேன் எனவரும்.

எல்லாச் சொற்களையும் கூறுங்காற் பொருள் சிறக்குமிடத் தெழுத்தை எடுத்தும், அயலெழுத்தை நலித்தும், மற்றையெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

மேற்கூறிய பெயர்ப் பகுபதங்களுள் அடங்காது வேறாய் வருவனவுஞ் சிலவுள: அவை தொழிற்பெயரும், பண்புப்பெயரும், பிறபெயருமாம். உ–ம். நடத்தல், வருதல், உண்டல், சேறல் எனவும், செம்மை, கருமை எனவும். சேர்ந்தார்க்கொல்லி, உடுக்கை எனவும். வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் –** பொருளும் இடமும் காலமும் உறுப்பும் குணமும் தொழிலும் ஆகிய இந்த ஆறு பெயர்களையும் அடியாகக் கொண்டு, **வரு**–பிறக்கின்ற, **பெயர் –**

பெயர்ச்சொற்களும், **பொழுது கொள்** – (தெரிநிலையாக வாயினும் குறிப்பாக வாயினும்) காலத்தைக் கொள்ளுகின்ற, **வினை** – வினைச்சொற்களும், **பகுபதம்** – பகுபதங்களாம்; **எ–று**. எனவே; பெயர் வினை எனப் பகுபதம் இரண்டு வகைப்படும். இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதம் இல்லை.

'பொழுதுகொள் வினை பகுபதம்' எனவே, தெரிநிலை குறிப்பு என்னும் இருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமா மென்பது பெறப்படும்.

**உ–ம்.**: பொன்னன் – பொருட் பெயர்ப்பகுபதம்

நாடன் – இடப் பெயர்ப்பகுபதம்

திருவோணத்தான் – காலப்

கண்ணன் – சினைப்

கரியன் – குணப்

தட்டான் – தொழிற்

நடந்தான், நடந்த, நடந்து, நடவான் – தெரிநிலை வினைப் பகுபதம்.

பொன்னன், பெரிய, மெல்ல, அல்லன்– குறிப்பு வினைப் பகுபதம்.

நடந்தான், நடந்தவன், நடவாதவன்–தெரிநிலை வினையாலனையும் பெயர்

பொன்னன், பொன்னவன், இல்லாதவன்–குறிப்பு வினையாலனையும் பெயர்

(1) பெயர்ப்பகுபதம் – காலங் காட்டாமல் வேற்றுமை யுருபை ஏற்று வரும்.

**உ–ம்.**: பொன்னனை (பொன்னை யுடையவனை) வணங்கினான்.

(2) குறிப்பு வினைமுற்றுப் பகுபதம், காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமை யுருபை ஏலாது வரும்;

**உ–ம்.**: இவன் இப்போது பொன்னன் (பொன்னை யுடையவனா யிருக்கின்றான்).

(3) குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதம் – காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபை ஏற்று வரும்;

**உ–ம்.**: பண்டு பொன்னனை (முன்னே பொன்னை யுடையவனா யிருந்தவனை)ப் பின்பு ஏழையாகக் கண்டேன்.

இவையே இம் மூன்றுக்கும் வேறுபாடாம்.

(1) தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை யுருபை ஏலாது வரும்;

**உ–ம்.**: பொன்னன் நடந்தான்.

(2) தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம், காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபை ஏற்று வரும்;

**உ–ம்.:** நடந்தானைத் தடுத்தேன். (இது நடந்தவன் என்றும் வரும்.)

இவையே இவ்விரண்டிற்கும் வேறுபாடாம்.

அவன் இவன் உவன் என்னும் சுட்டிடை சொல்லடியால் வரும் பெயர்களும், எவன் ஏது யார் என்னும் வினாவிடைச் சொல்லடியால் வரும் பெயர்களும், பிறன் மற்றையான் என்னும் வேறு இடைச்சொல்லடியால் வரும் பெயர்களும், தமர் நமர் நுமர் என்னும் கிளைப்பெயர்களும், இங்குக் கூறிய பொருள் முதலிய ஆறனுள் சொல்வான் குறிப்பின்படி ஒன்றில் அடங்கும்.

செம்மை கருமை முதலிய பண்புப் பெயர்களும், நடத்தல் வருதல் முதலிய தொழிற்பெயர்களும், பகுதிவிகுதியாகப் பகுக்கப்படுமாயினும், விகுதிக்கு வேறு பொருளின்றி நிற்பதனால், சொல்நிலையாற் பகுபதமாயினும் பொருள் நிலையாற் பகாப்பதமெனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர் – பொருளும் இடமுங் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலுங் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும், பொழுதுகொள் வினை – (தெரிநிலையாகஸவங் குறிப்பாகவும்) காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும், பகுபதம் – பகுபதங்களாகும்.

பொழுதுகொள்வினை பகுபதமெனவே, அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் கூறினாரெனவறிக.

உதாரணம்: பொன்னன் – (பொருள்)

நாடன் – (இடம்)

ஆதிரையாள் – (காலம்)

கண்ணன் – (நினை)

கரியன் – (குணம்)

தட்டான் – (தொழில்) – பெயர்ப் பகுபதம்

நடந்தான், நடந்து, நடந்த, நடவான் – தெரிநிலை

பொன்னன், பெரிய, அன்று, அல்லன் – குறிப்பு – வினைப் பகுபதம்.

நடந்தான், நடந்தவன்,

நடவாதவன், – தெரிநிலை

பொன்னன், பொன்னவன்,

இல்லாதவன் – குறிப்பு – வினையாலணையும் பெயர்.

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதி யிரண்டிலும் பொருட் சிறப்புடையதாய்க் காலங்கொள்ளாது வேற்றுமையுரு பேற்றுவரும். வினைக்குறிப்பு முற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுரு பேலாது வரும். வினைக்குறிப்பு முற்றாலணையும் பெயர்ப்பகுபதம் விகுதிய;ற பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே, இம்முன்றுக்கும் வேறுபாடாம். உ–ம் பொன்னனை வணங்கினான். சாத்தன் பண்டு பொன்னன். பண்டு பொன்னனைக் கொணர்ந்தேன்.

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேலாது வரும். தரிநிலையினையாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட் சிற்பபுடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இவ்விரண்டற்கும் வேறுபாடாம். உ–ம். சாத்தன் நடந்தான். நடந்தானைத் தடுத்தேன்.

எல்லாச் சொறக்ளையுங் கூறுங்கால் பொருள் சிறக்குமிடத் தெழுத்தை எடுத்தும், அபலெபத்தை நலிந்தும், மற்றையெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

அவன் இவன் முதலிய சுட்டுப் பெயர்களும், எவன் யாவன் முதலிய வினாப்பயெர்களும், தமர் நுமர் முதலிய கிளைப் பெயர்களும் – பகுதி விகுதி முதலிய உறுப்பும் உறுப்பின பொருளும் தருதலால் பகுபதங்களேயாம்.

நடத்தல் உண்ணல் முதலிய தொழிற்பெயரும், செம்மை கருமை முதலிய பண்புப் பெயரும், பகுதி விகுதியாகப் பகுக்கப்படுமாயினும், விகுதிக்கு வேறு பொருளின்மையால், பொருள்நிலையாற் பகாப்பதமும் சொல் நிலையாற் பகுபதமுமாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின்–பொருளும் இடமும் காலமும் உறுப்பும் குணமும் தொழிலும் காரணமாக, வருபெயர்–வருகின்ற பெயர்ச் சொற்களும், பொழுது கொள்வினை – (தெரிநிலையாகவும் குறிப்பாகவும்) காலத்தைக் கொள்ளும் வினைச் சொறகளம், பகுபதம்–பகுபதங்களாகும். **எ–று.** (தெரிநிலை–வெளிப்படை.)

**பொ–ரை.:** பொருள் முதலிய ஆறும் காரணமாக வரும் பெயர்ச் சொற்களும், காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் பகுபதங்கள் ஆகும்.

எனவே பெயர் வினை எனப் பகுபதம் இரண்டு வகைப்படும். இடைச் சொல்லிலும் உரிச் சொல்லிலும் பகுபதம் இல்லை.

'பொழுதுகொள்வினை பகுபதம்' எனவே தெரிநிலை குறிப்பு என்னும் இருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் சொன்னாரென வறிக. (அருத்தா பத்தி – சொல்லியது கொண்டு சொல்லப்படாத பொருளைப் பெறுதல்.)

(உ–ம்.) பொன்னன் – பொருள்

நாடன் – இடம்

ஆதிரையான் – காலம்

கண்ணன் – சினை

கரியன் – குணம்

ஊணன் – தொழில் – பெயர்ப்பகுபதம்.

நடந்தான், நடக்கின்றான், நடப்பான்– உடன்பாட்டுத் தெரிநிலை வினை முற்றுப் பகுபதம்.

நடந்த, நடக்கின்ற, நடக்கும் – உடன்பாட்டுத் தெரிநிலை வினைப் பெயரெச்சப் பகுபதம்.

நடந்து, நடக்க, நடக்கின் – உடன்பாட்டுத் தெரிநிலை வினை வினையெச்சப் பகுபதம்.

நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் – எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.

நடவாத – எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.

நடவாமல் – எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்

பொன்னன், ஊணன் – உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.

கரிய, பெரிய – உடன்பாட்டுக்குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

பைய, மெல்ல – உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

அல்லன், இல்லன், அன்று, இன்று – எதிர்மறைக் குறிப்புவினைமுற்றுப் பகுபதம்.

அல்லாத, இல்லாத – எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

அன்றி, இன்றி, அல்லாமல், இல்லாமல் – எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

பொன்னன், பொன்னவன் – குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

பெயர்ப்பகுபதம்:– இப் பகுபதம் பகுதி விகுதி முதலிய ஆறுறுப்புக்களில் பகுதி விகுதி யிரண்டிலும் பொருள் சிறந்து நன்று, காலங்காட்டாமல் வேற்றுமை யுருபுகளை ஏற்று வரும்.

(உ–ம்.) பொன்னனை வணங்கினான்.

(பொன்னனை–பொன்னையுடையவனை.)

இது, பகுதியால் பொருளாதியாறும், விகுதியால் அவற்றையுடையானும் தெரிவித்தலின் அவ் விரண்டிடத்தும் பொருள் சிறந்த தென்க.

தெரிநிலை வினைமுற்றுப்பகுபதம்:– இப் பகுபதம் மேற் கூறிய ஆறுறுப்புக்களில் பகுதியிற் பொருள் சிறந்து நின்று, காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமை யுருபை ஏலாது வரும்.

(உ–ம்.) பொன்னன் நடந்தான்.

இது, பகுதியால் வினை விகற்பங்கள் பிறந்தற்கிடமா யிருத்தலாலும் செயலைத்தெரிவித்தலாலும் அப் பகுதி யிடத்துப் பொருள் சிறந்த தென்க.

குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்:– இப் பகுபதம் மேற் கூறிய ஆறுறுப்புக்களில் பகுதியிற் பொருள் சிறந்து நின்று, குறிப்பாகக் காலத்தைக் காட்டி, வேற்றுமையுருபை ஏலாது வரும்.

(உ–ம்) இவன் இப்போது பொன்னன்.

(பொன்னன்–பொன்னையுடையவனா யிருக்கின்றான்.)

இது, வினைநிகழ்வதற்கு இடமாதலைப்பகுதியாற் றெரிவித்தலின் அப் பகுதியிடத்துப் பொருள் சிறந்த தென்க.

தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம்:– இப் பகுபதம் மேற்கூறிய ஆறுறுப்புக்களில் விகுதியிற் பொருள் சிறந்து நின்று, காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபை ஏற்று வரும்.

(உ–ம்) நடந்தானைத் தடுத்தேன். (இது நடந்தவன் என்றும் வரும்.)

இது, ஐம்பாற் பெயருள் ஒன்றனைத் தெரிவிப்பது விகுதியாதலாலும், உருபேற்றற்கு இடமா யிருத்தலாலும், வினையினும் பெயரை மிக்குக் கருதலாலும் விகுதியிடத்துப் பொருள் சிறந்த தென்க.

குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதம்:– இப் பகுபதம் மேற்கூறிய ஆறுறுப்புக்களில் விகுதியிற் பொருள் சிறந்து நின்று, காலத்தைக் குறிப்பாகக்காட்டி வேற்றுமை யுருபை யேற்று வரும்.

(உ–ம்.) பண்டு பொன்னனைப் பின்பு ஏழையாகக் கண்டேன்.

(பண்டு பொன்னனை–முன்னே பொன்னை யுடையவனா யிருந்தவனை.)

இது, ஐம்பாற் பெயருள் ஒன்றனைத் தெரிவிப்பது விகுதியாதலாலும், உருபு ஏற்றற்கு இடமா யிருத்தலாலும், வினையினும் பெயரை மிக்குக் கருதலாலும் விழுதியிடத்துப் பொருள் சிறந்த தென்க.

இவை தம்முள் ஒன்றற் கொன்று வேறு பாடாதலறிக. ஆகவே பெயர்ப்பகுபதங்கள் பெயர்த் தன்மையையும், வினைமுற்றுக்கள் வினைத்தன்மையையும், வினையாலணையும் பெயர்கள் அவ் விரு தன்மைகளையும் பெற்று வருவன அறிக.

## கா. நமசிவாய முதலியார்

**பொருள்** – பொருளினாலும், **இடம்** – இடத்தினாலும், **காலம்** – காலத்தினாலும், **சினை** – உறுப்பினாலும், **குணம்** – பண்பினாலும், **தொழிலின்** – தொழிலினாலும், **வரு** – வருகின்ற, **பெயர்** – பெயர்ச் சொற்களும்; **பொழுது கொள்** – (தெரிநிலையாகவும் குறிப்பாகவும்) காலத்தைக்கொள்ளும், **வினை** – வினைச்சொற்களும், **பகுபதம்** – பகுபதங்களாகும்.

'**பொழுதுகொள் வினை பகுபதம்**' எனவே, தெரிநிலையும் குறிப்புமாகிய அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாம் என்பது அருத்தாபத்தியாற் கொள்க.

**உதாரணம்**

(1) பெயர்ப்பகுபதம் :

| | | | |
|---|---|---|---|
| பொன்னன் | – பொருள் | மூக்கன் | – சினை |
| விண்ணோர் | – இடம் | கரியன் | – குணம் |
| ஆதிரையன் | – காலம் | ஊணன் | – தொழில் |

(2) தெரிநிலை வினைப் பகுபதம் :

| | |
|---|---|
| நடந்தான், நடக்கிறான், நடப்பான் | – உடன்பாட்டு வினைமுற்று |
| நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் | – எதிர்மறை வினைமுற்று |
| நடந்த, நடக்கின்ற, நடக்கும் | – உடன்பாட்டுப்பெயரெச்சம் |
| நடவாத | – எதிர்மறைப் பெயரெச்சம் |
| நடந்து, நடக்க, நடக்கின் | – உடன்பாட்டு வினையெச்சம் |
| நடவாமல் | – எதிர்மறை வினையெச்சம் |

(3) குறிப்பு வினைப் பகுபதம் :

| | |
|---|---|
| பொன்னன், ஊணன் | – உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்று |
| அல்லன், இல்லன் | – எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று |
| கரிய, பெரிய | – உடன்பாட்டுக் குறிப்புப்பெயரெச்சம் |
| அல்லாத, இல்லாத | – எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் |
| பைய, மெல்ல | – உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம் |
| அன்றி, இன்றி | – எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம் |

(4) தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் :

நடந்தானை, நடந்தவனை.

(5) குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம் :

பொன்னனை, பொன்னவனை.

(வினைமுற்றுக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடு)

(1) தெரிநிலை வினைமுற்றுப் பகுபதமாவது, செயலும் காலமும் தெரிய

நிற்பது. (அவன்) நடந்தான்.

(2) தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதமாவது, மேற்கூறிய வினைமுற்று வேற்றுமை யுருபு ஏற்று வருவது.

நடந்தானைக் கண்டேனன் :

இஃது ஈறு திரிந்து நடந்தவனை எனவும் வரும்.

(3) குறிப்பு வினைமுற்றுப் பகுபதமாவது, பொருளாதி ஆறின் அடியாகப் பிறந்து குறிப்பாகக் காலத்தைக் காட்டுவது.

இவன் நேற்றுப் பொன்னன் – (பொன்னையுடையனாயிருந்தான்.)

(4) குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதமாவது, மேற்கூறிய அக் குறிப்பு வினைமுற்று வேற்றுமை யுருபு ஏற்று வருவது.

நேற்றுப் பொன்னனைக் (பொன்னையுடையனாயிருந்தவனை – இன்று ஏழையா யிருக்கிறவனைக்) கண்டேன்.

ஆகவே, பெயர்ப் பகுபதங்கள் பெயர்த் தன்மையையும், வினைப் பகுபதங்கள் வினைத்தன்மையையும், வினையாலணையும் பெயர்கள் அவ்விரு தன்மையையும் பெற்றுவரும் என்றறிக.

செம்மை கருமை முதலிய பண்புப் பெயர்களும், நடத்தல் வருதல் முதலிய தொழிற்பெயர்களும் பகுதி விகுதிகளாகப் பகுக்கப்படினும், விகுதிக்கு வேறு பொருள் இன்மையால் (பகுதிப் பொருள் விகுதியாய் நிற்பதனால்) அவை சொல்நிலையால் பகுபதம் என்றும், பொருள் நிலையால் பகாப்பதம் என்றும் கொள்ளப்படும்.

## மோசகு பொன்னையா

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் காரணமாக வரும் பெயர்ச்சொற்களும், காலத்தைத் தெரிநிலையாகவோ, குறிப்பாகவோ கொள்ளும் வினைச்சொற்களும் பகுபதங்களாகும், **எ–று.**

'பொழுது கொள் வினை பகுபதம்' என்றதனால் அருத்தா பத்தியால் வினையாலணையும் பெயரையுங் கொள்க.

**எ–டு.**

பொன்னன், நாடன், திருவோணத்தான், கண்ணன், கரியன், தட்டான் – இவை அறுவகைப் பெயர்ப் பகுபதங்கள்.

நடந்தான், நடந்த, நடந்து, நடவான் –தெரிநிலை

பொன்னன், பெரிய, மெல்ல, அல்லன் – குறிப்பு – வினைப்பகுபதங்கள்

நடந்தான், நடந்தவன், நடவாதவன் – தெரிநிலை

பொன்னன், பொன்னவன், இல்லாதவன் – குறிப்பு – வினையாலணையும் பெயர்.

பொன்னன் என்ற சொல், 'பொன்னன் வந்தான்' என்றோ, 'பொன்னனைக் கூப்பிடு' என்றோ பிறவாறோ எழுவாய் முதலிய வேற்றுமைப் பொருளை ஏற்றுக் காலமுணர்த்தாது நடப்பின், அது பெயர்ப் பகுபதமாம். 'இவன் பொன்னன்'; 'என் அண்ணன் பொன்னன்' என இவ்வாறு காலத்தைக் குறிப்பாக உணர்த்தின், அது குறிப்பு வினை முற்றுப் பகுபதமாம். 'பண்டு பொன்னனுக்கு இன்று இந்நிலையா?'. 'இன்று பொன்னனை நாளை எந்நிலையிற் காண்போமோ?' என இவ்வாறு காலத்தைக் குறிப்பாக உணர்த்துவதுடன் வேற்றுமைப் பொருளையும் ஏற்று வரின், அது குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதமாம்.

நடந்தான் என்ற சொல் தொழில் நிலையால் காலமுணர்த்தி வேற்றுமை உருபேலாது வரின், அது தொழில் வினைப் பகுபதமாம். 'நடந்தான் யவன்?', 'நடந்தானைக் கூப்பிடு' என இவ்வாறு காலத்தைத் தொழின்மையால் உணர்த்தி, எழுவாய் முதலிய வேற்றுமைப் பொருளையும் ஏற்று நடப்பின், அது தொழில் வினையாலணையும் பெயர்ப் பகுபதமாம்.

அவன், இவன், உவன் என்னும் சுட்டுப் பெயர்களும் எவன், யாவன், ஏது, யார் என்னும் வினாப்பெயர்களும் தமர், நமர், நுமர் என்னும் கிளைப்பெயர்களும்; தந்தை, எந்தை, நுந்தை என்னும் முறைப்பெயர்களும் இருசொன் மரூஉ முடிபுகளாய்த் திரட்டு விகாரம் பெற்று நடப்பன ஆதலின், அவற்றை இடமறிந்து ஏற்றபெற்றி ஒட்டுக.பகுதிப் பொருள் விகுதி பெற்று நன்மை, மென்மை, செம்மை என இவ்வாறு நடப்பனவும் ஈண்டு இடம் பெறாவாயின.

(5)

**132. பகுதி விகுதி யிடைநிலை சாரியை**
**சந்தி விகார மாறினு மேற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.**

**பகுதி விகுதி இடைநிலை சாரியை**
**சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியும் எப் பதங்களும்**

pakuṭi vikuṭi itainilai sāriyai
sanṭi vikāram āṛiṉum ēṛpavai
muṉṉip puṇarppa mutiyum ep paṭaṅkaḻum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Elements of Compound words

All Compound words may be formed by carefully combining together those which are appropriate among the following six Elements: Root Termination, Tenseparticle, Increment, Change by combination (sandhi) and change (by poetical license).

### ஒப்புமைப் பகுதி

பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்த்தது முடித்தனர் கொளலே

(இ.வி.:42)

............ தொடர்ச்சொல் இரண்டினுட் படாமல்
விளைத்தபெயர் முற்று எச்சம் பிறவுமாய் பகுதிவிகுதி
இடைநிலையே சாரியை சந்தி விகாரம்
பழுத்த கருவிகளின் ஏற்பன கொண்டு முடியும்
பகுபதம் முன் மூன்றிவைக் காம்ஏனைசில புலமே

(சுவாமி.:23:2–4)

### மயிலை நாதர்

எ–ன், பகுபத முடித்ததற்கு ஒருகருவி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: முதல் நிற்பதுவும் இறுதி நிற்பதுவும் இடைநிற்பதுவும் பொதுச்சாரியையும் சந்திவகையும் விகாரக் கூறுமாகிய ஆறினும் ஈண்டைக்கு ஏற்பன இவையெனக் கருதி வருவித்து முடிக்கப் பொருளாதி எல்லாப் பெயர்ப் பகுபதமும் எல்லா வினைப் பகுபதமும் முடியும், எ–று.

இவற்றுள் இடைநிலை யாவன;– பெரும்பாலும் இனைய இத்துணைய வென்று அளத்தற் கரியவாய்ப் பதமுடிப்புழிக் காலமும் பொருண்மையும் காட்டி ஆண்டே காணப்படுவன. சாரியை யாவன:– அன் ஆன் முதலாக [1]எடுத்தோதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொலியே பயனாக் வருவன. சந்தியாவன:– இன்னது வந்தால் இன்னது இன்னதாமென் வருவன. விகாரமாவன:– பதத்துள் அடிப்பாடும் செய்யுட் டொடையும் ஒலியும் காரணமாக வலித்தல் மெலித்தல் முதலாயினவாகவே வருவன. இவை இடைநிலை முதலானவற்றால் முடியாதவழி வருவன வெனக்

---

பாட வேறுபாடு.:–

1. ஏடுத்தோதவும் பட்டு

கொள்க. 'ஏற்பவை' எனவே ஒன்றற்கே இவையாறும் வரவேண்டு மென்னும் யாப்புறவு இல்லை யெனக் கொள்க.

## சங்கரநமச்சிவாயர்

**எ–னின்,** பகுபதவுறுப்பு இத்துணைய என்பது **உணர்–ற்று.**

**இ–ள்.:** இங்ஙனம் கூறிய பகுதி முதலிய ஆறு உறுப்பினுள்ளும், இப் பதப்பொருளமைதிக்கு ஏற்பனவற்றைக் கருதி அறிவுடையோரால் கூட்டி முடிப்ப, எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடியும், **எ–று.**

பிரகிருதி விகிருதி என்னும் ஆரியமொழிகள் பகுதி விகுதி யெனத் திரிந்து நின்றன.

இக் கருவிகளாறும் முறையே தன்னியல்பில் நிற்றலின் பகுதி என்றும், தன்னியல்பில் நிற்கும் ஒருவனுள்ளத்தை ஆடைஅணி முதலியவற்றோடு ஒருத்தி முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தல் போலத் தன்னியல்பில் நிற்கும் பகுதிப்பொருளை இடைநிலை முதலியவற்றோடு விகுதி முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தலின் விகுதி என்றும், முதனிலைப் பகுதிக்கும் இறுதிநிலை விகுதிக்கும் இடை நிற்றலின் இடைநிலை என்றும், இவ் விகுதி முதலிய புணர்ப்பைச் சார்ந்து ஆண்டைக்கு இயைந்து நிற்றலின் சாரியை என்றும், நால்வகைச் சொல்லும் ஒன்றோடொன்று சந்தித்தலான் வரும் தோன்றல் திரிதல் கெடுதல்களைச் சந்தி என்றும் செய்யுட்டொடை முதலியவற்றான் வலித்தல் மெலித்தல் முதலாக விகாரப்படுதலின் [2]விகாரம் என்றும் பெயர் பெற்றன.

அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த தோன்றல் திரிதல் கெடுதலையும் செய்யுட்கு விதித்த ஒன்பது விகாரத்தையும் இப்பதம் பெறும் என மாட்டுதலின், இது **மாட்டெறிந் தொழுகல்** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** பகுபத முடித்தற்கு வேண்டும் கருவி கூறியது.

**இ–ள்.: பகுதி விகுதி இடைநிலை** – முதல் நிற்பதுவும் இடைநிற்பதுவும் இறுதி நிற்பதுவும், **சாரியை சந்தி விகாரம்** – பொதுச் சாரியையும் சந்தி வகையும் விகாரக் கூறுபாடும். **ஆறினும் ஏற்பவை** – இங்ஙனம் கூறிய ஆறினுள்ளும் ஈண்டைக்கேற்பன இவையென, **முன்னிப் புணர்ப்ப** – கருதி வருவித்து முடிக்க, **முடியும் எப்பதங்களும்** – பொருளாதி அறுவகைப் பெயர்ப்பதமும் வினைப்பதமும் முடியும், **எ–று.**

இடைநிலை யாவன; பதம் முடிப்புழிக் காலமும் பொருண்மையும் காட்டி வருவன. சாரியை யாவன; அன் ஆன் முதலாக ஓதியதில் எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொலியே பயனான வருவன. சந்தியாவன; இன்னது வந்தால் ஆமென வருவன. விகாரமாவன; பதத்துள் அடிப்பாடும் செய்யுள் தொடையும் ஒலியும் காரணமாக வலித்தல் முதலாக

வருவன. ''ஏற்பவை'' எனவே ஒன்றற்கே இவை ஆறும் வரவேண்டு மென்னும் யாப்புறவு இல்லை யென்க.

## விசாகப் பெருமாளையர்

**இது**, பகுபதத்தி னுறுப்புகள் இத்தனை யென்பது உணர்த்துகின்றது.

**இ–ள்.:** பகுதி–முதனிலையும், **விகுதி**–இறுதிநிலையும், **இடைநிலை** – இடைநிலையும், **சாரியை**– சாரியையும், **சந்தி** – சந்தியும், **விகாரம்** – விகாரமும், **ஆறினும்** – ஆகிய வி்வ்வாறு உறுப்பினுள்ளும், **ஏற்பவை** – பொருளமைதிக்கு ஏற்பவைகளை, **முன்னி**–நினைத்து, **புணர்ப்ப** – அறிவுடையோர் கூட்டி முடிக்க, **எப்பதங்களும்** – எவ்வகைப்பட்ட பகுபதங்களும், **முடியும்** – முடிவு பெறும், **எ–று.**

**உ–ம்.:** கூனி என்பது கூன் – இ எனப் பகுதி விகுதியான் முடிந்தது, உண்டான் என்பது உண் – ட்– ஆன் என அவ் விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது. உண்டனன் என்பது உண்–ட்–அன்–அன்–என அம்மூன்றுடன் சாரியை பெற்று முடிந்தது, பிடித்தனன் என்பது பிடி–த்–த்–அன்–அன் என அந் நான்குடன் சந்தி பெற்று முடிந்தது, நடந்தனன் என்பது நட–த்–த்–அன்–அன் என அவ் வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல் முதலாகிய மூன்று புணர்ச்சி விகாரங்களையும் வலித்தல் முதலாகிய வொன்பது செய்யுள் விகாரங்களையும் இது பெறுமென மாட்டுதலால் இது **மாட்டெறிந்தொழுகல்** என்னுமுத்தி.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

வினைப்பகுபதம் எத்தனை வகைப்படும்?

தெரிநிலைவினைப் பகுபதம் குறிப்புவினைப் பகுபதம் என இரண்டாம்.

தெரிநிலைவினைப் பகுபதம் எத்தனை வகைப்படும்?

உடன்பாட்டுத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம், உடன் பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம் உடன்பாட்டுத் தெரிநிலைவினை. வினையெச்சப் பகுபதம், எதிர்மறைத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம் எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சப் பகுபதம், எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம் என அறுவகைப்படும்.

உ–ம்.: நடந்தான் நடக்கின்றான் நடப்பான் என்பன உடன் பாட்டுத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம்.

(1) நடந்த நடக்கின்ற நடக்கும் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.

(2) நடந்து நடக்க நடக்கின் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.

(3) நடந்திலன் நடக்கின்றிலன் நடவான் என்பன எதிர் மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.

(4) நடவாத என்பது எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.

(5) நடவாது நடவாமல் என்பன எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.

குறிப்பு வினைப் பகுபதம் எத்தனை வகைப்படும்?

உடன்பாட்டுக் குறிப்புவினை முற்றுப் பகுபதம், உடன் பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம், உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம், எதிர்மறைக் குறிப்புவினை முற்றுப் பகுபதம், எதிர் மறைப் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம், எதிர் மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம் என ஆறு வகைப்படும்

**உ–ம்.:** (கங) பொன்னன் ஊணன் அற்று இற்று எற்று என்பன உடன்பாடு குறிப்புவினை முற்றுப் பகுபதம்.

(6) கரிய பெரிய என்பன உடன்பாட்டுக் குறிப்புக் வினைப் பெயரெச்சப் பகுபதம்.

(கரு) பைய மெல்ல என்பன உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

(7) அல்லன் இல்லன் அற்று இற்று என்பன எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.

(8) அல்லாத இல்லாத என்பன எதிர்மறைக் குறிப்பு வினைப் பெயரெச்சப் பகுபதம்

(9) அன்றி இன்றி அல்லாமல் இல்லாமல் என்பன எதிமறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

23. வினையாலணையும் பெயர்ப் பகுபத மெத்தனை?

தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதமெனவும் குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதமெனவும் இருவகைப்படும்.

(10) நடந்தான் நடந்தவன் என்பன தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

(11) பொன்னன் பொன்னவன் என்பன குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

24. பெயர்ப்பகுபதம் குறிப்புவினைப் பகுபதம் குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதமென்று மூன்றிற்கும் வேறுபாடு என்னை?

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதியிரண்டிலும் பொருட்சிறப்புடையதாய்க் காலங் கொள்ளாது வேற்றுமை யுருபேற்று வரும். வினைக்குறிப்பு முற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைப் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபோலாது வரும்வினைப்குறிப்பு முற்றாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம் உம். பொன்னனை வணங்கினான் சாத்தன் பண்டு பொன்னன். பண்டு பொன்னைக் கொணர்ந்தேன் எனவரும்.

தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம் தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதமென்று மிரண்டற்கும் வேறுபாடென்னை?

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுரு போலாது வரும் தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இவ்விரண்டற்கும் வேறுபாடாம் உ–ம். சாத்தன் நடந்தான்; நடந்தானைத் தடுத்தேன் எனவரும்.

எல்லாச் சொற்களையுங் கூறுங்காற் பொருள்சிறக்குமிடத் தெழுத்தை எடுத்தும், அயலெழுத்தை நலிந்தும் மற்றை யெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

மேற்கூறிய பெயர்ப் பகுபதங்களுள் அடங்காது வேறாய் வருவனவுஞ் சிலவுள; அவை தொழிற்பெயரும், பண்புப்பெயரும் பிற பெயருமாம். உ–ம்.: நடத்தல், வருதல், உண்டல், சேறல் எனவும் செம்மை கருமை எனவும், சேர்ந்தார்க் கொல்லி, உடுக்கை எனவும் வரும்.

பகுபதங்கள் எவ்வுறுப்புக்களான் முடிக்கப்படும்?

பருதி விகுதி யிடைநிலை சாரியை
சாந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும்மெப் பதங்களும்

(பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்)

**இ–ள்.: பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும்** – முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையுஞ் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறு உறுப்பினுள்ளும் ஏற்பவை முன்னிப் புணர்ப்ப – பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் கூட்டிமுடிக்க, எப்பதங்களும் முடியும் – எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவுபெறும், எ–று.

கூனி என்பது கூன் இ எனப் பகுதி விகுதியான் முடிந்தது. உண்டான்

என்பது உண் ட் ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலைபெற்று முடிந்தது. உண்டனன் என்பது உண் ட் அன் அன் என அம்மூன்றுடன் சாரியை பெற்று முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி த் த் அன் அன் என அந்நான்குடன் சாந்தி பெற்று முடிந்தது. நடந்தனன் என்பது நட த் த் அன் அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

ஆறு உறுப்புக்களும் ஒரு பதத்தின்கண்ணே வரவேண்டுமென்னும் நியதியுண்டா?

"எற்பவை, முன்னிப் புணர்ப் முடியுமெப் பதங்களும்" என்றமையால் ஆறும் வரவேண்டுமென்பது நியதியன்று

பகுதி பெரும்பாலும் வேறுபடாது முதற்கண்ணே நிற்பது. விகுதி வேறுபட்டு இறுதியில் நிற்பது.

இடைநிலை பெரும்பாலும் இனையது இத்துணையது என்று அளத்தற்கரிதாய்ப் பதமுடிப்புழிக் காலமும் பொருண்மையும் காட்டி இடையிற் காணப்படுவது

சாரியை அன் ஆன் முதலாக எடுத்தோதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ச் சிறுபான்மை பொருணிலைக்கு உதவிசெய்து பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவது,

சந்தி இன்னதுவரின் இன்னது இன்னாதாமெனப் புணர்வழித் தோன்றுஞ் செய்கை.

விகாரம் ஒலிமுதலாகிய காரணம்பற்றி வலித்தல் மெலித்தன் முதலாக ஆக்குவது

## முகவை இராமானுச கவிராயர்

இது, பகுபத உறுப்பு இவ்வளவின என்பதுணர்த்துகின்றது.

**இ–ள்.: பகுதியாறினும்–** இப்படிச் சொல்லிய ஆறுவகை உறுப்புகளுள்ளும், **ஏற்பவை–**(அப் பொருள் அமைதிக்கு) பொருந்துவனவற்றை, **முன்னி–**நினைத்து, **புணர்ப்ப–**கூட்டி முடிக்க, **எப் பதங்களு முடியும் –** எவ் வகைப்பட்ட பகுபதங்களு முடியும், **எ–று.**

பிரகிருதி, விகிருதி என்னும் ஆரியமொழிகள் பகுதி விகுதி யெனத் திரிந்து நின்றன. தன்னியல்பினால் நிற்பது பற்றிப் பகுதி யென்றும், அவ்வாறு நிற்கும் பகுதிப் பொருளைத் தன்னகப்படுப் பின்னின்று விகாரப்படுத்தலால் விகுதி யென்றும், பகுதி விகுதிகளின் இடைநிற்பதால் இடைநிலை யென்றும், பகுதி விகுதிகளைச் சார்ந்து இயைந்து நிற்றலால் சாரியை யென்றும், நிலைமொழி வருமொழி சந்தித்தலால் உண்டாகிய தோன்றல் திரிதல் கெடுதல்களைச் சந்தி யென்றும், செய்யுள் அடி தொடை முதலியவற்றால் வலித்தல் மெலித்தல் முதலிய விகாரப்படுதலால் அவற்றை விகார மென்றுங்

காரணக்குறியாய் வந்தன. அல்வழி வேற்றுமைக்குச் சொல்லிய மூன்று விகாரங்களையும் செய்யுளுக்குச் சொல்லிய ஒன்பது விகாரங்களையும் இப் பகுபதம் பெறுமென மாட்டுதலால் இது **மாட்டெறிந்தொழுக** லென்னும் உத்தி.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும்** – முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையும் சாரியையும் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறு உறுப்பினுள்ளும், **ஏற்பவை** – (பொருளமைதிக்குப்) பொருந்துவனவற்றை, **முன்னி புணர்ப்ப** – நினைத்து (அறிவுடையோர்) கூட்டிமுடிக்க, **எப்பதங்களும் முடியும்** – எவ்வகைப்பட்ட பதங்களும் முடிவுபெறும்.

குறிப்பு :– பகுதி – ப்ரக்ர்தி. விகுதி – விக்ர்தி.

**உதாரணம்.**

| | பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| கூனி | கூன் | – | – | – | இ. |
| அறிஞன் | அறி | – | ஞ் | – | அன். |
| உண்டனன் | உண் | – | ட் | அன் | அன். |
| படித்தனன் | படி | த் | த் | அன் | அன். |
| நடந்தனன் | நட | த் (ந்) | த் | அன் | அன். |

'நடந்தான்' என்னும் பகுபதத்தில் சந்தியாகிய **த் ந்** ஆகியது விகாரம்; ஆகவே ஆறுறுப்பாலும் முடிந்தவாறுகாண்க. 'ஆறினும்' என்றாரேனும் வினைப்பகுபதம் ஒன்றுமே ஆறுறுப்புகளையும் பெறுமென்றும், பெயர்ப் பகுப்பதம் இரண்டோருறுப்புக்கள் குறையப்பெறும் என்றும் அறிக. இன்னும் 'ஏற்பவை முன்னிப்புணர்ப்ப' என்றோரனும் பகுபதத்திற்குப் பகுதியும் விகுதியும் அவசியம் வேண்டுமெனவும், மற்றைய உறுப்புகளுள் ஒன்றும் பலவும் வருதலும் வாராமையும் உண்டெனவுங்கொள்க.

இயற்கையாய்ப் பகுபதங்களின் முதலில் நிற்பதைப் **பகுதி** எனவும், அங்ஙனம் நிற்கும் பகுதியின் பொருளைப் பின்நின்று வேறுபடுத்துவதை **விகுதி** எனவும், பகுதிவிகுதிகளின் இடையில் நிற்பதை **இடைநிலை** எனவும், பகுதிவிகுதி முதலியவற்றைச் சார்ந்தும் இயைந்தும் இனிய ஓசையைத்தந்து வருவதைச் **சாரிய** எனவும், புணர்ச்சிவிதியால் வரும் தோன்றல், திரிதல், கெடுதல்களைச் **சந்தி** எனவும், செய்யுளில் அடிதொடை முதலியவற்றால் வரும் வலித்தல் முதலிய ஒன்பதையும் **விகார** மெனவும் கூறுப.

அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல் முதலாகிய மூன்று புணர்ச்சிவிகாரங்களையும், செய்யுட்கு விதிக்கப்பட்ட வலித்தல் முதலிய ஒன்பது செய்யுள்விகாரங்களையும் இது பெறுமென மாட்டுதலால் இது **மாட்டெறிந்தொழுகல்** என்னும் உத்தி. எழுத்தியலுள்

கூறிய முதனிலை, கடைநிலை, இடைநிலைகளும் இங்குக் கூறிய முதனிலை, கடைநிலை, இடைநிலைகளும் வேறு எனக்காண்க. பகுதி, முதனிலை, அடி என்பன ஒரு பொருளன. விகுதி, கடைநிலை, இறுதிநிலை, அந்தம் என்பனவும் இவ்வாறே.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும்** – முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையுஞ் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறுப் பினுள்ளும், **ஏற்பவை முன்னிப் புணர்ப்ப –** பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் கூட்டி முடிக்க, **எப்பதங்களும் முடியும் –** எவ்வகைப் பட்ட பகுபதங்களும் முடிவு பெறும், **எ–று.**

**உ–ம்.:** கூனி என்பது கூன், இ, எனப் பகுதி விகுதியான் முடிந்தது. உண்டான் என்பது உண், ட், ஆன் என அவ் விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது. உண்டனன் என்பது உண், ட், அன், அன் என அம் மூன்றுடன் சாரியை பெற்று முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி, த்,த், அன், அன், என நான்குடன் சந்தி பெற்று முடிந்தது. நடந்தனன் என்பது நட, த், த், அன், அன் என அவ் வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற் றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பதப்புணர்ச்சி விதிக்கப்பட்ட தோன்றல் முதலாய மூன்று புணர்ச்சி விகாரங்களையும் வலித்தல் முதலாகிய ஒன்பது செய்யுள் விகாரங்களையும் இது பெறுமென மாட்டுதலால், இது **மாட்டெறிந்தொழுகலென்னு** முத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும் –** முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையும் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறு றுப்பினுள்ளும், – **ஏற்பவை முன்னிப் புணர்ப்ப** – பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் கூட்டி முடிக்க, **– எப்பதங்களும் முடியும்** – எவ்வகையான பகுபதங்களும் முடிவு பெறும். **எ–று.**

உ–ம். கூனி என்பது கூன்+இ எனப் பகுதிவிகுதிகளான் முடிந்தது. உண்டான் என்பது உண்+ட்+ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது. உண்டனன் என்பது உண்+ட்+அன்+அன் என அம்மூன்றுடன் சாரியைபெற்று முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி+த்+த்+அன்+அன் என அந்நான்குடன் சந்தி பெற்று முடிந்தது. நடந்தனன் என்பது நட+த்+த்+அன்+அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால்வந்த தகர வல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது. பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றன் முதலாகிய மூன்று புணர்ச்சி விகாரங்களையும் வலித்தன் முதலாகிய ஒன்பது செய்யுள் விகாரங்களையும் இது பெறுமென மாட்டுதலால் இது மாட்டெறிந்தொழுகலென்னு முத்தி.

**பிரகிருதி** என்னும் அரியமொழி பகுதியெனவும், **விகிருதி** என்னும் ஆரியமொழி விகுதி எனவுந் திரிந்து நின்றன.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:** **பகுதி** – முதல்நிலையும், **விகுதி**–இறுதிநிலையும், **இடைநிலை** – இடைநிலையும், **சாரியை** – சாரியையும், **சந்தி** – சந்தியும், **விகாரம்** – விகாரமும், **ஆறினும்**– ஆகிய இந்த ஆறு உருப்பினுள்ளும், **ஏற்பவை** – (பொருளமைதிக்குப்) பொருந்துபவைகளை, **முன்னி** – நினைத்து, **புணர்ப்ப** – (அறிவுடையோர்) கூட்டி முடிக்க, **எப்பதங்களும்** – எல்லாப் பகுபதங்களும், **முடியும்** – முடிவு பெறும்; **எ–று.**

**உ–ம்.:** கூனி–கூன்+இ எனப் பகுதி விகுதிகளால் முடிந்தது.

வலைஞன் – வலை+ஞ்+அன் எனப் பகுதி இடைநிலை விகுதிகளால் முடிந்தது.

உண்டனன் – உண்+ட்+அன்+அன் எனப் பகுதி இடைநிலை சாரியை விகுதிகளால் முடிந்தது.

படித்தனன் – படி+த்+த்+அன்+அன் எனப் பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதிகளால் முடிந்தது.

நடந்தனன் – நட+த்+த்+அன்+அன் எனப் பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி இவ் வைந்தும் பெற்று, சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற் றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

இயற்கையாகப் பகுபதங்களின் முதலில் நிற்பது பகுதி யென்றும், அவ்வாறு நிற்கும் பகுதியின் பொருளைப் பின்நின்று வேறுபடுத்துவது விகுதி யென்றும், பகுதி விகுதிகளின் இடையில் நிற்பது இடைநிலை யென்றும், பகுதி விகுதி முதலியவற்றைச் சார்ந்து இயைந்து வருவது சாரியை யென்றும், புணர்ச்சி விதியா லுண்டாகின்ற தோன்றல் திரிதல் கெடுதல் என்ற மூன்றும் சந்தி யென்றும், செய்யுளிலக்கணத்துக்கு ஏற்ப வருகின்ற வலித்தல் முதலிய ஒன்பதும் விகார மென்றும் கொள்க. சாரியை மொழிக்கு இறுதியாக நிற்றலும் உண்டு.

பகுதி,விகுதி – ப்ரக்ருதி, விக்ருதி என்ற வடமொழிகளின் விகாரம்.

அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதிக்கப்படும் தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரங்களையும், செய்யுட்கு விதிக்கப்படும் வலித்தல் முதலிய செய்யுள் விகாரங்களையும் இப் பகுபதம் பெறுமென மாட்டியது, **மாட்டெறிந்தொழுகல்** என்னும் உத்தி. (மாட்டெறிந்து ஒழுகல் – ஒன்றன் இலக்கணத்தை அதனைப் பெறுதற்கு உரிய மற்றொன்றற்கும் ஏற்றிச் சொல்லுதல்).

'ஆறினும் ஏற்பவை முன்னிப் புணர்ப்ப' என்றாராயினும், பகுபதத்திற்குப் பகுதி விகுதிகள் பெரும்பாலும் இன்றியமையாதன வென்றும், மற்றைய உறுப்புக்களுள் ஒன்றையும் பலவற்றையும் பெற்றும் பெறாமலும் வருமென்றும் அறிக. வினைப்பகுபதம் மாத்திரமே ஆறு உறுப்புக்களையும் பெற்று வரும். பெயர்ப்பகுபதம் இரண்டோருறுப்புக் குறையப் பெற்றே வரும்.

எழுத்தியலிற் கூறிய இடைநிலைக்கும், இங்குக் கூறிய இடைநிலைக்கும் வேறுபாடு மாணாக்கர் அறியத்தக்கது; முதல்நிலை இறுதிநிலைகளுக்கும் இவ்வாறே. எழுத்தியலிற் கூறிய முதனிலை இடைநிலை இறுதிநிலைகள் – சொற்களின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் எழுத்துக்கள் நிற்கும் நிலை; இங்குக் கூறிய முதனிலை இடைநிலை இறுதிநிலைகள் – பகுபதத்தின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் உறுப்புகள்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். பகுதிவிகுதி இடைநிலை சந்தி விகாரம் ஆறினும் – முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையுஞ் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறுறுப்பினுள்ளும், ஏற்பவை முன்னிப் புணர்ப்ப – பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் கூட்டி முடிக்க, எப்பதங்களும் முடியும் – எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவு பெறும். எ–று.

உ–ம். கூனி என்பது கூன் + ன் எனப் பகுதி விகுதிகளான் முடிந்தது. உண்டான் என்பது உண்+ ட்+ஆன் எனப் பகுதி இடைநிலை விகுதிகளான் முடிந்தது. உண்டனன் என்பது உண்ட்+அன்+அன் எனப் பகுதி, இடைநிலை, சாரியை, விகுதிகளான் முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி+த்+த்+அன்+அன் எனப் பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதிகளான் முடிந்தது. நடந்தனன் என்பது நட+த்+த்+அன்+அன் என அவ் வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பகுபதங்களின் முதலில் நிற்பது (1) பகுதி; பகுதியின் பொருளைப் பின் நின்று வேறுபடுத்துவது (2) விகுதி; பகுதிவிகுதிகளின ,டையில் நிற்பது (3) இடைநிலை; பகுதி விகுதி முதலியவற்றைச் சார்ந்து இயைந்து இன்னோசை தரவருவது (4) சாரியை; புணர்ச்சி விதியால் வரும் தோன்றல், திரிதல், கெடுதல்கள் (5) சந்தி; செய்யுள்களில் வரும் வலித்தல் முதலியவை (6) விகாரம் – எனப்படும். பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல் முதலாய மூன்று புணர்ச்சி விகாரங்களையும் (சூ. 154) வலித்தல் முதலாகிய ஒன்பது செய்யுள் விகாரங்களையும் (சூ. 155) இது பெறுமென மாட்டுதலால், இது 'மாட்டெறிந்தொழுகல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) பகுதி–முதனிலையும், விகுதி–இறதிநிலையும், இடைநிலை–இடைநிலையும், சாரியை–சாரியையும், சந்தி–சந்தியும், விகாரம்–விகாரமும், ஆறினும்–ஆகிய இவ் வாறுறுப்பினுள்ளும், ஏற்பவை–(பொருளமைதிக்கு)

ஏற்பவைகளை, முன்னி புணர்ப்ப–நினைத்து (அறிவுடையோர்) கூட்டி முடிக்க, எப் பதங்களும் முடியும்–எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவுபெறும். **எ–று.**

**பொ–ரை.:** பகுதி முதலிய இந்த ஆறு உறுப்பினுள்ளும் பொருளமைதிக்குத் தக்கவைகளை நினைத்துச் சேர்த்தால், எவ்வகைப் பகுபதமும் முடியும்.

(உ–ம்) கூனி–கூன்+இ எனப் பகுதி விகுதியால் முடிந்தது

உண்டான்–உண்+ட்+ஆன் என அவ் விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது.

உண்டனன்–உண்+ட்+அன்+அன் என அம்மூன்றுடன் சாரியை பெற்று முடிந்தது.

பிடித்தனன்–பிடி+த்+த்+அன்+அன் என அந்நான்குடன் சந்தி பெற்று முடிந்தது.

நடந்தனன்–நட+த்+த்அன்+அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல்லொற்றாத லாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பிரகிருதி விகுருதி என்னும் ஆரிய மொழிகள் பகுதி விகுதி எனத் திரிந்து நின்றன. இவ் வுறுப்புகளாறும், முறையே, தன்னியல்பாகப் பகுபதங்களின் முதலில் நிற்பதுபற்றிப் பகுதி என்றும், அவ்வாறு நிற்கும் பகுதிப் பொருளைப் பின்னின்று விகாரப்படுத்தலால் விகுதி என்றும், பகுதி விகுதிகளின் இடை நிற்பதால் இடை நிலை என்றும், பகுதி விகுதி முதலியவற்றைச் சார்ந்து இயைந்து நிற்றலால் சாரியை என்றும், நிலைமொழி வருமொழி சந்தித்தலால் உண்டாகிய தோன்றல் திரிதல் நெடுதல்களைச் சந்தி என்றும், செய்யுள் அடி தொடை முதலியவற்றால் வலித்தல் மெலித்தல் முதலிய விகாரப்படுதலால் அவற்றை விகார மென்றும் காரணம் குறியாய் வந்தன.

பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல், திரிதல், கெடுதல் என்கிற மூன்று புணர்ச்சி விகாரங்களையும், வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற் குறை, இடைக்குறை, கடைக் குறை என்கிற ஒன்பது செய்யுள் விகாரங்களையும் இப் பகுபதம் பெறுமென மாட்டுதலால், இது 'மாட்டெறிந் தொழுகல்' என்னும் உத்தி. (மாட்டெறிந்து ஒழுகல்–ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற் குரிய மற்றொன்றற்கு மாட்டிச் சொல்லி நடத்தல்.)

'ஆறினும் ஏற்பவை முன்னிப் புணர்ப்ப' என்றாராயினும், பகுபதத்திற்குப் பகுதி விகுதிகள் பெரும்பாலும் இன்றி யமையா தன வென்றும், மற்றைய உறுப்புக்களுள் ஒன்றையும் பலவற்றையும் பெற்றும் பெறாமலும் வருமென்றும் அறிக. வினைப்பகுபதம் மாத்திரமே ஆறு உறுப்புக்களையும் பெற்றுவரும்; பெயர்ப் பகுபதம் இரண்டோ ருறுப்புக் குறையப் பெற்று வரும்.

## கா. நமசிவாய முதலியார்

**பகுதி** – முதனிலையும், **விகுதி** – இறுதி நிலையும், **இடை நிலை** – இடைநிலையும், **சாரியை** – சாரியையும், **சந்தி** – சந்தியும், **விகாரம்** – விகாரமும், **ஆறினும்** – (ஆகிய இந்த) ஆறு உறுப்பினுள்ளும், **ஏற்பவை** – (பொருளமைதிக்கு) ஏற்பவைகளை, **முன்னி** – நினைத்து, **புணர்ப்ப** – கூட்டி முடிக்க, **எப்பதங்களும்** – எவ்வகைப்பட்ட பகுபதங்களும், **முடியும்** – முடிவு பெறும்.

**உதாரணம்**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | வேலன் | – | வேல் | + | அன் | | | | | | | |
| 2. | செய்தான் | – | செய் | + | த் | + | ஆன் | | | | | |
| 3. | செய்தனன் | – | செய் | + | த் | + | அன் | + | அன் | | | |
| 4. | படித்தனன் | – | படி | + | த் | + | த் | + | அன் | + | அன் | |
| 5. | கடந்தனன் | – | கட | + | த் | + | த் | + | அன் | + | அன் | |
| 6. | கண்டனன் | – | காண் | + | ட் | + | அன் | + | அன் | | | |
| 7. | வந்தனன் | – | வா | + | த் | + | த் | + | அன் | + | அன் | |

முதனிலை (பகுதி) முதலிய உறுப்புகள் வரும் இடங்கள் விளங்க அமைத்த அட்டவணை

| | முதனிலை– (பகுதி) | விகாரம் | சந்தி | இடை | சாரியை | இறுதிநிலை– (விகுதி) |
|---|---|---|---|---|---|---|
| 1. | வேல் | – | – | – | – | அன் |
| 2. | செய் | – | – | த் | – | ஆன் |
| 3. | செய் | – | – | த் | அன் | அன் |
| 4. | படி | – | த் | த் | அன் | அன் |
| 5. | கட | ந் | த் | த் | அன் | அன் |
| 6. | காண் | கண் | – | ட் | அன் | அன் |
| 7. | வா | வ ந் | த் | த் | அன் | அன் |

பெரும்பாலும் எல்லாப் பதங்களையும் மேற்காட்டிய முறையில் பகுத்துக் கட்டலாம்.

முதனிலை, பதத்தில் முன் நிற்பது.

இறுதிநிலை, பதத்தில் ஈற்றில் நிற்பது.

இடைநிலை, முதனிலைக்கும் இறுதிநிலைக்கும் இடையில் நிற்பது.

சாரியை, பெரும்பாலும் இடைநிலைக்கும் இறுதிநிலைக்கும் நடுவே நிற்பது.

சந்தி, முதனிலைக்கும் இடைநிலைக்கும் நடுவே நிற்பது.

விகாரம், முதனிலையும் சந்தியும், வலித்தல் முதலிய விகாரங்களை யடைந்து வருவது; அவ்விகாரம், பகுதி விகாரப்பட்டு வருதலும், சந்தி

விகாரப்பட்டு வருதலும், அவ்விரண்டும் விகாரப்பட்டு வருதலும் ஆகும்.

இறுதிநிலை (விகுதி)யின் முதலெழுத்து நெடிலாயின் சாரியை வாராது.

வேலன் என்பது, வேல் + அன் எனப் பகுதி விகுதிகளால் முடிந்தது.

செய்தான் என்பது, செய் + த் + ஆன் என, அவ்விரண்டுடன் இடைநிலை பெற்று முடிந்தது.

செய்தனன் என்பது, செய் + த் + அன் + அன் என, அம் மூன்றுடன் சாரியைபெற்று முடிந்தது.

படித்தனன் என்பது, படி + த் + த் + அன் + அன் என, அந் நான்குடன் சந்திபெற்று முடிந்தது.

கடந்தனன் என்பது, கட + த் + த் + அன் + அன் + என அவ்வைந்துடன் சந்தியால் வந்த தகர வல்லொற்று நகர மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

கண்டனன் என்பது, காண் + ட் + அன் + அன் என, நான்குறுப்புடன் பகுதிமுதல் குறுகுதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

வந்தனன் என்பது, வா + த் + த் + அன் + அன் என, ஐந்துறுப்புடன் பகுதி குறுகுதலும் சந்தியால் வந்த தகர வல்லொற்று நகர மெல்லொற்றுதலும் ஆகிய இரண்டு விகாரமும் பெற்று முடிந்தது.

பிரகிருதி, விகிருதி என்னும் வடசொற்கள் பகுதி, விகுதி எனத் திரிந்து நின்றன.

தன்னியல்பில் நிற்பதுபற்றிப் பகுதி யென்றும், பகுதிப்பொருளைப் பின்னின்று விகாரப்படுத்தலால் விகுதி யென்றும், பகுதி விகுதிகளின் இடையில் நிற்பதால் இடைநிலை யென்றும், பகுதி விகுதிகளைச் சார்ந்து இயைந்து நிற்றலால் சாரியை யென்றும், முதனிலையும் இடைநிலையும் சந்தித்தலால் உண்டாகிய தோன்றல், திரிதல், கெடுதல்களைச் சந்தி யென்றும், வலித்தல் மெலித்தல் முதலியவற்றை விகாரம் என்றும் காரணக் குறியால் கூறினமை காண்க.

பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றல் முதலாகிய மூன்று புணர்ச்சி விகாரங்களையும், வலித்தல் முதலாகிய ஒன்பது செய்யுள் விகாரங்களையும் இது (பகுபதம்) பெறும் என மாட்டுதலால், இது **மாட்டெறிந் தொழுகல்** என்னும் உத்தி.

## மோசசு பொன்னையா

முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற ஆறு உறுப்புக்களினுள்ளும் பொருளமைதிக்கு ஏற்பனவற்றைக் கருதிக் கூட்டி முடிக்க எவ்வகைப் பதங்களும் முடியும், **எ—று.**

**எ—டு.:—**

கூனி: கூன் + இ – பகுதி, விகுதி.

வலைஞன்: வலை + ஞ் + அன் – பகுதி, இடைநிலை, விகுதி.

உண்டனன்: உண் + ட் + அன் + அன் – பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி.

படித்தனன்: படி + த் + த் + அன் + அன் – பகுதி. சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி.

நடந்தனன்: நட + த் + த் + அன் + அன் – பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி.

சந்தியாக வந்த தகர ஒற்று நகர ஒற்றானது விகாரமாம். பகுதி முதலியன காரணக்குறிகள் ஆறினும் ஏற்பவை முன்னிப் புணர்ப்ப என்றதனால், பகுதியும் விகுதியும் பெயர்ப் பகுபதங்களுக்கு இன்றியமையாதன எனவும், பகுதி, இடைநிலை, விகுதி என்பன வினைப் பகுபதங்களுக்கு இன்றிபமையாதன எனவும், மற்றையவற்றை ஏற்ற பெற்றி பெற்றும் பெறாமலும் பகுபதங்கள் வரும் எனவும் கொள்க. எழுத்தியலில் இடைநிலை என்றது எழுத்தை என்றும் ஈண்டு, இடைநிலை என்றது உருபனாக வரும் இடைச்சொல்லை என்றுங் கொள்க. மொழியியலார் இவற்றைவேறு குறியிட்டு வழங்குவர்.

பொருள் குறிக்க வாராமல் உருபன்களைச் சார்ந்து வருவதே சாரியை என இவ்வாசிரியர் கொள்வது சாரியை என்னும் பெயருக்கு ஏற்ற விளக்கமாக அமைந்துள்ளது நோக்கத் தக்கது. பிற தொடர்தல் இல்லாமல் தனித்தன்மை பெற்று விளங்குவதே பகுதி எனப்படும். இப்பகுதியே பலசொற்களின் ஆக்கத்திற்கு அடியாக விளங்குவதாதலின் அதனை வேர் அல்லது அடி என்றும்; சொல்லாகவும் அதுவே வழங்குவதாகும் ஆதலின், அதனைத் தனி உருபன் என்றும் வழங்குவர் என்பது முன்னர் உரைக்கப்பட்டது. அடிச்சொல்லைச் சார்ந்தே வரும் இடைநிலை, விகுதி என்பவற்றைச் சுட்டு உருபன்கள் என்பர். சாரியை, சந்தி, விகாரம் என்பவற்றை அவர்கள் பகுதி, இடைநிலை, விகுதி முதலியன புணருங்கால் உண்டாகும் ஒலித்திரிபுகளே என்பர்.

இவ்வாசிரியர் குறிப்பிடும் பகுதிகளை மொழியியலார் மேலும் பகுப்பர். நிலம், நட என்பவற்றை நில் + அம் எனவும், நட + அ எனவும் முறையே பகுத்து, நில், நட என்பவற்றை அடிகள் எனவும், அம், அ என்பவற்றை முறையே ஆக்க உருபு ஒலிநயச் சேர்க்கை அல்லது ஒலித்துணை எனவும் குறியிட்டாளுவர். அடிகளோடு கட்டு உருபன்கள் ஒலிய வரையறைப்பட்டும், உருப வரையறைப்பட்டும் கட்டப்படுகின்றன. வலை + ஞன் – வலைஞன் என்பதில் ஞன் என்பது ஒலியவரையறைப்படி கட்டப்பட்ட கட்டு உருபன். படி + த்த் + அனன் – படித்தனன் என்பதில் படித்த் என்ற அடியோடு அனன் என்பது உருபவரையறைப்படி கட்டப்பட்ட கட்டு உருபன்.இவ்வாறே எல்லா ஆக்கச் சொற்களும் அமைகின்றன.

விகாரம், சந்தி, சாரியை ஆகிய ஒலித்திரிபுகளும், ஒலிநயச் சேர்க்கை

அல்லது ஒலித்துணைகளுமே கன்னித்தமிழ் மொழியின் ஒலிமரபை மாறாமற் காப்பாற்றி வருகின்றன. கண்ணுக்கு, மண்ணிற்கு என்னும் சொற்களில் முறையே வரும் உ, இன் என்பன ஒலித்துணைகளாக அமையாதிருந்தால் ணகர ஒலியே டகர ஒலியாக மாறியிருக்கும். பொழுது என்பதின் உகர ஒலித் துணையே ழகரத்தைக் காப்பாற்றுகிறது எனலாம். அதன் பயனாகத் தமிழிற் சொற்கள் வடிவில் நீண்டமைவனவாயின.

தமிழ்ச் சொற்கள் எவ்வளவு நீண்டனவாக இருந்தாலும் மரபறிந்து அவற்றைப் பகுத்துக்காண வல்லார், அவற்றின் சிறுசிறு உறுப்புக்களாம் ஆக்க உருபுகளான விகுதி, இடைநிலைகளையும், ஒலித்துணைகளான சாரியைகளையும், ஒலித்திரிபுகளான, சந்தி, விகாரங்களையும் நீக்கிக் காணின், ஓரசையடிச் சொல் ஒன்றே எஞ்சி நின்று தமிழ் மொழியின் ஒட்டுநிலை மரபைப் புலப்படுத்தா நிற்பதைக் காண்பர். இவ்வாசிரியர், அவ்வுண்மையைத் தெளிவுறுத்தி முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும் என்றார்.

(6)

**133. தத்தம், [1]பகாஅப் பதங்களே [2]பகுதி யாகும்.**

**தத்தம், பகாஅப் பதங்கள் ஏ பகுதி ஆகும்.**

ṭaṭṭam, pakāap paṭaṅkaḻē pakuṭi ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## ROOT

### A root defined

The simple indivisible parts from which the Compound Words are derived are said to be the Roots (of these words).

### ஒப்புமைப் பகுதி

**பகுபதம் ஒன்றாய்ப் பலவொருங் குணர்த்தின்**
**பகாப்பதம் அவற்றுள் பகுதி என்ப**

**(தொ.வி.:83)**

---

பாட வேறுபாடு.:– 1. பகாப்பதங்களே

2. பகுதியாம்

## மயிலைநாதர்

**எ–ன்,** பகுபதங்கட்குப் பகுதியாவன உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** பொருளாதி யாறனையும் பற்றி வரும் பெயர்ப் பகுபதங்கட்கு அப் பொருளாதியான பகாப் பதங்களே பகுதியாம், **எ–று.**

**வ–று.:** குழையன், குழையள், குழையர், குழையது, குழையன, குழையேன், குழையேம், குழையாய், குழையீர் என இவ்வாறு வருவன இப் பொருளினை யுடையாரென்னும் பொருண்மைப் பொருட் பெயர்ப்பகு பதம். வானான், வானாள், வானார், வானது, வானன, வானேன், வானேம், வானாய், வானீர் என இவ்வாறு வருவன இவ்விடத்தினை யுடையா ரென்னும் பொருண்மை இடப்பெயர்ப் பகுபதம். காரான், காராள், காரார், காரது, காரன, காரேன், காரேம், காராய், காரீர் என இவ்வாறு வருவன இக்காலத்தை யுடையா ரென்னும் பொருண்மைக் காலப்பெயர்ப் பகுபதம். தாளான், தாளாள், தாளார், தாளது, தாளன, தாளேன், தாளேம், தாளாய், தாளீர் என இவ்வாறு வருவன இவ் வுறுப்பினை யுடையா ரென்னும் பொருண்மைச் சினைப் பெயர்ப்பகுபதம். செய்யான், செய்யாள், செய்யார், செய்யது, செய்யன, செய்யேன், செய்யேம், செய்யாய், செய்யீர் என இவ்வாறு வருவன இக் குணத்தை யுடையாரென்னும் பொருண்மைக் குணப்பெயர்ப் பகுபதம். ஊணான், ஊணாள், ஊணார், ஊணது, ஊணன, ஊணேன், ஊணேம், ஊணீர் என இவ்வாறு வருவன இத் தொழிலை யுடையா ரென்னும் பொருண்மைத் தொழிற் பெயர்ப் பகுபதம். [3]பிறவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. இவற்றுள், தத்தம் பகாப்பதங்களே பகுதியானவாறும் அன், ஆன், முதலாயின விகுதியானவாறும் ஏற்ற சாரியை [4]சந்திகளானவாறும் கண்டு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** பகுபதவுறுப்பு ஆறனுள் பின்னைய மூன்றும் புணரியலுள் உணர்த்தப்படுதலின் அவை ஒழித்து முன்னைய மூன்றனுள் பகுதி இனைய என்பது **உணர்–ற்று.**

**இ–ள்.:** பெயர்ப் பகுபதங்களுள்ளும், வினைப் பகுபதங்களுள்ளும், தத்தம் முதல்நிலையாய பகாப்பதங்களே அவற்றின் பகுதியாம், **எ–று.**

பகுபதத்துள் பகுதி விகுதி முதலிய உறுப்பெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேல் விதந்து கூறலின், ஈண்டுத் தத்தம் பகாப்பதங்கள் என்றது முதல்நிலைகளையே என்பது **பாரிசேடத்தால்** பெற்றாம்.

---

**பாட வேறுபாடு.:–**

1. **பிறவுமன்ன**
2. **சந்தி விகாரங்கள்**

பகுபதவுறுப்பாம் முதனிலை இறுதிநிலை இடைநிலைகளாய பகாப்பதங்களின்றும் முதனிலைப் பகாப்பதம் ஒன்றனையுமே பிரித்துத் தந்தமையின், பகாப்பதங்களே என்னும் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** பகுபதங்கட்குப் பகுதியாமாறு கூறியது.

**இ–ள்.: தத்தம்** – பொருளாதி ஆறும் காரணமாக வரும் பகுபதங்கட்குத் தந்தமுடைய, **பகாப் பதங்களே** – அப் பொருளாதி ஆறான பகாப் பதங்களே, **பகுதியாகும்** – பகுதி ஆகும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

உ–ம்.: குழையன், குழையான், குழையள், குழையாள், குழையவை, குழையென், குழையேன், குழையன், குழையம், குழையாம், குழையெம், குழையேம், குழையோம், குழையை, குழையாய், குழையிர், குழையீர் என வருவன இப் பொருண்மை யுடையார் என்னும் பொருட்பெயர்ப் பகுபதம். ஒழிந்த வானான், காரான், தாளான், கரியான், ஊணான் என்னும் ஐவகைப் பெயர்ப் பகுபதத்துக்கும் அவ்வாறு ஒட்டிக் கொள்க. இவற்றுள் தத்தம் பகாப்பதங்களே பகுதியானவாறும் அன் ஆன் முதலான விகுதியானவாறும் சாரியை சந்தி விகாரங்கள் ஏற்றவாறும் கண்டு கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** பகுபத வுறுப்புகள் ஆறனுள்ளே பின்னைய மூன்றும் புணரியலுள் காட்டப்படுதலால் அவை நீங்கலாக முன்னைய மூன்றனுள்ளே பகுதிகள் இப்படிப்பட்டவைகளென்று உணர்த்துகின்றது.

**இ–ள்.: தத்தம் பகாப்பதங்களே** – பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுபதங்களுள்ளும் அதனதனுடைய முன்னிற்கின்ற பகாப்பதங்களே, **பகுதியாகும்** – பகுதிகளாகும், எ–று.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

பகுதியாவன யாவை?

தத்தம்
பகாப்ப தங்களே பகுதி யாகும்.

(தத்தம் பகாப்பதங்களே பகுதி ஆகும்)

உ–ம்.: குழையன் அகத்தன் ஆதிரையான் பல்லன் செய்யன் கூத்தன் எனப் பெயர்ப்பகுபதங்கட்குக் குழை, அகம், ஆதிரை, பல், செம்மை, கூத்து என்னும் பொருளாதி யறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன. வினைக்குறிப்பு முற்றிற்கும் இவையே உதாரணமாமெனக் கொள்க. அவன் எவன் பிறன் எனப்

பெயப்ப்பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன. அற்று இற்று எற்று என வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** சாரியை சந்தி, விகார மூன்றும் புணரியலிலே சொல்லப்படுதலால் அவற்றை யொழித்துப் பகுதி முதலிய மூன்றினுள்ளே பகுதிகள் இவை யென உணர்த்துகின்றது.

**இ–ள்.: தத்தம்** –(பெயர்ப் பகுபதம் வினைப் பகுபத மென்னும் இரண்டினுள்ளும்) அவற்றவற்றின், **பகாப்பதங்களே–** முன்னின்ற பகாப்பதங்களே, **பகுதியாகும் –** முன்சொன்ன பகுதி யென்னும் முதனிலைகளாம், **எ–று.**

பகுபதத்துள்ளே பகுதி விகுதி முதலிய வுறுப்புக ளெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேலெடுத்துக் கூறுதலால் இங்கே தத்தம் பகாப்பதங்க ளென்றது முதனிலைகளை யென்பது **பாரிசேடத்தாற்** பெறப்பட்டது. முதனிலைப் பெயர்வினை யென்னாமல், தத்தம் பகாப்பதங்களே யென்றதினால் இருவகைப் பகுபதத்துள்ளே பகுதியும் ஒரு உறுப்பாதலால் விகுதி முதலியவற்றொடு சேர்ந்து நிற்பதே தவிரப் பிரிந்து நில்லாமையாலும், பிரிந்தவழிப் பகுதியாகிய உறுப்பின் பொருளைத் தராமையாலும், இருவகைப் பகுதி உறுப்புக்களும் இடைப் பகாப்பத மென்பது பெறப்பட்டது. ஏகாரம் பிரிநிலை.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– தத்தம் பகாப்பதங்களே –** (பெயர்ப்பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும் அவற்றின் முதலில் நிற்கின்ற) பகாப்பதங்களே, பகுதீ ஆகும் – பகுதிகளாம்.

குறிப்பு :– சாரியை சந்தி விகாரம் மூன்றும் புணரியலிற் சொல்லப் படுதலால் அவற்றை யொழித்துப் பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்றனுள் பகுதிகள் இவையெனக் கூறப்பட்டன. பகுபதத்துள்ளே பகுதி, விகுதி முதலிய உறுப்புகளெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேலே எடுத்துக் கூறுதலால் இங்கே 'தத்தம் பகாப்பதங்கள்' என்றது முதனிலைகளை என்பது பெறப்பட்டது.

பெயர்ப்பகுப்பதங்கட்கும், வினைக்குறிப்புப் பகுபதங்கட்கும் பெரும்பான்மை பெயர்ச் சொற்களும் சிறுபான்மை இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

**உதாரணம்**

**பெயர்ப்பகுபதம் – பகுதி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பொன்னன் | – பொன் | – பொருள் | |
| | ஊரன் | – ஊர் | – இடம். | |
| | வேனிலான் | – வேனில் | – காலம் | பொருள் முதலா |
| | கையன் | – கை | – சினை | றும் பகுதியாயின |
| | நல்லன் | – நன்மை | – குணம் | |
| | நடையன் | – நடை | – தொழில் | |
| 2. | அவன் | – அ | இடைச்சொற்கள் பகுதியாயின. | |
| | பிறன் | – பிற | | |
| 3. | கடியன் | – கடி | (உரிச்சொல் பகுதியாயிற்று) | |

(மேற்கூறிய உதாரணங்களே வினைக் குறிப்புப் பெயர்ப் பகுபதங்கட்கும் பொருந்துமாறு காண்க.)

தெரிநிலைவினைப்பகுபதங்கட்கும் சிறுபான்மை பெயர், இடை, உரி என்னும் இவையும் பகுதிகளாகும்.

**உதாரணம்**

| தெரிநிலைவினைப்பகுபதம் | | – பகுதி |
|---|---|---|
| 1. | வாழ்ந்தான் | – வாழ் (வினைச்சொல் பகுதியாயிற்று) |
| 2. | சித்திரித்தான் | – சித்திரம் (பெயர்ச்சொல் பகுதியாயிற்று) |
| 3. | போன்றான் | – போல் (இடைச்சொல்பகுதியாயிற்று) |
| 4. | சான்றான் | – சால் (உரிச்சொல்பகுதியாயிற்று) |

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: தத்தம் பகாப்பதங்களே** – பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுபதங்களுள்ளும் அவ்வவற்றின் முதலில் நிற்கின்ற பகாப்பதங்களே, **பகுதி ஆகும்** – பகுதிகளாம், **எ–று.**

பெயர்ப் பகுபதங்கட்கும் வினைக்குறிப்புப் பகுபதங்கட்கும் பெரும்பான்மையும் பெயர்ச்சொற்களுஞ் சிறுபான்மை இடைச்சொற்களும் பகுதிகளாம்.

**உ–ம்.:** குழையன், அகத்தன், ஆதிரையான், பல்லன், செய்யன், கூத்தன் எனப் பெயர்ப் பகுபதங்கட்குக் குழை, அகம், ஆதிரை, பல் செம்மை, கூத்து, என்னும் பொருளாதி யறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன. வினைக்குறிப்பு முற்றிற்கும் இவையே உதாரணமாமெனக் கொள்க. அவன் எவன் பிறன் எனப் பெயர்ப் பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன. அற்று இற்று எற்று என வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். தத்தம் பகாப்பதங்களே** – பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுபதங்களுள்ளும் அவ்வவற்றின் முதலில் நிற்கின்ற பகாப்பதங்களே, – **பகுதியாகும்** – பகுதிகளாம். **எ–று.**

பெயர்ப் பகுபதங்கட்கும் வினைக் குறிப்புப் பகுபதங்கட்கும் பெரும்பான்மையும் பெயர்ச்சொற்களும் சிறுபான்மை இடைச் சொற்களும் பகுதிகளாம்.

**உ–ம்.** குழையன், அகத்தன், ஆதிரையான், பல்லன், செய்யன், கூத்தன், எனப் பெயர்ப் பகுபதங்கட்கு குழை, அகம், ஆதிரை, பல், செம்மை, கூத்து என்னும் பொருளாதி யறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன. வினைக் குறிப்பு முற்றிற்கும் இவை உதாரணமாமெனக் கொள்க.

அவன், எவன், பிறன் எனப் பெயர்ப் பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன. அற்று, இற்று, எற்று என வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன.

படித்தான், விதைக்கிறான், துயில்வான் என்னுந் தெரிநிலை வினைப் பகுபதங்களுக்கு முறையே படி, விதை, துயில் என்னும் வினைப் பகுதிகள் வந்தன.

தத்தம் என்றது பெயர்ப் பகுபதங்களையும் வினைப் பகுபதங்களையும், 'பொருடரிற்பதமாம்' என்று முன்னோதியதினாலும், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்று பகுபதங்களைப் பகுத்தபோது பிரிந்து நின்ற நிலைமையிற் பகுதி மாத்திரம் பொருட்பேறுடைய பதமாய் நிற்கும்; விகுதி முதலானமற்றை யறுப்புக்கள் பகுதியோடு கூடினபின்னன்றிப் பயன்படாவாமாதலினாலும், இங்கே பகாப்பதங்களே என்றது பகுதிகளையே யென்பது தெளிவாயிற்று.

வ–று.:– பிடித்தனன் என்னும் பகுபதத்தில் பியென்னும் பகுதி பொருளுணர்த்திப் பதமாகின்றதன்றி த்+த்+அன்+அன் என்று வந்த சந்தியும், இடைநிலையும், சாரியையும், விகுதியும் பிரிந்துநின்ற நிலைமைக்கண் பொருளுணர்த்தாமை காண்க. அவை காலம், திணைபால் முதலிய வுணர்த்துவனவாயினும் 'எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்பதமாம்' என்றது இப்பொருளையன்றென்றுணர்க. ஆதலின் விகுதி இடைநிலை முதலிய வுறுப்புக்கள் பதமாகாமையறிக. சென்றான் என்பதில் ற் இடைநிலையைப் பதமென்று கொள்ளின் றகரம் மொழிக்கு முதலாகி வந்ததென்றுங் கருதல் வேண்டும். அப்படிக் கருதுதல் பெருங்குற்றமாம். இப்படியே பதமென்னுதற் கியலாதவகை பலவுளவாதலாலும், பகுதியைப் பதமென்னுதற்கோரிழுக்கு மின்மையாலும் பகாப்பதங்களே பகுதியாகும் என்றாசிரியர் கூறி விளங்க வைத்தார். பிறரிதற்கு வேறுரை கூறினார்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.: தத்தம் பகாப்பதங்களே** - (பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுபதங்களுள்ளும்) அதனதன் (முதலில் நிற்கின்ற) பகாப்பதமே, **பகுதி ஆகும்** - பகுதியாம்; **எ-று.**

சாரியை சந்தி விகாரம் என்ற மூன்றும் புணரியலிற் சொல்லப்படுதலால், மற்றைப் பகுதி விகுதி இடைநிலை என்ற மூன்றையும் இவ்வியலிற் சொல்லுகின்றார்.

பகுபதத்துள்ளே பகுதி விகுதி முதலிய உறுப்புக்களெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேல் எடுத்துக் கூறுதலால், இங்கே 'தத்தம் பகாப்பதங்கள்' என்றது, முதனிலைகளையே யென்பது பெறப்பட்டது.

பெயர்ப்பகு பதங்கட்கும் குறிப்புவினைப் பகுபதங்கட்கும் பெரும்பான்மை பெயர்ச் சொற்களும், சிறுபான்மை இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

**உ-ம்.:** பொன்னன், ஊரன், திருவோணத்தான், பல்லன், கரியன், கூத்தன் எனப் பெயர்ப் பகுபதங்கட்கு முறையே பொருள் முதலிய ஆறு வகைப் பெயரும் பகுதியாக வந்தன. அவன், எவன், பிறன் எனப் பெயர்ப் பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாக வந்தன. கடியன எனப் பெயர்ப் பகுபதத்திற்கு உரிச்சொல் பகுதியாக வந்தது. குறிப்பு வினைப்பகுபதத்திற்கும் இவையே உதாரணமாம். பெயர்ப் பகுபதத்துக்குச் சிறுபான்மை வினையும் பகுதியாம்; உ-ம். அறிஞன்.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்குப் பெரும்பான்மை வினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

**உ-ம்.:** நடந்தான், வந்தான் - வினைச்சொற்கள் பகுதியாக வந்தன. கடைக்கணித்தான், காதலித்தான் - பெயர்ச்சொற்கள் பகுதியாக வந்தன. போன்றான், என்றான் - இடைச்சொற்கள் பகுதியாக வந்தன. சான்றான், கூர்ந்தான் - உரிச்சொற்கள் பகுதியாக வந்தன.

## பவானந்தம் பிள்ளை

இ-ள். தந்தம் பகாப்பதங்களே - (பெயர்ப்பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும்) அவ்வவற்றின் (முதலில் நிற்கின்ற) பகாப்பதங்களே, பகுதி ஆகும் - பகுதிகளாம். எ-று.

பெயர்ப் பகுபதங்கட்கும் வினைக்குறிப்புப் பகுபதங்கட்கும், பெரும்பான்மையும் பெயர்ச் சொற்களும், சிறுபான்மை இடைச்சொற்களும் உரிசொற்களும் பகுதிகளாம். உதாரணம்:

(பெயர்ப்பகுபதம்) (பகுதி)

1. பொன்னன் – பொன் –பொருள்

நாடன் – நாடு – இடம்

ஆதிரையான் – ஆதிரை – காலம்.

பல்லன் – பல் – சினை

கரியன் – கருமை – குணம்.

கூத்தன் – கூத்து – தொழில் – பெயர்ச்சொற்கள் பகுதியாயின.

2. அவன் – அ

பிறன் – பிற – இடைச் சொற்கள் பகுதியாயின.

3. கடியன் – கடி – உரிச்சொல் பகுதியாயிற்று.

(இவைகளே வினைக் குறிப்பு முற்றுகட்கும் உதாரணமாம்.)

தெரிநிலை வினைப்பகுபதங்கட்குப் பெரும்பான்மை வினைச் சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல், பெயர்ச்சொல், இடைச்சொல், உரிசொற்களும் பகுதிகளாம். உதாரணம்:

தெரிநிலை வினை (பகுதி)

1. நடந்தான் – நட

வாழ்ந்தான் – வாழ்

வந்தான் – வா – வினைச் சொற்கள் பகுதியாயின.

2. சித்திரித்தான் – சித்திரம்

மந்திரித்தான் – மந்திரம் – பெயர்ச்சொற்கள் பகுதியாயின.

3. போன்றான் – போல் – இடைச்சொல் பகுதியாயிற்று.

4. சான்றான் – சால் – உரிச்சொல் பகுதியாயிற்று.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) தத்தம் பகாப் பதங்களே–(பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும்) அதனதனுடைய (முன்னிற்கின்ற) பகாப்பதங்களே, பகுதி ஆகும்–பகுதிகளாகும். எ–று.

**பொ–ரை.:** பகுபதங்களுள், அவற்றவற்றின் முதலில் நின்ற பகாப்பதங்களே பகுதிகள் ஆம்.

சாரியை, சக்தி, விகாரம் மூன்றும் புணரியலிலே சொல்லப் படுதலால் அவற்றை ஒழித்துப் பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்றனுள் பகுதிகள் இவையெனக் கூறப்பட்டன.

பகுபதத்துள்ளே பகுதி விகுதி முதலிய உறுப்புக்க ளெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேலெடுத்துக் கூறுதலால் இங்கே, 'தத்தம் பகாப்பதங்கள்' என்றது முதனிலைகளை என்பது பெறப்பட்டது.

பெயர்ப் பகுபதங்கட்கும் குறிப்புவினைப் பகுபதங்கட்கும் பெரும்பான்மை பெயர்ச் சொற்களும் சிறுபான்மை இடைச் சொல் உரிச் சொற்களும் பகுதிகளாம்.

(உ–ம்) பொன்னன், ஊரன், திருவோணத்தன், பல்லன், கரியன், கூத்தன் என்னும் பெயர்ப்பகு பதங்களில் முறையே பொன், ஊர், திருவோணம், பல், கருமை, கூத்து எனப் பொருள் முதலிய அறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன.

அவன் எவன், பிறன், எனும் பெயர்ப்பகுபதங்களில் முறையே அ, எ, பிற என்னும் இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன.

கடியன் எனும் பெயர்ப்பகுபதத்தில் கடி என்னும் உரிச்சொல் பகுதியாய் வந்தது.

(குறிப்புவினைப் பகுபதத்திற்கும் இவையே உதாரணமாம்.)

பெயர்ப் பகுபதத்திற்குச் சிறுபான்மை வினையும் பகுதியாம்.

(உ–ம்) அறிஞன். (அறி–பகுதி) வினைச்சொல் பகுதியாய் வந்தது.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்குப் பெரும்பான்மை வினைச் சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச் சொற்களும் பகுதிகளாம்.

(உ–ம்.) நடந்தான், வந்தான் (நட, வா பகுதிகள்.) வினைச் சொற்கள் பகுதியாய்வந்தன.

கடைக்கணித்தான், காதலித்தான். (கடைக்கண், காதல் பகுதிகள்.) பெயர்ச் சொற்கள் பகுதியாய் வந்தன.

போன்றான், என்றான். (போல், என் பகுதிகள்) இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன.

சான்றான், கூர்ந்தான். (சால், கூர் பகுதிகள்.) உரிச் சொற்கள் பகுதியாய் வந்தன.

## கா. நமசிவாய முதலியார்

**தம் தம் பகாப்பதங்களே** – (பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும்) அவற்றவற்றின் முன் நிற்கின்ற பகாப்பதங்களே, **பகுதியாகும்** – முதனிலை (பகுதி) களாகும்.

சாரியை சந்தி விகாரம் மூன்றும் புணரியலில் சொல்லப்படுதலால், அவை ஒழிந்த முதனிலை (பகுதி), இறுதிநிலை (விகுதி), இடை நிலை என்னும்

மூன்றில், பகுதிகள் இப்படிப்பட்டவைகள் என்று இச்சூத்திரம் உணர்த்துகின்றது.

**உதாரணம்**

1. பெயர்ப் பகுபதங்கட்குப் பெயர்ச் சொல் முதலாகிய நான்கு சொற்களும் பகுதியாக வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பொன்னன் | – | பொன் | : | பெயர்ப்பகுதி |
| அறிஞன் | – | அறி | : | வினைப்பகுதி |
| பிறன் | – | பிற | : | இடைப்பகுதி |
| கடியவை | – | கடி | : | உரிப்பகுதி |

2. குறிப்பு வினைப் பகுபதங்கட்கு வினைச்சொல் நீங்கலாக மற்ற மூன்று சொற்களும் பகுதியாக வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் பொன்னன் | – | பொன் | : | பெயர்ப்பகுதி |
| அஃது அற்று | – | அன் | : | இடைப்பகுதி |
| அவை கடியன | – | கடி | : | உரிப்பகுதி |

3. தெரிநிலை வினைப் பகுபதங்களுக்குப் பெரும்பான்மை வினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் முதனிலை (பகுதி) களாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நடந்தான் | – | நட | : | வினைப்பகுதி |
| கடைக்கணித்தான் | – | கடைக்கண் | : | பெயர்ப்பகுதி |
| போன்றான் | – | போல் | : | இடைப்பகுதி |
| சான்றான் | – | சால் | : | உரிப்பகுதி |

## மோசசு பொன்னையா

பகுபதங்களின் முதனிலைகளாகிய பகாப்பதங்களே அவற்றின் பகுதிகளாம், **எ–று.**

பெயர்ப்பகுபதங்களுக்கும் குறிப்புமுற்றுப் பகுபதங்களுக்கும் பெயர்ச்சொற்களும், பண்புஅடிகளும் இடை உரிச்சொற்களும் பகுதிகளாக அமையும் எனக் கொள்க.

ஈண்டுப் பகுதி என்றதை மொழியியலார் அடி என்பர் எனக் கொள்க.

**எ–டு**

பொன்னன் – பொன்
ஊரன் – ஊர்
ஓணத்தான் – ஓணம்
பல்லன் –பல்
துவர்ப்பு – துவர்

அறுவகைப் பெயர்களிலும் பெயர்கள் பகுதிகளாயின.

கூத்தன் – கூத்து

உளன் – உள்

இலன் – இல் பண்படிகள் பகுதிகளாயின.

மற்றையான் – மற்று – இடைச்சொல் பகுதியாயிற்று.

கடியன – கடி – உரிச்சொல் பகுதியாயிற்று.

தொழில் முற்றுப் பகுபதங்களுக்கு ஏவல்வினைச் சொற்களே பகுதிகளாம் என்பர் எனக் கொள்க.

எ–டு.

நடந்தான் – நட<br>
வந்தாம் – வா<br>
கடைக்கணித்தான் – கடைக்கணி ஏவல் வினைகள்<br>
தின்றான் – தின் பகுதிகளாயின.<br>
சேர்ந்தான் – சேர்

(7)

**134. செம்மை சிறுமை சேய்மை தீமை**<br>
**வெம்மை புதுமை மென்மை மேன்மை**<br>
**திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்**<br>
**இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.**

**செம்மை சிறுமை சேய்மை தீமை**<br>
**வெம்மை புதுமை மென்மை மேன்மை**<br>
**திண்மை உண்மை நுண்மை இவற்று எதிர்**<br>
**இன்னவும் பண்பின் பகாநிலைப் பதம் ஏ.**

semmai siṛumai sēymai ṭīmai<br>
vemmai puṭumai meṉmai mēṉmai<br>
ṭiṇmai uṇmai nuṇmai ivaṛṛu eṭir<br>
iṉṉavum paṇpiṉ pakānilaip paṭam ē.

**இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)**

## Exceptions to Abstract nound

The (Eleven) Abstract Nouns, —cemmai, cirumai, ceymai, &c., their opposites, and others of a similar nature, - (though apparently divisible) are (considered as) Roots denoting quality.

## மயிலைநாதர்

**எ–ன்,** [1]மேல், பெயர்ப் பகாப்பதம் ஆறு வகைப்படு மென்றவற்றுட் பண்புப் பகாப்பதம் விளங்கித் தோன்றாமையான் அவற்றை எடுத்து விரித்துணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** இச் சொன்ன பதினொன்றும் இவற்றிற்கு மாறான வெண்மை கருமை பொன்மை பசுமைகளும், பெருமையும்[2] அணிமையும் நன்மையும் தண்மையும் பழமையும் வன்மையும் கீழ்மையும் நொய்ம்மையும் இன்மையும், பருமையும், இவைபோல்வன பிறவும் பண்புப் பகாப்பதம், **எ–று.**

**வ–று.:** செய்யான், செய்யாள், செய்யார், செய்யது, செய்யன, செய்யேன், செய்யேம், செய்யாய், செய்யீர் என இவ்வாறு வருவன இக் குணத்தாரென்னும் பொருண்மைப் பண்புப்பகுபதம். சிறுமை, சேய்மை, தீமை முதலாக வுள்ளனவற்றோடும் பிறவற்றோடும் இவ்வாறே யொட்டிக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** பண்புப் பகுதிக்கு எய்தியதன் மேல் சிறப்பிவிதி **உணர் –ற்று.**

**இ–ள்.:** இங்ஙனம் கூறிய பதினொன்றும், இவற்றிற்கு எதிரான வெண்மை கருமை பொன்மை பசுமைகளும், பெருமை அணிமை நன்மை தண்மை பழமை வன்மை கீழ்மை நொய்மை இன்மை பருமைகளும், இவை போல்வன பிறவும் பகுதியாய பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலைப்பதமாம், **எ–று.**

இங்ஙனம் கூறிய வாய்பாடு முதலிய எல்லாம் சொல்நிலையால் பகுபதமாயினும் மை விகுதிக்குப் பகுதிப் பொருளன்றி வேறு பொருள் இன்மையின் பொருள் நிலையால் பகுக்கப்படாது என்பார் பண்பிற்பகா என்றும்,

**"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"**

என்றாற்போல இங்ஙனங் கூறிய வாய்பாட்டுப் பண்புகள் மை விகுதியின்றி இயங்காமையின் இவ் விகுதியினையும் பகுதியாக நிறீஇ மேல்வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பார் நிலைப்பதம் என்றும் கூறினார்.

---

பாட வேறுபாடு.:–

1. **மேற்பகாப்பதங்களே பகுதியாகு மென்றார், அவற்றுட் பெயர்ப்பகாப்பதம் ஆறுவகைப்படு மென்றவற்றுட் பண்பு**

2. **(1) அண்மையும்,**

**(2) அணுமையும்.**

பண்புப் பகாப்பதம் என்னாது பண்பிற் பகாநிலைப்பதம் என்றல் சொற்பொருள் விரித்தல் என்னும் உத்தி, செம்மை சிறுமை முதலிய வாய்பாடுகள் எடுத்துக்காட்டல் என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** பண்புப் பகாப்பதம் விளங்கித் தோன்றாமையின் அவற்றை எடுத்து விரித்துரைத்தது.

**இ—ள்.: செம்மை** — செம்மையும் செம்மைக்கு மாறான வெண்மை கருமை பொன்மை பசுமையும், **சிறுமை** — சிறுமையும் சிறுமைக்கு மாறான பெருமையும், **சேய்மை** — சேய்மையும் சேய்மைக்கு மாறான அணிமையும், **தீமை** —தீமையும் தீமைக்கு மாறான நன்மையும், **வெம்மை** — வெம்மையும் வெம்மைக்கு மாறான தண்மையும், **புதுமை** — புதுமையும் புதுமைக்கு மாறான பழமையும், **மென்மை** — மென்மையும் மென்மைக்கு மாறான வன்மையும், **மேன்மை** — மேன்மையும் மேன்மைக்கு மாறான கீழ்மையும், **திண்மை** — திண்மையும் திண்மைக்கு மாறான நொய்மையும், **உண்மை** — உண்மையும் உண்மைக்கு மாறான இன்மையும், **நுண்மை இவற்றெதிர்** — நுண்மையும் நுண்மைக்கு மாறான பருமையும், **இன்னவும்** — இவை போல்வன பிறவும், **பண்புப் பகாநிலைப் பதமே** — பண்புப் பெயர்ப் பகாப் பதமாம், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

**இது,** பண்புப் பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

**இ—ள்.: செம்மை நுண்மை** — செம்மை முதல் நுண்மை யீறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், **இவற்றெதிர்** — இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும், **இன்னவும்** — இவை போல்வன பிறவும், **பண்பின்** — பண்புப் பொருளின்றும், **பகா** — வேறுபொருள் பகுக்கப்படாத, **நிலை** — நிலையை யுடைய, **பதம்** — பதங்களாகும், **எ—று.**

(சொன்னிலையாற் பகுபதமாயினும் "மை" விகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறு பொருளில்லாமையினாலே "பண்புப் பகாநிலை" என்னாது "பண்பிற்பகாநிலை" யென்றார். இது சொற்பொருள் விரித்தல் என்னுமுத்தி. செம்மை — சிறுமை — சேய்மை —தீமை முதலிய வாய்பாடுகள் எடுத்துக்காட்டல் என்னு முத்தி)

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

பண்புப் பகுதிகளெவை?

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே

(செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பின் பகாநிலை பதமே),

செம்மை... நுண்மை – செம்மை முதல் நுண்மையீறாகச் சொல்லப்பட்டபதினொன்றும் இவற்று எதிர் – இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும் இன்னவும் – இவை போல்வன பிறவும் பண்பின் பகாநிலைப்பதமே – பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாம், எ–று.

இவை விகுதிகளோடு புணர்ந்தனவன்றோ பகாப்பதமாவதெங்ஙனம்?

இவை சொன்னிலையாற் பகுபதமாயினும் மைவிகுதிக்குப் பகுதிப்பொருளல்லது வேறு பொருளில்லாமையால் பொருணிலியாற் பகாப்பத மென்பதாம்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, பண்புப்பகுதிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துகின்றது.

**இ–ள்.**: செம்மைமுதல் நுண்மை கடையாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், **இவற்றெதிர்** – இவற்றிற்கு மறுதலைப்பட்ட வெண்மை கருமை பொன்மை பசுமைகளும், பெருமை, அணிமை நன்மை தண்மை பழமை வன்மை கீழ்மை நொய்மை இன்மை பருமைகளும், **இன்னவும்** – இவை போல்வன பிறவும், **பண்பிற் பகாநிலைப் பதம்** – பண்புப்பொருளிலே நின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலைமையை யுடைய பதங்களாம், **எ–று.**

இங்கே சொல்லிய பதங்கள் முதலாயின வெல்லாம் சொல்நிலையாற் பகுபத மாயினும் பொருள்நிலையால் பகாப்பத மென்று சொல்ல வந்தவர் "பண்பிறபகா" வென்றும், இப்பதங்கள் மை விகுதி யின்றி நடக்காததினாலே இந்த விகுதியையும் பகுதியாக வைத்து மேல்வரும் விகுதிகளோடு சேர்க்கப்படு மென்று சொல்ல வந்தவர் "நிலைப்பத" மென்றுங் கூறினார். பண்புப்பகாப்பத மென்னாது பண்பிற்பகா நிலைப்பத மென்றது **சொற்பொருள் விரித்தலென்னும் உத்தி**, செம்மை சிறுமை முதலாக எடுத்துக்காட்டியது **எடுத்துக்காட்டலென்னும்** உத்தி. எழுவாய் பயனிலைகள் உரையுள் விளங்கிக் கிடந்தன.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– செம்மை** * * * * * **நுண்மை**– செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், **இவற்று எதிர்** – இவைகளுக்கு எதிரான வெண்மை முதலியவைகளும், **இன்னவும்** – இவைபோல்வன பிறவும், **பண்பின்** – பண்புப்பொருளினின்றும், **பகா நிலை**– வேறுபொருள் பகுக்கக்கூடாத நிலையையுடைய, **பதம்** – பதங்களாம்.

**குறிப்பு:–** இவையெல்லாம் சொன்னிலையாற் பகுபதமாயினும், **மை** விகுதிக்குப் பகுதிப் பொருள்விகுதியல்லது வேறுபொருள் இல்லாமையின் பொருள்நிலையாற் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்குப் 'பண்பிற்பகாநிலை' என்றும், இவை **மை** விகுதியின்றி இயங்காமையின் இவ்விகுதியையும் பகுதியாகவே நிறுத்தி மேல்வரும் விகுதியோடே புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு 'நிலைப்பதம்' என்றுங் கூறினார். பண்புப் பகாப்பதம்' என்னாது 'பண்பிற்பகாநிலைப்பதம்' என்றது. **சொற்பொருள்விரித்தல்** என்னும் உத்தி. செம்மை சிறுமை, சேய்மை, தீமை முதலிய வாய்பாடுகள் **எடுத்துக்காட்டல்** என்னும் உத்தி.

செம்மை X கருமை, வெண்மை, பசுமை, பொன்மை;
சிறுமை X பெருமை; சேய்மை X அண்மை; தீமை X நன்மை;
வெம்மை X தண்மை; புதுமை X பழமை; மென்மை X வன்மை;
மேன்மை X கீழ்மை; திண்மை X நொய்ம்மை; உண்மைX இன்மை;
நுண்மை X பருமை இவை ஒன்றுக்கொன்று எதிர்நிலையாம். 'இன்னவும்' என்றதனால் இளமை X முதுமை; எளிமை X அருமை; குறுமை X நெடுமை; மடமை X புலமை என்பனவுங் கொள்க.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: செம்மை ..... நுண்மை** – செம்மை முதல் நுண்மை யீறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், **இவற்றெதிர்** – இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும், **இன்னவும்** – இவை போல்வன பிறவும், **பண்பின் பகாநிலைப்பதம்** – பண்புப் பொருளின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையை யுடைய பதங்களாம், **எ–று**.

இவை யெல்லாஞ் சொன்னிலையாற் பகுபத மாயினும் மை விகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறுபொருள் இல்லாமையினாலே பொருணிலையாற் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்குப் பண்பிற்பகா என்றும், இவை மை விகுதி யின்றி இயங்காமையினால் இவ் விகுதியும் பகுதியாகவே நிறுத்தி மேல்வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு நிலைப்பதம் என்றுங் கூறினார். பண்புப் பகாப்பத மென்னாது பண்பிற் பகாநிலைப் பதம் என்றது **சொற்பொருள் விரித்தலென்னும்** உத்தி. செம்மை சிறுமை சேய்மை தீமை முதலிய வாய்பாடுகள் **எடுத்துக்காட்டலென்னும்** உத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **செம்மை... – நுண்மை** – செம்மைமுதல் நுண்மையீறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், – **இவற்றெதிர்** – இவைகளுக்கெதிரான வெண்மை முதலானவைகளும், – **இன்னவும்** – இவைபோல்வன பிறவும், – **பண்பின் பகாநிலைப்பதம்** – பண்புப் பொருளினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாம். **எ–று.**

செம்மைக்கு எதிரான மையீறு:– வெண்மை, கருமை, பொன்மை, பசுமை, சிறுமைக்கெதிரான மையீறு: பெருமை; சேய்மைக்கு – அணிமை; தீமைக்கு – நன்மை; வெம்மைக்கு – தண்மை, (குளிர்மை); புதுமைக்கு – முதுமை, (பழமை); மென்மைக்கு – வன்மை, (கடுமை); மேன்மைக்கு – கீழ்மை; திண்மைக்கு – நொய்மை; உண்மைக்கு – இன்மை; நுண்மைக்கு – பருமை.

இன்னவுமென்றதினால் இளைமை, செழுமை, கொழுமை, வண்மை, அன்மை, வெறுமை, குறுமை, நெடுமை, உடைமை, பொய்மை, வறுமை என்பனவுங் கொள்க.

இவையெல்லாஞ் சொன்னிலையாற் பகுபதமாயினும் மை விகுதிக்குப் பகுதிப்பொருளல்லது வேறுபொருள் இல்லாமையினாலே பொருணிலையாற் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்குப் பண்பிற்பகா என்றும், இவை மை விகுதியின்றி இயங்காமையினால் இவ்விகுதியையும் பகுதியாகவே நிறுத்தி மேல்வரும் விகுதியோடு புணர்க்கத்தகும் என்பது அறிவித்தற்கு நிலைப்பதம் என்றுங் கூறினார். பண்புப் பகாப்பதமென்னாது பண்பிற் பகாநிலைப்பதம் என்றது சொற்பொருள் விரித்தலென்னுமுத்தி. செம்மை சிறுமை முதலியவாக எடுத்துக்காட்டிய வாய்பாடுகள் எடுத்துக்காட்ட லென்னுமுத்தி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: செம்மை .....நுண்மை** – செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், **இவற்று எதிர்** – இவைகட்கு எதிரான வெண்மை முதலானவைகளும், **இன்னவும்** – இவை போல்வன பிறவும், **பண்பின்** – பண்புப்பொருளின்றும், **பகா**–(வேறுபொருள்) பகுக்கப்படாத, **நிலை** – நிலையை யுடைய, **பதம்** – பதங்களாம்; **எ–று.** (சேய்மை –தூரம்.)

இவை யெல்லாம் சொல்நிலையாற் பகுபத மாயினும் 'மை' விகுதிக்குப் பகுதிப்பொரு ளல்லது வேறுபொருள் இல்லாமையாற் பொருள்நிலையாற் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்கு 'பண்பிற்பகா' என்றும், இவை 'மை' விகுதி யின்றி வராமையினாலே இவ் விகுதியையும் பகுதியாகவே நிறுத்தி மேல் வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு 'நிலைப்பதம்' என்றும் கூறினார். பண்புப் பகாப்பத மென்னாமல் 'பண்பிற்பகாநிலைப்பதம்' என்றது, **சொற்பொருள் விரித்தல்** என்னும் உத்தி (சொற்பொருள் விரித்தல் – சொல்லின் பொருள் வெளிப்படையாக விளங்கும்படி விவரித்துச் சொல்லுதல்) செம்மை முதலிய வாய்பாடுகளை எடுத்துக்காட்டியது, **எடுத்துக்காட்டல்** என்னும் உத்தி. (எடுத்துக் காட்டல் – தான் சொல்லும் இலக்கணத்துக்கு அமைந்த இலக்கியத்தைத் தானே எடுத்துக்காட்டுதல்)

செம்மைக்கு – வெண்மை, கருமை, பொன்மை பசுமைகளும், சிறுமைக்கு – பெருமையும், சேய்மைக்கு அண்மையும், தீமைக்கு நன்மையும், வெம்மைக்கு – தண்மையும், புதுமைக்கு – பழமையும், மென்மைக்கு – வன்மையும், மேன்மைக்கு – கீழ்மையும், திண்மைக்கு – நொய்ம்மையும், உண்மைக்கு – இன்மையும், நுண்மைக்கு – பருமையும் எதிரானவை யெனக் காண்க. இவை போல்வன பிறவாவன:– மடமை, புலமை, இளமை, முதுமை, குறுமை, நெடுமை, கிழமை, வறுமை, வெறுமை, அருமை, நடுமை முதலியன.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: செம்மை நுண்மை – செமை முதல் நுண்மை றியாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்றெதிர் – இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும், இன்னவும் – இவை போல்வன பிறவும், பண்பின் பகாநிலை பதம் – பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையுடைய பதங்களாம். எ–று.

இவையெல்லாஞ் சொன்னிலையாற் பகுபதமாயினும் மைவிகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறு பொருள் இல்லாமையினாலே பொருணிலையாற் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்குப் 'பண்பிற் பகா' என்றும், இவை மை விகுதியின்றி இயங்காமையினால் இவ்விகுதியையும் பகுதியாகவே நிறுத்தி மேல்வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு 'நிலைப்பதம்' என்றுங் கூறினார்.

பண்புப் பகாப்பதமென்னாது 'பண்பிற்பகாநிலைப்பதம்' என்றது 'சொற்பொருள் விரித்தல்' என்னும் உத்தி. செம்மை சிறுமை சேய்மை தீமை முதலிய வாய்பாடுகள் எடுத்துக்காட்டல் என்னும் உத்தி.

இவை போல்வன பிறவாவன, பசுமை, புலமை, முதுமை, வறுமை, அருமை முதலியன.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) செம்மை.................நுண்மை–செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்று எதிர்–இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும், இன்னவும்–இவைபோல்வன பிறவும், பண்பின் பகாநிலை–பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையை யுடைய, பதம்–பதங்களாகும்.

**பொ–ரை.:** செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும் இவை போல்வன பிறவும் பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாகும்.

இவை யெல்லாம் சொல் நிலையால் பகுபதமாயினும் 'மை' விகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறு பொருள் இல்லாமையினாலே பொருள் நிலையால் பதாப்பதம் என்பது அறிவித்தற்குப் 'பண்பிற் பகா' என்றும், இவை, 'மை' விகுதி யின்றி இயங்காமையினால் இவ் விகுதியையும் பகுதியாகவே நிறுத்தி மேல்வரும் விகுதியோடு புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு, 'நிலைப்பதம்' என்றுங் கூறினார்.

பண்புப்பகாப்பத மென்னாமல் 'பண் பிற்பகா நிலைப்பதம்' என்றது, சொற்பொருள் விரித்தல் என்னுமுத்தி. (சொற்பொருள் விரித்தல்–சொல்லினது பொருள் (விளங்குதற்கு உருபு முதலானவைகளை) விரித்துச் சொல்லுதல்; அதாவது, மை–பகுதிப் பொருள் விகுதியாதலால் விரிக்கப்படா வென்னும் பொருள் தோன்றப், (பண்பிற்பாநிலை' என நீக்கப் பொருளில்வந்த இன்னுருபு விரிந்து நிற்றல்)

செம்மை, சிறுமை, சேய்மை, தீமை முதலிய வாய்பாடுகளை எடுத்துக் காட்டியது, எடுத்துக்காட்டல் என்னுமுத்தி. (எடுத்துக்காட்டல்–தான், சொல்லும் இலக்கணத்துக்கு அமைந்த இலக்கியத்தைத்தானே எடுத்துக்காட்டுதல்.)

செம்மைக்கு–வெண்மை கருமை, பொன்மை, பசுமைகளும்; சிறுமைக்குப்–பெருமையும், சேய்மைக்கு–அணிமையும், தீமைக்கு–நன்மையும், வெம்மைக்கு–தண்மையும், புதுமைக்கு–பழமையும், மென்மைக்கு–வன்மையும், மேன்மைக்கு–கீழ்மையும், திண்மைக்கு–நொய்மையும், உண்மைக்கு–இன்மையும், நுண்மைக்கு–பருமையும் எதிரானவை எனக் கொள்க. இவைபோல்வன பிறவாவன:– மடமை, புலமை, இளமை, முதுமை, குறுமை, நெடுமை, பொய்மை, மெய்ம்மை, எளிமை, அருமை முதலாயின.

## கா. நமசிவாய முதலியார்

**செம்மை** * * * * **நுண்மை** – செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், **இவற்றெதிர்** – இவைகளுக்கு எதிர்மொழிகளான வெண்மை முதலான பதங்களும், **இன்னவும்** – இவைபோல்வன பிறவும், பண்பின் – பண்புப் பொருளினின்றும், **பகா** – வேறு பொருள் பகுக்கப்படாத, நிலை – நிலையையுடைய, **பதம்** – பதங்களாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செம்மை | – | வெண்மை | புதுமை | – | பழமை |
| கருமை முதலியன | | | மென்மை | – | வன்மை |
| சிறுமை | – | பெருமை | மேன்மை | – | கீழ்மை |
| சேய்மை | – | அண்மை | திண்மை | – | நொய்மை |
| தீமை | – | நன்மை | உண்மை | – | இன்மை |
| வெம்மை | – | தண்மை | நுண்மை | – | பருமை |

**'இன்னவும்'** என்றதனால், அருமை – எளிமை, இனமை – முதுமை, குறுமை – நெடுமை, புலமை – மடமை, உடைமை – வறுமை முதலியன கொள்க.

இங்கே சொல்லிய செம்மை முதலாயினவெல்லாம் சொன்னிலையாற்

பகுபதமாயினும் பொருணிலையால் பகாப்பதமென்று சொல்ல வந்தவர், **'பண்பிற் பகா'** என்றும், இவை மைவிகுதியின்றி நடவாததனாலே இந்த மை விகுதியையும் பகுதியாகவைத்து, மேல்வரும் 'அன், ஆன்' (சூ-140) முதலிய விகுதிகளோடுசேர்க்கப் படும் என்று சொல்ல வந்தவர், **'நிலைப்பதம்'** என்றுங் கூறினர்.

**'பண்புப் பகாப்பதம்'** என்னாது, **'பண்பிற் பகாநிலைப் பதம்'** என்றது, **சொற்பொருள் விரித்தல்** என்னும் உத்தி.

செம்மை, சிறுமை, சேய்மை, தீமை முதலிய மொழிகளை வாய்பாடுகளாக எடுத்துக் கூறியது, **எடுத்துக் காட்டல்** என்னும் உத்தி.

## மோசசு பொன்னையா

செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவைகளுக்கு எதிரான வெண்மை முதலியனவும், இவை போல்வன பிறவும் பகுத்தலை வேண்டாத பண்புப்பொருள் தரும் நிலைத்த பகாப்பதங்களேயாம், **எ—று.**

**எ—டு.**

| | | |
|---|---|---|
| செம்மை | X | வெண்மை, கருமை, பொன்மை, பசுமை. |
| சிறுமை | X | பெருமை. |
| சேய்மை | X | அணிமை. |
| தீமை | X | நன்மை. |
| வெம்மை | X | தண்மை. |
| புதுமை | X | பழமை. |
| மென்மை | X | வன்மை. |
| மேன்மை | X | கீழ்மை. |
| திண்மை | X | நொய்மை. |
| உண்மை | X | இன்மை. |
| நுண்மை | X | பருமை. |

இன்னவும் என்றதனால், மடமை, புலமை, இளமை, முதுமை, குறுமை, நெடுமை, கிழமை, வறுமை, அருமை, நடுமை முதலிய மையீற்றுப் பண்புப் பெயர்கள் அனைத்தையுங்கொள்க. செம்மை முதலிய சொற்களைப் பண்புப்பொருள் தரும்பகாநிலைப்பதம் என்றார். அதனால் அவற்றைப் பகுத்துக் காணின், விகுதிக்கு வேறுபொருளின்றிப் பகுதியின் பொருளையே பொருளாய்க் கொண்டு ஒன்றி நடக்கும்என்றார் என்பதாயிற்று.நாச்சினார்க்கினியர் கருங்குதிரை என்ற பண்புத் தொகைநிலைத் தொடரைக் கரிது ஆகிய குதிரை எனப் பிரித்துக் கரிது என்பது பெயரெச்ச வினைக்குறிப்புப் பெயர் என்றும், ஆகிய என்பதே அதன்கண் பண்பை விளக்கும் மொழி என்றும் கருதுகிறார். கரிது என்னும்பண்பு கொள் மொழியில் து என்னும் பாலறி கிளவியே

பெயர்ப்பான்மையை விளக்கி நிற்கும் உருபு என்பது சொல்லதிகாரத்தில் விரித்துரைக்கப்படும். ஆகிய என்பது பண்புப் பெயர்களின் பண்பை விளக்கும் மொழி எனின், கருங்குதிரை என்ற தொடர், கருமை ஆகிய குதிரை என விரிக்கப்படல் வேண்டும். அவ்வாறு விரிக்கப்படின், பண்பியே பண்பாகச் சுட்டப்பட்டு மயக்க முண்டாக்குதல் காண்க. எனவே, மை ஈற்றுப் பண்புப் பெயர்களின் மை விகுதிக்குச் சிறப்புப் பொருள் உண்டு என்பது தெளிவுறும். ஆதலின் மை கட்டு உருபனே இம்மை, பேதைமை, தலைமை முதலிய சொற்களில் மை விகுதி தன்மை என்ற சிறப்புப் பொருளில் வருதலும் அதனை வலியுறுத்தும். எனவே, செம்மை முதலிய பண்புப் பெயர்கள் சொல் நிலையாலும், பொருள் நிலையாலும் பகுபதங்களாக இருக்க, அவற்றைப் பண்பிற் பகாநிலைப்பதம் என இவ்வாசிரியர் குறிப்பிட்டதன் பொருந்தாமையை அறிக.

(8)

**135. ஈறு போத லிடையுகர மிய்யாதல்**
**ஆதி நீட லடியகர மையாதல்**
**தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்**
**இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.**

**ஈறு போதல் இடை உகரம் இஆதல்**
**ஆதி நீடல் அடி அகரம் ஐஆதல்**
**தன் ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்**
**இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பு ஏ.**

īṛu pōṭal itai ukaram iāṭal
āṭi nītal ati akaram aiāṭal
ṭaṉ oṛṛu irattal muṉniṉṛa meyṭiriṭal
iṉam mikal iṉaiyavum paṇpiṛku iyalpu ē.

**இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)**

## Changes peculiar to Abstract nouns

The following are (considered as) changes peculiar to Abstract nouns, (when used as Adjectives): Dropping the final; changing middle 'u' into 'i̲', lengthening the initial, and changing initial 'a' into 'ai' doubling the middle consonant; changing a preceding consonant into another; and the insertion of a kindred letter; besides other of this kind.

## ஒப்புமைப் பகுதி

ஐஇறும் குணப்பெயர் அஃகி ஈறொழிதல்
ஈறுபோய் உகரம் இடையில் இஆதல்
ஆதிநீடல் அடிஅகரம் ஐ ஆதல்
தன்ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே

(தொ.வி.:92)

## மயிலை நாதர்

**எ–ன்,** அப் பண்புப் பதத்திற் குரிய சில விதி உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** பண்புப் பதத்தின் இறுதி கெடுதலும், இடையி னின்ற உகரம் இகரமாதலும், முதலி னின்ற உயிர்கள் நீடலும், முதலினின்ற அகரம் ஐகார மாதலும், இடையே தன்னொற்று மிகுதலும், முன்பு நின்றமெய் திரிதலும், வருமொழி முதலுக்கு இனவெழுத்து மிகுதலும், இவை போல்வன பிறவும் முறைமை, **எ–று.**

ஈற்றுச் செய்கையை முதலிற் கூறியவதனான், இக்கேடு ஒருதலை யென்பதூஉம், கெடுவழி ஈற்றுயிர் கெடுதலும், ஈற்றுயிர்மெய் கெடுதலும், ஈற்றுயிர்மெய் யொடும் ஈற்றயலுயிர் கெடுதலும், இனவெழுத்து வருமொழிக்கண்ண தென்பதூஉம், இவ் விதி யெல்லாம் ஒன்றற்கல்ல வென்பதூஉம் கொள்க.

**வ–று.:** கரியன், பெரியன், நெடியன், சிறியனென்பன ஈற்றுயிர் மெய்கெட்டும் இடை உகரம் இகரமாகியும் வந்தன. கருங்குதிரை, செங்கோலென்பன ஈற்றுயிரும் ஈற்றுயிர்மெய்யும் முறையே கெட்டு ஒற்றுத் திரிந்தன. காரா, பேரா. பாசிழை, பாசடை என்பன ஈற்றுயிர் மெய்யும் ஈற்றயலுயிருங் கெட்டு ஆதி நீண்டன. பைங்கண், பைந்தார் என்பன ஈற்றுயிர்மெய்யும் ஈற்றயலுயிருங் கெட்டு ஆதிநின்ற அகரம் ஐகாரமாய் ஒற்றுத் திரிந்தன. வெற்றிலை, [1]சிற்றானை, குற்றடி, குற்றுயிர், நெட்டிலை, நெட்டெழுத்து என்பன ஈற்றுயிர் மெய்யும் ஈற்றயலுயிரும் கெட்டு இடையே தன்னொற்றுமிக்கன. சேதாம்பல் என்பது ஈற்றுயிர்மெய் கெட்டு முன்புளதாய் நின்ற மெய் திரிந்து ஆதி நீண்டது; சேங்கன்று (செம்மை + கன்று) என்பது வருமொழிக் கினமான மெல்லெழுத்து மிக்கது, கருங்குதிரை முதலாயின பகுபதமல்லவேனும் பண்பதிகாரப்பட்டமையாற் பதப்புணர்ச்சிக்கும் ஈண்டே சொன்னாரெனக் கொள்க. 'இனையவும்' என்றதனாற் பண்பிற்கு வரு முடிபு பிறவுமுளவேல் அவையும் ஈண்டே கொள்க.

---

பாட வேறுபாடு.:– 1. சிற்றாடை

## சங்கரநமச்சிவாயர்

**எ—னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** மேல் செம்மை சிறுமை முதலாகத் தெரித்த வாய்பாடுகளின் இறுதி விகுதி போதலும், இடையில் நின்ற உகரம் இகரமாதலும், முதல் நின்ற குறில் நெடிலாதலும், முதல் நின்ற அகரம் ஐகாரமாதலும், இடையே தன்னொற்று மிகுதலும், முன்பு நின்ற மெய் திரிதலும், வரும் எழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், இவை போல்வன பிறவும் அப்பண்பினுக்கு இயல்பாம், **எ—று.**

[1]**"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"** என்ற அகரம் பன்னீருயிரும் மெய்யொடு புணர வருங்காலத்து நீங்கினாற்போல விகுதி முதலிய புணர வருங்காலத்துப் பண்படி நிற்க அப் 'பகுதிப்பொருள்' விகுதி நீங்கும் என்பார் 'ஈறு கெடுதல்' என்னாது ஈறுபோதல் என்றும், விதந்து கூறா விகாரங்களுமுள அவை வந்துழிக் காண்க என்பார் 'இனைய' என்றும், இவ்விகாரம் ஒரு தலையன்று சிவப்பன் கறுப்பன் என்னும் பிறவாய்பாடுகள் போலச் செம்மையான் [2]கருமையன் எனவும் முடியும் என்பார் எதிர்மறையும்மை கொடுத்து 'இனையவும்' என்றும், பெயர் விகுதி யோடும் வினைவிகுதியோடும் பதங்களோடும் புணரினும் ஒருவழி இவ் விகாரப்படும் என்பார் பகுதிக்கு என்னாது பொதுமையின் பண்பிற் கியல்பே என்றும் கூறினார்.

பதப் புணர்ச்சிக்கும் ஈண்டுக் கூறல் **ஒப்பின் முடித்தல்** என்னும் உத்தி.

**உ—ம்.:** நல்லன் வல்லன் என்பன ஈற்று விகுதி போயின. கரியன் பெரியன் என்பன ஈற்று விகுதி போய் இடை உகரம் இகரமாயின. பாசி, பாசடை என்பன ஈற்று விகுதி போய் ஆதி நீண்டன. பைங்கண், பைந்தர் என்பன ஈற்று விகுதி போய் இடை உகரம் சகரத்தோடு கெட்டு வருமெழுத்திற்கு இனம் மிகுந்து அடி அகரம் ஐகாரமாயின. வெற்றிலை, நெட்டணை என்பன ஈற்று விகுதி போய்த் தன்னொற்று இரட்டின. சேதா, சேதாம்பல் என்பன, ஈற்று விகுதிபோய் ஆதி நீண்டு முன்னின்ற மகர வொற்றுத் தகரவொற்றாய்த் திரிந்தன.

செம்மை சிறுமை முதலாக விதந்தும், இன்னவும் என அடக்கியும் கூறிய பல்வேறு வகைப்பட்ட பண்பு வாய்ப்பாட்டு விகற்பங்களெல்லாம், பொது விதியானும், ஈறுபோதல் முதலாக வித்ந்தும் இனையவும் என அடக்கியும் கூறிய சிறப்புவிதியானும் விகுதி பதங்களோடு புணர்ந்து அமைந்து கிடந்தமை உயர்த்துணர்ந்து கொள்க.

இங்ஙனம் விதந்து கூறிய விகாரங்கள் அன்பன் அழகன் முதலிய வாய்பாடுகட்கு எய்தாமையானும் செம்மை சிறுமை முதலாக எடுத்துக்காட்டும் மொழிகட்கு எய்தினமையானும் இஃது **எடுத்த மொழியினெய்த வைத்தல்** என்னும் உத்தி.

## கூழங்கைத்தம்பிரான்

**சூ—ம்.**: பண்புப் பதத்திற்குரிய சில விகாரம் எடுத்துரைத்தது.

**இ—ள்.**: **ஈறு போதல்** – பண்புப் பதத்தின் இறுதி கெடுதலும், **இடை யுகர மிய்யாதல்** – இடையிலே நின்ற உகரம் இகரமாதலும், **ஆதி நீடல்** – முதலினின்ற உயிர்கள் நீடலும், **அடி யகர மையாதல்** – முதலினின்ற அகாரம் ஐகாரமாதலும், **தன்னொற் றிரட்டல்** – இடையே தன்னொற்று இரட்டித்தலும், **முன்னின்ற மெய் திரிதல்** – முன்பு நின்ற மெய்யெழுத்துத் திரிதலும், **இனமிகல்** – வருமொழி முதலுக்கு இனவெழுத்து மிகுதலும், **இனையவும்** – இவை போல்வன பிறவும், **பண்பிற்கு இயல்பே** – பண்புப் பதத்துக்கு முறைமை, **எ—று.**

**அருகியவுரை.**: ஈற்றிற் செய்கையை முற்கூறியவதனால் இக்கேடு ஒருதலை அல்ல என்பதூஉம், கெடுவழி ஈற்றுயிர் கெடுதலும் ஈற்றுயிர்மெய் கெடுதலும், ஈற்றுயிர் மெய்யோடு ஈற்றயலுயிர் கெடுதலும், இனவெழுத்து வருமொழிக்கண்ணது என்பதூஉம், கெடுவழி ஈற்றுயிர் இவ்விதி எல்லாம் ஒன்றற்கு அல்ல என்பதூஉம் கொள்க.

**வ—று.**: கரியன், பெரியன், சிறியன், நெடியன் என்பன ஈற்றுயிர் மெய் கெட்டும், உரகம் இகரமாகியும் வந்தன. கருங் குதிரை, செங்கோலம் என்பன ஈற்றுயிரும் ஈற்றுயிர்மெய்யும் முறையே கெட்டன. கார், பேரா, பாசிழை, பாசடை என்பன ஈற்றுயிர் மெய்யும் ஈற்றுயிரும் கெட ஆதி நீண்டன. பைங்கண், பைந்தார் ஈற்றுயிர்மெய்யும், ஈற்றயலுயிரும் கெட்டு அடியில் நின்ற அகரம் ஐகாரமாய் முன்னின்ற மெய் திரிந்தன. வெற்றிலை, சிற்றாடை, குற்றடி, குற்றுயிர், நெட்டிலை, நெட்டெழுத்து என்பன ஈற்றுயிர் மெய்யும் ஈற்றயலுயிரும் கெட்டு இடையே தன்னொற்று இரட்டித்தன. சேதா என்பது ஈற்றுயிர்மெய் கெட்டு முன்னின்ற மெய் திரிந்து ஆதி நீண்டது. செங்கன்று என்பது வருமொழிக்கு இனமான மெல்லெழுத்து மிக்கது. கருங்குதிரை முதலாயின பகுபதம் அல்ல வெனினும் பண்பு அதிகாரப்பட்டமையாற் பதப்புணர்ச்சிக்கும் ஈண்டே சொன்னார் என்க.

## விசாகப் பெருமாளையர்

**இதுவுமது.**

**இ—ள்.**: **ஈறு** – இறுதியிலுள்ள மை விகுதியானது, **போதல்** – கெடுதலும், **இடை** – நடுநின்ற, **உகரம்** – உகரமானது, **இய்யாதல்** – இகரமாதலும், **ஆதி** – முதனின்ற குறிலானது, **நீடல்** – நெடிதலாதலும், **அடியகரம்** – முதனின்ற அகரமானது, **ஐயாதல்** – ஐகாரமாதலும், **தன்னொற்று** – தன்மெய்யானது, **இரட்டல்** – நடுவே மிகுதலும், **முன்னின்ற மெய்** – முன்னின்ற மெய்யானது, **திரிதல்** – வெறொரு மெய்யாதலும், **இனம்** – வருமெழுத்திற்கு இனவெழுத்து, **மிகல்** – மிகுதலும், **இனையவும்** – இவை போல்வன பிறவும், **பண்பிற்கு** – அப் பண்பினுக்கு, **இயல்பு** – இயல்பாகும், **எ—று.**

இவ் விகாரங்கள் பதப் புணர்ச்சிக்குங் கொள்க, இது **"ஒப்பின்முடித்தல்"** என்னு முத்தி.

**உ–ம்.:** நல்லன் – நன்மையின் மை விகுதி கெட்டது, கரியன் – கருமையின் மை விகுதி கெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று, பாசி – பசுமையின் மை விகுதி கெட்டு ஆதி நீண்டது, பைந்தார் – பசுமையின் மை விகுதியும் நடுநின்ற வுயிர் மெய்யுங் கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று, வெற்றிலை – வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற் றிரட்டியது, சேதாம்பல் – செம்மையின் மை விகுதி போய் ஆதி நீண்டு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது, (இவ் விகாரங்கள் அன்பன் – அழகன் முதலிய வாய்பாடுகளுக்கு அடையாமல் செம்மை முதலிய வாய்பாடுகளுக்கே அடைய வைத்தலால் **எடுத்தமொழியி னெய்த வைத்தல்** என்னுமுத்தியாம்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

மைவிகுதியோடு புணர்ந்துநின்ற பண்புப்பெயர்கள் விகுதியோடாயினும் பதத்தோடாயினும் புணருங்கால் எப்படிப் புணரும்?

ஈறுபோத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக வினையவும் பண்பிற் கியல்பே.

(ஈறு போதல் இடைஉகாரம் இ ஆதல்
ஆதி நீடல் அடி அகரம் ஐ ஆதல்
தன் ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனம் மிகல் இனையவும் பண்பிறகு இயல்பு).

**இ–ள்.: ஈறுபோதல்** – இறுதியிலுள்ள எழுத்துக் கெடுதலும், **இடை உகரம் இ ஆதல்** – நடுநின்ற உகரம் இகரமாதலும், ஆதிநீடல் – முதனின்ற அகரம் நெடிலாதலும், **அடி அகரம் ஐ ஆதல்** – முதனின்ற அகரம் ஐகாரமாதலும், **தன் ஒற்று இரட்டல்** – தன்மெய் நடுவே மிகுதலும், **முன் நின்ற மெய் திரிதல்** – முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதலும், **இனம் மிகல்** – வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், **இனையவும் பண்பிற்கு இயல்பு** – இவைபோல்வன பிறவும் அப்பண்பினுக்கு இயல்பாகும், **எ–று.**

**உ–ம்.:** நல்லன் நன்மையின் ஈறு கெட்டது.

கரியன் கருமையின் ஈறு கெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று.

பாசி பசுமையின் ஈறு கெட்டு ஆதிநீண்டது.

பைந்தார் பசுமையின் ஈறு நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டுவருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று.

வெற்றிலை வெறுமையின் மையீறு கெட்டுத் தன்னொற்றிரட்டியது .

சேதாம்பல் செம்மையின் மையீறு போய் ஆதி நீண்டு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

ஈறு போதலுக்கு உதாரணம் யாது?

நல்லன்.

இடையுகரம் இ ஆதலுக்கு உதாரணம் யாது?

கரியன்.

ஆதிநீடலுக்கு உதாரணம் யாது?

பாசி.

அடியகரம் ஐயாதலுக்கு உதாரணம் யாது.

பைந்தார்.

தன்னொற்றிரட்டலுக்கு உதாரணம் யாது?

வெற்றிலை.

முன்னின்றமெய் திரிதலுக்கு உதாரணம் யாது?

சேதாம்பல்.

இனமிகுதலுக்கு உதாரணம் யாது?

பெருங்குணம்.

இனையவுமென்றதனால் வரும் விகாரங்களுக்கு உதாரணம் யாது?

காராடு

மையீற்றுப் பண்புப் பெயர்கள் இயல்பாயும் புணருமோ?

ஆம் – உ–ம். செம்மையன், நன்மையன்.

தொல்லாசிரியர்கள் கருமை முதலியவற்றைப் பண்புப் பெயரென்றும் அவை விகுதியோடு புணரும்போது கருமையன் என்றல்லது கரியன் எனப் புணராவென்றும், கரியன் கரும்பூனை என்பன கருமென்னும் பண்படியாக வந்தனவென்றுங் கூறுவர்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மேற்கூறிய பண்புப் பதங்களுக்கு ஆவதொரு இலக்கண முணர்த்திற்று.

**இ–ள்.: ஈறுபோதல்** – (மேற் சொன்ன பண்புப் பதங்களின்) இறுதி விகுதி நீங்குதலும், **இடை உகரம் இ ஆதல்** – இடையிலே நின்ற உகரம் இகரமாகத் திரிதலும், **ஆதிநீடல்**–முதல் நின்ற குறில் நெடிலாதலும், **அடி அகரம் ஐயாதல்** – முதல் நின்ற அகரம் ஐகாரமாதலும், **தன்னொற்றி ரட்டல்**

– அப் பண்புப் பதத்தினது ஒற்று இரட்டித்து நிற்றலும், **முன்னின்ற மெய் திரிதல்** – முன்னிருந்த மெய் மற்றொரு மெய்யாக விகாரப்படுதலும், **இனமிகல்** – வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், **இனையவும்** – இதைப் போல்வன பிறவும், **பண்பிற்கியல்பு** – அப் பண்புப் பகுபதங்களுக்கு இயற்கையாம், **எ–று.**

இந்த விகாரங்கள் விகுதிப் புணர்ச்சிக்கு அன்றிப் பதப் புணர்ச்சிக்கும் பொருந்து மென்று சொல்ல வந்தவர் பொதுமையிற் ''பண்பிற்கியல்'' பென்றார். பதப் புணர்ச்சிக்கும் இங்கே சொல்லியது **ஒப்பின் முடித்தலென்னும் உத்தி.**

**உ–ம்.:**

நல்லன், வல்லன் இவை, நன்மை – வன்மை என்பன ஈறுகெட்டுப் புணர்ந்தன. சிறியன், பெரியன் இவை, சிறுமை – பெருமை என்பன ஈறுகெட்டு இடைநின்ற உகரம் இகரமாகத் திரிந்தன. பாசி, பாசடை என்பன, பசுமை என்பதில் ஈறுகெட்டு ஆதி நீண்டு முடிந்தன. பைங்கண், பைந்தர் என்பன, பசுமை யென்றதில் இடைநின்ற உயிர்மெய்யும், மை விகுதியுங் கெட்டு, முதல் நின்ற அகரம் ஐகாரமாகி வருமெழுத்திற்கு இனமிகுந்து முடிந்தன. வெற்றிலை, நெட்டிலை என்பன, வெறுமை – நெடுமை என்பதில் மை விகுதி போய் இடையிலே ஒற்றிரட்டித்து நின்றன. சேதாந்த, சேதாம்பல் என்பன, செம்மை என்பதில் ஈறுகெட்டு முதல் நீண்டு முன்னிருந்த மகர ஒற்று தகர ஒற்றாகத் திரிந்து நின்றன. கருங்கோழி நெடுங்காலம் என்பன கருமை – நெடுமைகளில் மை விகுதி கெட்டு வருமெழுத்திற்கு இன மிகுந்து முடிந்தன. பிறவுமிவ்வாறே காண்க. இனி இப்பாண்பு வாய்பாட்டு விகற்பங்களெல்லாம் மேற்சொன்ன பொது விதியாலும் இதிற் சொன்ன சிறப்பு விதியாலும் விகுதி பதங்களோடு புணர்ந்து அமைந்து கிடந்தமை உற்றுணர்ந்து கொள்க. இனி இவ் விகாரங்கள் அன்பன் – அழகன் முதலியவற்றிற்குப் பொருந்தாமையாலும், செம்மை சிறுமை முதலியவாக எடுத்துக்காட்டிய இவற்றிற்கே பொருந்தினமையாலும், இது **எடுத்த மொழியினெய்த வைத்தலென்னும் உத்தி.** இவையும் இவை போல்வனவு மியல்பென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– ஈறு போதல்** – இறுதியிலுள்ள மை விகுதி கெடுதலும், **இடை உகரம் இ ஆதல்** – இடையேநின்ற உகரம் இகரமாதலும், **ஆதி நீடல்**– முதல் நின்ற குறில் நெடிலாதலும், **அடி அகரம் ஐ ஆதல்** – முதல் நின்ற அகரம் ஐகாரமாதலும், **தன் ஒன்று இரட்டல்**– தன்மெய் நடுவே மிகுதலும், **முன் நின்ற மெய் திரிதல்** – முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதலும், **இனம் மிகல்**– (வருமெழுத்திற்கு) இனவெழுத்து மிகுதலும், **இனையவும்** – இவைபோல்வன பிறவும், **பண்பிற்கு இயல்பு** – அப்பண்பினுக்கு இயல்பாகும்.

உ–ம் :– **நல்லன், இன்சொல்** – நன்மை இன்மைகளின் **மை** விகுதி கெட்டது.

**கரியன், சிறியன்** – கருமை சிறுமைகளின் **மை கெட்டு, நடுநின்ற உகரம் இகரமாயிற்று.**

**பாசி, மூதூர்**– பசுமை **மை** விகுதியும், நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து, அடி அகரம் ஐகாரம் ஆயிற்று.

**பைந்தார்**, – பசுமையின் **மை** விகுதியும், நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து, அடி அகரம் ஐகாரம் ஆயிற்று.

**குற்றி, புத்தமுது** – குறுமை புதுமைகளின் **மை** விகுதிகெட்டுத் தன்னொற்றிரட்டியது.

**வெய்யன், சேதாம்பல்** – வெம்மை செம்மைகளின் **மை** விகுதிகெட்டு, ஆதிநீண்டு, முன்நின்ற **ம**கரமெய் முறையே **ய**கர **த**கர மெய்களாகத் திரிந்தது.

குறிப்பு :– இவ்விகாரங்களை அன்பன், அழகன் முதலிய வாய் பாடுகளுக்கு அடையவைக்காமல், செம்மைமுதலிய வாய்பாடுகளுக்கே அடையவைத்தலால் இது **எடுத்த மொழியினெய்த வைத்தல்** என்னும் உத்தி.

'பண்புப்பகுதிக்கு' என்னாமல், 'பண்பிற்கு' என்றதனால், இவ்விகாரங்கள் விகுதிப்புணர்ச்சிக்கு மாத்திரமேயன்றிப் பதப்புணர்ச்சிக்கும் பொருந்துமென்றார் என்க. இது **ஒப்பின் முடித்தல்** என்னும் உத்தி. 'இனையவும்' என்றதனால், 'பைந்தார்' முதலியவற்றில் **பசுமை**யின் இடைநின்ற **சு** கெடுதலும், 'கார்' முதலியவற்றில் **கருமை**யின் இடை நின்ற **உ** கெடுதலும், 'அரும்வலி' முதலியவற்றில் இறுதி ஐ மாத்திரம் கெடுதலுங்கொள்க. இவ்வைகாரக்கேட்டை, 'மையீறு' என்னாது 'ஈறு' எனப் பொதுப்படக் கூறினமையால் அதனுள் அடக்குவாரு முளர்.

இங்கு, 'தன்னொற்று' என்றது உகரமேறிய வல்லொற்றெனக. விகுதி முதலியன புணருங்காலத்து மற்றை விகாரங்களை அடையும்பொழுதெல்லாம் பண்படி மாத்திரமே நிற்கப் பகுதிப்பொருள் விகுதியாகிய **மை** நீங்குமென்பார் 'ஈறுகெடுதல்' என்னாது 'ஈறுபோதல்' என்றார். இன்னும், 'இனையவும்' என்ற உம்மையை எதிர்மறையாக்கி, 'பெருமையன்', 'சிறுமையன்' என இவ்விகாரங்களுள் ஒன்றையும் அடையாமல் இயல்பாய் முடிதலையும் அமைத்துக் கொள்க.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: ஈறு போதல்** – இறுதியிலுள்ள மை விகுதி கெடுதலும், **இடை உரம் இ ஆதல்** – நடுநின்ற உரகம் இகர மாதலும், **ஆதி நீடல்** – முதனின்ற குறில் நெடிலாதலும், **அடி அகரம் ஐ ஆதல்** – முதனின்ற அகரம் ஐகார மாதலும், **தன் ஒற்று இரட்டல்** – தன் மெய் நடுவே மிகுதலும், **முன் நின்ற**

**மெய் திரிதல்**– முன்னிற் மெய் வேறொரு மெய் யாதலும், **இனம் மிகல்** – வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், **இனையவும்** – இவை போல்வன பிறவும், **பண்பிற்கு இயல்பு** – அப் பண்பினுக்கு இயல்பாகும், **எ—று.**

இவ் விகாரங்கள் பதப் புணர்சிக்குங் கொள்க; இது **ஒப்பின் முடித்தலென்னு** முத்தி.

**உ—ம்.:** நல்லன் நன்மையின் மைவிகுதி கெட்டது. கரியன் கருமையின் மை விகுதி கெட்டு நடு நின்ற உகரம் இகரமாயிற்று. பாசி பசுமையின் மை விகுதி கெட்டு ஆதி நீண்டது. பைந்தார் – பசுமையின் மை விகுதியும் நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகார மாயிற்று. வெற்றிலை வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற் றிரட்டியது. சேதாம்பல் செம்மையின் மை விகுதிபோய் ஆதி நீண்டு முன்னின்ற மகரமெய் தகர மெய்யாகத் திரிந்தது.

இவ் விகாரங்கள் அன்பன் அழகன் முதலிய வாய்பாடுகளுக்கு எய்தாது, செம்மை சிறுமை முதலாக எடுத்துக்காட்டிய வாய்பாடுகளுக்கே எய்தவைத்தலால், இது **எடுத்த மொழியினெய்த வைத்தலென்னு** முத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ஈறுபோதல்** – இறுதியிலுள்ள மைவிகுதி கெடுதலு, **இடை உகரம் இ ஆதல்** – நடுநின்ற உகரம் இகராமதலும், – **ஆதி நீடல்** – முதனின்ற குறில் நெடிலாதலும், – **அடி அகரம் ஐ ஆதல்** – முதனின்ற அகரம் ஐகாரமாதலும், – **தன் ஒற்று இரட்டல்** – தன்மெய் நடுவே மிகுதலும், – **முன் நின்ற மெய் திரிதல்** – முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதலும், – **இனம் மிகல்** – வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், – **இனையவும்** – இவைபோல்வன பிறவும், – **பண்பிற்கு இயல்பு** – அப்பண்பினுக்கு இயல்பாகும்.

இவ்விகாரங்கள் பதப்புணர்ச்சிக்குங் கொள்க. இது ஒப்பின் முடித்தலென்னுமுத்தி.

**உ—ம்.** நெடுமை + வழி = நெடுவழி நெடுமையின் மை விகுதி கெட்டது. கருமை+அன்= கரியன் கருமையின் மை விகுதி கெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று. பசுமை+இ=பாசி; பசுமையின் மைவிகுதி கெட்டு ஆதி நீண்டது. (ஆதி நீண்டபின்பு பாசு என்பதில் ஈற்றுகரங்கெட்டது குற்றியலுகரப் புணர்ப்பு விதியினாலென்றறிக.) பசுமை + தார் = பைந்தார் பசுமையின் மை விகுதியும் நடுநின்ற சகரவுயிர்மெய்யுங் கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று. வெறுமை+இலை=வெற்றிலை; வெறுமையின் மைவிகுதி கெட்டுத் தன்னொற்றிரட்டியது. (தன்னொற்றிரட்டினபின் வெற்று என்பதில் உகரங்கெட்டது குற்றியலுகரப்

புணர்ச்சி விதியினாலென்றறிக.) செம்மை + ஆம்பல் = சேதாம்பல்; செம்மையின் மைவிகுதி போய் ஆதிநீண்டு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

இவ்விகாரங்கள் அன்பன், அழகன் முதலிய வாய்பாடுகளில் எய்தாது செம்மை, சிறுமை முதலாக எடுத்துக்காட்டிய வாய்பாடுகளிலே எய்த வைத்தலால் இது எடுத்த மொழியினெய்த வைத்தலென்னுமுத்தி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: ஈறுபோதல்** – இறுதியிலுள்ள மை விகுதி போதலும், **இடை உகரம் இ ஆதல்** – நடுவில் நின்ற உகரம் இகரமாதலும், **ஆதி நீடல்** – முதலில் நின்ற குறில் நெடிலாதலும், **அடி அகரம் ஐ ஆதல்** – முதலில் நின்ற அகரம் ஐகாரமாதலும், **தன் ஒற்று இரட்டல்** – தன் (பண்புப் பகுதியின்) மெய் நடுவே மிகுதலும், **முன் நின்ற மெய் திரிதல்** – மை விகுதிக்கு முன்னே நின்ற மெய் வேறொரு மெய்யாதலும், **இனம் மிகல்** – (வருகின்ற வல்லெழுத்துக்கு) இனமான மெல்லெழுத்து மிகுதலும், **இனையவும்** – இவை போல்வன பிறவும், **பண்பிற்கு இயல்பு** – அப் பண்புச் சொற்களுக்கு இயற்கையாம், **எ–று.**

இவ் விகாரங்கள் விகுதிப் புணர்ச்சிக்கு மாத்திரமன்றிப் பதப்புணர்ச்சிக்கும் பொருந்து மென அறிவித்தற்கு; 'பண்புப்பகுதிக்கு' என்னாமல் பொதுப்பட 'பண்பிற்கு' என்றார். பண்பு அதிகாரப்பட்டமையால், பதப்புணர்ச்சிக்கும் இங்கேயே சொன்னாரென்க. இது, **ஒப்பின்முடித்தல்** என்னும் உத்தி.

**உ–ம்.: நல்லன், சிறுபொருள்** – நன்மை சிறுமை என்பவற்றின் மை விகுதி போயிற்று. **கரியன், சிறியிலை** – கருமை சிறுமை என்பவற்றின் மை விகுதி போய் உகரம் இகரமாயிற்று, **பாசி, மூதூர்** – பசுமை முதுமை என்பவற்றின் மை விகுதி போய் ஆதி நீண்டது. **பைந்தார்** – பசுமை என்பதன் மை விகுதிபோய் (நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு) முதலிலிருந்த அகரம் ஐகாரமாகி வருமெழுத்திற்கு இனவெழுத்து மிக்கது. **குற்றி, நட்டாறு** – குறுமை நடுமை என்பவற்றின் மை விகுதி போய்த் தன் ஒற்று இரட்டியது. **செய்யன், வெவ்வுயிர்** – செம்மை வெம்மை என்பவற்றின் மை விகுதி போய் முன் நின்ற மகரமெய் திரிந்தது.

இவை போல்வன பிறவாவன – பைந்தார் என்பதில் பசுமையின் இடை நின்ற 'சு' என்னும் உயிர்மெய் கெடுதலும், கார் பார் என்பவற்றில் கருமை பருமைகளின் இடைநின்ற உகரம் கெடுதலும், இன்சொல் என்பதில் இனிமையின் இடைநின்ற இகரம் கெடுதலும், பழைய என்பதில் பழமையின் இடை அகரம் ஐகாரமாதலும், தூமலர் என்பதில் தூய்மையின் இடையொற்றுக் கெடுதலும், துய்ய என்பதில் தூய்மையின் முதல் குறுகுதலும், அரும்வலி பெரும்வளம் முதலிய இடங்களில் அருமை பெருமை என்பவற்றின் இறுதி ஐகாரம் மாத்திரம் கெடுதலும் முதலியன.

இவ் விகாரங்களை அன்பு அழகு முதலிய பண்பு வாய்பாடுகட்கு அடையாமல், எடுத்துக்காட்டிய செம்மை முதலிய மையீற்றுப் பண்பு வாய்பாடுகட்கே அடைய வைத்தலால், இது, **எடுத்த மொழியி னெய்த வைத்தல்** என்னும் உத்தி. (எடுத்த மொழியின் எய்தவைத்தல் – தான் எடுத்துக்காட்டிய இலக்கியத்தில் தான் சொல்லும் இலக்கணத்தைப் பொருந்தி யிருக்க வைத்தல்).

மற்றை விகாரங்களை அடையும்போதெல்லாம் 'ஈறுபோதல்' கொள்க. ஆனது பற்றியே, அது முற்கூறப்பட்டது. 'இனையவும்' என்ற உம்மையை எதிர்மறையாக வைத்து, செம்மையன் கருமையன் என இவ் விகாரங்களுள் ஒன்றையும் பெறாமல் இயல்பாய் முடிதலையும் அமைத்துக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ஈறு போதல் – இறுதியிலுள்ள மை விகுதி கெடுதலும், இடை உகரம் இ ஆதல் – நடுநின்ற உகரம் இகரமாதலும், ஆதி நீடல் – முதனின்ற குறில் நெடிலாதலும், அடி அகரம் ஐ ஆதல் – முதனின்ற அகரம் ஐகாரமாதலும், தன் ஒற்று இரட்டல் – தன் மெய் நடுவே மிகுதலும், முன் நின்ற மெய் திரிதல் – முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதலும், இனம் மிகல் – வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், இனையவும் – இவை போல்வன பிறவும், பண்பிற்கு இயல்பு – அப்பண்பினுக்கு இயல்பாகும். எ–று.

'பண்புப் பகுதிக்கு' என்னாமல் பொதுப்பட பண்பிற்கு என்றதனால், இவ்விகாரங்கள் விகுதிப் புணர்ச்சிக்கு மாத்திரமேயன்றிப் பதப்புணர்ச்சிக்குங் கொள்க; இது 'ஒப்பின் முடித்தல்' என்னும் உத்தி.

உ–ம். நல்லன் – நன்மையின் மை விகுதி கெட்டது. கரியன் – கருமையின் மை விகுதி கெட்டு, நடு நின்ற உகரம் இகரமாயிற்று. பாசி – பசுமையின் மை விகுதி கெட்டு, நடுநின்ற உகரம் இகரமாகிய ஆதி நீண்டது. பைந்தார் – பசுமையின் மை விகுதியும் நடுநின்ற உயிர்மெய்யுங் கெட்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து, முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று. வெற்றிலை – வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற்றிரட்டியது. சேதாம்பல் – செம்மையின் மை விகுதி போய், ஆதி நீண்டு, முன்னின்ற மகரமெய த்கர மெய்யாகத் திரிந்தது.

இவ்விகாரங்கள் அன்பன் அழகன் முதலியவற்றிற்கு எய்தாது செம்மை சிறுமை முதலியவாக எடுத்துக்காட்டிய இவற்றிற்கே எய்த வைத்தலால், இது 'எடுத்த மொழியின் எய்தவைத்தல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ஈறுபோதல்–இறுதியிலுள்ள மை விகுதி யானது கெடுதலும், இடை உகரம் இ ஆதல்–நடுநின்ற உகரமானது இகர மாதலும், ஆதி நீடல்–முதலில் நின்ற குறிலானது நெடிலாதலும், அடி அகரம் ஐ ஆதல்–முதலில் நின்ற அகரமானது ஐ காரம் ஆதலும், தன் ஒற்று இரட்டல்–தன் மெய்யானது

நடுவே மிகுதலும், முன்நின்ற மெய்திரிதல்—முன்னின்ற மெய்யானது வேறொரு மெய்யாதலும், இளம் மிகல்— (வருமெழுத்திற்கு) இன வெழுத்து மிகுதலும், இனையவும்—இவைபோல்வன பிறவும், பண்பிற்கு இயல்பு—அப் பண்பினுக்கு இயல்பாகும் எ—று.

**பொ—ரை.:** செம்மை சிறுமை முதலிய வாய்பாடுகளின் இறுதியிலுள்ள மை விகுதி கெடுதலும், நடுவில் நின்ற உகரமானது, இகரம் ஆதலும், முதலில் நின்ற குறில் நெடில் ஆதலும், முதலில் நின்ற அகரமானது ஐகாரம் ஆதலும், தன் மெய் நடுவில் மிகுதலும், முன்னின்றமெய் வேறொரு மெய்யாகத் திரிதலும், வரும் எழுத்திற்கு இன எழுத்து மிகுதலும், இவை போன்ற வேறு வகை விகாரமும் அப் பண்பிற்கு இயல்பாம்.

இவ் விகாரங்கள் விகுதிப்புணர்ச்சிக்கு மாத்திர மன்றிப் பதப்புணர்ச்சிக்கும் பொருந்து மென அறிவித்தற்குப் 'பண்புப் பகுதிக்கு' என்னாமல் பொதுப்படப், 'பண்பிற்கு' என்றார். இஃது ஒப்பின் முடித்தலென்னும் உத்தி. (ஒப்பின் முடித்தல்—ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்து வருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக முடிவு செய்தல்; அதாவது பதத்திற்குக் கூறிய இலக்கணத்தைப் பைந்தார் முதலிய பதப்புணர்ச்சிக்கு முடித்தல்.)

(உ—ம்) நல்லன்—நன்மையின் மை விகுதி கெட்டது.

கரியன் – கருமையின் மை விகுதி கெட்டு நடு நின்ற உகரம் இகரமாயிற்று.

பாசி – பசுமையின் மை விகுதி கெட்டு ஆதி நீண்டது. (பசுமை+இ).

பைந்தார் – பசுமையின் மை விகுதியும், நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு, வருமெழுத்திற்கு இன வெழுத்து மிகுந்து முதலிருந்த அகரம் ஐகரமாயிற்று.

வெற்றிலை – வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற்றிரட்டியது.

சேதாம்பல்—செம்மையின் மை விகுதி போய் ஆதி நீண்டு முன்னின்ற மகர மெய் தகர மெய்யாகத்திர்ந்தது.

இயற்றுள் நல்லன் முதல் பாசி என்பதுகாறும் விகுதிப் புணர்ச்சியும், பைந்தார்முதல் சேதாம்பல் காறும் பதம்புணர்ச்சியும் என அறிக.

இவைபோல்வன பிறவாவன:– பைந்தார் என்பதில் பசுமையின் இடைநின்ற 'சு' என்னும் உயிர்மெய் கெடுதலும், கார், பார் என்பவற்றில் கருமை பருமைகளின் இடைநின்ற உகரம் நெடுதலும், இன்சொல் என்பதில் இனிமையின் இடைநின்ற இகரம் கெடுதலும், பழைய என்பதில் பழமையின்

இடை அகரம் ஐகாரமாதலும், தூமலர் என்பதில் தூய்மையின் இடை யொற்றுக் கெடுதலும், துய்ய என்பதில் தூய்மையின் முதல் குறுகுதலும், ஆரும் வலி பெரும் வளம் முதலிய இடங்களில் அருமை பெருமை என்பவற்றின் இறுதி ஐகாரமாத்திரம் கெடுதலும் முதலியன.

இவ் விகாரங்கள் அன்பு அழகு முதலிய வாய்பாடுகளுக்கு அடையாமல் செம்மை முதலிய வாய்பாடுகளுக்கே அடைய வைத்தலால், இது எடுத்த மொழியினெய்த வைத்தல் என்னும் உத்தியாம். (எடுத்த மொழியின் எய்தவைத்தல்–தான் கூறிய இவ் விலக்கணத்தைத் தானெடுத்துக் காட்டிய செம்மை முதலிய இலக்கியங்களுக்கு அடைய வைத்தல்.)

மற்றைய விகாரங்களை அடையயும்போ தெல்லாம் ஈறு போதல்கொள்க; ஆனது பற்றியே அது முற்கூறப்பட்டது.

'இனையவும்' என்ற உம்மையை எதிர் மறையாக வைத்து, செம்மையன், அருமையன் என இவ் விகாரங்களுள் ஒன்றையும் பெறாமல் இயல்பாய் முடிதலையும் அமைத்துக் கொள்க.

## கா. நமசிவாய முதலியார்

**ஈறு** – இறுதியிலுள்ள மை விகுதியானது, **போதல்** – கெடுதலும், **இடை** – நடுநின்ற, **உகரம்** – உகரமானது, **இ ஆதல்** – இகரமாதலும், **ஆதி** – முதலில் நின்ற குறிலானது, **நீடல்** – நெடிலாதலும், **அடி அகரம்** – முதலில் நின்ற அகர மானது, **ஐ ஆதல்** – ஐகாரமாதலும், **தன்ஒற்று** – தன் மெய் யானது, **இரட்டல்** – நடுவே இரட்டித்து வருதலும், **முன்னின்ற மெய்** – முன்னின்ற மெய்யானது, **திரிதல்** – வேறொரு மெய்யாதலும், **இனம்** – வரும் எழுத்திற்கு இனவெழுத்து, **மிகல்** – மிகுதலும், **இனையவும்** – இவைபோல்வன பிறவும், **பண்பிற்கு** – அப் பண்பினுக்கு, **இயல்பு** – இயல்பாகும்.

இவ்விகாரங்களைப் பதப்புணர்ச்சிக்குங் கொள்க. இஃது ஒப்பின் **முடித்தல்** என்னும் உத்தி.

**உதாரணம்**

**ஈறு போதல் :**

சிறுவன் (சிறுமை + அன்) – சிறுமை என்பதில் மை கெட்டது;

**இடையுகரம் இ ஆதல் :**

கரியன் (கருமை + அன்) – கருமை என்பதில் மை கெட்டு, நடுநின்ற உகரம் இகரமாயிற்று ;

**ஆதி நீடல் :**

பாசி (பசுமை + இ) – பசுமை என்பதில் மை கெட்டு, ஆதி நீண்டது;

**அடி அகரம் ஐ ஆதல் :**

பைந்தார் (பசுமை + தார்) – பசுமை என்பதில் மையும் நடு நின்ற உயிர் மெய்யுங் கெட்டு, வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து, முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று :

**தன் ஒற்று இரட்டல் :**

வெற்றிலை (வெறுமை + இலை) – வெறுமை என்பதில் மை கெட்டுத் தன் ஒன்று இரட்டியது ;

**முன் நின்ற மெய் திரிதல் :**

சேதாம்பல் (செம்மை + ஆம்பல்) – செம்மை என்பதில் மை கெட்டு ஆதி நீண்டு, முன் நின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது ;

**இனமிகல் :**

பழந்துணி (பழமை + துணி) – பழமை என்பதில் மை கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்தது.

'**இனையவும்**' என்றதனால், பைந்தார் என்புழி, (பசுமை + தார்) – பசுமை என்பதில் இடை நின்ற சு கெடுதலும், கார், பார் என்புழி கருமை பருமை என்பவைகளின் இடைநின்ற உகரம் கெடுதலும் இவைபோல்வன பிறவும் உண்டென்று கொள்க.

பண்புப் பெயர்கள் இவ்விகாரங்களைப் பெறாமல் செம்மையன், கருமையன் என இயல்பாகப் புணர்தலுங் கொள்க.

இவ்விகாரங்கள், அன்பு அழகு முதலிய பண்புச் சொற்களுக்கு அடையாமல், செம்மை முதலிய வாய்பாடுகளுக்கே அடையவைத்தலால் இஃது **எடுத்த மொழியின் எய்தவைத்தல்** என்னும் உத்தியாம்.

## மோசசு பொன்னையா

இறுதிக்கண் நின்ற மை விகுதி நீங்குதலும், இடையிலே நின்ற உகரம் இகரமாகத் திரிதலும், முதலில் நின்ற அகரம் ஐகாரமாகத் திரிதலும், பண்புப் பகுதியின் ஒற்று மிகுதலும், மை விகுதியின் முன்னே நின்ற மெய் திரிதலும், வருமொழி முதலெழுத்திற்கு இன எழுத்து மிகுதலும், இவை போல்வன பிறவும் முன்னர்ச் சொல்லப்பட்ட பண்புப் பகுதிகளுக்கு இயல்பாகும், **எ–று.**

**எ–டு.**

புதுவன், நுண்பொருள் – மை விகுதி போயிற்று.

கரியன், சிறியிலை – மை விகுதி போய் உகரம் இகரமாயிற்று.

பாசி, மூதூர் – மை விகுதி போய் ஆதி நீண்டது.

பைந்தார் – மை விகுதி போய் (நடுநின்ற உயிர்மெய்யுங்கெட்டு) முதல்

அகரம் ஐகாரமாகி வருமெழுத்திற்கு இனவெழுத்து மிக்கது.

குற்றி, நட்டாறு – மை விகுதி போய், தன் ஒற்று இரட்டித்தது.

செய்யன், வெவ்வுயிர் – மை விகுதி போய், முன் நின்ற மகரமெய் திரிந்தது.

பகுதி அதிகாரப்பட்டமையின் பகுதிப் பொருளாக மை விகுதியைப் பெற்றுவரும் எனத் தாம் கொண்ட பண்புப் பெயர்களையும் உடன் எடுத்தோதி, அவை விகுதிகளோடும், பிற சொற்களோடும் புணருங்கால் எய்தும் மாற்றங்களையும் ஈண்டே எடுத்துக் கூறி இலக்கணஞ் செய்தார். பதவியல் என்ற இயல்படைப்பும், பகுதி, இடைநிலை, விகுதி முதலிய பகுபதவுறுப்புக்களின் படைப்பும் பிறவும் புதுமையாக இவ்வாசிரியரால் அமைத்துக் கொள்ளப்பட்டதேபோல், மையீற்றுப் பண்புப் பெயர்ப் புணர்ச்சி கூறிய முறையும் புதுமையாகவே அமைந்துள்ளது.

மை விகுதி போன்றே வரும்விகுதிகள் ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்பனவும் உண்டு . அவை புணர்ந்து ஆகும் தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர் என்ற சொற்களும் அவை போல்வனவும் பொருள் நிலையால் மையீற்றுப் பண்புப்பதங்கள் போன்றே வழங்கும். பன்னீரு வகையாகக் கூறும் எழுத்திலக்கணத்தில் புணர்ப்பு என்பதே சொற்களின் புணர்ச்சி பற்றிய இலக்கணமெல்லாங் கொள்வதற் கேற்புடையதாதலின், பண்புப் புணர்ச்சியையும் ஆண்டே அடக்கிக் கூறல் ஏற்புடையதாம். அன்றி, இவ்வாசிரியர் தோன்றல், திரிதல், கெடுதல் என்ற மூன்று வகையாக அமைந்த விகாரப் புணர்ச்சியுள், பண்புப் பதப் புணர்ச்சி அடங்காது எனக் கருதி அதனினும் வேறாகக் கூறுவாராய்ப் பதவியலுள் அதற்குத் தனி இலக்கணம் வகுத்தார் எனின், அதுவும் பொருந்தாது. மூவகை விகாரம் புணர்ப்புப் புணர்ச்சி பற்றி முற்றக் கூறப் போதாவெனின், தொன்னூல் விளக்க ஆசிரியரைப்போல், ‘திரிபழிவாக்கந், திரட்டுநால் விகாரம்’ என விகாரத்தை நான்காக்கித் திரட்டின்பால் இதனையும், இதனைப் போலவே அடங்காது நிற்கும் வேணவா, தொண்ணூறு, தொள்ளாயிரம் முதலிய முடிவுகளையும் அடக்கிக் கூறியிருப்பின், புதுமை எனப் போற்றப் படற்குரித்தாகும். இவண் தனி இலக்கணம் வகுத்தும், பைந்தார், கார்மேகம், பழைய, தூமலர், அரும்வலி, செம்மையன் முதலியவற்றின் புணர்ச்சி இலக்கணத்தையும் அடக்கிக் கொள்ளாக் குறை விதியாகவே இதனை அமைத்து, அவற்றின் முடிபுகளை இலேசான் அமைக்குமாறு விட்டு வைத்தார் இவ்வாசிரியர். தொல்காப்பியர், இவ்வெல்லாம் அடக்கி, அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய புணரியல் நிலையிடை உணரத் தோன்றா என்று புறனடை அமைத்தமை இவண் நோக்கத்தக்கது.

**136.** நடவா மடிசீ விடுகூ ஏவை
[1]நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே[2] ளஃகென்
இருபான் மூன்றா மீற்ற வாய
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

நட வா மடி சீ விடு கூ ஏவை
நொப் போ வெள உரி ஞுண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்
இருபான் மூன்றாம் ஈற்று ஆய
செய் என் ஏவல் வினைப்பகாப் பதமே.

nata vā mati sī vitu kū vē vai
nop pō vau uriñ uṇ porun ṭirum ṭin
ṭēy pār sel vav vāḷ kēḻ akhku enṟu eyṭiya
irupān mūnṟām īṟṟavum
sey en ēval vinaip pakāppaṭamē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Rules of the imperatives

All verbs of the forms *nada, va, madi,*&c.—ending in the twenty three different finals, are the Roots of the Imperative as well as all other forms of Verbs.

ஒப்புமைப் பகுதி

நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்று
இன்னவை முதல எல்லா வினையும்
தெரிநிலை வினையின் முதலிலை ஆகும்.

(இ.வி.:43)

---

பாட வேறுபாடு.:- 1. நொ போ

2. (1) அஃகென் றெய்திய விருபான் மூன்றா மீற்றவும், (2) அஃகெ னிருபான் மூன்றா மீற்றவும் பிறவும், (3) அஃகெனிரு பான் மூன்று மீற்றவாய

**புல்லும் நடவாமடி சீவிடுகூவே வைநொப்**
**போவெளவொடு எய்உரிஞ்உண் பொருந்திருந் தின்தேய் பார்**
**செல்வவ்வாழ் கேள் அஃகிருபான் மூன்று ஈற்றிற்**
**சேர்ந்த முதனிலை யீண்டு தெரிநிலையின் வினைக்கே**
**சொல்பகுதி......**

**(சுவாமி.:24:1–3)**

## மயிலைநாதர்

**எ–ன்,** வினைப்பகாபதம் விளங்கித் தோன்றாமையின், அவற்றை எடுத்துணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** இச் சொல்லப்பட்ட இருபத்து மூன்று ஈற்றவாய ஏவல் வாய்பாட்டான் வருவன வெல்லாம் செய்யென்னும் ஏவல்வினைப் பகாப்பதமாம், **எ–று.**

**வ–று.:** நடந்தான், வந்தான், மடிந்தான், [1]சீத்தான், விட்டான், கூவினான், ஏவினான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் என வரும்.

குற்றுகரத்தை வேறு பிரித்தோதிய வதனால், போக்கு, பாய்ச்சு, [2]உருட்டு, நடத்து, எழுப்பு, தீற்று என்றற் றொடக்கத்து வாய்பாட்டால் வருவனவும் அல்லா ஈறுகளான்வரும் வாய்பாடுகளுள்ளனவும் செய்யெ னேவலில் அடங்குமெனக் கொள்க.

நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும்; நடக்கின்றான், நடக்கின்றாள், நடக்கின்றார், நடக்கின்றது, நடக்கின்றன, நடக்கின்றேன், நடக்கின்றேம், நடக்கின்றாய், நடக்கின்றீர் எனவும்; நடப்பான், நடப்பாள், நடப்பார், நடப்பது, நடப்பன, நடப்பேன், நடப்பேம், நடப்பாய், நடப்பீர் எனவும் இவ்வாறே எல்லாத் திணை பாலிடம் காலங்கள் தோறும் ஒட்டிக் கொள்க.

## சங்கரநமச்சிவாயர்

## சிவஞானமுனிவர்

**எ–னின்,** தெரிநிலை வினைப்பகுதிக்கு எய்தியதன்மேல் சிறப்பு விதி உணர் – ற்று.

---

பாட வேறுபாடு.:–

1. **சிய்த்தான்**
2. **ஊட்டு.**

**இ—ள்.:** நட வா மடி சீ விடு கூ ஏ வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று முதல்நிலையாய் எய்திக் கிடந்த இவ் விருபத்து மூன்றாகும் உயிரும் ஒற்றும் குற்றுகரமுமாகிய ஈற்றினை உடைய இத் தொடக்கத்து வாய்பாடுகள் எல்லாம், செய் யென்னும் ஏவலினது பகாப் பதமாகிய பகுதியும் ஏனை வினையினது பகாப்பதமாகிய பகுதியுமாம், **எ—று.**

இத் தொடக்கத்து வாய்பாடுகள் என்பார் அஃகாம் என்னாது 'அஃகென்று' எனவும் 'ஈற்றவும்' எனவும், ஏகர வுயிர் வினாவிடைச் சொற்கண்ணும் தன் பெயர்க்கண்ணும் அன்றிப் பிறவழி ஈறாகாமையின் அஃதொழிந்தவை ஈண்டைக்கு ஆம் என்பார் 'ஆமீற்ற' எனவும், **விகற்பத்தின் முடித்தல்** என்னும் உத்தியான் இருபத்து மூன்று ஈற்றவாக விகற்பித்தெடுத்துக் காட்டும் வாய்பாடுகள் முதலிய எல்லாம் இப் பொது வாய்பாட்டின் அடங்கும் என்பார் **முடிந்தது முடித்தல்** என்னும் உத்தியால் 'செய்' எனவும் கூறினார்.

**இரட்டுறமொழிதல்** என்னும் உத்தியான் எடுத்துக் கொண்ட ★*முன்னிலை யொன்றற்கே உரிய ஏவலினது பகுதிப் பொருளும் ஏனை வினையினது பகுதிப்பொருளும்*★ தந்து நிற்கும் நட வா முதலிய வாய்பாடுகளை எண்ணித் தொகுத்த இருபான் மூன்றாமீற்ற என்னும் தொகை, செய்யெனேவல் பகாப்பதம் என்னும் பயனிலையோடும், செய்யென் வினைப் பகாப்பதம் என்னும் பயனிலையோடும் தனித்தனி முடிந்தன.

★*செய்யென் வினைப் பகாப்பதம் என்ற துணையானே செய்யெனேவற் பகாப்பதமும் அடங்காதோ வேறு கூறவேண்டியது என்னை யெனின், நட வா உண் தின் என்றற் றொடக்கத்து முதல் நிலைகளே விகுதியோடு புணராது தனித்துநின்று ஓசை வேறுபாட்டான் முன்னிலை யேவலொருமை யெதிர்கால வினைமுற்றுப் பொருண்மை உணர்த்தினவோ விகுதியோடு புணர்ந்து நின்றே அப் பொருண்மை உணர்த்தினவோ என்று ஐயுறுவார்க்கு ஐயமறுத்தற்குக் கூறியதென உணர்க.*

*ஏவற் பகுதிக்கு உதாரணம்: நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எனவும்; நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் எனவும் வரும். இனி, ஆசிரியர் தொல்காப்பியனார்,*

*[1]"செய்யா வென்னும் முன்னிலை வினைச்சொல்*
*செய்யென் கிளவி யாகிடன் உடைத்தே"*

*எனக் கூறியவாற்றான், ஆய் என்னும் விகுதி குன்றி நட வா உண் தின் அஃகு எனவும் நிற்குமென உணர்க. நிற்பினும், விகுதியோடு புணர்ந்தனவே யாம். அஃது அச் சூத்திரத்தில் சேனாவரையர் கடா விடைகளான் விளங்கக் கூறியவாற்றானும் அறிக. இனி, இவ்வாறு ஏவற்பொருள் உணர்த்தாது முதனிலைத் தனிவினைப்பொருள் உணர்த்தி நிற்பின் பகாப்பதம் என்று கொள்ளப்படும். இது பற்றியன்றே*

*[2]முன்னரே வினைப் பகாப்பதத்திற்கு உதாரணம் காட்டியதூஉம் என்க. இன்னும், அச் சூத்திரத்து மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான் விகுதி புணர்ந்து கெட்டு நிற்கும் சொற்கள் பல உள; அவையெல்லாம் பத முடிப்புழிக் காண்க★.*

ஏனை வினைப்பகுதிக்கு உதாரணம்: நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினான், ஏவினான், வைத்தான், நொந்தான், போயினான், வௌவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் எனவும்; கிடந்தான், கண்டான் எனவும்; ஏகினான், குறுகினான், கட்டினான், பொருந்தினான், எய்தினான் எனவும் வரும். பிறவும் அன்ன. இவற்றுள் பகுதி முதல்நிலையாய் எய்திக் கிடந்தமை காண்க.

*★இனி, இச் சூத்திரத்தில் செய்யெ னேவல் வினைப் பகாப்பதம் என்பதற்கு, இவ்வாறு பொருள் கூறாது, ஆற்றொழுக்காகச் செய்யெ னேவல் வினைப் பாகப்பதமே வினை வினைப்பெயர்கட் கெல்லாம் முதனிலை எனப் பொருள் கூறுவாரும் உளர்.*

*1 "அடியேனுன்*
*அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்"*

*2 "எந்தாய் இனித்தான் இரங்காயே"*

*3 "மருங்கே சார்ந்து வரவெங்கள்*
*வாழ்வே வாவென்றருளாயே"*

*4 "நரிப்பாய் நாயேன் இருப்பேனா*
*நம்பி இனித்தான் நல்காயே"*

*5 "கீதமினிய குயிலே ... அந்தமிலான் வரக்கூவாய்"*

*என்றற் றொடக்கத்தனவாய திணை பால் இடம் காலங்காட்டும் விகுதி உறுப்போடு கூடி முற்றி நிற்கும் முன்னிலை யேவல் ஒருமை யெதிர்கால வினைமுற்றுப் பகுபதங்களைப் பகாப்பதம் என்றல் கூடாமையே யன்றித் 'தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும்' என்னும் பொதுச் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலாமாதலின் அது பொருளன்றெனெ மறுக்க.*

*இங்ஙனம் முதனிலை புடைபெயர்தலே வினையாதலின், எல்லா வினைச்சொற்களும் பிறத்தற்கு மூலமாகிய பொது முதனிலைத் தனி வினைப்பெயர் என்றே கொள்க. அதனைப் படுத்தலோசையால் கூறிக் காண்க. எல்லா வினைச்சொற்களாவன திணை பால் இடம் காலம் விதி மறை பொதுச் சிறப்பாதி யோடும் கூடிய முற்றெச்சங்களும் தொழிற் பெயர்களும் என்க.★*

கையறியா மாக்கட்கன்றி நூல் இயற்றும் அறிவினையுடைய மக்கட்குப்

பல்கலைக்குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான், **உலகமலையாமை யுள்ளிட்ட பத்தழகோடும்** பிறந்து நின்றது இச்சூத்திரம் என்று உணர்க.

வடநூல் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதம் எனக் காரணக்குறி தாமே தந்து, அவற்றை நல்விருந்தென்ன நாவலர் பயில 'எழுத்தே தனித்தும்' என்னும் சூத்திரம் முதல் இச் சூத்திரம் ஈறாகப் பகாப்பதம் பகுபதம் எனப் பல்காற் கூறுதல் **தன்குறி வழக்கம் மிக வெடுத் துரைத்தல்** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** வினைப் பகாப்பதம் விளங்கித் தோன்றாமையின் அவற்றை எடுத்து விரித்துரைத்தது.

**இ—ள்.: நட ... அஃகு என்றெய்திய** – நட ... அஃகு என்று சொல்லப்பட்ட, **இருபான் மூன்றாம் ஈற்றவும்** – இருபத்து மூன்று ஈற்றவாய ஏவல் வாய்பாட்டான் வருவனவெல்லாம், **செய்யென் ஏவல்** – செய்யென்னும் விரவுத்திணை முன்னிலை ஒருமை ஏவல் வாய்பாடு போன்ற, **வினைப் பகாப்பதமே** – தெரிநிலை வினைப் பகாப்பதம், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

**இது**, தெரிநிலை வினைப்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

**இ—ள்.: நட ... அஃகென்று** – நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, **எய்திய** – முதனிலையாகப் பொருந்திய, **இருபான் மூன்றாம்** – இருபத்து மூன்றாகும், **ஈற்றவும்**– உயிருமெய்யுங் குற்றியலுகரமாகிய வீற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம், **செய்யென்** – செய்யென்கின்ற, **ஏவல்** – ஏவலினது, **பகாப்பதம்** – பகாப்பதமாகிய பகுதியும், **வினை** – மற்றை வினைகளுக்கு, **பகாப்பதம்** – பகாப்பதங்களாகிய பகுதியும், **ஆம் – எ—று.**

**விகற்பத்தின் முடித்தல்** என்னு முத்தியல் இருபத்து மூன் றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப் பொதுவாய்பாட்டி லடங்கு மென்பார் **முடிந்தது முடித்தல்** என்னு முத்தியால் "செய்" யெனவுங் கூறினார், **"செய்யென் வினைப் பகாப்பதமும்"** என்றவளவிலே செய்யனேவற் பகாப்பதமும் அடங்குமாயினும் முதனிலைகளே ஏவற்பொருளுணர்த்தாமல் ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்ந்துமென் றறிவித்தற்கு வேறு கூறினார். அம் முன்னிலை யேவலொருமை யெதிர்கால வினைமுற்றிற்கு வரும். ஆய் விகுதி குன்றியும் வரும். இதுபோலவே விகுதி புணர்ந்து கெட்டு நிற்குஞ் சொற்கள் இன்னும்

பலவுண்டு. அவை யெல்லாம் பகுபத முடிக்கும்போது காண்பிக்கப்படும். **ஏவற் பகுதிக்கு உதாரணம்** நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் என்வும், நட, வா, உண், தின், அஃகு எனவும் வரும். மற்றை வினைப்பகுதிக்கு உதாரணம், நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் என வரும். இந் நூலாசிரியர் வடநூன் மேற்கோளாக ஒரு மொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமே இட்டு ''எழுத்தே'' என்னுஞ் சூத்திர முதல் இதுவரைக்கும் பகாப்பதம் பகுபதமெனப் பலதரஞ் சொல்லுதல் **தன்குறி வழக்க மிகவெடுத்துரைத்தல்** என்னு முத்தி.

இத் தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான் – உண்டான் எனச் சில இயல்பாதலல்லாமலும், செல் – சேறல் என முதனீண்டும், தா – தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா – செத்தான் என முதல் ஆகாரம் ஏகாரமாகியும், கொணா கொணர்ந்தான் என முதலய லெழுத்துக் குறுகி, ரகரமெய் விரிந்தும், விரவு – விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு – முழுகினான்– மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா – வருகிறான் எனத் தனிநெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல் – கற்றான் என வீற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல் – சென்றான் என வீற்று மெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும், இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும். கா – சா– தா – இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும், கல் – நில் – புல்– சொல் – இவை கற்றான், நின்றான்– புல்லினான், சொன்னான் எனவும், ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால் அவையெல்லாம் தனித் தனிச் சொல்லப்புகுந்தால் விரியுமாதலால் செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக் கொள்க. தெரிநிலை வினைகள் நட, வா – முதலாகிய முதனிலை வினைப் பகுதிகளி லிருந்தல்லாமலும் சிறுபான்மை கடைக்கண் – கடைக்கணித்தான், சித்தரம் – சித்திரித்தான் எனப் பெயர்ச் சொற்களிலிருந்தும், போல் – பொன் போன்றான், நிகர் – புலி நிகர்த்தான் என விடைச் சொற்களிலிருந்தும், மால் – மாலும், சால் – சான்றான், செம்மை – சேர்ந்தான், சிறுமை – சிறுத்தான் என வுரிச்சொற்களிலிருந்தும் பிறக்கும்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

தெரிநிலை வினைப் பகுபதங்கட்கு எவை பகுதிகளாய் வரும்?

நடவா மடி சீ விடுகூ வே வை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்றா மீற்றவுஞ்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

(நட வா மடி சீ விடு கூ வே வை
நொட்போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று
எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்
செய் என் ஏவல் வினைப்பகாப் பதமே.)

**இ—ள்.: நட .. அஃகு என்று எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்** – நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல்வவ் வாழ் கேள் அஃகு என்று முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்று ஈற்றையுடைய வாய்பாடுகளெல்லாம், செய் என் ஏவல் வினைப்பகாப்பதமே – செய்யென்னும் வாய்பாட்டு ஏவல் வினைப் பகுதியாம், **எ—று**.

செய்யென் ஏவல் வினைப்பகாப்பதம் என்றவளவிலே செய்யெனேவற் பகாப்பதமும் அடங்குமாயினும் வா முதலிய முதனிலைகள் தாமே ஏவற் பொருளுணர்த்தாது ஆய்விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென், ரறிவித்தற்கு வேறு கூறினார்.

ஏவற்பகுதிக்கு உதாரணம். நடவாய். வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எனவும், நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் எனவும் வரும். முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் ஆயென்னும் விகுதி குன்றி நடவா உண் தின் அஃகு என நிற்குமென அறிக. நிற்பினும் விகுதியோடு புணர்ந்தவைகளேயாம். இப்படி விகுதி புணர்ந்துகெட்டு நிற்குஞ் சொற்கள் இன்னும் பலவுண்டு. அவையெல்லாம் பின் காட்டப்படும். உதாரணம் நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான். கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான் அஃகினான் எனவரும்.

ஒரு நிகரனவாகிய வினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணருங்கால் ஒரேவிதமாகவே விகாரப்பட்டு வருமோ?

இத்தெரிநிலைவினைப் பகுதிகள் விகுதியோடு புணரும்போது, தொழுதான் உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல்சேறல் என முதனீண்டும், தா தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா கொணர்ந்தான் என முதலயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா வருகிறான் எனத் தனிநெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல் கற்றான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும் செல் சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு வினைச் சொற்களேயன்றிப் பிறசொற்கள் பகுதியாதலில்லையோ?

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு நட வா முதலிய வினைச்சொற்களேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதியாய் வரும்.

உ–ம்.: சித்திரித்தான், கடைக்கணித்தான் என்பவற்றின் முறையே சித்திரம், கடைக்கண் என்னும் பெயர்ச்சொற்கள் பகுதி யாயின. பொன்போன்றான். புலிநிகர்த்தான் என்பவற்றின் முறையே போல், நிகர் என்னுமிடைச்சொற்கள் பகுதியாயின. சான்றான், மாண்டான் என்பவற்றின் முறையே சால், மாண் என்னு முரிச்சொற்கள் பகுதியாயின. பிறவு மிவ்வாறு வருதல் காண்க.

முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் விகுதி புணர்ந்தே வருமோ?

நடவாய் என விகுதி புணர்ந்தும், நட என விகுதி புணர்ந்து கெட்டும் வரும்

நடவா முதலிய வாய்பாட்டுப் பகுதிகள் எல்லாம் எவ்வாய்பாட்டில் அடங்கும்?

செய்யென்னும் வாய்பாட்டி லடங்கும்.

செய்யென்னும் வாய்பாட்டில் அடங்கிய கருத்து யாது.

பின்னரெடுத்தாளுதற்குக் குறிசெய்த படியாம்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** தெரிநிலை வினைப்பகுதிகளுக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதியுணர்த்திற்று.

**இ–ள்.: நட ... அஃகென்று –** நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என, **எய்தியவிருபான் மூன்றாமீற்றவும் –** பொருந்திய இந்த இருபத்து மூன்றாகும் உயிரும் ஒற்றுங் குற்றுகரமுமாகிய ஈற்றை யுடைய பதங்களெல்லாம், **செய்யனேவல் –** செய் என்னும் ஏவல்வினையும், **செய்யென் வினைப்பகாப்பதம் –** செய்யென்னும் வினைப் பகாப்பதமாகிய பகுதியுமாம், **எ–று.**

எகர உயிர், வினாவிடைச் சொல்லிலன்றி மற்ற இடங்களில் ஈறாகாமையால் அது தவிர்ந்தன ஆமென்று சொல்ல வந்தவர் "ஆமீற்ற" வெனவும், **விகற்பத்தின் முடித்தலென்னும்** உத்தியால் இருபத்து மூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டிய பதங்கள் இந்தப் பொது வாய்பாட்டில் அடங்குமென்று சொல்ல வந்தவர் முடிந்தது முடித்தலென்னும் உத்தியால் "செய்" எனவும் அடக்கிக் கூறினார்.

ஏவற்கு உதாரணம் இச் சூத்திரத்தி லெடுத்துக் காட்டிய பதங்களைப் பகுதிப் பொருளை நீக்கிக் காண்க. பகுதிக்கு உதாரணம்:– நடந்தான்,

வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான் எனவும்; உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் எனவும் வரும். கிடந்தான், சுரந்தான், பறந்தான், கலந்தான், மறந்தான், இறந்தான், கறந்தது, என்றாற் போல்வன வெல்லாம் அகர வீற்று ளடங்கின வெனவும், எண்ணினான், மண்ணினான், கண்டான், பூண்டான், நாணினான், கோணினான் என்றாற் போல்வன வெல்லாம் ணகர மெய்யீற்று ளடங்கின வெனவும், ஒழிந்தனவும் இவ்வாறடங்கி நிற்குமெனவும், குற்றுகரப் பகுதியை வேறு பிரித்ததினால் ஏகினான், குறுகினான், கட்டினான், பொருந்தினான், வெள்கினான் என ஒழிந்த ஐந்தொடருங்காட்ட வேண்டுமெனவும், எஃகினான், வெஃகினான், ஓதினான், மோதினான், பருகினான், உருகினான், திருடினான், எட்டினான், வெட்டினான், கக்கினான், நச்சினான், பற்றினான், சுருங்கினான், அஞ்சினான், வருந்தினான், நம்பினான், பொன்றினான், எய்தினான், நல்கினான் என்றாற் போல்வன வெல்லாம் அந்த அறுவகைத் தொடர்க் குற்றுகரப் பகுதியு ளடங்கி நின்றனவெனவும், இவ்வாறே பல்வேறு வகைப்பட்ட எல்லா வினைகளும் இந்த இருபத்து மூன்று ஈற்று மூவகைப் பகுதிகளுள் அடங்கி நின்றன எனவுங் காண்க. இவற்றுள் பகுதிகள் முதனிலையாய் நின்றமை காண்க.

**இரட்டுற மொழித லென்னும்** உத்தியா லெடுத்துக் கொண்ட ஏவற் பொருளும் பகுதிப் பொருளுந் தந்து நிற்கும் நட வா முதலிய பதங்களை யெண்ணித் தொகுத்த இருபான் மூன்றாமீற்ற வென்னுந் தொகை செய்யென்னேவல் என்னும் பயனிலையோடும், செய்யின்வினைப்பகாப் பதமென்னும் பயனிலையோடுந் தனித்தனி முடிந்தன. மேல்விகுதிப் புணர்ச்சியோடு பதப்புணர்ச்சிக்கும் இலக்கணங் கூறியது போலப் பகுதியோடு ஏவல் வினைக்குமிங்கே இலக்கணங் கூறலால் இதுவும் **ஒப்பின் முடித்தலென்னும்** உத்தி. வடநூல் மேற்கோளாக மொழிகளை யெடுத்துப் பகாப்பதம் பகுபத மெனக் காரணக்குறி தாமேதந்து அவற்றை எழுத்தே தனித்து மென்ற சூத்திர முதல் இச்சூத்திரம் வரைக்கும் பகாப்பதம் பகுபதனெப் பல்காற் கூறுதல், தன் **குறிவழக்க மிக வெடுத்துரைத்தலெ**ன்னும் உத்தி. இனி **உரையிற் கோடலெ**ன்னும் உத்தியால் இத்தெரிநிலை வினைப்பகுதிகள் இயற்றும் வினைமுதலால் இயற்றப்படுந் தெரிநிலை வினைப்பகுதிக ளெனவும், ஏவும் வினை முதலால் ஏவப்படுந் தெரிநிலை வினைப்பகுதிக ளெனவும் இரு வகைப்படும். அவற்றுள், இவை இயற்றப்படுந் தெரிநிலை வினைப்பகுதிகள் எனவும், ஏவப்படுந் தெரிநிலை வினைப்பகுதிகள் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படு மெனவும் இன்னும் இப் பகுதிகள் பெயர்ப்பகாப்பதம் இடைப் பகாப்பதம் உரிப் பகாப்பதங்களிலும் பிறக்கும், அவை யெல்லாம் பகுபத முடிக்கும்போது காட்டப்படு மெனவுங் கொள்க. இச் சூத்திரம் நூலியற்றும் அறிவுடையோர்க்கு விளங்கப் **பத்துவகை யழகொடுங்** கூடி நின்றது.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை** :– நடவா * * * * * **அஃகு என்று** – நடமுதல் அஃகு இறுதியாக, **எய்திய** – (முதனிலையாகப்) பொருந்திய, **இருபான் மூன்று ஆம்** – இருபத்துமூன்றாம், **ஈற்றவும்** – (உயிரும் மெய்யும் குற்றியலுகரமுமாகிய) இறுதியையுடைய (இந் நட முதலிய வாய்பாடுகளெல்லாம்), **செய் என் ஏவல்** – செய் என்கிற ஏவலினது, **(பகாப்பதம்)** – பகாப்பதமாகிய பகுதியும், **வினைப்பகாப்பதம்** –மற்றைவினைப் பகாப்பதங்களாகிய பகுதியுமாகும்.

**குறிப்பு** :– **விகற்பத்தின்முடித்தல்** என்னுமுத்தியால் இருபத்து மூன்றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப்பொது வாய்பாட்டில் அடங்குமென்பார் **முடிந்தது முடித்தல்** என்னு முத்தியால் 'செய்' எனவுங் கூறினார். 'செய்யென் வினைப் பகாபதம்' என்ற மாத்திரையால் செய்யெனேவற் பகாப்பதமும் அடங்குமாயினும், 'நடவா' முதலிய பகுதிகளே ஏவற்பொருளுணர்த்தாமல் **ஆய்** விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென்பது தோன்ற வேறு கூறினார்.

ஏவற்பகுதிக்கு உதாரணம் :– நடவாய், வாராய் எனவும்; நடமின், வம்மின் எனவும் வரும்.

ஏவலொருமை வினைச்சொற்கள் **ஆய்** என்னும் விகுதிகுன்றியும் நட, வா, உண், தின், அஃகு என நிற்குமென அறிக; நிற்பினும் **விகுதி**யோடு புணர்ந்தவையேயாம். இவ்வாறு விகுதி புணர்ந்து கெட்டுநிற்கும் சொற்கள் இன்னும் பலஉள; அவையெல்லாம் விகுதிச் சூத்திர உரையிற் காட்டப்படும்.

மற்றை வினைப்பகுதியாவருவதற்கு உதாரணம் :– நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வௌவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் எனவரும். பகுதியோடு ஏவல்வினைக்கும் இங்கே இலக்கணம் கூறலால் இது **ஒப்பின் முடித்தல்** என்னும் உத்தி.

இவ்வாசிரியால் வடநூன் மேற்கோளாக மொழிகளுக்குப் பகாப்பதம் பகுபதம் எனக் காரணப்பெயர் தாமே இட்டு "எழுத்தே" என்னும் சூத்திரமுதல் இதுவரைக்கும் 'பகாப்பதம் பகுபதம்' எனப்பலதரஞ் சொல்லியது **தன்குறிவழக்கம் மிகவெடுத்துரைத்தல்** என்னும் உத்தி.

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான் உண்டான் எனச் சில இயல்பாதலல்லாமலும், செல்–சேறல் என முதல் நீண்டும், தா–தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா–செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா–கொணர்ந்தான் என முதல் அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு–விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு – முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா–வருகின்றான் எனத் தனிநெடில் குறுகி ஓர்

உயிர்மெய் விரிந்தும், கல்—கற்றான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல்—சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும். கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும்; கல், நில், புல், சொல் இவை கற்றான், நின்றான், புல்லினான், சொன்னான் எனவும் ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால் அவை யெல்லாம் தனித்தனி சொல்லப்புகுந்தால் விரியுமாதலின் செய்யுள் வழக்கத்தையும் உலகவழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக் கொள்க.

நட, வா முதலிய சொற்களே விகுதியோடு புணராமல் தாமே ஓசை வேறுபாட்டால் கட்டளைப்பொரு ளுணர்த்தும்போது ஏவலொருமையாம் என்றும், மற்றைய வினைச்சொற்கள் பிறத்தற்குக் காரணமாய்த் தொழிலைமாத்திரம் உணர்த்தும்போது பகுதியாம் என்றும் கொள்வர் ஒரு சாரார். நட முதலிய பகுதிகளே விகுதியோடு சேராமல் ஓசை வேறுபாட்டால் முன்னிலை யேவலொருமை எதிர்கால வினைமுற்றாய் நிற்கும் என்பர் மற்றொரு சாரார். இப்பகுதிகள் **ஆய்விகுதி** குன்றி ஏவலொருமை வினைமுற்றுச் சொற்களாய் நிற்கும் என்பர் வேறொருசாரார். இன்னும் இவற்றின் விவரங்களை விரித்தியுரைகளிற் கண்டுணர்க.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: நட..... அஃகு என்று** – நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, **எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்** – முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்றாகும் உயிருமெய்யுங் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம், **செய் என் ஏவற் (பகாப்பதம்)** – செய் யென்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், **வினைப்பகாப்பதம்** – மற்றை வினைப்பகாப் பதங்களாகிய பகுதியுமாம், **எ—று.**

**விகற்பத்தின் முடித்தலென்னு** முத்தியால் இருபத்து மூன் றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப் பொதுவாய்பாட்டில் அடங்குமென்பார் **முடிந்தது முடித்தலென்னு** முத்தியாற் செய் யெனவுங் கூறினார்.

செய் யென் வினைப் பகாப்பதம் என்றவளவிலே செய்யெ னேவற் பகாப்பதமும் அடங்கு மாயினும், நட வா முதலிய முதனிலைகளே ஏவற் பொருளுணர்த்தாது ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென்றறிவித்தற்கு வேறு கூறினார்.

ஏவற்பகுதிக்கு உதாரணம். நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எனவும், நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் எனவும் வரும். முன்னிலை யேவலொருமை வினைச்சொற்கள் ஆயென்னும் விகுதி குன்றி நட வா உண் தின் அஃகு என நிற்குமென அறிக. நிற்பினும்

விகுதியோடு புணர்ந்தவைகளே யாம். இப்படி விகுதி புணர்ந்து கெட்டு நிற்குஞ் சொற்கள் இன்னும் பலவுண்டு. அவை யெல்லாம் பின் காட்டப்படும். மற்றை வினைப்பகுதிக்கு உதாரணம். நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் என வரும்.

இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோளாக ஒரு மொழிகளை விதந்து பகாப்பதம் பகுபத மெனக் காரணப்பெயர் தாமே யிட்டு எழுத்தே யென்னுஞ் சூத்திர முதல் இதுவரையும் பகாப்பதம் பகுபதமெனப் பலதரஞ் சொல்லுதல் **தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்த லென்னு** முத்தி.

இத் தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான் உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல் சேறல் என முதனீண்டும், தா தந்தான் எனத் தனி நெடில் குறுகியும், சா, செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா கொணர்ந்தான் என முதலயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா வருகிறான் எனத் தனி நெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல் கற்றான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல் சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும், கல், நில், புல், சொல் இவை கற்றான், நின்றான், புல்லினான், சொன்னான் எனவும், ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால், அவை யெல்லாந் தனித்தனி சொல்லப் புகின் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகரமுங் கொண்டு அமைத்துக் கொள்க.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு, நட வா முதலிய வினைச் சொற்களே யன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதியாய் வரும்.

**உ–ம்.:** சித்திரித்தான், கடைக்கணித்தான் என்பவற்றின் முறையே சித்திரம், கடைக்கண் என்னும் பெயர்ச்சொற்கள் பகுதியாயின. பொன்போன்றான், புலிநிகர்த்தான் என்பவற்றின் முறையே போல், நிகர் என்னு மிடைச்சொற்கள் பகுதியாயின. சான்றான், மாண்டான் என்பவற்றின் முறையே சால், மாண் என்னு முரிச்சொற்கள் பகுதியாயின. பிறவுமிவ்வாறு வருதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். **நட....—அஃகு என்று** – நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று, – **எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்** – முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்றாகும் உயிருமெய்யுங் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம், **– செய் என் ஏவல்** (பகாப்பதம்) – செய்யென்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், – **வினைப் பகாப்பதம்** – மற்றவினைகளது பகாப்பதங்களாகிய பகுதிகளுமாம். **எ—று.**

விகற்பத்தின் முடித்தலென்னு முத்தியால் இருபத்து மூன்றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப்பொது வாய்பாட்டில் அடங்குமென்பார் முடிந்தது முடித்தலென்னு முத்தியாற் செய்யெனவுங் கூறினார்.

வினைப் பகாப்பதம் என்ற அளவிலே ஏவற்பகாப்பதமும் அடங்கு மாயினும் நட, வா முதலிய முதனிலைகளை ஏவற்பொருளுணர்த்தாது ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்து மென்றறிவித்தற்கு வேறு கூறினார்.

**'நாலாறுமீறே'** என்று இருபத்து நான்கீறு சொல்லப்பட்டிருக்க இச்சூத்திரத்தில் எகரவுயிர் எ என்னும் வினா விடைச் சொல்லிலன்றிப் பிறிதொரு சொல்லிலும் ஈறாகாமையால் அது தவிர்ந்தன இவ்வினைப் பகுதிக் கீறாமென்பார் ஆ மீற்றவும் என்றார்.

நட என அகரவீற்றுளொன்றும், வா என ஆகார வீற்றுளொன்றும், மடி என இகர வீற்றுளொன்றும், சீ என ஈகாரவீற்றுளொன்றுமாக இப்படியே இருபத்து மூன்றீற்றுக்கும் வரிசையாக எடுத்துக்காட்டிய வாய்பாட்டு வினைப் பகுதிகளைப் போல அநேக வினைப் பகுதிகளுள்ளன என்பார் அஃகாமென்னாது அஃகென்று என எய்திய விருபான் மூன்று ஈற்றவுமென்றார்.

ஏவற்பகுதிக்கு உதாரணம்:– நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எனவும், நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் எனவும் வருமிவ்வேவல்வினைகளில் நட, வா, உண், தின், அஃகு என்று பகுதிகள் காண்க. முன்னிலையேவலொருமை வினைச் சொற்கள் ஆய் என்னும் விகுதி குன்றி நட, வா, உண், தின், அஃகு என நிற்குமெனவுமறிக. நிற்பினும் விகுதியோடு புணர்ந்து நின்றவைகள் போலவே முன்னிலையேவலொருமைப் பொருளுணர்த்துமென்று கொள்க. பிரயோக விவேக நூலாரும் "முன்னிலை யேவலொருமைச் சொற்போலு முதனிலைகள், அந்நிலைத்தாதுப் பகுதியென்றாகும்" என்றார். தொல்காப்பியரும் "செய்யாயென்னு முன்னிலைவினைச் சொற், செய்யென் கிளவியாகிடனுடைத்தே" என்றார். இப்படி விகுதிபுணர்ந்து கெட்டுநின்குஞ் சொற்கள் இன்னும் பலவுண்டு. அவையெல்லாம் பின்காட்டப்படும்.

ஏவலல்லாத மற்ற வினைப்பகுதிக்கு உதாரணம்:– நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் எனவரும் இவற்றைப் பகுத்து முன்னின்ற பகுதிகளை மற்றவினைகளில் வந்த பகுதிகளென்று காண்க.

ஏவல்வினை, ஏவலல்லாத மற்றவினை என்னு மிருவகை வினைப் பகுதிகளையு நோக்குங்கால், வா, வே, நோ, வாழ் என்று சில பகுதிகள் செயப்படுபொருள் குன்றியனவும்; விடு, வை, உண், பார் என்று சில பகுதிகள் செயப்படுபொருள் குன்றாதனவும்; மடி, தேய் என்று சில பகுதிகள் செயப்படுபொருள் குன்றுதல், குன்றாமை என்னு மிருவகைக்கும் பொதுவாவனவுமாய் மூன்று வகையுண்டென்று தெளிந்து, அவ்வப் பகுதிகளிலிருந்துண்டான வினைகளும் அம்மூவகையாக நடைபெறுமாறு காண்க.

உ–ம். வந்தான், வெந்தான், நொந்தான், போயினான் என்று செயப்படு பொருள் கொள்ளாமல் நின்றன. விட்டான், வைத்தான், உண்டான் என்று செயப்படுபொருள் கொண்டு நின்றன.

மடிந்தான், தேய்ந்தான் என்று செயப்படுபொருள் குன்றியும்; மடித்தான், தேய்த்தான் என்று செயப்படுபொருள் குன்றாமலும் வந்தன. இப்படி ஒரு பகுதியிற்றோன்றி வெவ்வேறுருவமாயிருந்து செயப்படு பொருள் குன்றியுங் குன்றாமலும் வருதலுமன்றி, செயப்படுபொருள் குன்றுதற்குங் குன்றாது பெறுதற்கும் பொதுவாக ஒரு பகுதியிற்றோன்றி ஒரே வடிவாயிருக்கும் வினையுமுண்டு. உ–ம். வெளுத்தான் இது தான் வெண்ணிறமாயினான் என்றும், புடவையை வெண்மையாக்கினான் என்றுந், தன்வினையாயும் பிறவினையாயுமிருந்து, செயப்படுபொருள் அற்றும் பெற்றும் வந்தது. செயப்படுபொருள் குன்றிய பகுதியிலிருந்தும் பிறவினையுண்டான போது செயப்படுபொருள் கொள்ளுமென்றறிக. உ–ம். வருவிப்பான், வாழ்விப்பான் எனவரும்.

இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோளாகத் தனிமொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமேயிட்டு எழுத்தேயென்னுஞ் சூத்திரமுதல் இதுவரையும் பகாப்பதம் பகுபதமெனப் பலதரஞ்சொல்லுதல் தன்குறி வழக்க மிகவெடுத்துரைத்தலென்னுமுத்தி.

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான், உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல் சேறல் என முதனீண்டும், தா தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா கொணர்ந்தான் என முதலய லெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு மூழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா வருகிறான் எனத் தனிநெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும்,

கல் கற்றான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல் சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும், கல், நில், புல், சொல், இவை கற்றான், நின்றான், புல்லினான், சொன்னான் எனவும், ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால் அவையெல்லாந் தனித்தனி சொல்லப்புகின் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையு நோக்கிச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங்கொண்டு அமைத்துக் கொள்க.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு நட, வா முதலிய வினைச் சொற்களேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் பகுதியாய் வரும். உ—ம். சித்திரித்தான், கடைக்கணித்தான் என்பவற்றில் முறையே சித்திரம், கடைக்கண் என்னும் பெயர்ச்சொற்கள் பகுதியாயின. (பொன்) போன்றான், (புலி) நிகர்த்தான் என்பவற்றில் முறையே போல், நிகர் என்னும் இடைச்சொற்கள் பகுதியாயின. சான்றான், மாண்டான் எனபவற்றில் முறையே சால், மாண் என்னும் உரிச்சொற்கள் பகுதியாயின. பிறவுமிவ்வாறு வருதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.: நட ... அஃகு என்று** – நட என்பது முதல் அஃகு என்பது ஈறாக, **எய்திய** – பொருந்திய, **இருபான் மூன்று ஆம் ஈற்றவும்** – இருபத்து மூன்றாகிய ஈற்றை யுடைய இவை முதலிய சொற்களெல்லாம், **செய் என் ஏவல் வினை பகாப்பதம்** – செய் யென்னும் வாய்பாட்டு ஒருமை யேவலும் மற்றைத் தெரிநிலை வினைகளின் பகாப்பதமாகிய பகுதியும் ஆம் ; **எ—று**. பகாப்பதம் – பகுதி.

சொல்லுக்கு இறுதியில் நிற்கு மெனப்பட்ட இருபத்துநான்கு எழுத்துக்களுள் எகரம் வினாவிடைச் சொல்லிலும், அளபெடையிலும், தன்னை யுணர்த்துமிடத்திலும் ஈறாவதல்லாமல் மற்றைச் சொற்களின் இறுதியில் நில்லாதாதலால்; அதனை ஒழித்து 'இருபான்மூன்றா மீற்ற' என்றார். இருபத்து மூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டிய வாய்பாடுகளெல்லாம் இப் பொதுவாய்பா டொன்றில் அடங்கு மென்பார், 'செய்' என்று கூறினார்.

பகுதி கூற வந்தவர், அதுதான் ஏவல் வாய்ப்பாடு–வருதலால் அதனையும் உடன் கூறினாரென்க.

ஒருமை யேவலாக வருவதற்கு:–

**உ–ம்.:** நட, வா, உண், தின், அஃகு என வரும்.

மற்றை வினைப்பகுதியாக வருவதற்கு:–

**உ–ம்.:** நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான் (சீவினான்) விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான் (உராய்ந்தான்), உண்டான், பொருநினான் (பொருந்தினான்), திருமினான் (திரும்பினான்), தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் (சுருங்கினான்) என வரும்.

இங்குக் காட்டிய நட வா முதலியன வெல்லாம், தன் வினைப்பகுதிகள்; பிற வினைப்பகுதிகள் மேற் சூத்திரத்திற் காட்டப்படும். (தன்வினையாவது – தானே நேராகத் தொழிலைச் செய்வது; பிறவினையாவது – மற்றொருவனைக் கொண்டு தான் செய்விப்பது).

கிட, சுர, பற, கல முதலிய அகரவீற்றுவினைப்பகுதிகளெல்லாம் இங்கு எடுத்துக்காட்டிய 'நட' என்னும் அகரவீற்று வாய்பாட்டிலும், இவ்வாறே எல்லா ஈற்றுப் பிற பகுதிகளுளும் இங்குக் காட்டிய அவ்வீவ்வீற்று வாய்பாடுகளிலும் அடக்கப்படுமென அறிக.

இந் நூலாசிரியர், வடநூல் மேற்கோளக ஒருமொழியை எடுத்துப் பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமே இட்டு "எழுத்தே தனித்தும்" என்னும் சூத்திரம் முதல் இதுவரையிலும் பகாப்பதம் பகுபத மெனப் பல தரம் சொல்லுதல், **தன்குறி வழக்கம் மிகவெடுத்துரைத்தல்** என்னும் உத்தி. (தன் குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல் – தான் நூதனமாகக் குறித்து வழங்குவதைப் பலவிடங்களில் எடுத்துச் சொல்லுதல்.)

நட, வா முதலிய சொற்கள் ஓசை வேறுபாட்டாற் கட்டளைப் பொருளுணர்த்தும்போது ஏவலொருமையா மென்றும், மற்றை வினைச்சொற்க ளெல்லாம் பிறத்தற்கு மூலமாய்த் தொழில் மாத்திரத்தை யுணர்த்தும்போது பகுதியா மென்றும் அறிக.

நட வா முதலிய பகுதிகளே விகுதியோடு புணராமல் தனித்து நின்று ஓசைவேறுபாட்டால் ஏவலொருமை வினைமுற்றாய் நிற்கு மென்பது, தொல்காப்பிய வுரையாசிரியர் முதலியோருள் சிலர் மதம்; நடவாய் வாராய் முதலிய முன்னிலை யேவலொருமை வினைமுற்றுச் சொற்கள் தாமே ஆய் என்னும் விகுதி குன்றி நட வா முதலியனவாக நிற்கு மென்பது, மற்றுஞ் சிலர் மதம்:– பிறர் மதத்தை மறுத்துத் தமது மதத்தை நிலைநிறுத்துதற்கு அவரவர் பற்பல காரணமும் கூறுவர். இவ் விருவகைக் கொள்கைகளுள் உண்மையான சித்தாந்தம் எதுவாகுமானாலும், உய்த்து நோக்குமிடத்து, நன்னூலாசிரியரது கருத்து முந்திக் கூறிய வகையையே தழுவியுள்ளதென நன்கு விளங்குகின்றது; மேல்,

> **"செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்**
> **செய்வியென் னேவ லிணையி னீரேவல்"**

என்றும்,

> **"ஆவி யரழ விறுதி முன்னிலைவினை**
> **யேவல் முன் வல்லினம்"**

என்றும்,

"ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்"

என்றும் கூறுவன, இதற்குச் சிறந்த ஆதாரமாம்.

இத் தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணரும்போது தொழு – தொழுதான், உண் – உண்டான் எனச் சில இயல்பாதலல்லாமலும், செல் – சேறல், கொள் – கோடல் என முதல் நீண்டும்; தா – தந்தான், வே – வெந்தான் எனத் தனிநெடில் குறுகியும்; சா – செத்தான் என முதல் ஆகாரம் எகாரமாகியும்; கொணா – கொணர்ந்தான் என முதலெழுத்துக்கு அயலெழுத்துக் குறுகி ரகர மெய் விரிந்தும்; விரவு – விராவினான் என நடுக்குறில் நீண்டும்; முழுகு – முழுகினான், விழு – விழுந்தான், வீழ்ந்தான் என இயல்பும் விகாரமுமாக விகற்பித்தும்; வா – வருகின்றான், அலமா – அலமருகின்றான் என நெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும்; கல் – கற்றான், கேள் – கேட்டான் என ஈற்றுமெய் வருமெய்யாக திரிந்தும்; செல் – சென்றான்; கொள் – கொண்டான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும்; இன்னும் இவ்வாறு பல விகார மடைந்தும் வரும். கா, சா, தா இவைமுறையே காத்தான், செத்தான், தந்தான் என்றும்; கல், நில், புல், சொல், இவை, கற்றான், நின்றான், புல்லினான், சொன்னான் என்றும் ஒரு தன்மையனவான பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால் அவை யெல்லாவற்றையும் தனித்தனி எடுத்து முடிபு சொல்லப் புகுந்தால் வரையறை யில்லாமல் விரியு மாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துப் புணர்ச்சி விகாரமும் செய்யுள் விகாரமும் கொண்டு அமைத்துக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். நட அஃகு என்று நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, எய்திய இருபான் மூனஸற ஆம் ஈற்றவும் – முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்றாகும் உயிரு மெய்யுங் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய சொற்களெல்லாம், செய் என் ஏவற் (பகாப்பதம்) – செய்யென்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், வினைப்பகாப்பதம் – மற்றை வினைப்பகாப்பதங்களாகிய பகுதியுமாம். எ–று.

மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள் 24 ஆயினும், எகரம் வினா விடைச் சொல்லிலும் அளபெடையிலுமே ஈறாவதலால் அதனை ஒழித்து 23 என்றார்.

'விகற்பத்தின் முடித்தல்' என்னும் உத்தியால் இருபத்துமூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப்பொதுவாய்பாட்டில் அடங்குமென்பார் 'முடிந்தது முடித்தல்' என்னும் உத்தியாற் 'செய்' எனக் கூறினார்.

செய்யென் வினைப்பகாப்பதம் என்றவளவிலே செய்யெனேவற்

பகாப்பதமும் அடங்குமாயினும், நட வா முதலிய முதனிலைகளே ஏவற் பொருளுணர்த்தாது ஆய்விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென் றறிவித்தற்கு வேறு கூறினார்.

ஏவற்பகுதிக்கு உதாரணம்: நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய், கடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின், முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் ஆயென்னும் விகுதி குன்றி நடவா உண் தின் அஃகு என நிற்குமென நிற்குமென அறிக. நிற்பினும் விகுதியோடு புணர்ந்தவைகளேயாம்.

இருபான் மூன்றே மீற்ற வாய – என்பதும் பாடம்.

'கையறியா மாக்கட் கன்றி நூலியற்றும் அறிவினையுடைய மக்கட்குப் பல்கலைக் குரிசில் பவணந்தி யென்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான் உலக மலையாமை யுள்ளிட்ட பத்தழகோடும் பிறந்து நின்றது இச்சூத்திரம் என்றுணர்க' – என்பது சங்கரநமச்சிவாயப் புலவர் விருத்தியுரை.

'செய்யேனேவல் வினைப் பகாப்பதம்' என்பதற்கு செய் என்னும் ஏவல் வினைப் பகாப்பதம் எனப் பொருளுரைப்பாரு முளர்.

இப்படி விகுதி புணர்ந்து கெட்டு நிற்குஞ் சொற்கள் இன்னும் பலவுண்டு. அவையெல்லாம் பின்காட்டப்படும். மற்றை வினைப்பகுதிக்கு உதாரணம்: நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான். போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பாருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான்.

இந்நூலாசிரியர், வடநூன்மேற்கோளாக ஒரு மொழி யானவைகளை எடுத்துப் பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமே யிட்டு, 'எழுத்தே' யென்னுஞ் சூத்திரமுதல் இதுவரையும் பகாப்பதம் பகுபதமெனப் பலதரஞ் சொல்லுதல் 'தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல்' என்னும் உத்தி.

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும் போது, தொழுதான் உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல் – சேறல் என முதனீண்டும், தா– தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா– செத்தான் என முதல் அகாரம் எகரமாகியும், கொணா – கொணர்ந்தான் என முதல் அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு – விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு – முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா – வருகிறான் எனத் தனி நெடில் குறுகி ஓர் உயிர்மெய் விரிந்தும், கல் – கற்றான் என ஈற்றுமெய் வருமெய்யகாத் திரிந்தும், செல்–சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும், இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும்; கல், நில், புல், சொல் இவை கற்றான், நினறான், புல்லினான், சொன்னான் எனவும் ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால்,

அவையெல்லாந் தனித்தனி சொல்லப்புகின் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) நடவா..........அஃகு என்று–நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, எய்திய– (முதனிலையாகப்) பொருந்திய, இருபான் மூன்று ஆம்–இருபத்து மூன்றாகும், ஈற்றவும்– (உயிரும் மெய்யுங் குற்றிய லுகரமுமாகிய) ஈற்றையுடைய (இவைமுதலாகிய) வாய்பாடுகளெல்லாம், செய் என் ஏவல்–செய்யென்கின்ற ஏவுவினது, (பகாப்பதம்)–பகாப்பதமாகிய பகுதியும், வினை–மற்றை வினைகளுக்கு, பகாப்பதம் ஆம்–பகாப்பதங்களாகிய பகுதியும் ஆகும். **எ–று.**

**பொ–ரை.:** நட வா முதல் அஃகு ஈறாகிய முதனிலைகளாகப் பொருந்திய இருபத்து மூன்றாகும் உயிரும் மெய்யும் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம் செய்யென்கின்ற ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும், மற்றை வினைகளுக்குப் பாகாப்பதங்களாகிய பகுதியும் ஆகும்.

பகாப்பதம்–பகுதி. 'விகற்பத்தின் முடித்தல்' என்னு முத்தியால் இருபத்து மூன் றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப் பொது வாய்பாட்டில் அடங்குமென்பார், 'முடிந்தது முடித்தல்' என்னு முத்தியால், 'செய்' எனவுங் கூறினார். (விகற்பத்தின் முடித்தல்–விளங்குதற் பொருட்டு வெவ்வேறாக முடித்தல்; அதாவது 'ஆவி ஞண நமன' என்னுஞ் சூத்திரத்தின்படி சொல்லுக்கு இறுதியில் நிற்கு மெனப்பட்ட இருபத்து நான்கு எழுத்துக்களுள் எகரம் வினா விடைச் சொல்லிலும், அளபெடையிலும், தன்னையுணர்த்து மிடத்திலும் ஈறாவதல்லாமல் மற்றைச் சொற்களின் இறுதியில் நில்லாதாதலால், அதனை யொழித்து இருபத்து மூன்றாகிய ஈற்றையுடைய இவைமுதலிய சொற்களைத் தனித்தனி முடித்துக்காட்டடல். முடிந்தது முடித்தல்–வெவ்வேறாக முடிந்ததைத் தொகுத்து முடித்தல். அதாவது – நட முதலிய பல வேறுபாடுகளின் சிறப்பு வாய்பாட்டால் துடிந்ததைச் 'செய்' என்னும் பொதுவாய்ப்பாட்டில் முடித்தல்.)

'செய்யென் வினைப்பகாப்பதம்' என்ற அளவிலே செய்யென் ஏவற் பகாப்பதமு:ம அடங்குமாயினம், முதனிலைகளே ஏவற்பொருளுணர்த்தாமல் ஆய் விகுதியோடு புணர்ந்துநின்று உணர்த்து மென்றறிவித்தற்கு வேறு கூறினார்.

**ஏவற்பகுதி.**

**(உ–ம்.) நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய்–அஃகாய்.**

**முன்னிலை யேவலொருமை எதிர்காலவினை முற்றிற்கு வரும் ஆய் விகுதி இன்றியும் வரும்.**

(உ–ம்.) நட, வா, உண், தின், அஃகு.

இது போலவே விகுதிபுணர்ந்து கெட்டு நிற்கும் சொற்கள் இன்னும் பல உண்டு; அவையெல்லாம் பகுபதம் முடிக்கும்போது காண்பிக்கப்படும்.

மற்றை வினைப்பகுதி.

(உ–ம்.) நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞனான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் என வரும்.

(சீத்தல்–நீக்குதல், உரிஞுதல்–தேய்த்தல், பொருநல்–வேடங்கொள்ளல், திருமுதல்–திரும்புதல், அஃகுதல்–சுருங்குதல்.)

இங்குக் காட்டிய நட வா முதலியன வெல்லாம் தன்வினைப் பகுதிகள்; பிறவினைப் பகுதிகள் மேற் சூத்திரத்திற் காட்டப்படும். (தன்வினையாவது–தானே நேராகத் தொழிலைச் செய்வது; பிற வினையாவது–மற்றொருவனைக் கொண்டு தான் தொழிலைச் செய்விப்பது)

கி, சுர, பற, கல முதலிய அகர வீற்று வினைப்பகுதிகளெல்லாம் இங்கு எடுத்துக் காட்டிய 'நட' என்னும் அகர வீற்று வாய்பாட்டிலும், இவ்வாறே எல்லா வீற்றுப் பிறபகுதிகளும் இங்குக் காட்டிய அவ்வவ் வீற்று வாய்பாடுகளிலும் அடக்கப்படுமெனவறிக.

இந் நூலாசிரியர் வடநூல் மேற் கோளாக ஒரு மொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமே யிட்டு 'எழுத்தே' என்னுஞ் சூத்திரமுதல் இது வரைக்கும் பகாப் பதம், பகுபதமெனப் பலதரஞ் சொல்லுதல், 'தன்குறி வழக்கம் மிக வெடுத்துரைத்தல்' என்னு முத்தி. (தன்குறிவழக்கம் மிக வெடுத்துரைத்தல்–தான் நூதனமாகக் குறித்து வழங்கும் வழக்கத்தையே பல விடங்களிலும் எடுத்துச் சொல்லுதல்.)

இத் தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழு–தொழுதான், உண்–உண்டான் எனச், சில இயல்பாதலல்லாமலும், செல்–சேறல் என, முதல் நீண்டும், தா–தந்தான் எனத், தனி நெடில் குறுகியும், சா–செத்தான் என, முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா–கொணர்ந்தான் என, முதல் அயலெழுத்துக் குறுகி ரகர மெய் விரிந்தும், விரவு–விராவினான் என, நடுக்குறில் நீண்டும், முழுகு–முழுகினான், மூழ்கினான் என, இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா–வருகிறான் எனத், தனி நெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல்–கற்றான் என, ஈற்று மெய் வருமெய்யாகத்திரிந்தும், செல்–சென்றான் என, ஈற்று மெய் வருமெழுத்திற்கு இனமாகத்திரிந்தும், இன்னும் பல வாறு விகாரப்பட்டும் வரும்.

கா, கா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும், கல், நில், புல், சொல் இவை கற்றான், நின்றான், புல்லினான், சொன்னான் எனவும், ஒரு நிகரனவாகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால், அவை

யெல்லாம் தனித்தனி சொல்லப் புகுந்தால் விரியு மாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலகவழக்கத்தையும் பார்த்துச், செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக் கொள்க.

தெரிநிலை வினைகள் நட, வா முதலாகிய முதனிலை வினைப்பகுதி களி லிருந்தே யன்றிச் சிறு பான்மை பெயர்ச்சொற்களிலிருந்தும், இடைச்சொற்களி லிருந்தும், உரிச்சொற்களி லிருந்தும் பிறக்கும்.

(உ–ம்.) கடைக்கண்–கடைக்கணித்தான்–பெயர்ச்சொற் பகுதி.

சித்திரம்–சித்திரித்தான்.

போல்–போன்றான்– இடைச்சொற் பகுதி.

நிகர் – நிகர்த்தான்.

மால்–மாலும்

சால்–சான்றான்.

செம்மை–சேந்தான்.

சிறுமை – சிறுத்தான்–உரிச்சொற் பகுதி.

இவற்றுள் செம்மை, சிறுமை பண்பாயினும் காலங்காட்டும் இடைநிலை பெற்றமையால் உரிப்பண்பாகக் கொள்ளல் வேண்டும். குறிப்பாயின் இடைநிலை பெறாவென்க.

## கா. நமசிவாய முதலியார்

நட * * * **அஃகு என்று** – நட வா மடி சீ விடு கூவே வை நோ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, **எய்திய** – (முதனிலையாகப்) பொருந்திய, **இருபான் மூன்றாம்** – இருபத்து மூன்றாகும், **ஈற்றவும்** – (உயிரும் மெய்யும் குற்றியலுகரமும் ஆகிய) ஈற்றையுடைய வாய்பாடுகளெல்லாம், **செய் என்** – செய் என்னும் வாய்பாட்டு, **ஏவல்** – ஏவல் வினையின், **பகாப் பதம்** – பகுதியும், **வினைப் பகாப்பதம்** – ஏனைய தெரிநிலை வினைகட்குப் பகுதியும் ஆகும். (பகாப்பதம் – பகுதி)

**விகற்பத்தின் முடித்தல்** என்னும் உத்தியால், இருப்பத்து மூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம், '**செய்**' என்னும் இப் பொதுவாய்பாட்டில் அடங்கும் என, **முடிந்தது முடித்தல்** என்னும் உத்திபற்றிக் கூறினார்.

நட, வா முதலிய முதனிலைகள் ஆய் விகுதியோடு புணர்ந்து, '**செய்யாய்**' என்னும் வாய்பாட்டு ஏவல்வினை முற்றாய் வழங்கிவருதலோடு, நட, வா என விகுதி புணராது, 'செய்' என்னும் வாய்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்றாகவும் நின்று வழக்கில் பயிலும் என்பது அறிவித்தற்கு, 'செய்யென் வினைப் பகாப்பதம்' என்னாது, 'செய்யென் ஏவல் வினைப் பகாப்பதம்' என்று வேறு கூறினார்.

ஏவல் வினைப் பகுதிக்கு உதாரணம்

நட, வா, உண், தின், அஃகு முதலியன.

மற்றை வினைப்பகுதிகளுக்கு உதாரணம் :

| | | | |
|---|---|---|---|
| நட | – நடந்தான் | உரிஞ் | – உரிஞினான் |
| வா | – வந்தான் | உண் | – உண்டான் |
| மடி | – மடிந்தான் | பொருந் | – பொருநினான் |
| சீ | – சீத்தான் | திரும் | – திருமினான் |
| விடு | – விட்டான் | தின் | – தின்றான் |
| | விடுத்தான் | தேய் | – தேய்ந்தான் |
| கூ | – கூவினான் | பார் | – பார்த்தான் |
| வே | – வெந்தான் | செல் | – சென்றான் |
| வை | – வைத்தான் | வவ் | – வவ்வினான் |
| நொ | – நொந்தான் | வாழ் | – வாழ்ந்தான் |
| போ | – போயினான் | கேள் | – கேட்டான் |
| வௌ | – வௌவினான் | அஃகு | – அஃகினான் |

இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம், பகுபதம் எனக் காரணப்பெயர் தாமே இட்டு 'எழுத்தே' (சூ. 178) என்னுஞ் சூத்திரமுதல் இதுவரைக்கும் பகாப்பதம் பகுபதம் எனப் பலமுறை சொல்லுதல், **'தன்குறி வழக்கம் மிக வெடுத் துரைத்தல்'** என்னும் உத்தி.

இத்தெரிநிலை வினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான் உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல் – சேறல் என முதல் நீண்டும், தா தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா – செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா – கொணர்ந்தான் என முதலயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு – விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு – முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா – வருகிறான் எனத் தனி நெடில் குறுகி, ஓர் உயிர்மெய் விரிந்தும், கல் – கற்றான் என ஈற்றுமெய் வருகிற மெய்யாகத் திரிந்தும், செல் – சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும், இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

சா, தா – இவை முறையே, செத்தான் – தந்தான் எனவும், கல், நில், சொல் – இவை கற்றான் – நின்றான் – சொன்னான் எனவும், ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலாலும், அவையெல்லாம் தனித்தனிச் சொல்லப் புகுந்தால் விரியுமாதலாலும், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்து, செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங் கொண்டு அமைத்துக்கொள்க.

இனி, ஏவற்பகாப்பதம் என்று முன்னிலை யிடத்தைக் கூறியதனாலே, தன்மைவினை படர்க்கை வினைகளுக்கும் இவையே பகுதியாமெனக் கொள்க.

ஏவல்வினை எடுத்தலோசையாலும், பகுதி படுத்தலோசையாலும் வரும்; இவையே தம்முள் வேற்றுமையாம்.

இச் சூத்திரத்திற் கூறிய நட, வா முதலிய வாய்பாடுகளெல்லாம் தன்வினைப்பகுதிகள். பிறவினைப்பகுதிகள் வருஞ் சூத்திரத்திற் கூறப்படும்.

தன்வினையாவது, தானே நேராகத் தொழிலைச் செய்வது.

பிறவினையாவது, தான் மற்றொருவனைக்கொண்டு தொழிலைச் செய்விப்பது.

## மோசசு பொன்னையா

நட முதல் அஃகு ஈறாகக் கூறப்பட்ட இவ்விருபத்துமூன்று ஈற்று வாய்பாடுகள் எல்லாம், செய் என்னும் வாய்பாட்டு ஏவல் பகாப்பதமும், செய் என்னும்வாய்பாட்டு வினைப் பகாப்பதமுமாகிய பகுதிகளாகிய பதங்களாம், எ-று.

செய்யென் ஏவல் பகாப்பதம், செய்யென் வினைப் பகாப்பதம் என முடிக்க. மொழியீற்றில் வராத எகரம் நீங்கலாக, ஏனை இருபத்து மூன்று ஈற்றுநிலை எழுத்துக்களையும் பெற்று வந்த சொற்களை எடுத்துக்காட்டி வாய்பாடமைத்தார்.

நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான் எனவும், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான்,சென்றான், வவ்வினான், வாழ்ந்தான்,கேட்டான், அஃகினான் எனவும் வினைப்பகுபதங்களில் அவை பகாப்பதங்களாகிய பகுதிகளாயின. இதனால் நட, வா முதலியன ஓசை வேறுபட்டால் கட்டளைப் பொருள் உணர்த்தும்பொழுது ஏவல் ஒருமைகள் என்றும், வினைச்சொற்களின் முதல்நிலையாய் நின்று வினையை மாத்திரம் உணர்த்தி நிற்கும்பொழுது பகுதிகள் என்றும் வழங்கும் எனக் கொள்க.

முன்னிலைவினை இரண்டு வகைப்படும். ஒன்று முன்னின்றான் தொழிலையுணர்த்துவது; மற்றது முன்னின்றானைத் தொழிற் படுத்துவது. முன்னது, இ, ஐ, ஆய் என்னும் விகுதிகள் புணர்ந்து சென்றி, சென்றனை, சென்றாய் என வரும். பின்னது, செல், நட, வா, உண், தின் என விகுதி இன்றி வரும். இவ்விரண்டாம் வகையதாகிய முன்னின்றானைத் தொழிற்படுத்தும் வினையையே இவ்வாசிரியர் 'செய் யென்னே வல்' என்றார்.

தமிழ்மொழியில் ஏவல் ஒருமைவிகுதி இல்லலாத அடிச்சொல்லாக அமைந்து பண்ம் இன்றும் வழங்கி வருகிறது. இஃது இம்மொழியின் சிறப்பியல்பு. முன்னிற்பானை வினைப்படுத்துங்கால் திணை,பால், எண், இடமுணர்த்தும் விகுதி தேவையில்லை எனவும், பண்பட்ட வழக்கு மொழிகளில் முன்னிலை ஏவல் வினைகளில் விகுதி அமைவதில்லை எனவும் மொழியியல் அறிஞர் கூறுவர்.

வடமொழியின் அடிச்சொல்லமைப்பு நேர் முரணானது. அதன் அடிச் சொற்கள் இலக்கணக்காரரின் படைப்பே யன்றி இயல்பாக அமைந்து வழங்குவ தன்று என்பது சட்டர்சி என்பார் கருத்து.

வடமொழிப் பயிற்சிமிக்க சிவஞான முனிவர் வடமொழி மரபை யொட்டித் தமிழ்மொழியின் அடிச்சொல்லுக்கு இலக்கணங் கூற முனைந்து, நட, வா, முதலிய ஏவல்வினைகளில் ஆய் என்ற விகுதி புணர்ந்துகெட்டது என்றார். வடமொழி வல்ல சேனாவரையர்,

*செய்யா மென்னு முன்னிலை வினைச்சொல்*
*செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.*

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்குச் 'செய்யாய் என்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச் சொல், ஆய் என்னும் ஈறுகெடச் செய்யென்னுஞ் சொல்லாய் நிற்றலுடைத்து' என உரை கூறியுள்ளதை அவர்தம் கொள்கைக்கு ஆதரவாகக் கொண்டார். 'தமிழ்ச் சொல்லிற்கெல்லாம் வட நூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்' என்ற கொள்கையால் மொழியியல் உணராது அவர் அவ்வாறு கூறினார் என்க.

உண்ணாய் உண்ணாய் என்று ஊட்டினர், வாராய், வாராய் என்று வேண்டினர், தாராய், தாராய் என்று கெஞ்சினர் என உலகியல் வழக்கில் ஒருமையிலும்,

*உண்ணீ ருண்ணீரென் றூட்டாதார் தம்மனையில்*
*உண்ணாமை கோடி யுறும்*

எனச் செய்யுள் வழக்கில் பன்மையிலும் எதிர்மறை ஏவல் வினைமுற்றுக்கள் உடன்பட்டு ஏவற்பொருளில் அருகி வருதல் தொல்காப்பியர் காலத்திலும் வழக்கில் இருந்தமையையே அந் நூற்பா உணர்த்துகின்றது என்பது தமிழ் மொழியின் இயல்புணர்ந்தார்க்கு எளிதிற் புலனாகும். அஃது அருகிய வழக்கு என்பதைப் புலப்படுத்தவே 'ஆகிடனுடைத்து' என்றார். எனவே, செய்யென் வாய்பாட்டு ஏவலே பெருவழக்கு எனக் கொள்க.

(10)

**137. செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்**
**செய்வியென் னேவ லிணையினீ ரேவல்**

**செய் என் வினைவழி விப்பி தனி வரின்**
**செய்வி என் ஏவல் இணையின் ஈர் ஏவல்**

sey e<u>n</u> vi<u>n</u>aivaḷi vippi ṭa<u>n</u>i vari<u>n</u>
seyvi e<u>n</u> ēval iṇaiyi<u>n</u> īr ēval

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Casual imperatives

The addition of vi or pi to the simple root (of the Verb) makes its Casual Imperative, While the addition of both (vippi or pippi) makes it a double (Casual) Imperative.

## ஒப்புமைப் பகுதி

**முன்ன ரோதிய முதனிலை யிறுதியின்**
**விப்பி யென்பவற் றொப்பது தனிவரின்**
**ஏவல் வினைமுதற் தெரிநிலை வினையின்**
**மேவரு பகுதி யாமென மொழிப (இ.வி.:44)**

## மயிலைநாதர்

**எ—ன்,** 1செய்வி செய்விப்பி யென்னும் ஏவல்வினைப் பகாப்பதங்கள் உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** செய்யென்னும் ஏவல்வினையின் பின்பு வி பி என்னும் இரண்டினுள் ஒன்று வரிற் செய்வி யென்னும் பொருளைப் பெறும். [2]இவை யிரண்டும் [3]ஒருங்கு வரினும் ஒன்றே இணைந்து வரினும் ஏவன் மேலேவல் தோன்ற மூவராவானொரு கருத்தனைக் காட்டும், **எ—று.**

**வ—று.:** நடப்பி, வருவி, மடிவி, [4]சீப்பி, விடுவி, கூவுவி, ஏவுவி, வைவி, நொவ்வுவி, போவுவி, வெளவுவி, உரிஞுவி, உண்பி, பொருநுவி, திருமுவி, தின்பி, தேய்வி, தேய்ப்பி, பார்ப்பி, செல்வி, வவ்வுவி, வாழ்வி, கேட்பி, [5]அஃகுவி எனச் செய்வி யென்னும் ஏவல் வினைப்பகாப்பதம் வந்தவாறு. நடத்துவிப்பி, வருவிப்பி, மடிவிப்பி எனவும், நடப்பிப்பி, கற்பிப்பி எனவும் இரண்டும் இணைந்தும் ஒன்றே யிணைந்தும் செய்விப்பி யென்னும் ஏவன்மேல் ஏவற் பகாப்பதம் வந்தவாறு. இவற்றாற் பகுபதம் வருமாறு. நடத்து வித்தான், நடத்துவித்தாள், நடத்துவித்தார் எனவும்; நடப்பித்தான், நடப்பித்தாள், நடப்பித்தார் எனவும் வரும். இவ்வாறே எல்லாத் திணைபால் இடம் காலங்கள் தோறு மொட்டிச் செய்வி யென்னும் ஏவற்குப் பகுபதம் வந்தவாறு கண்டுகொள்க. நடத்துவிப்பித்தான், நடத்துவிப்பித்தாள், நடத்துவிப்பித்தார்; எனவும்; நடப்பிப்பித்தான் நடப்பிப்பித்தாள் நடப்பிப்பித்தார் கற்பிப்பித்தான், கற்பிப்பித்தாள், கற்பிப்பித்தார் எனவும்; எல்லாத் திணை பாலிடங்க தோறு மொட்டிச் செய்விப்பி யென்னும் இருமடி யேவற்குப் பகுபதம் வந்தவாறு காண்க. இவை யெல்லாம் ஏற்றபெற்றி கொள்க.

---

பாட வேறுபாடு.:— **1. செய்வி, செய்பி, செய்விப்பி 2. இவ்விரண்டும் 3. ஒருங்குவரின் ஏவல்மேல் ஏவல்தோன்றி மூவராவார்க்கொரு கருத்தனை 4.சீய்ப்பி 5.அஃகுபி.**

**சங்கரநமச்சிவாயர்**

**சிவஞானமுனிவர்**

**எ—னின்,** மேல் இரட்டுற மொழிந்தவற்றுள், ஏவற் ★*பகுதிக்கு*★ எய்தியதன்மேற் சிறப்பு விதி **உணர்—ற்று.**

**இ—ள்.:** மேற்கூறிய செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின் பின் வி பி என்னும் இவ்விரண்டு விகுதியினுள் ஒன்று வருமாயின் செய் என்னும் ஏவன்மேல் ஓர் ஏவலாய்ச் செய்வி என்னும் வாய்பாட்டு ★*ஏவற்பகுதியாம்*★; அவற்றின் பின் இவ் விகுதிகள் தன்னோடும் பிறிதோடும் இணைந்து வருமாயின் செய்விப்பி என்னும் வாய்பாட்டு ★*ஏவற் பகுதியாம்*★, **எ—று.**

விதந்த ஏவற்சிறப்பு வாய்பாட்டையெல்லாம் செய் என்னும் ஏவல் பொதுவாய்பாட்டுள் அடக்கி மேற்கூறலின் நட வா முதலிய வினைவழி என்பார் 'செய்யென் வினைவழி' என்றும், இவை பெருவழக்கல்ல என்பார் 'தனிவரின்' என்றும் 'இணையின்' என்றும், இவ்விகுதி ஒன்றும் இரண்டும் ஏற்ற பெற்றி வரும் என்பார் செய்பி என்னாது 'செய்வி' என்றும் கூறினார்.

★***உ.—ம்.:*** ***நடப்பியாய், நடப்பிப்பியாய், வருவியாய், வருவிப்பியாய் எனவும்; ஆய் விகுதி குன்றி நடப்பி, நடப்பிப்பி, வருவி, வருவிப்பி எனவும் வரும்.*** ★

நட வா முதலிய ஏவற்சிறப்பு வாய்பாட்டிற்கு இலக்கணம் கூறிய முகத்தே ஏவற் பொதுவாய்பாட்டிற்கும் செய் செய்வி செய்விப்பி எனக் கூறாக் கூற்றாய் இலக்கணம் அமைந்து கிடந்ததையின், இக் கூற்று **இரட்டுற மொழிதல் என்னும் உத்திக்கு இனம்.** இவை போல்வன பிறவும் அன்ன.

**கூழங்கைத்தம்பிரான்**

**சூ—ம்,** இருமடி யேவல் மும்மடி யேவல் வினைப் பகாப் பதங்கள் ஆமாறு உரைத்தது.

**இ—ள்.: செய்யென் வினைவழி** – செய்யென்னும் ஏவல் வாய்பாட்டு வினையின் பின், **விப்பி தனிவரில்** – விப்பி யென்னும் இரண்டினுள் ஒன்று தனித்து வரில், **செய்வியென் ஏவல்** – செய்வி என்னும் ஏவல் வாய்பாட்டு வினையென்னும் பொருளைப் பெறும், **இணையின்** – வி பி என்னும் இவை யிரண்டும் ஒருங்கு வரினும் ஒன்றே இணைந்து வரினும், **ஈரேவல்** – ஏவன்மேல் ஏவலொன்று மூவராவானொரு கருத்தனைக் காட்டும், **எ—று.**

**உ—ம்.:** வருவி, சீப்பி, கூவுவி, வைவி, போவுவி, நடப்பி, மடிவி, விடுவி, ஏவுவி, நொவ்வுவி, வௌவுவி, உரிஞுவி, உண்பி, பொருநுவி, திருமுவி, தின்பி, தேய்வி, தேய்ப்பி, பார்ப்பி, செல்வி, அவ்வுவி, வாழ்வி, கேட்பி, அஃகுவி எனச் செய்வி யென்னும் ஏவல் வாய்பாட்டு வினைப் பகாப்பதம் வந்தவாறு. நடந்துவிப்பி, வருவிப்பி, மடிவிப்பி என இரண்டும் ஒருங்கு வந்தன. நடப்பிப்பி, கற்பிப்பி, படிப்பிப்பி என ஒன்றே இணைந்து வந்தன. இவ்வாறு செய்விப்பி

என்னும் ஏவல் வாய்பாட்டு வினைப் பகாப்பதம் வந்தவாறு உணர்க. இவற்றாற் பகுபதம் வருமாறு: நடத்துவித்தான், நடத்துவித்தாள், நடத்துவித்தார் எனவும், நடப்பித்தான், நடப்பித்தாள், நடப்பித்தார் எனவும், இவ்வாறு எல்லாம் பால் இடம் காலங்கடோறும் ஒட்டிச் செய்வியென் ஏவற்குப் பகுபதம் ஆமாறு உணர்க. நடத்துவிப்பித்தான், நடத்துவிப்பித்தாள், நடத்துவிப்பித்தார் எனவும் நடப்பிப்பித்தான், நடப்பிப்பித்தாள், நடப்பிப்பித்தார், கற்பிப்பித்தான், கற்பிப்பித்தாள், கற்பிப்பித்தார் எனவும் எல்லாம் பால் இடம் காலங்டோறும் ஒட்டிச் செய்விப்பி என்னும் இருமடி யேவற்குப் பகுபதம் வந்தவாறு காண்க. இவை யெல்லாம் ஏற்ற பெற்றி கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஏவற்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

**இ—ள்.: செய்யென்** – செய் யென்னும் வாய்பாட்டு, **வினைவழி** – முதனிலைத் தனி வினையின் பின், **விப்பி** – விவ் விகுதியாவது, பிவ் விகுதியாவது, **தனிவரின்** – தனித்து வருமாயின், **செய்வி யென்னேவல்** – செய் யென்னு மேவலின்மே லோரேவலாய்ச் செய்வி யென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், **இணையின்** – அவ் வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின், **ஈரேவல்** – செய்விப்பி யென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், **எ—று.**

**உ—ம்.:** நடப்பியாய் – நடப்பிப்பியாய், வருவிப்பியாய் – வருவிப்பியாய் என வரும், (சிறுபான்மை **உரையிற்கோடல்** என்னு முத்தியால் கு–சு–டு–து–பு–று என்கிற ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும், சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படி வருமெனக் கொள்க.

**உ—ம்.:** போ – போக்கு, பாய் – பாய்ச்சு, உருள் – உருட்டு, நட – நடத்து, எழு – எழுப்பு, துயில் – துயிற்று எனவும், இயங்கு இயக்கு, திருந்து – திருத்து, தோன்று – தோற்று, ஆடு – ஆட்டு, தேறு – தேற்று, உருகு – உருக்கு எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஏவற்பகுதிகள் ஏவலின்மேல் ஒரேவல் ஈரேவலாதல் எப்படி?

செய்யெபன் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் னேவ லிணையி னீரேவல்
(செய்என் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வி என் ஏவல் இணையின் ஈரேவல்)

**இ—ள்.: செய்யென் வினைவழி** – செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின்பின், **விப்பி தனிவரின்** – விவ்விகுதியாயினும் பிவ்விகுதியாயினுந் தனித்து வருமாயின், **செய் என் ஏவல்** – செய்யென்னு மேவலின்மேல் ஒரேவலாய்ச் செய்வியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம்.

இணையின் **ஈர்** –ஏவல் அவ்வினையின்பின் இவ்விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், **எ–று.**

உ–ம்.: நடப்பியாய் நடப்பிப்பியாய் வருவியாய் வருவிப்பியாய் எனவரும்.

சிறுபான்மை உரையிற்கோடலொன்னு முத்தியால் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படி வருமெனக் கொள்க.

**உ–ம்.:** போ போக்கு பாய் பாய்ச்சு உருள் உருட்டு நட் நடத்து எழு எழுப்பு துயில்துயிற்று எனவும் இயங்கு இயக்கு திருந்து திருத்து தோன்று தோற்று ஆடு ஆட்டு தேறு தேற்று.

செய்விஎன்னும் வாய்பாட்டேவலாவது யாது?

"செய்யென் வினைவழி விப்பி தனிவரிற் செய்வியெனேவல்"

ஏவலின்மே லீரேவலாதற்கு எப்படியாகும்?

"இணையினீரேவல்"

இங்கே கூறிய விகுதிகளன்றி ஏவற்பகுதிகள் வேறு விகுதி பெறுதலில்லையோ?

கு சு டு து பு று என்னும் ஆறு விகுதிகளிலொன்று பெற்றும் வரும்.

**உ–ம்.:** போக்கு பாய்ச்ச உருட்டு நடத்து எழுப்பு துயிற்று எனவரும்.

ஏவற்பகுதிகள் விகுதிபெறாது வேறுவகையால் ஏவல்மேல் ஏவலாதலில்லையோ?

இயங்கு – இயக்கு, திருந்து – திருத்து, தோன்று – தோற்று, ஆடு– ஆட்டு, தேறு– தேற்று, உருகு – உருக்கு, என விகாரப்பட்டும் வரும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, ஏவல் வினைக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

**இ–ள்.: செய்யென் வினைவழி** – மேற்கூறிய செய் யென்னும் பொதுவாய்பாட்டை யுடைய நட வா முதலிய ஏவற்சிறப்பு வாய்பாடுகளின் பின், **விப்பி தனி வரின்** – வி பி என்னும் இவ் விரண்டு விகுதியு ளொன்று தனி வருமாயின், **செய்வி யென் னேவல்** – (செய்யென்னும் ஏவல் மேலோரேவலாய்ச்) செய்வி யென்னும் வாய்பாட்டு ஏவல் வினைகளாம், **இணையினீரேவல்** – (அவற்றின் பின்) இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்யென்னும் ஏவல் மேல் இரண் டேவலாய்ச் செய்விப்பி யென்னும் வாய்பாட்டு ஏவல்வினைகளாம், **எ–று.**

நட வா முதலிய சிறப்பு வாய்பாடுகளை யெல்லாம் செய் யென்னும் பொதுவாய்பாட்டுள் அடக்கி மேற் கூறினாராதலால் செய்யென் வினை வழி யென்றார்.

**உ–ம்.:** நடப்பி, வருவி எனவும், நடப்பிப்பி, வருவிப்பி எனவும் வரும். பகுதியோடு ஏவல்வினைக்கு மிலக்கணங் கூறினாராதலால் ஏவப்படுந் தெரிநிலை வினைப்பகுதிகட்கும் இவற்றை விகுதியொடு புணர்த்து நடப்பித்தான், வருவித்தான் எனவும், நடப்பிப்பித்தான் – வருவிப்பித்தான் எனவுங் காண்க. மற்றப் பகுதிகளோடு மிவ்வாறே கூட்டிக் கொள்க. நட – நடப்பி – நடப்பிப்பி என்பன முறையே ஏவல் வினைமுதல், இயற்றும் வினைமுதல் ஒன்றும் இரண்டும் மூன்றும். இருவருள் மூவருள் நால்வருள், ஒருவர்க்கு ஒரு கருத்தனையும், இருவர்க்கு ஒரு கருத்தனையுந் தருமெனக் காண்க. பிறவுமன்ன. இனித் தனிவரின் என்றும், இணையின் என்றும் பராமுகமாகக் கூறியதினாலே இவை வாராக்கால் பிற விகுதிகள் வருமென்பது பெறப்பட்டது. அவையாவன கு, சு, டு, து, பு, று என்பன.

**உ–ம்.:** போக்கு, பாய்ச்சு, ஊட்டு, நடத்து, எழுப்பு, பயிற்று என முறையே காண்க. இனி **யுரையிற் கோடலென்னும்** உத்தியால் சிறுபான்மை விகாரங்களும் பிறவினைப்படுத்த வருமெனக் கொள்க.

**உ–ம்.:** இறுகு, இறுக்கு, ஆடு, ஆட்டு, வருந்து, வருத்து, எழும்பு, எழுப்பு, தேறு, தேற்று என வரும். இனி விகுதியொடு புணர்ந்து விகாரப்பட்டுஞ் சிறுபான்மை பிற வினையாவனவு முளவெனக் கொள்க.

**உ–ம்.:** தேய்ந்தான் – தேய்த்தான், தீர்ந்தான் – தீர்த்தான், தெரிந்தான் – தெரித்தான், பிரிந்தான் – பிரித்தான், எரிந்தான் – எரித்தான் என்றாற் போல்வன வெனக் காண்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– செய் என் வினைவழி** – செய் என்னும் வாய்பாட்டு முதனிலைகளின் பின், **வி பி தனிவரின்** – விவ்விகுதியாவது பிவ்விகுதியாவது தனித்துவருமாயின், **செய்வி என் ஏவல்** – (செய் என்னும் ஏவலின் மேல் ஓரேவலாய்ச்) செய்வி யென்னும் வாய்பாட்டு ஏவற்பகுதியாம்; **இணையின்** – (அவ்வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும்) இணைந்து வருமாயின், **ஈரேவல்**–செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவற்பகுதியாம்.

**உ–ம் :–** செய்வியாய்–நடப்பியாய் – **வி.பி.** தனித்துவந்தன.

| | | |
|---|---|---|
| நடப்பிப்பியாய் | – | பி தன்னொடு இணைந்து வந்தது. |
| நடப்பிவியாய் | – | பி பிறிதொடு இணைந்து வந்தது. |
| வருவிப்பியாய் | – | வி பிறிதொடு இணைந்து வந்தது. |

(வி. தன்னொடு இணைந்து வருவதில்லை)

**குறிப்பு :–** இனி, 'செய்யென் வினைவழி' எ[illegible]த்த லோசையால் பொருள் உணர்த்திநின்ற 'செய்' என் வா[illegible]ருமை வினைமுற்றின் பின் எனவும், 'செய்வி என் ஏவல்' [illegible] அவ்வேவல் வினைமுற்றின்மேல் ஓரேவலாய்ச் 'செய்வி' என்னும் வாய்பாட்டு ஏவல் முற்றாம்

எனவும், 'ஈரேவல்' என்றதற்குச் 'செய்விப்பி' என்னும் வாய்பாட்டு ஏவல்வினைமுற்றாம் எனவும் பொருளுரைக்கலாம்.

சிறுபான்மை **உரையிற் கோடல்** என்னும் உத்தியால் கு, சு, டு, து, பு, று என்கிற ஆறுவிகுதிகளுள் ஒன்று பெற்றும், சில பகுதிகளின் மெல்லொற்று வல்லொற்றாகியும், நடுவில் ஒரொற்றுத் தோன்றியும் பிற வினையாதலும் உண்டு.

**உதாரணம்.**

1. – போ– போக்கு, பாய் – பாய்ச்சு, உருள் – உருட்டு,
நட–நடத்து, எழு–எழும்பு, பயில்–பயிற்று.

2. – இயங்கு–இயக்கு, திருந்து–திருத்து, திரும்பு–திருப்பு,
தோன்ற–தோற்று. எனவரும்

3. – உருகு–உருக்கு, ஒடு–ஒட்டு, ஏறு–ஏற்று.

இவ்வாறன்றித் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகச் சில பகுதிகளும் உண்டு. அவை : கரை, தெய், உடை, சேர், அலை, மடி, அழி, இடி, மாய் முதலியன. இவை தன் வினையாங்கால் கரைந்தான், கரைகிறான், கரைவான் என முறையே இறந்தகாலத்தில் சந்தித்தகரம் நகரமாகியும், நிகழ்காலத்தில் இடையில் மெய் இயல்பாகியும், எதிர்கலத்தில் வகர இடைநிலை பெற்றும்; பிறவினையாங்கால் கரைத்தான், கரைக்கிறான், கரைப்பான் என முறையே இறந்தகால நிகழ்காலங்களில் இடைநிலை மெய்மிகுந்தும், எதிர்காலத்தில் பகர இடைநிலைபெற்று மிகுந்தும்; எதிர்மறையில் குச்சாரியை பெற்றும் வருமென்றறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: செய் என் வினைவழி விப்பி தனி வரின்** – செய் யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனி வினையின் பின் விவ் விகுதி யாயினும் பிவ் விகுதி யாயினுந் தனித்து வருமாயின், **செய்வி என்ஏவல்** – செய் யென்னு மேவலின் மேல் ஓரேவலாய்ச்ச செய்வி யென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், **இணையின் ஈரேவல்**– அவ் வினையின் பின் இவ் விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பி யென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், **எ–று.**

**உ–ம்.:** நடப்பிபாய், நடப்பிப்பியாய், வருவியாய், வருவிப்பியாய் என வரும்.

சிறுபான்மை **உரையிற்கோடலென்னு** முத்தியால், கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படி வருமெனக் கொள்க.

**உ–ம்.:** போ போக்கு, பாய் பாய்ச்சு, உருள் உருட்டு, நட நடத்து, எழு எழுப்பு, துயில் துயிற்று எனவும், இயங்கு இயக்கு, திருந்து திருத்து, தோன்று தோற்று, ஆடு ஆட்டு, தேறு தேற்று, உருகு உருக்கு, எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். செய் என் வினை வழி – செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனி வினையின்பின், – விப்பி தனிவரின் செய்வியென் ஏவல் – விவ்விகுதியாயினும் பிவ்விகுதியாயினுந் தனித்து வருமாயின் செய்யென்னு மேவலின்மேல் ஓரேவலாய்ச் செய்வியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், – இணையின் ஈரேவல் – அவ்வினையின்பின் இவ்விகுதிகள் தன்னொடும் 'பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற்பகுதியாம்.'

உ–ம். நடப்பியாய், நடப்பிப்பாய்; வருவியாய், வருவிப்பாய் எனவரும்.

உரையிற் கோடலென்னு முத்தியால் சிறுபான்மை கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சில பகுதிகளிலிருக்கிற மெல்லொற்று வல்லொற்றாகத் திரியப் பெற்றும், சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படியே பிறவினையாய் வருமெனக் கொள்க.

உ–ம். போ–போக்கு, பாய்–பாய்ச்சு, உருள்–உருட்டு, நட–நடத்து, எழு–எழுப்பு, துயில்–துயிற்று. இவை கு, சு, டு, து, பு, று விகுதிபெற்று வந்தன. இயங்கு – இயக்கு, திருந்து – திருத்து, தோன்று – தோற்று. இவை மெல்லொற்றுவல்லொற்றாகத் திரிபுற்றதினாற் பிறவினைகளாயின. உருகு–உருக்கு, ஆடு – ஆட்டு, ஆறு–ஆற்று, தேறு–தேற்று. இவை நடுவே இரட்டித்தலாகிய விகாரம் பெற்றுப் பிறவினைகளாயின.

நட, வா முதலிய சிறப்பு வாய்பாடுகளையெல்லாம் செய்யென்னும் பொதுவாய்பாட்டுள் அடக்கி முற்சூத்திரத்திற் கூறினாராதலின் செய்யென் வினைவழியென்றார். எனவே, நட, வா முதலிய பகுதிகளின் வழி விப்பிவரின் என்று கூறியவாறாம்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: செய் என் வினை வழி** – செய் என்னும் வாய்பாட்டு முதனிலைகளின் பின், **வி பி தனிவரின்** – 'வி' விகுதியாவது 'பி' விகுதியாவது தனித்து வருமாயின், **செய்வி என் ஏவல்** – (செய் என்னும் ஏவலின் மேல் ஓரேவலாய்ச்) செய்வி என்னும் வாய்பாட்டு ஏவலொருமையாம்; **இணையின்** – ('செய்' என் வினையின் பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும்) இணைந்து வருமாயின், **ஈர் ஏவல்** – செய் யென்னும் ஏவலின்மேல் ஈரேவலாய்ச் செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவலொருமை யாம்; **எ–று.** இரண்டு + ஏவல் = ஈரேவல். ஏவலின்மேல் ஏவல் என்க; இருமடியேவல்.

**உ–ம்.:** வருவி, நடப்பி – வி, பி தனித்து வந்தன; ஓரேவல். நடப்பிப்பி – பி, தன்னோடு இணைந்து வந்தது. ஈரேவல். வருவிப்பி – வி, பிறிதோடு இணைந்துவந்தது. 'வி' விகுதி, தன்னோடு இணைந்து வாராது.

இவ் வினைமுற்றின் தன்மையை மேல் வினையிபலிற் கூறாது இங்கே

கூறியது, இவை பகுதி மாத்திரமாய் நிற்றலாலும், பகுதி இங்கு அதிகாரப்பட்டிருத்தலாலு மென்க.

இனி, **உரையிற்கோடல்** என்னும் உத்தியால், சில பகுதிகள் கு, சு, டு, து, பு, று என்கிற விகுதிகளுள் ஒன்றைப் பெற்றும், சில பகுதிகள் இடையிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்தும், தன் ஒற்று இரட்டியும் பிறவினையாக வருமெனக் கொள்க.

உ–ம்.: (1) போ – போக்கு, பாய் – பாய்ச்சு, உருள் – உருட்டு, நட – நடத்து. எழு – எழுப்பு, பயில் – பயிற்று = பிற விகுதி பெற்றன.

(2) திருந்து – திருத்து, தோன்று – தோற்று– மெலி வலியாயின.

(3) உருகு – உருக்கு, ஆடு – ஆட்டு – தன் ஒற்று இரட்டின.

இவ்வாறன்றி, சில வினைப்பகுதிகள் தன்வினை பிறவினைகட்குப் பொதுவாம்; **உ–ம்.:** கரை, தேய், மறை, உடை, அலை, சேர், மடி முதலியன.

இத் தன்மையனவான பகுதிகள் இவ் விகுதி வேண்டாமல் கரைத்தான், தேய்த்தான், கரைத்திலன், தேய்த்திலன், கரைக்கின்றான், தேய்க்கின்றான், கரைக்கின்றிலன். தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான்; கரைக்கான், தேய்க்கான் எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிக்கும்; கரைந்தான், தேய்ந்தான்; கரைந்திலன், தேய்ந்திலன்; கரைகின்றான், தேய்கின்றான்; கரைகின்றிலன், தேய்கின்றிலன்; கரைவான், தேய்வான்; கரையான், தேயான் எனத் தன்வினைப் பொருளைத் தரும்போது "வல்லெழுத்து மிகாமலும் வருமென்று அறிக. இப் பகுதிகள் எதிர்கால வினைமுற்றில் பிற வினைப்பொருட்குப் பகர இடைநிலையையும், தன்வினைப் பொருட்கு வகர இடைநிலையையும் ஏற்று நிற்கும்.

**பவானந்தம் பிள்ளை**

இ–ள். செய் என் வினை வழி – செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின் பின், விப்பி தனி வரின் – வ்விகுதியாயினும் பிவ்விகுதியாயினுந் தனித்து வருமாயன், செய்வி என் ஏவல் – செய்யென்னும் ஏவலின் மேல் ஓரேவலாய்ச் செய்வியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம். இணையின் ஈரேவல் – அவ்வினையின் பின் இவ்விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம். எ–று.

உ–ம். நடப்பியாய், நடப்பிப்வியாய், வருவியுாய், வஸாவிப்வியாய்.

சிறுபான்மை உரையிற்கோடலென்னும் உத்தியால், கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும், சில பகுதிகள் விகாரப்பட்டும், அப்படி வருமெனக் கொள்க.

உ–ம். போ – போக்கு; பாய் – பாய்ச்சு; உருள் – உருட்டு; நட – நடந்து; எழு – எழுப்பு; துயில் – துயிற்று; இயங்கு – இயக்கு; திருந்து – திருத்து; தோன்று – தோற்று; ஆடு – ஆட்டு; சேறு – சேற்று; உருகு – உருக்கு.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) செய் என் வினைவழி–செய் யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின்பின், வி பி தனிவரின்–விவ் விகுதியாவது பிவ் விகுதி யாவது தனித்து வருமாயின், செய் வி என் ஏவல்– (செய் என்னு மேவலின்மேல் ஒரே வலாய்ச்) செய்வி என்னும் வாய்பாட் டேவற்பகுதியாம்; இணையின்– (அவ் வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும்) இணைந்து வருமாயின், ஈரேவல்–செய்விப்பி என்னும் வாய்பாட்டேவற் பகுதியாம். எ–று.

**பொ–ரை.:** செய் என்னும் வாய்பாட்டு வினைப்பகுதிகளின்பின் வி, பி என்பவைகளில் ஒன்று வந்தால், செப்வி என்னும் ஏவலின் மேல் ஓர் ஏவல் ஆம்; இவ் விகுதிகளுள் ஒன்று தன்னோடு தான் ஆவது, பிறிது ஆவது இணைந்து வந்தால், செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஈர் ஏவல் ஆம்.

(உ–ம்.) வருவியாய், நடப்பியாய் – வி, பி தனித்து வந்தன– இவை பிறவினை ஒரேவல்.

நடப்பிப் பியாப் – பி, தன்னொடு இணைந்து வந்தது.

வரு விப்பியாய் – வி, பிறிதொடு இணைந்து வந்தது. – இவை பிறவினை ஈரேவல்.

('வி' விகுதி தன்னொடு இணைந்து வாராது.)

நடவாய் என்னும் ஏவல் வினைமுற்றில் ஏவும் வினைமுதல் ஒன்றும், இயற்றும், வினைமுதல் ஒன்றும்; நடப்பியாய் என்னும் முற்றில் ஏவும் வினைமுதல் இரண்டும், இயற்றும் வினைமுதல் ஒன்றும்; நடப்பிப்பியாய் என்னும் முற்றில் ஏவும் வினைமுதல் மூன்றும் இயற்றும் வினைமுதல் ஒன்றும் அடங்கி நிற்றல் காண்க.

இனி, சிறுபான்மை உரையிற் கோடல் என்னு முத்தியால் சிலபகுதிகள் கு, ச, டு, து, பு, று என்னும் ஆறுவிகுதிகளுள் ஒன்று பெற்றும், சில பகுதிகள் இடையிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்தும், தன் னொற்றிரட்டியும் பிறவினையாய் வருமெனக் கொள்க. (உரையிற் கோடல்–உரையாற் கொள்ளுதல்; அதாவது–கு, சு, டு, து, பு, று என்னும் விகுதி முதலிய வற்றைக் கொள்ளுதல்.)

(உ–ம்) போ – போக்கு

பாய் – பாய்ச்சு

உருள் – உருட்டு

நட – நடத்து

எழு – எழுப்பு

துயில் – துயிற்று – இவை கு, சு, டு, து, பு, று விகுதிகள் பெற்றுப் பிறவினையாயின.

இயங்கு – இயக்கு

திருந்து – திருத்து

தோன்று – தோற்று – இவை மெல்லொற்று வல்லொற்றாய்ப் பிறவினையாயின.

ஆடு – ஆட்டு

தேறு – தேற்று

உருகு – உருக்கு – இவை தன்னொற்று இரட்டிப் பிறவினையாயின. (தன்னொற்று பகுதியின் ஒற்று.)

## கா. நமசிவாய முதலியார்

**செய் என்** – செய் என்னும் வாய்பாட்டு, **வினைவழி** – முதனிலைத் தனிவினையின் பின், **வி பி** – வில்விகுதியாவது பிவ்விகுதியாவது, **தனி வரின்** – தனித்து வருமாயின், **செய்வி என் ஏவல்** – செய்வி என்னும் வாய்பாட்டு ஏவற் பகுதியாம் ; **இணையின்** – (அவ்வினையின்பின் இந்த விகுதி தன்னொடும் பிறிதொடும்) இணைந்து வருமாயின், **ஈரேவல்** – செய்விப்பி யென்னும் வாய்பாட்டு ஏவற் பகுதியாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| வருவி | – | வி தனித்து வந்தது. |
| நடப்பி | – | பி தனித்து வந்தது. |
| நடப்பிப்பி | – | பி தன்னோடு இணைந்து வந்தது. |
| நடப்பிவி | – | பி பிறிதோடு இணைந்து வந்தது. |
| வருவிப்பி | – | வி பிறிதோடு இணைந்து வந்தது. |

வி – விகுதி தன்னோடு இணைந்து வருதலில்லை.

## மோசசு பொன்னையா

செய் என்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின் பின், விவ் விகுதியாயினும் பிவ் விகுதியாயினும் தனித்து வருமாயின்,செய் என்னும் ஏவல் மேல் ஓர் ஏவலாய்ச் செய்வி என்னும் வாய்பாட்டு ஏவற் பகுதியாம்; அவ்வினையின் பின், இவ்விரு விகுதிகளும் தன்னோடும் பிறிதோடும் இணைந்து வருமாயின், செய்வி என்னும் வாய்பாட்டு ஈரவேற் பகுதியாம், எ–று.

**எ–டு.**

வருவி, நடப்பி – செய்வி என்னும் வாய்பாட்டு ஓரேவல்.

செய்விப்பி, நடப்பிப்பி – செய்வி என்னும் வாய்பாட்டு ஈரேவல்.

இவற்றுள் செய் என்னும் வாய்பாட்டுவினை தன்வினைப் பகுதியும் ஏவலுமாகும்; ஏனைய பிறவினைப் பகுதிகளும் ஏவல்களுமாகும்.

போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு எனவிவ்வாறு குற்றியலுகர ஈற்றவாய் வன்னிலைப்பட்டு வரும் பிற வினைப்பகுதிகள் செய்வி என்னும் வாய்பாட்டுள் அடங்காது வருவன. அவற்றையும் உரையிற் கோடலால் அடக்குக.

தமிழ் மொழியில் தன்வினையே பிறவினையாகவும் வழங்குதல் மரபு என்பது, அரசன் கட்டின கோட்டை, குளம், அரண்மனை எனவும், வள்ளல் வைத்த சோலை, தண்ணீர்ப்பந்தல், ஊட்டுப்புரை எனவும், கோழி கூவிப்பொழுது புலர்ந்தது எனவும் வழங்குவதாலும்; உரற்கால் யானை ஒடித்துண்டு எஞ்சிய எனவும், குடிபொன்றக் குற்றமுமாங்கே தரும் எனவும் இலக்கியங்களில் இடம் பெறுவதாலும் புலனாகும். குற்றியலுகர ஈற்றவாய் வன்னிலைப்பட்டு வரும் பிறவினைஅமைப்பும் பழங்காலந் தொட்டே வழக்கிலிருந்தது என்பது, புறம்போக்கி, அன்புநீர் பாய்ச்சி, அலவனாட்டியும், தெய்வம் சேர்த்திய, கிள்ளையோப்பியும், நின்உடற்றியோர், என இவ்வாறு காணப்படும் இலக்கிய வழக்கால் போதரும். தன்வினைப் பகுதிகளோடு முன்னிலைக்குரிய இகரம் புணர்ந்து ஏற்ற கால எழுத்துப் பெற்றும் பெறாமலும் பிறவினைகளாக வழங்குதலும் பண்டை வழக்கே என்பது, கொடுப்பித்து, சிறப்பித்தோன், அறீஇயினேன், அறீஇ, அசைஇ, என்ற பழந்தமிழ் இலக்கிய வழக்கால் தெளிவுறும். இவற்றைப் பண்டைஇலக்கண நூலார் தனிநிலையில் வைத்து இலக்கணஞ் செய்யவில்லை.

வீரசோழிய ஆசிரியர் வடமொழி மரபையொட்டித் தன் வினையைக் கேவலதாது எனவும் பிறவினையைக் காரித்தாது எனவும் வேறுபாடு கற்பித்துப் பெயரிட்டாண்டார். அதன் உரைகாரர், ஆகு, அடு கேவலதாது என்றும், ஆக்கு, அட்டு காரிதம் என்றும், அவற்றைத் தொடர்ந்து வி, பி சேர்ந்தால் காரிதக் காரிதம் என்றும், வி,பி இரு முறை சேர்ந்தால் காரிதக் காரிதக் காரிதம் என்றும் விரித்துரைத்தார். வினையோடு, வி, பி நேரே சேர்ந்து பிறவினையமைவதைப் பற்றி அவ்வுரை ஏதுங் கூறவில்லை. பிரயோக விவேக ஆசிரியர் பிறவினையைக் காரிதம் எனக் குறிப்பிட்டு, ஈற்றொற்றிரட்டியுங் காரிதம் தோன்றும் என்றார். இவ்வாசிரியர் ஈற்றொற்று இரட்டித்தும் பிறவாறும் வன்னிலைப்பட்டு அமையும்பிறவினை பற்றி யாதுங் கூறாதுவிடுத்தார். செய் என்னும் வாய்பாட்டு வினையோடு வி,பி இணைவதால் அமையும் பிறவினையை இவ்வாசிரியர் செய்வி என்னும் வாய்பாட்டுவினை என்க என விதியமைத்தார். அவ்விரு விகுதிகளும் தன்னோடும் பிறிதோடும் இணைந்துவர அமையும்வினையைச் செய்வி என்னும் வாய்பாட்டு ஏவலின் ஈரவேல் என்றார்.

நச்சினார்க்கினியர், "நடத்துவிப்பி, வருவிப்பி, நடப்பிப்பி எனவும் வரும்" என்று கூறி, இவற்றை இருமடி ஏவல் என்பாரும் உளர். இவற்றை இருகால் ஏவுதல் கூறியது கூறல் ஆம் ஆதலின், இவை இழிவழக்கு என

மறுக்க என்றார். இலக்கண விளக்க ஆசிரியர் வி, பி சேர்ந்து செய்வி என அமையும் செய்வி என்னும் வாய்பாட்டு ஏவலை ஏற்று, ஈரேவலை ஏற்றுக்கொள்ளாது விடுத்தார். தன்வினை, பிறவினை என்ற பெயரைத் தோற்றுவித்து எடுத்தாண்ட முதல்இலக்கண நூலார் இலக்கணக் கொத்து ஆசிரியரே எனத் தெரிகிறது. அவர்,

*முதனிலை திரிந்துந் திரியா தாகியும்*
*இருவகை யாகிய இவ்வினை ஏற்றின்*
*விப்பி இணைந்தும் வெவ்வே [illegible]*
*இயன்றெண் வகையாம் பிறவினை [illegible]*

எனக் கூறிப் பிறவினை எண்வகையாற்றோன்றும் என்று வரையறையும் அமைத்தார்.

(11)

## 138. விளம்பிய பகுதிவே றாதலும் விதியே.

**விளம்பிய பகுதி வேறு ஆதல் உம் விதி ஏ.**

viḻampiya pakuṭi vēṟu āṭalum viṭiē.

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Exception to the imperatives**

Even Roots of Verbs may undergo change

### மயிலை நாதர்

**எ–ன்,** பகுதிக்குரியதோர் [1]விதி யுணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** மேற்சொன்ன எனைவகைப் பகுதிகளுள்ளும் சில பொருளான் வேறுபட்டும் சில மிக்கும் சில திரிந்தும் சில ஈறுகெட்டும் நிற்கையும் குற்றமாகா, எ–று.

நட வா மடி சீ என்றற் றொடக்கத்து வினைப் பகாப் பதங்கள் முன்னிலைப் பொருளவேனும் ஏனை யிடங்களுக்கும் திரிந்தும் பொருளேற்கும்.

வ–று.: வா என் பகுதி, வந்தான் வருகின்றா னென்புழி மகரம் மிக்கும் திரிந்தும் வரும். கொள்ளென்பகுதி, கொண்டான், கோடு, கோடும் என்புழி ளகாரம் ணகாரமாகியும் கெட்டும் ஆதி நீண்டும் வந்தது. கொல், செல், வெல் என்னும் பகுதிகள் கொன்றான், சென்றான், வென்றான்; கோறு கோறும், சேறு

---

பாட வேறுபாடு.:–

1. இலக்கணம்

சேறும், வேறு வேறும் என்புழி லகாரம் னகாரமாகியும் கெட்டும் ஆதி நீண்டும் வந்தன. வலைச்சி, புலைச்சி, [1]குயத்தி, கணவாட்டி என்றற் றொடக்கத்துப் பெயர்ப் பகுபதங்க ளெல்லாம், வலைமை, புலைமை முதலான பெயர்ப் பகாப்பதத்து ஈறுகெட்டு இ ஏற்று வந்தன. ஆசுவி, சன்னாலி, ஏனாதி, சேமாறி, [2]கைவாரி, திருவிலி, பரிவிலி, அறிவிலி, பொறியிலி, நாளோதி, நூலோதி என்றற் றொடக்கத்தனவும் ஈறுகெட்டன. பிறவும் இதுவே நிலனாகப் பகுதிக்கு வருவன வெல்லாம் வருவித்துக் கொள்க.

## சங்கரநமச்சிவாயர்

## சிவஞானமுனிவர்

**எ–னின்,** வினைப்பகுதிக்கு ஆவதோர் புறனடை **உணர் – ற்று.**

**இ–ள்.:** ஏவற்பகுதி வேறாதல் போல, அதன் பின்னே விளம்பிய வினைப்பகுதி வேறாதலும் விதியாம், விலக்கன்று, **எ–று.**

**உ–ம்.:** நடத்தினான், நடப்பித்தான், நடப்பிப்பித்தான், நடத்துவித்தான், நடத்துவிப்பித்தான் என வரும். பிறவும் அன்ன.

ஈண்டும் விப்பிகள் ஏற்றபெற்றி கொள்க.

இவற்றுள், நட என்னும் தன்வினைப் பகுதி பிறவினைப் பகுதியாய் வேறுபட்டு நின்றவாறு காண்க. வேறுபடாதது பிரகிருதியா மன்றி வேறுபட்டது பிரகிருதி யாகாதேனும் தந்தையைக் குறிக்க மகனெனப்பட்டான் ஒருவன் தன்மகனைக் குறிக்கத் தந்தையானாற் போல, பிற வினைப்படுத்த வரும் இவ் விகுதிகளும் மேல்வரும் அன் ஆன் முதலிய விகுதிகளைக் குறிக்கப் பகுதியாம் ஆதலின் 'விதியே' எனப் புறனடை தந்தார். ★***முன்னர் ஏவற் பகுதி வேறுபட்டமையும் அன்ன***★.

இச்சூத்திரத்திற்கு வா என் பகுதி முதலியன வந்தான் வருகின்றான் என விகாரப்படுதலைப் பொருளாகக் கூறுவாரும் உளர். இவ் விகாரங்கள், பகுபதவுறுப்பாக மாட்டெறிந்து கொண்ட மூன்று சந்தியுள்ளும் ஒன்பது விகாரத்துள்ளும் அமைந்து கிடத்தலின் அது பொருந்தாது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** பகுதிக்கு உரியதோர் விதி கூறியது.

**இ–ள்.: விளம்பிய பகுதி** – மேற் கூறிய எனைவகைப் பகுதிகளுள்ளும், **வேறாதலும்** – சில பொருள் வேறுபட்டும் சில மிக்கும் சில திரிந்தும் சில ஈறுகெட்டும் வருவது, **விதியே** – முறைமையாம், **எ–று.**

---

**பாட வேறுபாடு.:–**

1. குசத்தி

2. கைமாறி

**உ–ம்.:** வா என் பகுதி வந்தான், வருகின்றான் என மிக்கும் திரிந்தும் வந்தது. கொள் என் பகுதி கொண்டான், கோடு, கோடும் என ளகாரம் ணகாரமாகியும் கெட்டும் நீண்டும் வந்தது. கொல், செல், வெல் என்னும் பகுதி கொன்றான், சென்றான், வென்றான், கோறு, கோறும், சேறு, சேறும், வேறு, வேறும் என லகாரம் னகாரமாகியும் கெட்டும் நீண்டும் வந்தன. இவ்வாறே பிறவுமுள்ள பகுதிக்கு வரும் வேறுபாடெல்லாம் அறிந்து முடிக்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** வினைப்பகுதிக்கு ஆவதோர் புறநடை உணர்த்துகின்றது.

விளம்பியபகுதி – ஏவற்பகுதி வேறாதல்போல அதன் பின்னே சொல்லப்பட்ட மற்றை வினைப் பகுதிகள், **வேறாதலும்** – வேறுபடுதலும், **விதியே** – விதியேயாகும், **எ–று.**

**உ–ம்.:** நடத்தினான், நடப்பினான், நடத்துவிப்பித்தான் என வரும். இங்கே தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளானமை காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பகுதிக்குப்புறனடைகூறுஞ் சூத்திரம் யாது?

விளம்பிய பகுதிவே றாதலும் விதியே

(விளம்பிய பகுதி வேறாதலும் விதியே)

**விளம்பிய பகுதி** – சொல்லப்பட்ட பகுதிகள், **வேறாதலும் விதியே** – வேறுபட்டு வருதலும் விதியேயாகும், **எ–று.**

**உ–ம்.:** வந்தான் வருகிறான் என்பனவற்றில் வா என்னும் பகுதி வ எனவும் வரு எனவும் வேறுபட்டு வந்தமை காண்க. அவ்வாறே செத்தான் என்பதில் என்னும் பகுதி வேறுபட்டது.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** வினைப்பகுதிகளுக்குப் புறனடை யுணர்த்திற்று.

**இ–ள்.: விளம்பிய பகுதிவேறாதலும்** (ஏவற்பகுதிகள் வேறாதல் போல) மேற் சொல்லிய வினைப்பகுதிகள் வேறாதலும், **விதி** – இலக்கண முறையாம், **எ–று.**

**உ–ம்.:** நடப்பித்தான், வருவித்தான், நடத்துவித்தான், நடத்துவிப்பித்தான் என வரும்; பிறவுமன்ன. இவற்றுள் நட வா என்னுந் தன்வினைப் பகுதி பிற வினைப் பகுதிகளாய் நடப்பி – வருவி – நடத்துவி, நடத்துவிப்பி என நின்று, மேல்வரும் விகுதிகளொடு புணர்ந்து, ஏவப்படுந் தெரிநிலை வினைப்பகுதிகளாய் நின்றமை காண்க.

இனி, இச்சூத்திரத்திற்கு, வா வென்பகுதி முதலியன வந்தான், வருகின்றான் என விகாரப்படுதலைப் பொருளாகக் கூறுவாருமுளர். அவ் விகாரங்கள் பகுபத உறுப்பாகிய மூன்று சந்தியுள்ளும் ஒன்பது விகாரத் துள்ளும் அமைந்து கிடத்தலால் அது பொருந்தா தென்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– விளம்பிய பகுதி** – (ஏவற்பகுதி வேறாதல் போல அதன் பின்னே) சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள், **வேறு ஆதலும்**– வேறுபடுதலும், **விதியே** – விதியாகும்.

**உ–ம் :**– நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான் எனவரும். (இங்கே தன் வினைப்பகுதிகள் பிறவினைப் பகுதிகளானமைகாண்க.)

**குறிப்பு** :– 'செய்யனேவல்வினைப்பகாப்பதம்' என்பதில் ஏவற்பகுதி, வினைப்பகுதி என இரண்டாகக் கூறியவற்றுள் முன்னையது பிறவினை யாதலை, 'செய் என்வினைவழி' என்னும் சூத்திரத்தானும், பின்னையது பிறவினையாதலை இச்சூத்திரத்தானும் கூறினார் என்றறிக. இனி, 'நடவா' என்னும் சூத்திர உரையில் பகுதி விகாரப்படுதலை இச்சூத்திரத்துக்குப் பொருள் கூறுவாருமுளர்; அவ்விகாரங்கள் பகுபத உறுப்பாகிய மூன்று சந்தியுள்ளும், ஒன்பது விகாரத்துள்ளும் அமைந்து கிடத்தலால் அது பொருந்தாதென்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: விளம்பிய பகுதி** – ஏவற் பகுதி வேறாதல்போல அதன்பின்னே சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள், **வேறு ஆதலும் விதியே** – வேறுபடுதலும் விதியேயாகும். **எ–று.**

**உ–ம்.:** நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான் என வரும். இங்கே தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளானமை காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். விளம்பிய பகுதி** – ஏவற்பகுதி வேறாதல்போல அதன்பின்னே சொல்லப்பட்ட வினைப்பகுதிகள் – **வேறாதலும் விதி** – வி, பி முதலிய பெற்று வேறுபதெலும் விதியே யாகும். **எ–று.**

**உ–ம்.** நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான்; போக்கினான், போக்கினாய், பாய்ச்சினான், பாய்ச்சினாய், உருட்டுகின்றான், உருட்டுகின்றாய், உருட்டுகின்றேன், நடத்தினேன், எழுப்பினாய், துயிற்றுகின்றாய், இயக்கினான், திருத்தினேன், தோற்றினான்; உருக்கினாய், ஆட்டினான், ஆற்றினேன், தேற்றுகின்றான் எனவரும். இங்கே தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாய் ஏவலல்லாத மற்றவினைகளிலும் வந்தமை காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: விளம்பிய பகுதி வேறு ஆகலும்** – (ஏவல் வேறாதல் போல அதன் பின்னே) சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள் வேறுபடுதலும், **விதியே** – விதியே யாம்; **எ–று.**

நட முதலிய ஏவலொருமை முற்றுக்கள் – நடப்பி, நடப்பிப்பி என்று பிறவினையாக வேறுபடுதல் போல, நடந்தான் முதலிய மற்றை வினை முற்றுகளிலுள்ள நட முதலிய பகுதிகளும், நடப்பித்தான், நடப்பிப்பித்தான் என்று பிற வினையாக வேறுபடும் என்பதாம்.

'செய்யெனேவல் வினைப் பகாப்பதம்' எனக் கீழ் இரண்டாகக் கூறி நிறுத்தியவர், அவற்றுள் முந்தியது பிறவினையாதற்கு விதியை முந்தின சூத்திரத்திற் கூறி, பிந்தினது பிற வினையாதற்கு அவ் விதியையே இச் சூத்திரத்தாற் பெற வைத்தாரெனக் கொள்க.

கீழ் ''நடவாமடிசீ'' என்னுஞ் சூத்திரத்து உரையின் இறுதியிற் கூறிய பகுதி விகாரப்படுதலை இச் சூத்திரத்துக்குப் பொருளாகக் கூறுவாரு முளர்; அவ் விகாரங்கள் பகுபத வுறுப்பாய்க் கொள்ளப்பட்ட மூன்று சந்தியுள்ளும் ஒன்பது விகாரத்துள்ளும் அமைந்து கிடத்தலால், அது பொருந்தாது.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். விளம்பிய பகுதி – ஏவற் பகுதி வேறாதல் போல அதன் பின்னே சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள், வேறு ஆதலும் விதியே – வேறுபடுதலும் விதியேயாகும். எ–று.

உ–ம். நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான், இங்கே தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளானமை காண்க.

நட வா மடி முதலாகக் கூறப்பட்ட பகுதிகளுட் சில, 'வா–வந்தான், வருகிறான்' என்றிவ்வாறு விகாரப்பட்டு வருதலும் முறையே – என இச்சூத்திரத்திற்குப் பொருள் கூறுவாரும் உளர். அங்ஙனம் விகாரப்படுதல் பகுபத உறுப்பாய்க் கொள்ளப்பட்ட சந்தி விகாரம் என்பவற்றுள் அடங்கும். ஆதலால் இவ்வுரை பொருந்தாதென அறிக.

## கா. நமசிவாய முதலியார்

விளம்பிய பகுதிவே றாதலும் விதியே

விளம்பிய பகுதி – மேற்கூறிய பிறவினைப் பகுதிகள், வேறாதலும் – வேறாக வருதலும், விதியே – முறையேயாகும்.

**உதாரணம்**

(1) சில தன்வினைப் பகுதிகள் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு

விகுதிகளுள் ஒன்று பெற்றுப் பிறவினையாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| போ | – போக்கு | – கு | நட | – நடத்து | – து |
| பாய் | – பாய்ச்சு | – சு | எழு | – எழுப்பு | – பு |
| உருள் | – உருட்டு | – டு | துயில் | – துயிற்று | – று |

(2) சில தன்வினைப் பகுதிகள் தம் இடையிலுள்ள மெல்லின மெய் வல்லின மெய்யாகத் திரிந்து பிறவினையாகும்.

இயங்கு – இயக்கு
தோன்று – தோற்று
திருந்து – திருத்து

(3) சில தன்வினைப் பகுதிகள் தம் ஒற்று இரட்டியும் பிற வினையாகும்.

உருகு – உருக்கு,
ஆடு – ஆட்டு,
தேறு – தேற்று,

(4) சில வினைப்பகுதிகள் பிறவினைவிகுதி வேண்டாமல், தன் வினை பிறவினைகட்குப் பொதுவாய.

கரைத்தான், கரைத்திலன்;
தேய்த்தான், தேய்த்திலன்;
கரைக்கின்றான், கரைக்கின்றிலன்;
தேய்க்கின்றான், தேய்க்கின்றிலன்;
கரைப்பான், கரைக்கான்;
தேய்ப்பான், தேய்க்கான்

எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிக்கும்;

கரைந்தான், கரைந்திலன்;
தேய்ந்தான், தேய்ந்திலன்;
கரைகின்றான், கரைகின்றிலன்;
தேய்கின்றான், தேய்கின்றிலன்;
கரைவான், கரையான்;
தேய்வான், தேயான்

எனத் தன்வினைப் பொருளைத் தரும்போது மெல்லெழுத்து மிக்கும் வல்லெழுத்து மிகாமலும் வருமென்று அறிக.

இப்பகுதிகள் எதிர்கால வினைமுற்றில் பிறவினைப் பொருட்குப் பகர இடைநிலையையும், தன்வினைப் பொருட்கு வகர இடைநிலையையும் ஏற்று நிற்கும்.

'விளம்பிய பகுதி வேறாதல்' என்பதற்குச், செல் – சேறல், கொள் – கோடல் என முதல் நீண்டும், தா – தந்தான், வே – வெந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா – செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும்

விகாரப்பட்டு வருதல் முதலியவற்றைப் பொருளாகக் கூறுவாருமுளர்; அவ்விகாரங்கள் பகுபத வுறுப்பாகக் கொள்ளப்பட்ட மூன்று சந்தியுள்ளும் ஒன்பது விகாரத்துள்ளும் அமைந்து கிடத்தலால், அது பொருந்தாதென்க.

## மோசகூ பொன்னையா

செய்யென் பகுதி, விகுதி முதலியவற்றோடு கூடி வினையாங்கால் வேறு வடிவாதலும் விதியேயாம், எ–று.

எ–டு.

| சொல் | பகுதி |
|---|---|
| எழுந்திருந்தான் | எழுந்திரு. |
| அடிபட்டான் | அடிபடு. |
| குடிபுகுந்தான் | குடிபுகு. |
| உட்சென்றான் | உட்செல். |

செய்வி யென் வாய்பாட்டு ஓரேவல் ஈரேவல்கள் மேலும் பிற வினைப்பட்டு நிற்பதை இந்நூற்பா விதிக்கின்றது எனின், செய்வி என்னும் பிறவினை வாய்பாட்டுப் பகுதி, வினையாய் முடிந்து மேலும் பிவ் விகுதி பெற்று நிற்பதால் உணர்த்தும் சிறப்புப் பொருள் இல்லையாத லானும்; அஃது உணர்த்தும் என்பாருக்கு, எத்தனை பிவ் விகுதி கூட்டி முடிப்பது என்ற வரையறை உண்டோ எனின், விடை இன்றாகி முடியும் ஆதலானும் பொருந்தாமை புலனாம்.

வந்தான், தந்தான், வெந்தான், நொந்தான், கண்டான் முதலியனவற்றின் பகுதிவேறுபட்டு அமைதலை இந்நூற்பாவால் அமைத்தார் என்றாரும் உளர்.தார், தர், தம் எனவும்; வார், வா, வம் எனவும்; வே, வெம் எனவும், நோ, நொம் எனவும்; காண், கண் எனவும் அமைந்துள்ள அடிச்சொற்றிரிபுகள் பற்பல உண்டென்பதையும் அவையடியாகத் தாரான், தருவான், தந்தான்,வாரான், வருவான், வந்தான், வேகிறான், வெந்தான், நோகின்றார், நொந்தான், காண்கிறான், கண்டான் எனவிவ்வாறு சொற்கள் பற்பல பிறக்கும் என்பதையும் எடுத்த சொல்லின் பகுதி உணர்த்த வந்த இவ்வாசிரியர் அத்திரிபுகள் பற்றி அவற்றை வேறான பகுதிகள் எனக் கொண்டார் என்பதும் ஏற்பதே.

தத்தம் பகாப் பதங்களே பகுதியாகும்என்பதும் அப்பகாப் பதங்கள் ஏழெழுத்துக்களை மேலெல்லையாகக்கொண்டு அமையும் என்பதும், சொற்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறுறுப்புக்களைப் பெற்று வரினும், ஏனைய ஒலித்துணையும், ஒலித்திரிபுகளுமாகத் துணையாகி நிற்க, பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்றுமே சொல்லுக்கு இன்றியமையாதன என்பதும் இவர் கொள்கை. எனவே அம்மூன்றனுள் இடைநிலையும் விகுதியுமாதற்குப் பொருந்தாது,

முதனிலையாக நிற்பனவாகிய எழுந்திரு, அடிபடு முதலியவற்றை இப்புறனடை நூற்பாவில் ஆக்கச் சொற் புணர்த்தி அமைத்தார் என்பதும் ஏற்புடைத்தாகும்.

உருபன்கள் தனி உருபன்களாக நின்றோ, கட்டப்பட்டு இலக்கண அல்லது ஆக்கப்பொருள் சேர்த்து நின்றோ சொற்களில் ஓர் ஒழுங்கு முறையில் அமைகின்றன. அவ்வொழுங்கு முறையை உருபனிணைவமைப்பு என மொழிநூலார் குறிப்பிடுவர்.

உருபனிணைவு அமைப்பு, கட்டு உருபன் இணையப்பெறுதல், உள்மாற்ற மெய்துதல், இரட்டித்தல், முழுமாற்றமெய்துதல், மாற்றமில் மாற்றமெய்துதல் எனும் ஐந்து உருபன் நடைமுறை அமைப்புச் சார்ந்ததாகும்.

அவற்றுள் கட்டு உருபன்கள் இணையப்பெறுதல் 128ஆம் நூற்பா உரையில் விளக்கப்பட்டது.

உள்மாற்ற மெய்துதல் என்பது தனி ஒலியன் /கட்டு உருபன்களைப்பெறுங்கால் எய்தும் மாற்றம் சார்ந்ததாகும். முன்னல் எடுத்துக் காட்டப்பட்ட தாரான், தருவான், வந்தான், வாரான், வருவான், வந்தான், வேகிறான், வெந்தான், நோகிறான், நொந்தான் என்னும் நான்கு சொல்லடுக்குகளையும் கூர்ந்து நோக்கினால் அவற்றின் அடிகள் முறையே, தார் = தர் = தம்; வார் = வர் = வம்; வே = வெம்; நோ = நொம் என இவ்வாறு உள்மாற்றம் பெற்றிருத்தலைக் காண்கிறோம். இவ்வாக்கச்சொற்கள் தனி உருபன் பெற்ற உள்மாற்றம் பெற்றவை எனக் கொள்க.

இரட்டித்தல் இருவகைய. ஒன்று சலசல மும்மதம், சலசலத்தான், படபட என்றது, படபடத்தான் என இவ்வாறு அமையும் இரட்டைக்கிளவி யாக்க முறை; மற்றது அடிகிடி விழாமல், முள்கிள் தைக்காமல் என இவ்வாறு அமையும் பேச்சுமுறை ஆகிய வழக்கில் காண்க.

முழுமாற்றம், go - went என ஆங்கிலத்தில் அமையுமாறு; அது தமிழில் இல்லை.

மாற்றமில் மாற்றம் என்பது பால்பகா அஃறிணைப் பெயர்கள் உருமாற்றமில்லாமலே ஒருமையாகவும், பன்மையாகவும் வழங்குவது போன்ற அமைப்பாகும்.

தமிழில் முதலில் பகுதி பின்னர் சந்தி அல்லது விகாரம், அதன் பின்னர் இடைநிலை, பின்னர் சாரியை, இறுதியில் விகுதி அமையும் பின் ஒட்டு உருபன் நடைமுறை அமைப்பே மிகுதி. இந்நூற்பாவில் அஃதொழிந்த உள்மாற்றம் முதலிய உருபனிணைவு நடைமுறைகள் சார்ந்த பகுதிகள் பற்றிச் சுட்டினார் எனக் கொள்க.

(12)

139. அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓம் டும்ஊர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு ம்என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.

அன் ஆன் அள்ஆள் அர்ஆர் பம் மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓம் டும் ஊர்
க ட த ற ஐ ஆய் இம்மின் இர் ஈர்
ஈயர் க ய வும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சில ஏ.

aṉ āṉ aḷ āḷ ar ār pam mār
a ā ku tu ṭu ṛu eṉ ēṉ al aṉ
am ām em ēm otu um ūr
ka ta ṭa ṛa ai āy im miṉ ir īr
īyar ka yavum eṉpavum piṛavum
viṉaiyiṉ vikuṭi peyariṉum silaē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## TERMINATION

An, ân, al, â!; âr, pa, mâr, a, a, ar, ku, tu, ru, en, al, an, am, am, em, om,kum, tum, rum; ai, ây, i; min, ir, ir; iyar, ka, ya; um: these and others are the terminations of Verbs: a few belong also to Nouns.

## ஒப்புமைப் பகுதி

அவைதாம்
அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற வென்னும்
அந்நாற் கிளவியோ டாயென் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே

(தொல்.சொல்.:202)

கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என்ஏன் அல்;என வரூஉம் ஏழும்

தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே

(தொல்.சொல்.:203)

அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே

(தொல்.சொல்.:205)

அர் ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே

(தொல்.சொல்.:206)

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப

(தொல்.சொல்.: 207)

அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை

(தொல்.சொல்.:216)

ஒற்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி ஆகும்

(தொல்.சொல்.:217)

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்மன செய்யுஞ் செய்த என்னும்;
அம்முறை நின்ற ஆயென் கிளவியும்
திரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி
இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமைய

(தொல்.சொல்.:222)

அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இஐ ஆயென வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்

(தொல்.சொல்.:223)

இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோர் அனைய என்மனார் புலவர்

(தொல்.சொல்.:224)

அம்ஆம் எம்ஏமுங் கடதறமேல் ஆங்கணைந்த
உம்மும் உளபாட்டுத் தன்மையாம்–தம்மொடு
புல்லுங் குடுதுறுவும் என்ஏனும் பொற்றொடியாய்
அல்லும் தனித்தன்மை யாம்

(நேமி.:64)

அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்லோடு
அம்ஆம் எம்ஏம் ஓம்ஒடு உம்ஊர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
கயர வாலேல் காணும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே

(இ.வி.:46)

பொழுதுகொள் வினை வினைப் பகுபதமே
பகுதி ஏவல்எனும் பகாப்பதம் ஆகும்
என்ஏன் எம்ஏம் ஓம்அம் ஆம் தன்மை
ஐஆய் இஇர்ஈர் முன்னிலை அன்ஆன்
அள்ஆள் அர்ஆர் உஅ படர்க்கை
வினையின் விகுதி மீண்டுள பிறவும்
கள்எனப் பலஒழி பன்மையின் மிகலுமாம்.

(தொ.வி.: 105)

அம்ஆம் என்பன இறுதிக் கிளவியும்
கும்டும் தும்றும் இறுதிக் கிளவியும்
பன்மை உணர்த்தும் தன்மைப் பெயரே

(மு.வீ.:598)

குடுதுறு என்னும் குன்றிய லுகர
இறுதியும் என்ஏன் அல்இறு கிளவியும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே

(மு.வீ.:602)

அன்ஆன் அள்ஆள் இறுதிக் கிளவி
உயர்திணை ஒருமைப் படர்க்கைச் சொல்லே

(மு.வீ.:604)

அர்ஆர் பகர இறுதிக் கிளவி
அத்திணை மருங்கிற் பல்லோர் படர்க்கை

(மு.வீ.:605)

மாரைக் கிளவியும் அவற்றோ ரற்றே

(மு.வீ.:606)

அஆ வகர இறுதிக் கிளவி
அஃறிணைப் பன்மைப் படர்க்கைச் சொல்லே

(மு.வீ.:612)

துடுறுக் குற்றிய லுகர வீற்ற
அத்திணை யொன்றன் படர்க்கைச் சொல்லே

(மு.வீ.:613)

வியங்கோள் முன்னிலை வினையெஞ்சு கிளவி
செய்ம்மன வேறு செய்த செய்யும்
ஒருகால் உயர்திணை உணர்த்தி ஒருகால்
அஃறிணை உணர்த்தியும் ஆயிரு திணைக்கும்
ஒத்த உரிமைய ஆகும் என்ப

(மு.வீ.:616)

ஐஆய் இறுதி முன்னிலைக் கிளவி
ஒருவன் ஒருத்தி ஒன்றற்கும் உரிய

(மு.வீ.:617)

இகர இறுதியும் அவற்றோ ரற்றே

(மு.வீ.:618)

இர்ஈர் மின்ஈ றாம்பெயர்க் கிளவி
பல்லோர் மருங்கினும் பலவொடும் சிவணும்

(மு.வீ.:619)

கொண்ட அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார் அஆ
குடுதுறு என்ஏன் அன்அல் ஒடு அம்ஆம் எம்ஏம் ஓம்
கண்ட உம்ஊர் கடதற வைவிய யார்மின் இர்ஈர்
கயர வொற்றால் ஏல்காணும் பிறவும் வினைவிகுதி

(சுவாமி.:25:1–2)

## மயிலை நாதர்

எ–ன், பகுபதங்கட்கு விகுதியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இச் சொன்ன முப்பத்தேழும் இவை போல்வன பிறவும் வினைப் பகுபதத்தின்கண் விகுதியாம்; பெயர்ப் பகுபதத்தின்கண்ணும் சில விகுதியாம், எ – று.

வ – று.: நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார், நடந்தன, நடவா, நடக்கு, உண்டு, குண்டுகட்டு, நடந்து, நடந்தது, வேறு,கூயிற்று, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன், நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், [1]நடந்தும், [2]சென்றும், நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடமின், நடந்தனிர், நடந்தீர், நிலீயர், நடக்க, வாழிய, நடவும் என வினைக்கண் முப்பத்தேழும் [3]வினைமுற்று விகுதியாயின. பிறவற்றொடும் இவ்வாறே ஏற்பிக்க. பிறவும் என்றதனால், பெயரெச்ச வினையெச்ச [4]விகுதிகள் வாய்பாடுகளும் அறிந்து

பாட வேறுபாடு.:–

1. நடத்தும்
2. சேறும்
3. மூன்றிடத்தும் வினைமுற்று
4. விகுதிகளான வாய்பாடுகளும்

பகுதி விகுதி யாக்கி இடைநிலையும் வேண்டுழித் தந்து முடிக்க. நடந்தவன் நடந்தான் எனத் தொழிற்பெயர்க்கும் இவ்வாறே ஏற்பன வறிந்து ஒட்டிக்கொள்க. வில்லன், வில்லான், வளையள், வளையாள், ஊரர், ஊரார், வில்லி, வாளி, உருவிலி, திருவிலி, பொறியிலி, செவியிலி, அரசி, [1]பார்ப்பனி, செட்டிச்சி, உழத்தி, கிழத்தி, கணவாட்டி, வண்ணாத்தி, காதறை, செவியறை எனப் பெயர்க்கண் விகுதியாயின. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. இவற்றுள் ஒன்றே [2]பலவினை பெயர்கட்கு வருவனவும் கொள்க. ஈண்டுப் பதமுடித்தற்குப் பகுதி விகுதி மாத்திரையே காட்டியது; [3]திணைபாலிடம் காலங்கட் குரியவாமாறு சொல்லதிகாரத்துட் பெயர்வினை யோத்துக்களுட் சொல்லுதும்.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ – னின்,** விகுதி இனைய என்பது **உணர் – ற்று.**

**இ–ள்.:** இங்ஙனம் அன் ஆன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்படுவனவும், இவை போல்வன பிறவும். தெரிநிலை வினையின் விகுதிகளாம்; பெயரிடத்தும் இவற்றுள் சில விகுதிகளாம், **எ–று.**

இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் தன்மை ஒருமைக்கும் அஃறிணைப் படர்க்கை ஒருமைக்கும் பொதுவாக டு து று என்றும், முன்னிலை ஒருமைக்கும் முன்னிலை யேவல் ஒருமைக்கும் பொதுவாக ஆய் என்றும் அன் என்னும் தன்மை ஒருமை விகுதி தொன்றுதொட்டதன்றி இலக்கியங் கண்டமையின் **எதிரதுபோற்றல்** என்னும் உத்தியால் தழீஇக் கொண்டதாதலின் அதனை வலியுறுத்திப் பின்னும் அன் என விதந்தும், இன்னும் இவற்றுள் இரட்டுற மொழிதலான் அடங்குவன அடங்க அடங்காவாய பெயரெச்சம் வினையெச்சம் நடத்து நடப்பி முதலிய பிறவினை என்பவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் பகுதியை விகுதிப்படுத்தி வருவன யாவை அவையெல்லாம் விகுதி என்று கருதிக்கோடற்குப் பிறவும் என்றும் கூறினார்.

பெயரினும் சில என்ற மாத்திரையின் குறிப்புவினையினும் சில என்பது கூறாதே யமைதலின், இங்ஙனம் வினை என்றது அவ்விரண்டும் ஒழிந்த தெரிநிலைவினை என்பது பெற்றாம்.

**உ–ம்.:** நடந்தனன், நடந்தான்: இவை ஆண்பாற் படர்க்கை. நடந்தனள், நடந்தாள்: இவை பெண்பாற் படர்க்கை. நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார்: இவை பல்லோர் படர்க்கை. நடந்தன, நடவா: இவை பலவின் படர்க்கை. நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல்,

---

பாட வேறுபாடு.:–

1. பார்ப்பினி
2. வினைப்பெயர்கட்கும்
3. திணைபாலிடங்கட்கு

நடப்பன்: இவை ஒருமைத் தன்மை. நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு: இவை ஒன்றன் படர்க்கை. நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும்: இவை தன்மைப் பன்மை. நடந்தனை, நடந்தாய், நடத்தி: இவை ஒருமை முன்னிலை. நடமின் நடந்தனிர், நடந்தீர்: இவை பன்மை முன்னிலை. நிலீயர், நடக்க, வாழிய: இவை வியங்கோள். நடக்கும்: இது செய்யுமென்னும் முற்று. பிறவும் அன்ன.

இவை திணை பால் இடங்களை உணர்த்தி வினையின் இறுதி நிலையாய் முழுவதும் வந்தன. வில்லன், வில்லான், வளையள், வளையாள், ஊரர், ஊரார், வில்லி, வாளி, அரசி, செட்டிச்சி, காதறை, மூக்கறை: இவை பெயர்க்கண் சில வந்தன. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** பகுபதங்கட்கு விகுதியாமாறு கூறியது.

**இ—ள்.: அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார் அ ஆ கு டு துறு என் ஏன் அல் அன் அம் ஆம் எம் ஏம் ஓமொடு** – அன் ஆன் . . . ஓம் என்ற விகுதியோடும், **உம் மூர் கடதற** – உம் மூர்ந்த கடதறக்களாவது கும் டும் தும் றும், **ஐ ஆய் இம்மின் இர் ஈர் ஈயர் கயவும் என்பவும்** – என இங்ஙனம் சொன்ன முப்பத்தேழு விகுதியும், **பிறவும்** – இவை போல்வன பிறவும், **வினையின் விகுதி** – வினைப் பகுபதத்தின்கண் வரும் விகுதியாம், **பெயரினும் சிலவே** – பெயர்ப் பகுபதத்தின் கண்ணும் சில விகுதி வரும், **எ—று.**

**உ—ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தனன், நடந்தனள், நடந்தனர், நடப்ப, நடமார், நடந்தன, நடவா, நடக்கு, உண்டு, குண்டு, கட்டு, நடந்து, நடந்தது, வேறு, குயிற்று, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன. நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்கும், உண்டும், நடந்தும், சேறும், நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடமின், நடந்திர், நடந்தீர், நடவீயர், நடக்க, வாழிய, நடவும் என வினைக்கண் முப்பத்தேழும் விகுதியாயின. பிறவற்றோடும் இவ்வாறே ஏற்றிக் கொள்க. அன் ஆன் விகுதி உயர்திணை ஆண்பாற் படர்க்கை; அள் ஆள் விகுதி உயர்திணைப் பெண்பாற் படர்க்கை; அர் ஆர் ப மார் உயர்திணைப் பலர்பாற் படர்க்கை; ப இறந்தகாலம் எதிர்காலம் காட்டும் விகுதி; மார் எதிர்காலம் காட்டும் விகுதி; அ ஆ விகுதி அஃறிணைப் பன்மைப் படர்க்கை; கு டு து று விகுதி அஃறிணை ஒருமைப் படர்க்கை: கு டு து று என் ஏன் அல் அன் விகுதி விரவுத்திணைத் தன்மை யொருமை; அம் ஆம் எம் ஏம் ஒம்மொடு உம்மூர் கடதற விகுதி விரவுத்திணைத் தன்மைப்பன்மை; ஐ ஆய் இ விகுதி விரவுத்திணை முன்னிலை யொருமை; மின் இர் ஈர் விகுதி விரவுத்திணை முன்னிலைப் பன்மை; ஈயர் க ய உம் விகுதி இருதிணை ஐம்பால் மூன்றிடத்துக்கும் பொது.

## விசாகப் பெருமாளையர்

**இது,** விகுதிகள் இப்படிப்பட்டவை களென்று உணர்த்துகின்றது,

**இ–ள்.: அன் . . . என்பவும்** – அன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், **பிறவும்** – இவை போல்வன பிறவும், **வினையின்விகுதி** – வினைப் பகுபதங்களின் விகுதிகளாகும், **பெயரினும்** – பெயர்ப்பகு பதங்களிலும், **சில**–சில விகுதிகளாகும், **எ – று.**

அன்விகுதி தன்மைக்கு **எதிரதுபோற்றல்** என்னு முத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின் வலியுறுத்தற்குப் பின்னுங் கூறினார்.

**உ–ம்.:** நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார், நடந்தன, நடவா, உண்கு, உண்டு, நடந்தது, கூயிற்று, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன், நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும், நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடமின், நடந்தனிர், நடந்தீர், நிலீயர், நடக்க, வாழிய, நடக்கும் எனவும், "பிறவும்" என்றதனால் நடந்திடு, எழுந்திரு, அருளு, மறால், அழேல், சொல்லிக்காண் என இடு, இரு, உ, ஆல், ஏல், காண் முதலியவும் வரும். இவை யெல்லாந் தெரிநிலை வினைமுற்றுகள். வினைக்குறிப்பு முற்றுகள் குறிப்பாகக் காலங் காட்டுவன வாதலால் இந்த விகுதிகளுக் குள்ளே ~~தாமே காலங்~~ காட்டும் விகுதிகளொழிந்த மற்றவைகளோடு வருமெனக் கொள்க.

**உ–ம்.:** குழையன் குழையான், குழையள் குழையாள், குழையர் குழையார், குழையன குறுந்தாட்டு, குழையது குழையிற்று, குழையினென், குழையினேன், குழையம், குழையாம், குழையினெம், குழையினேம், குழையினோம், குழையினை, குழையாய்–வில்லி, குழையினீர், குழையீர் என வரும்.

"பெரியனுஞ்சில" வென்றதனால் இவ்விகுதிகளுள் அன் ஆன் அள் ஆள் அர் ஆர் அ து இ மார் என வருகின்றவைகளுடனே மன் மான் கள் வை தை கை பி முன் அல் ன ள ர வ மெய்கள் முதலானவைகள் பெயர் விகுதிகளாம்,

**உ–ம்.:** குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், குழையன, யாது, பொன்னி, தேவிமார், வடமன், கோமான், கோக்கள், அவை , எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ் என வரும்.

இன்னும் 'வினையின் விகுதி பெயரினுஞ் சில' வென்றதனாலும் 'பிறவும்' என்றதனாலும் பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ் விகுதிகளுக்குள் அடங்கியும் அடங்காமலும் வரும் விகுதிகளெல்லாங் கொள்ளப்படும்.

**பெயரெச்சவினை விகுதிகள்.** அ–உம் இவை பெயரெச்சவினை விகுதிகளாம்.

**உ–ம்.:** நடந்த–நடக்கின்ற–நடக்கும் என வரும்.

**வினையெச்சவினை விகுதிகள்:** உ–பு–ஆ–ஊ–என–அ–இன்–

இய–இயர்–வான் – பான்–பாக்கு இவைகளுடன் இ–யகரமெய்–கு–ஆல்–கால்–ஏல்–ஏனும்–உம்–மல்–மை–மே–து–றி இவை முதலானவைகளும் வினையெச்ச வினை விகுதிகளாம்.

**உ–ம்.:** நடந்து–உண்குபு–உண்ணா–உண்ணூ–உண்டென–உண்ண–நடக்கின்–உண்ணிய–உண்ணியர்–வருவான்–உண்பான்–உண்பாக்கு–ஓடி–போய்–உணற்கு–நடந்தால்–ஒலித்தக்கால்–நடக்குமேல்–நடக்குமேனும்–காண்டலும்–உண்ணாமல்–உண்ணாமை–உண்ணாமே–அல்லது–அன்றி என வரும்.

**தொழிற்பெயர் விகுதிகள்:** தல்–அல்–அம்–ஐ–கை–வை–கு–பு–உ–தி–சி–வி–உள்–காடு–பாடு–அரவு–ஆனை–மை–து இவை முதலியன தொழிற்பெயர் விகுதிகளாம்.

**உ–ம்.:** நடத்தல்–ஆடல்–வாட்டம்–கொலை–நடக்கை–பார்வை–போக்கு–நடப்பு–வரவு–மறதி–புணர்ச்சி–புல+வி–விக்குள்–சாக்காடு–கோட்பாடு–தோற்றரவு–வரானை–நடவாமை–பாய்த்து என வரும். துவ் விகுதி நடந்தது, நடக்கின்றது, நடப்பது எனக் கால விடைநிலையோடு கூடியும் வரும்.

**பண்புப்பெயர் விகுதிகள்:** மை–ஐ–சி–பு–உ–கு–றி–று–அம்–நர்–இவை முதலியன பண்புப்பெயர் விகுதிகளாம்.

**உ–ம்.:** நன்மை–தொல்லை–மாட்சி–மாண்பு–மழவு–நன்கு–நன்றி–நன்று–நலம்–நன்னர்–என வரும்.

**எதிர்மறை விகுதிகள்:** இல்–அல்–ஆ–இவை எதிர்மறை விகுதிகளாம்.

**உ–ம்.:** நடந்திலன்–நடக்கின்றிலன்–நடக்கிலன்–நடக்கலன்–நடவாதான் என வரும்.

**பிறவினை விகுதிகள்:** வி–பி–கு–சு–டு–து–பு–று இவை பிறவினை விகுதிகளாம்.

**உ–ம்.:** வருவித்தான்–நடப்பித்தான்–போக்கினான்–பாய்ச்சினான்–உருட்டினான்–நடத்தினான்–எழுப்பினான் துயிற்றினான் என வரும். கரை–தேய் என வருகிற தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள் சிறுபான்மை இவ் விகுதி வேண்டாமல் கரைத்தான் – தேய்த்தான் – கரைத்திலன் – தேய்த்திலன் – கரைக்கின்றான் – தேய்க்கின்றான் – கரைக்கின்றிலன் – தேய்க்கின்றிலன் – கரைப்பான் – தேய்ப்பான் – கரைக்கான்–தேய்க்கான் – எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிக்கும், கரைந்தான் – கரைந்திலன் – கரைகிறான் – கரைகின்றிலன் – கரைவான் – கரையான் – எனத் தன்வினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகாமலும் வருமென்றறிக.

இன்னும் இ–ஐ–அம் விகுதிகள் அலரி–பறவை–எச்சம் என

வினைமுதற் பொருளையும், ஊருணி–தொடை–தொல்காப்பியம்–எனச் செயப்படுபொருளையும், மண்வெட்டி–பார்வை – நோக்கம் – எனக் கருவிப்பொருளையும் உணர்த்தி வரும். விடு–ஒழி விகுதிகள் வந்துவிட்டான், கேட்டொழிந்தான் எனத் துணிவுப்பொரு ளுணர்த்தி வரும். கொள் விகுதி அடித்துக்கொண்டான், கடித்துக்கொண்டான்–எனத் தற் செயலுணர்த்தி வரும். படு–உண்–விகுதிகள்–கட்டப்பட்டான்–கட்டுண்டான்–எனச் செயப்பாட்டு வினைகளுக்கு வரும். மை விகுதி ஆண்மை– பெண்மை–எனத் தன்மைப் பொருளுணர்த்தும் எல்லாப் பொருளிலும் வரும், எல்லா விகுதிகளையும் அளவுசெய்தல் கூடாமையால் அதிகமாக வழங்குகிற சில விகுதிகளைக் காட்டினோம்.

பொன்னன் – கரியன் – என வருகின்றவை முக்காலங்களு ளொன்றைக் குறிப்பாகக் காட்டும்போது வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்களாம். எட்டு வேற்றுமைகளு ளொன்றை யேற்று வரும்போது பெயர்ப் பகுபதங்களாகும். அவ்விரண்டையுங் கொண்டு வரும்போது வினைக்குறிப்பு முற்றாலணையும் பெயர்ப்பகுபதங்களாம். நடந்தான், வந்தான் என வருகின்றவை காலங் காட்டும் போது தெரிநிலைவினை முற்றுப் பகுபதங்களாம், காலங் காட்டுதலுடனே வேற்றுமை, யேற்கும்போது தெரிநிலை வினைமுற்றாலணையும் பெயர்ப் பகுபதங்களாம், இவையே ஒன்றுக்கொன்று வேறுபாடாம்.

## ஆ· முத்துத்தம்பிப் பிள்ளை

வினைமுற்று விகுதிகளெவை?

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்
அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமொடும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

(அன் ஆன் அள் ஆள் அர் **ஆர் ப மார்**
அ ஆ குடுதுறு என் ஏன் **அல்**அன்
அம் ஆம் எம் ஏம் ஓம்ஒடு **உம்ஊர்**
கடதற ஐஆய் இ மின் இர் ஈர்
ஈயர் கயஉம் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.)

**இ–ள்.: அன் ஆன்** – அன் ஆன் என்னும் இரண்டும் ஆண்பாற்படர்க்கை விகுதி, **அள் ஆள்** – அள் ஆள் என்னும் இரண்டும் பெண்பாற் படர்க்கை. **அர் ஆர் ப மார்** – அர் ஆர் ப மார் என்னும் நான்கும் பலவின்பாற் படர்க்கை. **கு டு து று என் ஏன் அல் அன்** – கு டு து று என் ஏன் அல் அன் என்னும் எட்டும் ஒருமைத்தன்மை. இவ்வெட்டனுள் டு து று

என்னும் மூன்றும் ஒன்றன்பாற்படர்க்கை. **அம் ஆம் எம் ஏம் ஓம் ஒடு உம்முர் கடதற –** அம் ஆம் எம்ஏம் ஓம் (உம் மூர்ந்த கவ்வும் டவ்வும் தவ்வும் தவ்வுமாகிய ) கும் டும் என்னும் ஒன்பதும் பன்மைத்தன்மை ஐ ஆய்இஐ ஆய் இ என்னும் மூன்று முன்னிலை ஒருமை, மின் இர் ஈர் மின் இர் ஈர் என்னும் மூன்றும் முன்னிலைப்பன்மை உம் – உம் ஒன்றும் ஆண்பாற்படர்க்கை, பெண்பாற்படர்க்கை, ஒன்றன்பாற் படர்க்கை, பலவின்பாற் படர்க்கை, என்னும் நான்கிற்கும் பொதுவாம். என்பவும் பிறவும் வினையின் விகுதி – என்பனவாகிய இம் முப்பத்தேழும் பிறவும் வினைமுற்று விகுதிகளாம்; பெயரினும் சில – பெயரினிடத்தும் இவற்றுட் சில விகுதிகளாம், எ–று.

இச்சூத்திரத்தில் அன்விகுதி ஈரிடத்திற் கூறப்பட்ட தென்னை?

முதலிற் கூறப்பட்டது ஆண்பாற்படர்க்கை விகுதி என்பதும் பின்னர் கூறப்பட்டது தன்மை ஒருமை விகுதி என்பதும் அறிவித்தற்கு.

இவ்விகுதிகளுள்ளே குறிப்புவினைமுற்று, தெரிநிலை வினைமுற்று இரண்டிற்கும் பொதுவாயுள்ள விகுதிகள் யாவை?

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் அ டு து று என் ஏன் அம் ஆம் எம் ஏம் ஓம் ஐ ஆய் இ இர் ஈர் என்னும் இருபத்திரண்டுமாம்.

தெரிநிலை வினைமுற்று ஒன்றுக்குமே உரிய விகுதிகள் யாவை?

ப மார் ஆ கு அல் அன் கும் டும் தும் றும் மின் ஈயர் க ய உம் என்னும் பதினைந்துமாம்.

உ–ம்.: (1) நடந்தனன், நடந்தான், இவை ஆண்பாற்படர்க்கை.

(2) நடந்தனள், நடந்தாள், இவை பெண்பாற்படர்க்கை,

(3) நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் இவை பலர் பாற்படர்க்கை.

(4) நடந்தன , நடவா இவை பலவின்பாற்படர்க்கை

(5) நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன் நடப்பல், நடப்பன் இவை ஒருமைத்தன்மை.

(6) நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு இவை ஒன்றன்படர்க்கை.

(7) நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறுமை இவை தன்மைப் பன்மை.

(8) நடந்தனை, நடந்தாய், நடத்தி இவை ஒருமை முன்னிலை

(9) நடமின், நடந்தனிர், நடந்தீர், இவை பன்மைமுன்னிலை

(10) நிலீயர், நடக்க, வாழிய இவை வியங்கோள்.

(11) நடக்கும் இது செய்யுமென்னு முற்று.

(12) பிறவுமென்றதனால், மறால் , அழேல் சொல்லிக்காண் என ஆல்,

ஏல், காண் முதலிய விகுதிகளும் வரும்.

குறிப்பு வினைமுற்றுக்கு உதாரணம்.: கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்வி, கரியிர், கரியீர் என வரும்.

இச்சூத்திரத்திற் கூறப்பட்ட விகுதிகளுள்ளே பெயர்விகுதிகள் எத்தனை?

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் மார் அ து இ என்னும் பத்துமாம்.

**உ–ம்.:** குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி.

இதிற்கூறப்படாத பெயர் விகுதிகள் யாவை?

மன் மான் கள் வை தை கை பி முன் அ ல் ன் ள் ர் வ் முதலியனவாம்.

உ–ம்.: வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ், என வரும்.

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள் யாவை?

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள் அ, உம் என்னும் இரண்டுமாம்.

**உ–ம்.:** செய்த, செய்கின்ற, செய்யும் என வரும்.

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி யாது?

குறிப்புவினைப் பெரெச்ச விகுதி அ ஒன்றேயாம்.

**உ–ம்.:** கரிய என வரும்.

தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் யாவை?

தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் உ, இ, ய், பு, ஆ, ஊ, என அ, இன் ஆல், கால், எல், எனின், ஆயின், எனும், கு, இய இயர், வான், பான், பாக்கு கடை, வழி ; இடத்து, உம், மல், மை, மே என்னும் இருபத்தெட்டும் பிறவுமாம். இவற்றுள், இறுதியில் கூறிய மல் மை, மே என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.

**உ–ம்.:** நடந்து, ஓடி, போய், உண்குபு உண்ணா, உண்ணூ, உண்ணென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டாக்கால் உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உணற்கு உண்ணிய, உண்ணியர், செய்வான் உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி செய்தவிடத்து, காண்டலும், உண்ணாமல் உண்ணாமை, உண்ணாமே என வரும்.

குறிப்புவினை வினையெச்ச விகுதிகள் யாவை?

குறிப்புவினை வினையெச்ச விகுதிகள் அ, றி, து, ஆல், மல், கால், காடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவுமாம்.

**உ–ம்.:** மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல் அல்லாக்கால் அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து என வரும்.

தொழிற்பெயர் விகுதிகள் யாவை?

தொழிற்பெயர் விகுதிகள் தல், அல், ஐ, கை வை,கு, பு, உ, தி, சி,வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்.

**உ–ம்.:** நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி , புலவி, செய்யுள், சாக்காடு, கோட்பாடு, தேற்றரவு, வாரானை, நடவாமை பாய்த்து எனவரும். மை விகுதி செய்தமை செய்கின்றமை, என இறந்த காலவிடைநிலை நிகழ்கால இடை நிலைகளோடு கூடியும் வரும். துவ்விகுதி அவர் செய்தது, செய்கின்றது, செய்வது என முக்காலவிடை நிலைகளோடு கூடியும் வரும்.

பண்புப்பெயர் விகுதிகள் யாவை?

பண்புப்பெயர் விகுதிகள் மை, ஐ, சி, பு, உ, கு, றி, று அம், நர், என்னும் பத்தும் பிறவுமாம்.

**உ–ம்.:** நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம் நன்னர், என வரும்.

பிறவினை விகுதிகள் யாவை?

பிறவினை விகுதிகள் வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

**உ–ம்.:** செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று, என வரும்.

கரை தேய் என வருந் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள், சிறுபான்மை இவ்விகுதி வேண்டாது, கரைத்தான், தேய்த்தான், கரைத்திலன், தேய்த்திலன், கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான், கரைக்கான், தேய்க்கான், எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது, வல்லெழுத்து மிக்கும் கரைந்தான், கரைந்திலன், கரைகிறான் கரைகின்றிலன்; கரைவான், கரையான், எனத் தன்வினைத் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகாதும் வருமென்றறிக.

வினைமுதற்பொருள், செயப்படுபொருள், கருவிப் பொருள்களை யுணர்த்தும் விகுதிகளெவை?

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையுஞ் செயப்படு பொருளையுங் கருவிப்பொருளையும் உணர்த்தும்.

உ–ம்.: அலரி, பறவை, எச்சம் என்பன, அலர்வது, பறப்பது, எஞ்சுவது என வினைமுதற்பொருளை உணர்த்தலால் இ ஐ அம் வினைமுதற்பொருள்

விகுதி. ஊருணி, தொடை, தொல்காப்பியம் என்பன, ஊராரால் உண்ணப்படுவது, தொகுக்கப்படுவது. தொல்காப்பியராற் செய்யப்பட்டது எனச் செயப்படுபொருளை யுணர்த்தலால் இ ஐ அம் செயப்படு பொருள் விகுதி. மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன மண்ணை வெட்டுங்கருவி, பார்க்குங்கருவி, நோக்குங் கருவி எனக் கருவிப்பொருளை யுணர்த்தலால் இ ஐ அம் கருவிப்பொருள் விகுதி.

துணிவுப்பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

விடு, ஒழி விகுதிகள் துணிவுப்பொருளை யுணர்த்தும்

**உ–ம்.:** செய்துவிட்டான், செய்தொழிந்தான் என வரும்.

தற்பொருட்டுப் பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

கொள் விகுதி வினைப்பயன் வினைமுதலைச் சென்றடைதலாகிய தற்பொருட்டுப் பொருளையுணர்த்தும்.

**உ–ம்.:** அடித்துக்கொண்டான் என வரும்.

செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

படு உண் விகுதிகள் செயப்பாட்டு விணைப்பொருள் உணர்த்தும்.

**உ–ம்.:** கட்டப்பட்டான், கட்டுண்டான் என வரும்.

தன்மைப் பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

மை விகுதி தன்மைப்பொருள் உணர்த்தும்

**உ–ம்.:** பொன்மை, ஆண்மை என வரும்

பகுதிப்பொருள் விகுதிகளெவை?

இரு, இடு என்பன தமக்கென வேறுபொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

**உ–ம்.:** எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான் என வரும்.

புணர்ந்து பின் கெடுதலுடைய விகுதிகள் யாவை?

முன்னிலையேவலொருமை ஆய் விகுதியும், பெயரெச்ச விகுதியும் தொழிற்பெயர் விகுதியும், வினைமுதற் பொருளை யுணர்த்தும், இகரவிகுதியும், செயப்படுபொருளை யுணர்த்தும் ஐ விகுதியும், பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு. கெடினும், புணர்ந்து நின்றாற்போலவே தம்பொருளை யுணர்த்தும்.

**உ–ம்.:** நீ நட, நீ நடப்பி, நீ செல் என்பவைகளிலே ஆய்விகுதி புணர்ந்து கெட்டது. கொல்களிறு, ஓடாக் குதிரை என்பவைகளிலே பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன. அடி, கேடு இடையீடு என்பவைகளிலே தல் என்னும் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது. காய், தளிர், பூ. கனி. திரை, நுரை,

அலை என்பவைகளிலே வினைமுதற் பொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது. ஊண் தீன் கோள் என்பவைகளிலே செயப்படு பொருளுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து கெட்டது.

சிறுபான்மை வரிப்புனைபந்து என்பதில் வரிந்து என்னும் வினையெச்ச விகுதியும் கொள்வாருங் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்னு முற்றுவிகுதியும் கெட்டுவந்தன. இவ்வாறே பிறவிகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவும் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, விகுதிகள் இன்னனனு வென்பது உணர்த்திற்று.

**இ—ள்.: அன் ஆன் ..... என்பவும்** – அன் ஆன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டனவும், **பிறவும்** – இவை போல்வன பிறவும், **வினையின் விகுதி** – தெரிநிலை வினையின் விகுதிகளாம், **பெயரினுஞ்சில** – பெயரிடத்தும் இவற்றுட்சில விகுதிகளாய் வரும், **எ—று.**

'உம்மூர்கடதற', உம்மென்னும் இடைச்சொல்லை யூர்ந்த, கடதற வொற்றுக்களாகிய கும், டும், தும், றும் எனப் பொருள் காண்க.

**உ—ம்.:** நடந்தனன், நடந்தான் – இவை யாண்பாற் படர்க்கை. நடந்தனள், நடந்தாள் – இவை பெண்பாற் படர்க்கை. நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் – இவை பல்லோர் படர்க்கை. நடந்தன, நடவா – இவை பலவின் படர்க்கை. நடக்கு, உண்டு, வருது, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன் இவை தன்மை யொருமை. நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு இவை யொன்றன்படர்க்கை. நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், உண்கும், உண்டும், வருதும், சேறும் – இவை தன்மைப் பன்மை. நடந்தனை, நடந்தாய், நடத்தி – இவை முன்னிலை யொருமை. நடமின், நடந்தனிர், நடந்தீர் – இவை முன்னிலைப்பன்மை. நிலீயர், வாழ்க, வாழிய – இவை வியங்கோள் விகுதிகள். நடக்கும் – இது உம் ஈற்றுச் செய்யு மென்னும் முற்று, இவை முறையே திணை, பால், இடங்களை யுணர்த்தி வினைவிகுதிகளாய் வந்தன. வில்லன், வில்லான், குழைபள், குழையாள், ஊரர், ஊரார், வில்லி, வாளி, அரசி, செட்டிச்சி, காதறை, மூக்கறை இவை பெயரிடத்துச் சில வந்தன.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– அன்** * * * * * **என்பவும் பிறவும்** – அன் முதலிய முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவையும் (இவை போல்வன) பிறவும், **வினையின் விகுதி** – தெரிநிலைவினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாம்; **பெயரினும் சில**–பெயர்ப்பகுபதங்களிலும் இவற்றுட் சிலவிகுதிகளாகும்.

**குறிப்பு :– டு, து, று,** விகுதிகளைத் தன்மையொருமைக்கும் அஃறிணைப்படர்க்கையொருமைக்கும், **ஆய்** விகுதியை

முன்னிலையொருமைக்கும் ஏவலொருமைக்கும் **இரட்டுறமொழிதல்** என்னும் உத்தியாற் கொள்க.

**உதாரணம் :**

| **தன்மை ஒருமை.** | **அஃறிணைப்படர்க்கை ஒருமை.** |
|---|---|
| உண்டு (உண்டேன்) | பொருட்டு (பொருளையுடையது) |
| வந்து (வந்தேன்) | |
| வருது (வருவேன்) | நடந்தது, வகைத்து (வகையையுடையது.) |
| சென்று (சென்றேன்) | |
| சேறு (செல்வேன்) | ஆயிற்று, அற்று (அத்தன்மையுடையது) |
| வந்தாய் (முன்னிலை ஒருமை) | வாராய் (நீவா) (ஏவலொருமை). |

அன் விகுதி தொன்றுதொட்டதன்றேனும், தன்மை யொருமைப் பொருள் குறிக்க இலக்கியங்களில் வரக்கண்டமையின் **எதிரது போற்றல்** என்னும் உத்தியால் தழுவி, அதனைப் பின்னும் எடுத்தும், இன்னும் இவற்றுள் **எதிரது போற்றலால்** அடங்குவன அடங்க, அடங்காதனவாகிய பெயரெச்சம் வினையெச்சம் முதலியவற்றின் இறுதியில் நிற்பனவெல்லாம் விகுதியென்று கொள்வதற்குப் '**பிறவும்**' என்றுங் கூறினார். '**பெயரினுஞ்சில**' என்ற மாத்திரையின், '**குறிப்புவினையினும் சில**' என்பது கூறாதே அமைதலின், இங்ஙனம் '**வினை**' யென்றது அவ்விரண்டும் ஒழிந்த தெரிநிலை யென்றறிக.

உம்மூர் க ட த ற – உம் என்பது ஏறிய, க், ட், த், ற் என்னும் மெய்கள்; அவை : கும், டும், தும், றும் என்பன.

உதாரணம் :

1 (a) அன், ஆன் – நடந்தனன், நடந்தான்.... ஆண்பாற்படர்க்கை
அள், ஆள் – நடந்தனள், நடந்தாள் .... பெண்பால் படர்க்கை
அர், ஆர் – நடந்தனர், நடந்தார் .... பலர்பால் படர்க்கை
ப, மார் – நடப்ப, நடமார் .... பலர்பால் படர்க்கை
அ, ஆ – நடந்தன, நடவா .... பலவின்பால் படர்க்கை
கு – உண்கு, (உண்பேன்) .... ஒருமைத் தன்மை "
என், ஏன் – நடந்தனென், நடந்தேன் ... ஒருமைத் தன்மை "
அல், அன் – நடப்பல், நடப்பன் .... ஒருமைத் தன்மை "
அம், ஆம் – நடப்பம், நடப்பாம் .... பன்மைத்தன்மை
எம், ஏம் – நடப்பெம், நடப்பேம் .... பன்மைத்தன்மை
ஓம் – நடப்போம் .... பன்மைத்தன்மை
கும், டும் – உண்கும் (உண்பேம்), உண்டும் (உண்டேம்)
தும், றும் – நடந்தும் (நடந்தேம்), சேறும் (செல்வேம்) "
ஐ, ஆய் – நடந்தனை, நடந்தாய்
இ – சேறி (செல்வாய்) .... ஒருமை முன்னிலை
மின், இர், ஈர் – நடமின், நடந்தனிர், நடந்தீர் – பன்மை "
ஈயர், க, ய – நிலீயர், நடக்க, வாழிய .... வியங்கோள்.
உ–ம் – நடக்கும் " " .... செய்யுமென்முற்று.

இவையெல்லாம் தெரிநிலை வினைமுற்றுக்கள். டு, து, று ஒன்றன் பாலில் தாமே காலங்காட்டா.

(b) வினைக்குறிப்புமுற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டு வனவாதலால் இவ்விகுதிகளுள் தாமே காலங்காட்டும்விகுதிகள் ஒழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று; என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம்; ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

உ.ம் : – குழையன், குழையான்; குழையள், குழையாள்; குழையர், குழையார்; குழையன, குறுந்தாட்டு (குறுந்தாளை யுடையது), குழையது, குழையிற்று; குழையினென், குழையினேன்; குழையம், குழையாம்; குழையினெம், குழையினேம், குழையினோம்; குழையினை, குழையாய், வில்லி; குழையினிர், குழையீர்.

(2) 'பெயரினுஞ்சில' என்றதனால், இவ்விகுதிகளுள் அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர், மார்; அ; து; இ என்பவற்றுடனே, மன், மான்; கள்; வை; தை; கை; பி; முன்; அல்; ன்; ள்; ர்; வ் என்பனவும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

உ–ம் : குழையன், வானத்தான்; குழையள், வானத்தாள்; குழையர், வானத்தார்; தேவிமார்; குழையன்; யாது; பொன்னி; வடமன், கோமான்; கோக்கள்; அவை; எந்தை; எங்கை; நம்பி; எம்முன்; தோன்றல்; பிறன்; பிறள்; பிறர்; அவ்.

இன்னும் **'வினையின்விகுதி பெயரினுஞ் சில'** என்றதனாலும், **'பிறவும்'** என்றதனாலும் பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ்விகுதிகளுள் அடங்கியும் அடங்காமலும் வரும் விகுதிகளெல்லாம் கொள்ளப்படும்.

3 (a) தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள் : – **அ, உம்.**

**உ–ம் :** – நடந்த, நடக்கிற, நடக்கும் எனவரும்.

(b) குறிப்பு வினைப் பெயரெச்ச விகுதி அ : உ–ம் : சிறிய.

உம் விகுதி இடைநிலை பெறாது தானே காலங்காட்டு மாதலால் அது குறிப்புப் பெயரெச்சத்திற்கு வாராது.

4 (a) தெரிநிலை வினையெச்ச விகுதிகள் : – உ, இ, ய், பு, ஆ, ஊ, என; அ; இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து; உம்; மல், மை, மே, து என்பனவும் பிறவுமாம். இவற்றுள் இறுதியிற்கூறிய மல், மை, மே, து என்னும் விகுதிகள் எதிர்மறைக்கு வரும்.

**உ–ம்** : நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணா, உண்ணூ, உண்ணென, உண்ண; உண்ணின்; உண்டால்; உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக் கடை, செய்தவழி,

செய்தவிடத்து; காண்டலும்; உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே, உண்ணாது.

(b) குறிப்பு வினையெச்ச விகுதிகள் : – அ; றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்பனவும் பிறவுமாம்.

**உ–ம்** : பைய; அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

5. தொழிற்பெயர்விகுதிகள் : – தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை,மை, து, ஆல், இல் என்பனவும் பிறவுமாம்.

**உ–ம்** : நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தேற்றரவு (தேறுதல்), வாரானை (வருதல்), நடவாமை, பாய்த்து, தழால் (தழுவுதல்), எழில் (எழுதல்), மை விகுதி நடந்தமை, நடக்கின்றமை என இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடு கூடியும், து விகுதி நடந்தது, நடக்கின்றது, நடப்பது என மூன்றுகால இடை நிலைகளோடு கூடியும் வரும்.

6. பண்புப் பெயர் விகுதிகள் : – மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், பம், நர்.

**உ–ம்** : – நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், திட்பம், நன்னர்.

7. பிறவினை விகுதிகள் : – கீழ், "செய்யென் வினைவழி" என்னுஞ் சூத்திரத்திற் காண்க.

8. இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப் பொருளையும் உணர்த்தும்.

**உ–ம்** : அலரி, பறவை, எச்சம் – (வினைமுதற் பொருள்).
ஊருணி, தொடை, தொல்காப்பியம் – (செயப்படுபொருள்)
மண்வெட்டி, பார்வை, நோக்கம் – (கருவிப் பொருள்)

9. **விடு, ஒழி** என்னும் விகுதிகள் துணிவுப் பொருளை உணர்த்தும்.

**உ–ம்** : செய்துவிட்டான், செய்தொழிந்தான்.

10. **கொள்** விகுதி வினைப்பயன் வினைமுதலைச் சென்றடைதலாகிய தற்பொருட்டுப் பொருளை உணர்த்தும்.

**உ–ம்** : அடித்துக் கொண்டான்.

11. **படு, உண்** விகுதிகள் செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்தும்.

**உ–ம்** : கட்டப்பட்டான், கட்டுண்டான்.

12. **மை** விகுதி தன்மைப் பொருளை உணர்த்தும்.

**உ-ம்** : பொன்மை, ஆண்மை.

13. **இரு, இடு** என்பன தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும்; இவற்றைத் துணைவினை என்பர்.

**உ-ம்** : எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான்.

14. எதிர்மறை விகுதிகள் : – இல், அல், ஆ என்பன.

**உ-ம்** : நடந்திலன், நடக்கின்றிலன், நடக்கிலன், நடக்கலன், நடவாதான்.

15. மேற்கூறிய விகுதிகளுட்சில பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலு முண்டு; கெடினும், புணர்ந்து நின்றாற்போலவே தம்பொருளை உணர்த்தும்.

(a) உ-ம் : கொல்களிறு, ஓடாக்குதிரை என்பவற்றில் பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன.

(b) (i) அடி, உரை, பற்று என்பவற்றில் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதிமாத்திரம் நின்றது.

(ii) கேடு, இடையீடு, கோள் என்பவற்றில் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதி திரிந்தது. இவை முறையே **முதனிலைத் தொழிற் பெயர்** எனவும், **முதனிலை திரிந்த தொழிற்பெயர்** எனவும் பெயர் பெறும்.

(c) காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவற்றில் வினை முதற்பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

(d) ஊண், தீன், கோள் என்பவற்றில் செயப்படு பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

(e) நோக்கு (கண்) என்பதில் கருவிப் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

(f) 'வரிப்புனை பந்து' என்பதில் 'வரிந்து' என்னும் வினையெச்சத்தின் விகுதியும், 'கொள்வாரும் கள்வருநேர்' என்பதில் 'நேர்வர்' என்னும் வினைமுற்றின் விகுதியும் கெட்டன. வேறு சில விகுதிகளும் சிறுபான்மை கெட்டு வருமெனக் கொள்க.

இவ்விகுதிகளுள் ஒன்றே பல பொருளைக் குறிப்பது முண்டு.

அவற்றுள் சிலவருமாறு :–

அ.
1. வினையெச்ச விகுதி : செய்ய, மெல்ல.
2. பெயரெச்ச விகுதி : செய்த, சிறிய.
3. பலவின் படர்க்கை விகுதி : வந்தன, கொடியன.
4. வியங்கோள் விகுதி : எழுந்தருள (எழுந்தருள்க.)

அம்.
1. தன்மைப்பன்மை விகுதி : நடந்தனம், பெரியம்.
2. தொழிற்பெயர் விகுதி : ஆட்டம்.

3. பண்புப்பெயர் விகுதி : நலம்.
4. வினைமுதற்பொருள் விகுதி : எச்சம்.
5. செயப்படுபொருள் விகுதி : நீத்தம்.
6. கருவிப்பொருள் விகுதி : நோக்கம்.

அல். 1. தொழிற்பெயர் விகுதி : செயல்
2. ஒருமைத்தன்மை விகுதி : நடப்பல் (நடப்பேன்)
3. வியங்கோள் விகுதி : எனல் (என்க.)
4. எதிர்மறை வியங்கோள் விகுதி : கொளல் (கொள்ளற்க)
5. எதிர்மறை ஏவல் விகுதி : படியல் (படியாதே).

அன். 1. ஆண்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : அறிஞன்.
2. ஆண்பாற்படர்க்கை வினை விகுதி : வந்தனன்.
3. ஒருமைத்தன்மை விகுதி : செய்வன் (செய்வேன்)
4. ஒன்றன் பாற்படர்க்கைப் பெயர் விகுதி : வலியன், கடுவன்.

ஆ 1. எதிர்மறைப் பலவின்பாற்படர்க்கை விகுதி : வாரா, நடவா
2. வினையெச்ச விகுதி : நடவா (நடந்து).

ஆல் 1. தொழிற்பெயர் விகுதி : ஒரால் (ஒருவுதல்)
2. தெரிநிலை வினையெச்ச விகுதி : உண்டால்
3. குறிப்பு வினையெச்ச விகுதி : அல்லால்.
4. எதிர்மறையேவ லொருமை விகுதி : மறால் (மறுக்காதே).

ஆன் 1. ஆண்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : பெரியான்.
2. ஆண்பாற்படர்க்கைப் வினை விகுதி : நடந்தான்.
3. ஒன்றன்பாற் பெயர் விகுதி : கோட்டான்.

இ 1. ஆண்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : வில்லி.
2. பெண்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : பொன்னி
3. ஒன்றன்பாற்படர்க்கைப் பெயர் விகுதி : நாற்காலி
4. ஒருமை முன்னிலை விகுதி : வந்தி (வந்தாய்)
5. வினையெச்ச விகுதி : ஓடி.
6. வினைமுதற் பொருள் விகுதி : அலரி.
7. செயப்படுபொருள் விகுதி : ஊருணி
8. கருவிப் பொருள் விகுதி : மண்வெட்டி
9. ஏவலொருமை விகுதி : காட்டுதி (காட்டு)
10. வியங்கோள் விகுதி : காட்டி (காட்டுக).

உ 1. வினையெச்ச விகுதி : நடந்து
2. தொழிற்பெயர்விகுதி : வரவு.

உம் 1. ஏவற்பன்மை விகுதி : வாரும்
2. படர்க்கை வினைமுற்று விகுதி : செய்யும்.
3. பெயரெச்ச விகுதி : நடக்கும் (குதிரை)
4. வினையெச்சவிகுதி : வருதலும் (தந்தான்)

ஏல் 1. எதிர்மறை ஏவல் விகுதி : திரியேல் (திரியாதே)
2. தெரிநிலை வினையெச்ச விகுதி : உண்டானேல்.

ஐ. 1. ஒருமை முன்னிலைவிகுதி : செய்தனை (செய்தாய்)
2. தொழிற்பெயர் விகுதி : கொலை
3. பண்புப் பெயர் விகுதி : தொல்லை
4. வினைமுதற் பொருள் விகுதி : பறவை
5. செயப்படு பொருள் விகுதி : தொடை
6. கருவிப் பொருள் விகுதி : படை

கு. 1. பண்புப் பெயர் விகுதி : நன்கு
2. பிறவினை விகுதி : போக்கு (போகச்செய்)
3. தொழிற்பெயர் விகுதி : போக்கு (போதல்)
4. ஒருமைத் தன்மை விகுதி : உண்கு (உண்பேன்)

கை 1. தொழிற்பெயர் விகுதி : வருகை.
2. முறைப்பெயர் விகுதி : தங்கை, நங்கை

சி. 1. பண்புப்பெயர் விகுதி : மாட்சி
2. தொழிற்பெயர் விகுதி : உணர்ச்சி

து. 1. ஒன்றன்பாற் படர்க்கை விகுதி : நடந்தது.
2. பிறவினை விகுதி : நடத்து.
3. தொழிற்பெயர் விகுதி : பாய்த்து (பாய்தல்)
4. ஒருமைத் தன்மை விகுதி : வந்து (வந்தேன்) வருது (வருவேன்.)
5. வினையெச்ச விகுதி ; – அல்லாது (அல்லாமல்)பு.

1 பண்புப் பெயர் விகுதி : நண்பு.
2. தொழிற்பெயர் விகுதி : படிப்பு
3. வினையெச்ச விகுதி ; செய்து.

மார் 1. பலர்பாற் படர்க்கைப் பெயர்விகுதி : கோமார், குருமார், கன்னிமார்
2. பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதி : கொண்மார்

மை 1. பண்புப் பெயர் விகுதி : நன்மை
2. தொழிற்பெயர் விகுதி : செய்தமை
3. வினையெச்ச விகுதி : செய்யாமை (செய்யாமல்)
4. தன்மைப்பொருள் உணர்த்தும் விகுதி : பொன்மை, பெண்மை

வி 1. தொழிற்பெயர் விகுதி : கேள்வி
2. பிறவினை விகுதி : செய்வி

று 1. ஒன்றன் படர்க்கை விகுதி : ஆயிற்று.
2. பண்புப் பெயர் விகுதி : நன்று.
3. ஒருமைத் தன்மை விகுதி : சென்று (சென்றேன்), சேறு (செல்வேன்).
4. பிறவினை விகுதி : பயிற்று.

இவ்வாறு ஒரு விகுதி பலசொற்களில் நின்று பல பொருள் தருதலின்றி, ஒரே சொல்லில் நின்று பலபொருள் குறித்தலுமுண்டு. உ–ம்: 'ஆக்கம்' இதில் **அம்** விகுதி வினைமுதற்பொருள் செயப்படுபொருள் கருவிப்பொருள்களாகிய மூன்றையும் குறித்ததுகாண்க. இன்னும் சில விகுதிகள் உயர்வுப்பொருள்தர வருதலும் உண்டு. உ–ம் : தனியன், கோவையார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அன்... என்பவும் பிறவும் –** அன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும் இவை போல்வன பிறவும், **வினையின் விகுதி –** தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும், **பெயரினும் சில –** பெயர்ப் பகுபதங்களிலும் இவற்றுட் சில விகுதிகளாகும், **எ–று.**

உம் ஊர் க ட த ற – உம்மென்ப தேறிய கடதற வொற்றுக்கள். அவை கும் டும் தும் றும் என்பன. அன் விகுதி தன்மைக்கு **எதிரதுபோற்ற**லென்னு முத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின், வலியுறுத்தற்குப் பின்னுங் கூறினார்.

**உ–ம்.:** நடந்தனன், நடந்தான் இவை ஆண்பாற் படர்க்கை. நடந்தனள், நடந்தாள் இவை பெண்பாற் படர்க்கை. நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் இவை பல்லோர் படர்க்கை. நடந்தன, நடவா இவை பலவின் படர்க்கை. நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன் இவை ஒருமைத்தன்மை. நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு இவை ஒன்றன்படர்க்கை. நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும் இவை தன்மைப்பன்மை. நடந்தனை, நடந்தாய், நடத்தி இவை ஒருமை முன்னிலை. நடமின், நடந்தனிர், நடந்நீர் இவை பன்மை முன்னிலை. நிலீயர், நடக்க, வாழிய இவை வியங்கோள். நடக்கும் இது செய்யு மென்னு முற்று. பிறவு மென்றதனால், மறால், அழேல், சொல்லிக்காண் என ஆல், ஏல், காண் முதலிய விகுதிகளும் வரும்.வினைக்குறிப்பு முற்றுக்கள் குறிப்பாகக் காலங் காட்டுவன வாதலால், இவ் விகுதிகளுள்ளே தாமே காலங் காட்டும் விகுதிகளொழித்து ஒழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் இருபத்திரண்டு விகுதிகளோடு வருமெனக் கொள்க.

**உ–ம்.:** கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று, கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர் என வரும்.

பெயரினுஞ் சில என்றதனால், இவ்விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ என்னும் பத்தோடு மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல். ன், ள், ர், வ், என்னும் பதின்மூன்றும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

**உ–ம்.:** குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி, வடமன்,

**உ–ம்.:** அலரி, பறவை, எச்சம் என்பன வினைமுதற்பொருளை உணர்த்தின. ஊருணி, தொடை, தொல்காப்பியம் என்பன செயப்படு பொருளை யுணர்த்தின. மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன கருவிப்பொருளை உணர்த்தின.

விடு, ஒழி விகுதிகள் துணிவுப்பொருளை யுணர்த்தும்.

**உ–ம்.:** செய்துவிட்டான், செய்தொழிந்தான் என வரும்.

கொள் விகுதி வினைப்பயன் வினைமுதலைச் சென்றடைதலாகிய தற்பொருட்டுப் பொருளை யுணர்த்தும்.

**உ–ம்.:** அடித்துக் கொண்டான் எனவரும்.

படு, உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும்.

**உ–ம்.:** கட்டப்பட்டான், கட்டுண்டான் என வரும்.

மை விகுதி தன்மைப்பொருள் உணர்த்தும்.

**உ–ம்.:** பொன்மை, ஆண்மை என வரும்.

இரு, இடு என்பன தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும்.

**உ–ம்.:** எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான் என வரும்.

முன்னிலை யேவலொருமை ஆய் விகுதியும் பெயரெச்ச விகுதியும், தொழிற்பெயர் விகுதியும், வினைமுதற்பொருளை யுணர்த்தும் இகர விகுதியும், செயப்படுபொருளை யுணர்த்தும் ஐ விகுதியும், பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு. கெடினும், புணர்ந்து நின்றாற் போலவே தம்பொருளை யுணர்த்தும்.

**உ–ம்.:** நீ நட, நீ நடப்பி, நீ செல் என்பவைகளிலே ஆய் விகுதி புணர்ந்து கெட்டது. கொல் களிறு, ஓடாக் குதிரை என்பவைகளிலே பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன. அடி, கேடு, இடையீடு என்பவைகளிலே தல் என்னுந் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது. காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளிலே வினைமுதற் பொருளுணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டது. ஊண், தீன், கோள் என்பவைகளிலே செயப்படு பொருளுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டது.

சிறுபான்மை வரிப்புனைபந்து என்பதில் வரிந்து என்னும் வினையெச்ச விகுதியும், கொள்வாருங் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்னும் முற்று விகுதியுங் கெட்டு வந்தன. இவ்வாறே பிற விகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அன் என்பவும்** – அன்முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், **– பிறவும் –** இவைபோல்வன பிறவும். **– வினையின்**

**விகுதி** – தெரிநிலை வினை முற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும், – சில (விகுதி) **பெயரினும்** – இவற்றுட் சிலவிகுதிகள் பெயர்ப்பகுபதங்களிலும் வரும். **எ–று.**

உம் ஊர் க ட த ற – உம் என்பதேறிய க ட த ற ஒற்றுக்கள். அவை: கும், டும், தும், றும் என்பன.

அன் முதல் முப்பத் தேழாகச் சொல்லப்பட்ட விகுதிகளாவன:– அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று என், ஏன், அல், அன், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், ஐ, ஆய், இ, மின், இர், ஈர், ஈயர், க, ய, உம் என்பனவாம்.

இவற்றில் அன் விகுதி தன்மைக்கு. எதிரது போற்றலென்னு முத்தியாற் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டதாகலின், வலியுறுத்தற்கு மீட்டுங் கூறினார்.

| இந்த முப்பத்தேழு விகுதிகளில் | வகை | உ–ம். |
|---|---|---|
| அன், ஆன் | ஆண்பாற் படர்க்கை விகுதி | நடந்தனன், நடந்தான் |
| அள், ஆள் | பெண்பாற் படர்க்கை விகுதி | நடந்தனள், நடந்தாள் |
| அர், ஆர். ப, மார் | பலர்பாற் படர்க்கை விகுதி | நடந்தனர், நடந்தார், நடப் (ப, நடமார்) |
| (து, டு, று) | ஒன்றன்பாற் படர்க்கை விகுதியுமாம். | நடந்தது, குண்டுகட்டு, (கூயிற்று). |
| அ, ஆ | பலவின்பாற் படர்க்கை விகுதி | நடந்தன, நடவா |
| கு, டு, து, று, என், ஏன், அல், அன் | தன்மையொருமை விகுதி | நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந் தேன், நடப்பல், நடப்பன். |
| அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் | தன்மைப்பன்மை விகுதி | நடப்பம், நடப்பாம், நடப் பெம், நடப்பேம், நடப்போம் நடக்கும், உண்டும், நடந் தும், சேறும் |
| ஐ, ஆய், இ | முன்னிலை ஒருமை விகுதி முன்னிலை ஏவலொருமை விகுதிமாம். | நடந்தனை, நடந்தாய், (ஆய்) நடத்தி நடவாய். |
| மின், இர், ஈர், (உம்) | முன்னிலை ஏவற்பன்மை விகுதி | நடமின், நடந்தனிர், நடந் தீர், நடவும். |
| (இர், ஈர்) | முன்னிலைப் பன்மை விகுதி | நடந்தனர், நடந்தீர் |
| ஈயர், க, ய | வியங்கோள் விகுதி | நிலீயர், நடக்க, வாழிய |

| | | |
|---|---|---|
| (அல்) | வியங்கோள் உடன்பாட்டெதிர் மறைகளுக்கு விகுதி | உண்ணல், செய்யல் |
| உம் | செய்யுமென்னு முற்றுவிகுதியும், பெயரெச்சவினை விகுதியுமாம் | காணும், பாயும் |

பிறவுமென்றதனால், மறால், அழேல் என ஆல், ஏல் முதலிய விகுதிகளும் வரும்.

பெயரினுஞ் சில என்றதனால் குறிப்பு வினையினுஞ் சிலவென்றது கூறாதே அமைதலின், வினையின் விகுதியென்றது தெரிநிலைவினை விகுதிகளெனக் காண்க.

தாமே காலங்காட்டும் விகுதி குறிப்புவினைக்கு வருதலில்லை யாகவும், டு, து, று என்னுங் காலங்காட்டும் விகுதிகளைக் குறிப்புவினைபெறு மென்பதென்னையெனின், டு, து, று விகுதிகள் காலங்காட்டுதல் தெரிநிலைத்தன்மை வினையிடத்திலாம், குறிப்பு வினைக்குப் படர்க்கையிலே அவ்விகுதிகள் வந்து காலங்காட்டாம னிற்குமென்றறிக.

வினைக்குறிப்பு முற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டுவன வாதலால் இவ்விகுதிகளுள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழித்து ஒழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் இருபத்திரண்டு விகுதிகளோடு வருமெனக்கொள்க.

**உ–ம்.** கரியன், கரியான்; கரியள், கரியாள்; கரியர், கரியார்; கரியன; குறுந்தாட்டு, கரிது, குழையிற்று; கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம்; கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர் எனவரும்.

பெயரினுஞ்சில என்றதனால் இவ்விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ என்னும் பத்தோடு மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ், எ என்னும் பதின்மூன்றும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

**உ–ம்.** குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி; வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ் எனவரும்.

இன்னும் வினையின் விகுதி பெயரினுஞ் சில என்றதினாலும், பிறவும் என்றதினாலும் பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ்விகுதிகளுள் அடங்கியும் அடங்காதும் வரும் விகுதிகளெல்லாங் கொள்ளப்படும்.

தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள்: அ, உம் என்னுமிரண்டுமாம்.

உ–ம். செய்த, செய்கின்ற, செய்யும் எனவரும்.

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி அ ஒன்றேயாம். கரிய எனவரும்.

**உ–ம்.** விகுதி இடைநிலையேலாது தானே எதிர்காலங் காட்டலாற் குறிப்புவினைப் பெயரெச்சத்துக்கு வாராது.

தெரிநிலைவினையெச்ச விகுதிகள்: உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, ன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வை, இடத்து, உம், (வகை); மல், மை, மே என்னு மிருபத்தொன்பதும் பிறவுமாம். இவற்றுள் இறுதியிற் கூறிய மல், மை, மே என்னு மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.

**உ–ம்** நடந்து, ஓடி, போய், நக்குபு, காணா, காணூ, உண்ணென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், சொல்லுவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், தோன்றாவகை, கைப்படாவகை, உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே என வரும்.

வகையென்பது உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வினையெச்ச விகுதியாகும்.

**வ–று.** பாரதத்தில் – ''வானிடை நதியையும் வழுவினாலவள், தானிட ருறும்வகை தந்தையேவினான்''. என உடன்பாட்டிலும் ''கதுமெனச் சென்று தாய்கைப் படாவகை' எனவும் கந்தபுராணத்தில் – ''புதல்வர்தோன்றாவகை தடுத்த'' எனவும், எதிர்மறையிலும் வகையீறு வினைசெய்பத்தில் வருதலால் அதுவுமீண்டு நூதனமாய்ச் சேர்க்கப்பட்டமை யறிக. (நூதனமாய் = புதிதாய்).

குறிப்பு வினையெச்சவிகுதிகள் அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவுமாம்.

**உ–ம்.** மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து என வரும்.

தொழிற்பெயர் விகுதிகள் தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்.

**உ–ம்.** நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து என வரும்.

மைவிகுதி : செய்தமை. செய்கின்றமை என இறந்தகால விடைநிலை, நிகழ்கால விடைநிலைகளோடு கூடியும் வரும்.

துவிகுதி : அவர் செய்தது, செய்கின்றது, செய்வது என முக்கால விடைநிலைகளோடு கூடியும் வரும்.

பண்புப் பெயர் விகுதிகள் : மை, ஐ, சி, பு, உ கு, றி, று, அம், நர் என்னும் பத்தும் பிறவுமாம்.

**உ–ம்** நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர் என வரும்.

பிறவினை விகுதிகள் : வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

**உ–ம்.** செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு; நடத்து, எழுப்பு, துயிற்று எனவரும். "விப்பி குசுடுது புறுவென மாறும், ஒப்பில் பிறவினைக் குறும் விகு திகளே" என்னுஞ் சூத்திரத்தானு மறிக.

கரை, தேய் என்வருந் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள் சிறுபான்மை இவ்விகுதி வேண்டாது கரைத்தான், தேய்த்தான்; கரைத்திலன், தேய்த்திலன்; கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான்; கரக்கான், தேய்க்கான் எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வல்லெழுத்து மிக்கும்.

கரைந்தான், கரைந்திலன்; கரைகின்றான், கரைகின்றிலன்; கரைவான், கரையான் எனத் தன் வினைப்பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகாதும் வருமென்றறிக.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற்பொருளையுஞ் செயப்படுபொருளையுங் கருவிப் பொருளையு முணர்த்தும்.

**உ–ம்.** அலரி, பறவை, எச்சம் என்பன வினைமுதற் பொருளை யுணர்த்தின. ஊருணி, தொடை, தொல்காப்பியம் என்பன செயப்படுபொருளை யுணர்த்தின. மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன கருவிப் பொருளையுணர்த்தின.

விடு, ஒழி விகுதிகள் துணிவுப் பொருளையுணர்த்தும்.

**உ–ம்** செய்துவிட்டான், செய்தொழிந்தான் என வரும். கொள் விகுதி வினைப்பயன் வினை முதலைச் சென்றடைதலாகிய தற்பொருட்டுப் பொருளை யுணர்த்தும்.

**உ–ம்.** (கல்லிலேகாலை) அடித்துக் கொண்டான், (நாக்கைக்) கடித்துக் கொண்டான் எனவரும்.

படு, உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப் பொருளுணர்த்தும்.

**உ–ம்.** கட்டப்பட்டான், கட்டுண்டான் எனவரும்.

மை விகுதி தன்மைப் பொருளுணர்த்தும். (தன்மை = சுபாவம்).

**உ–ம்** பொன்மை, ஆண்மை எனவரும்

இரு, இடு என்னும் விகுதிகள் தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும்.

**உ–ம்** எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான் எனவரும்.

முன்னிலையேவலொருமை ஆய்விகுதியும், பெயரெச்ச விகுதியும், தொழிற்பெயர் விகுதியும், வினைமுதற் பொருளையுணர்த்தும் இகரவிகுதியும், செயப்படுபொருளை யுணர்த்தும் ஐ விகுதியும் பகுதியொடு புணர்ந்து பின் கெடுதலுமுண்டு. கெடினும் புணர்ந்து நின்றாற் போலவே தம்பொருளை யுணர்த்தும்.

**உ–ம்** நீ நட, நீ நடப்பி, நீ செல் என்பவைகளில் ஆய்விகுதி புணர்ந்து கெட்டது. கொல் களிறு, ஓடாக்குதிரை என்பவைகளிலே பெயரெச்ச விகுதிகள் புணர்ந்துகெட்டன. அடி, கேடு, இடையீடு என்பவைகளிலே தல்லென்னுந் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கொட்டது.

காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளிலே வினை முதற் பொருளுணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டது.

ஊண், தீன், கோள் என்பவைகளிலே செயப்படு பொருளுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து கெட்டது.

சிறுபான்மை வரிப்புனைபந்து என்பதில் வரிந்து என்பதின் வினையெச்ச விகுதியும், கொள்வாருங் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்பதின் முற்று விகுதியுங்கெட்டு வந்தன. இவ்வாறே பிற விகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: அன் . . . . . . . . . . . . . . என்பவும்** – அன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், **பிறவும்**–(இவை போல்வன) பிறவும், **வினையின் விகுதி** – தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாம்; **பெயரினும் சில** – பெயர்ப் பகுபதங்களிலும் (அவற்றுள்) சில விகுதிகளாம்; **எ–று.**

**இரட்டுற மொழிதல்** என்னும் உத்தியால் தன்மை யொருமைக்கும் அஃறிணைப் படர்க்கை யொருமைக்கும் பொதுவாக 'டு து று' என்றும், முன்னிலை யொருமைக்கும் முன்னிலை யேவலொருமைக்கும் பொதுவாக 'ஆய்' என்றும், அன் என்னும் தன்மை யொருமை விகுதி தொன்றுதொட்டதன்றி இலக்கியங்களிற் கண்டமையின் **எதிரதுபோற்றல்** என்னும் உத்தியால் தழுவிக் கொண்டதாதலின் அதனை வலியுறுத்திப் பின்னும் 'அன்' என எடுத்தும், இன்னும் இவற்றுள் **இரட்டுறமொழிதலால்** அடங்குவன அடங்க அடங்காதனவாகிய பெயரெச்சம் வினையெச்சம் முதலியவற்றின் ஈற்றில் நிற்பனவெல்லாம் விகுதி யென்று கருதிக் கொள்ளுதற்கு 'பிறவும்' என்றும் கூறினார்; (எதிரது போற்றல் – முன்பு இல்லாததாய்ப் பின்பு வழங்கி வருமாயின், அதனைத் தழுவிக் கொள்ளுதல்.)

உம் ஊர் க ட த ற – உம் என்பது ஊர்ந்த (ஏறிய) ககர டகர தகர றகர மெய்கள்; அவை – கும், டும், தும், றும் என்பன.

**உ–ம்.: அன், ஆன்,** – நடந்தனன், நடந்தான் – ஆண்பாற் படர்க்கை

**அள், ஆள்.** – நடந்தனள், நடந்தாள் – பெண்பாற் படர்க்கை

**அர், ஆர்,** – நடந்தனர், நடந்தார்,

**ப, மார்.** – நடப்ப, நடமார் – பலர்பாற் படர்க்கை.

அ, ஆ. – நடந்தன, நடவா – பலவின்பாற் படர்க்கை.

கு, டு – உண்கு, உண்டு. து, று, நடந்து,

சேறு, என், ஏன் – நடந்தனென், நடந்தேன் – ஒருமைத் தன்மை

அல், அன் – நடப்பல், நடப்பன்.

அம், ஆம் – நடப்பம், நடப்பாம்,

எம், ஏம் – நடப்பெம், நடப்பேம்,

ஓம் – நடப்போம் பன்மைத் தன்மை

கும், டும்– உண்கும், உண்டும்,

தும், றும்– நடந்தும், சேறும்

| | | |
|---|---|---|
| ஐ, ஆய், | நடந்தனை, நடந்தாய், | |
| இ | சேறி (செல்வாய்) | ஒருமை முன்னிலை |
| மின். | நடமின், | |
| இர், ஈர். | நடந்தனிர், நடந்தீர் | பன்மை முன்னிலை. |
| **ஈயர், க,** | நிலீயர், நடக்க. | |
| **ய.** | வாழிய | வியங்கோள். |
| **உ–ம்.:** | நடக்கும் | செய்புமென் முற்று. |

இவையெல்லாம், தெரிநிலை வினை முற்றுக்கள்.

டு, து, று விகுதிகள் ஒன்றன்பாலில் வருவதற்கு உதாரணம்:–

குறுந்தாட்டு (குறுகிய தாளை யுடையது), நடந்தது, போயிற்று.

'பிறவும்' என்றதனால், மறால் அழேல் என ஆல் ஏல் முதலிய விகுதிகளும் வரும். இவை – எதிர்மறை யொருமை யேவல். குறிப்புவினைமுற்றுக்கள், குறிப்பாகக் காலங் காட்டுவன வாதலால், இந்த விகுதிகளுள்ளே தாமே காலங் காட்டும் விகுதிகளொழிந்த அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர்; அ; டு, து, று; என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம்; ஐ, ஆய், இ; இர், ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

**உ–ம்.:** கரியன், கரியான்; கரியள், கரியாள்; கரியர், கரியார்; கரியன; குறுந்தாட்டு, கரியது, குழையிற்று; கரியென், கரியேன்; கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்லி; கரியிர், கரியீர்.

'பெயரினுஞ் சில' என்றதனால், இவ் விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், து, அ, ஐ, இ என்பவைகளுடனே, மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் என்பனவும், பிறவும் பெயர் விகுதிகளாம்.

**உ–ம்.:** குழையன், வானத்தான்; குழையள், வானத்தாள்; குழையர், வானத்தார், தேவிமார்; யாது; குழையன; கண்ணறை, பொன்னி, வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ்.

தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள்:– அ, உம் என்பன.

**உ–ம்.:** நடந்த, நடக்கின்ற, நடவாத; நடக்கும்.

குறிப்புப் பெயரெச்ச விகுதி:– அ ஒன்றேயாம்.

**உ–ம்.:** பெரிய.

'உம்' விகுதி இடைநிலையை ஏற்காமல் தானே எதிர்காலங் காட்டுதலால், குறிப்புப் பெயரெச்சத்திற்கு வாராது.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள்:– உ, இ, ய், பு, ஆ, ஊ, என: அ: இன், ஆல், கால், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, கண், வழி, இடத்து: உம்: மல், மை, மே என்பனவும், பிறவுமாம். இவற்றுள், இறுதியிற் கூறிய மல், மை, மே என்னும் விகுதிகள் எதிர்மறையில் வரும்.

**உ–ம்.:** நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணா, உண்ணூ, உண்ணென, உண்ண: உண்ணின், உண்டால், உண்டக்கால், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தக்கண், செய்தவழி, செய்தவிடத்து: காண்டலும்: உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே.

('உண்ட' என்பதிற் போல அதன் எதிர்மறையாகிய 'உண்ணாத' என்பதிலும் 'அ' – விகுதி யெனக் கொள்ளப்படுதற்கு ஏற்ப, 'உண்டு' என்பதிற் போல அதன் எதிர்மறையாகிய 'உண்ணாது' என்பதிலும் 'உ' விகுதி யெனக் கொள்க; இவ் வெதிர்மறைச் சொற்களில், த் – எழுத்துப்பேறு.)

குறிப்பு வினையெச்ச விகுதிகள்: அ: றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்பனவும், பிறவுமாம்.

**உ–ம்.:** மெல்ல: அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

தொழிற்பெயர் விகுதிகள்:–தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு. ஆனை, மை, து, ஆல், இல் என்பனவும், பிறவுமாம்.

**உ–ம்.:** நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி. விக்குள், (விக்குதல்), சாக்காடு (சாதல்), கோட்பாடு (கொள்கை), தேற்றரவு (தேற்றுதல்), வாரானை (வருதல்), நடவாமை, பாய்த்து (பாய்தல்), தழால் (தழுவல்), எழில் (எழுதல்).

'மை' என்னுந் தொழிற்பெயர் விகுதி – நடந்தமை' நடக்கின்றமை என இறந்தகால விடைநிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடியும், 'து' என்னுந் தொழிற்பெயர் விகுதி – நடந்தது, நடக்கின்றது, நடப்பது என முக்கால விடை நிலைகளோடு கூடியும் வரும்.

இவையெல்லாம் விகுதிபெற்ற தொழிற்பெயர்.

இனி, இவ் விகுதிகளில் ஒன்று புணர்ந்து கெட்டுப் பகுதி மாத்திரமாய் நிற்கும் தொழிற்பெயர்களும், விகுதி புணர்ந்து கெடும்போது பகுதி விகாரப்பட்டு நிற்கும் தொழிற் பெயர்களும் உண்டு; அவை – முறையே முதனிலைத் தொழிற் பெயரென்றும், முதனிலை திரிந்ததொழிற் பெயரென்றும் கூறப்படும்.

**உ–ம்.:**

அடி, அறி, உரை, கெடு – முதனிலைத் தொழிற்பெயர்

கோள், கேடு, இடையீடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**பண்புப்பெயர் விகுதிகள்:** – மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம் என்பனவும் பிறவுமாம்.

**உ–ம்.:** நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், திட்பம்.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும், வினைமுதற் பொருளையும், செயப்படுபொருளையும், கருவிப்பொருளையும் உணர்த்தும். (வினைமுதற் பொருள்– கருத்தாப் பொருள்.)

**உ–ம்.:**

| | | |
|---|---|---|
| அலரி, பறவை, எச்சம், | – | வினைமுதற்பொருள் |
| ஊருணி, தொடை,நீத்தம் | – | செயப்படுபொருள் |
| மண்வெட்டி, பார்வை, நோக்கம் | – | கருவிப்பொருள் |

அலர்வது அலரி (பூ), பறப்பது பறவை (பக்ஷி), எஞ்சுவது எச்சம் (சந்ததி: எஞ்சுதல் – சேஷித்தல்); இவற்றில், வினைகளின் எழுவாயே பொருளாதல் காண்க. ஊராரால் நீருண்ணப்படுவது ஊருணி (குளம்); தொடுக்கப்படுவது தொடை (மாலை); நீந்தப்படுவது நீத்தம் (வெள்ளம்); இவற்றில் வினைகளின் செயப்படுபொருளே பொருளாதல் காண்க. மண்ணை வெட்டுதற்குக் கருவியானது மண்வெட்டி : பார்ப்பதற்குக் கருவியானது பார்வை (கண்) நோக்குதற்குக் கருவியானது நோக்கம் (கண்); இவற்றின் வினைகளின் கருவியே பொருளாதல் காண்க.

இம் மூவகை விகுதிகளும் பகுதியோடு புணர்ந்து கெடுதலும் உண்டு.

**உ–ம்.:** காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளில் வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

ஊண், பூண், கோன், உரி, துணி,மடி என்பவைகளில், செயப்படு பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

நோக்கு என்பதில், கருவிப் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

"வரிப்புனைபந்து" என்பதில் வரிந்து என்பதன் வினையெச்ச விகுதியும், "கொள்வாரும் கள்வரும் நேர்" என்பதில் நேர்வர் என்பதன் வினைமுற்று விகுதியும் கெட்டு வந்தன; இவ்வாறு வேறு சில விகுதிகளும் சிறுபான்மை கெட்டு வருதல் கண்டு கொள்க.

விடு, ஒழி என்ற விகுதிகள் – துணிவுப்பொருளை உணர்த்தும்.

**உ–ம்.:** செய்துவிட்டான், விட்டொழிந்தான்.

கொள் என்ற விகுதி – தற்செயலை உணர்த்தும்.

**உ–ம்.:** அடித்துக்கொண்டான்.

படு, உண் விகுதிகள் – செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்தும்,

**உ–ம்.:** கட்டப்பட்டான், கட்டுண்டான்.

மை என்ற விகுதி – தன்மைப்பொருளை உணர்த்தும்.

**உ–ம்.:** பொன்மை, ஆண்மை.

இரு, இடு, உறு என்பன தமக்கென வேறு பொருளின்றி, பகுதிப்பொருள் விகுதியாய் வரும்: இவற்றைத் துணைவினை யென்பர்.

**உ–ம்.:** எழுந்திருக்கிறான், உரைத்திடுகின்றான், சொல்லுறுகின்றான்.

**பலபொருள் குறிக்கும் விகுதிகள் வருமாறு:–**

**அ**

| | | |
|---|---|---|
| 1. | வினையெச்ச விகுதி: | செய்ய, மெல்ல. |
| 2. | பெயரெச்ச விகுதி: | செய்த, பெரிய. |
| 3. | பலவின்பாற் படர்க்கை விகுதி: | வந்தன, கொடியன. |
| 4. | வியங்கோள் விகுதி: | எழுந்தருள (=எழுந்தருள்க.) |

**அம்.**

| | | |
|---|---|---|
| 1 | தன்மைப்பன்மை விகுதி: | நடந்தனம், பெரியம். |
| 2. | தொழிற்பெயர் விகுதி: | ஆட்டம். |

3. பண்புப்பெயர் விகுதி: நலம்
4. வினைமுதற் பொருள் விகுதி: எச்சம்.
5. செயப்படுபொருள் விகுதி: நீத்தம்.
6. கருவிப்பொருள் விகுதி: நோக்கம்.

**அல்.**

1. தொழிற்பெயர் விகுதி: செயல்
2. தன்மை யொருமை விகுதி: நடப்பல் (நடப்பேன்)
3. உடன்பாட்டு வியங்கோள் விகுதி: எனல் (=என்க.)
4. எதிர்மறை வியங்கோள் விகுதி: கொளல் (=கொள்ளற்க)
5. எதிர்மறை யேவல் விகுதி: உண்ணல் (=உண்ணாதே)
6. வினைமுதற் பொருள் விகுதி: தோன்றல் (=மகன்.)

**அன்.**

1. ஆண்பாற் படர்க்கைப் பெயர் விகுதி: அறிஞன்.
2. ஆண்பாற் படர்க்கை வினை விகுதி: வந்தனன்.
3. தன்மையொருமை விகுதி: செய்வன் (=செய்வேன்.)
4. ஒன்றன்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: வலியன், கடுவன்.

**ஆ.**

1. பலவின்பாற் படர்க்கை விகுதி: நடவா.
2. வினையெச்ச விகுதி: செய்யா (=செய்து)

**ஆல்.**

1. தொழிற்பெயர் விகுதி: ஒரால் (=ஒருவுதல்)
2. தெரிநிலை வினையெச்ச விகுதி: உண்டால்.
3. குறிப்பு வினையெச்ச விகுதி: அல்லால்.
4. எதிர்மறை யேவ லொருமை விகுதி: மறால் (=மறுக்காதே)

**ஆன்.**

1. ஆண்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: பெரியான்.
2. ஆண்பாற் படர்க்கைவினை விகுதி: வந்தான்.
3. ஒன்றன்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: கோட்டான்.

**இ.**

1. ஆண்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: வில்லி.
2. பெண்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: பொன்னி
3. ஒன்றன்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: நாற்காலி, பலகணி.
4. முன்னிலை யொருமை விகுதி: வருதி (வருவாய்)
5. வினையெச்ச விகுதி: ஓடி.
6. வினைமுதற்பொருள் விகுதி: அலரி.
7. செயப்படுபொருள் விகுதி: ஊருணி.
8. கருவிப்பொருள் விகுதி: மண்வெட்டி.
9. ஏவலொருமை விகுதி: காட்டுதி (=காட்டு.)
10. வியங்கோள் விகுதி: காட்டி (=காட்டுக.)

**இர்.**

1. பலர்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: கேளிர், மகளிர்.
2. முன்னிலைப்பன்மை விகுதி: நடந்தனிர்.
3. ஏவற்பன்மை விகுதி: வருதிர்.

**உ.**

1. வினையெச்ச விகுதி: நடந்து.
2. தொழிற்பெயர் விகுதி: வரவு.

**உம்.**

1. ஏவற்பன்மை விகுதி: வாரும்.
2. படர்க்கை வினைமுற்று விகுதி: செய்யும்.
3. பெயரெச்ச விகுதி: நடக்கும் (மனிதன்)
4. வினையெச்ச விகுதி: செய்தலும் (போனான்.)

**ஐ.**

1. முன்னிலை யொருமை விகுதி: செய்தனை.
2. தொழிற்பெயர் விகுதி: விலை.
3. பண்புப்பெயர் விகுதி: தொல்லை.
4. வினைமுதற்பொருள் விகுதி: பறவை.
5. செயப்படுபொருள் விகுதி: தொடை
6. கருவிப்பொருள் விகுதி: படை

கு.

1. பண்புப்பெயர் விகுதி: நன்கு
2. பிறவினை விகுதி: போக்கு (=போகச்செய்)
3. தொழிற்பெயர் விகுதி: போக்கு (=போதல்.)
4. தன்மையொருமை விகுதி: உண்கு (=உண்பேன்.)

கை.

1. தொழிற்பெயர் விகுதி: வருகை
2. முறைப்பெயர் விகுதி: தங்கை.

சி.

1. பண்புப்பெயர் விகுதி: மாட்சி
2. தொழிற்பெயர் விகுதி: காட்சி.

து.

1. ஒன்றன்பாற் படர்க்கைவினை விகுதி: நடந்தது
2. ஒன்றன்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: கைத்து (=கைப்பொருள்.)
3. பிறவினை விகுதி: நடத்து
4. தொழிற்பெயர் விகுதி: பாய்த்து (=பாய்தல்.)
5. தன்மையொருமை விகுதி: வந்து (=வந்தேன்.)
6. எதிர்மறை வினையெச்ச விகுதி: அல்லது.

பு.

1. பண்புப்பெயர் விகுதி: நண்பு.
2. தொழிற்பெயர் விகுதி: படிப்பு
3. வினையெச்ச விகுதி: செய்பு (=செய்து.)

மார்.

1. பலர்பாற் படர்க்கைப்பெயர் விகுதி: குருமார், கன்னிமார்.
2. பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதி:கொண்மார் (கொள்வார்.)

மை.

1. பண்புப்பெயர் விகுதி: நன்மை.
2. தொழிற்பெயர் விகுதி: செய்தமை.

3. வினையெச்ச விகுதி: செய்யாமை (=செய்யாமல்.)

4. தன்மைப் பொருளுணர்த்தும் விகுதி: பெண்மை, பொன்மை,

**வி-**

1. தொழிற்பெயர் விகுதி: கேள்வி.

2. பிறவினை விகுதி: செய்வி.

**று-**

1. ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று விகுதி: போயிற்று.

2. பண்புப்பெயர் விகுதி: நன்று.

3. தன்மையொருமை விகுதி: சென்று (=போனேன்.)

4. பிறவினை விகுதி: பயிற்று.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். அன் என்பவும் பிறவும் – அன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும் இவை போல்வன பிறவும், வினையின் விகுதி – தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும். பெயரினும் சில – பெயர்ப்பகுபதங்களிலும் இவற்றுட் சில விகுதிகளாகும். எ–று.

உம் ஊர் க ட த ற – உம்மென்பதேறிய கடதற வொற்றுக்கள். அவை கும் டும் தும் றும் என்பன. அன் விகுதி தன்மை;ககு எதிரது போற்றலென்னு முத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின், வலியுறுத்தற்குப் பின்னுங் கூறினார்.

உ–ம். அன், ஆன்; நடந்தனன், நடந்தான் –(ஆண்பாற்படர்க்கை).

அள்,ஆள்; நடந்தனள், நடந்தாள் – (பெண்பாற் படர்க்கை).

அர், ஆர், ப; நடந்தனர், நடந்தார், நடமார்– (பல்லோர் படர்க்கை)

அ, ஆ; நடந்தன, நடவா – (பலவின் படர்க்கை)

கு, டு, து, று, என், ஏன், அல், அன்; நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பான் – (தன்மை ஒருமை), நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு – (ஒன்றன் படர்க்கை)

அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும்; நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும் – (தன்மைப்பன்மை)

ஐ, ஆய், இ; நடந்தனை, நடந்தாய், நடத்தி – (முன்னிலை ஒருமை).

மின், இர், ஈர்; நடமின், நடந்தனிர், நடந்தீர் – (முன்னிலைப் பன்மை).

உம்; நடக்கும் – (செய்யுமென்னு முற்று.

பிறவும் என்றதனால், மறால், அழேல், சொல்லிக்காண் – என ஆல், ஏல், காண் முதலிய விகுதிகளும் வரும்.)

வினைக்குறிப்பு முற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டுவன வாதலால், இவ்விகுதிகளுள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழித்து ஒழிந்த அன், அன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் இருபத்திரண்டு விகுதிகளோடு வருமெனக் கொள்க.

உ–ம். கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று, கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர்.

'பெயரினுஞ் சில' என்றதனால், இவ்விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, . என்னும் பத்தோடு மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், ர் என்னும் பதின் மூன்றும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

உ–ம். குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி, வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி; எம்முன், தோன்ற/ பிறன், பிறள், பிறர், அவ்.

இன்னும், 'வினையின் விகுதி பெயரினுஞ் சில' என்றதனாலும், 'பிறவும்' என்றதனாலும், பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ்விகுதிகளுள் அடங்கியும் அடங்காதும் வரும் விகுதிகளெல்லாங் கொள்ளப்படும்.

தெரிநிலை வினைப் பெயரெச்ச விகுதிகள், அ, உம் என்னும் இரண்டுமாம். உ–ம். செய்த, செய்கின்ற, செய்யும்.

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி அ ஒன்றேயாம். (உம் விகுதி இடைநிலையேலாது தானே எதிர்கலங்க காட்டலாற் குறிப்பு கினைப் பெயரெச்சத்துக்கு வாராது.) உ–ம். கரிய.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள் உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், எனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, குடை, வழி, இடத்து, உம், மல், மை, மே என்னும் இருபத்தெட்டும் பிறவுமாம். இவற்றுள் இறுதியிற் கூறிய மல், மை, மே என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.

உ–ம். நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணா, உண்ணூ, உண்டென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், கண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உட்ானேனும், உணற்கு, உண்ணயி, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே.

குறிப்பு வினையெச்ச விகுதிகள் அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவுமாம்.

உ–ம். மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

தொழிற்பெயர் விகுதிகள் தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி,

வி, உள், காடு, பாடு, அரவு. ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்.

உ–ம். நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து. (மை விகுதி, செய்தமை, செய்கின்றமை என இறந்தகாலவிடைநிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடியும் வரும். துயீவவிகுதி, அவர் செய்தது, செய்கின்றது, செய்வது என முக்கால வைடநிலைகளோடு கூடியும் வரும்.)

பண்புப் பெயர் விகுதிகள் மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்னும் பத்தும் பிறவுமாம்.

உ–ம். நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

பிறவினை விகுதிகள் வி,பி,கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

உ–ம். செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று.

(கரை தேய் என வருந் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள், சிறுபான்மை இவ்விகுதி வேண்டாது, கரைத்தான், தேய்த்தான்; கரைத்திலன், தேய்த்திலன்; கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான்; கரைக்கான், தேய்க்கான் எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிக்கும், கரைந்தான், கரைந்திலன்; கரைகிறான், கரைகின்றிலன்; கரைவான், கரையான் எனத் தன்வினைப் பொருளைத் தரும்போது, வல்லெபத்து மிகாதும் வருமென்றறிக. )

இ, ஐ, அம் என்னும் மூனஸற விகுதிகளும் வினை முதற்பொருளையுஞ் செயப்படுபொருளையுங் கருவிப் பொருளையும் உணர்த்தும்.

உ–ம். அலரி, பறவை, எச்சம் – வினைஸமதற்பொருளை உணர்த்தின.

ஊருணி, தொடை, நீத்தம் பெயப்படுபொருளை யுணர்த்தின.

மண்வெட்டி, பார்வை, நோகக்ம் – கருவிப் பொருளை யுணர்த்தின.

விடு ஒழி விகுதிகள் துணிவுப் பொருளையுண்ாத்தும். உ–ம். செய்துவிடு, செய்தொழி.

கொள் விகுதி வினைப்யன் வினை முதலைச் சென்றடைதலாகியதற் பொருட்டுப் பொருளை யுணர்த்தும். உ–ம் அடித்துக்கொள்.

படு உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும்.

உ–ம். கட்டப்படு, கட்டுண்

மை விகுதி தன்மைப் பொருள் உணர்த்தும். உ–ம்: பொன்மை, ஆண்மை.

இரு இடு என்பன தமக்கென வேறு பொயீளன்றிப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும். உ–ம். எழுந்திரு, உரைத்திடு.

முன்னிலையேவலொருமை ஆய் விகுதியும், பெயரெச்ச விகுதியும், தொழிற்பெயர் விகுதியும், வினை முதற்பொருளையுணர்த்தும் இகர விகுதியும், செயப்படுபொருளையுணர்த்தும் ஐ விகுதியும், பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு. கெடினும், புணர்ந்து நின்றாற் போலவே தம் பொருளை யுணர்த்தும்.

ஒ–ம். நீ நட, நீ நடப்பி, நி செல் என்பவைகளிலே ஆய் விகுதி புணர்ந்து கெட்டது. கொல் களிறு, ஓடாக்குதிரை என்பவைகளிலே, உம், அ என்னும் பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன. அடி, கேடு, இடையீடு என்பவைகளிலே தல் என்னுந் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது. காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளிலே வினைமுதற் பொருளுணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டது. ஊண், தீன், கோள் என்பவைகளிலே செயப்படு பொனுளுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டது.

சிறுபான்மை 'வரிப்புனைபந்து' என்பதில் வரிந்து என்னும் வினையெச்ச விகுதியும், 'கொள்வாருங் கள்வருநேர்' என்பதில் நேர்வர் என்னு முற்று விகுதியுங் கெட்டு வந்தன. இவ்வாறே பிற விகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவுங் கொள்க.

இதுகாறும் கூறப்பட்ட விகுதிகளில் பலபொருள் குறித்து வரும் விகுதிகள் பல உள. அவற்றின் அட்டவணையை அநுபந்தத்திற் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) அன்...என்பவும்–அன் ஆன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், பிறவும்–(இவைபோல்வன) பிறவும், வினையின் விகுதி–வினைப் பகுபதங்களின் விகுதிகளாகும்; பெயரினும்–பெயர்ப் பகுபதங்களிலும், சில– (இவற்றுள்) சில விகுதிகளாம். **எ–று.**

**பொ–ரை.:** அன் ஆன் முதலிய முப்பத்தேழும், இவைபோல்வன பிறவும், வினைப்பகுபதங்களின் விகுதிகளாம்; பெயர்ப் பகுபதங்களுக்கும் சில விகுதிகளாம்.

உம் ஊர் க ட த ற – உம் மென்பதேறிய கடதற வொற்றுக்கள்; அவை கும் டும் தும் றும் என்பன.

அன் விகுதி தன்மைக்கு 'எதிரது போற்றல்' என்னு முத்தியாற் சேர்க்கப்பட்ட தாகலின் வலியுறுத்தற்குப் பின்னும் கூறினார்.

(எதிரது போற்றல்–முற்காலத்து வழங்காமல் பிற்காலத்து வழங்கி வருகின்ற இலக்கணத்தைத்தழுவிக் கொள்ளுதல்.)

வினைப்பகுபதங்களின் விகுதி.

(உ–ம்.) நடந்தனன், நடந்தான் – அன், ஆன், ஆண்பாற் படர்க்கை.

நடந்தனள், நடந்தாள் – அள், ஆள், பெண்பாற் படர்க்கை.

நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் – அர், ஆர், ப, மார் பல்லோர் படர்க்கை.

நடந்தன, நடவா – அ, ஆ, பலவின் படர்க்கை.

நடந்தது, கூயிற்று, குண்டுகட்கு – து, று, டு ஒன்றன் படர்க்கை.

(குண்டுகட்டு–ஆழமான கண்ணையுடையது. இது குறிப்பு வினைமுற்று.)

உண்டு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல்,நடப்பன் – கு, டு, து, று, என், ஏன், அல், அன் தன்மை யொருமை.

நடந்தனை, நடந்தாய், நடத்தி (நடத்தி–நடப்பாய்) – ஐ, ஆய், இ முன்னிலை ஒருமை.

நடமின், நடந்தனிர், நடந்தீர் – மின், இர், ஈர் முன்னிலைப் பன்மை.

நிலீயர், நடக்க, வாழிய – ஈயர், க, ய வியங்கோள்.

நடக்கும் – உம், செய்யுமென்முற்று.

'பிறவும்' என்றதனால் நடந்திடு, எழுந்திரு, அருளு, மறால், அழேல், சொல்லிக்காண் என இடு, இரு, உ, ஆல், ஏல், காண்முதலியவும் வரும். இவை யெல்லாம் தெரிநிலை வினைமுற்றுக்கள்.

குறிப்பு வினைமுற்றுக்கள் குறிப்பாகக் காலங் காட்டுவனவாதலால் இந்த விகுதிகளுக்குள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று; என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம்; ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

(உ–ம்.) படர்க்கை தன்மை முன்னிலை

குழையன் குழையினெ குழையினை

குழையான் குழையினேன் குழையாய்

குழையள் குழையம் வில்லி

குழையாள் குழையாம் குழையினிர்

குழையர் குழையினெம் குழையீர்

குழையார் குழையினேம்

குழையன குழையினோம்.

குறுந்தாட்டு

குழையது

குழையிற்று. (இன்–சாரியை.)

'பெயரினஞ் சில' என்றதனால் இவ் விகுதிகளுள்–அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ என வருகின்றவைகளுடனே மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் முதலானவைகள் பெயர் விகுதிகளாம்.

(உ–ம்.) குழையன் தேவிமார் கோக்கள் தோன்றல்

வானத்தான் குழையன அவை பிறன்

குழையள் யாது எந்தை பிறள்

வானத்தாள் பொன்னி எங்கை பிறர்

குழையர் வடமன் எம்பி அவ்

வானத்தார் கோமான் எம்முன்

இன்னும் (வினையின்விகுதி பெயரினுஞ் சில' என்றதனாலும், 'பிறவும்' என்றதனாலும் பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ் விகுதிகளுக்குள் அடங்கியும் அடங்காமலும் வரும் விகுதிகளெல்லாம் கொள்ளப்படும்.

தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள்:–அ, உம்.

(உ–ம்.) நடந்த, நடக்கின்ற, நடக்கும் எனவரும்.

(உம் விகுதி காலத்தைக் காட்டுமாதலால் குறிப்புப் பெயரெச்சத்திற்கு அ விகுதி ஒன்றே வரும்.)

குறிப்புப் பெயரெச்ச விகுதி:–அ.

(உ–ம்.) பெரிய.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள்:–உ, பு, ஆ, ஊ, என, அ, இன், இய, இயர், வான், பான், பாக்கு, இ, ய், கு, ஆல், கால், ஏல், ஏனும், உம், மல், மை, மே முதலியன.

(உ–ம்.) நடந்து உண்ணிய உணற்கு உண்ணாமை

உண்குபு உண்ணியர் நடந்தால் உண்ணாமே.

உண்ணா வருவான் ஒலித்தக்கால்

உண்ணூ உண்பான் நடக்குமேல்

உண்டென உண்பாக்கு நடக்குமேனும்

உண்ண ஓடி காண்டலும்

உண்ணின் போய் உண்ணாமல்

குறிப்பு வினையெச்ச விகுதிகள்:– அ, றி, து, ஆல், மல், கால் கடை வழி, இடத்து முதலியன.

(உ–ம்.) மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

தொழிற்பெயர் விகுதிகள்:– தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, மதி, மானம் முதலியன.

(உ–ம்.) நடத்தல் போக்கு வாரானை நடவாமை

ஆடல் நடப்பு விக்குள் பாய்த்து

வாட்டம் வரவு சாக்காடு ஏற்றுமதி

கொலை மறதி கோட்பாடு வருமானம்.

நடக்கை உணர்ச்சி தோற்றரவு

பார்வை கல்வி

(போக்–போதல், விக்குள்–விக்குதல், சாக்காடு–சாதல், கோட்பாடு–கொள்கை, தோற்றரவு–தோற்றுதல், வாரானை–வருதல், பாய்த்து–பாய்தல்.)

து விகுதி நடந்தது, நடக்கின்றது, நடப்பது என முக்கால இடைநிலையோடும், மை விகுதி நடந்தமை, நடக்கின்றமை என இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடும் கூடிவரும். இவை யெல்லாம் விகுதி பெற்ற தொழியிற் பெயர். இனி, இவ்விகுதிகளில் ஒன்று புணர்ந்து கெட்டுப் பகுதிமாத்திரையாய் நிற்குந் தொழிற் பெயர்களும், விகுதிபுணர்ந்து கெடும்போது பகுதிவிகராப்பட்டு நிற்குந் தொழிற்பெயர்களும், பகுதி பெறாத்தொழிற் பெயர்களும் உண்டு. அவை முறையே முதனிலைத்தொழிற்பெயரென்றும், முதனிலைதிரிந்த தொழிற்பெய ரென்றும், முதனிலை பெறாத்தொழிற்பெய ரென்றும் கூறப்படும்.

(உ–ம்.) அடி, அறி, உரை, கெடு–முதனிலைத் தொழிற்பெயர்.

கேள், கேடு, இடையீடு–முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.

சண்டை, கூத்து பட்டினி–முதனிலைபெறாத் தொழிற்பெயர்.

(முதனிலைபெறாத்தொழிற்பெயரென்பது பாகாப்பத மெனவறிக.)

பண்புப்பெயர் விகுதிகள்:– மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம் முதலியன.

(உ–ம்.) நன்மை மாண்பு நன்றி நன்னர்

தொல்லை மழவு நன்று திட்பம்.

மாட்சி நன்கு நலம்

எதிர்மறை விகுதிகள்:– இல், அல், ஆ என்ப.

(உ–ம்.) நடந்திலன் நடக்கலன்

நடக்கின்றிலன் நடவாதான்.

நடக்கிலன்

பிறவினை விகுதிகள்:– வி, பி, கு, சு, டு, து, பு, று என்பன.

(உ–ம்.) வருவித்தான் உருட்டினான்

நடப்பித்தான் நடத்தினான்

போக்கினான் எழுப்பினான்

பாய்ச்சினான் துயிற்றினான்

கரை, தேய், மறை, உடை, அலை, சேர், மடி முதலிய பகுதிகள் இவ் விகுதிவேண்டாமல், கரைத்தான், தேய்த்தான்; கரைத்திலன், தேய்த்திலன்; கரைக்கின்றான், தேய்க்கின்றான், கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான்; கரைக்கான், தேய்க்கான்; எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகுந்தும், கரைந்தான், தேய்ந்தான், கரைந்திலன், தேய்ந்திலன்; கரைகின்றான், தேய்கின்றான்; கரைகின்றிலன், தேய்கின்றிலன்; கரைவான், தேய்வான்; கரையான், தேயான் எனத் தன்வினைப் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகாமலும் வருமென்று அறிக. இப் பகுதிகள் எதிர்காலவினை முற்றில் பிறவினைப் பொருட்குப் பகர இடைநிலையையும், தன்வினைப் பொருட்கு வகர இடைநிலையையும் ஏற்று நிற்கும் என அறிக. மறை முதலிய பகுதிகட்கும் இவ்வாறே வருமென அறிக.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும்–வினை முதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப் பொருளையும் உணர்த்தும். (வினைமுதற் பொருள்–கருத்தாப் பொருள்.)

(உ–ம்.) அலரி பறவை எச்சம்–வினைமுதற்பொருள்.

ஊருணி தொடை நீத்தம்–செயப்படுபொருள்.

மண்வெட்டி பார்வை நோக்கம்–கருவிப்பொருள்.

அலர்வது அலரி (பூ), பறப்பது பறவை (பக்ஷி), எஞ்சுவது எச்சம் (சந்ததி) இவற்றில், வினைகளின் எழுவாயே பொருளாதல் காண்க. ஊராரால் நீருண்ணப்படுவது ஊருணி (குளம்), தொடுக்கப்படுவது தொடை (மாலை), நீந்தப்படுவது நீத்தம் (வெள்ளம்) இவற்றில், வினைகளின் செயப்படு பொருளே பொருளாதல் காண்க. மண்ணை வெட்டுதற்குக் கருவியானது மண்வெட்டி (ஓர் கருவி), பார்த்தற்குக் கருவியானது பார்வை (கண்), நோக்குதற்குக் கருவியானது நோக்கம் (கண்) இவற்றில், வினைகளின் கருவியே பொருளாதல் காண்க.

இம் மூவகை விகுதிகளும் பகுதியோடு புணர்ந்து கெடுதலும் உண்டு.

(உ–ம்.) காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளில், வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

ஊண், பூண், கோள், உரி துணி, மடி என்பவைகளில் செயப்படுபொருளுணர்த்தும் விகுதிபுணர்ந்து கெட்டது.

நோக்கு என்பதில், கருவிப்பொருளுணர்த்தும் விகுதிபுணர்ந்து கெட்டது.

(இவற்றுள், வினைமுதற் பொருளில் இகரவிகுதியும், செயப்படு பொருளில் ஐகார விகுதியும், கருவிப்பொருளில் அம் விகுதியும் புணர்ந்து கெடுமென வறிக.)

'வரிப்புனைபந்து' என்பதில் வரிந்து என்பதன் வினையெச்ச விகுதியும், "கொள்வாரும் கள்வரும் நேர்" என்பதில் நேர்வர் என்பதன்வினைமுற்று விகுதியும் கெட்டு வந்தன. இவ்வாறு வேறு சில விகுதிகளும் சிறுபான்மை கெட்டுவருதல் கண்டு கொள்க.

விடு, ஒழி என்ற விகுதிகள்–துணிவுப் பொருளை உணர்த்தும்.

(உ–ம்) செய்துவிட்டான், விட்டொழிந்தான்

கொள் என்ற விகுதி–தற்செயலை உணர்த்தும்.

(உ–ம்) அடித்துக்கொண்டான்.

படு, உண் விகுதிகள்–செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்தும்.

(உ–ம்)கட்டப்பட்டான், கட்டுண்டான்.

மை என்ற விகுதி தன்மைப் பொருளை உணர்த்தும்.

(உ–ம்) பொன்மை, ஆண்மை.

இரு, இடு, உறு என்பன–தமக்கென வேறு பொருளின்றி, பகுதிப்பொருள் விகுதியாய் வரும்; இவற்றைத் துணை வினை யென்பர்.

(உ–ம்) எழுந்திருக்கின்றான்; உரைத்திடுகின்றான், சொல்லுறுகின்றான்.

(எல்லாப் பொருளிலும் வரும் எல்லா விகுதிகளையும் அளவு செய்தல் கூடாமைபால் அதிகமாக வழங்குகிற சில விகுதிகளைக் காட்டினோம்.)

## கா. நமசிவாய முதலியார்

**அன்******என்பவும்** – அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப மார் அ ஆ கு டு து று என் ஏன் அல் அன் அம் ஆம் எம் ஏம் ஓம் ஆகிய விகுதிகளோடு, கும் டும் தும் றும் ஐ ஆய் இ மின் இர் ஈர் ஈயர் க ய உம் என்னும் இம் முப்பத்தேழும், **பிறவும்** – இவைபோல்வன பிறவும், **வினையின் விகுதி** – வினைப்பகுபதங்களின் விகுதிகளாகும்; **பெயரினும்** – பெயர்ப்பகுபதங்களிலும், **சில** – சில விகுதிகளாகும்.

'அன் விகுதி, தன்மை ஒருமைக்கு **எதிரது போற்றல்** என்னும்

உத்தியாற் சேர்க்கப்பட்டதாகலின் வலியுறுத்தற்குப் பின்னும் 'அன்' எனக் கூறினார்.

உம் ஊர் க ட த ற என்பது உம் என்பது ஏறிய ககர டகர தகர றகர மெய்களாம்; அவை : கும், டும், தும், றும் என்பன.

**உதாரணம்**

ஆண்பாற் படர்க்கை விகுதி – அன், ஆன்:
நடந்தனன், நடந்தான்

பெண்பாற் படர்க்கை விகுதி – அள், ஆள்:
நடந்தனள், நடந்தாள்,

பலர்பாற் படர்க்கை விகுதி – அர், ஆர், ப, மார்:
நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார்.

பலவின்பாற் படர்க்கை விகுதி – அ, ஆ:
நடந்தன, நடவா.

ஒன்றன்பாற் படர்க்கைவிகுதி – டு, து, று:
குறுந்தாட்டு (குறுகிய தாளையுடையது; குறிப்பு), நடந்தது, போயிற்று.

தன்மை ஒருமை விகுதி – கு, டு, து, று, என், ஏன், அல், அன்:

உண்கு (உண்பேன்), உண்டு (உண்டேன்), நடந்து (நடந்தேன்), சேறு (செல்வேன்), நடந்தனென், நடந்தேன், நடப்பல் (நடப்பேன்), நடப்பன்.

தன்மைப் பன்மை விகுதி – அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும்:

நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், உண்கும் (உண்போம்), உண்டும், (உண்டோம்), செய்தும் (செய்தோம்), சேறும் (செல்வோம்)

முன்னிலை ஒருமை விகுதி – ஐ, ஆய், இ:
நடந்தனை, நடந்தாய், சேறி (செல்வாய்)

முன்னிலைப் பன்மை விகுதி – மின், இர், ஈர்:
நடமின் (ஏவல்), நடந்தனிர், நடந்தீர்.

வியங்கோள் விகுதி – ஈயர், க, ய:
நிலீயர் (நிற்க), நடக்க, வாழிய (வாழ்க)

செய்யுமென் முற்று விகுதி – உம்:
நடக்கும்

இவையெல்லாம் தெரிநிலை வினைமுற்றுக்கள்.

வினைக்குறிப்பு முற்றுக்கள் குறிப்பாகக் காலங் காட்டுவனவாதலால், இந்த விகுதிகளுக்குள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகள் ஒழிந்த அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர்; அ; டு, து, று; என், ஏன்; அம், ஆம், எம், ஏம், ஓம்; ஐ, ஆய், இ; இர், ஈர் என்னும் விகுதிகளோடு அக்குறிப்பு முற்றுக்கள் வரும் எனக் கொள்க.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| குழையன், குழையான் | – | அன், ஆன் |
| குழையள், குழையாள் | – | அள், ஆள் |
| குழையர், குழையார் | – | அர், ஆர் |
| குழையன | – | அ |
| குறுந்தாட்டு, குழையது, குழையிற்று | – | டு, து, று |
| குழையினென், குழையினேன் | – | என், ஏன் |
| குழையம், குழையாம், குழையினெம், குழையினேம், குழையினோம் | – | அம், ஆம், எம், ஏம், ஓம். |
| குழையினை, குழையாய், வில்லி | – | ஐ, ஆய், இ |
| குழையினர், குழையீர் | – | இர், ஈர் |

**'பெயரினுஞ் சில'** என்றதனால், இவ்விகுதிகளுள் அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர், மார்; து; இ என்பவைகள் பெயர் விகுதிகளாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| குழையன், வானத்தான் | – | அன், ஆன் |
| குழையள், வானத்தாள் | – | அள், ஆள் |
| குழையர், வானத்தார், தேவிமார் | – | அர், ஆர், மார் |
| குழையது | – | து |
| குழையன | – | அ |
| பொன்னி | – | இ |

இவை யன்றியும் மன், மான், கள்; வை; தை, கை, பி, முன், அல்; ன், ள், ர்; வ் என்பனவும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| வடமன், கோமான், கோக்கள் | – | மன், மான், கள் |
| அவை | – | வை. |
| எந்தை, எங்கை, எம்பி, எம்முன், | | தை, கை, பி, முன் |
| தோன்றல் | – | அல் |
| பிறன், பிறள், பிறர் | – | ன், ள், ர் |
| அவ் | – | வ். |

வியங்கோள் விகுதிகள் – மேற்சொன்னவை (ஈயர், க, ய) அன்றி, அ, அல், ஆல், இ, உம், தல் என்பனவும் வரும்.

**உதாரணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எழுந்தருள | – | அ | போற்றி | – | இ |
| எனல் | – | அல் | வேண்டும் | – | உம் |
| ஓரால் | – | ஆல் | ஆதல் (ஆகுக) | – | தல் |

தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் – அ, உம்:

| | | |
|---|---|---|
| நடந்த, நடக்கின்ற, நடவாத | – | அ |
| நடக்கும் | – | உம் |

குறிப்புப் பெயரெச்ச விகுதி – அ:

| | | |
|---|---|---|
| நல்ல, பெரிய | – | அ |

உம் விகுதி, இடைநிலையை ஏற்காமல் தானே எதிர்காலங் காட்டுதலால், குறிப்புப் பெயரெச்சத்திற்கு வாராது.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள் – உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, இன், ஆல், கால், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, கண், வழி, இடத்து, உம், மல், மை, மே, து என்பனவும் பிறவுமாம்.

இவற்றுள் இறுதியிற் கூறிய மல், மை, மே, து, என்னும் விகுதிகள் எதிர்மறையில் மாத்திரமே வரும்.

**உதாரணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நடந்து | – | உ | உண்ணியர் | – | இயர் |
| ஓடி | – | இ | வருவான் | – | வான் |
| போய் | – | ய் | உண்பான் | – | பான் |
| உண்குபு | – | பு | உண்பாக்கு | – | பாக்கு |
| உண்ணா | – | ஆ | செய்தக்கடை | – | கடை |
| உண்ணூ | – | ஊ | செய்தக்கண் | – | கண் |
| உண்டென | – | என | செய்தவழி | – | வழி |
| உண்ணின் | – | இன் | காண்டலும் | – | உம் |
| உண்ண | – | அ | செய்தவிடத்து | – | இடத்து |
| உண்டால் | – | ஆல் | உண்ணாமல் | – | மல் |
| உண்டக்கால் | – | கால் | உண்ணாமை | – | மை |
| உணற்கு | – | கு | உண்ணாமே | – | மே |
| உண்ணிய | – | இய | உண்ணாது | – | து |

குறிப்பு வினையெச்ச விகுதிகள்– அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்பனவும் பிறவுமாம்.

**உதாரணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மெல்ல | – | அ | அல்லாக்கால் | – | கால் |
| அன்றி | – | றி | அல்லாக்கடை | – | கடை |
| அல்லது | – | து | அல்லாவழி | – | வழி |
| அல்லால் | – | ஆல் | அல்லாவிடத்து | – | இடத்து |
| அல்லாமல் | – | மல் | | | |

தொழிற் பெயர் விகுதிகள் – தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, உள், காடு, பாடு, இல், அரவு, ஆனை, மை, து, ஆல், அடம், மதி, மானம் என்பனவும் பிறவுமாம்.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| நடத்தல் | – தல் | விக்குள் | – உள் |
| ஆடல் | – அல் | சாக்காடு | – காடு |
| வாட்டம் | – அம் | கோட்பாடு | – பாடு |
| கொலை | – ஐ | எச்சில் | – இல் |
| நடக்கை | – கை | தோற்றரவு | – அரவு |
| பார்வை | – வை | வாரானை | – ஆனை |
| போக்கு | – கு | செய்யாமை | – மை |
| நடப்பு | – பு | பாய்த்து | – து |
| வரவு | – வு | தழால் | – ஆல் |
| மறதி | – தி | கட்டடம் | – அடம் |
| புணர்ச்சி | – சி | ஏற்றுமதி | – மதி |
| புலவி | – வி | வருமானம் | – மானம் |

மை விகுதி – நடந்தமை, நடக்கின்றமை என இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடு கூடி உடன்பாட்டினும் நடவாமை என எதிர்மறையிலும் வரும்.

து விகுதி – நடந்தது, நடக்கின்றது, நடப்பது என முக்கால இடைநிலைகளோடும் கூடி வரும்.

இனி, இவ்விகுதிகளில் ஒன்று புணர்ந்து கெட்டுப் பகுதி மாத்திரையாய் நிற்கும் முதனிலைத் தொழிற் பெயர்களும் உண்டு.

அடி, சொல், மொழி முதலியன.

முதனிலை திரிந்த தொழிற்பெயர்:

விகுதி புணர்ந்து கெடும்போது பகுதி விகாரப்பட்டு நிற்கும் முதனிலை திரிந்த தொழிற் பெயர்களும் உண்டு.

கோள், கேடு, இடையீடு முதலியன.

முதனிலை பெறாத தொழிற்பெயர்

விகுதிகளைப் பெறாமலும் மற்ற வினைவிகற்பங்களை யடையாமலும் தொழிலைக் காட்டும் பெயர்களாகிய முதனிலை பெறாத தொழிற் பெயர்களும் உண்டு.

பட்டினி, சண்டை, கூத்து முதலியன.

பண்புப்பெயர் விகுதிகள் – மை, ஐ, சி, பு, இல், கு, றி, று, அம், நர், பம் என்பனவும் பிறவுமாம்.

| | | | |
|---|---|---|---|
| நன்மை | – மை | நன்றி | – றி |
| தொல்லை | – ஐ | நன்று | – று |
| மாட்சி | – சி | நலம் | – அம் |

| | | | | |
|---|---|---|---|---|
| மாண்பு | – | பு | நன்னர் – | நர் |
| குறில் | – | இல் | | |
| நன்கு | – | கு | திட்டம் – | டம் |

வினைமுதற்பொருள், செயப்படுபொருள், கருவிப்பொருள் விகுதிகள்:

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற்பொருளையும், செயப்படுபொருளையும், கருவிப்பொருளையும் உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| அலரி, பறவை, எச்சம் | – | வினைமுதற்பொருள் |
| ஊருணி, தொடை, நீத்தம் | – | செயப்படுபொருள் |
| மண்வெட்டி, பார்வை, நோக்கம் | – | கருவிப்பொருள் |

வினைமுதற் பொருளை யுணர்த்தும் விகுதியும், செயப்படு பொருளை யுணர்த்தும் விகுதியும் பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு.

காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை.

இவைகளில் வினைமுதற்பொருள் உணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

ஊண், உரி, துணி, மடி.

இவைகளில் செயப்படுபொருள் உணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

துணிவுப்பொருளை உணர்த்தும் விகுதிகள் – விடு, ஒழி :
செய்துவிட்டான், செய்தொழிந்தான்.

தற்செயலை உணர்த்தும் விகுதி – கொள்;
அடித்துக் கொண்டான்.

செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்தும் விகுதிகள் – படு, உண்:
கட்டப்பட்டான், கட்டுண்டான்.

தன்மைப்பொருள் உணர்த்தும் விகுதி – மை:
பொன்மை, ஆண்மை, பெண்மை.

பகுதிப்பொருள் விகுதி – இரு, இடு:

இவை தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும்.

எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான்.

விடு, ஒழி, கொள், படு, உண், இரு, இடு என்னும் விகுதிகளைத் துணைவினை யென்று கூறுவாருமுளர்.

எதிர்மறை இடைநிலைகள் – இல், அல், ஆ:

உதாரணம்

நடந்திலன் – இல்

நடக்கின்றிலன்
நடக்கிலன்
நடக்கலன் – அல்
நடவாதவன் – ஆ

இன்னும், 'வினையின் விகுதி பெயரினுஞ் சில' என்றதனாலும், 'பிறவும்' என்றதனாலும், பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ்விகுதிகளுக்குள் அடங்கியும் அடங்காமலும் வரும் விகுதிகளெல்லாம் கொள்ளப்படும்.

விகுதி ஒன்றே வினை விகற்பங்கள் பலவற்றிலும் வருமாறு: விகுதி.

அ – 1. வினையெச்ச விகுதி : செய்ய, வர.
2. பெயரெச்ச விகுதி : செய்த, வருகின்ற.
3. பலவின்பாற் படர்க்கை விகுதி : வந்தன, கொடியன.
4. வியங்கோள் விகுதி : எழுந்தருள (எழுந்தருள்க)

அம் – 1. தன்மைப்பன்மை விகுதி : நடந்தனம்
2. தொழிற்பெயர் விகுதி : ஆட்டம்
3. பண்புப்பெயர் விகுதி : நலம்
4. வினைமுதற் பொருள் விகுதி : எச்சம்
5. செயப்படுபொருள் விகுதி : தொல்காப்பியம்
6. கருவிப்பொருள் விகுதி : நோக்கம்

அல் – 1. தொழிற்பெயர் விகுதி : செயல்.
2. தன்மை ஒருமை விகுதி : நடப்பல் (நடப்பேன்)
3. உடன்பாட்டு வியங்கோள் விகுதி : எனல் (என்க)
4. எதிர்மறை வியங்கோள் விகுதி : கொளல் (கொள்ளற்க).
5. எதிர்மறையேவல் ஒருமை விகுதி : படியல் (படியாதே)

அன் – 1. ஆண்பாற் படர்க்கைப் பெயர் விகுதி : அறிஞன்
2. ஆண்பாற் படர்க்கை வினை விகுதி : வந்தனன்
3. தன்மை ஒருமை விகுதி : செய்வன் (செய்வேன்)

ஆ – 1. பலவின்பாற் படர்க்கை விகுதி : வாரா, நடவா.
2. வினையெச்ச விகுதி : செய்யா (செய்து)

ஆல் – 1. தொழிற்பெயர் விகுதி : தழால (தழுவுதல்)
2. தெரிநிலை வினையெச்ச விகுதி : உண்டால்
3. குறிப்பு வினையெச்ச விகுதி : அல்லால்
4. எதிர்மறை ஏவலொருமை விகுதி ; மறால் (மறுக்காதே)
5. வியங்கோள் விகுதி : ஒரால் (ஒருவற்க)

இ – 1. ஆண்பாற் படர்க்கைப் பெயர் விகுதி : வில்லி.
2. பெண்பாற் படர்க்கைப் பெயர் விகுதி : பொன்னி.
3. ஒன்றன்பாற் படர்க்கைப் பெயர் விகுதி : நாற்காலி.

4. முன்னிலை ஒருமை விகுதி : சேறி (செவ்வாய்)
5. வினையெச்ச விகுதி : ஓடி
6. வினைமுதற் பொருள் விகுதி ; அலரி
7. செயப்படுபொருள் விகுதி : ஊருணி
8. கருவிப்பொருள் விகுதி : மண்வெட்டி
9. ஏவலொருமை விகுதி : காட்டுதி (காட்டுவாய்)
10. வியங்கோள் விகுதி : போற்றி

உம் – 1. ஏவற்பன்மை விகுதி : வாரும். (நீவிர் வாரும்)
2. படர்க்கைவினைமுற்று விகுதி: செய்யும் (அவன் செய்யும்)
3. பெயரெச்ச விகுதி : நடக்கும் (மனிதன்)
4. வினையெச்ச விகுதி : செய்தலும் (போனான்)
5. வியங்கோள் விகுதி : வேண்டும்.

ஏல் – 1. எதிர்மறை ஏவல் விகுதி : படியேல்
2. தெரிநிலை வினையெச்ச விகுதி : உண்டானேல்

ஐ – 1. முன்னிலை ஒருமை விகுதி : செய்தனை
2. தொழிற்பெயர் விகுதி : கொலை
3. பண்புப் பெயர் விகுதி : தொல்லை
4. வினைமுதற் பொருள் விகுதி : பறவை
5. செயப்படுபொருள் விகுதி : தொடை
6. கருவிப்பொருள் விகுதி : படை

கு – 1. பண்புப்பெயர் விகுதி : நன்கு
2. பிறவினை விகுதி : போக்கு
3. தொழிற்பெயர் விகுதி : போக்கு (போதல்)
4. தன்மை ஒருமை விகுதி : உண்கு. (உண்பேன்)

கை – 1. தொழிற்பெயர் விகுதி : வருகை.
2. முறைப்பெயர் விகுதி : தங்கை.

சி – 1. தொழிற்பெயர் விகுதி : காட்சி
2. பண்புப்பெயர் விகுதி : மாட்சி

தல் – 1. தொழிற் பெயர் விகுதி : செய்தல்
2. வியங்கோள் விகுதி : ஆதல் (ஆகுக)

து – 1. ஒன்றன்பாற் படர்க்கை விகுதி : நடந்தது
2. பிறவினை விகுதி : நடத்து
3. தொழிற்பெயர் விகுதி : பாய்த்து (பாய்தல்)
4. தன்மை ஒருமை விகுதி : வருது (வருவேன்)

பு – 1. தொழிற்பெயர் விகுதி : குருமார்
2. பண்புப்பெயர் விகுதி : மாண்பு
3. வினையெச்ச விகுதி : செய்பு (செய்து)

மார் – 1. பலர்பாற் படர்க்கைப் பெயர் விகுதி: நட்பு
2. பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதி : கொண்மார்.

மை – 1. தொழிற்பெயர் விகுதி : செய்தமை.
2. பண்புப்பெயர் விகுதி : நன்மை
3. வினையெச்ச விகுதி : செய்யாமை (செய்யாமல்)
4. தன்மைப் பொருளுணர்த்தும் விகுதி : பெண்மை

வி – 1. தொழிற்பெயர் விகுதி : கேள்வி.
2. பிறவினை விகுதி : செய்வி

று – 1. ஒன்றன்பாற் படர்க்கை விகுதி : போயிற்று
2. பண்புப்பெயர் விகுதி : நன்று
3. தன்மை ஒருமை விகுதி : சேறு (செல்வேன்)
4. பிறவினை விகுதி : பயிற்று

**மோசகு பொன்னையா**

அன் முதல் உம் ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்தேழு விகுதிகளும், இவை போல்வன பிறவும் வினைச்சொற்களின் விகுதிகளாம்; இவற்றுள் சில பெயர்ச்சொற்களின் விகுதிகளாகவும் வரும், **எ–று.**

தன்மை ஒருமையில் தொல்காப்பியர் காலத்தில் அன் விகுதி வழங்காமையின் அவர் அதனைக் கூறாதொழிய, தம் கால வழக்குண்மை நோக்கி, இவ்வாசிரியர் அன் விகுதியையும் தன்மை ஒருமை விகுதியாகக் கூடி விதித்தார். இவற்றுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஒம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் இருபத்திரண்டு விகுதிகளும் குறிப்பு முற்றுக்களின் விகுதிகளாகவும் அமையும், பெயரினுஞ் சில என்றதனால், இவற்றுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ என்னும் பத்தும் பெயர்விகுதிகளாக வருவன எனக் கொள்க.

**எ–டு.**

நடந்தனன், நடந்தான் – ஆண்பாற் படர்க்கை.
நடந்தனள்,நடந்தாள் – பெண்பாற் படர்க்கை.
நடந்தனர், நடந்தார், நடப்ப,நடமார் – பல்லோர் படர்க்கை.

நடந்தன, நடவா –பலவின்பாற் படர்க்கை.

நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன் – ஒருமைத் தன்மை.

நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும் – பன்மைத் தன்மை.

நடந்தனை, நடந்தாய், நடத்தி – ஒருமை முன்னிலை.

நடமின், நடந்தனிர், நடந்தீர் – பன்மை முன்னிலை.

நிலீஇயர், நடக்க, வாழிய – வியங்கோள்.

நடக்கும் –செய்யுமென்னு முற்று.

இரட்டுற மொழிதலால் டு, து, று என்னும் விகுதிகளை ஒன்றன் படர்க்கைக்குங் கொள்க.

**எ–டு.**

நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு.

**குறிப்புமுற்றுக்களில் வருவன:**

கரியன், கரியான், கரியன், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று, கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர்.

**பெயர்களில் வருவன:**

குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, காதறை, பொன்னி.

எடுத்துக்காட்டுத் தந்து விகுதியை விளக்குதல் மாத்திரையான் ஈண்டு இவ்விகுதிகளை எடுத்துரைத்தார். விகுதிபற்றி வினையியலில் முற்றுவினை இலக்கணத்தோடு விளங்கக் கூறுகின்றார் ஆதலின், அவற்றின் சிறப்பிலக்கண நுட்பங்களையெல்லாம் ஆண்டுக் காண்க.

(11)

**140. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்**
**பகுதி விகுதி பகுத்திடை நின்றதை**
**வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.**

**இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்**
**பகுதி விகுதி பகுத்து இடை நின்றதை**
**வினைப்பெயர் அ பெயர்க்கு இடைநிலை எனல் ஏ.**

ilakkiyam kaṇṭu aṭaṟku ilakkaṇam iyampaliṉ
pakuṭi vikuṭi pakuṭṭu itai niṉṟaṭai
viṉaippeyar alpeyarkku itainilai eṉalē.

**இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)**

## MEDIAL PARTICLE

**The medial particle of nouns**

When all (Compound) Nouns, except conjugated ones are analysed according to signification the Root and the Termination being separated, what remains between may be termed the **'medial particles'** of those Nouns.

**ஒப்புமைப் பகுதி**

**இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலிற்**
**பகுதிவிகுதி பகுத்துஇடை நின்றதை**
**வினைக் குறிப்பு இடைநிலை என்னல் வேண்டும்**

(இ.வி.:51)

**சிலபலவாய் இலக்கியம் கண்டு அதற்கு இயலே சொல்லாற்**
**திகழ்பகுதி விகுதிபகுத்து இடையினிற்கும் எழுத்தைச்**
**சொலையிசைவாய் வினைக்குறிப்புக்கு இடைநிலையாய்ப்**
**புகல்வார்**

(சுவாமி.:26:1–2)

**மயிலைநாதர்**

எ – ன், பெயர்ப் பகுபதங்கட்கு இடைநிலை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: முற்காலத்திற் கண்ட இலக்கியங்கட்கே இலக்கணம் [1]இயம்பலின், ஈண்டு முடிக்கலுறும் பதத்தின் பகுதியையும் விகுதியையும் அறிந்து, வேறு பிரித்தால் இடையிலே நிற்பதுயாது, அதனை வினைப்பெயரல்லாத [2]பெயர்க்கு இடைநிலை யெனக் கொள்ள வேண்டும், எ – று.

---

பாட வேறுபாடு.:–

1. காட்டலின்
2. பெயர்கட்கு

**வ – று.:** வானவன், மீனவன், வில்லவன், எல்லவன், பகலவன், கதிரவன், கரியவன், செய்யவன், வெய்யவன், குறியவன், நெடியவன், புதியவன், பழையவன், சிறியவன், பெயரிவன் என்றற்றொடக்கத்தன, 'அ' என்னும் இடைநிலை பெற்றன. சேரமான், கட்டிமான் என்றற் றொடக்கத்தன மகர இடைநிலை பெற்றன. வலைச்சி, புலைச்சி என்றற் றொடக்கத்தன சகர இடைநிலை பெற்றன. [1]புலைத்தி, வண்ணாத்தி என்றற் றொடக்கத்தன தகர விடைநிலை பெற்றன. வெள்ளாட்டி, மலையாட்டி முதலாயின டகரவிடைநிலை பெற்றன. கணக்கிச்சி, தச்சிச்சி முதலாயின இச் என்னும் இடைநிலை பெற்றன. பிறவும் இவ்வாறே [2]அறிந்து கொள்க. சந்தி வகையானும் பொதுச்சாரியை வகையானும் முடியாவழி இவ்வாறு வருவன இடைநிலை யெனக் கொள்க. வினைப்பெயர்க்கு வினைப்பதத்திற்குச் [3]சொன்னவையே இடைநிலை யெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இடைநிலையாமாறு உணர்த்துவான் தொடங்கிப் பெயர்க்கு இடைநிலை **உணர் – ற்று.**

**இ – ள்.:** அறிவுடையோரால் நியமிக்கப்படும் இலக்கியங்கண்டு அதனுக்கு அவ் விலக்கியத்தின் அமைதியே இலக்கணமாகக் கூறலின், மேற்கூறிய பகுதியையும் விகுதியையும் பகுத்து இடையே நின்றது யாது? அதனை வினையாலணையும் பெயரல்லாத பெயர்கட்கு இடைநிலை என்று சொல்லுக, **எ–று.**

குறிக்கப்படும் இலக்கணத்தை உடையன எல்லாம் இலக்கியமாயினும் ஈண்டு இலக்கியம் என்றது பெயர்ப் பகுபதத்தை; இலக்கணம் என்றது அதனகத்துப் பகுதி முதலிய உறுப்புக்களை.

மா பலா முதலியன பராரை முதலிய சினையோடு நின்றன எனக் கண்டது கூறுவார் போலப் பகுபதம் பகுதி முதலிய உறுப்பொடு நின்றது எனக் கண்டது கூறி அப் பதந்தந்த தோலா நாவின் மோலோராணையின் நிற்றலின் கண்டதற்கு என்றும், சாரியை சந்தி விகாரங்களும் இடை நிற்குமேனும் அவை மேல் விதக்கப்படுதலின் அவை ஒழிந்தனவற்றை இடை நின்றதை என்றும், மேல் வினைக்கு விதந்து கூறும் இடைநிலை வினையாலணையும் பெயர்க்கும் அமைதலின் வினைப்பெயரல் பெயர்க்கு என்றும், இப் பெயரிடைநிலை வரையறுக்கப்பட்ட தன்று ஆங்காங்கு உணர்ந்துரைக்க என்பார் எனலே என்றும் கூறினார்.

---

பாட வேறுபாடு.:–

1. புலத்தி
2. அறிந்துவருவிக்க
3. சொன்னவையே கொள்க.

உ–ம்.: அறிஞன் என்பது ஞகர இடைநிலை பெற்றது. ஓதுவான், பாடுவான் என்பன வகர இடைநிலை பெற்றன. வலைச்சி, புலைச்சி என்பன சகர இடைநிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி, தந்தை, எந்தை, நுந்தை என்பன தகர இடைநிலை பெற்றன. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்**, பெயர்ப் பகுபதங்கட்கு இடைநிலை ஆமாறு கூறியது.

**இ–ள்.: இலக்கியங் கண்டு** – முற்காலத்து இலக்கியங் கண்டு, **அதற்கு இலக்கணம் இயம்பலிற்** – அவ்விலக்கியத்துக்கே இலக்கணம் காட்டலில், **பகுதி விகுதி பகுத்து** – முடிக்கலுறும் பகுபதத்தின் பகுதியும் விகுதியும் பிரித்து, **இடைநின்றதை** – இடையிலே நிற்பது யாது அதனை, **வினைப் பெயரல் பெயர்க்கு** – வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப்பகுதி பதத்திற்கு, **இடைநிலை எனலே** – இடை நிலையென்று கொள்ள வேண்டும், எ–று.

**உ–ம்.:** நடந்தான் வானவன், மீனவன், எல்லவன், வில்லவன்; பகலவன், கதிரவன், கரியவன் என அவ்வென்னும் இடைநிலை பெற்றன. சேரமான், கட்டிமான் என மகர இடைநிலை பெற்றன. வலைச்சி, புலைச்சி எனச் சகர இடைநிலை பெற்றன. புலத்தி, வண்ணாத்தி எனத் தகர இடைநிலை பெற்றன. வெள்ளாட்டி, மலையாட்டி என டகர இடைநிலை பெற்றன. கணக்கிச்சி, தச்சிச்சி என இச் சென்னும் இடைநிலை பெற்றன. பிறவும் இவ்வாறு அறிந்து முடிக்க.

## விசாகப் பெருமாளையர்

**இது**, இடைநிலையாமாறு அறிவிக்கத் தொடங்கிப் பெயர்க்கு இடைநிலை உணர்த்துகின்றது.

**இ–ள்.: இலக்கியம்** – அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தை, **கண்டு**–பார்த்து, **அதற்கு**–அவ் விலக்கியத்திற்கு, **இலக்கணம்**–அவ் விலக்கியத்தினமைதியே யிலக்கணமாக, **இயம்பலின்** – சொல்லுதலால், **பகுதி** – முன் சொல்லப்பட்ட பகுதியையும், **விகுதி** – விகுதியையும், **பகுத்து** – பிரித்து, **இடைநின்றதை** – நடுநின்றதை, **வினைப்பெயரல் பெயர்க்கு** – வினையாலணையும் பெயரல்லாதபெயர்களுக்கு, **இடைநிலையெனல்** – இடைநிலை யென்று சொல்லுக, எ–று.

உ–ம்.: அறிஞன் – ஞகர விடைநிலை. ஓதுவான் – வகர விடைநிலை. வலைச்சி–சகர விடைநிலை. வண்ணாத்தி–தகர விடைநிலை. மற்றவையு மிப்படியே வருதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

பெயரிடைநிலையாவது யாது?

இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

(இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்து இடைநின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே)

**இ–ள்.: இலக்கியம்கண்டு அதற்கு இலக்கணம் இயல்பலின் –** அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து அவ்விலக்கியத்திற்கு அவ்விலக்கியத் தினமைதியே யிலக்கணமாகச் சொல்லுதலால், **பகுதி விகுதி பகுத்து** – முன்செல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் பிரித்து, **இடை நின்றதை–** நடுநின்றதை, வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனல் – வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு இடைநிலையென்று சொல்லுக, **எ–று.**

பெயரிடைநிலை எத்தனை?

ஞகர வகர சகர தகர இச் என ஐந்து இடைநிலைகள்.

உ–ம்.: அறிஞன், வினைஞன், கவிஞன் என்பன ஞகரவிடைநிலைபெற்றன. கதிரவன், வானவன், ஒதுவான், பாடுவான் என்பன வகரவிடைநிலை பெற்றன. இடைச்சி; வலைச்சி, புலைச்சி என்பன சகரவிடைநிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகர இடை நிலை பெற்றன. செட்டிச்சி தச்சிச்சி என்பன இச்சிடைநிலை பெற்றன.

பெயரிடைநிலை என்ன பகுபதத்தில் வரும்?

பெயர்ப்பகுபதத்திலேயே வருமென்பது, ''வினைப்பெயரால் பெயர்க் கிடைநிலை யெனலே'' என்றதனாற் பெறப்படும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** இடைநிலை யுணர்த்தத் தொடங்கிப் பெயர்க்கு இடைநிலை யுணர்த்திற்று.

**இ–ள்.: இலக்கியங் கண்டு** – (அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கிய நூல்களிலும் உலக வழக்கிலும் நின்ற) எழுத்துஞ் சொல்லுமாகிய இலக்கியத்தைப் பார்த்து, **அதற்கு** – அந்த இலக்கியத்துக்கு, **இலக்கண மியம்பலின்** – (அதன் அமைதியே) இலக்கணமாகச் சொல்வது மரபாதலால், **பகுதிவிகுதி பகுத்து** – (இங்கே பெயர்ப்பகுபதமாகிய இலக்கியத்தைப் பார்த்து அதனுள்ளிருந்த இலக்கணாகிய) பகுதி விகுதி முதலிய உறுப்புகளைப் பிரித்து, **இடைநின்றதை** – இடையிலே நின்றதை, **வினைப்பெயரல் பெயர்க்கு** – வினையாலணையும் பெயரால்லாத

பெயர்ப்பகுபதத்திற்கு, **இடைநிலை யெனல்** – இடை நிலையென்று சொல்லு, **எ—று.**

குறிக்கப்படும் இலக்கணத்தை யுடையன வெல்லாம் இலக்கியமாயினும் இங்கே யிலக்கிய மென்றது, பெயர்ப்பகுபதத்தை எனவும், இலக்கியத்தின் அமைதி யெல்லாம் இலக்கணமாயினும் இங்கே இலக்கண மென்றது, அதனுள்ளிருந்த பகுதி விகுதி முதலிய வுறுப்புக்களை யெனவுங் காண்க.

**உ—ம்.:** அறிஞன், வினைஞன், கவிஞன், இவை ஞகர ஒற்று இடைநிலை பெற்றன. ஓதுவான், பாடுவான். இவை வகர வொற்று இடைநிலை பெற்றன. வலைச்சி, இடைச்சி, இவற்றில், சகர ஒற்று இடைநிலை. செட்டிச்சி, தச்சிச்சி – இச்சு இடைநிலை. கரியவன், கதிரவன், எல்லவன், வில்லவன், வானவன், மீனவன் – அகர இடைநிலை. சேரமான், கட்டிமான், கோமன் வடமன் – மகர இடைநிலை. பிறவுங் காண்க.

சாரியை சந்தி விகாரங்களும் இடைநிற்கு மாயினும் அவை மேல் எடுத்துச் சொல்லப்படுதலால் அவற்றை நீக்கி இடைநின்றதை யென்றும், மேலே வினைக்குச் சொல்லும் இடைநிலைகள் வினையாலணையும் பெயர்க்கும் அமைதலால் வினைப்பெயரல் பெயர்க்கென்றும், இந்தப் பெயர்ப்பகுபத இடைநிலைகள் இங்கே வரையறுக்கப்பட்டன அல்ல அங்கங்கே யுணர்ந்து உரைத்துக் கொள்க வென்று சொல்ல வந்தவர், எனவே என்றெடுத் தெறிந்துங் கூறினார். இச் சூத்திரத்தால் இடைநிலை கூறுவார் போன்று இலக்கிய மென்பதும் இலக்கணமென்பதும் இன்னதென விளக்கினா ரென்பது மாயிற்று. இது **ஒன்றினென் றெய்தவைத்த லென்னும்** உத்தி. இதனுள், எனல் என்னும் வியங்கோள் முற்றிற்குப் பயனிலை குறைந்து நின்றது கூட்டி முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– இலக்கியம் கண்டு** – (அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட) இலக்கியத்தைப் பார்த்து, **அதற்கு** – அவ்விலக்கியத்திற்கு, **இலக்கணம்** – (அவ்விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக, **இயம்பலின்** – சொல்லுதலால், **பகுதி விகுதி பகுத்து** – முன்சொல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் பிரித்து, **இடைநின்றதை** – நடுவில்நின்றதை, **வினைப் பெயர் அல்பெயர்க்கு** – வினையாலணையும் பெயர் அல்லாத பெயர்களுக்கு, **இடைநிலைஎனல்** – இடைநிலையென்று சொல்லுக.

**குறிப்பு :** இலக்கியம், இலக்கணம் – லக்ஷ்யம், லக்ஷணம், பெயரிடை நிலை இனிக் கூறப்படும் வினையிடை நிலை போலக் காலங்காட்டா விடினும், பகுதி விகுதிகளின் இடையே நிற்றலின் இடைநிலை எனப்பட்ட தென்க. சாரியை, சந்தி, விகாரங்களும் இடையில் நிற்குமேனும் அவை மேலெடுத்துக் கூறப்படுதலின் அவை யொழிந்தனவற்றை 'இடைநின்றதை' எனவும், மேல் வினைக்குக் கூறும் இடைநிலை வினையாலணையும் பெயர்க்கும் அமைதலின், 'வினைப்பெயரல்பெயர்க்கு' எனவும், இப்பெயரிடைநிலை

வரையறுக்கப்பட்டதன்று, ஆங்காங்கு உணர்ந்துரைக்க என்பார் 'எனலே எனவுங் கூறினார்.

| | | | |
|---|---|---|---|
| **உ–ம் :** | அறிஞன், கவிஞன் | ... ... | **ஞ்** இடைநிலை |
| | ஓதுவான், பாடுவான் | ... ... | **வ்** இடைநிலை |
| | இடைச்சி, வலைச்சி | ... ... | **ச்** இடைநிலை |
| | வண்ணாத்தி, மனையாட்டி | ... | **த்** இடைநிலை |
| | செட்டிச்சி, தச்சிச்சி | ... ... | **இச்** இடைநிலை |

**(இச்சு** இடைநிலையென்பர் **இராமானுசகவிராயர்)**

இச்சூத்திரத்தால் இடைநிலை கூறவந்தவர், இலக்கிய விலக்கணங்கள் இன்னவென்றும் ஒருவாறு கூறினார். குறிக்கப்படும் இலக்கணத்தை யுடையனவெல்லாம் இலக்கிமாயினும் இங்கு 'இலக்கியம்' என்றது பெயர்ப் பகுபதத்தை எனவும், இலக்கியத்தின் அமைதியெல்லாம் இலக்கணமாயினும் இங்கு 'இலக்கணம்' என்றது அதனுள் இருக்கிற பகுதி விகுதி முதலிய உறுப்புகளை எனவும் அறிக.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின் –** அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து அவ் விலக்கியத்திற்கு அவ் விலக்கியத்தினமைதியே யிலக்கணமாகச் சொல்லுதலால், **பகுதி விகுதி பகுத்து –** முன் சொல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் பிரித்து, **இடை நின்றதை வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனல் –** நடுநின்றதை வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு இடைநிலை யென்று சொல்லுக. எ–று.

**உ–ம்.:** அறிஞன், வினைஞன், கவிஞன் என்பன ஞகர விடைநிலை பெற்றன. ஓதுவான், பாடுவான் என்பன வகர விடைநிலை பெற்றன. இடைச்சி, வலைச்சி, புலைச்சி என்பன சகர விடைநிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகரவிடைநிலை பெற்றன. செட்டிச்சி, தச்சிச்சி என்பன இச்சிடைநிலைபெற்றன.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இலக்கியம் கண்டு –**அறிவுடையோரால் நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து, **– இலக்கணம் இயம்பலின் –** அவ்விலக்கியத்தின் அமைதியே இலக்கியத்திற்கு இலக்கணமாகச் சொல்லுதலால், **– பகுதி விகுதி பகுத்து –** பெயர்ப்பகுபதத்திற் பகுதியையும் விகுதியையும் பிரித்து, **– இடைநின்றதை –** அப்பகுதி விகுதிகளுக்கு நடுவே நின்ற அங்கத்தை, **– வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனல் –** வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப் பகுபதங்களுக்கு இடைநிலையென்று சொல்லுக.

**"இடைநின்றதை"** என்றதினால் பகுதிவிகுதிகளான் மாத்திரம் முடிந்த பகுபதங்களையொழித்து அவற்றொடு இடைநிற்கும்

அங்கத்தையுமுடைய பெயர்ப்பகுபதங்களையே ஈண்டுக்கொள்ளுக. குறிக்கப்படுமிலக் கணத்தையுடையனவெல்லாம் இலக்கியமாயினும் ஈண்டிலக்கியமென்றது பெயர்ப்பகுபதங்களை; இலக்கணமென்றதீண்டு அதனகத்துப் பகுதி விகுதி இடைநிலைகளை.

**உ–ம்** அறிஞன், வினைஞன், கவிஞன் என்பன ஞகரவொற்றிடை நிலை பெற்றன. ஓதுவான், பாடுவான் என்பன வகரவொற்றிடை நிலைபெற்றன. இடைச்சி, வலைச்சி என்பன சகரவொற்றிடை நிலைபெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகர வொற்றிடைநிலை பெற்றன. செட்டிச்சி, தச்சிச்சி என்பன இச் சிடைநிலைபெற்றன.

வினைப்பெயரல் பெயர்க்கிடைநிலையென்றார் ஓதுவான், பாடுவான் என்பன வினையாலணையும் பெயராக நிற்கமாட்டாவோ எனின்; எழுத்தொப்புமையால், வினையாலணையும் பெயராகவும் வினைமுற்றாகவும், தொழிலடியாகக் கொண்ட பெயராகவுநிற்குமாயினும் தொழிலடியாகக் கொண்ட பெயர்களாய் நின்றநிலையே ஈண்டுக்கொள்ளப்படுமென்க. தொழிலடியாகக் கொண்ட ஓதுவான் பாடுவான் என்னும் பெயர்களில் வந்த வகர வொற்றிடைநிலை காலங்காட்டாமல் நின்றது.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: இலக்கியம் கண்டு** – (அறிவுடையோரால் நியமிக்கப்பட்ட) இலக்கியத்தைப் பார்த்து, **அதற்கு** – அவ் விலக்கியத்திற்கு, **இலக்கணம்** – (அவ் விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக, **இயம்பலின்** – சொல்ல வேண்டுதலால், **பகுதி விகுதி பகுத்து**–பகுதியையும், விகுதியையும் பிரித்து, **இடை நின்றதை** – நடுவில் ஏதேனும் நின்றால் அதனை, **வினைப்பெயர் அல்பெயர்க்கு** – வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப் பகுபதங்கட்கு, **இடைநிலை எனல்** – இடைநிலை யென்று சொல்லுக; **எ–று.** இலக்கியம்– இலக்ஷ்யம் இலக்கணம் – லக்ஷணம்.

மேற் கூறப்படும் வினைப்பகுபத இடைநிலை காலங்காட்டுதல் போலப் பெயர்ப்பகுபத இடைநிலை காலங்காட்டாதாயினும், முதனிலை இறுதிநிலைகளாகிய பகுதி விகுதிகட்கு இடையில் நிற்றலால், 'இடைநிலை' எனப்பட்டது.

சாரியை சந்தி விகாரங்களும் பகுதி விகுதிகளின் இடையில் நிற்பனவாயினும், அவை மேல் எடுத்துக் கூறப்படுதலால், அவை ஒழிந்ததை 'இடைநின்றதை' என்றும், மேல் வினைக்குக் கூறும் இடைநிலை வினையாலணையும் பெயர்க்கும் அமைதலால், 'வினைப்பெயரல் பெயர்க்கு' என்றும், 'இப் பெயரிடைநிலை வரையறுக்கப்பட்டதன்று, ஆங்காங்கு வருவது உணர்ந்து உரைக்க' என்பார் 'எனல்' என்றும் கூறினார்.

**உ–ம்.:** அறிஞன், கவிஞன், இளைஞன், பகைஞன் . . . ஞகர இடைநிலை.

இடைச்சி, வலைச்சி, புலைச்சி . . . சகர இடைநிலை.

பொருநன், செய்குநன் . . . நகர இடைநிலை.

இடைநிலை கூறுபவர் போல, இலக்கிய இலக்கணங்களின் தன்மையையும் இச்சூத்திரத்துள் விளக்கினார்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். இலக்கியம்ம் கண்டு – அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து, அதற்கு இலக்கணம் இயம்பலின் – அவ்விலக்கியத்திற்கு அவ்விலக்கியத்தினமைதியே யிலக்கணமாகச் சொல்லுதலால், பகுதி விகுதி பகுத்து – முன் சொல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் பிரித்து, இடை நின்றதை – நடுநின்றதை, வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனல் – வினையாலணை;யம பெய ரல்லாத பெய்ாகளுக்கு இடைநிலையென்று சொல்லுக. எ–று.

உ–ம். அறிஞன், வினைஞன், கவிஞன் – ஞகரவிடைநிலை பெற்றன. ஓதுவான், பாடுவான் – வகரவிடைநிலை பெற்றன. அடைச்சி, வலைச்சி, புலைச்சி–சகரவிடை நிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி – தகர விடைநிலை பெற்றன. செட்டிச்சி, தச்சச்சி என்பன இச்சு இடைநிலை பெற்றன.

இச்சூத்திரத்தால், இடைநிலை கூறியதோடு இலக்கிய இலக்கணங்களின் தன்மையையும் விளக்கினார். இது 'ஒன்றினொன்று எய்த வைத்தல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) இலக்கியம் கண்டு–(அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட) இலக்கியத்தைப் பார்த்து, அதற்கு – அவ் விலக்கியத்திற்கு, இலக்கணம்– (அவ் விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக, இயம்பலின்– சொல்லுதலால், பகுதி விகுதி பகுத்து– (முன்சொல்லப்பட்ட) பகுதியையும் விகுதியையும் பிரித்து, இடைநின்றதை–நடுநின்றதை, வினைப்பெயர் அல் பெயர்க்கு–வினையாணையும் பெயரல்லாத பெயர்களுக்கு, இடைநிலை எனல்–இடைநிலை என்று சொல்லுக. **எ–று.**

**பொ–ரை.:** இலக்கியத்தைப் பார்த்து அதற்கு இலக்கணம் சொல்லுதலால், பகுதியையும் விகுதியையும் பிரித்து, நடுவில் நின்றதை வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு இடைநிலை என்று சொல்லுக.

(உ–ம்.) அறிஞன்–ஞ்

ஓதுவான்–வ்

வலைச்சி–ச்

வண்ணாத்தி–த்–இடைநிலை.

மற்றவையும் இப்படியே வருதல் காண்க.

(இலக்கியம்–பெயர். இலக்கணம்–பகுதி முதலிய வுறுப்புக்கள்.)

வினையாலணையும் பெயர்கள் காலங் காட்டும் இடை நிலைகளையுடைய வாதலால், "வினைப்பெய ரல்பெயர்" என்றார்.

மேற் கூறப்படும் வினைப்பகுபத இடைநிலை காலங் காட்டுதல் போலப் பெயர்ப்பகுபத இடைநிலை காலங் காட்டா தாயினும், முதனிலை இறுதிநிலைகளாகிய பகுதி விகுதிகட்கு இடையில் நிற்றலால், 'இடைநிலை' எனப்பட்டது.

வலைச்சி, வண்ணாத்தி என்புழி, ஈற்றிலுள்ள விகுதியுயிரேறிய சகரமெய்யும் தகரமெய்யும் இடைநிலை எனக் கொள்க.

இடைநிலை கூறுபவர்போல, இலக்கிய இலக்கணங்களின் தன்மையையும் இச் சூத்திரத்துள் விளக்கினார்.

## கா. நமசிவாய முதலியார்

**இலக்கியம்** – இலக்கியத்தை, **கண்டு** – பார்த்து, **அதற்கு** – அவ் விலக்கியத்திற்கு, **இலக்கணம்** – (அவ்விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக, **இயம்பலின்** – சொல்லுதலால், **பகுதி** – பகுதியையும், **விகுதி** – விகுதியையும், **பகுத்து** – பிரித்து, **இடை நின்றதை** – நடுவில் நின்றதை, **வினைப்பெயர் அல் பெயர்க்கு** – வினையாலணையும் பெயர் அல்லாத பெயர்களுக்கு, **இடைநிலை எனல்** – இடைநிலையென்று சொல்லுக.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| அறிஞன் | – | ஞ் |
| ஓதுவான் | – | வ் |
| வலைச்சி | – | ச் |
| வண்ணாத்தி | – | த் |

இலக்கியம், இலக்கணம் என்பன – **லக்ஷ்யம், லக்ஷணம்** என்னும் வடமொழித் திரிபு. ஈண்டு, 'இலக்கியம்' என்றது, பகுபதத்தை; இலக்கணம் என்றது, பகுபதவுறுப்புக்களை.

## மோசசு பொன்னையா

அமைந்துள்ள இலக்கிய மரபின் வழிநின்று இலக்கணஞ் சொல்லுதல்

மரபாதலின், வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்குப் பகுதி விகுதிகளாகப் பகுத்து இடைநின்றதை இடைநிலை எனச் சொல்லுக, **எ—று.**

இவ்வாசிரியர், தாஅ னாட்டித் தனாது நிறுப்பாகப் பதவியல் அமைத்துப் பகுபத வுறுப்பிலக்கணங் கூறினும், மரபுநிலை பிறழாதவாறு அவை அமைத்துக்கொள்ளப்படுகின்றன என்பாராய், இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின் என்றார். பகுதியைப் பாத்துக் காணின் உண்டான், தின்றான் முதலியவற்றிற்கு இடைநிற்பன சாரியை சந்தி விகாரம் கால இடைநிலைகளாக அடையுமாதலின், அவற்றை நீக்குதற்கு வினைப்பெயரல் பெயர்க்கு என்றார்.

**எ—டு.**

| | |
|---|---|
| பொருநன் | – ந் இடைநிலை. |
| அறிஞன், வினைஞன், கவிஞன் | – ஞ் இடைநிலை. |
| ஓதுவான், பாடுவான் | – வ் இடைநிலை. |
| இடைச்சி, வலைச்சி, புலைச்சி | – ச் இடைநிலை. |

**(14)**

**141. தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்**
**திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.**

**த ட ற ஒற்று இன் ஏ ஐம்பால் மூ இடத்து**
**இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை.**

ṭa ta ṛa oṛṛu iṉ ē aimpāl mū itaṭṭu
iṛanṭa kālam ṭarum toḷil itainilai.

**இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)**

**Signs of the past tense**

When 't', 'r', and 'in' shew the **past tense** in (all) the five Genders and three persons, they are termed the medial (temporal) particles (of Compound verbs).

**ஒப்புமைப் பகுதி**

**கடதற ஒற்றின் ஐம்பால் மூஇடத்து**

**இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை**

(இ.வி.:47)

**இறந்த காலத்து இடைநிலை தடறஒற்று**
**இன்னே மூவிடத்து ஐம்பாற்கு ஏற்பன**

(தொ.வி.:108)

**.............. கடதற ஒற்றின் இறப்பும்**

(சுவாமி.:25:3)

## மயிலை நாதர்

**எ—ன்,** இறந்தகாலங் காட்டும் வினைப்பகுபத இடைநிலை யுணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** தகர டகர றகர மெய்களும் இன்னும், ஐம்பால் மூவிடத்தும் இறந்தகாலங் காட்டும் வினைப்பகுபத இடைநிலைகளாம், **எ—று.**

**வ—று.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும்; விட்டான், விட்டாள், விட்டார், விட்டது, விட்டன, விட்டேன், விட்டேம், விட்டாய், விட்டீர், எனவும்; உற்றான், உற்றாள், உற்றார், உற்றது, உற்றன, உற்றேன், உற்றேம், உற்றாய், உற்றீர் எனவும்; உறங்கினான், உறங்கினாள், உறங்கினார், உறங்கிற்று, உறங்கின, உறங்கினேன், உறங்கினேம், உறங்கினாய், உறங்கினீர் எனவும் வரும்.

இன்னை ஈண்டும் எடுத்தோதினமையாற் சாரியை இன்னென்னாது இடைநிலை இன்னெனவே கொள்க. நடந்ததென்புழி அகரம் சாரியை அகரம்.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ—னின்,** இறந்தகால வினைக்கு இடைநிலை **உ—ணர் — ற்று.**

**இ—ள்.:** தகர டகர றகர மெய்களும், இன் என்னும் குற்றொற்றும் ஐம்பான் மூவிடத்தும் இறந்த காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம், எ — று.

**உ—ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும்; உண்டான் எனவும்; சென்றான் எனவும்; உறங்கினான் எனவும் வரும். ★***இன்னிடைநிலை எஞ்சியது எனக் கடைக் குறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும்*** ★. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** வினைப் பகுபதத்திற்கு இடைநிலை ஆமாறு கூறியது.

**இ—ள்.:** **தடறவொற்றின்னே** – தகார டகார றகார மெய்களும் இன்னும், **ஐம்பான்** – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒருமைப்பால்,

பன்மைப்பாலென ஐம்பாலினும், **மூவிடத்து** – தன்மை, முன்னிலை, படர்க்கை மூன்றிடத்தும், **இறந்த காலந் தரும்** – இறந்த காலங் காட்டும், **தொழில் இடைநிலை** – வினைப் பகுபத இடைநிலையாம், **எ–று.**

**உ–ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும்; விட்டான், விட்டாள், விட்டார், விட்டது, விட்டன, விட்டேன், விட்டேம், விட்டாய், விட்டீர் எனவும்; உற்றான், உற்றாள், உற்றார், உற்றது, உற்றன, உற்றேன், உற்றேம், உற்றாய், உற்றீர் எனவும்; உறங்கினான், உறங்கினாள், உறங்கினார், உறங்கிற்று, உறங்கின, உறங்கினேன், உறங்கினேம், உறங்கினாய், உறங்கினீர் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** இறந்தகால வினைக்கு இடைநிலை உணர்த்துகின்றது.

**இ–ள்.: தடறவொற்று** – தகர டகர ரகர மெய்களும், **இன்** – இன்னும், **ஐம்பான் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும், **இறந்தகாலம்** – இறந்த காலத்தை, **தரும்** – காட்டுகின்ற, **தொழில்**–வினைப்பகுபதங்களினுடைய, **இடைநிலை**–இடைநிலைகளாகும், **எ – று.**

**உ–ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும்; உண்டான் எனவும், சென்றான் எனவும்; உறங்கினான் எனவும்; வரும், 'இன்' இடைநிலை 'எஞ்சியது எனக் கடைகுறைந்தும், போனது, என முதல் குறைந்தும் வரும் மற்றவையுமிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இறந்தகால வினையிடைநிலை யுணர்த்துஞ் சூத்திரம் யாது?

தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்

திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

(தடறஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து

இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை)

**இ–ள்.: த ட ற ஒற்று இன்**– தகர டகர றகர மெய்களும் இன்னென்னுங் குற்றொற்றும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும், **இறந்தகாலம் தரும் தொழில் இடைநிலை**– இறந்த காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடை நிலைகளாகும், **எ–று.**

இறந்தகால வினையிடைநிலைகள் யாவை?
"தடறவொற்றின்னே"

அவை எப்பாலிடங்களில் வரும்?

"ஐம்பான் மூவிடத்து"

**உ–ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும், உண்டான் எனவும், சென்றான் எனவும், உறங்கினான் எனவும் வரும். சிறுபான்மை இன்னிடைநிலை எஞ்சியது எனக் கடைகுறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இறந்தகால வினைக்கு இடைநிலை யுணர்த்திற்று.

**இ–ள்.:** **தடறவொற்று** – இந்த மூன்று ஒற்றுக்களும், **இன்** – இந்த இடைச்சொல்லும், **ஐம்பான் மூவிடத்து** – ஐந்து பாலிலும் மூன்றிடத்திலும், **இறந்தகாலந் தரும் தொழிலிடைநிலை**–இறந்த காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களுக்கு இடைநிலைகளாம், **எ – று.**

**உ–ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன எனவும்; நடந்தேன், நடந்தேம் எனவும், நடந்தாய், நடந்தீர் எனவும், இவை யைம்பால் மூவிடங்களிலே தகர இடைநிலை வந்தன. உண்டான், கண்டான் என டகர இடைநிலையும், சென்றான், நின்றான் என றகர இடைநிலையும், உறங்கினான், ஓடினான் என இன் இடைநிலையும் வந்தன, மற்றப் பால் இடங்களிலும் ஒட்டிக் கொள்க. இனி யுரையிற் கோடலால், எஞ்சியது, தப்பியது, நீங்கியான் என இகரத்தை யடுத்த யகர வொற்றும், போய்து, போய, என யகர ஒற்றும், போனான், போனது என னகர ஒற்றும் சிறுபான்மை இறந்தகாலங் காட்டு மெனவுங் கொள்க, பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **தடற ஒற்று** – தகர டகர றகர மெய்களும், **இன்** – இன்னும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பால் மூவிடங்களிலும், **இறந்தகாலம்** – இறந்த காலத்தை, **தரும்** – காட்டுகின்ற, **தொழில் இடைநிலை** – வினைப்பகு பகுதங்களினுடைய இடைநிலைகளாம்.

**உ–ம் :** நடந்தான், நடந்தாள், நடந்தார்; நடந்தது, நடந்தன; நடந்தேன், நடந்தேம்; நடந்தாய், நடந்தீர் எனவும், உண்டான் எனவும், சென்றான் எனவும், உறங்கினான் எனவும் வரும்.

**குறிப்பு :** – 'இன்' இடைநிலை 'பாடியது' எனக் கடைகுறைந்தும், 'போனது' என முதல் குறைந்தும் வரும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** **த ட ற ஒற்று** – தகர டகர றகரமெய்களும் இன்னென்னுங் குற்றொற்றும், ஐம்பால் **மூவிடத்து இறந்தகாலம் தரும் தொழில் இடைநிலை** – ஐம்பான் மூவிடங்களிலும் இறந்த காலத்தைக் காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், **எ – று.**

**உ—ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர், எனவும். உண்டான். எனவும். சென்றான் எனவும், உறங்கினான் எனவும், வரும். சிறுபான்மை இன்னிடைநிலை எஞ்சியது எனக் கடை குறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். தடற ஒற்று இன்** – தகரமெய்யும் டகரமெய்யும் றகரமெய்யும் இன் என்னுங் குற்றொற்றும், **– ஐம்பால் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும் **இறந்தகாலம் தரும் தொழில் இடைநிலை** – இறந்தகாலத்தைக் காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். **எ—று.**

**உ—ம்** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர். எம் உண்டான். எம். சென்றான். எம். உறங்கினான். எம் வரும். உண் என்னும் பகுதியிற்றோன்றிய வினையில் இன் இடைநிலைவாராது; பிறவினையான போதுவரும் பிறவு மாராய்ந்தறிக. சிறுபான்மை இன்னிடைநிலை கடை குறைந்தும் முதல் குறைந்தும் வரும்.

எஞ்சியது என்பதில் இன் என்னும் இடைநிலையின் ஈற்று னகர வொற்றுக் குறைந்தது. குறையாதாயின் எஞ்சினது என நிற்கும்.

போனது என்பதில் இன் இடைநிலையின் முதல் இகரவுயிர் குறைந்தது. குறையாதாயின் போயினது என நிற்கும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.: த ட ற ஒற்று** – தகர டகர றகர மெய்களும், **இன்** – இன் என்பதும், **ஐம் பால் மூ இடத்து** – ஐந்து பால்களிலும் மூன்று இடங்களிலும், **இறந்தகாலம்** – இறந்த காலத்தை, **தரும்** – காட்டுகின்ற, **தொழில்** – வினைப்பகுபதங்களின், **இடைநிலை** – இடைநிலைகளாம்; **எ—று.** ஐம் பால் – ஆண்பால் முதலியன. மூவிடம் – தன்மை முதலியன.

**உ—ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன; நடந்தேன், நடந்தேம்; நடந்தாய், நடந்தீர்; உண்டான்; சென்றான்; உறங்கினான்.

'இன்' இடைநிலை, 'சொல்லியது' எனக் கடை குறைந்தும், 'சொன்னது'என முதல் குறைந்தும் வரும்.

## பவானந்தம் பிள்ளை

இ—ள். த் ட் ற் ஒற்று இன் – தகர டகர றகர மெய்களும் இன்னென்னுங் குற்றொற்றும், ஐம்பால் மூவிடத்து இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை–

ஐம்பான் மூவிடங்களிலும் இறந்தகாலத்தைக் காட்டும் வினைப்பகு பதங்களினுடைய இடைநிலைகளாகும். எ–று. –உ–ம். நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர், உண்டான், சென்றான், உறங்கினான், சிறுபான்மை இன் இடைநிலை 'எஞ்சியது' எனக் கடை குறைந்தும், 'போனது' என முதல் குறைந்தும் வரும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) த ட ற ஒற்று–தகர டகர றகர மெய்களும், இன்–இன்னும், ஐம்பால் மூவிடத்து–ஐம்பால் மூவிடங்களிலும், இறந்த காலம் தரும்–இறந்த காலத்தைக் காட்டுகின்ற, தொழில் இடைநிலை, வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். **எ–று.**

**பொ–ரை.:** த, ட, ற ஒற்றுக்களும், இன் என்னும் இடைச் சொல்லும் ஐந்து பாலிலும், மூன்று இடத்திலும் இறந்த காலத்தைக் குறிக்கும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.

(த ட ற ஒற்றுக்கள் – த், ட், ற் என்ற மெய்கள். ஐம்பால்–ஆண்பால் முதலியன. மூவிடம்–தன்மை முதலியன.)

(உ–ம்) நடந்தான் நடந்தேன் – த் இடைநிலை.

நடந்தாள் நடந்தோம்

நடந்தார் நடந்தாய்

நடந்தது நடந்தீர்

நடந்தன

உண்டான் – ட் இடைநிலை

சென்றான் – ற் ,,

உறங்கினான் – இன் ,,

'இன்' இடைநிலை, எஞ்சியது எனக் கடை குறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும். மற்றவையும் இப்படியே.

## கா. நமசிவாய முதலியார்

தடற ஒற்று – **தகர டகர றகர மெய்களும்**, இன் – **இன்னும், ஐம்பால்** மூவிடத்து – **ஐம்பால் மூவிடங்களிலும்**, இறந்தகாலம் – **இறந்த காலத்தை**, தரும் – **காட்டுகின்ற**, தொழில் – **வினைப் பகுபதங்களிடைய,** இடைநிலை – **இடைநிலைகளாகும்.**

**உதாரணம்**

நடந்தான் – த்

உண்டான் – ட்
கொன்றான் – ற்
உறங்கினான் – இன்

இன் இடைநிலை **எஞ்சியது** எனக் கடைகுறைந்தும், **போனது** என முதல் குறைந்தும் வரும்.

## மோசகூ பொன்னையா

தகர டகர றகர மெய்களும், இன் என்னும் குற்றொற்றும் ஐம்பால் மூவிடங்களிலும் இறந்த காலத்தையும்; ஆநின்று, கின்று, கிறு என்ற மூன்றும் அவ்வாறே நிகழ் காலத்தையும்; பகர வகர மெய்கள் அவ்வாறே வருங்காலத்தையும் காட்டும் வினைப்பகுபத இடைநிலைகளாம்; வேறும் உள சில அவை இங்குக் கூறப்பட்டில, **எ—று.**

**எ—டு.**

நடந்தான் – த்
உண்டான் – ட்
சென்றான் – ற்
உறங்கினான் – இன் இறந்தகால இடைநிலைகள்.
நடவாநின்றான் – ஆநின்று
நடக்கின்றான் – கின்று
நடக்கிறான் – கிறு நிகழ்கால இடைநிலைகள்.
நடப்பான் – ப்
வருவான் – வ் எதிர்கால இடைநிலைகள்

இவை சிலவில என்றதனால், உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் என்பவற்றில் ஆகிடந்து, ஆவிருந்து என்பன நிகழ்காலத்தையும், என்றிசினோர் என்பதில் இசின் இறந்த காலத்தையும், என்மார், என்மனார் என்பனவற்றில் உம் எதிர்காலத்தையும் உணர்த்தி நிற்பதையும்; சொல்லியது சொன்னது, போயது என்ற சொற்களில் இம்முறையே கடைக்குறைந்தும் முதற்குறைந்தும் இகரம் திரிந்தும் னகரம் கெட்டும் இறந்த காலம் உணர்த்தி வருவதையுங் கொள்க.

காலங்கெட்டும் இடைநிலைகள் தொல்காப்பியரால் தனிப்பட எடுத்துரைக்கப்படவில்லை. வினைச்சொற்களில் நின்று இறந்த எதிர்கால இடைநிலைகள் காலமுணர்த்தின வெனினும், நிகழ்காலத்தையுணர்த்தும் கால இடைநிலைகள் தொல்காப்பியத்திலோ சங்க இலக்கியங்களிலோ இடம்பெறவில்லை. தொல்காப்பியர் காலத்து நிகழ்கால வினைமுற்று, 'செய்யும்' என்ற வாய்பாட்டதேயாகும். அவர் 'நிகழுங் காலத்துச் செய்யுமென் கிளவி'

என்றும், 'நிகழுஉ நின்ற பலர்வரை கிளவி' என்றும் அச்சொல்லை நிகழ்காலத்தோடு தொடர்புபடுத்தியே நூற்பா அமைத்தார். இவ்வாசிரியர் காலத்தில் அது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் குறித்தது என்பது, அவர் 'செய்யு நிகழ்பெதிர்வும்' என்றதனாற் புலனாகும். தம் கால வழக்கு நோக்கிப் பவணந்தியார் நிகழ்கால இடைநிலைகளாகக் கிறு, கின்று, ஆநின்று என்ற மூன்றையுங் குறிப்பிட்டார். இவற்றுள் ஆநின்று என்பது அவரது தனிப் படைப்பே யாகும் என்று எண்ண இடமுண்டு. செய்யாநின்றான் என்ற தொடரைச் செய்யா + நின்றான் எனப் பிரித்து இறப்பில்நிகழ்வுப் பொருள் காண்பதே வீரசோழிய உரையாசிரியருக்கு உடன்பாடாகக் காணப்படுகிறது. சேனாவரையரும் 'உண்ணாநின்றார்' என்ற சொல்லில் 'ஆநின்று' என்பதை இடைநிலையாக்காமல், 'நில்' என்பதையே இடைநிலையாகப் பிரித்துக் காட்டினார். அவ்வாறே, உண்ணாகிடந்தனம், உண்ணாவிருந்தனம் என்பவற்றில் கிட, இரு என்பவற்றையே நிகழ்கால இடைநிலைகள் எனக் கூறியுள்ளார். கின்று என்று ஓர் இடைநிலையை இவ்வாசிரியர் அமைத்ததும் பிறழ்பிரிப்பால் நேர்ந்ததே. கல்வெட்டுக்களிலும் பிற எழுத்துச் சான்றுகளிலும் காலங் குறிக்கப்படும் இடங்களிலெல்லாம் 'செல்லாநின்ற' என்ற தொடர் 'நிகழும்' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. செய்யா என்பதன் ஈற்று ஆகாரம் செய்கு – செய்யு + அ = செய்யாஅ – செய்யா என வந்த மருஉ வடிவேயாகும் எனக்கோடல் தவறாகாது. செய்கின்றான் என்ற சொல் செய்கு + அ + நின்றான் என்பவை திரட்டுப் பெற்றுஅமைந்ததால் உண்டாயிற்று எனல் வேண்டும். நகர ஒற்றின் ஆற்றலால் அ + நி > இ எனத் திரண்டது எனலாம். ஆயின், இவ்வாறு அமையுஞ் சொற்களில் எச்சப்பொருள்தரும் அகரமே நிகழ்வைக் குறிப்பாக உணர்த்தின என்க. நின்று நிறு; கன்று கறு என்றாதல் இயல்பாகலின், செய்கிறான் என்பது அமைக்கப்படும்.

இறந்தகால எதிர்கால வினைகள் மிகப் பழங்காலத்தில் பால் வேறுபாடின்றி வழங்கின. நடந்து, சென்று, உரிஞ்சி, தழீஇ, ஆய், போய் என்பன போன்றவை இறந்தகாலத்தையும், செய்கு, உண்கு, காண்கு, நோகு முதலியன எதிர்காலத்தையும் உணர்த்தி வினைமுற்றுக்களாக வழங்கின. செய்யும் என்னும் வாய்பாட்டுச்சொற்கள் முக்காலத்தும் நிகழ்தொழிலை மட்டும் உணர்த்தின: தனி நிகழ்காலத்தை உணர்த்திய பண்டை வினை வடிவங்கள் இல்லை.

பண்டைவினை வடிவங்கள் ஒலித்துணைகளையும் விகுதிகளையும் பெற்று, இக்காலத்தில் வழங்கும் பல்வேறு இறந்தகால எதிர்கால வினைமுற்றுக்களைத் தோற்றுவித்தன; எனவே நடந்தனன், நடந்தான், சென்றனன், சென்றான், உரிஞ்சினன், உரிஞ்சினான்; தழீஇனன், தழீஇனான்; ஆயினன், ஆயினான், ஆனான்; போயினன், போயினான், போனான் எனவிவ்வாறு இறந்த காலத்தையும், செய்குவான், செய்வான்; தின்குவ, தின்ப, உண்குவ, உண்ப, உண்பன, எனவிவ்வாறு எதிர்காலத்தையும் உணர்த்தும் பல்வேறு வினைமுற்றுக்கள் வழக்கில் வந்தன.

இவற்றுள், 'இறந்தகாலத்தை உணர்த்தும் கற்றான், சென்றான்,

உண்டான் என்பன போன்ற சொற்களில் தகர ஒற்றே றகர டகர ஒற்றுக்களாகத் திரிந்து நிற்பதாலும், உறிஞ்சி, தழீஇ போன்ற சொற்களில் இகரமே காலத்தை உணர்த்துவதாலும், ஆய், போய் என்பன போன்ற சொற்களில் யகர ஒற்று இகர உயிரின் திரிபேயாகலானும் இறந்த காலத்தை உணர்த்தும் கால எழுத்துக்கள் தகர ஒற்றும் இகர உயிருமே எனக் கொள்க. எதிர்காலத்தை உணர்த்தும் செய்குவான், செய்வான், உண்குவான், உண்பான், உண்ணுவான், தின்குவான், தின்பான், தின்னுவான், வருகுவான், வருவான், என இவ்வாறு ககர உகரம் பெற்றும், அதன் ககர ஒற்றுத் திரிந்தும், கெட்டும், ஒலித்துணை அகரமும் விகுதியும் பெற்றும், முடிந்தனவாகவே எல்லா எதிர்கால வினைமுற்றுக்களும் அமைவதால், குவ்வின் ககர ஒற்றே எதிர்காலம் உணர்த்தும் கால எழுத்து எனக் கொள்க. அதன் திரிபுகளான பகர வகரங்களைக் கூறின், செய்குவான், உண்குவான், என்னுந் தொடக்கத்துச் சொற்களிலும் வகர ஒற்றே எதிர்காலம் உணர்த்திற்று எனல் வேண்டும். செய்கு, உண்கு, என்பவற்றின் ஈற்று உயிர்மெய்யான கு எதிர்காலம் உணர்த்தும் என்பது இவ்வாசிரியருக்கும் உடம்பாடேயாதலானும் உண்டு. உண்கு, செய்து, செய்கு என்பவற்றை ஒப்பிட்டுக் காணின், ஈண்டுக் ககர ஒற்றே எதிர்காலம் உணர்த்துகின்றமை தெளிவுறும் ஆதலானும், யாம் கூறியதே ஏற்புடையதாதல் அறிக. இவ்வாசிரியர் பகுதிக்கும் விகுதிக்கும் இடைநிற்பது எதுவோ அஃது இடைநிலை என்ற கொள்கையினர் ஆதலின், கால எழுத்துப் பற்றிய நுட்பங்கள் தோன்றக் கூறினாரல்லர் எனக் கொள்க.

இம்முறையன்றி வேறு சில வினைச்சொற்கள் அமைந்துளவெனின், அவற்றை ஒப்புமைப்போலியால் அமைந்தனவாகக் கொள்க.

(15)

---

குறிப்பு:– மோசசு பொன்னையா அடுத்து வரும் இரு நூற்பாக்களின் விளக்கத்தினையும் இவ்விடத்தே இணைத்துக் கூறியுள்ளார்

142. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை

ஆநின்று கின்று கிறுமூ இடத்தின்
ஐம்பா ல்கழ்பொழு துஅறைவினை இடைநிலை
āninṟu kinṟu kiṟu mūitaṭṭin
aimpāl nikaḷ poḻutu aṟaivinai itainilai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Signs of the present tense

The same of 'âninru' 'kinru' and 'kiru' when they denote **present** tense in (all) the five Genders and three Persons.

## ஒப்புமைப் பகுதி

**அநின்று கின்று கிறுமூ விடத்து**
**ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை**

**(இ.வி.:48)**

**நிகழ்பொழுது ஆநின்று கின்று கிறு என**
**ஐம்பால் மூவிடத்து ஆம் இடைநிலை**

**(தொ.வி.:109)**

**..........கிறுகிற்**
**றெண்டருகின்று ஆநின்று நிகழ்வு...........**

**(சுவாமி.:25:3–4)**

## மயிலை நாதர்

**எ–ன்,** நிகழ்காலங் காட்டும் வினைப்பகுபத இடைநிலை யுணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** ஆகாரத்தோடு கூடிய நின்றென்பதுவும் கின்றென்பதுவும் கிறு என்பதுவும் மூவிடத்து வரும் ஐம்பாற்கண்ணும் நிகழ்காலங் காட்டும் வினை யிடைநிலைகளாம், **எ – று.**

**வ – று.:** உண்ணா நின்றான், உண்ணா நின்றாள், உண்ணா நின்றார், உண்ணா நின்றது, உண்ணா நின்றன, உண்ணா நின்றேன், உண்ணா நின்றேம், உண்ணா நின்றாய், உண்ணா நின்றீர் எனவும்; உண்கின்றான், உண்கின்றாள், உண்கின்றார், உண்கின்றது, உண்கின்றன, உண்கின்றேன், உண்கின்றேம், உண்கின்றாய், உண்கின்றீர் எனவும்; உண்கிறான், உண்கிறாள், உண்கிறார், உண்கிறது, உண்கிறன, உண்கிறேன்,

உண்கிறோம், உண்கிறாய், உண்கிறீர் எனவும் வரும். 'கிறு' என்பது முற்றுகரம்; அதனை, 'முற்றுமற்றொரோவழி' என்பதனாற் கெடுக்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** நிகழ்கால வினைக்கு இடைநிலை **உணர் — ற்று.**

**இ—ள்.:** ஆநின்று என்பதூஉம், கின்று என்பதூஉம், கிறு என்பதூஉம் ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தைத் தரும் வினைப் பகுபத இடைநிலைகளாம், **எ— று.**

தருவினையை அறைவினை என்றது இலக்கணை. மேலைச் சூத்திரத்தில் வருவதூஉம் அது.

**உ—ம்.:** நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் என வரும்.

ஏனைப் பால் இடங்களினும் ஒட்டிக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** நிகழ்காலம் காட்டும் வினைப் பகுபத இடைநிலை வருமாறு கூறியது.

**இ—ள்.:** **ஆநின்று கின்று கிறு** — ஆநின்று என்பதுவும் கின்று என்பதுவும் கிறு என்பதுவும், **மூவிடத்தின் ஐம்பால்**—ஐம்பான் மூன்றிடத்தும், **நிகழ்பொழுது அறை** — நிகழ்காலம் காட்டும், **வினை இடைநிலை**— வினைப்பகுதி இடைநிலையாம், **எ—று.**

**உ—ம்.:** உண்ணா நின்றான், உண்ணா நின்றாள், உண்ணா நின்றார், உண்ணா நின்றது, உண்ணா நின்றன, உண்ணா நின்றேன், உண்ணா நின்றேம், உண்ணா நின்றாய், உண்ணா நின்றீர் எனவும்; உண்கின்றான், உண்கின்றாள், உண்கின்றார், உண்கின்றது, உண்கின்றன, உண்கின்றேன், உண்கின்றேம், உண்கின்றாய், உண்கின்றீர் எனவும்; உண்கிறான், உண்கிறாள், உண்கிறார், உண்கிறது, உண்கிறன, உண்கிறேன், உண்கிறோம், உண்கிறாய், உண்கிறீர் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** நிகழ்கால வினைக்கு இடைநிலை உணர்த்துகின்றது.

**இ—ள்.:** **ஆநின்று**—ஆ நின்றென்பதும், **கின்று**—கின்றென்பதும், **கிறு**—கிறு வென்பதும், **ஐம்பான் மூவிடத்தின்** — ஐம்பான் மூவிடங்களிலும், **நிகழ்பொழுது** — நிகழ்காலத்தை, **அறை**—காட்டுகின்ற, **வினை**— வினைப்பகுபதங்களினுடைய, **இடைநிலை**—இடைநிலைகளாகும், **எ — று.**

---

**பாட வேறுபாடு.:—** 1.உண்கிறவை

**உ–ம்.:** நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் என வரும், மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

நிகழ்காலவினை யிடைநிலைகள் எவை?

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்

ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

(ஆதின்று கின்று கிறு மூவிடத்தின்

ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை)

**இ–ள்.: ஆநின்று கின்று கிறு –** ஆநின்றென்பதும் கின்றென்பதுங் கிறுவென்பதும், **ஐம்பான் மூவிடத்தின் –** ஐம்பான் மூவிடங்களிலும், **நிகழ்பொழுது அறைவினை இடைநிலை –** நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், **எ–று.**

**உ–ம்.:** நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் எனவரும். மற்றைப் பாலிடங்களினும் ஒட்டிக்கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** நிகழ்கால விடைநிலை யுணர்த்திற்று.

**இ–ள்.: ஆநின்றுகின்றுகிறு –** இம்மூன்று இடைச்சொற்களும், **மூவிடத்தினைம் பால் –** மூன்று இடத்திலும் ஐந்து பாலிலும், **நிகழ்பொழுதறைவினையிடைநிலை–**நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களுக்கு இடைநிலைகளாம், **எ–று.**

**உ–ம்.:** நடவா நின்றான், நடக்கின்றான், நடக்கிறான் என வரும். மற்றப் பாலிடங்களிலு மொட்டிக் கொள்க.

இனி **யுரையிற்கோடலால்,** உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் என ஆகிடந்து, ஆவிருந்து என்பனவும், வருதி, பெயர்தி, வருந்துதி, பொருதி, புலம்புதி எனத் தகரவொற்றும், உண்பல், வருவல், எனவும், நோக்குவேற்கு, உண்பேற்கு எனவும், முறையே வினையும் வினையாலணையும் பெயருமாகிய இவற்றில் பகர வகர வொற்றுக்களும் சிறுபான்மை நிகழ்காலங் காட்டுமெனவுங் கொள்க. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– ஆநின்று கின்று கிறு** – ஆநின்று முதலாகிய இம் மூன்றும், **ஐம்பால் மூவிடத்தின்** – ஐம்பால் மூவிடங்களிலும், **நிகழ்பொழுது அறை** – நிகழ்காலத்தைத் தெரிவிக்கின்ற, **வினை இடைநிலை** – வினைப்பகு பதங்களினுடைய இடைநிலைகளாம்.

**உ–ம் :** செய்யாநின்றான், செய்கின்றான், செய்கிறான்.

**குறிப்பு :** மற்றைப் பாலிடங்களிலும் இவ்வாறே அமைத்துக் காண்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ஆநின்று கின்று கிறு** – ஆநின்றென்பதுங் கின்றென்பதுங் கிறுவென்பதும், **ஐம்பால் (மூவிடத்தின்) நிகழ்பொழுது அறைவினை இடைநிலை** – ஐம்பான் மூவிடங்களிலும் நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், **எ – று.**

**உ–ம்.:** நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் என வரும். மற்றைப் பாலிடங்களினும் ஒட்டிக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஆநின்று கின்று கிறு** – ஆநின்றென்பதுங் கின்றென்பதுங்கிறு வென்பதும், – **ஐம்பால் மூவிடத்தின்** – ஐம்பான் மூவிடங்களிலும், – **நிகழ்பொழுது அறை வினை இடைநிலை** – நிகழ்காலத்தைக் காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம். எ–று.

**உ–ம்** படர்க்கை நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான். ஆண்பால்
நடவாநின்றாள், நடக்கின்றாள், நடக்கிறாள். பெண்பால்
நடவாநின்றார், நடக்கின்றார், நடக்கிறார். பலர்பால்
நடவாநின்றது, நடக்கின்றது, நடக்கிறது. ஒன்றன்பால்
நடவாநின்றன, நடக்கின்றன, பலவின்பால்

(கிறுஇடைநிலை அஃறிணைப் பலவின்பால் வினையில் வரமாட்டாது.) பிறவுமாராய்க.

| | | | |
|---|---|---|---|
| நடவாநின்றேன், | நடக்கின்றேன், | நடக்கிறேன். | தன்மையொருமை |
| நடவாநின்றேம், | நடக்கின்றேம், | நடக்கிறேம். | தன்மைப்பன்மை |
| நடவாநின்றாய், | நடக்கின்றாய், | நடக்கிறாய். | முன்னிலையொருமை |
| நடவாநின்றீர், | நடக்கின்றீர், | நடக்கிறீர். | முன்னிலைப்பன்மை |

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: ஆநின்று கின்று கிறு** – இம் மூன்றும், **மூ இடத்தின் ஐம்பால்**

– மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும், **நிகழ் பொழுது** – நிகழ்காலத்தை, **அறை** – காட்டுகின்ற, **வினை**–வினைப் பகுபதங்களின், **இடைநிலை**– இடைநிலைகளாம்; **எ–று.** அறைதல்–சொல்லுதல்; இங்கே, குறித்தல்; வருஞ் சூத்திரத்தில் இசைத்தலென்பதும் அது; இது–இலக்கணை.

**உ–ம்.:** நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ஆநின்று கின்றுகிறு – ஆநின்றென்பதுங் கின்றென்பதுங் கிறுவென்பதும், ஐப்பால் மூவிடத்தின் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை – ஐம்பான் மூவிடங்களிலும் நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். எ–று.

உ–ம். நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்

மற்றைப் பாலிடங்களினும் ஒட்டிக் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ஆநின்று கின்று கிறு – ஆநின்று கின்று கிறு என்பன, ஐம்பால் மூவிடத்தின் – ஐம்பால் மூவிடங்களிலும், நிகழ் பொழுது அறை – நிகழ்காலத்தைக் காட்டுகின்ற, வினை – வினைப்பகு பதங்களினுடைய, இடைநிலை – இடைநிலைகளாகும். **எ–று.**

**பொ–ரை.:** ஆநின்று, கின்று, கிறு ஆகிய இவை ஐந்துபாலிலும், மூன்றிடத்திலும், நிகழ்காலத்தைக் கறிக்கும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.

(அறைதல்–சொல்லுதல், இங்கே குறித்தல்; வருஞ் சூத்திரத்தில் இசைத்தல் என்பதும் அது; இது இலக்கணை.)

(உ–ம்) நடவாநின்றான் – ஆநின்று இடைநிலை.

நடக்கின்றான் – கின்று இடைநிலை.

நடக்கிறான் – கிறு இடைநிலை.

என வரும் மற்றவைகளும் இப்படியே.

## கா. நமசிவாய முதலியார்

**ஆநின்று** – ஆநின்று என்பதும், **கின்று** – கின்று என்பதும், **கிறு** – கிறு என்பதும், **ஐம்பால் மூவிடத்தின்** – ஐம்பால் மூவிடங்களிலும், **நிகழ்பொழுது** – நிகழ்காலத்தை, **அறை** – காட்டுகின்ற, **வினை** – வினைப் பகுபதங்களினுடைய, **இடைநிலை** – இடை நிலைகளாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| நடவாநின்றான் | – | ஆநின்று |
| நடக்கின்றான் | – | கின்று |
| நடக்கிறான் | – | கிறு |

**143. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு**
**திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.**

பவ்வ மூ இடத்து ஐம் பால் எதிர்பொழுது
இசை வினை இடைநிலை யாம் இவை சில இல.

pavva mū itaṭṭu aimpāl eṭirpoḷuṭu
isaivinai itainilai ām ivai sila ila.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Signs of the future tense

And the same of 'p' and 'v', when they denote the future tense in (all) the five Genders and three persons. Some Verbs, however, do not employ the above mentioned Medial Particles.

## ஒப்புமைப் பகுதி

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழுது
இசைவினை இடைநிலை யாம்இவை சிலவில

(இ.வி.:49)

எதிர்வரும் காலத்து இடைநிலைப் பவ்வ
ஐம்பால் மூவிடத்து ஆம்இவை சிலஇல

(தொ.வி.:110)

........ பவ்வல் எதிர்வும்
இடைநிலை பாலிடத் தேற்கும் வினையெலா சிலவே

(சுவாமி.:25:4)

## மயிலைநாதர்

**எ–ன்,** எதிர்கால மிசைக்கும் வினைப் பகுபதவிடைநிலையும் சில இடைநிலைக ளேலாதானவுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** பகர வகரங்களான இரண்டொற்றும், மூவிடத்து வரும் ஐம்பால்களிலும் எதிர்காலங் காட்டும் வினைப்பகுபத இடைநிலைகளாம். இம் முக்காலமுங் காட்டும் இடைநிலைகளைச் சில வினைமொழிகள் ஏலாவாம், எ – று.

**வ–று.:** உண்பான், உண்பாள், உண்பார், உண்பது, உண்பன, உண்பேன், உண்பேம், உண்பாய், உண்பீர் எனவும்; உறங்குவான், உறங்குவாள், உறங்குவார், உறங்குவது, உறங்குவன, உறங்குவேன், உறங்குவேம், உறங்குவாய், உறங்குவீர் எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** எதிர்கால வினைக்கு இடைநிலையும், முக்கால இடைநிலைகட்கும் ஆவதோர் புறனடையும் **உணர் – ற்று.**

**இ–ள்.:** பகர ஒற்றும், வகர ஒற்றும் ஐம்பால் மூவிடத்தும் எதிர்காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம். இம் முக்காலமும் முறையே காட்டும் தகர ஒற்று முதல் வகர ஒற்று ஈறாய இடைநிலைகள் சில முற்றுவினை எச்சவினைகட்கு இலவாம், **எ – று.**

**உ – ம்.:** நடப்பான், வருவான் என வரும்.

ஏனைப் பால் இடங்களினும் ஒட்டிக் கொள்க.

இனி, இவை சிலவில எனவே காலத்தை இறுதிநிலை தரும் என்பதூஉம், முதனிலை தரும் என்பதூஉம், பிற இடைநிலை தரும் என்பதூஉம் பெற்றாம். இவ் விகற்பமெல்லாம் வரும் சூத்திரத்தால் கூறுப.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** எதிர்காலம் காட்டும் வினைப் பகுபத இடைநிலை வருமாறு கூறியது.

**இ–ள்.:** பவ்வ–பகர வகரங்களான இரண்டொற்றும், **மூவிடத் தைம்பால்**–ஐம்பான் மூன்றிடத்தும், **எதிர் பொழுது இசை** – எதிர்காலங் காட்டும், **வினை இடைநிலையாம்** – வினைப் பகுபத இடைநிலையாம், **இவை** – இம் முக்காலமும் காட்டும் இடைநிலையில், **சிலவில**–சில வினையிடை இல்லையாம், **எ–று.**

**உ–ம்.:** உண்பான், உண்பாள், உண்பார், உண்பது, உண்பன, உண்பேன், உண்பேம், உண்பாய், உண்பீர் எனவும்; உறங்குவான், உறங்குவாள், உறங்குவார், உறங்குவது, உறங்குவன, உறங்குவேன், உறங்குவேம், உறங்குவாய், உறங்குவீர் எனவும் வரும். ‘சிலவில’ என்பதினானே நக்கான், புக்கான், சொன்னான், போனான், வைச்சான் என்பனவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** எதிர்கால வினைக்கு இடைநிலையும், முக்கால விடைநிலைகளுக்கும் ஆவதோர் புறனடையும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:** பவ்வ–பகர மெய்யும் வகர மெய்யும், **ஐம்பான் மூவிடத்து**– ஐம்பான் மூவிடங்களிலும், **எதிர்பொழுது**–எதிர்காலத்தை, **இசை**– காட்டுகின்ற, **வினை–**வினைப் பகுபதங்களினுடைய, **இடைநிலையாம்**– இடைநிலைகளாகும், **இவை** – இம்முக்கால விடைநிலைகளும், **சில–**சில முற்றெச்சங்களுக்கு, **இல–**இல்லை, **எ – று.**

**உ–ம்.:** நடப்பான் – வருவான் என வரும். மற்றவைகளு மிப்படியே. இவை ‘சிலவில’, என்றதனால் விகுதியாவது பகுதியாவது

வேறிடைநிலையாவது காலங் காட்டு மென்பது பெற்றாம். அவை பின்வருஞ் சூத்திரத்திற் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எதிர்கால இடைநிலையும், முக்கால விடைநிலைகளுக்கும் புறநடையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

(பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலை ஆம் இவை சில இல)

**இ–ள்.: பவ்வ** – பகரமெய்யும் வகரமெய்யும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும், **எதிர்பொழுது இசைவினை இடைநிலை ஆம்** – எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்; **இவை சில இல** – இம்முக்காலவிடை நிலைகளும் சில முற்று வினையெச்ச வினைகட்டு இலவாம், **எ–று.**

உ–ம்.: நடப்பான், வருவான், நடப்பேன், வருவேன், நடப்பாள், செய்வோம், செய்வார், வருவது, நடப்பது, நடப்பன, செய்வன எனவரும்.

பகரவகரங்கள் எப்பாலிடங்களில் எதிர்கால இடைநிலையாய் வரும்? "பவ்வமூவிடத் தைம்பா லெதிர்பொழு திசைவினை யிடைநிலையாம்"

மேற்கூறிய தகரவொற்றுமுதல் வகரவொற்றீறாகவுள்ள முக்கால இடைநிலைகள் எல்லாம் எல்லா வினைகட்கும் உண்டோ?

"இவை சிலஇல" என்றதனாற் சிலவினைகட்கில்லையாம்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, எதிர்கால இடைநிலையும் முக்கால இடைநிலைகளுக்குப் புறனடையும் உணர்த்திற்று.

**இ–ள்.: பவ்வ**–இவ்விரண்டு ஒற்றுக்களும், **மூவிடத்தைம்பால்** – மூன்றிடத்திலும் ஐந்து பாலிலும், **எதிர்பொழுதிசை வினையிடை நிலையாம்** – எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களுக்கு இடைநிலைகளாம், **இவை**–இந்த முக்கால இடைநிலைகளும், **சிலவில**–சிலமுற்று வினை எச்சவினைகளுக்கு இலவாம், **எ – று.**

**உ–ம்.:** நடப்பான், வருவான் – என வரும், மற்றப் பாலிடங்களிலும் ஒட்டிக் கொள்க. இவை சிலவில எனவே, பகுதியாயினும் விகுதியாயினும் பிற இடைநிலைகளாயினுங் காலங்காட்டு மென்பதாயிற்று; அவை யெல்லாம் வருஞ் சூத்திரத்தாற் கூறுவர்.

இனி யுரையிற்கோடலால் 'பாடுகம் வா வாழி தோழி', 'அந்தணாளனை நகுகம் யாமே' எனக் ககர ஒற்றும், ஒத்தி, உரைத்தி – என்பன ஒப்பாய் உரைப்பாய் என நிற்றலால் தகர வொற்றும், சிறுபான்மை எதிர்காலங் காட்டு மெனவுங் கொள்க. பவ்வ என்ற இடத்தில் வகர ஒற்றுச் சந்தியால் மிக்கு நின்றது. அங்கே ஒற்றென்பது குறைந்து நின்றது. காலங்காட்டும் வினைகளை அறைவினை இசைவினை யென்றது இலக்கணை. அறைதல், இசைத்தல் என்பன சொல்லுதல், பவ்வ இடைநிலை, இவைஇல–என இரு முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **பவ** – பகரமெய்யும் வகரமெய்யும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பால் மூவிடங்களிலும், **எதிர்பொழுது** – எதிர்காலத்தை, **இசை** – காட்டுகின்ற, **வினை இடைநிலை ஆம்** – வினைப்பகுபத இடைநிலைகளாம்; **இவை** – இம்மூன்று கால இடைநிலைகளும், **சில** – சில வினைப்பகுபதங்களுக்கு, **இல** – இல்லை.

**உ–ம் :** நடப்பான், வருவான்.

**குறிப்பு :** மற்றைப் பாலிடங்களிலும் இவ்வாறே அமைத்துக் காண்க. 'இவை சில இல' என்றதனால் விகுதியாவது, பகுதியாவது, வேறிடை நிலையாவது காலங்காட்டும் என்பது பெறப்படும்.

இவை பின்வருஞ் சூத்திரத்தால் விளங்கும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** ப வ – பகர மெய்யும் வகர மெய்யும், **ஐம்பான் மூவிடத்து எதிர்பொழுது இசைவினை இடைநிலை ஆம்** – ஐம்பான் மூவிடங்களிலும் எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், **இவை சில இல** – இம் முக்கால விடை நிலைகளும் சில முற்றுவினை யெச்சவினைகட்கு இலவாம், எ–று.

**உ–ம்.:** நடப்பான், வருவான் எனவரும்.

மற்றைப் பாலிடங்களிலும் ஒட்டிக் கொள்க.

இவை சிலவில வெனவே காலத்தை விகுதி யாயினும் பகுதி யாயினும் வேறிடைநிலை யாயினுங் காட்டு மென்பது பெற்றாம்; அவை பின்வருஞ் சூத்திரத்திற் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பவ்வ** – பகரமெய்யும் அகரமெய்யும், – **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும், – **எதிர்பொழுது இசைவினை இடைநிலை ஆம்**

– எதிர்காலத்தைக் காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், – **இவை சில இல** – இம்முக்கால விடைநிலைகளும் சில முற்றுவினை எச்சவினைகட்கு இலவாம். **எ–று.**

**உ–ம்.:** நடப்பான், வருவான்; நடப்பாள்; வருவாள்; நடப்பார், வருவார்;நடப்பேன், வருவேன்; நடப்பேம், வருவேம்; நடப்பாய், வருவாய்; நடப்பீர், வருவீர் எனவரும்.

ஒன்றன்பால் பலவின்பால் வினைகளுக்குப் பகரவகரவொற்றிடை நிலைகள் வருவனவல்ல.

இப்படியே ஒன்பது இடைநிலைகளையும் ஏற்றபெற்றி கொள்க. இவை சிலவிலவெனவே இவ்விடைநிலை வரப்பெறாத சில முற்றுவினைகளிலும் எச்சவினைகளிலும் காலத்தை விகுதியாயினும், விகாரப்பட்ட பகுதியாயினும், வேறிடைநிலையாயினுங் காட்டுமென்பது பெற்றாம். அவை பின்வருஞ் சூத்திரத்தினும் உரையினுங் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:** பவ – பகர மெய்யும் வகர மெய்யும், **மூ இடத்து ஐம்பால்**– மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும், **எதிர் பொழுது** – எதிர்காலத்தை, **இசை** – காட்டுகின்ற, **வினை**–வினைப் பகுபதங்களின், **இடை நிலை ஆம்**– இடை நிலைகளாம்; **இவை** – இந்த மூன்றுகால இடைநிலைகளும், **சில** – சில வினைப் பகுபதங்கட்கு, **இல** – இல்லை (வாரா); **எ–று.**

**உ–ம்.:** நடப்பான், வருவான்.

'இவைசிலவில' என்றதனால், சில வினைப் பகுபதங்களில் விகுதியாவது, பகுதி விகாரப்பட்டாவது, வேறு இடைநிலையாவது காலங்காட்டு மென்பது பெறப்பட்டது; அவற்றைப் பின்வருஞ் சூத்திரத்திலும் அதன் உரையிலும் காண்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ப வ – பகரமெய்யும் வகர மெய்யும், ஐம்பான் மூவிடத்து எதிர்பொழுது இசை – ஐம்பான் மூவிடங்களிலும் எதிர்காலத்தைக் காட்டும், வினை இடைநிலை ஆம் – வினைப்பகுபதங்களினுடைய இடை நிலைகளாகும். இவை சில இல – இம் முக்காலவிடைநிலைகளும் சில முற்றுவினை யெச்ச வினைகட்கு இலவாம். எ–று.

உ–ம்.: நடப்பான், வருவான், மற்றைப் பாலிடங்களினும் ஒட்டிக்கொள்க.

'இவை சிலவில' எனவே காலத்தை விகுதியாயினும் பகுதியாயினும் வேறு இடைநிலையாயினுங் காட்டுமென்பது பெற்றாம்; அவை பின்வருஞ் சூத்திரத்திற் காண்க. (17)

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ப வ – பகர மெய்யும் வகரமெய்யும், ஐம்பால் மூவிடத்து–ஐம்பால் மூவிடங்களிலும், எதிர்பொழுது இசை–எதிர்காலத்தைக் காட்டுகின்ற, வினைஇடைநிலை ஆம்–வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்; இவை–இம் முக்கால இடைநிலைகளும், சில–சில (மற்று எச்சங்களுக்கு), இல–இல்லை. **எ–று.**

**பொ–ரை.:** ப, வ ஆகிய ஒற்றுக்கள் ஐந்துபாலிலும், மூன்று இடத்திலும் எதிர்காலத்தைக் குறிக்கின்ற வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகள் ஆம்; இம் முக்கால இடைநிலைகளும் சில (மற்று எச்சங்களுக்கு) இல்லை.

(ப வ ஆகிய ஒற்றுகள் – ப், வ் என்ற மெய்கள்.)

(உ–ம்.) நடப்பான் – ப் இடைநிலை.

வருவான் – வ் இடைநிலை.

இவை 'சிலவில' என்றதனால், விகுதியாவது, பகுதி விகாரப் பட்டாவது, வேறிடைநிலையாவது காலங் காட்டுமென்பது பெற்றாம். அவற்றைப் பின்வருஞ் சூத்திரத்திலும் அதனுரையிலும் காண்க.

## கா. நமசிவாய முதலியார்

பவ – பகரமெய்யும் வகரமெய்யும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பால் மூவிடங்களிலும், **எதிர்பொழுது** – எதிர்காலத்தை, **இசை** – காட்டுகின்ற, **வினை** – வினைப் பகுபதங்களினுடைய, **இடை நிலையாம்** – இடைநிலைகளாகும்; **இவை** – இம்முக்கால விடைநிலைகளும், **சில** – சில முற்று எச்சங்களுக்கு, **இல** – இல்லை.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| நடப்பான் | – | ப் |
| வருவான் | – | வ் |

**'இவை சிலவில'** என்றதனால், விகுதியாவது பகுதியாவது வேறு இடைநிலையாவது காலங்காட்டும் என்பது பெற்றாம். அவை பின்வருஞ் சூத்திரத்திற் காண்க.

**(17)**

144. றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தம்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் வெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தம்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் வெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

ṛavotu ukara ummai nikaḷpu allavum
ṭavvotu iṛappum eṭirvum tavvotu
kaḷivum kavōtu eṭirvum in̲ ēval
viyaṅkōl̲ immār eṭirvum pānṭam
selavotu varavum seyyum nikaḷpu eṭirvum
eṭirmaṛai mummaiyum ēṛkum īṅkē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Time denoting terminations

The terminations ru and rum denote the past and the future tense: tu and tum the same; tu and tum, the past, ku and kum, the future; min, all Imperative and Optative endings, 'I', and mar,—the future: pa, the past and the future; um (of finite Verbs), the present and the future; and the Negative ending 'i', all the three tenses. These are among the Verbs referred to above.

## ஒப்புமைப் பகுதி

குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு
உம்மூர் கடதற இறுதியும் பம்மார்
மின்என் ஈறும் வியங்கோள் பகுதியும்
ஏவலு மறையும் என்பன வெதிர்வும்
செய்யுநிகழ்பு எதிர்வு மெய்பெறத் தரூஉம்

இடைநிலை ஏலாது என்மனார் புலவர்

(இ.வி.:50)

## மயிலை நாதர்

**எ–ன்,** மேல் வினைக்கட் காலங் காட்டுவன இடைநிலைக ளென்றும் சில வினைமொழிகள் அவ் விடைநிலைகளை ஏலா வென்றும் போதந்தார், அவ் வேலாதன இவை யென்பதூஉம் அவற்றாற் பெறுங் காலமும் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** றகரத்தொடு கூடிவந்த உகரவீறும் உம்மீறுமான வினைச்சொற்கள் கழிந்தகாலமும் வருங்காலமும், தகரத்தொடு கூடி நின்ற அவ் விரண்டீற்று வினையும் இறந்தகாலமும் எதிர்காலமும், டகரத்தொடு கூடி நின்ற அவ் விரண்டீற்று வினையும் இறந்தகாலமும் ககரத்தொடு கூடிய அவ் விரண்டீற்றுவினையும் எதிர்காலமும், மின்னீறும் ஏவற் பொருண்மையின் வரும் அனைத்தீறுகளும் வியங்கோட்பொருளவும், இகரவீறும் மாரீறுமான வினைகள் எதிர்காலமும், பகரவீற்று வினை இறந்தகாலமும் எதிர்காலமும், செய்யு மென்னும் வாய்ப்பாட்டு வினைகள் நிகழ்காலமும் எதிர்காலமும், எதிர்மறைவினை முக்காலமும் காட்டுவனவாம், **எ – று.**

**வ – று.:** சென்று சென்றும், சேறு சேறும், வந்து வந்தும், வருது வருதும், உண்டு உண்டும், உண்கு உண்கும், உண்மின், உண், உண்க, வாழிய, வாழியர், சேறி, உண்மார், உண்ப, உண்ணும், உண்ணா என முறையே காண்க.

'ஈங்கு' என்ற மிகையான், ஈண்டோதிய காலத்திற் பிறழ்ந்து வருவன உளவாயின், அவையும், இடைநிலை யேலாப் பெயரெச்ச வினையெச்சங்களும் அறிந்து முடியுமாற்றாற், பகுதி விகுதி பண்ணி முடிக்க.

இனி, இவ்வாற்றாற் பகுபதமுடிப்புழி, மலையனென்னும் பகுபத முடியு மாறாவது:–மலையை யுடையனென்னும் [1]பொருண்மை தோன்ற, "தத்தம். . . பகுதி யாகும்" என்பதனானே மலை யென்னும் பொருட்பகுதியை முதலில் வைத்து அதன்மீதே, "அன் ஆன் அள் ஆள்" என்பதனானே அன்னென்னும் விகுதியை நிறுவி, "இ ஈ ஐ வழி யவ்வும்" என்பதனானே இடையே யகர வுடம்படுமெய்யை வருவித்து, "உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே" என்பதனானே, யகரத்தின் மேலே விகுதி அகரத்தை யேற்றி முடிக்க. மலைய தென்பதற்குத் துவ் வென்னும் விகுதியை நிறுவி, "அன்னா னின்ன லற்றிற்று" என்பதனானே அகரச் சாரியையை இடையே தந்து, முன்போல் உடம்படுமெய்யை வருவித்து [2]உயிரையேற்றி முடிக்க. ஏனைப் பாலிடங்களுக்கு இதன்மேலே விகுதி வேறுபாடல்லது விசேடமில்லை யென்க. மலையான், மலையள், மலையாள், மலையர், மலையார், மலையேன், மலையேம், மலையாய், மலையீர் என ஏனை யிடங்களிலும் ஒட்டிக் கண்டு கொள்க.

---

**பாட வேறுபாடு.:** 1. பொருள்

2. உயிரேற்றி

நிலத்தனென்னும் பகுபத முடியுமாறாவது:—இவ்விடத்த னென்னும் பொருண்மை தோன்ற, 'தத்தம். . . பகுதியாகும்' என்பதனானே நிலமென்னும் இடப்பகுதியை முதலில் வைத்து, அதன்மீதே, 'அன் ஆன் அள் ஆள்' என்பதனானே அன்னென்னும் விகுதியை நிறுவி, "இலக்கியங் கண்டதற் கிலக்கணம்" என்பதனானே இடையே தகர இடைநிலையை வருவித்து, "மவ்வீறொற்றழிந்து" என்பதனானே மகர வீற்றைக் ஊகெடுத்து, "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன், கசதப மிகும்" என்பதனானே தகரத்தை மிகுத்து, "உடன்மேலுயிர் வந்து" என்பதனானே உயிரை யேற்றி நிலத்தனென முடிக்க. நிலத்த தென்பதற்குத் துவ் விகுதியை நிறுவி, அகரச் சாரியையை வருவித்துத் தகரத்தை மிகுத்து முன்போல முடிக்க. ஒழிந்தன முடிபு ஒக்கும்; விகுதி வேறென்க: நிலத்தள், நிலத்தர், நிலத்த, நிலத்தேன், நிலத்தேம், நிலத்தாய், நிலத்தீரென எல்லாப் பாலிடங்களிலும் ஒட்டுக.

பரணியானென்னும் பகுபத முடியுமாறாவது:—பரணி நாளிற் பிறந்தானென்னும் பொருண்மை தோன்ற முன்போலப் பகுதி விகுதி தந்து, 'இஈ ஐவழி யவ்வும்' என்பதனான் யகர வுடம்படுமெய்யை வருவித்து உயிரேற்றி முடிக்க. பரணியது என்பதற்கு, முன்போலத் துவ் வென்னும் விகுதியும் அகரச் சாரியையும் உடம்படுமெய்யுங் கொடுத்து உயிரேற்றி முடிக்க. பரணியாள், பரணியார் என ஏனைப் பாலிடங்களிலும் ஒட்டிக் கொள்க.

மார்பா னென்னும் பகுபதம் முடியுமாறாவது:—இவ்வுறுப்பை யுடையானென்னும் பொருண்மை தோன்ற, "தத்தம். . . பகுதி யாகும்" என்பதனானே மார்பென்னும் சினைப்பகுதியை முதலில் வைத்து, "அன் ஆன்" என்பதனால் ஆன் விகுதியை நிறுவி, "உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்" என்பதனானே குற்றுகரத்தைக் கெடுத்து, "உடன்மே லுயிர் வந்தொன்றுவ தியல்பே" என்பதனானே உயிரேற்றி மார்பானென முடிக்க. மார்பது என்பதற்குத் துவ் வென்னும் விகுதியையும் அகரச் சாரியையும் தந்து உகரங் கெடுத்து உயிரேற்றி முடிக்க. மார்பாள், மார்பாரென ஏனைப் பாலிடங்களினும் ஒட்டிக் கொள்க.

கரியனென்னும் பகுபதம் முடியுமாறாவது:—இந் நிறத்தை யுடையானென்னும் பொருண்மை தோன்ற, "செம்மை சிறுமை" என்னும் சூத்திரத்தாற் கருமை யென்னும் பண்புப்பகுதியை முதலில் வைத்து, "அன்னான்" என்பதனானே அன்னென்னும் விகுதியை நிறுவி, "ஈறுபோத லிடையுகர மிய்யாதல்" என்பதனாற் பகுதியது ஈற்றுயிர் மெய்யைக் கெடுத்து உகரத்தை இகரமாக்கி உடம்படுமெய்யை வருவித்து உடன்மேலுயிரேற்றி முடிக்க. கரியது என்பதற்கு, துவ் விகுதியும் அகரச் சாரியையும் யகர வுடம்படு மெய்யும் கொடுத்து முடிக்க. கரியள், கரியர், கரியன, கரியேன், கரியேம், கரியாய், கரியீர் என ஏனைப் பாலிடங்களிலும் ஒட்டிக் கொள்க.

ஊணன் என்னும் பகுபதம் முடியுமாறாவது:—இத் தொழிலை யுடையானென்னும் பொருண்மை தோன்ற, "தத்தம். . . பகுதியாகும்" என்பதனானே, ஊணென்னும் தொழிற்பகுதியை முன்வைத்து, அதன்மீதே "அன்னான்" என்பதனானே அன்னென்னும் விகுதியை நிறுவி, "உடன்மேல்.

. . இயல்பே'' என்பதனால், உடன்மேலுயிரேற்றி முடிக்க. ஊணது என்பதற்கு, துவ் விகுதியையும் அகரச் சாரியையும் தந்து முடிக்க. ஊணள், ஊணர், ஊண என ஏனைப் பாலிடங்களிலும் ஒட்டிக் கொள்க.

நடந்தானென்னும் பொழுதுகொள் வினைப்பகுபதம் முடியுமாறாவது:– ''நடவா மடிசீ விடுகூ'' என்பதனானே நடவென்னும் பகுதியை முன்வைத்து, அதன்மீதே, ''அன்னானனள்ளாள்'' என்பதனானே ஆனென்னும் விகுதியை நிறுவி, ''தடறவொற்றின்னே'' என்பதனானே இடையே தகர இடைநிலையை வருவித்து, ''இயல்பினும் விதியினும்'' என்பதனானே தகரத்தை மிகுத்து, ''வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்'' என்பதனானே தகரத்தை நகரமாக்கி உடன்மேலுயிரேற்றி நடந்தானென முடிக்க. நடந்தது என்பதற்குத் துவ் விகுதியையும் அகரச் சாரியையுங் கொடுத்துத் தகர வொற்றை வருவித்துத் தகரத்தை மிகுத்துத் தகரவொற்றை நகரமாக மெலித்து முடிக்க. நடந்தாள், நடந்தார் என ஏனைப் பாலிடங்களிலும் ஒட்டிக் கொள்க.

நடத்தினானென்பதற்கு, ''விளம்பிய பகுதிவே றாதலும் விதியே'' என்பதனானே, நடத்து என்னும் பகுதியையாக்கி ஆன் விகுதியை நிறுவி

[1]பெண்பாற் பெயர்ப் பகுபதம் முடிப்புழி, இன்ன குலத்தாளென்னும் பொருண்மை தோன்ற முடிக்க. அரசியென்னும் பகுபத முடியுமாறாவது:– ''தத்தம்,. . . பகுதியாகும்'' என்பதனானே அரசு என்னும் பகுதியைத் தந்து, ''அன்னான்'' என்பதனானே இகர விகுதியை நிறுவி, ''உயிர்வரினுக் குறள்'' என்பதனானே உகரத்தைக் கெடுத்துச் சகர வொற்றின் மேல் ''உடன்மேலுயிர்வந்து'' என்பதனானே இகர வுயிரை யேற்றி முடிக்க.

பார்ப்பனி யென்னும் பகுபதம் முடியுமாறாவது:– 'தத்தம் பகாப்பதம்' என்பதனானே பார்ப்பானென்னும் பகுதியை முதல் வைத்து, அதனை [2]விளம்பியபகுதி என்பதனானே

கன் கெடுத்து நிறுவி இகர விகுதியைக் கொணர்ந்து, ச் என்னும் இடைநிலையை வருவித்து அதனை மிகுவித்து உயிரேற்றி முடிக்க.

உழத்தி யென்னும் பகுபதம் முடியுமாறாவது:–உழவன் என்னும் பகுதியை, ''விளம்பிய பகுதி'' என்பதனானே வன் கெடுத்து நிறுவி இகர– [1]இன் என்னும் இடைநிலை கொடுத்து உகரங் கெடுத்து உயிரேற்றி முடிக்க. நடத்துவித்தா னென்பதற்கு, ''செய்யென் வினைவழி விப்பி தனிவரின்'' என்பதனானே நடத்துவி என்னும் பகுதியை ஆக்கி, ஆன் விகுதியை நிறுவித் தகர விடைநிலையை வருவித்து, ''இயல்பினும் விதியினும்'' என்பதனானே தகரத்தை இரட்டித்து உயிரேற்றி முடிக்க. வந்தானென்பதற்கு ''நடவாமடி'' என்பதனான், வா என் பகுதியை முதலில் வைத்து அதனை, ''விளம்பிய . .

---

**பாட வேறுபாடு.:** 1. வருவித்துமுன்போல

2. முற்போற

. விதியே" என்பதனான் வம் என்றாக்கி ஆன் விகுதியை நிறுவி, "தடறவொற்றின்னே" என்பதனானே தகர விடைநிலையை [1]வருவித்து, "மவ்வீ றொற்றழிந்துயிரீ றொப்பவும்" என்பதனானே மகரத்தை நகரமாக்கி வந்தானென முடிக்க. வருவித்தானென்பதற்கு, "விளம்பியபகுதி" என்பதனான், வாவென்பதை வரு என்றாக்கி, "செய்யென்வினைவழி" என்பதனானே வருவி என்பது பகுதியாக்கி, ஆன் விகுதியும் தகரவிடை நிலையும் தந்து, "இயல்பினும் விதியினும் . . . மிகும்" என்பதனானே தகரத்தை இரட்டித்து உயிரேற்றி முடிக்க.

இவ் வினைப்பதமே வினைப்பெயராம். அவை எடுத்தல் படுத்த லோசைகளால் அறிந்து கொள்க. பிறவும் இங்ஙன முடிக்க.

இனி, அரசுத்தொழிலையுடையான் அரசன், வாணிக முடையான் வாணிகன், [2]உழவை யுடையான் உழவன், [3]வேளாண்மை செய்வான் வேளாளன், கணக்கால் முயன்றுண்பான் கணக்கன், குந்தத் தொழிலாலுண்பான் [4]குந்தவன்,[5]பார்ப்பா னென அன்னீறாக்கி "அன்னான்" என்பதனானே இகர விகுதியைக் கொணர்ந்து உயிரேற்றி முடிக்க. வாணிச்சியென்னும் பகுபதம் முடியுமாறாவது:– வாணிகன் என்னும் பகுதியை விளம்பிய பகுதி என்பதனானே வலையால்முயன்றுண்பான் வலையன், உவச்சத் தொழிலால் முயன்றுண்பான் உவச்சன், தச்சத்தொழிலால் முயன்றுண்பான் தச்சன், வண்ணாரத் தொழிலால் முயன்றுண்பான் வண்ணான், கணவாளத் தொழிலால் முயன்றுண்பான் கணவாளனென்று இவ்வாறே ஆண்பாற் பெயர்ப் பகுபதங்களெல்லாம் முடிக்க.

விகுதி கொணர்ந்து, "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்" என்பதனானே தகர விடைநிலையை வருவித்து அதனை மிகுத்து உயிரேற்றி முடிக்க.தச்சிச்சி யென்னும் பகுபதம் முடியுமாறாவது:–தச்சன் என்னும் பகுதியை அன் கெடுத்து நிறுவி இகர விகுதியைக் கொணர்ந்து, "இலக்கியங்கண்டதற்கு" என்பதனான் இச் சென்னு மிடைநிலையை வருவித்து உயிரேற்றி முடிக்க.

இவ்வாறே எல்லாப் பகுபதங்களையும் பகுதி முதலான கருவிகள் தந்து ஏற்றாவறு முடிக்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ–னின்,** மேலைச் சூத்திரத்து 'இவை சிலவில' என்றார், அவை இவை என்பது **உணர் – ற்று.**

---

பாட **வேறுபாடு.:** **1.**வருவித்தானென்பதனை 2.உழவைமுயல்வான் 3. வெள்ளாண்மை 4. குந்தன் 5.ஆன்கெடுத்து அன்நிறுவிப் பார்ப்பனென ஆக்கி

**இ – ள்.:** றகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறும் இறந்த காலமும் எதிர்காலமும், தகரத்தோடு கூடிய அவ்விரண்டு ஈறும் அவ் விருகாலமும், டகரத்தோடு கூடிய அவ்விரண்டு ஈறும் இறந்த காலமும், ககரத்தோடு கூடிய அவ்விரண்டு ஈறும் எதிர்காலமும், மின் ஈறும் ஏனை யேவலின் வரும் அனைத்தீறும் வியங்கோள் ஈறும் இகர ஈறும் மார் ஈறும் எதிர்காலமும், பகரவீறு இறந்தகாலமும் எதிர்காலமும், செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றீறு நிகழ்காலமும் எதிர்காலமும், முற்று விகுதி எச்ச விகுதிகளோடு புணர்தற்குரிய எதிர்மறை ஆகார ஈறு மூன்று காலமும் ஏற்கும்; மேலைச் சூத்திரத்து 'இவை சிலவில' என்றவற்றுள், **எ– று.**

அந்தம் என்பதனை எல்லாவற்றினும் ஒட்டிக் கொள்க. றவ்வொடு உகர வும்மீறும் தவ்வொடு உகரவும் மீறும் பாந்தமும் இறந்த காலமும் எதிர் காலமும் ஏற்கும் எனத் தொகுத்துக் கூறாது, விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியான் வகுத்துக் கூறினார் புலப்படவேண்டி என்க.

இகர ஈறு தனித்து இயலாமையின் யாதானுமோர் மெய்யினை ஊர்ந்து வரும் என்பதூஉம், அது காலங்காட்டாது என்பதூஉம், அது காலம் காட்டியதேல் இவ்வீறு காலம் காட்டாது என்பதூஉம், செய்யும் என்னும் வாய்பாட்டெச்சமும் இடைநிலை யின்றி ஈறு காலங் காட்டுமேனும் அஃது எதிர்காலம் காட்டுமென மேல் விதத்தலின், இங்ஙனம் செய்யும் என எடுத்தோதியது முற்று என்பதூஉம் பெற்றாம். மூன்று காலமும் அவை பற்றிப் புடைபெயரும் வினையு மில்லனவற்றை எதிர்மறை வினை மூன்றுகாலமும் ஏற்கும் என்று கூறுதல் இலக்கணை யாதலின் பிற்கூறினார்.

**உ–ம்.:** சென்று, சென்றும், சேறு, சேறும், வந்து, வந்தும், வருது, வருதும், உண்டு, உண்டும், உண்கு, உண்கும், உண்மின், உண்ணாய், உண், உண்க, வாழிய, வாழியர், சேறி, உண்மார், உண்ப, உண்ணும், உண்ணான் என வரும்.

மும்மையும் என்னும் முற்றும்மையை 'முற்றும்மை ஒரோவழி யெச்சமும் ஆகும்' என்பதனான் எச்ச வும்மை யாக்கி, நடந்திலன் நடவா நின்றிலன் என எதிர்மறை ஒருகாலமேற்று வருதலும் கொள்க.

சென்றி செல்லாநின்றி என வருமாயின், இடைநிலை காலம் காட்டிய இகர வீற்றவாம்.

'இவை சிலவில' என்றவற்றுள், இறுதிநிலை காலங் காட்டுவன வற்றை விதந்தோதி, முதனிலையும் பிற இடைநிலையும் காலங் காட்டுவனவற்றை ஓதாமையின் அவை சிறுபான்மைய, வந்தவழிக் காண்க என்றாராயிற்று. அவை வருமாறு:–

தொட்டான், விட்டான், உற்றான், பெற்றான், புக்கான், நக்கான் என்பனவற்றுள் இடைநிலை யின்றி முதனிலை விகாரமாய் இறந்தகாலம் காட்டின. என்மனார் என்றிசினோர் என்மர் என்பவற்றுள் எடுத்தோதாப் பிற இடைநிலைகள் நின்று, முன்னைய இரண்டும் இறந்தகாலமும் பின்னைய ஒன்றும் எதிர்காலமும் காட்டின.

ஈங்கே என்ற மிகையானே,

"வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்
பொருதி புலம்புதி நீயும்"

என இகரவீறு நிகழ்காலம் காட்டலும், ஏனைய கூறிய காலத்தில் பிறழ்ந்து வருவனவுளவேல் அவையும், பெயரெச்ச வினையெச்சங்களின் இடைநிலையின்றி இறுதிநிலை காலங்காட்டுவனவும் கொள்க.

இனிப் பகுதி முதலிய உறுப்புக்களால் பகுபத முடியுமாறு:- அவன் என்னும் சுட்டுப் பொருட் பெயர்ப் பகுபதம், அ என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் பெற்று, 'எகர வினா முச்சுட்டின் முன்னர்' என்னும் சூத்திரத்தால் வகரம் தோன்றி, 'உடன்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே' என்பதனான் வகரத்தின்மேல் விகுதி யுயிர் ஏறி முடிந்தது.

தமன் என்னும் கிளைப்பொருட் பெயர்ப் பகுபதம், தாம் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் பெற்றுத் 'தான் தாம் நாம் முதல் குறுகும்' என்பதனால் பகுதி முதல் குறுகி உடன்மேல் உயிரேறி முடிந்தது.

குறிஞ்சியான் என்னும் இடப்பெயர்ப் பகுபதம் குறிஞ்சி என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் பெற்று யகர உடம்படுமெய் தோன்றி உயிரேறி முடிந்தது.

பிரபவன் என்னும் காலப்பெயர்ப் பகுபதம் பிரபவ என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று, 'ஒரு மொழி மூவழிக் குறைதலும் அனைத்தே' என்பதனால் பகுதி கடைக் குறையாய் வகர வொற்றின் மேல் விகுதி அகர உயிரோடு முடிந்தது.

திணிதோளன் என்னும் சினைப்பெயர்ப் பகுபதம், திணி தோள் என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று உடன்மேல் உயிரேறி முடிந்தது.

பெரியன் என்னும் குணப்பெயர்ப் பகுபதம், பெருமை என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று, பகுதியீறு போய், இடை உகரம் இகரமாய், யகர வுடம்படுமெய் தோன்றி உயிரேறி முடிந்தது.

ஓதுவான் என்னும் தொழிற்பெயர்ப் பகுபதம், ஓது என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் வகர இடைநிலையும் பெற்று உயிரேறி முடிந்தது.

நன்மை என்னும் பகுபதம், நல் என்னும் பகுதியும் மை என்னும் விகுதியும் பெற்று, 'மெலி மேவின் னணவும்' என்பதனால் லகரம் னகரமாய்த் திரிந்து முடிந்தது.

வருதல் என்னும் பகுபதம், வா என்னும் பகுதியும் தல் என்னும் விகுதியும் பெற்று, 'வலித்தல் மெலித்தல்' என்பதனால் பகுதி முதல் குறுகி. ரகர வுகரம் விரிந்து முடிந்தது.

நடந்தனன் என்னும் இறந்தகால வினைப் பகுபதம், நட என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் இறந்தகாலம் தரும் தகர இடைநிலையும்

அன் சாரியையும் பெற்று, பகுபத உறுப்புக்களுள் பகுதி யொழிந்தன இடைச்சொல் ஆதலின்

**'இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்'**

என்பதனால் பகுதியீற்றில் நின்ற உயிர் முன் வந்த தகர இடைநிலை மிகாது அதற்கு இனமிகுந்து, இடைநிலைத் தகர வொற்றின் மேல்சாரியை அகர வுயிரேறி சாரியை யீற்று னகர ஒற்றின் மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது.

நடவா நின்றான் என்னும் நிகழ்கால வினைப்பகுபதம், நட என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் ஆநின்று என்னும் இடைநிலையும் பெற்று, உடம்படுமெய் தோன்றி, இடைநிலை யீற்றுக் குற்றுகரம் கெட்டு, உயிரேறி முடிந்தது.

நடப்பான் என்னும் எதிர்கால வினைப்பகுபதம், நட என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் பகர இடைநிலையும் பெற்று

**'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்'**

என்பதனால் பகரம் மிகுந்து, உடன்மேல் உயிரேறி முடிந்தது.

நடந்தது என்னும் அஃறிணை ஒருமைப் படர்க்கை இறந்த கால வினைப் பகுபதம், நட என்னும் பகுதியும் து என்னும் விகுதியும் தகர இடைநிலையும் துவ் விகுதிக்கும் தகர இடைநிலைக்கும் இடையே அகரச் சாரியையும் பெற்று முடிந்தது.

***★நடவாய் என்னும் முன்னிலை யேவல் ஒருமை எதிர்கால வினை முற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும் ஆய் என்னும் விகுதியும் பெற்று, வகர உடம்படுமெய் தோன்றி, விகுதி ஆகார உயிரேறி முடிந்தது.***

***நடப்பியாய் என்னும் ஏவல் பிற வினைப் பகுபதம், நட என்னும் பகுதியும் பி என்னும் விகுதியும் பெற்றுப் பகரம் மிகுந்து, இரண்டும் ஓர் பகுதியாய் நின்று, மேல் வரும் ஆய் விகுதியோடு புணர்ந்து, யகர உடம்படுமெய் தோன்றி, விகுதி ஆகார உயிரேறி முடிந்தது.***

***நடப்பிப்பாய் என்னும் அவ் வினைப் பகுபதம், நடப்பி என்னும் பகுதியும் பி என்னும் விகுதியும் பெற்றுப் பகரம் மிகுந்து அனைத்தும் ஓர் பகுதியாய் நின்று, மேல் வரும் ஆய் விகுதியோடு புணர்ந்து, யகர உடம்படுமெய் தோன்றி, விகுதி ஆகார உயிரேறி முடிந்தது. ★***

விளம்பிய பகுதி வேறானவையும், இவ்வாறே முடிந்து அனைத்தும் ஓர் பகுதியாய் நின்று, மேல் வரும் அன் ஆன் முதலிய விகுதியோடு புணர்ந்தமை காண்க.

நடவான் என்னும் எதிர்மறை வினைப் பகுபதம், நட என்னும் பகுதி எதிர்மறை ஆகார விகுதியோடு புணர்ந்து இரண்டும் ஓர் பகுதியாய் நின்று மேல் வரும் ஆன் விகுதியோடு புணர்ந்து

**'ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே'**

என்பதனால் விகுதியினது ஆகாரம் குறைந்து முடிந்தது.

நடவா என்னும் அஃறிணைப் பன்மைப் பகுபதம்,

**'ஆவே எதிர்மறைக்கண்ணதாகும்'**

என்பவாகலின் பால்காட்டும் ஆகார விகுதி யன்றி எதிர்மறை ஆகாரம் வேண்டாது முடிந்தது.

நடந்திலன் நடவாநின்றிலன் என்பவற்றுள் காலஇடைநிலையும் அவற்றை மறுத்த இல் என்னும் எதிர்மறை இடைநிலையும் தந்து அவற்றை ஓர் பகுதியாக்கி முடிக்க.

இவ்வாறே பெயரெச்ச வினையெச்சங்களும் பிறவும் பகுதி விகுதி முதலிய உறுப்புக்களோடு ஏற்றவாறமைந்து கிடந்தமை காண்க.

★ *எழுதப்படுவது என்னும் பொருட்கண், எழுது என்னும் முதனிலை முன்னர்ச் செயப்படுபொருண்மை உணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டு, கெட்டவழித் தகரம் இரட்டித்து, எழுத்து என முடிந்தது.*

*ஊண், தீன், கோள் என்றாற் போல்வனவும் செயப்படு பொருண்மை உணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டு, முதல் நீண்டு நின்றன.*

*திரை நுரை அலை தளிர் பூ காய் கனி என்றாற் போல்வன வினைமுதற் பொருண்மை உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டு நின்றன.*

*"கெடுவாக வையாதுலகம்" என்புழிக் கெடு என்பது புடைபெயர்ச்சியை உணர்த்தும் தல் விகுதி கெட்டு நின்றது. கேடு என்பது அவ்வாறாய் முதல் நீண்டு நின்றதெனக் கொள்க. ஏனையவும் இவ்வாறே ஏற்றபெற்றி அறிந்து முடித்துக் கொள்க.*

*திரை, நுரை, அலை, தளிர் என்றாற் போல்வன விகுதி குன்றி முதனிலை மாத்திரையாய் நிற்றல் பற்றி இவற்றை முதனிலை வினைப்பெயர் என வழங்குப.*

*ஐகார விகுதி செயப்படு பொருண்மை உணர்த்துதல் நடவை சேக்கை உடுக்கை தொடை விடை என்றாற் போல்வன வற்றுள்ளும், இகர விகுதி வினைமுதற் பொருண்மை உணர்த்துதல் சேர்ந்தாரைக் கொல்லி நூற்றுவரைக் கொல்லி நாளோதி நூலோதி என்றாற் போல்வன வற்றுள்ளும் காண்க. இவ் விகுதிகள் சிறுபான்மை பிறபொருள் உணர்த்தியும் வரும். வடநூலாரும் வினைப்பெயர் விகுதிகள் கூறிய நியமம் தப்பிப் பிற பொருளுணர்த்தியும் வருமெனக் கொள்வார்.*

*உடுக்கை என்பது, உடுக்கப்படும் பொருளை உணர்த்துங்கால் ஐகார விகுதித்து என்றும், உடுத்தல் எனப் புடை பெயர்ச்சியை உணர்த்துங்கால் கைவிகுதித்து என்றும் தெரிந்துணர்ந்து கொள்க.* ★

'பகுதி விகுதி' என்னும் சூத்திரம் முதல் இச்சூத்திரம் ஈறாகப் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமையின் இது **முடித்துக்காட்டல்** என்னும் உத்தி.

முன்னைத் தமிழ்நூல்களுள் இல்லனவற்றை, இவ்வாசிரியர் தாமே, பகாப்பதம் பகுபதம் என முன்னர் நாட்டி, இச் சூத்திரங்காறும். அவற்றிற்கு இலக்கணம் தந்து நிறுத்தமையின் **தாஅனாட்டித் தனாது நிறுப்பு** என்னும் மதம்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** இடைநிலைகளன்றி விகுதி காலம் காட்டுமெனக் கூறியது.

**இ—ள்.: றவ்வொடு உகரவும்மை** – றகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறுமான று, றும் என்னும் விகுதிகள், **நிகழ்பல்லவும் –** நிகழ்காலம் அல்லாத இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும் விகுதியாம், **தவ்வொடு –** தகரத்தொடு கூடிய உகரவீறும் உம்மீறுமான து, தும் என்னும் விகுதிகள், **இறப்பும் எதிர்வும் –** இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும் விகுதியாம், **டவ்வொடு –** டகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறுமான டு, டும் என்னும் விகுதிகள், **கழிவும் –** இறந்த காலம் காட்டும் விகுதியாம், **கவ்வொடு –** ககரத்தொடு கூடிய உகர வீறும் உம்மீறுமான கு, கும் என்னும் விகுதிகள், **எதிர்வும் –** எதிர்காலம் காட்டும் விகுதியாம், **மின்னேவல் –** மின்னீற்று வினைச்சொல்லும் ஏவற் பொருண்மையின் வரும் அனைத்தீறுகளும், **வியங்கோள் இம்மார் –** வியங்கோள் விகுதியும் இகர விகுதியும் மாரீற்று விகுதியும், **எதிர்வும் –** இவை யெல்லாம் எதிர்காலம் காட்டுவனவாம், **பாந்தம் செலவொடு வரவும் –** பகரவீற்று வினைச்சொல் இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும், **செய்யும் நிகழ்வெதிர்வும் –** செய்யு மென்னும் வாய்பாட்டு வினை நிகழ் காலமும் எதிர்காலமும் காட்டும், **எதிர்மறை மும்மையும் ஏற்கும் –** எதிர்மறை வினை முக்காலமும் ஏற்று நிற்பனவாம், **ஈங்கே –** இவ்விடத்து விகுதிகளை ஆராயுமிடத்து, **எ—று.**

**உ—ம்.:** சென்று, சென்றும், சேறு, சேறும், வந்து, வந்தும்; வருது, வருதும்; உண்டு, உண்டும்; உண்கு, உண்கும், உண்மின், உண், உண்க, வாழிய, வாழியர், சேறி, உண்மார்; உண்ப; உண்ணும், உண்ணான் என முறையே காண்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முன் சூத்திரத்தில் "இவை சிலவில" என்றார் அவை யிவை யென்பது உணர்த்துகின்றது.

**இ—ள்.: றவ்வொடு** – றகர மெய்யோடு கூடிய, **உகரஉம்மை–**உகர விகுதியும், உம் விகுதியும், **நிகழ்பல்லவும் –** இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், **தவ்வொடு–**தகர மெய்யோடு கூடிய, **உகரவும்மை –** உகர விகுதியும் உம் விகுதியும், **இறப்புமெதிர்வும் –** இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், **டவ்வொடு –** டகர மெய்யோடு கூடிய, (உகர உம்மை) உகர

விகுதியும் உம் விகுதியும், **கழிவும்** – இறந்த காலத்தையும், **கவ்வோடு** – ககர மெய்யோடு கூடிய, (உகரவும்மை) உகர விகுதியும் உம் விகுதியும், **எதிர்வும்**– எதிர்காலத்தையும், **மின்**–மின் விகுதியும், **ஏவல்**–முன்னிலை யேவல் விகுதிகளும், **வியங்கோள்**–வியங்கோள் விகுதிகளும், **இ**–இகர விகுதியும், **மார்**–மார் விகுதியும், **எதிர்வும்**–எதிர்காலத்தையும், **பாந்தம்**–மகர விகுதி, **செலவொடுவரவும்** – இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், **செய்யும்** – செய்யு மென்னும் வாய்பாட்டு முற்று விகுதி, **நிகழ்பெதிர்வும்**– நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், **எதிர்மறை**–எதிர்மறை ஆகார விகுதி, **மும்மையும்** – மூன்று காலத்தையும், **ஏற்கும்** – ஏற்று வரும், **ஈங்கு** – "இவை சிலவில" என்றவைகளுள், **எ – று**.

**உ–ம்.:** சென்று, சென்றும் – **இறப்பு**, சேறு–சேறும்,–**எதிர்வு**, வந்து, வந்தும்,–**இறப்பு**, வருது, வருதும்,–**எதிர்வு**, உண்டு–உண்டும்,–**இறப்பு**, உண்கு–உண்கும்,–**எதிர்வு**, உண்மின், உண்ணு, உண்க, சேறி, உண்மார்,– **எதிர்வு**, உண்ப;–**இறப்பு–எதிர்வு**, உண்ணும்;–**நிகழ்வு, எதிர்வு**, உண்ணான், –**இறப்பு, நிகழ்வு–எதிர்வு**, என வரும். (காலங் காட்டும் விகுதிகளை மட்டுஞ் சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடை நிலையையுஞ் சொல்லாமையால் அவை சிறுபான்மை வரும், வந்தவிடங்களிற் கண்டு கொள்க வென்றாராயிற்று.) அவை வருமாறு: தொட்டான்–உற்றான்–புக்கான்–என டு–கு–று–என்கிற மூன்றெழுத்துகளுள் ஒன்று ஈறாகிய சில குறிலிணைப் பகுதிகள் விகாரப்பட்டு இறந்தகாலம் காட்டும். என்மனார், என்றிசினோர், போயது என மன், இசின், யகரமெய் இம் மூன்றிடைநிலைகளும் இறந்தகாலங் காட்டும். உண்ணாகிடந்தான் உண்ணாவிருந்தான் என ஆகிடந்து – ஆவிருந்து, இரண்டிடை நிலைகளும் நிகழ்காலமும், என்மர் என மகர விடைநிலை இறந்தகாலமும் காட்டும், "ஈங்கே" யென்ற மிகையால் வருதி என இகர விகுதி நிகழ்காலங் காட்டுதலையும், எச்சவிகுதிகள் காலங் காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

இனிப் பகுதி விகுதி முதலிய வுறுப்புகளாற் பகுபத முடிக்குமாறு:

**பொன்னன்** என்கிற உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கைப் பொருட்பெயர்ப் பகுபதத்தை முடிக்குமிடத்து "பொருளிடங்காலம்" என்னுஞ் சூத்திர விதியால், பொன் என்னும் பகுதியை முதலில் வைத்து அதன்பின் "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திர விதியால் உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் விகுதியை வருவித்து, பொன் – அன் என வைத்து, "தனிக்குறின் முன்னொற்றுயிர்" என்னுஞ் சூத்திர விதியால் அந்த னகர மெய்யை யிரட்டித்து, பொன்னன் அன் என வைத்து "உடன்மேலுயிர்" என்னுஞ் சூத்திர விதியால் அகர வுயிரை மிகுந்த னகர மெய்யின் மேலேற்றி, பொன்னன் என முடிக்க.

**நடந்தனன்** என்கிற உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கை யிறந்தகால வியற்றும் வினைமுதற் றெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து "நடவா" என்னுஞ் சூத்திர விதியால் நட வென்னும் பகுதியை முதலில் வைத்து, "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திர விதியால்

உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் விகுதியை அதன்பின் வருவித்து, நட அன் என வைத்து, ''தடறவொற்றின்னே'', ''யென்னுஞ்'' சூத்திர விதியால் இறந்தகாலங் காட்டுந் தகர விடைநிலையை அவ் விரண்டிற்கும், நடுவிலே வருவித்து, ந ட த் அன் என வைத்து, 'அன் ஆன் இன் அல்' என்னுஞ் சூத்திர விதியால் இடைநிலைக்கும் விகுதிக்கு மிடையிலே அன் சாரியை வருவித்து, நடத் அன் அன்எனவைத்து, 'உடன்மே லுயிர் வந்து' என்னுஞ் சூத்திர விதியால் இடைநிலைத் தகர மெய்யின் மேலே சாரியை அகர வுயிரையேற்றி, நட தன் அன் என வைத்து இன்னும் அச் சூத்திர விதியால் சாரியை னகர மெய்யின்மேல் விகுதி அகர வுயிரை யேற்றி, நடதனன் என வைத்து, ''இயல்பினும்'' என்னுஞ் சூத்திர விதியால் இடைநிலைத் தகரத்தை மிகுவித்து, நடத்தனன் என வைத்து, ''வலித்தன்மெலித்தல்'' என்னுஞ் சூத்திர விதியால் மிகுந்த தகர வல்லொற்றை மெல்லொற்றாக்கி, நடந்தனன் என முடிக்க.

நட உண் என வருகிற முன்னிலை யேவல் வினைகளிலே ஆய் விகுதியும் நடவான் நடவேன் நடவாய் என்கிற எதிர்மறை வினைகளிலே ஆவென்னு மெதிர்மறை விகுதியும், கொல்களிறு – ஓடாக்குதிரை என்பவைகளிலே கொன்ற–கொல்கின்ற–கொல்லும், ஓடாத என வருகிற பெயரெச்சவினை விகுதிகளும், 'வரிப்புனைபந்து' இதில் 'வரிந்து' என வருகிற வினையெச்ச விகுதியும், ''கொள்வாருங்கள் வருநேர்'' இதில் நேர்வர் என வருகிற முற்றுவினை விகுதியும், முடி–அடி–என்பவைகளிலே முடித்தல் அடித்தல் என வருகிற தொழிற்பெயர் விகுதியும், காய் தளிர் இவைகளில் வினைமுதற் பொருளுணர்த்தும் இகர விகுதியும் ஊண் எழுத்து இவைகளிலே செயப்படு பொருளுணர்த்தும் ஐ விகுதியும் புணர்ந்து குன்றின. அவ் விகுதிகள் புணர்ந்து குன்றினாலும், புணர்ந்து நின்றாற் போலவே பொருளுணர்த்தும்.

## ஆ- முத்துத்தம்பிப்பிள்ளை

சிலவில என்றதனால் விலக்கப்பட்ட வினைசொற்கள் இவையென்பதும், இடைநிலை மாத்திரமன்று இறுதிநிலையுங் காலங்கெட்டு மென்பதும் உணர்த்தும் சூத்திரம் யாது?

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுக்

கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்

வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்

செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்

எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

(றவ்வொடு உகர உம்மை நிகழ்பு அல்லவும்,

தவ்வொடு இறப்பும் எதிர்வும், டவ்வொடு

கழிவும், கவ்வோடு எதிர்வும், மின்ஏவல்

வியங்கோள் இமார் எதிர்வும், ப அந்தம்

செலவொடு வரவும், செய்யும் நிகழ்வு எதிர்வும்

எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே)

இ—ள்.: றவ்வொடு உகர உம்மை நிகழ்வு அல்லவும் – றகரமெய்யோடு கூடி உகரவிகுதியும் உம்விகுதியும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், டவ்வொடு (உகர உம்மை) கழிவும் – டகர மெய்யோடு கூடி உகரவிகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும், கவ்வோடு (உகர உம்மை) எதிர்வும் – ககர மெய்யோடு கூடி உகரவிகுதியும் உம்விகுதியும் எதிர்காலத்தையும், மின் ஏவல் வியங்கோள் இ மார் எதிர்வும் – மின் விகுதியும் ஏவல் வினைகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார்விகுதியும் எதிர்காலத்தையும், ப அந்தம் செலவொடு வரவும் – பகர விகுதி இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், செய்யும் நிகழ்பு எதிர்வும் – செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை மும்மையும் – எதிர்மறை ஆகாரவிகுதி மூன்று காலத்தையும், ஏற்கும் ஈங்கே – ஏற்றுவரும் மேலைச் சூத்திரத்து இவை சிலவில வெண்றவைகளுள், **எ—று.**

றுவ்வீற்று றும்மீற்று வினைச்சொற்கள் சில எக்காலங்காட்டும்?

"றவ்வொ டுகர வும்மை நிகழ்வு அல்லவும்" என்றமையால் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

உ—ம்.: சென்று சென்றும் என்பன முறையே சென்றேன் சென்றோம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

சேறு சேறும் என்பன முறையே செல்வேன் செல்வேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின.

துவ்வீறும் தும்மீறும் எக்காலங்காட்டும்?

(உகாரவும்மை) "தவ்வொடிறப்பு மெதிர்வும்"

உ—ம்.: 1. வந்து வந்தும் என்பன முறையே வந்தேன் வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

2.வருது வருதும் என்பன முறையே வருவேன் வருவேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின.

டுவ்வீறும் டும்மீறும் எக்காலங் காட்டும்?

("உகரவும்மை") "டவ்வொடு கழிவும்"

உ—ம் (ரு) உண்டு உண்டும் என்பன முறையே உண்டேன் உண்டேம்

எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின.

குவ்வுறும் கும்மீறும் எக்காலங் காட்டும் ("உகரவும்மை") "கவ்வோடெதிர்வும்"

உ–ம். உண்கு உண்கும் என்பன முறையே உண்பேன் உண்போம் எனப் பொருள்பட்டு எதிர்காலங்காட்டின.

மின்னீறு ஏவல் வியங்கோளீறு இகரவீறு மாரீறு என்னும் இவை எக்காலங்காட்டும்?

"மின்னேவல் வியங்கோளிம்மாரெதிர்வும்"

உ–ம். (எ) உண்மின் உண்ணீர் உண்ணும் உண்ணாய் உண் என மின் ஈர் உம் ஆய் என்னும் ஏவல் விகுதிகளும், உண்க, வாழிய, வாழியர், எனக்க

இய இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும் சேறி என இகரவிகுதியும்

உண்மார் என மார்விகுதியும் எதிர்காலங்காட்டின.

சேறி என்பது செல்வாய் எனவும் உண்மார் என்பது உண்பா எனவுய பொருள்படும்.

பகரவீறு எக்காலங்காட்டும்?

"பாந்தஞ்செலவொடு வரவும்"

உ–ம். (அ) உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமுங் காட்டின.

செய்யும் என்னும் வாய்பாட்டுமுற்று எக்காலங்காட்டும்?

"செய்யும் நிகழ்பு எதிர்வும்"

உ–ம். (க). உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு முற்று

நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டிற்று.

எதிர்மறை ஆகாரவீறு எக்காலங்காட்டும்?

"எதிர்மறை மும்மையுமேற்கும்"

(1) பண்டு உண்ணா, இன்று உண்ணா, நாளை உண்ணா, என எதிர்மறை முக்காலமுங் காட்டிற்று.

(11) இகரவிகுதி எழுத்துப்பேறாய் வருந் தகரமெய்யின் மேல் ஏறிவரும்;

அவ்விகுதி சென்றி செல்லாநின்றி என இறந்த காலவிடைநிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடி வரும் போது அவை காலங்காட்டலாற்றான் காலங்காட்டாது நிற்கும்.

இவை சிலவில வென்றவைகளுள்ளே, காலங்காட்டும் விகுதிகளை மாத்திரஞ்சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடைநிலையையுஞ் சொல்லாமையால் அவை சிறுபான்மையின வந்தவிடங்களிற் கண்டு கொள்க என்றாராயிற்று. அவை வருமாறு.

கு டு று என்னும் மூன்றுயிர்மெய்யீற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலமுங்காட்டும்.

**உ—ம்.:** புகு – புக்கான், நகு – நக்கான் எனவும், தொடு – தொட்டான், விடு – விட்டான் எனவும் உறு – உற்றான், பெறு – பெற்றான் எனவும் வரும்.

யகரவிடைநிலை இறந்தகாலமும், ஆகியடந்து ஆவிருந்து என்னும் இரண்டிடை நிலைகளும் நிகழ்காலமுங் காட்டும்.

உ—ம். போயது எனவும், உண்ணாகிந்தான், உண்ணாவிருந்தான் எனவும் வரும்.

இசின் என்பது இறந்தகால விடைநிலையாயும் மகரமெய்யும் மன் என்பதும் எதிர்கால விடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும்.

உ—ம். என்றிசினோர் எனவும் என்மர், என்மனார் எனவும் வரும். ஈங்கே என்ற மிகையால் வருதி என இகரவிகுதி நிகழ்காலங் காட்டுதலையும் பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதிகாலம் காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மேற்சிலவில என்றவை இவையென உணர்த்திற்று.

**இ—ள்.: றவ்வொடுகரவும்மை** – றகர வொற்றொடு கூடிய உகர ஈறும் உம்மீறுமாகிய று றும் என்பன, **நிகழ்பல்லவும்** – இறந்தகாலமும் எதிர்காலமும், **தவ்வொடு** – தகர ஒற்றொடு கூடிய அந்த இரண்டு ஈறாகிய து தும் என்பன, **இறப்புமெதிர்வும்** –அந்த இரண்டு காலமும், **டவ்வொடு** – டகர ஒற்றொடு கூடிய அந்த இரண்டு ஈறாகிய டு டும் என்பன, **கழிவும்**–இறந்தகாலமும், **கவ்வொடு** – ககர ஒற்றொடு கூடிய அந்த இரண்டு ஈறாகிய கு கும் என்பன, **எதிர்வும்**–எதிர்காலமும், **மின்னேவல் வியங்கோள்** – மின்விகுதியும் ஏவலிலே வருகின்ற எல்லா ஈறுகளும் வியங்கோள் விகுதிகளும், **இம்மாரெதிர்வும்** – இகர விகுதியும் மார் விகுதியுமாகிய இவையெல்லாம் எதிர்காலமும், **பாந்தம்**–பகரவிகுதி, **செலவொடு வரவும்** – இறந்தகாலமும் எதிர்காலமும், **செய்யுநிகழ்பெதிர்வும்** – செய்யு மென்னும் முற்றுவினை நிகழ்காலமும் எதிர்காலமும் **எதிர்மறைமும்மையும்** – (முற்றுவிகுதி எச்சவிகுதிகளுடன் புணர்ந்து வருகின்ற) எதிர்மறை ஆகார ஈறு மூன்று காலமும், **ஏற்கும்** – கொள்ளும் **ஈங்கு**– (சிவவிலவென்ற) இவற்றுள், **எ—று.**

அந்தமென்பதை எல்லாவற்றொடுங் கூட்டிக் கொள்க. செய்யு மென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் இடைநிலை யில்லாமல் ஈறு காலங்காட்டு மாயினும் அது எதிர்காலங் காட்டுமென மேல் எடுத்துக் கூறுதலால் இங்கே செய்யு மென்றது, முற்றுவினை யெனக் கொள்க. மூன்றுகாலமும் அவைபற்றிப் புடைபெயரும் வினையுமில்லனவாகிய எதிர்மறைவினை முக்காலமும் ஏற்கு மென்பது இலக்கணை யாதலால் அதனைப் பின்பு கூறினார். (புடைபெயர்ச்சி– என்பது–அசைவு) இலக்கணை யென்பது மேலே சொல்லப்பட்டது.

உ–ம்.: சென்று, சென்றும் – இறந்தகாலம்; சேறு, சேறும் – எதிர்காலம்; வந்து, வந்தும் – இறந்தகாலம்; வருது, வருதும் – எதிர்காலம் உண்டு, உண்டும்–இறந்தகாலம், உண்கு, உண்கும், எதிர்காலம் உண்மின், உண், உண்க, சேறி, உண்மார் எதிர்காலம் உண்ணும் நிகழ்காலம் எதிர்காலம் உண்ணான், உண்ணாத – உண்ணாது – இது முற்றுவிகுதி எச்ச விகுதிகளொடு புணர்ந்த எதிர்மறை ஆகாரவீறு இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் எனக் காண்க. சிலவில வென்றவற்றுள் இறுதிநிலை காலங் காட்டியவற்றை யெடுத்துச் சொல்லி முதனிலையும் பிற இடைநிலையுங் காலங்காட்டுவனவற்றை யெடுத்துச் சொல்லாததினாலே அவை சிறுபான்மைய வந்த இடத்திற் காண்க வென்றாராயிற்று. அவை வருமாறு: தொட்டான், உற்றான், புக்கான் என்பவற்றுள் தொடு, உறு, புகு என்னும் முதனிலைகள் விகாரப்பட்டு இடைநிலை யின்றி இறந்தகாலங் காட்டின. என்மனார், என்றிசினோர், என்மர் என்பவற்றுள் மன், இசின், ம் எனப் பிற இடைநிலைகள் நின்று, முன்னைய இரண்டும் இறந்தகாலமும் பின்னையது எதிர்காலமுங் காட்டின, பிறவுமன்ன. இனி யீங்கே யென்ற மிகையால், 'யாமிவணின் றும்வருதும்' எனத் தும் ஈற்றுத் தன்மைப்பன்மை வினைமுற்றுச் சிறுபான்மை நிகழ்காலங் காட்டுதலும், தோற்றுது, வருது, போகுது எனத் துவ்வீற்று ஒன்றன் படர்க்கை வினை நிகழ்காலங் காட்டுதலும், இன்னுங் காலம் பிறழந்து வருவன உளவாயின் அவையும், பெயரெச்ச வினையெச்சங்களுள் இடைநிலை யின்றி இறுதிநிலை காலங்காட்டுவனவும், குறிப்புமுற்றுப் பகுபதங்கள் இந்த இடைநிலை இறுதிநிலை வகையாற் காலங்காட்டாமற் குறிப்பினாலே ஏற்றபடி முக்காலங் காட்டுதலும் உய்த்துணர்ந்து கொள்க. இன்னும் வினை யெச்சங்களுள் பரீஇ, முனைஇ, கொளீஇ, உடீஇ, நசைஇ என முதனிலை விகாரப்பட்டு அளபெடுத்து இறந்தகாலங் காட்டுதலுங் கொள்க. இனிப் பகுதி முதலிய உறுப்புக்களாற் பகுபத முடியுமாறு அவன் என்னுஞ் சுட்டுப் பெயர்ப்பகுபதம், அ என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும் பெற்று, 'எகர வினா முச்சுட்டென்னுஞ்' சூத்திரத்தால் வகர ஒற்றுத் தோன்றி, உடன்மேலுயிர் வந்தென்னுஞ் சூத்திரத்தால் வகர ஒற்றின் மேல் விகுதி யுயிரேறி முடிந்தது. **தமன்** என்னுங் கிளைப்பெயர்ப் பகுபதம் தாம் என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்று, '**தான்றாநா முதல் குறுகு**'மென்னுஞ் சூத்திரத்தால், பகுதி முதல் குறுகி, உடன்மே லுயிரேறி முடிந்தது. **குறிஞ்சியான்** என்னும் இடப்பெயர்ப் பகுபதம், குறிஞ்சி என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் பெற்று, '**இ ஈயை வழி**' யென்னுஞ் சூத்திரத்தால், யகர வுடன்படுமெய் தோன்றி, உடன்மேல் உயிரேறி முடிந்தது. ஓணத்தான் என்னும் காலப்பெயர்ப் பகுபதம், ஓணம் என்னும் பகுதியும் ஆன் என்னும் விகுதியும் பெற்று, '**பதமுன்விகுதியும் பதமுமுருபும் புணர்வழி**' யென்னுஞ் சூத்திரத்தால், அத்துச் சாரியை தோன்றி, '**மவ் வீறொற்றழிந்**' தென்னுஞ் சூத்திரத்தால் வகர ஒற்றித் தோன்றி, '**உடன்மேலுயிர்வ**' தென்னுஞ் சூத்திரத்தால் பகுதி யிறுதி மகர ஒற்றுக்கெட, அத்தினர மகரமுனையில்லை என்னுஞ்சூத்திரத்தால், அத்துச் சாரியையின் அகரங்கெட, 'உயிர்வரினுக்குறண் மெய்விட்டோடு' மென்னுஞ் சூத்திரத்தால், சாரியை உகரங் கெட, நின்ற உடல்மேல் விகுதி யுயிரேறி

முடிந்தது. **நடந்தனன்** என்னும் இறந்தகால வினைப்பகுபதம், நடவென்னும் பகுதிக்கும், அன் விகுதிக்கும், இடையிலே இறந்தகாலங் காட்டும் தகர ஒற்று இடைநிலை பெற்று, அதன்மேல் சாரியை அகரமும் அந்தச் சாரியை யிறுதி னகர ஒற்றின் மேல் விகுதியுயிருமேறி, 'இயல்பினும் விதியினு' மென்னுஞ் சூத்திரத்தால், தகர ஒற்றுச் சந்தியில் மிகுந்து நடத்தனன் என்றாகி, 'வலித்தன் மெலித்த'லென்னுஞ் சூத்திரத்தால், தகர வல்லொற்று மெல்லொற்றாகி, நடந்தனன் எனப் பகுதி விகுதி யிடைநிலை சாரியை சந்தி விகார மென்னும் பகுபத உறுப்புக்கள் ஆறுங் கூடி முடிந்தது. **நடவான்** என்னும் எதிர்மறை வினைப்பகுபதம், நட என்னும் பகுதி எதிர்மறை ஆகார விகுதியொடு புணர்ந்து, இரண்டும் ஓர் பகுதியாய் நின்று ஆன் விகுதியொடு புணர்ந்து, 'ஒருமொழி மூவழிக் குறைதலு' மென்னுஞ் சூத்திரத்தால், விகுதி ஆகாரங் குறைந்து முடிந்தது. 'நடவா' என்னும் அஃறிணைப்பன்மை வினைமுற்றுப் பகுபதம், 'ஆவேயெதிர்மறைக் கண்ணதாகு' மென்றதினால், பால் காட்டும் ஆகார விகுதி யன்றி எதிர்மறை ஆகாரம் வேண்டாது, வகர உடன்படுமெய் தோன்றி முடிந்தது. இவ்வாறே பெயரெச்ச வினையெச்சங்களும் பிறவும் பகுதி விகுதி முதலிய உறுப்புக்களோடு கூடி ஏற்றவாறு முடிந்து கிடந்தமை யுணர்க. பகுதி விகுதி யென்னுஞ் சூத்திர முதல் இச் சூத்திரம் வரைக்கும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறே முடித்துக்காட்டினதினாலே, இது **முடித்துக் காட்டலென்னும்** உத்தி, முன்னைத் தமிழ்நூல்களில் இல்லனவற்றை இந்த ஆசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னே நாட்டி இந்தச் சூத்திரம் வரைக்கும் அவற்றிற்கு இலக்கணங் கூறி நிறுத்தினதினாலே, இது, **தானாட்டித்தனாது நிறுப்பு** என்னும் மதம். இதனுள், 'றவ்வொடு கரவும்மை' யென்றாற் போல எழுவாய் பலவாகி விரிந்து கிடத்தலால் அவற்றை யெல்லாங் கூட்டி ஏற்கும் எனப் பயனிலை கொடுத்து முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :- ஈங்கு** - (மேற்சூத்திரத்தில்) 'இவை சிலவில' என்றவற்றுள், **றவ்வொடு உகர உம்மை** - றகர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (று, றும்), **நிகழ்பு அல்லவும்** - நிகழ்காலம் அல்லாத காலங்களையும் (இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும்), **தவ்வொடு** (உகர உம்மை) - தகரமெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (து, தும்), **இறப்பும் எதிர்வும்** - இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும், **டவ்வொடு** (உகர உம்மை) - டகரமெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (டு, டும்), **கழிவும்** - இறந்தகாலத்தையும், **கவ்வொடு** (உகர உம்மை) - ககர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (கு, கும்), **எதிர்வும்** - எதிர்காலத்தையும், **மின்** - மின் விகுதியும், **ஏவல்** - மற்றை ஏவல் விகுதிகளும், **வியங்கோள்** - வியங்கோள் விகுதிகளும், **இமார்** - இ விகுதியும் மார்விகுதியும், **எதிர்வும்** - எதிர்காலத்தையும், **ப அந்தம்** - பகர விகுதி, **செலவொடு வரவும்** - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், **செய்யும்** - செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றின் விகுதி, **நிகழ்வு எதிர்வும்** - நிகழ்காலத்தையும்

எதிர்காலத்தையும், **எதிர்மறை** – எதிர்மறையின் ஆகார விகுதி, **மும்மையும்** – மூன்று காலத்தையும், **ஏற்கும்** – ஏற்று வரும்.

**குறிப்பு :** 'உகர உம்மை' என்பது தவ்வொடு, டவ்வொடு, கவ்வொடு என்பவற்றோடுங் கூட்டப்பட்டது. 'அந்தம்' என்பதை எல்லாவற்றோடும் கூட்டிக் கொள்க. (அந்தம் – ஈறு : அதாவது விகுதி.)

றவ்வொடுகரவும்மீறும், தவ்வொடுகரவும் மீறும், பாந்தமும் இறந்த காலமும் எதிர்காலமும் ஏற்குமெனத் தொகுத்துக் கூறாது, விளங்குதற் பொருட்டு **விகற்பத்தின் முடித்தல்** என்னும் உத்தியால் வகுத்துக் கூறினார். இகரவீறு தனித்து நடவாமையால், யாதானும் ஒருமெய்யினை ஊர்ந்துவருமென்பதும், அம்மெய் காலங்காட்டாதென்பதும், அதுகாலங் காட்டின் இகரவிகுதி காட்டாதென்பதும், 'செய்யும்' என்னும் வாய்பாட்டெச்சம் இடைநிலையின்றி ஈறுகாலங் காட்டுமாயினும், அது எதிர்காலங் காட்டுமென மேல் வினையியலுட்கூறலால் இங்கு 'செய்யும்' என எடுத்தோதியது முற்றென்பதும் பெறப்பட்டன.

| | | **ஒருமை** | | **பன்மை** | |
|---|---|---|---|---|---|
| **உ–ம்** | சென்**று** | (சென்றேன்) | சென்**றும்** | (சென்றோம்) | – இறப்பு |
| | சே**று** | (செல்வேன்) | சே**றும்** | (செல்வோம்) | – எதிர்வு |
| | வந்**து** | (வந்தேன்) | வந்**தும்** | (வந்தோம்) | – இறப்பு |
| | வரு**து** | (வருவேன்) | வரு**தும்** | (வருவோம்) | – எதிர்வு |
| | உண்**டு** | (உண்டேன்) | உண்**டும்** | (உண்டோம்) | – இறப்பு |
| | உண்**கு** | (உண்பேன்) | உண்**கும்** | (உண்போம்) | – எதிர்வு |
| | உண்ணாய் | **உண்மின்,** உண்ணீர், உண்ணும் | | | – எதிர்வு |
| | | வாழ்க, வாழிய, வாழியர் | | | – எதிர்வு |
| | சே**றி** | (செல்வாய்) | உண்**மார்** | (உண்பார்) | – எதிர்வு |
| | | | உண்ப | (உண்டார்) | – இறப்பு |
| | | | என்ப | (என்றார்) | |
| | | | உண்ப | (உண்பார்) | – எதிர்வு |
| | | | என்ப | (என்பார்) | |
| | | | உண்ணும் | | – நிகழ்பு. எதிர்வு |
| | | | உண்ணா | | – மும்மையும் |

**'சென்றி', 'செல்லாநின்றி'** என வருமாயின் இடைநிலை காலங் காட்டிய இகரவீற்றனவாம்.

**'இவை சிலவில'** என்றவற்றுள் காலங்காட்டும் விகுதிகளை மாத்திரங்கூறிக் காலங்காட்டும் பகுதிகளையும் பிற இடைநிலைகளையும் கூறாமையால், அவை சிறுபான்மையன; வந்தவிடங்களிற் கண்டுகொள்க என்றார் என்க; அவை வருமாறு : –

**கு, டு, று** என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலங்காட்டும்.

**உ—ம் :–** புகு – புக்கான், தொடு – தொட்டான்; உறு – உற்றான்.

யகர இடைநிலை இறந்தகாலமும், **ஆகிடந்து, ஆவிருந்து** என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமுங்காட்டும். உ—ம்: – போயது; உண்ணாகிடந்தான்; உண்ணாவிருந்தான். **இசின்** என்பது இறந்தகால இடைநிலையாயும்; **மகர**மெய்யும், **மன்** என்பதும் எதிர்கால இடைநிலை களாகவும் செய்யுளில் வரும். உ—ம் : – என்றிசினோர்; என்மர்; என்மனார்.

'**ஈங்கே**' என்றமிகையால் வருதி (வருகிறாய்) என இகரவிகுதி நிகழ்காலங்காட்டுதலையும், இன்னும் சில வினைமுற்றுகளிலும் பெயரெச்ச வினையெச்சங்களிலும் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

"பகுதிவிகுதி" என்னுஞ் சூத்திரம் முதல் இச்சூத்திரம் வரையும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமையால், **முடித்துக்காட்டல்** என்னும் உத்தி. முன்னைத் தமிழ்நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே 'பகாப்பதம்', 'பகுபதம்' என முன்னே நாட்டி இச்சூத்திரம் வரையும் அவற்றிற்கு இலக்கணங்கூறி நிறுத்தினதனால், இது **தாஅனாட்டித்தனாது நிறுப்பு** என்னும் மதம்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: றவ்வொடு உகர உம்மை நிகழ்பு அல்லவும் –** றகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், **தவ்வொடு (உகர உம்மை) இறப்பும் எதிர்வும்** – தகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், **டவ்வொடு (உகர உம்மை) கழிவும் –** டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும், **கவ்வொடு (உகர உம்மை) எதிர்வும்** – ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் எதிர்காலத்தையும், **மின் ஏவல் வியங்கோள் இ மார் எதிர்வும்** – மின் விகுதியும் மற்றை முன்னிலை யேவல் விகுதிகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார் விகுதியும் எதிர்காலத்தையும், **ப அந்தம் செலவொடு வரவும்** – பகர விகுதி இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், **செய்யும் நிகழ்பு எதிர்வும்–** செய்யு மென்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், **எதிர்மறை மும்மையும்** – எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலத்தையும், **ஏற்கும்**–ஏற்றுவரும், **ஈங்கு** – மேலைச் சூத்திரத்து இவை சிலவில வென்றவைகளுள், **எ – று.**

**உ —ம்.:** சென்று சென்றும் என்பன முறையே சென்றேன் சென்றேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின. சேறு சேறும் என்பன முறையே செல்வேன் செல்வேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின. வந்து வந்தும் என்பன முறையே வந்தேன் வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்த காலங் காட்டின. வருது வருதும் என்பன முறையே வருவேன் வருவேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின. உண்டு உண்டும் என்பன முறையே உண்டேன் உண்டேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின. உண்கு

உண்கும் என்பன முறையே உண்பேன் உண்பேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின. உண்மின், உண்ணீர் உண்ணும் உண்ணாய் என மின் ஈர் உம் ஆய் என்னும் ஏவல் விகுதிகளும் உண்க வாழிய வாழியர் எனக் க இய இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும் சேறி என இகர விகுதியும் உண்மார் என மார் விகுதியும் எதிர்காலங் காட்டின. சேறி என்பது செல்வாய் எனவும் உண்மார் என்பது உண்பார் எனவும் பொருள்படும். உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமுங் காட்டின. உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு முற்று நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டிற்று. உண்ணா என்னும் எதிர்மறை முக்காலமுங் காட்டிற்று. இகர விகுதி எழுத்துப் பேறாய் வருந் தகர மெய்யின்மேல் ஏறிவரும்; அவ்விகுதி சென்றி செல்லாநின்றி என இறந்தகால விடைநிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடி வரும்போது அவை காலங்காட்டலாற் றான்காலங் காட்டாது நிற்கும்.

இவை சிலவில என்றவைகளுள்ளே, காலங்காட்டும் விகுதிகளை மரத்திரஞ் சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடை நிலையையுஞ் சொல்லாமையால், அவை சிறுபான்மையின; வந்த விடங்களிற் கண்டுகொள்க என்றாராயிற்று. அவை வருமாறு.

கு டு று என்னும் மூன்றுயிர்மெய் யீற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலங் காட்டும்.

**உ–ம்.:** புக்கான், நக்கான் எனவும்; தொட்டான், விட்டான் எனவும்; உற்றான், பெற்றான், எனவும், வரும்.

யகரவிடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து ஆவிருந்து என்னும் இரண்டிடைநிலைகளும் நிகழ்காலமுங் காட்டும்.

**உ–ம்.:** போயது எனவும்; உண்ணாகிடந்தான், உண்ணா விருந்தான் எனவும், வரும்.

இசின் என்பது இறந்தகால விடைநிலையாயும், மகரமெய்யும் மன் என்பதும் எதிர்கால விடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும்.

**உ–ம்.:** என்றிசினோர் எனவும்; என்மர், என்மார் எனவும் வரும்.

ஈங்கே என்ற மிகையால் வருதி என இகர விகுதி நிகழ்காலங் காட்டுதலையும் பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலை யின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

பகுதி விகுதி என்னுஞ் சூத்திர முதல் இச் சூத்திரம் வரையும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமையால், **முடித்துக்காட்டலென்னு** முத்தி. முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபத மெண முன்னே நாட்டி இச் சூத்திரம் வரையும் அவைகளுக்கு இலக்கணங் கூறி நிறுத்தினமையால், **தா அனாட்டித்தனாது நிறுப்பென்னு** மதம்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். றவ்வொடு உகர உம்மைநிகழ்பு அல்லவும் –** றகரமெய்யொடு கூடிய உகரவிகுதியும் உம்விகுதியும் (று, றும்) இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும், – **தவ்வொடு (உகர உம்மை) இறப்பும் எதிர்வும் –** தகரமெய்யோடு கூடிய உகரவிகுதியும் உம்விகுதியும் (து, தும்) இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், – **டவ்வொடு (உகர உம்மை) கழிவும் –** டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் (டு, டும்) இறந்த காலத்தையும், – **கவ்வோடு (உகர உம்மை) எதிர்வும் –** ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம்விகுதியும் (கு, கும்) எதிர்காலத்தையும், – **மின் ஏவல் வியங்கோள் இன்மார் எதிர்வும் –** மின்விகுதியும் மற்றை முன்னிலையேவல் விகுதிகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார்விகுதியும் எதிர்காலத்தையும், – **அந்தம் செலவொடு வரவும் –** பகர விகுதி இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், – **செய்யும் நிகழ்பு எதிர்வும் –** செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுவிகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், – **எதிர்மறை மும்மையும் –** எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலத்தையும், – **ஏற்கும் –** ஏற்று வரும், – **ஈங்கு –** மேலைச் சூத்திரத்து இவை சிலவிலவென்றவைகளுள். **எ—று.**

**உ—ம்** சென்று, சென்றும் என்பன முறையே சென்றேன், சென்றேம் எனப் பொருள்பட்டு இறந்காலங் காட்டின. சேறு, சேறும் என்பன முறையே செல்வேன், செல்வேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின. வந்து, வந்தும் என்பன முறையே வந்தேன், வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின, வருது, வருதும் என்பன முறையே வருவேன், வருவேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின. வந்து, வந்தும் என்பன முறையே வந்தேன், வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங்காட்டின. வருது, வருதும் என்பன முறையே வருவேன், வருவேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின. உண்டு, உண்டும் என்பன முறையே உண்டேன், உண்டேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின. உண்கு, உண்கும் என்பன முறையே உண்பேன், உண்பேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங்காட்டின. உண்மின்; உண்ணீர், உண்ணும், உண்ணாய் என மின், ஈர், உம், ஆய் என்னும் ஏவல்விகுதிகளும்; உண்க, வாழிய, வாழியர் எனக் க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும்; சேறி என இகரவிகுதியும், உண்மார் என மார் விகுதியும் எதிர்காலங் காடின. (சேறி என்பது செல்வாய் எனவும், உண்மார் என்பது உண்பார் எனவும் பொருள்படும்). உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமுங் காட்டின. உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டிற்று. உண்ணா என்னும் எதிர்மறை முக்காலமுங்காட்டிற்று. இகர விகுதி எழுத்துப் பேறாய் வருந் தகர மெய்யின்மேல் ஏறிவரும்; இவ்விகுதி சென்றி, செல்லாநின்றி என இறந்த காலவிடைநிலை நிகழ்காலவிடை நிலைகளோடு கூடிவரும்போது அவ்விடைநிலை

காலங் காட்டலால் தான்காலங்காட்டாது நிற்கும். 'இர் ஈரீற்றவிரண்டு மிருதிணைப், பன்மை முன்னிலை மின்னவற்றேவல்' என்னுஞ் சூத்திரத்தில் ஈர் ஈற்றை முன்னிலை வினையென்றதன்றி ஏவலென்று சொல்லவில்லையே இங்கே ஈர் ஈற்றை ஏவலென்று விளக்கிய தென்னையோவெனின் ஈர்விகுதி ஏவற்பொருளில் வரும்போது ஏவலேயாம். இர், ஈர், மின் என்னு மூன்று விகுதிகளையுந் தொகுத்து முன்னிலைத் தெரிநிலைவினை, குறிப்புவினை இரண்டற்குங் கூறும்போது குறிப்புவினையில் வராத ஏவற்கேயுரிய மின்விகுதியை 'மின்னவற்றேவல்' என்று வேறுபடக் கூறினாரன்றி ஈர்விகுதி ஏவலுக்கு வாரா தென்றாரல்லரென்க.

'**இவைசிலவில**' என்றவைகளுள்ளே காலங் காட்டும் விகுதிகளை மாத்திர' சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடை நிலையையுஞ் சொல்லாமையால் அவை சிறுபான்மையின; வந்தவிடங்களிற் கண்டுகொள்க என்றாயிற்று. அவை வருமாறு : கு,டு,று என்னும் மூன்றுயிர் மெய்யீற்றுச் சிலகுறிலிணைப்பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலங் காட்டும். **உ–ம்.** புக்கன், நக்கான் எனவும் – தொட்டான், விட்டான், எனவும் உற்றான், பெற்றான், எனவும் வரும்.

யகரவிடைநிலை இறந்தகாலமும்; ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டிடை நிலைகளும் நிகழ்காலமும் காட்டும்.

உ–ம். போயது, எனவும். உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான், எனவும் வரும்.

இசின் என்பது இறந்தகால விடைநிலையாயும், மகர மெய்யும் மன் என்பதும் எதிர்கால விடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும். உ–ம். என்றிசினோர். எனவும் என்மர், என்மனார். எனவும் வரும்.

ஈங்கே என்ற மிகையால் வருதி, பெயர்திஎன இகரவிகுதி நிகழ்காலங் காட்டுதலையும், பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

பகுதி விகுதி என்னுஞ் சூத்திரமுதல் இச்சூத்திரம் வரையும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடிைத்துக் காட்டினமையால் முடித்துக்காட்ட லென்னுமுத்தி, முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னே நாட்டி இச்சூத்திரம் வரையும் அவைகளுக்கு இலக்கணங்கூறி நிறுத்தினமையால், தானாட்டித் தனாது நிறுப்பென்னுமதம்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: றவ்வொடு உகரம் உம்மை** – றகர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (று, றும் என்னும் விகுதிகள்), **நிகழ்பு அல்லவும்** – நிகழ்காலம் ஒழிந்த

இறந்தகால எதிர்காலங்களையும்; **தவ்வொடு** – தகர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (து, தும் என்பன), இறப்பும் எதிர்வும் – இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்; **டவ்வொடு** – டகர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (டு, டும் என்பன), **கழிவும்** – இறந்த காலத்தையும்; **கவ்வோடு** – ககர மெய்யோடு கூடிய உகரமும் உம்மும் (கு, கும் என்பன), **எதிர்வும்** – எதிர்காலத்தையும்; **மின்** – மின் விகுதியும், **ஏவல்** – மற்றை ஏவல் விகுதிகளும், **வியங்கோள்** – வியங்கோள் விகுதிகளும், **இ** – இகர விகுதியும், **மார்** – மார் விகுதியும், **எதிர்வும்** – எதிர்காலத்தையும்; **ப அந்தம்** – பகர விகுதி, **செலவொடு வரவும்** – இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்; **செய்யும்** – செய்யு மென்னும் வாய்பாட்டு முற்றின் விகுதி, **நிகழ்பு எதிர்வும்** – நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், **எதிர்மறை** – எதிர்மறை ஆகார விகுதி, **மும்மையும்** – மூன்று காலங்களையும், **ஏற்கும்** – ஏற்று வரும்; **ஈங்கு** – (மேற்சூத்திரத்தில்) ''இவை சிலவில'' என்றவைகளுள்; **எ–று.**

'உகர உம்மை' என்பதனைத் தவ்வொடு, டவ்வொடு, கவ்வொடு என்பவற்றோடும் கூட்டுக. 'அந்தம்' என்பதனை எல்லாவற்றிலும் ஒட்டிக் கொள்க.

அந்தம், ஈறு, விகுதி என்பன – ஒருபொருட் சொற்கள். பாந்தம் – ப + அந்தம்; பகரமாகிய விகுதி; வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி.

இங்குக் காட்டிய விகுதிகளுள் று து டு கு என்பவை – தன்மை யொருமைக்கும், றும் தும் டும் கும் என்பவை – தன்மைப் பன்மைக்கும், மின் – ஏவற் பன்மைக்கும், ஏவல் – முன்னிலைக்கும், வியங்கோள் – ஐம்பால் மூவிடங்கட்கும், இ – முன்னிலை யொருமைக்கும், மார் ப என்பவை – படர்க்கைப் பலர்பாலுக்கும், உம் – பலர்பாலொழிந்த நான்கு பால்கட்கும், ஆ – படர்க்கைப் பலவின்பாலுக்கும் உரியனவாதல், மேல் வினையியலில் விளங்கும். 'ஏவல்' என்றதில், பகுதி மாத்திரமாய் நிற்கின்ற ஏவலொருமைச் சொற்களும் அடங்கும்.

றவ்வொடு கரவும் மீறும், தவ்வொடு கரவும் மீறும், பாந்தமும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் ஏற்கும் எனத் தொகுத்துக் கூறாமல், இவ்வாறு வகுத்துக் கூறினார்: எளிதில் விளங்க வேண்டி யென்க.

இகர விகுதி தனித்து இயலாமையால் யாதாயினும் ஓர்மெய்யினை ஊர்ந்து வருமென்பதும், அம்மெய் காலங்காட்டா தென்பதும், அம்மெய் காலங்காட்டின் இகர விகுதி காலங்காட்டா தென்பதும்; செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் இடைநிலை யின்றி ஈறு காலங்காட்டுவ தாயினும், அது எதிர்காலங் காட்டுமென மேல் வினையியலிற் கூறுதலால், இங்கு 'செய்யும்' என்று எடுத்தோதியது முற்றென்பதும் பெறப்பட்டன.

**உ–ம்.:**

சென்று (சென்றேன்), சென்றும் (சென்றோம்)... இறப்பு.

சேறு (செல்வேன்), சேறும் (செல்வோம்)... எதிர்வு.

வந்து (வந்தேன்), வந்தும் (வந்தோம்). . . இறப்பு.

வருது (வருவேன்), வருதும் (வருவோம்). . . எதிர்வு.

உண்டு (உண்டேன்), உண்டும் (உண்டோம்). . . இறப்பு.

உண்கு (உண்பேன்), உண்கும் (உண்போம்). . . எதிர்வு.

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய், ..... உண்.

வாழ்க, வாழிய, வாழியர் சேறி (செல்வாய்)
உண்மார் (உண்பார்.) – எதிர்வு.

உண்ப (உண்டார்), என்ப (என்றார்) . . . செலவு.

உண்ப (உண்பார்.) என்ப (என்பார்) . . . வரவு.

உண்ணும் – நிகழ்வு, எதிர்வு.

உண்ணா – இறப்பு, நிகழ்வு, எதிர்வு.

சென்றி, செல்லாநின்றி என வருமாயின், இடைநிலை காலங் காட்டிய இகர வீற்றனவாம்.

'இவைசிலவில' என்றவைகளுள்ளே காலங்காட்டும் விகுதிகளை மாத்திரம் சொல்லிக் காலங்காட்டும் பகுதிகளையும் பிற இடைநிலைகளையும் சொல்லாமையால், 'அவை சிறுபான்மையன: வந்த இடங்களிற் கண்டுகொள்க' என்றாராயிற்று: அவை வருமாறு:–

கு டு று என்னும் மூன்று உயிர்மெய் யீற்றுச் சில பகுதிகள், தம் ஒற்று இரட்டி இறந்தகாலம் காட்டும்.

**உ–ம்.:** புக்கான், தொக்கான்; போட்டான், விட்டான்; உற்றான்' பெற்றான்.

யகர வொற்றிடைநிலை இறந்தகாலமும்: ஆகிடந்து ஆவிருந்து என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமும்: ககர வொற்றிடைநிலை எதிர்காலமும் காட்டும்.

**உ–ம்.:** போயது; உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான்; செய்கேன்.

இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும் மகரமெய்யும், மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

**உ–ம்.:** என்றிசினோர்; என்மர்: என்மனார்.

'ஈங்கே' என்ற மிகையால், காண்டும் (காண்போம்) என 'டும்' விகுதி எதிர்காலங் காட்டுதலையும், வருதி (வருகின்றாய்) என இகர விகுதி நிகழ்காலங் காட்டுதலையும், பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலை யின்றி விகுதி காலங் காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

“பகுதிவிகுதி” என்னுஞ் சூத்திரமும் முதல் இச் சூத்திரம் வரையிலும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டியது ‘முடித்துக்காட்டல்’ என்னும் உத்தி. முன்னைத் தமிழ்நூல்களில் அல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபத மென முன்னே நாட்டி. இச் சூத்திரம் வரையிலும் அவற்றிற்கு இலக்கணங் கூறி நிறுத்தியது **‘தானாட்டித் தனாதுநிறுப்பு’** என்னும் மதம். (தான் நாட்டித் தனாது நிறுப்பு – தானே ஒரு பொருளை எடுத்துத் தாபித்து அதனை இடந்தோறும் நிலைநிறுத்துதல்.)

## பவானந்தம் பிள்ளை

இ–ள். றவ்வொடு உகர உம்மை நிகழ்பு அல்லவும் – றகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், தவ்வொடு (உகர உம்மை) இறப்பும் எதிர்வும் – தகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், டவ்வொடு (உகர உம்மை) கழிவும் – டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும், கவ்வோடு (உகர உம்மை) எதிர்வும் – ககர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் எதிர் காலத்தையும், மிக் ஏவல் வியங்கோள் இ மார் எதிர்வும் – மின் விகுதியும் மற்றை முன்னிலையேவல் விகுதிகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார் விகுதியும் எதிர்காலத்தையும், ப அந்தம் செலவொடு வரவும் – பகர விகுதி இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், செய்யும் நிகழ்பு எதிர்வும் – செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும், எதிர்மறை மும்மையும் – எதிர்மறை ஆகார விகுதி மூன்று காலத்தையும், ஏற்கும் – ஏற்று வரும், ஈங்கு – மேலைச் சூத்திரத்து இவை சிலவில வென்றவைகளுள். எ–று. அந்தம் – விகுதி; இது எல்லாவற்றோடும் கூட்டிப் பொருள் கொள்ளப்படும்.

உ–ம். சென்று (சென்றேன்), சென்றும் (சென்றோம்) ...... இறப்பு

சேறு (செல்வேன்), சேறும் (சேல்வோம்) ........ எதிர்வு

வந்து (வந்தேன்), வந்தும் (வந்தோம்) ........ இறப்பு

வருது (வருவேன்), வருதும் (வருவோம்) ........ எதிர்வு

உண்டு (உண்டேன்), உண்டும் (உண்டோம்) ......... இறப்பு

உண்கு (உண்பேன்), உண்கும் (உண்போம்) ..... எதிர்வு

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய், வாழ்க, வாழிய, வாழியர்.

சேறி (செல்வாய்) உண்மார் (உண்பார்) ...... எதிர்வு

உண்ப (உண்டார்), என்ப (என்றார்) .......... இறப்பு.

உண்ப (உண்பார்), என்ப (என்பார்) ........... எதிர்வு

உண்ணும் ......... நிகழ்வு, எதிர்வு

உண்ணா .......... இறப்பு, நிகழ்வு, எதிர்வு.

இகர விகுதி எழுத்துப் பேறாய் வருந் தகர மெய்யின்மேல் ஏறி வரும்; இவ்விகுதி சென்றி செல்லாநின்றி என இறந்த கால விடை நிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடி வரும்போது அவை காலங் காட்டலால் தான் காலங்காட்டாது நின்கும்.

'இவை சிலவில' (சூ. 144) என்றவைகளுள்ளே, காலங்காட்டும் விகுதிகளைமாத்திரஞ் சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிற விடைநிலையையுஞ் சொல்லாமையால், அவை சிறுபான்மையின; வந்தவிடங்களிற் கண்டு கொள்க என்றாராயிற்று. அவை வருமாறு:

கு டு று என்னும் மூன் றுயிர் மெய்யீற்றுச் சில குறிவினைப்பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்த காலங் காட்டும்.

உ–ம். புக்கான், நக்கான், தொட்டான், விட்டான், உற்றான், பெற்றான்.

யகர விடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து ஆவிருந்து என்னும் இரண்டிடைநிலைகளும் நிகழ்காலமுங் காட்டும்.

உ–ம். போயது, உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான்.

இசின் என்பது இறந்தகாலவிடை நிலையாயும், மகர மெய்யும் மன் என்பதும் எதிர்கல விடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும்.

உ–ம். என்றிசினோர், என்மர், என்மனார்.

'ஈங்கே' என்ற மிகையால், வருதி என இகரவிகுதி நிகழ்காலங்க காட்டுதலையும் பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையன்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

'பகுதிவிகுதி' என்னும் 133–வது சூத்திர முதல் இச்சூத்திரம் வரையும் பகுபதக்ளை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமையால், 'முடித்துக்காட்டல்' என்னும் எத்தி. முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னே நாட்டி இச்சூத்திரம் வரையும் அவைகளுக்கு இலக்கணங் கூறி நிறுத்தினமையால், 'தாஅ னாட்டித் தனாது நிறுப்பு' என்னும் மதம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ற வொடு உகர உம்மை– றகர மெய்யோடு கூடிய உகரவிகுதியும் உம் விகுதியும், நிகழ்பு அல்லவும் – இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், த வொடு உகர உம்மை–தகரமெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும், இறப்பும் எதிர்வும்–இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், ட வொடு உகர உம்மை–டகர மெய்யோடுகூடிய உகர விகுதியும் உம் விகுதியும், எதிர்வும்–எதிர்காலத்தையும், மின் – மின் விகுதியும், ஏவல்–முன்னிலை ஏவல் விகுதிகளும், வியங்கோள்–வியங்கோள்விகுதிகளும், இ–இகரவிகுதியும், மார்–மார்விகுதியும், எதிர்வும்–எதிர்காலத்தையும், பாந்தம்–பகரவிகுதி,

செலவொடு வரவும்–இறந்த காலத்தையும் எதிர்கலத்தையும், செய்யும்–செய்யுமென்னும் (வாய்பாட்டு முற்று விகுதி), நிகழ்பு எதிர்வும் – நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை–எதிர்மறை (ஆகாரவிகுதி), மும்மையும் – மூன்று காலத்தையும், ஏற்கும்–ஏற்றுவரும், ஈங்கு– 'இசை சிலவில' என்றவைகளுள். **எ–று.**

**பொ–ரை.:** று, நும், து, தும் இவை இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், டு, டும் இவை இறந்த காலத்தையும், கு, கும் இவை எதிர்காலத்தையும், மின், ஏவல் விகுதிகள், வியங்கோள் விகுதிகள், இ, மார் இவை எதிர்காலத்தையும், செய்யும் என்னும் முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறைவிகுதி ஆகிய ஆ மூன்று காலத்தையும் ஏற்றுவரும்; 'இவை சில இல' என்றவைகளுள்.

'உகர உம்மை' என்பதனைத் தவ்வொடு, டவ்வொடு, கவ்வொடு என்பவற்றோடுங் கூட்டுக. 'அந்தம்' என்பதனை எல்லாவற்றிலும் ஒட்டிக்கொள்க.

அந்தம், ஈறு, விகுதி என்பன–ஒரு பொருட்சொற்கள், பாந்தம்–ப+அந்தம்; பகரமாகிய விகுதி; வடமொழிப்புணர்ச்சி தீர்க்கசந்தி.

றவ்வொடுகர வும்மீறும், தவ்வொடுகர வும்மீறும், பாந்தமும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் ஏற்கும் எனத் தொகுத்துக் கூறாமல், இவ்வாறு வகுத்துக் கூறினார்; மாணாக்கருக்கு எளிதில் விளங்கவேண்டி யென்க.

இகர விகுதி தனித்து இயலாமையால் யாதாயினம் ஓர் மெய்யினை ஊர்ந்துவருமென்பதும், அம் மெய் காலங் காட்டாமென்பதும், அம்மெய் காலங் காட்டின், இகரவிகுதி காலங் காட்டாதென்பதும், செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் இடைநிலையின்றி ஈறு காலங் காட்டுவதாயினும், அது எதிர்காலங் காட்டுமென மேல் வினையியலிற் கூறுதலால், இங்கு 'செய்யும்' என்று எடுத்தோதியது முற்றென்பதும் பெறப்பட்டன.

(உ–ம்.) சென்று (சென்றேன்), சென்றும் (சென்றோம்)...இறப்பு.

சேறு (செல்வேன்), சேறும் (செல்வோம்)....எதிர்வு.

வந்து (வந்தேன்), வந்தும் (வந்தோம்).....இறப்பு.

வருது (வருவேன்), வருதும் (வருவோம்)....எதிர்வு.

உண்டு (உண்டேன்), உண்டும் (உண்டோம்)....இறப்பு.

உண்டு (உண்பேன்), உண்டும் (உண்போம்)....எதிர்வு.

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய், உண், எதிர்வு.

வாழ்க, வாழிய, வாழியர்,

சேறி (செல்வாய்)

உண்மார் (உண்பார்)

எண்ப (உண்டார்), என்ப (என்றார்).....செலவு.

உண்ப (உண்பார்), என்ப (என்பார்)........வரவு.

உண்ணும் நிகழ்பு, எதிர்வு

உண்ணா இறப்பு, நிகழ்பு, எதிர்வு.

சென்றி, செல்லாநின்றி என வருமாயின், டைநிலை காலங்காட்டிய இகர வீற்றனவாம்.

'இவை சிலவில' என்றவைகளுள்ளே காலங் காட்டும் விகுதிகளை மாத்திரம் சொல்லிக் காலங் காட்டும் பகுதிகளையும், பிறஇடைநிலைகளையும் சொல்லாமையால், 'அவை சிறுபான்மையன; வந்த இடங்களில் கண்டுகொள்க' என்றாராயிற்று; அவை வருமாறு:–

கு டு று என்னும் மூன்று உயிர் மெய்யீற்றுச் சில பகுதிகள், தம் ஒற்ற இரட்டி இறந்தகாலங் காட்டும்.

(உ–ம்.) புக்கான், தொட்டான், உற்றான். (இவை குறிலிணைப் பகுதிகளா யிருத்தல் வேண்டும்.)

ய க ர வொற்றிடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமும், க கர வொற்றிட நிலை எதிர்காலமும் காட்டும்.

(எ–ம்.) போயாது, உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான், செய்தேன்.

இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும், மகர மெய்யும், மன் என்பதும் எதிர்கல இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

(உ–ம்.) என்றிகினோர், என்மர், என்மனார்.

'ஈங்கே' என்ற மிகையால், காண்டும் (காண்போம்.) என 'டும்' விகுதி எதிர்கலங் காட்டுதலையும், வருதி (வருகின்றாய்) என இகர விகுதி நிகழ்காலங்காட்டுதலையும், பெயரெச்ச வினை யெச்சங்களில் இடை நிலை யின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக்கொள்க.

(வருதி என்பதில் த் எழுத்துப்பேறு.)

## கா. நமசிவாய முதலியார்

**றவ்வொடு** – றகரமெய்யோடு கூடிய, **உகர உம்மை** – உகர விகுதியும் உம் விகுதியும் (று, றும்), **நிகழ்பு அல்லவும்** – நிகழ் காலமல்லாத இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும்,**தவ்வொடு** – தகரமெய்யோடு கூடிய, (உகர உம்மை – உகர விகுதியும் உம் விகுதியும் – து, தும்), **இறப்பும் எதிர்வும்** – இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்,

**டவ்வொடு** – டகரமெய்யோடு கூடிய, (உகர உம்மை – உகர விகுதியும் உம் விகுதியும் – டு, டும்), **கழிவும்** – இறந்த காலத்தையும்,

**கவ்வொடு** – ககரமெய்யோடு கூடிய, (உகரவும்மை – உகர விகுதியும் உம் விகுதியும் – கு, கும்), **எதிர்வும்** – எதிர் காலத்தையும்,

**மின்**—மின் விகுதியும், **ஏவல்** – (ஏனை) முன்னிலையேவல் விகுதிகளும், **வியங்கோள்** – வியங்கோள் விகுதிகளும், **இ** – இகர விகுதியும், **மார்** – மார் விகுதியும், **எதிர்வும்** – எதிர் காலத்தையும்,

**பாந்தம்** (ப+அந்தம்) பகர விகுதி, **செலவொடு வரவும்** – இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும்,

**செய்யும்** – செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று விகுதி, **நிகழ்பு எதிர்வும்** – நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும்,

**எதிர்மறை** – எதிர்மறை ஆகார விகுதி, **மும்மையும்** – மூன்று காலத்தையும்,

**ஏற்கும்** – ஏற்றுவரும், **ஈங்கு** – மேற்சூத்திரத்தில் 'இவை சிலவில' என்றவைகளுள்.

இகரவிகுதி தனித்து இயலாமையால் யாதாயினும் ஒரு மெய்யினை ஊர்ந்தே வருமென்பதும், அம்மெய் காலங்காட்டா தென்பதும், அது காலங்காட்டின் இகர விகுதி காலங்காட்டா தென்பதும், செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமும் இடைநிலையின்றி ஈறு காலங்காட்டுவதாயினும், அஃது எதிர்காலங் காட்டுமென மேல் வினையியலில் கூறுதலால், இங்கு 'செய்யும்' என்று எடுத்தோதியது முற்றென்பதும் பெறப்பட்டன.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| சென்று<br>சென்றும் | (சென்றேன்)<br>(சென்றோம்) | இறப்பு |
| சேறு<br>சேறும் | (செல்வேன்)<br>(செல்வோம்) | எதிர்வு |
| வந்து<br>வந்தும் | (வந்தேன்)<br>(வந்தோம்) | இறப்பு |
| வருது<br>வருதும் | (வருவேன்)<br>(வருவோம்) | எதிர்வு |
| உண்டு<br>உண்டும் | (உண்டேன்)<br>(உண்டோம்) | இறப்பு |
| உண்கு<br>உண்கும் | (உண்பேன்)<br>(உண்போம்) | எதிர்வு |

உண்மின், உண்ணீர்,
உண்ணும், உண்ணாய், எதிர்வு
உண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாழ்க, | வாழிய, | வாழியர் | ... | – | எதிர்வு |
| சேறி | (செல்வாய்) | ... | ... | – | எதிர்வு |
| உண்மார் | (உண்பார்) | ... | ... | – | எதிர்வு |
| உண்ப | (உண்டார்) | என்ப | (என்றார்) | – | இறப்பு |
| உண்ப | (உண்பார்) | என்ப | (என்பார்) | – | எதிர்வு |
| உண்ணும் | ... | ... | ... | – | நிகழ்பு |
| உண்ணும் | ... | ... | ... | – | எதிர்வு |
| உண்ணா | ... | ... | ... | – | இறப் |
| உண்ணா | ... | ... | ... | – | நிகழ்பு |
| உண்ணா | ... | ... | ... | – | எதிர்வு |

சென்றி, செல்லாநின்றி என வருமாயின், இடைநிலை காலங்காட்டுதலால், இகரவிகுதி காலங்காட்டவில்லை என்றறிக,

'இவை சிலவில' என்றவைகளுள்ளே காலங்காட்டும் விகுதிகளை மாத்திரஞ் சொல்லிக் காலங்காட்டும் பகுதிகளையும் பிற இடை நிலைகளையுஞ் சொல்லாமையால், அவை சிறுபான்மையன; வந்த இடங்களிற் கண்டுகொள்க என்றாராயிற்று. அவை வருமாறு :

கு டு று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம்மொற் றிரட்டி இறந்தகாலங் காட்டும்.

புக்கான் – புகு + ஆன் ;
தொட்டான் – தொடு + ஆன் ;
உற்றான் – உறு + ஆன்.

நெடிலைச் சார்ந்த டுகர ஈற்றுச் சொல்லுள்ளும் சில இவ்வாறு வரும்,

போட்டான் – போடு + ஆன்.

யகர இடைநிலை இறந்தகாலமும், ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டு இடைநிலைகளும் நிகழ்காலமும் காட்டும்.

போயது ; உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான்.

இசின் என்பது இறந்தகால இடை நிலையாயும்; மகரமெய்யும், மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

என்றிசினோர் – இசின் : இறப்பு

என்மர், என்மனார் – ம், மன் : எதிர்வு

'ஈங்கே' என்ற மிகையால், வருதி (வருகிறாய்) என இகர விகுதி நிகழ்காலங் காட்டுதலையும், இன்னுஞ் சில வினைமுற்றுக்களிலும் பெயரெச்ச வினையெச்சங்களிலும் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

'பகுதி விகுதி' என்னுஞ் சூத்திரம் முதல் இச்சூத்திரம் வரையும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமையால், இது **முடித்துக் காட்டல்** என்னும் உத்தி.

முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னே நாட்டி இச்சூத்திரம் வரையும் அவற்றிற்கு இலக்கணங்கூறி நிறுத்தினதனால், இது, **தாஅ னாட்டித் தனாது நிறுப்பு** என்னும் மதம்.

**(பகுதி விகுதி முதலிய உறுப்புக்களாற் பகுபத முடிக்குமாறு.)**

**பொன்னன்** என்கிற உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைப் பொருட்பெயர்ப் பகுபதத்தை முடிக்குமிடத்து,

'பொருளிடங் காலம்' (சூ – 132) என்னுஞ் சூத்திர விதியால், பொன் என்னும் பகுதியை முதலில் வைத்து, அதன்பின்,

'அன், ஆன், அள், ஆள்' (சூ – 140) என்னுஞ் சூத்திர விதியால், உயர்திணை யாண்பாலொருமைப் படர்க்கையைக் காட்டும் அன்விகுதியை வருவித்து, பொன் + அன் என வைத்து,

'தனிக்குறின் முன்னொற்றுயிர்' (சூ – 205) என்னுஞ் சூத்திர விதியால், அந்த னகரமெய்யை இரட்டித்து, பொன் + ன் + அன் என வைத்து,

'உடன்மேலுயிர்' (சூ – 204) என்னுஞ் சூத்திரவிதியால், அகர வுயிரை மிகுந்த னகர மெய்யின் மேல் ஏற்றி, பொன்னன் என முடிக்க.

**நடந்தனன்** என்கிற உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை யிறந்தகால வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து,

'நடவா மடிசீ' (சூ – 137) என்னுஞ் சூத்திர விதியால், நட என்னும் பகுதியை முதலில் வைத்து,

'அன் ஆன் அள் ஆள்' (சூ – 140) என்னுஞ் சூத்திர விதியால், உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கையைக் காட்டுகிற அன் விகுதியை அதன்பின் வருவித்து, நட + அன் என வைத்து,

'தடறவொற் றின்னே' (சூ – 142) என்னுஞ் சூத்திர விதியால், இறந்த காலங் காட்டுந் தகர இடைநிலையை அவ்விரண்டற்கும் இடையிலே வருவித்து, நட + த் + அன் என வைத்து,'அன் ஆன் இன் அல்' (சூ – 244) என்னுஞ் சூத்திர விதியால், இடை நிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் சாரியையை வருவித்து, நட + த் + அன் + அன் என வைத்து,

'உடன்மேல் உயிர் வந்து' (சூ – 204) என்னுஞ் சூத்திர விதியால், இடை நிலைத் தகர மெய்யின் மேலே சாரியை அகரவுயிரையேற்றி, நட + தன் + அன் என வைத்து,

இன்னும் அச்சூத்திர விதியால், சாரியை னகரமெய்யின்மேல் விகுதி அகர வுயிரையேற்றி, நட + தனன் என வைத்து,

'இயல்பினும்' (சூ – 165) என்னுஞ் சூத்திர விதியால், இடை நிலைத் தகரத்தை மிகுவித்து, நடத்தனன் என வைத்து,

'வலித்தல் மெலித்தல்' (சூ – 155) என்னுஞ் சூத்திர விதியால், மிகுந்த தகர வல்லொற்றை மெல்லொற்றாக்கி, நடந்தனன் என முடிக்க.

நட, உண் என வருகிற முன்னிலை யேவல் வினைகளிலே ஆய் விகுதியும்,

நடவான், நடவேன், நடவாய் என்கிற எதிர்மறை வினைகளிலே ஆ என்னும் எதிர்மறை விகுதியும்,

கொல் களிறு, ஓடாக்குதிரை என்பவைகளிலே கொன்ற – கொல்கின்ற – கொல்லும், ஓடாத என வருகிற பெயரெச்ச வினை விகுதிகளும்,

'வரிப்புனை பந்து' என்பதில், வரிந்து என்பதன் வினையெச்ச விகுதியும்,

'கொள்வாருங் கள்வரு நேர்' என்பதில் நேர்வர் என்பதன் முற்றுவினை விகுதியும்,

முடி, அடி என்பவைகளிலே முடித்தல், அடித்தல் என்பவற்றின் தொழிற் பெயர் விகுதியும்,

காய், தளிர் என்பவைகளில் வினைமுதற் பொருளுணர்த்தும் இகர விகுதியும்,

ஊண், எழுத்து என்பவற்றில் செயப்படு பொருளுணர்த்தும் ஐ விகுதியும் புணர்ந்து குன்றின. அவ்விகுதிகள் புணர்ந்து குன்றினாலும் புணர்ந்து நின்றாற்போலவே பொருளுணர்த்தும்.

### மோசசு பொன்னையா

று, றும் என்னும் இறுதிகளும், து, தும் என்னும் இறுதிகளும் இறந்த எதிர் காலங்களையும்; டு, டும் என்னும் இறுதிகள் இறந்த காலத்தையும்; கு, கும் என்னும் இறுதிகள் எதிர்காலத்தையும், மின் இறுதியும், முன்னிலை ஏவல் வினை இறுதிகளும், வியங்கோள் இறுதிகளும், இகர இறுதியும், மார் இறுதியும் எதிர்காலத்தையும், பகர இறுதி இறந்த எதிர்காலங்களையும்; செய்யும் என்னும் முற்றின் உம்மிறுதி நிகழ் எதிர்காலங்களையும்; எதிர்மறை ஆகார இறுதி முக்காலங்களையும் ஏற்று, விகுதிகளாக நிற்பினும் கால இடைநிலைகளே போல் ஈங்குக் காலமுணர்த்தும், **எ—று.**

உகர உம்மை என்பதனைத் தவ்வொடும், டவ்வொடும், கவ்வொடுங் கூட்டுக. அந்தம் என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. ப + அந்தம் = பாந்தம், வடமொழிப் புணர்ச்சி.

**எ—டு.**

சென்று, சென்றும்; வந்து, வந்தும் – இறந்தகாலம்.

சேறு, சேறும்; வருது, வருதும் – எதிர்காலம்.
உண்டு, உண்டும்; – இறந்தகாலம்.
உண்கு, உண்கும்; – எதிர்காலம்.

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய்; உண்க, வாழிய, வாழியர்; சேறி; உண்மார்; – எதிர்காலம்.

உண்ப – இறந்தகாலம், எதிர்காலம்.
உண்ணும் – நிகழ்காலம், எதிர்காலம்.
உண்ணா – இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்.

ஈங்கே என்ற மிகையானே, வருதி, பெயர்தி, வருந்துதி, பொருதி, புலம்புதி, என முன்னிலையை உணர்த்தும் இகர இறுதி நிகழ்காலங் காட்டுதலையும்; பெயர் வினை எச்சங்கள் விகுதியாற் காலங் காட்டுதலையும்; காண்டும் என டும் விகுதி ஒப்புமைப் போலியால் எதிர்காலங் காட்டுதலையும்; புக்கான், நக்கான், தொட்டான், விட்டான், உற்றான், பெற்றான் என கு, டு, று வீற்றுக் குறிலிணைகள் தம் ஒற்றிரட்டி இறந்தகால முணர்த்துதலையும், இகரவீறுயாதானு மொரு மெய்யினை ஊர்ந்து நின்று கலமுணர்த்துதலையும், சென்றி, செல்லா நின்றி என்பன போல் இடைநிலை காலமுணர்த்தின் அவ்வீறு காலமுணர்த்தாது நிற்றலையும் அமைக்க.

இடைநிலையை விளக்கியுரைக்கப் புகுந்த நிலையில் வினை இடைநிலைகள் காலமுணர்த்துதலை உணர்த்த வேண்டியதாயிற்று ஆதலின், உறுப்பிற்குப் புறனடைபோல், விகுதிகளும் காலமுணர்த்தும் என்பதனை இந்நூற்பாவால் இவ்வாறு நீளநெடுக உரைத்தும், முற்றும் உணர்த்தலாகாமை உணர்ந்து, வினையியலில் ஆங்கே காண்க என்பராய், ஈங்கே இம்மட்டும் எனக் கூறி அமைந்தார்.

(18)

**145. இடையி னான்கு மீற்றி லிரண்டும்**
**அல்லா வச்சை வருக்க முதலீறு**
**யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்**
**பொதுவெழுத் தொழிந்த நாலேழுந் திரியும்**

இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்க முதலீறு
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்த நாலேழுந் திரியும்

itaiyin̠ nān̠kum īṟṟil iraṇṭum
allā assai varukka mutal īṟu

yav āṭi nāṉmai ḻavvākum aiyaim
poṭu eḷuṭṭu oḷinṭa nāl ēḷum ṭiriyum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## TAMIL SING SANSCRIT WORDS

### Way of Tamilising Sanskrit words

The twenty-five letters common (to Sanscrit and Tamil) are as follows: of the sixteen Sanskrit vowels, all, except the middle four and the last two; of the five series of Consonants, the first and last letter in each; (and of the other consonants) four beginning with 'y'; and ḻ. The remaining twenty-eight (letters of the Sanscrit Alphabet) are changed (when employed in Tamil)

### மயிலைநாதர்

**எ–ன்,** [1]வடமொழிப்பதம் [2]தமிழொடு வருங்கால் திரிவனவுந் திரியாதனவும் பொதுவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** வடமொழியுள் அச் சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையி னின்ற ஏழாமுயிர் முதனான்கும் ஈற்றி னின்ற இரண்டுமான ஆறும் ஒழிந்துநின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், அல்லென்று வழங்கு மெய் முப்பத்தேழனுள்ளும் கசடதப வென்னும் ஐந்தன் வருக்கத்துள் இடையில் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்பட்டு நிற்கும் மூன்று மொழிந்த கங, சஞ, டண, தந, பம என்னும் பத்தும், யரலவ என்னும் நான்கும் ளவ்வுமான இருபத்தைந்தும் தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் பொதுவாம்; இவையன்றி, மேல் உயிரிலொழிந்த ஆறும், ஐந்து வருக்கங்களிலும் இடைகளிலொழிந்த பதினைந்தும், முப்பதாமெய் முதலான எட்டனுள் ளகர மொழிந்த ஏழுமான இருபத்தெட்டும் வடமொழிக்கே உரியவாய்த் தமிழ்மொழிக்கு வருங்கால் தமக்கேற்ற பொது வெழுத்துக்களாகத் திரிந்து வரும், **எ – று.**

இருபத்தைந்தும் பொது வெனவே மற்றுள்ளவை சிறப்பெழுத்தா மென்பது தானே போதருமெனக் கொள்க. இவ்வாறு பகுத்துரைத்தற்குப் பயன்:–பொது வெழுத்துப் பதம் வருதலே [3]சிறப்புடைத்து, அல்லன வருதல் சிறப்பன்றெனக் கொள்க. [4]வடமொழி முடிபிலக்கணங் கூறாது திரிபு கூறியது என்னையோவெனின், தமிழுள் விரவி வருமாத்திரைக்குத் திரிபு கூறியதன்றி

---

**பாட வேறுபாடு.:**

1. ஆரியமொழிப்பதம்
2. தமிழில்
3. சிறப்புடைய
4. வடவிலக்கணங் கூறாது

[1]அவைதம் இலக்கணங் கூறின் அஃதொழிந்த திசைச் சொற்களுக்கும் இலக்கணங் கூறல் வேண்டும்; வேண்டவே, [2]தமிழ்கூறுவான் புகுந்துவைத்து ஈண்டு அவற்றின் இலக்கணங் கூறின் மற்றொன்று விரித்தலென்னும் நூற்குற்றமே யாம். ஆதலால், அவை வழங்குமா றறிதற்கு வேண்டும் திரிபே சொன்னா ரென்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** இவ்வியல் மொழியாக்கமாதலின், ஆரியமொழி திரிந்து வடமொழியாமாறு உணர்த்துவான் தொடங்கி, அவற்றின் பொதுவிதி **உணர் – ற்று.**

**இ—ள்.:** ஆரிய மொழியுள், அச்சு என்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையில் நின்ற ஏழாம் உயிர் முதல் நான்கும், ஈற்றில் நின்ற இரண்டுமான ஆறும் ஒழிந்து நின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், அல் என வழங்கும் முப்பத்தேழு மெய்யுள்ளும் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கத்தினிடையில் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்பட்டு நிற்கும் மூன்றும் ஒழிந்த க ங ச ஞ ட ண த ந ப ம என்னும் பத்தும், ய ர ல வ என்னும் நான்கும், ளவ்வும் ஆகும் இருபத்தைந்தும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது எழுத்தாம்; இவையன்றி, மேல் உயிருள் ஒழிந்த ஆறும், ஐந்து வருக்கங்களினும் இடைகளின் ஒழிந்த பதினைந்தும், முப்பதாமெய் முதலான எட்டனுள் ளகரம் ஒழிந்த ஏழுமான இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்தாகத் திரிந்து வடமொழியாம், **எ – று.**

மேல் ஏழாமுயிர் என விதப்பாராதலின்; இடையில் நான்கு என விதவாது கூறினார்.

பொதுவெழுத்து எனவே, சிறப்பெழுத்து என்பது பெற்றாம். தமிழை நோக்கிச் சிறப்பாயின.

சிறப்பெழுத்துத் திரியும் என வரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கு ஏற்ற விகாரமாயும் வரும் என்பதூஉம் கூறினாராயிற்று.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** வடமொழிப் பதம் தமிழொடு வருங்கால் திரிவனவும் திரியாதனவும் ஆமாறு பொதுவகையான் உரைத்தது.

**இ—ள்.: இடையி னான்கும்** – வடமொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறுள்ளும் இடையினின்ற ஏழா முயிர்முதல் நான்கும், **ஈற்றினிரண்டும் அல்லாவச்சு** – ஈற்றினின்ற இரண்டெழுத்துமான ஆறும்

பாட வேறுபாடு.: 1.அதன்

2.ஆதிக்கண்ணே தமிழ் கூறுவான்.

ஒழிந்துநின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், **ஐவருக்கும்** – அல்லென்று வழங்கும் மெய் முப்பத்தே ழுள்ளும் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கத்துள், **முதலீறு** – இடையில் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்பட்டு நிற்கும் மூன்றுமொழிந்த க ங சஞ டண த ந பம என்னும் மெய் பத்தும், **யவ்வாதி நான்மை** – யரலவ என்னும் நான்கு மெய்யும், **ளவ்வாகு மையைம் பொதுவெழுத்து** – ளகரத்தொடுமோகிய இருபத்தைந் தெழுத்தும், தமிழ்மொழிக்கும் ஆரிய மொழிக்கும் பொதுவாம், **ஒழிந்த நாலேழும்** – உயிரில் ஒழிந்த ஆறும் வருக்கத்தில் ஒழிந்த பதினைந்தும் ளகரம் ஒழிந்த ஏழும் ஆக இருபத்தெட்டும் வடமொழிக்கே உரியவாய், **திரியும்** – தமிழ் மொழிக்கு வழங்குங்கால் தத்தமக்கு ஒத்த பொதுவெழுத்துக்களாய்த் திரியும், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஆரியமொழி விகாரப்பட்டுத் தமிழில் வடமொழியாமாறு அறிவிக்கத் தொடங்கி அவற்றின் பொதுவிதி உணர்த்துகின்றது.

**இ–ள்.: இடையில்** –ஆரியத்தில் அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற உயிர் பதினாறனுள் நடுவிலிருக்கின்ற **நான்கும்** – ++++ என்கிற நாலெழுத்துகளும், **ஈற்றில்** – கடையிலிருக்கின்ற, **இரண்டும்** – ++++ என்கிற இரண்டெழுத்துகளும், **அல்லா** – நீங்கலாகிய, **அச்சு** – அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற பத்து உயிர்களும், **ஐவருக்கம்** +++++ என்கிற மெய் முப்பத்தேழுள் ககர முதலைந்தைந் தெழுத்துகளாகிய ஐந்து வருக்கங்களுடைய, **முதல்** – முதலிலிருக்கின்ற கசடதப என்கிற வைந்து மெய்களும், **ஈறு** – கடையிலிருக்கின்ற ஙஞணநம என்கிற வைந்து மெய்களும், **யவ்வாதி நான்மை** – யரலவ என்கிற நான்கு மெய்களும், **ள**–ள கரமெய்யும், **ஆகுமையை யெழுத்து** – ஆகிய இருபத்தைந் தெழுத்துக்களும், **பொது** – தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது வெழுத்துகளாகும். **ஒழிந்த** – அவை யொழிந்த, **நாலேழும்** – இருபத்தெட்டெழுத்துகளும், **திரியும்** – ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துகளாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்துகளாகத் திரிந்துவரும், **எ – று.**

## ஆ- முத்துத்தம்பிப்பிள்ளை

வடமொழியாக்கங் கூறுஞ் சூத்திரம் யாது?

இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்கமுத லீறி
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழும் திரியும்.
(இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்

அல்லா அச்சு ஐவருக்கு முதல்ஈறு

ய ஆதி நான்மை ள் ஆகும் ஐயைம்

பொது எழுத்து ஒழிந்தநா லேழும் திரியும்).

**இ—ள்.: இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு –** ஆரிய மொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையினின்ற ருரூ லுலூ என்னு நான்கும் ஈற்றினின் அம் அ; என்னும் இரண்டும் ஒழிந்த அ, ஆ, இ, ஈ, உ, ஊ எ ஐ ஒ ஔ என்னும் பத்தும் ஐவருக்க முதல் ஈறு—அல்லெனு வழங்கும் முப்பத்தேழு மெய்யுள்ளுங் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கத்தினிடையில் உரப்பியும் எடுத்துங் கனைதுஞ் சொல்லப்பட்டு நிற்கும் மூன்றுமொழிந்த க ங ச ஞ ட ண த ந ப ம என்னும் பத்தும் யரலவ என்னும் நான்கும், ள ஆகும் ஐயைம்பொது எழுத்து ளவ்வும் ஆகிய இருப்பதைந்தும், தமிழிற்கும். ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம்; ஒழிந்த நாலேழும் திரியும்– இவையன்றி மேல் உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும், முப்பதாமெய் முதலான எட்டனுள் ளகர மொழிந்த ஏழுமான இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாய்த் தமக்கேற்ற பொதுவெழுதாகத் திரிந்து வடமொழியாம். எ–று.

வடமொழிச் சொற்கள் தமிழில் வரும்போது வடமொழிஎழுத்துகள் எவ்வாறு வரும்?

"பொதுவெழுத்தொழிந்த நாலேழுந்திரியும்"

தமிழ்க்கும் வடமொழிக்கும் பொதுவெழுத்தெவை?

"இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு

ஐவருக்க முதலா யவ்வாதி நான்மை ளவ்வாகும்

ஐயைம்பொது எழுத்து"

தமிழில் இல்லாத வடமொழியெழுத்தெவை?

"ஒழிந்தநாலேழும்"

வடமொழியில் எல்லாமாக எழுத்தெத்தனை?

"ஐயைம்பொது ஒழிந்தநாலேழு" ஆகஐம்பத்துமூன்று.

வடமொழி உயிரெழுத்தெத்தனை?

பதினாறு

வடமொழி மெய்யெழுத்தெத்தனை?

முப்பத்தேழு

உயிரெழுத்துக்கு வடமொழியில் என்ன பெயர்?

அச்சு, சுரம், என்பன

மெய்யெழுத்து என்ன பெயர்பெறும்?

அல் எனவும் வியஞ்சனம் எனவும் படும்

ஐவருக்கமாவது யாது?

வடமொழியிலே தனித்தனி ஐங்கூற்றெழுத்தாகவுள்ள

க ச ட த ப வென்னும் ஐந்து வருக்கமுமாம்.

உ–ம். க, க2, க3, க4, ங இவை ஐந்தும் கவ்வருக்கம் மற்றையவுமிப்படியே தத்தம் மெல்லெழுத்தோடு ஐவைந்தாக வரும்.

தற்சம மொழியாவது யாது?

ஒலி வேறுபாடின்றி வந்து வழங்கும் வடசொற்கள் தற்சமம் எனப்படும்.

உ–ம் கமலம், காரணம்

தற்பவமாவது யாது?

தமிழிலே ஏற்ற எழுத்தின்மையால் ஒலிதிரிந்து வந்து வழங்கும் வடசொற்கள் தற்பவம் எனப்படும். ஹர – ஜ் அரண். ஞானம் – ஞானம்.

ஐவருக்கத்தில் இடைநின்ற மூன்றும் எவ்வாறுச்சரிக்கப்படும்?

இரண்டு மூன்று நான்கு முறையே உரப்பியும் எடுத்துங் கனைத்துங் கூறப்படும்.

உ–ம்.: கவ்வருக்கத்தில் இரண்டாங் ககரம் உரப்பியும் மூன்றாங் ககரம் எடுத்தும், நான்காங் ககரம் கனைத்து முச்சரிக்க படுதல் காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மொழியாக்கம் ஆதலால் ஆரியமொழி திரிந்து தமிழ் மொழியாந் தன்மை யுணர்த்தத் தொடங்கி அவற்றின் பொதுவிதி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: இடையினான்கும் –** (ஆரியமொழியுள் அச்சு என்று வழங்கும் இ–ஈ–உ–ஊ ஏ–ஐ–ஓ–ஔ என வரும் உயிர் பதினாறினுள்) இடையிலே நின்ற என்னும் நான்கு உயிரும், **ஈற்றிலிரண்டும் –** இறுதியிலே நின்ற என்னும் இரண்டு உயிரும், **அல்லாவச்சு –** இந்த ஆறுமல்லாத உயிர்பத்தும். **ஐவருக்கம்** ( கசடதப என அல் என்று வழங்குமெய் முப்பத்தேழுள்) கசடதப என்னும் ஐந்து வருக்கத்தின், **முதலீறு –** முதலெழுத்தும் ஈற்றெழுத்துமாகிய, **கஙசஞடணதநபம –** என்னும் பத்து மெய்களும், **யவ்வாதிநான்மை**–யகர முதலாகிய, **யரலவ –** என்னும் நான்கு மெய்களும்.

**ளவ்வாகும்** – ளகரமுமாகிய, **ஐயைம்பொதுவெழுத்து** – இருபத்தைந் தெழுத்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவாகிய எழுத்துக்களாம், **ஒழிந்த நாலேழும்** – மேலே உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களின் இடையிலொழிந்த பதினைந்தும் முப்பதாமெய் முதலான எட்டினுள், ளகர மொழிந்த ஏழுமான இருபத்தெட்டும், **திரியும்** – ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாயினுந் தமக்கேற்ற பொதுவெழுத்தாய்த் திரிந்து வடமொழியாம், **எ – று.**

மேல், ஏழாமுயிரெனக் கூறுவாராதலால் இடையினான்கென வரையாது கூறினார். (வரைதல்–பொதுமையி னீக்குதல்), சிறப்பெழுத்துத் திரியு மெனவே பொதுவெழுத்து இயல்பாகியுந் தமக்கேற்ற விகாரமாகியும் வருமென்ப தாயிற்று. ஐயைம்பொது–எனவும், நாலேழுந் திரியும்–எனவும் முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– இடையில் நான்கும்** – (ஆரியமொழியுள் 'அச்' என வழங்கும் உயிர்பதினாறனுள்) **இடைநின்ற** ( என்னும்) நாலெழுத்துக்களும், **ஈற்றில்** – இறுதியில் உள்ள இரண்டும் – (என்னும்) இரண்டெழுத்துக்களும், **அல்லா** – நீங்கிய, **அச்சு** – (அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்து) உயிர்களும், **ஐவருக்கம்** – ('ஹல்' என்று வழங்குகின்ற மெய் முப்பத்தேழனுள் க ச ட த ப என்னும்) ஐந்து வருக்கங்களுடைய, **முதல்** – முதலிலுள்ள (க ச ட த ப என்னும் ஐந்தும்), **ஈறு** – இறுதியிலுள்ள (ங ஞ ண ந ம என்னும் ஐந்தும்), **ய ஆதி நான்மை** – ய ர ல வ என்னும் நான்கும், **ள** – ளவ்வும், **ஆகும்** – ஆகிய, **ஐயை எழுத்து** – இருபத்தைந்தெழுத்துக்களும், **பொது** – (ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவாம்; **ஒழிந்த** – அவை ஒழிந்த, **நாலேழும்** – இருபத்தெட்டெழுத்துக்களும், **திரியும்** – (ஆரியத்துக்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கேற்ற பொதுவெழுத்துக்களாகத்) திரியும்.

**குறிப்பு** :– வடமொழி – ஆரியத்துள் தமிழ்நடை பெற்றது. மேல், "ஏழாமுயிர்" என எடுத்துக் கூறுவராதலின், 'இடையினான்கு' என விதவாது கூறினார். 'ஐயைந்து பொதுவெழுத்து' எனவே, 'நாலேழ்' 'சிறப்பெழுத்து' என்பது பெற்றாம். அவை தமிழைநோக்கிச் சிறப்பாயின : சிறப்பெழுத்து திரியும் என்றதனால் பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்றதாயிற்று. ஆரியபாஷையுள் உயிரெழுத்துப் பதினாறாவன : – இவற்றுள் என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; ஒழிந்த அ ஆ இ ஈ உ ஊ எ ஐ ஒ ஔ என்னும் பத்தும் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்துக்கள்.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன : – க இவற்றுள் என்னும் இருபத் திரண்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ள என்னும் பதினைந்தும் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்துக்கள்.

ஐ வருக்கமாவனை :



1. ... கவர்க்கம்
2. ... சவர்க்கம்
3. ... டவர்க்கம்
4. ... தவர்க்கம்
5. ... பவர்க்கம்

ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி **தற்சமம்** எனப்படும். (தத் + ஸமம் – அதையொத்தது. உ–ம்.  அமலம்;  காரணம்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலும் ஆகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி **தற்பவம்** எனப்படும். (தத் + பவம் – அதினின்று தோன்றுவது) உ–ம் – சுகி; – போகி : இவை சிறப்பெழுத்தாலாயின. – அரன்; – செபம்; – ஞானம்: இவை பொதுவெழுத்தாலாயின.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு** – ஆரியமொழியுள் அச் சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையினின்ற என்னு நான்கும் ஈற்றினின்ற என்னும் இரண்டு மொழிந்து நின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், **ஐவருக்க முதல் ஈறு** – அல்லென்று வழங்கும் மெய் முப்பத்தேழுள்ளும் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கங்களின் முதலினின்ற க ச ட த ப என்னும் ஐந்தும் ஈற்றினின்ற ங ஞ ண ந ம என்னும் ஐந்தும், **ய ஆதி நான்மை** – ய ர ல வ என்னும் நான்கும், **ள ஆகும் ஐயைம்பொது எழுத்து** – ளவ்வுமாகிய இருபத்தைந்தெழுத்துக்களுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது வெழுத்துக்களாம், **ஒழிந்த நாலேழும் திரியும்**–இவை யன்றி மேலே உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும் முப்பதா மெய் முதலிய எட்டனுள் ளகர மொழிந்த ஏழுமாகிய இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழிலே தமக்கேற்ற பொது வெழுத்துக்களாய்த் திரிந்து வரும், **எ – று.**

சிறப்பெழுத்துத் திரியுமென வரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயுந் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதும் கூறினாராயிற்று.

ஆரியமொழியுள் உயிரெழுத்துப் பதினாறாவன:

இவைகளுள், என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த பத்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள்.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன:

இவைகளுள்

என்னும் இருபத்திரண்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த பதினைந்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள்.

ஆரியத்துள் உயிரை அச்சு, சுரம் எனவும், மெய்யை அல், வியஞ்சனம் எனவுங் கூறுவர்.

ஐவருக்கமாவன கவர்க்கம், சவர்க்கம், டவர்க்கம், தவர்க்கம், பவர்க்கும், என்பன. என்னும் ஐந்தும் கவர்க்கம்;
என்னும் ஐந்துஞ் சவர்க்கம்; என்னும் ஐந்தும் டவர்க்கம்;
என்னும் ஐந்துந் தவர்க்கம்;
என்னும் ஐந்தும் பவர்க்கம். ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி **தற்சமம்** எனப்படும்.

**உ—ம்.:** அமலம், கமலம், காரணம், குங்குமம் இவை பொதுவெழுத்தாலாகிய தற்சமமொழி.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதன் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி **தற்பவ**மெனப்படும்.

**உ—ம்.:** சுகி, போகி, சுத்தி இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழி.

அரன், செபம், ஞானம், அரி இவை பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்** – (ஆரிய மொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும்) இடையில் நின்ற என்னு நான்கும் ஈற்றில் நின்ற என்னுமிரண்டும் ஒழிந்து நின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், – **ஐவருக்கமுதல் ஈறு** – (ஹல் என்று வழங்கும் மெய் முப்பத்தேழுள்ளும் கவர்க்கம், சவர்க்கம், டவர்க்கம், தவர்க்கம், பவர்க்கம் என்னும்) ஐந்து வருக்கங்களின் முதலினின்ற க ச ட த ப என்னும் ஐந்தும் அவற்றின் ஈற்றில் நின்ற ங ஞ ண ந ம என்னும் ஐந்தும், –**ய ஆதி நான்மை ய ர ல வ என்னு நான்கும் ள ஆகும் ஐயைம் பொதுவெழுத்து** – ளகரமும் ஆகிய பொதுவெழுத் திருபத்தைந்தும், – ஒழிந்த நாலேழும் திரியும் – அல்லாத (உயிருள் இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் மெய்களுள் ஐவருங்கங்களிலும் இடையில் நின்ற பதினைந்தும் முப்பதாமெய்ம் முதலிய எட்டனுள் ளகரமொழிந்த ஏழும் ஆகிய இருபத்தெட்டுச் சிறப்பெழுத்துக்களும் தமிழில் (தத்தமக்கேற்ற பொதுவெழுத்துக்களாகத்) திரிந்துவரும். **எ—று.**

சிறப்பெழுத்துத் திரியுமென வரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயுஞ் சில தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதுங் கொள்ளப்படும்.

பொதுவெழுத்து விகாரமாதல் "ஆவீறையுமீயீறிகரமும்" என்பதனாலுங் காண்க.

## சமஸ்கிருத அக்ஷரம்

அச் எனப்படும் உயிரெழுத்துப் பதினாறாவன : – கு கூ ஜ உ ஊ ஊ வொ ஒ ஔ க்ஷ0 க்ஷ : இவைகளுள் என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த பத்துயிரும் பொதுவெழுத்துக்களாம்.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன : –

| | |
|---|---|
| இவை | கவர்க்கம் |
| ,, | சவர்க்கம் |
| ,, | டவர்க்கம் |
| ,, | தவர்க்கம் |
| ,, | பவர்க்கம் |

இந்த மெய்யெழுத்து முப்பத்தேழுள் ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்தாவன :என்னும் இரபத்திரண்டுமாம். இவ்விருபத் திரண்டொழிய நின்ற பதினைந்து மெய்களும் பொதுவெழுத்துக்களாம். ஆரிய எழுத்துக்களுள் பொதுவெழுத்துக்கள் உயிரிலே பத்தும் மெய்யிலே பதினைந்துமாக இருபத்தைந்தெனவும்; ஆரியச் சிறப்பெழுத்துக்கள் : உயிரிலே ஆறும், மெய்யிலே இருபத்திரண்டுமாக இருபத்தெட்டெனவுந் தொகையறிக.

ஆரியச்சிறப்பெழுத்திற்கு ஒத்த ஒலியுடைய எழுத்துத் தமிழில் இல்லாமையால் ஆரியச் சிறப்பெழுத்தாலாகிய மொழியை அவ்வொலி பிறழாமல் தமிழெழுத்தாலெழுதுதல் கூடாது. ஆதலால் ஆரியச் சிறப்பெழுத்தைத் திரித்துக் கொண்டே தமிழிலெழுதத்தகும்.

பொதுவெழுத்தான்மாத்திரமுண்டாகிய ஆரியமொழியே மிகுதியுந்திரிபடையாதெழுதத்தகும்.

பொதுவெழுத்துக்களும் தமிழெழுத்துப் போலன்றிப் பெரும்பாலும் வேற்றுவடிவாயேயிருக்கின்றன வேயெனின், அவை வரிவிடிவிற் பேதப்படுவனவன்றி ஒலிவடிவிற் பேதப்படுவனவல்லவென்க.

இங்கே பொதுவெழுத்தாகவுஞ் சிறப்பெழுத்தாகவும் வரிவடிவெழுத்தை நோக்காது ஒலிவடிவெழுத்தையே நோக்கிக் கொள்ளுக.

இடையினான்கும் என்னுமிச் சூத்திரத்தில் முன் அச் என்றதினால் மற்றவை (ஹல் என்னும்) மெய்யெழுத்தென்று உணரப்படுமாயினும், பொதுவெழுத்து இருபத்தைந்தென்றும், சிறப்பெழுத்து இருபத்தெட்டென்றுங் கூறியதினால் உயிருமெய்யுமான இவற்றின் தொகை ஐம்பத்து மூன்றென்று தெளியலாமேயன்றி உயிரினது தொகை இன்னதென்பதும், மெய்யினது தொகை இன்னதென்பதும் வகுத்தோதாது சுருங்கச் சொல்லிவிட்டார். உரையிற்கோடலென்னும் உத்தியால் உரையாசிரியர் விளக்க வேண்டும் திவ்விடத்தாவசியகமென்னுங் கருத்துப் பற்றியென்றறிக.

ஆரிய மொழிகள் தமிழில் வரும்போது தற்பவம், தற்சமம் என்று இரண்டு பிரகாரமாயிருக்கும்.

ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலும், பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலு முடிந்திருக்கிற ஆரியமொழிகள் திரிதன்முதலிய விகாரம்பெற்றுத் தமிழில்வந்து வழங்கும்போது அவை தற்பவமெனப்படும்.

உ–ம். = சுகி, = போகி, = சுத்தி.

இவை ஆரியச் சிறப்பெழுத்தான் முடிந்திருந்து விகாரம் பெற்றுத் தமிழில் வந்த தற்பவமொழிகள்.

அரன், = செபம், = ஞாநம், = அரி

இவை பொதுவெழுத்துச் சிறப்பெழுத்தென்று மிருவகையாலு முடிந்திருந்து விகாரம்பெற்றுத் தமிழில் வந்த தற்பவமொழிகள்.

ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரம்பெற்றும், விகாரமின்றியும் தமிழில் வந்து வழங்கும் வடமொழிகள் தற்சமம் எனப்படும்.

உ–ம் கார்யம் = காரியம், = மாலை, = அமலம், = காரணம்,

குங்குமம். இவை பொதுவெழுத்தாலாகியிருந்து தமிழில் திரிந்தும், திரியாதும், வந்த **தற்சம** மொழிகள். காரியமென்பதில் இகரம் வந்து சேர்ந்தது தோன்றல் **விகார**மெனவும், மாலையென்பதில் ஈற்றாகாரம் ஐகாரமானது **திரிதல்** விகாரமெனவுங் காண்க.

தற்பவதற்சமங்களை "ஆரியச் **சிறப்**பெழுத்தாற் பொதுச்சிறப்பா, லான வீரெழுத்தாலமைவ துதற்பவம்" "**ஆரியந்**தமிழ் பொதுவாமொழிதற்சமம்" என்று அகத்தியர் வகுத்துரைத்த சூத்திரங்களான் முறையே காண்க.

நன்னூலாரும் 'பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானும், ஈரெழுத்தானுமியைவன வடசொல்' என்று (வ74 சூத்திரத்தால்) தற்சம தற்பவமொழிகளைக் கூறினமை காண்க. (சகூ)

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: இடையில் நான்கும்** – (ஆரியமொழியுள் அச் என்று வழங்குகின்ற உயிர் பதினாறனுள்) நடுவிலுள்ள ( என்னும்) நாலெழுத்துக்களும், **ஈற்றில்** – கடையிலுள்ள, **இரண்டும்** – ( என்னும்) இரண்டெழுத்துக்களும், **அல்லா**–நீங்கலாகிய, **அச்சு** – (அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்து) உயிர்களும், **ஐ வருக்கம்** – (ஹல் என்று வழங்கும் மெய் முப்பத்தேழுள் க ச ட த ப என்னும்) ஐந்து வருக்கங்களினுடைய, **முதல்** – முதலிலுள்ள (க ச ட த ப என்னும்)

ஐந்தும், **ஈறு** – கடையிலுள்ள (ங ஞ ண ந ம என்னும்) ஐந்தும், **ய ஆதி நான்மை** – ய ர ல வ என்னும் நான்கும், **ள**–ளகரமும், **ஆகும்**–ஆகிய, **ஐ ஐ எழுத்து** – இருபத்தைந்து எழுத்துக்களும், **பொது** – (ஆரியத்திற்கும் தமிழிற்கும்) பொது வெழுத்துக்களாம்; **ஒழிந்த** – அவை யொழிந்த, **நாலேழும்** – இருபத்தெட்டு எழுத்துக்களும், **திரியும்** – (ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கு ஏற்ற பொது வெழுத்துக்களாகத்) திரிந்து வரும்; **எ–று.**

மேல் 'ஏழாமுயிர்' என விதந்து கூறுவராதலால், 'இடையில் நான்கு' என விதவாது கூறினார். ஐயைந்து பொதுவெழுத்து எனவே, நாலேழ் சிறப்பெழுத்து என்பது பெறப்பட்டது. சிறப்பெழுத்துத் திரியுமெனவே, பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கு ஏற்ற விகாரமாயும் வருமென்றதாயிற்று.

ஆரியபாஷையுள் உயிரெழுத்துப் பதினாறாவன:–

இவற்றுள், என்னும் ஆறும் – ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் மற்றைப் பத்தும் – ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது வெழுத்துக்கள். (தமிழிலுள்ள எகர ஒகர வுயிர்கள் வடமொழியில் இல்லை.)

மெய்யெழுத்து முப்பத்தேழாவன:–

இவற்றுள்,

என்னும் இருபத்திரண்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ள என்னும் மற்றைப் பதினைந்தும் – ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது வெழுத்துக்கள். (தமிழிலுள்ள ழகர றகர னகர மெய்கள் வடமொழியில் இல்லை.)

ஐவருக்கமாவன:– க வர்க்கம் –

ச வர்க்கம் –

ட வர்க்கம் –

த வர்க்கம் –

ப வர்க்கம் –

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாகவுள்ள எழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி **தற்சமம்** எனப்படும்.

**உ–ம்.:** அமலம், கமலம், காரணம், குங்குமம்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய

ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி, **தற்பவம்** எனப்படும்.

**உ–ம்.:** சுகி

போகி,

சுத்தி, இவை–சிறப்பெழுத்தாலாகிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவமொழி.

ஹரி:–அரி, ஹர; அரன், ஜய; சயம், ஞானம்; இவை – ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவமொழி.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். இடையில் நான்கும் – ஆரிய மொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையினின்ற நான்கும், ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு – ஈற்றினின்ற இரண்டுமொழிந்து நின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஒ ஔ என்னும் பத்தும், ஐ வருக்க முதல் ஈறு – (அல்லென்று வழங்கும் மெய் முப்பத்தேழுள்ளும்) க ச ட த ப என்னும் ஐந்துவருக்கங்களின் முதலினின்ற க ச ட த ப என்னும் ஐந்தும் ஈற்றினின்ற ங ஞ ண ந ம என்னும்ஐந்தும், ய ஆதி நான்மை – ய ர ல வ என்னும் நான்கும், ள ஆகும் ஐயைம் பொது எழுத்து 0ளவ்வுமாகிய இருபத்தைந்தெழுத்துக்களுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாம். ஒழிந்த நாலேழும் திரிபும் – இவையன்றி மேலே உயிருள் ஒழிந்த ஆறும் நைந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும் முப்பதாம் மெய் முதலிய எட்னுள் ளகர மொழிந்த ஏழுமாகிய இருபத்தெட்டும் ஆரிசஷயத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழிலே தமக்கேற்ற பொதுவெழுத்துக்களாய்த் திரிந்து வரும். எ–று. சிறப்பெழுத்துத் திரியுமென வரையறை கூறவே, பொதுவெழுத்து இயல்பாயுந் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதுங் கூறுனாராயிற்று.

ஆரிய மொழியுள் உயிரெழுத்துப் பதினாறாவன:

ஒ ஔ இவைகளுள்,

என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த பத்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள்.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன:

இவைகளுள் என்னும் இருபத்திரண்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த பதினைந்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள்.

ஆரியத்துள் உயிரை அச்சு, சுரம் எனவும்; மெய்யை அல், வியஞ்சனம் எனவும் கூறுவர்.

ஐவருக்கமாவன கவர்க்கம், சவர்க்கம், டவர்க்கம், தவர்க்கம், பவர்க்கம்

என்பன.

என்னும் ஐந்துங் கவர்க்கம்;

என்னும் ஐந்துஞ் சுவர்க்கம்;

என்னும் ஐந்தும் டவர்க்கம்;

என்னும் ஐந்துந் தவர்க்கம்;

என்னும் ஐந்தும் பவர்க்கம்.

ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும்.

உ–ம்.

அமலம்,

கமலம்,

காரணம்,

குங்குமம் – இவை பொதுவெழுத்தாலாகிய தற்சமமொழி.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெபத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதன் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும்.

உ–ம்.

போகி,

சுத்தி – இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழி.

அரன்,

செபம்,

ஞானம்,

ஹரி அரி– இவை பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழி.

ஆரிய மொழி வடமொழீயாதற்குச் சிறப்பு விதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) இடையில் நான்கும்–(ஆசியத்தில் அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற உயிர் பதினாறனுள்) நடுவிலுள்ள என்னும்) நாலெழுத்துக்களும். ஈற்றில் இரண்டும்–கடையிலுள்ள (என்னும்) இரண்டெழுத்துக்களும், அல்ல– நீங்கலாகிய, அச்சு–(அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்து) உயிர்களும்.

ஐ வருக்கம். என்னும் மெய் முப்பத்தேழுள் ககர முதல் ஐந்தைத் தெழுத்துக்களாகிய) ஐந்து வருக்கங்களுடைய, முதல்—முதலிலுள்ள (காடதப என்னும் ஐந்து) மெய்களும், ஈறு—கடையிலுள்ள (ங ஞ ண ந ம என்னும் ஐந்து) மெய்களும், ய ஆதி நான் மை – ய ர ல வ என்னும் நான்கு மெய்களும், ள – ளகர மெய்யும், ஆகும் ஐயை எபத்து – ஆகிய இருபத்தைந்து எழுத்துக்களும், பொது – (ஆரியத்திற்கும் தமிழிற்கும்) பொது வெழுத்துக்களாம்; ஒழிந்த – அவையொழிந்த, நாலேழும் – இருபத்தெட்டு எபத்துக்களும், திரியும் – (ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கேற்றபொது வெழுத்துக்களாகத்) திரிந்து வரும். எ—று.

**பொ—ரை.:** (ஆரிய மொழியுள் அச் என்று வழங்குகிற உயிர் பதினாறனுள்) நடுவிலுள்ள என்னும் நாலெழுத்துக்களும், கடையிலுள்ள என்னும் இரண்டெழுத்துக்களும் நீங்கலாகிய (அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்து) உயிர்களும், (ஹல் என்றுவழங்கும் மெய் முப்பத்தேழுள் ககரமுதல் ஐந்தைந் தெழுத்துக்களாகிய) ஐந்து வருக்கங்களினுடைய முதலிலுள்ள (க ச ட த ப என்னும்) ஐந்து மெய்களம், கடையிலுள்ள (ங ஞ ண ந ம என்னும்) ஐந்து மெய்களம், ய ர ல வ என்னும் நான்கு மெய்களும், ளகர மெய்யும் ஆகிய இருபத்தைந்து எழுத்துக்களும், ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது வெழுத்துக்களாம்; அவை யொழிந்த இருபத்தெட்டு எபத்துக்களும் (ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கேற்ற பொதுவெழுத்துக்களாகத்) திரிந்துவரும்.

மேல் 'ஏழாமுயிர்' என விதந்து கூறுவாராதலால், 'இடையில் நான்கும்' என விதவாது கூறினார். ஐயைந்து பொது வெழுத்தெனவே, நாலேழ் சிறப்பெழுத்து என்பது பெறப்பட்டது.

சிறப்பெழுத்துத் திரியுமெனவே பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்ப தாயிற்று.

ஆரிய பாஷையுள் உயிரெழுத்துப் பதினுறாவன:—

இவற்றுள் என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் மற்றைப் பத்தும் ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள்.

(தமிழிலுள்ள எகர ஒகர உயிர்கள் வடமொழியில் இல்லை.)

ஆரியபாஷையுள் மெய்யெழுத்து முப்பத்தேழாவன:—

இவற்றுள் என்னும் இருபத்திரண்டும், ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; க ங ச ஞ ட ண ப த ந ப ம ய ர ல வ ள என்னும் மற்றைப் பதினைந்தும் ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது வெழுத்துக்கள்.

(தமிழிலுள்ள ழகர றகர னகர மெய்கள் வடமொழியில் இல்லை.)

ஐவருக்கமாவன:–

க வர்க்கம்

ச வர்க்கம்

ட வர்க்கம்

த வர்க்கம்

ப வர்க்கம்

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாக வுள்ள எழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமமெனப்படும்.

(உ–ம்.) அமலம், கமலம், காரணம், குங்குமம்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்துாலுமாகித் திரிதல் முதலியவிகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி, தற்பவ மெனப்படும்.

(உ–ம்.) சுகி, ரோகி, சுத்தி, இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் தற்பவ மொழி.

அரி, அரன், சயம், ஞானம் இவை ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வழங்குந் தற்பவ மொழி.

(ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்பு விதி.)

## கா. நமசிவாய முதலியார்

**இடையில் நான்கும்** – (ஆரியமொழியுள் அச்சு என்று வழங்குகின்ற உயிர் பதினாறனுள்) நடுவிலுள்ள நாலெழுத்துக்களும், **ஈற்றில்** – கடையிலுள்ள, **இரண்டும்** – ) இரண்டெழுத்துக்களும், **அல்லா** – நீங்கலாகிய, **அச்சு** – (அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்து) உயிர்களும்; **ஐ வருக்கம்** – (ஹல் என்கிற மெய் முப்பத்தேழுள் கசடதப என்னும்) ஐந்து வருக்கங்களின், **முதல்** – முதலிலிருக்கின்ற (க ச ட த ப என்னும்) ஐந்து மெய்களும், **ஈறு** – கடையிலுள்ள (ங ஞ ண ந ம என்னும்) ஐந்து மெய்களும், **ய ஆதி நான்மை** – ய ர ல வ என்னும் நான்கு மெய்களும், **ள** – ளகரமெய்யும், **ஆகும்** – ஆகிய, **ஐயை எழுத்து** – இருபத்தைந்து எழுத்துக்களும், **பொது** – தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாகும் ; **ஒழிந்த** – அவை யொழிந்த, **நாலேழும்** – இருபத்தெட்டு எழுத்துக்களும், **திரியும்** – (ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கேற்ற பொது வெழுத்துக்களாகத்) திரிந்துவரும்.

மேல், 'ஏழாமுயிர்' (சூ – 147) என விதந்து கூறவராதலால், 'இடையினான்கும்' என விதவாது கூறினார். ஐயைந்து பொதுவெழுத்து எனவே, நாலேழ் சிறப்பெழுத்து என்பது பெறப்பட்டது. சிறப்பெழுத்துத் திரியும் எனவே, பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கேற்ற விகாரமாயும் வரும் என்பதாயிற்று.

ஆரிய மொழியுள் உயிரெழுத்துப் பதினாறாவன :

என்பனவாம்.

இவற்றுள்,

என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாம்; மற்றைப் பத்தும் ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்துக்களாம்.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன :

இவற்றுள்,

என்னும் இருபத்திரண்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாம் ; மற்றைப் பதினைந்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்களாம்.

ஐவருக்கமாவன :

கவர்க்கம் – 

சவர்க்கம் – 

டவர்க்கம் – 

தவர்க்கம் – 

பவர்க்கம் – 

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி, **தற்சமம்** எனப்படும்.

**உதாரணம்**

 – அமலம்

 – கமலம்

 – காரணம்

 – குங்குமம் முதலியன.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி, **தற்பவம்** எனப்படும்.

 – சுகி

 – போகி

 – சுத்தி

இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம்பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழிகளாம்.

𑌹𑌰𑌃 – அரன்

𑌜𑌯𑌃 – சயம்

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 – ஞானம்

𑌹𑌰𑌿𑌃 – அரி

இவை பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்குந் தற்பவமொழிகளாம்.

**மோசகு பொன்னையா**

ஒரு மொழியின் ஒலியமைப்பு எளிதில் மாறாது. சொற்களை மாற்றிப் பேச முடியும்; இலக்கண அமைப்பையுங் கூட மாற்றி அமைத்துப் பேச முடியும்; பேச்சொலிகளைச் சிறிது மாற்றினாலும் பொருள் மாற்றம் உண்டாகி நகைக்கிட மளிக்கும். ஆதலால், பிறமொழிச் சொற்கள் புகினும், பிறமொழி ஒலிகள் எளிதில் ஒரு மொழியில் புக இடமளிப்பதில்லை. பிறமொழிச் சொற்கள் ஒரு மொழியின் ஒலியமைப்பிற்கு ஏற்றவாறு மாறியே ஒரு மொழியில் இடம் பெறும். இஃது எல்லா மொழிகளுக்கும் அமைந்த பொது இயல்பு. தொல்காப்பியரும்,

*வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தோடு புணர்ந்த சொல்லா கும்மே.*

எனவும், அச்சொற்கள் பாகதமாய்ச்சிதைந்து வரினும் அவற்றுள்ளும் ஒலியமைப்புக்கு இயைந்தனவற்றைக் கொள்க என்பராய்,

*சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்,*

எனவும் விதியமைத்துப் போந்தார், இடைக்காலத்தில் சமய, தத்துவச் சிறப்புப் பெற்றிருந்தமையின், மொழி இயல் மரபுக்கு முரணாக ஆரியச் சொற்கள் பல தமிழ் மொழியிற் புகுத்தப்பட்டன. சேனாவரையர், 'இவை எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையாகிய ஒருசொல்லிலக்கண முடைமையான், இரண்டு சொல்லெனப் படா; ...... ஒரு சொல்லேயாம்' என்றும், 'தமிழ்ச்சொல் வடபாடைக்கட் செல்லாமையானும், வடசொல் எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானும்' என்றும் கூறியுள்ளமையால் அக்கால நிலை ஒருவாறு புலனாகும்.

இவ்வாசிரியர் ஆரியச் சொற்கள் வடசொற்களாய்த் தமிழில் வழங்கும் முறைமைக்கு விரிந்த இலக்கணம் வகுத்துக் கூறினமை தங்கால வழக்குநோக்கி அமைத்த ஒன்றே யாகும். ஒலிகள் மாற்றப்படாமல் சொற்கள் ஒரு மொழியில் வந்து வழங்கின், அவை தற்சமச் சொற்கள் என்றும்; ஒலிமுறைக்கேற்ப மாற்றப்பட்டு வந்து வழங்கின், அவை தற்பவச் சொற்கள் என்றும் பெயர் பெறும். பவணந்தியார் தற்பவச் சொல்லாக்க விதிகளையே கூறுகின்றார். ஒலி முறைக்கேற்ப ஆரிய ஒலிகளுக்கு நேர் தமிழ் ஒலிகளை விதித்தும், மொழி முதலில் வாரா ஒலிகளுள் முன்னர் அகர இகரங்களை

மொழி முதல் துணையாக விதித்தும்; தமிழில் இல்லா இணைப் பொலிகளின் இடையில் இ அ உ என்னும் உயிரொலிகளை விதித்தும் வடமொழியாக்கத்திற்கு வழிகாட்டினார்.

ஆரிய மொழியில் அச்சு என்று வழங்கும் உயிர்கள் பதினாறனுள், ஏழாம் உயிர்முதல் நான்கும், ஈற்றில் நின்ற இரண்டும் என்னும் ஆறும் நீங்கலாக, எஞ்சிய அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ பத்தும்; அல என வழங்கும் முப்த்தேழு மெய்களுள், க ச ட த ப என்னும் ஐவருக்கத்தில் முதலும் ஈறுமான க ங ச ஞ ட ண த ந ம என்னும் பத்தும் யகர முதல் நான்கான ய ர ல வ என்னும் மெய்களும், ளவ்வும் ஆகிய இருபத்தைந்தும் ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களாம்; இவையொழிந்த இருபத்தெட்டு ஆரிய எழுத்துக்களும், ஆரியத்திற்கே சிறப்பெழுத்தாகி ஏற்ற தமிழ் எழுத்தாகத் திரிந்து தமிழில் வடமொழியாம், எ—று.

ஆரியத்துள் உயிர் அச்சு, சுரம் எனவும், மெய் அல், வியஞ்சனம் எனவும் வழங்கும். சிறப்பெழுத்துத் திரியும் என்றதனால், பொது எழுத்துத் திரியாது இயல்பாக வரும் என்பதாயிற்று.

**எ—டு.**

அமலம், கமலம், காரணம், குங்குமம் – தற்சம மொழிகள்.

சுகி, போகி, சுத்தி –சிறப்பெழுத்தாலாகித் திரிந்து தமிழில் வந்து வழங்கும் தற்பவ மொழிகள்.

அரன், செபம், ஞானம், அரி – பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தானும் இயன்று திரிந்து தமிழில் வழங்கும் தற்பவமொழிகள்.

(19)

**146.** அவற்றுள்,
ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ [1]றிகரமும்.

அவற்றுள்,
ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்

மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ [1]றிகரமும்.

avaṟṟuḷ,
ēḷām uyir iyyum iruvum ai varukkaṭṭu
itaiyil mūṉṟum avvam mutalum
ettē yavvum muppaṭu sayavum
mēl oṉṟu satavum iraṇtu saṭavum
mūṉṟē yakavum aintu iru kavvum
ā īṟu aiyum mī īṟu ikaramum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for Sanskrit words

Of these (twenty-eight letters peculiar to Sanckrit), (ri) the Seventh Vowel (is changed) into 'i' or iru; the three middle letters in each of the five series are respectively changed into the first letter of each (particular series); the Eight (h), consonant(j), (some times) into 'y'; the Thirtieth (s), into c and y; the Thirty-first (sh), into c and d; the Thirty second (c), into 'c' when an initial and 'd' when a medial; the Thirty-third (h), into 'a' when an initial, and 'k' when a medial; the **thirty-fifth** (the), into 'double k.(of the common letters), final 'â' is changed into 'ai' and final i into 'i'.

## மயிலைநாதர்

**எ–ன்**, மேற் பொதுவகையாற் சொன்ன திரிபு விகாரத்தைப் பகுத்துணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** மேற் சொன்ன சிறப்பெழுத்துக்களுள் ஏழாமுயிர் இகரமும் இருவுமாம்; ஐந்து வருக்கங்களுள்ளும் இடையில் நின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம்; எட்டாமெய்யான சவ் வருக்கத்துள் எடுத்துச் சொல்லுமெய் ஒரோவிடத்து யகரமுமாம்; முப்பதாமெய் மொழி முதற்கட் சகரமும் இடைக்கண் யகரமுமாம்; முப்பத்தொன்றாமெய் மொழி முதற்கட் சவ்வும் இடைக்கண் டவ்வுமாம்; முப்பத்திரண்டாமெய் மொழி முதற்கட் சகரமும் இடைக்கண் தகரமுமாம்; முப்பத்து மூன்றாமெய் மொழி முதற்கண் அகரமும் இடைக்கட் ககரமுமாம்; முப்பத்தைந்தா மெய்யான கூட்டெழுத்து இறுதிகெட்டு இரண்டு ககரமுமாம்; ஆகார வீற்று மொழியுட் சிலவற்றின் ஈற்று ஆகாரம் ஐகாரமாம்; ஈகார வீற்று மொழியுட் சிலவற்றின் ஈற்று ஈகாரம் இகரமாம், **எ – று.**

மேலென்றது, முப்பதின் மேலான ஒன்று இரண்டு மூன்று ஐந்து கோடற்கென்க.

**வ – று.:** இடபம், விடபம், திட்டி எனவும்; இருடி, மிருகம், விருத்தி எனவும் ஏழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று. நகம், நாகம், மேகம்; சலவாதி, விசயம், சருச்சரை; பீடம், பீடை, திடம், தலம், தினம், தரை; பலம், பந்தம், பாரமென ஐந்து வருக்கத்திலும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லுமூன்றும் அவ்வம் முதலாயின. [2]அயம், பங்கயமென எட்டாமெய் யகரமுமாயிற்று. சாலை, சூலை, எனவும், மயானமெனவும் முப்பதாமெய் சகரமும் யகரமுமாயிற்று. [3]சட்டி, இடபம் என முப்பத்தொன்றாமெய் சகரமும் டகரமு மாயிற்று. சித்தி, சூத்திரம், சேனை எனவும், சாதனம், வத்தராயன் (வத்ஸராஜன் – உதயணன்) எனவும் முப்பத்திரண்டாமெய் சகரமும் தகரமுமாயிற்று. அரன், அரி, ஆரம் எனவும், அருகன், சிங்கம், மோகம் எனவும் முப்பத்துமூன்றாமெய் அகரமும் ககரமு மாயிற்று. பக்கம், தக்கணம் (தெற்கு – பாகதச் சிதைவு) என முப்பத்தைந்தாம் கூட்டெழுத்து ஈறு கெட்டு இரண்டு ககரமாயிற்று.

வேலை, சாலை, மாலை, உவமை, வனிதை என ஆகார வீறு ஐகாரமாயிற்று. புரி, மேதினி, குமாரி, நீதினி என ஈகார வீறு இகரமாயிற்று. இவை பொதுவெழுத்தாதல் தோற்றற்குச் சூத்திரத்தாற் பிரித்தோதினாரென்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** மேலதற்குச் சிறப்புவிதி **உணர் – ற்று.**

**இ–ள்.:** மேல் திரியும் என்றவற்றுள், சிறப்பெழுத்தாகிய ஏழாம் உயிர் இகரமும் இருவுமாம் ஐந்து வருக்கங்களினும் இடையில்நின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம்; எட்டாம் மெய்யான சவ் வருக்கத்துள் எடுத்துச் சொல்லும் மெய் ஒரோவிடத்து யகரமுமாம்; முப்பதாமெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் யகரமுமாம்; முப்பத்தொன்றாம் மெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண் டகரமும் ஆம்: முப்பத்திரண்டாம் மெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண் தகரமுமாம்; முப்பத்து மூன்றாம் மெய் மொழிமுதற்கண் அகரமும் இடைக்கண் ககரமுமாம்; முப்பத்தைந்தாம் மெய் இரண்டு ககரமுமாம்; பொதுவெழுத்துள் மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாம்; மொழியிறுதி ஈகாரம் இகரமாம், **எ–று.**

மேல் 'திரியும்' எனப் பொதுவிதி போந்தவற்றுள், பயின்று வருவனவற்றிற்குத் திரிபு கூறி, ஏனைய வந்தவழிக் காண்க என்பார், இகரமு மாகும் எனப் பயனிலை கொடுத்து முடியாது, இகரமும் என அவாய்நிலையாக முடித்தார்.

---

பாட வேறுபாடு.: 1.இய்யுமாம் 2. அயன், பங்கயன், 3.சாட்டுவலம், விடம்

வ – று.: இடபம் விடபம் திட்டி எனவும், இருடி மிருகம் விருத்தி எனவும் ஏழாம் உயிர் இகரமும் இருவும் ஆயிற்று. நகம் நாகம் மேகம் எனவும், சலவாதி விசயம் சருச்சரை எனவும், பீடம் பீடை திடம் எனவும், தலம் தினம் தரை எனவும், பலம் பந்தம் பாரம் எனவும் ஐந்து வருக்கத்தினும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லும் மூன்றும் அவ்வம் முதலாயின. அயம் பங்கயம் என எட்டாமெய் யகரமும் ஆயிற்று. சாலை சூலை எனவும், மயானம் எனவும் முப்பதாம் மெய் சகரமும் யகரமும் ஆயிற்று. சட்டி எனவும், இடபம் எனவும் முப்பத்தொன்றாம் மெய் சகரமும் டகரமும் ஆயிற்று. சித்தி சூத்திரம் சேனை எனவும், ஆதனம் வாதனை எனவும் முப்பத்திரண்டாம் மெய் சகரமும் தகரமும் ஆயிற்று. அரன் அரி எனவும், சிங்கம் மோகம் எனவும் முப்பத்துமூன்றாம் மெய் அகரமும் ககரமும் ஆயிற்று. பக்கம் தக்கிணம் என முப்பத்தைந்தாம் மெய் இரண்டு ககரமாயிற்று. வேலை சாலை மாலை உவமை வனிதை என ஆகாரவீறு ஐகார ஈறாயிற்று. புரி மேதிநி குமாரி என ஈகாரவீறு இகர வீறாயிற்று.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** மேற் பொது வகையாற் சொன்ன திரிவை ஈண்டுச் சிறப்பு வகையால் ஆரியத்திற்கே உரிய எழுத்துக்கு இன்னது இன்னது ஆமெனக் கூறியது.

**இ–ள்.:** **அவற்றுள்** – மேற்கூறிய ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்தினுள், **ஏழாமுயிர் இய்யுமிருவும்** – ஏழாமுயிர் இகரமும் இருவுமாம், **ஐ வருக்கத் திடையின் மூன்றும்** – ஐந்து வருக்கத்தினிடையும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்படுகின்ற மூன்றெழுத்தும், **அவ்வவ் முதலும்** – அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தும், **எட்டே யவ்வும்** – எட்டாம் மெய்யான சவ் வருக்கத்தில் எடுத்துச் சொல்லும் மெய் ஒரோவிடத்து யகரமுமாம், **முப்பது சயவும்** – முப்பதாம் மெய் மொழிமுதற்கண் சகரமும் இடைக்கண் யகரமுமாம், **மேலொன்று சடவும்** – முப்பத்தொன்றாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் டகரமுமாம், **இரண்டு சதவும்** – முப்பத்திரண்டாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் தகரமும், **மூன்றே யகவும்** – முப்பத்து மூன்றாம் மெய் மொழி முதற்கண் அகரமும் இடைக்கண் ககரமுமாம், **ஐந்திரு கவ்வும்** – முப்பத்தைந்தாம் மெய்யான கூட்டெழுத் திறுதி கெட்டு இரண்டு ககரமாம், **ஆவீறையும்** – ஆகார ஈற்று மொழியுட் சில ஈற்று ஆகாரம் ஐகாரமாம், **ஈயீறிகரமும்** – ஈகார ஈற்று மொழியுட் சில ஈற்று ஈகாரம் இகரமாம், **எ–று.**

**உ–ம்.:** இடபம், விடபம், திட்டி, எனவும்; இருடி, மிருகம், விருத்தி எனவும் ஏழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று. நகம், நாகம், மேகம், சலவாதி, விசையம், சருச்சரை, பீடம், பீடை, திடம், தலம், தினம், தரை, பலம், பந்தம், பாரம் என ஐந்து வருக்கத்தினும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லும் மூன்றும் அவ்வவ் முதலாயின. அயம், பங்கயம் என எட்டாம் மெய் யகரமாயிற்று. சாலை, சூலை எனவும்; மயானம், வியாகம் எனவும் முப்பதாம் மெய் மொழி முதற்கண்

சகாரமும் இடைக்கண் யகரமும் ஆயிற்று. சடம், சண்முகம் எனவும்; விடபம் பாடாணம் எனவும் முப்பத்தொன்றாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் டகரமும் ஆயிற்று. சித்தி, சூத்திரம், சேனை, சாதனம் எனவும், வத்திரம், பொத்தகம் எனவும் முப்பத்திரண்டாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் தகரமும் ஆயிற்று. அரன் அரி, ஆர் எனவும்; அருகன், சிங்கம், மோகம் எனவும் முப்பத்து மூன்றாம் மெய் மொழி முதற்கண் அகரமும் இடைக்கண் ககரமும் ஆயிற்று. பக்கம், தக்கணம் என முப்பத்தைந்தாம் கூட்டெழுத்து ஈறு கெட்டு இரண்டு ககரம் ஆயிற்று. வேலை, மாலை, சாலை, ஓமை, வனிதை என ஆகார வீறு ஐகாரமாயிற்று. குமாரி, நீதி என ஈகாரவீறு இகரமாயிற்று.

## விசாகப் பெருமாளையர்

**இது**, முன்சொல்லப்பட்டதற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

**இ—ள்.: அவற்றுள்** – முன்னே "திரியும்" என்ற வெழுத்துகளுள், **ஏழாமுயிர்**– சிறப்பெழுத்தாகிய வேழாமுயிரானது, **இய்யுமிருவும்** – இகரமாகவானாலும் இருவாகவனாலும் வரும், **ஐவருக்கத்து** – ஐந்து வருக்கங்களிலும், **இடையின்மூன்றும்** – நடுநின்ற மும்மூன் றெழுத்துகளும், **அவ்வம்முதலும்** – அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துகளாகும், **எட்டு** – எட்டாவதாகிய சகரவருக்கத்து மெய்யானது, **யவ்வும்** – ஒரோவிடத்தில் யகரமுமாகும், **முப்பது** – முப்பதாமெய்யானது, **சயவும்** – மொழிக்குமுதலிலே சகரமும் நடுவிலே யகரமுமாகும், **மேலொன்று** – முப்பத்தோரா மெய்யானது, **சடவும்** – மொழிக்குமுதலிலே சகரமும் நடுவிலே டகாரமுமாகும், **இரண்டு** – முப்பத்திரண்டாமெய்யானது, **சதவும்** – மொழிக்குமுதலிலே சகரமும் நடுவிலே தகரமுமாகும், மூன்று – முப்பத்துமூன்றாமெய்யானது, **அகவும்** – மொழிக்குமுதலிலே அகரமும் நடுவிலே ககரமுமாகும், **ஐந்து**–முப்பத்தைந்தா மெய்யானது, **இருகவ்வும்** – இரண்டு ககரமாகும், **ஆவீறு** – பொதுவெழுத்துகளிலே மொழியிறுதி ஆகாரமானது, **ஐயும்** – ஐகாரமாகும், **ஈயீறு** – மொழியிறுதி ஈகாரமானது, **இகரமும்** – இகரமாகும், **எ – று**.

**உ—ம்.:** இடபம்—எனவும், மிருகம்—எனவும், ஏழாமுயிர் இகரமும் இருவு மாயிற்று, நகம், நாகம் மேகம்—எனவும், சலவாதி விசயம் சருக்கரை—எனவும், பீடம் பீடை திடம்—எனவும், தலம் தினம் தரை—எனவும், பலம் பந்தம் பாரம்— எனவும், ஐந்து வருக்கங்களிலும் உரப்பியும் எடுத்துங் கனைத்துஞ் சொல்லப்படுகிற மும்மூன்றும் அவ்வவ் வருக்க முதலெழுத்தாயின. பங்கயம் எட்டாமெய் யகரமு மாயிற்று. சாலை—எனவும், மயானம்—எனவும், முப்பதாமெய் முதலிற் சகரமும் நடுவில் யகரமு மாயிற்று. சட்டி—எனவும், இடபம் முப்பத்தொன்றாமெய் முதலிற் சகரமும் நடுவில் டகரமு மாயிற்று, சித்தி— எனவும், வாதனை—எனவும், முப்பத்திரண்டாமெய் முதலிற் சகரமும் நடுவில் தகரமு மாயிற்று. அரன்—எனவும், மோகம்—எனவும், முப்பத்து மூன்றாமெய் முதலில் அகரமும் நடுவிற் ககரமு மாயிற்று. பக்கம் என முப்பத்திரண்டாமெய் இரண்டு ககர மாயிற்று, மாலை என ஆ வீறு ஐ யாயிற்று. புரி என ஈகார வீறு இகர மாயிற்று.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

105. மேலே திரியுமென்றவற்றுள் இவை இவை இன்னவாறு திரியுமென்பதுணர்த்துஞ் சூத்திரம் யாது?

அவற்றுள்,
ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்.

(அவற்றுள்,
ஏழாம் உயிர் இய்யும் இருவும் ஐவருக்கத்து
இடையின் மூன்றும் அவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேல்ஒன்று சடவும் இரண்டு சதவும்
மூன்று அகவும் ஐந்து இரு கவ்வும்
ஆஈறு ஐயும் ஈ ஈ று இகரமும்)

இ—ள்.: **அவற்றுள்** – மேற்றிரியுமென்றவற்றுள், **ஏழாம் உயிர் இயும் இருவும்** – சிறப்பெழுத்தாகிய ஏழாமுயிர் இகரமும் இருவுமாம். **ஐவருக்கத்து இடையின் மூன்றும் அவ்வம் முதலும்** – ஐந்து வருக்கங்களினும் இடைநின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம்; **எட்டே யவ்வும்** – எட்டாமெய்யான சவ்வருக்கத்துள் எடுத்துச் சொல்லுமெய் ஒரோவி டத்து யகரமுமாம்; **முப்பது சயவும்** – முப்பதாமெய் மொழி முதற்கட் சகரமும் இடைக்கண் யகரமுமாம்; **மேல் ஒன்று சடவும்**–முப்பத்தொன்றாமெய் மொழிமுதற்கட் சகரமும் இடைக்கண் டகரமுமாம்; **இரண்டு சதவும்** – முப்பத்திரண்டாமெய் மொழிமுதற்கட் சகரமும் இடைக்கண் தகரமுமாம்; **மூன்று அகவும்** – முப்பத்தமுன்றாமெய் மொழிமுதற்கண் அகரமும் இடைக்கட் ககரமுமாம் **ஐந்து இரு கவ்வும்** – முப்பத்தைந்தாமெய் இரண்டு ககரமாம்; **ஆ ஈறு ஐயும்** – மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாம் **ஈ ஈறு இகரமும்** – மொழியிறுதி யீகாரம் இகரமாம், **எ—று.**

மேல் 'திரியும்' எனப் பொதுவிதி போந்தவற்றுள், பயின்றுவருவனவற்றிற்குத் திரிபுகூறி, ஏனைய வந்தவழிக் காண்கவென்பார். இகரமுமாகுமெனப் பயனிலை கொடுத்து முடியாது இகரமுமென அவாய்

நிலையாக முடித்தார்.

வடமொழி ஏழாமுயிராகிய இருவென்னு மெழுத்துத் தமிழில் எப்படித்திரியும்?

"ஏழாமுயிரிய்யுமிருவும்"

உ.-ம். இருஷபம்-இடபம்

இருஷி-இருடி.

ஐவருகத்தினும் இடைநின்ற மும்முன்றெழுத்துக்களும் எப்படித்திரியும்?

"ஐவருக்கத்திடையின் மூன்றும் அவ்வம்முதலும்"

உ.-ம். நகம், நாகம், மேகம், இம்முன்று ககரமும் வடமொழியில் முறையே இரண்டாம் மூன்றாம் நான்காம் ககரங்கள் அவை தமிழில் முதற்ககரமாகத் திரிந்தன. ச ட த ப க்க ளுமிவ்வாறே வரும்.

எட்டாமெய்யாகிய ஜகரம் சகரமாகவன்றி வேறெழுத்தாகவுந் திரியுமா?

"எட்டேயவ்வும்"

உ.-ம். கஜம்-கயம்

முப்பதாமெய் எப்படித்திரியும்?

"முப்பதுசயவும்"

உ.-ம். சங்கரன்- சங்கரன்.

தேசம் - தேயம்.

முப்பத்தொராமெய்யாகிய ஷகரம் எப்படித்திரியும்?

"மேலொன்று சடவும்"

உ.-ம். ஷண்முகன்-சண்முகன்.

விஷம்-விடம்.

முப்பத்திரண்டாமெய்யாகிய ஸகரம் எப்படித்திரியும்?

"(மேல்) இரண்டுசதவும்"

உ.-ம். மாஸம்-மாசம்.

மாஸம்-மாதம்.

ஸபை - சபை.

முப்பத்து மூன்றா மெய்யாகிய ஹ எப்படித்திரியும்?

"(மேல்) மூன்றே அகவும்"

உ.-ம். ஹர- அரன்.

மோஹம் – மோகம்.

மஷீ–மகி.

ஹ மொழிமுதலில் அகரமும், இடையிலும் கடையிலும் ககரமுமாம்.

113. முப்பத்தைந்தா மெய்யாகிய க்ஷ எப்படித்திரியும்?

"(மேல்) ஐந்திருகவ்வும்"

உ–ம். பக்ஷம்–பக்கம்.

இது மொழிமுதலில் ஒருககரமாம்.

உ–ம். க்ஷீரம்–கீரம்.

114. ஆகாரவீறும் ஈகாரவீறும் எப்படியாகும்?

"ஆவீறு ஐயும் ஈயீறு இகரமும்"

உ–ம். மாலா –மாலை.

மஹீ–மகி.

ஸ்திரீ–ஸ்திரி.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மேற் கூறியதற்குச் சிறப்புவிதி யுணர்த்திற்று.

**இ–ள்.: அவற்றுள் –** முன்னே திரியு மென்றவற்றுள், **எழாமுயிர்–** ஏழாமுயிராகிய– Scan என்பது, **இய்யுமிருவும்**–இகரமாகவும் இருவாகவுந் திரியும்,

**உ–ம்.:** இடபம், விடபம், திட்டி–எனவும், இருடி, மிருகம், விருத்தி–எனவும், **ஐ வருக்கத்திடையின் மூன்றும் –** கசடதப என்னும் ஐந்து வருக்கங்களினிடையிலே, (உரப்பியும்–படுத்தும்–கனைத்துஞ் சொல்லப்படும்) மும்மூன்றும், **அவ்வம் முதலும் –** அந்தந்த வருக்கங்களின் முதலெழுத்துக்களாகவுந் திரியும்.

**உ–ம்.:** நகம், நாகம், மேகம் எனவும்; சலவாதி, விசயம், சருச்சரை எனவும்; பீடம், பீடை, திடம் எனவும்; தலம், தினம், தரை எனவும்; பலம், பந்தம், பாரம் எனவும்; ஐ வருக்கத்திடையின் மூன்றும் அந்தந்த முதலெழுத்துகளாய்த் திரிந்தன.

**எட்டேயவ்வும் –** சவ் வருக்கத்தி லெடுத்துச் சொன்ன எட்டாமெய் ஒரோரிடத்து யகரமாகவுந் திரியும்.

**உ–ம்.:** அயம், பங்கயம் எனக் காண்க. **முப்பதுசயவும்**–முப்பதாமெய் மொழி முதலிலே சகரமாகவும் இடையிலே உகரமாகவுந் திரியும்.

**உ–ம்.:** சாலை, சூலை எனவும் மயானம் எனவுங் காண்க. **மேலொன்று**

**சடவும்**–முப்பத்தொன்றா மெய் முதலிலே சகரமாகவும் இடையிலே டகர மாகவுந் திரியும்.

**உ–ம்.:** சட்டி எனவும், இடபம் எனவுங் காண்க. **இரண்டுசதவும்** – முப்பத்திரண்டாமெய் முதலிலே சகரமாகவும் இடையிலே தரகமாகவுந் திரியும்.

**உ–ம்.:** சித்தி, சூத்திரம், சேனை எனவும், ஆதனம், வாதனை எனவுங் காண்க. **மூன்றேயகவும்** – முப்பத்துமூன்றா மெய் முதலிலே அகரமாகவும் இடையிலே ககரமாகவுந் திரியும்.

**உ–ம்.:** அரன், அரி எனவும்; சிங்கம், மோகம் எனவுங் காண்க. **ஐந்திருகவ்வும்**–முப்பத்தைந்தாமெய் இரண்டுககரமாகத் திரியும்.

**உ–ம்.:** பக்கம்–தக்கணம் என வரும்.

**ஆவீறையும்** – பொதுவெழுத்துள் மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாகவும், **ஈயீறிகரமும்**–மொழியிறுதி ஈகாரம் இகரமாகவுந் திரியும்.

**உ–ம்.:** வேலை, சாலை, மாலை, உவமை எனவும்; புரி, மேதினி, கவுரி எனவு முறையே காண்க. பிறவுமன்ன. பயின்று வருவன வற்றிற்குத் திரிபு கூறி ஒழிந்தன வந்த இடத்திற் காண்க வென்று சொல்ல வந்தவர் இச் சூத்திரத்திற்குப் பயனிலை கொடாமல் அவாய் நிலையாய் முடித்தார். இனி **யுரையிற்கோடலால்**, முப்பத்தைந்தாமெய் மொழியிடையிலே இரண்டு ககரமாகத் திரிதலன்றி மொழிமுதலிலே கமித்தல், கமை என ஒரு ககரமாகத் திரிந்து வருதலுங் கொள்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– அவற்றுள்** – (முன்னே "திரியும்" என்ற) சிறப்பெழுத்துக் களுள், **ஏழ் ஆம் உயிர்** – ஏழா முயிரானது (), **இய்யும் இருவும்** – இகாரமாக வாயினும் இருவாகவாயினும் (திரியும்); **ஐவருக்கத்து** – ஐந்து வருக்கங்களிலும், **இடையில் மூன்றும்** – நடுநின்ற மும்மூன்று எழுத்துக்களும், **அவ்வம்முதலும்** – அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்தாகத் (திரியும்); **எட்டு** – எட்டாவது மெய் (ஜ), **யவ்வும்** (சகரமாதலன்றி ஒரோவிடத்து) யகரமாகவும் (திரியும்); **முப்பது** – முப்பதாம் மெய் (), **சயவும்** – (மொழி முதலில்) சகரமாகவும் (நடுவில்) சகரமாகவும் யகரமாகவும் (திரியும்); **மேல் ஒன்று** – முப்பத்தொன்றாம் மெய் (ஷ), **சடவும்** – (முதலில்) சகரமாகவும் (இடைகடைகளில்) டகரமாகவும் (திரியும்); **இரண்டு** – முப்பத்திரண்டாம் மெய் (ஸ), சதவும் – (முதலில்) சகரமாகவும் (நடுவில்) சகரமாகவும் தரகமாகவும் (திரியும்); **மூன்று** – முப்பத்து மூன்றாம் மெய் (ஹ), **அகவும்**– (முதலில்) அகரமுதலிய உயிர்களாகவும் (நடுவில்) ககரமாகவும் (திரியும்); **ஐந்து** – முப்பத்தைந்தாம் மெய் (க்ஷ), **இருகவ்வும்** – இரண்டு ககரமாகத் (திரியும்); **ஆ ஈறு** – (பொது வெழுத்துக்களில்) மொழியிறுதி ஆகாரமானது, **ஐயும்** – ஐகாரமாகத் (திரியும்); **ஈ ஈறு** – மொழியிறுதி ஈகாரமானது – **இகரமும்** – இகரமாகக் (திரியும்)

குறிப்பு : – 'மூன்றே அகவும்' என்றதில் தலைமைபற்றி அ மற்றை உயிர்களையுங் குறித்தது.

உதாரணம் ;

| | | | |
|---|---|---|---|
| (1) | ... | இடபம் | ஏழாமுயிர் இ இரு எனத் |
| (2) | ... | மிருகம் | திரிந்தது. |
| 1. | ... | நகம். (உகிர்) | |
| | ... | நகம் (மலை) | |
| | ... | அகம் (பாவம்) | |
| 2. | ... | சவி (ஒளி) | |
| | ... | விசயம் | |
| | ... | சருச்சரை (சிதைவு) | |
| 3. | ... | பீடம் | |
| | ... | சடம் | |
| | ... | கூடம் (மறைவு) | |
| 4. | ... | கதனம் (சொல்லல்) | |
| | ... | தினம் | |
| | ... | தனம் (பொருள்) | |
| 5. | ... | பலம் (பயன்) | |
| | ... | பலம் (வலிமை) | |
| | ... | பாரம் (சுமை) | |
| | ... | பங்கயம் (ஜ – யகரமாகத் திரிந்தது). | |
| | ... | சங்கரன் | சகர யகரங்களாகத் |
| | ... | பாசம் | திரிந்தது. |
| | ... | தேயம் | |
| ஷ | ... | சண்முகன் | சகர டகரங்களாகத் |
| | ... | விடம் | திரிந்தது. |
| | ... | பாடை | |
| ச | ... | சபை | சகர தகரங்களாகத் |
| | ... | வாசம் | திரிந்தது. |
| த | ... | மாதம் | |
| ஹ | ... | அரன் | அகர தகரங்களாகத் |
| | ... | சகசம் | திரிந்தது. |
| | ... | மகி | |
| க்ஷ | ... | பக்கம் (க்ஷ – இரண்டு ககரமாகத் திரிந்தது) | |

... மாலை (ஆவீறு ஐயாயிற்று)
... புரி (ஈயீறு இகரமாயிற்று)

மேல் "திரியும்" எனப் பொதுவிதி போந்தவற்றுள் பயின்று வருவன வற்றுக்குத் திரிபுகூறி, ஏனைய வந்துழிக்காண்க வென்பார் 'இகரமும் ஆகும்' எனப் பயனிலைகொடுத்து முடியாது 'இகரமும்' என அவாய் நிலையாக முடித்தமையால் 'க்ஷ' இருககரமாதலே யன்றி, க்ஷணம் – கணம், க்ஷீரம் – கீரம் என ஒரு ககரமாகவும்; பக்ஷம் – பட்சம், பக்ஷி – பட்சி என டகர சகரமாகவும்; பிக்ஷை – பிச்சை என இரு சகரமாகவும்; க்ஷேமம் – சேமம் என ஒரு சகரமாகவும் திரிதல் முதலியவுங் கொள்க.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: அவற்றுள்**– முன்னே திரியுமென்ற சிறப்பெழுத்துக்களுள், **ஏழாம் உயிர் இய்யும் இருவும்** – ஏழாமுயிராகிய ஐகாரம் இகரமாகவும் இருவாகவுந் திரியும், **ஐவருக்கத்து இடையின் மூன்றும் அவ்வம் முதலும்** – ஐந்து வருக்கங்களிலும் இடை நின்ற மும்மூன் றெழுத்தும் அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்தாகத் திரியும், **எட்டு யவ்வும்** – எட்டாமெய்யாகிய ஜகாரம் மொழியிடையில் யகரமாகவுங் திரியும், **முப்பது சய வும்** – முப்பதாமெய்யாகிய காரம் மொழி முதலிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவும் யகரமாகவும் திரியும், **மேல் ஒன்று சடவும்**–முப்பத்தொரா மெய்யாகிய ஷகாரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையிலுங் கடையிலும் டகரமாகவுந் திரியும், **இரண்டு ச ஐ தவும்** – முப்பத்திரண்டா மெய்யாகிய ஜகாரம் மொழி முதலிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவுந் தகரமாகவுந் திரியும், **மூன்று அ க வும்** – முப்பத்துமூன்றாமெய்யாகிய ஹகாரம் மொழி முதலில் அகரமாகவும் இடையிலுங் கடையிலும் ககரமாகவுந் திரியும், **ஐந்து இருகவ்வும்** – முப்பத்தைந்தாமெய்யாகிய க்ஷகாரம் இரண்டு ககரமாகத் திரியும், **ஆ ஈறு ஐயும்** – பொதுவெழுத்துக்களுள்ளே மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாகத் திரியும், **ஈ ஈறு இகரமும்** – மொழியிறுதி ஈகாரம் இகரமாகத் திரியும், **எ – று.**

பயின்று வருவனவற்றிற்குத் திரிபு கூறி ஒழிந்தன வந்தவிடத்திற் காண்க என்பார், இகரமுமாகு மெனப் பயனிலை கொடுத்து முடியாது இகரமுமென அவாய்நிலையாக முடித்தார்.

**உரையிற்கோடலால்,** ++++ கீரம் என முப்பத்தைந்தா மெய் மொழிமுதலில் ஒரு ககரமுமாகு மெனக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அவற்றுள்** – திரியுமென்று முற்குறித்த சிறப்பெழுத்துக்களில், – **ஏழாம் உயிர் இய்யும் இருவும்** – ஏழாம் உயிராகிய காரம் இரகமாகவும் இருவாகவுந் திரியும், – **ஐ வருக்கத்து இடையின் மூன்றும் அவ்வம் முதலும்** – ஐந்துவருக்கங்களிலும் இடைநின்ற மும்மூன்றெழுத்தும்,

அவ்வவ்வருக்கத்தின் முதலெழுத்தாகத் திரியும், – **எட்டு யவ்வும்** – எட்டாமெய்யாகிய ஜகாரம் மொழியிடையில் யகாரமாகவுந்திரியும், – **முப்பது சயவும்** – முப்பதாமெய்யாகிய காரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவும் யகரமாகவுந் திரியும், – **மேல் ஒன்று சடவும்** – முப்பத்தொராமெய்யாகிய ஷகாரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையிலுங் கடையிலும் டகரமாகவுந் திரியும், – **இரண்டு சதவும்** – முப்பத்திரண்டாமெய்யாகிய ஸகாரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவுந் தகரமாகவுந் திரியும், – ***மூன்று அகவும்** – முப்பத்து மூன்றாமெய்யாகிய ஹகாரம் மொழிமுதலில் அகரமாகவும் இடையில் ககரமாகவுந் திரியும், – **ஐந்து இரு கவ்வும்** – முப்பத்தைந்தாமெய்யாகிய க்ஷகாரம் இரண்டு ககரமாகத்திரியும், – **ஆ ஈறு ஐயும்** – பொதுவெழுத்துக்களுள்ளே மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாகத் திரியும், – **ஈ ஈறு இகரமும்** – மொழியிறுதி ஈகாரம் இகரமாகத் திரியும். **எ–று.**

பயின்று வருவனவற்றிகுத் திரிபுகூறி ஒழிந்தன அருகிவருதலால் அவற்றை வந்தவிடத்திற் காண்கவென்பார் இகரமுமாகுமென்று பயனிலை கொடுத்து முடியாது இகரமுமென அவாய்நிலையாக முடித்தார். (பயின்று வருதல் – மிகுதியாகவருதல் அருகிவருதல் – சிறுபான்மையாக வருதல். அவாய்நிலை – முடிவுபெறாமல் மேலொன்றை வேண்டியே நிற்பது.)

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: அவற்றுள்** – முன்னே ''திரியும்'' என்ற சிறப்பெழுத்துக்களுள், **ஏழ் ஆம்உயிர்** – ஏழாமுயிரானது, **இய்யும் இருவும்** – இகரமாகவும் இருவாகவும்; **ஐ வருக்கத்து** – ஐந்து வர்க்கங்களிலும், **இடையில் மூன்றும்** – நடுநின்ற மும்மூன்று எழுத்துக்களும், **அவ் அவ் முதலும்** – அந்தந்த வருக்கத்தின் முதலெழுத்துக்களாகவும்; **எட்டு** – எட்டாவது மெய் (ஜ), **யவ்வும்** – (சகரமாகத் திரிதல் மாத்திரமே யன்றி) யகரமாகவும்; **முப்பது** – முப்பதாம் மெய் (ஜ) **ச யவும்** – (மொழிமுதலிறுதிகளில்) சகரமாகவும் (நடுவில்) சகரமாகவும் யகரமாகவும்; **மேல்ஒன்று** – முப்பத்தொன்றாம் மெய் ( ஷ ), **ச டவும்** – (முதலில்) சகரமாகவும் (இடைகடைகளில்) டகரமாகவும்; **இரண்டு** – முப்பத்திரண்டாம் மெய் (ஸ), **ச தவும்** – (முதலில்) சகரமாகவும் (இடையில்) சகரமாகவும் தகரமாகவும்; **மூன்று** – முப்பத்துமூன்றாம்மெய் (ஹ), **அ கவும்** – (முதலில்) ஏறிநின்றஉயிராகவும் (இடையில்) ககரமாகவும்; **ஐந்து** – முப்பத்தைந்தாம்மெய் (க்ஷ), **இருகவ்வும்**–இரண்டு ககரமாகவும்; **ஆஈறு** – (பொது வெழுத்துக்களிலே) மொழியிறுதி ஆகாரமானது, **ஐயும்** – ஐகாரமாகவும்; **ஈ ஈறு** – மொழியிறுதி ஈகாரமானது, **இகரமும்** – இகரமாகவும், (திரியும்); **எ–று.**

'முன்றே அகவும்' என்றதில் அ என்றது, மற்ற உயிர்கட்கு உபலக்ஷணம்.

**உ–ம்.:**

| | |
|---|---|
| நகம் (உகிர்) | ஏழாம் உயிர் இ, இரு எனத் திரிந்தது |
| நாகம் (பாம்பு) | |
| மேகம் | ஐந்து வருக்கத்தி |
| சவி (ஒளி.) | |
| விசயம் | லும் இடைநின்ற |
| சடிதி. | |
| பீடம் | மும்மூன்று எழுத்துக்களும் – அ ங வ் வ வ் வ ரு க் க த் தி ன் முதலெழுத்தாகத் திரிந்தன. |
| சடம். | |
| கூடம். (மறைவானது) | |
| தலம். | |
| தினம். | |
| தரை. | |
| பலம் (பயன்) | |
| பலம் (வலிமை) | |
| பாரம். | |
| யமதங்கி (மொழிமுதல்.) | ஜ – யகரமாகத் திரிந்தது. +++ – சகரமாகவும், யகரமாகவும் திரிந்தது. |
| பங்கயம் (மொழியிடை.) | |
| சங்கரன். (மொழிமுதல்.) | |
| ஆசை. (மொழியிறுதி.) | |
| பாசம்(மொழியிடை.) | |
| தேயம் | (மொழியிடை.) ஷ – சகரமாகவும் |
| சண்முகன் (மொழிமுதல்.) | டகரமாகவும் திரிந்தது. |
| விடயம். (மொழியிடை) | |
| பாடை (கடை) | |
| . . . | சபை. (மொழிமுதல்) ஸ சகரமாகவும். |
| . . . | வாசம் (மொழியிடை) தகரமாகவும் திரிந்தது. |

ஹ உயிர் – ஹரி : ஹார:, .... அரி ஆராம், மொழி முதல் ஹ யிராக

ஹிலை – இமம், ஏமம் , வும் ககரமாக

க – லொஹ. மோகம் மொழியிடை, வும் திரிந்தது.

க்க – வக்ஷ– பக்கம்.

க்ஷ – இரண்டு கரகமாகத் திரிந்தது.

ஐ – மாலை .

ஆகாரவீறு – ஐகாரமாகத் திரிந்தது.

இ– புரி ஈகாரவீறு இகரமாகத் திரிந்தது.

ஆரம் மாதம்

ஆவீற்றையும் ஐயீற்றையும் இறுதியிற் கூறியது, அவை பொதுவெழுத்தாதல் தோன்ற வென்க.

பயின்று வருவனவற்றிற்குத் திரிபுகூறி, மற்றவை வந்தவிடத்திற் காண்க வென்பார், 'இகரமுமாகும்' எனப் பயனிலை கொடுத்து முடியாமல் 'இகரமும்' என அவாய் நிலையாக முடித்தார். (அவாய் நிலையாவது – ஒருசொல் மற்றொரு சொல்லை வேண்டி நிற்பது.)

அதனால் க்ஷகரம் – இரு ககர மாதலே யன்றி, க்ஷணம் – கணம், க்ஷமா–கமை, க்ஷீரம் – சீரம், க்ஷுத்ரம் – சூத்திரம் என ஒரு ககரமாகவும்: கடாக்ஷம் – கடாட்சம், மீநாக்ஷி – மீனாட்சி என டகர சகரமாகவும்: பிக்ஷா – பிச்சை என இரு சகரமாகவும் க்ஷேமம் – சேமம் என ஒரு சகரமாகவும் திரிந்து வருதல் முதலியன கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். அவற்றுள் – முன்னே திரியுமென்ற சிறப்பெழுத்துக்களுள், ஏழாம் உயிர் இய்யும் இருவும் – ஏழாமுயிராகிய ஐ காரம் இகரமாகவும் இருவாகவுந் திரியும். ஐவருக்கத்து இடையின் மூன்றும் அவ்வம் முதலும் – ஐந்து வ்ருக்கங்களிலும் இடை நின்ற மும்மூன்றெழுத்தும் அவ்வவ்ருக்கத்தின் முதலெழுத்தாகத் திரியும். எட்டு யவ்வும் – எட்டாமெய்யாகிய ஜகாரம் மொழியிடையில் யகரமாகவுந் திரியும். முப்பது சயவும்– முப்பதாமெய்யாகிய () காரம் மொழி முத

'இய்யுமாம்' என்பதும் பாடம்.

லிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவும் யகரமாகவுந் திரியும். மேல் ஒன்று சடவும் – முப்பத்தொராமெய்யாகிய ஷகாரம் மொழி முதலிற் சகரமாகவும் இடையிலுங் கடையிலுட் டகரமாகவுந் திரியும். இரண்டு ச த வும் – முப்பத்திரண்டாமெய்யாகிய () காரம் மொழி முதலிற் சகரமாகவும் இடையில் ஏற்ற பெற்றி சகரமாகவுந் தகரமாகவுந் திரியும். மூன்று அ க வும் – முப்பத்து மூன்றாமெய்யாகிய ஹகாரம் மொழி முதலில் அகரமாகவும் இடையிலுங் கடையிலும் ககரமாகவுந் திரியும். ஐந்து இருகவ்வும் – முப்பத்தைந்தா மெய்யாகிய க்ஷகாரம் இரண்டு ககரமாகத் திரியும். ஆ ஈறு ஐயம் – பொது வெபத்துககளுள்ளே மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாகத் திரியும், ஈ ஈறு இகரமும் – மொழி யிறுதி ஈகாரம் இகரமாகத் திரியும். எ–று.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) அவற்றுள்–(முன்னே 'திரியும்' என்ற) எழுத்துக்களுள், ஏழ் ஆம் உயிர் – (சிறப்பெழுத்தாகிய) ஏழாம் உயிரானது, இய்யும் இருவும் – இகரமாக வானாலும் இருவாகவானாலும் (வரும்); ஐவருகத்து இடையில் மூன்றும் – ஐந்து வருக்கங்களிலும் நடு நின்ற மும்மூன்றெழுத்துக்களம், அவ் வம் முதலும் – அவ் வவ் வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும்; எட்டு – எட்டாவதாகிய சகர வருக்கத்து மெய்யானது, யவ்வும் – (ஒரோவிடத்தில்) யகர முமாகும்; முப்பது – முப்பதா மெய்யானது, ச யவும் – மொழிக்கு முதலிலே சகரமும் (நடுவிலே) யகரமு மாகும்; மேல் ஒன்று – முப்பத்தோராமெய்யானது, ச ட வும் – (மொழிக்கு முதலிலே) சகரமும் (நடுவிலே) டகரமுமாகும்; இரண்டு – முப்பத்திரண்டா மெய்யானது, ச த வும்–மொழிக்கு (முதலிலே) சகரமும் நடுவிலே) தகரமுமாகும்; :மன்று – முப்பத்து மூன்றா மெய்யானது, அ க வும் – (மொழிக்கு முதலிலே) அகரமும் (நடுவிலே) ககரமு மாகும்; ஐந்து – முப்பத்தைந்தா மெய்யானது, இரு கவ்வும் – இரண்டு ககர மாகும்; ஆ ஈறு – (பொதுவெழுத்துக்களிலே) மொழி இறுதி ஆகாரமானது, ஐயும் – ஐகார மாகும்; ஈ ஈறு – மொழியிறுதி ஈகாரமானது, இகரமும் – இகர மாகும். எ–று.

**பொ–ரை.:** (முன்னே திரியும் என்ற) எழுத்துக்களுள் (சிறப்பெழுத்தாகிய) ஏழாம் உயிரானது இகரமாகவானாலும் இரு வாகவானாலும் வரும்; ஐந்து வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும்; எட்டாவதாகிய சகர வருக்கத்து மெய்யானது (ஜ) (ஒரோவிடத்தில்) யகரமுமாகும்; முப்பதா மெய்யானது (மொழிக்கு முதலிலே) சகரமும் (நடுவிலே) யகரமுமாகும்; முப்பத்தொன்றா மெய்யானது (ஷ) (மொழிக்கு முதலிலே) சகரமும் (நடுவிலே) டகரமுமாகும்; முப்பத்திரண்டா மெய்யானது (ஸ) (மொழிக்குமுதலிலே) சகரமும் (நடுவிலே) தகரமு மாகும்; முப்பத்து மூன்றா மெய்யானது (ஹ) (மொழிக்கு முதலிலே) அகரமும் (நடுவிலே) ககரமுமாகும்; முப்பத்தைந்தா மெய்யானது (க்ஷ) இரண்டு ககரமாகும்; (பொதுவெழுத்துக்களிலே) மொழியிறுதி ஆகாரமானது ஐநாரமாகும்; மொழியிறுதி ஈகார மானது இகரமாகும்.

இச் சூத்திரம் முடிவுபெறக் கூறாமையால் குறைச் சூத்திரமெனப் பெயர் பெறும்.

ஆ ஈற்றையும் ஈ ஈற்றையும் இறுதியிற் கூறியது, அவை பொது லெழுத்தா்தல் தோன்ற வென்க.

பயின்று வருவனவற்றிற்குத் திரிபுகூறி, மற்றவை வந்த விடத்திற் காண்க வென்பார், 'இகரமுமாகும்' எனப் பயனிலை கொடுத்து முடிக்காமல், 'இகரமும்' என அவாய்நிலையாக முடித்தார். (அவாய்நிலையாவது – ஒரு சொல் மற்றொரு சொல்லை வேண்டி நிற்பது.)

உரையிற் கோடல் என்னு முத்தியால், க்ஷகரம் இருககரமாதலே யன்றி, க்ஷணம் – கணம், க்ஷமா – கமை, க்ஷீரம் – கீரம், க்ஷுத்ரம் – குத்திரம் என ஒரு ககர மாகவும்; கடாக்ஷம் – கடாட்சம், மீநாக்ஷி – மீனாட்சி என டகர சகரமாகவும்; பிக்ஷா – பிச்சை என ஈரசகரமாகவும்; க்ஷேமம் – சேமம் என ஒரு சகரமாகவும் திரிந்து வருதல் முதலியன கொள்க.

## கா. நமசிவாய முதலியார்

**அவற்றுள்** – முன்னே 'திரியும்' என்ற எழுத்துக்களுள், **ஏழாம் உயிர்** – சிறப்பெழுத்தாகிய ஏழாம் உயிரானது ), **இய்யும் இருவும்** – இகரமாகவேனும் இருவாகவேனும் வரும் ;

**ஐ வருக்கத்து** – ஐந்து வருக்கங்களிலும், **இடையில் மூன்றும்** – நடுநின்ற மும்மூன் றெழுத்துக்களும் **அவ்வம்முதலும்** – அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும்;

**எட்டு** – எட்டாவதாகிய (சகரவருக்கத்து) மெய்யானது (ஜ), **யவ்வும்** – சகரமாதலன்றி ஒரோவிடத்தில் யகரமும் ஆகும் ;

**முப்பது** – முப்பதா மெய்யானது (ஶ), **சயவும்** – மொழிக்கு முதலிலே சகரமும், நடுவிலே சகரமும் யகரமும், கடையிலே சகரமும் ஆகும் ;

**மேலொன்று** – முப்பத்தொன்றா மெய்யானது (ஷ), **சடவும்** – மொழிக்கு முதலிலே சகரமும், நடுவிலும் கடையிலும் டகரமும் ஆகும் ;

**இரண்டு** – முப்பத்திரண்டா மெய்யானது , **சதவும்** – மொழிக்கு முதலிலே சகரமும், நடுவிலே சகரமும் தகரமும் ஆகும் ;

**மூன்று** – முப்பத்து மூன்றா மெய்யானது (ஹ), **யகவும்** – மொழிக்கு நடுவிலே யகரமாகவும், நடுவிலுங் கடையிலும் ககரமாகவும் வரும் ;

**ஐந்து** – முப்பத்தைந்தா மெய்யானது (க்ஷ), **இரு கவ்வும்** – மொழிக்கு நடுவில் இரண்டு ககரமாகும் ;

**ஆ ஈறு** – பொது வெழுத்துக்களிலே மொழியிறுதி ஆகாரமானது, **ஐயும்** – ஐகாரமாகும் ;

**ஈ ஈறு** – மொழியிறுதி ஈகாரமானது, **இகரமும்** – இகரமும் ஆகும்.

ஆகும் என்பது, அவாய் நிலையான் வந்தது.

'**இகரமும்**' என்ற எச்சவும்மையால், க்ஷகரம் (35) க்ஷணம் – கணம் என ஒரு சகரமாதலும், க்ஷேமம் – சேமம் என ஒரு சகரமாதலும், பிக்ஷா – பிச்சை என இரு சகரமாதலும், மீநாக்ஷி – மீனாட்சி என டகர சகரமாதலும் பிறவுங் கொள்க.

## மோசகு பொன்னையா

ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாகித் தமிழில் திரிந்து வரும் என்ற இருபத்தெட்டனுள், ஏழாம் உயிர் இகரமும் இருவுமாகவும்; ஐவருக்கங்களிலும் இடையில் நின்ற மூன்றும் அவ்வவ் வருக்கத்தின் முதல் எழுத்தாகவும்; எட்டாம்

மெய் மொழியின் இடையில் யகரமாகவும், முப்பதாம் மெய் மொழியின் இடையில்சகர யகரங்களுள் ஒன்றாகவும்; முப்பத்தொன்றாம் மெய் மொழி முதலில் சகரமாகவும், இடையில் டகரமாகவும்; முப்பத்திரண்டாம் மெய் மொழி முதலில் குகரமாகவும், இடையில் சகர தகரங்களுள் ஒன்றாகவும்; முப்பத்து மூன்றாம் மெய் மொழி முதலில் அகரமாகவும், இடையிலும் கடையிலும் ககரமாகவும்; முப்பத்தைந்தாம் மெய் இரண்டு ககரங்களாகவும்; பொதுவெழுத்துக்குள்ளே மொழி இறுதி ஆகாரம் ஐகாரமாகவும், ஈகாரம் இகரமாகவும் திரியும், **எ–று.**

ஒழிந்தன வந்தவிடத்து வழக்கு நோக்கி அறிக என்பராய், இகரமுமாகும் எனப் பயனிலை கொடுத்து முடியாமல், இகரமுமென அவாய் நிலையாக முடித்தார். உரையிற்கோடலால் க்ஷகாரம் மொழி முதலில் கமித்தல், கணம் கீரம் என ஒரு ககரமாக வருதலுங் கொள்க.

**எ–டு.**

இடபம், திட்டி, இருடி, விருத்தி – ஏழாமுயிர், இகரமும் இருவுமாயிற்று.

நகம், நாகம், மேகம், சலவாதி, விசலம், சருச்சரை, பீடம், பீடை, திடம்; தலம், தினம், தரை; பலம், பந்தம், பாரம் – ஐந்து வருக்கத்திலும் இடை மூன்றும் அவ்வம் முதலாயின.

பங்கயம் – எட்டாம் மெய் மொழியிடையில் யகரமாயிற்று.

சங்கரன், பாசம், தேயம் – முப்பதாம் மெய் முதலில் சகரமும், இடையில் சகரமும் யகரமும் ஆயிற்று.

சண்முகம், விடம், பாடை – முப்பத்தோராம் மெய் முதலில் சகரமும் இடையிலும் கடையிலும் டகரமுமாயிற்று.

சபை, வாசம், மாதம் –முப்பத்திரண்டாம் மெய் முதலிற் சகரமும் இடையில் சகரமும் தகரமுமாயிற்று.

அரசன், மோகம், மகி – முப்பத்து மூன்றாம் மெய் முதலில் அகரமும் இடையிலும் கடையிலும் சகரமுமாயிற்று.

பக்கம் – முப்பத்தைந்தாம் மெய் மொழியிடையில் இரண்டு ககரமாயிற்று.

மாலை – ஆகார ஈறு ஐகார ஈறாயிற்று.

புரி – ஈகார ஈறு இகர ஈறாயிற்று.

**(20)**

147\. ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

ravvirku ammutal ām mukkurilum
lavvirku im mutal irantum yavvirku
iyyum moli mutal āki munvarumē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Rules for r,l,y

Sanckrit words beginning with 'r' (when passing to Tamil, insert before it the vowel a, i or u; those beginning with 'i' insert i or u; and those beginning with y, insert 'i'.

## மயிலைநாதர்

இதுவுமது.

**இ–ள்.:** ரகார லகார யகாரங்களை முதலாகவுடைய மொழிகளின் மேல் இம் மூன்று குற்றுயிரும் சொன்னவாறு வரும், **எ – று.**

**வ – று.:** [1]அரங்கம், இராமன், இராவணன், உரோமம், எனவும்; இலங்கை, இலாபம், உலோபம் எனவும்; இயக்கன், இயாத்திரை எனவும் முறையே காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** ரகர லகர யகரங்களை முதலாகவுடைய ஆரிய மொழிகள் வடமொழியாங்கால், அகரம் இகரம் உகரம் என்னும் இம் மூன்று குற்றுயிரும், இங்ஙனம் சொன்னவாறே அவ் வடமொழிகட்கு முதலாய், அம் மூன்றெழுத்திற்கு முன்னர் வரும், **எ – று.**

**வ – று.:** அரங்கம் இராமன் உரோமம் எனவும், இலாபம் உலோபம் எனவும், இயக்கன் எனவும் வரும்.

---

**பாட வேறுபாடு.:** **1.அரங்கன்**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** வடமொழிக்கு முதலாகிய ரகர லகரங்கள் தமிழ்மொழியுள் வந்தால் இன்னது பெறுமெனக் கூறியது.

**இ—ள்.: ரவ்விற்கு அம்முதல் ஆமுக் குறிலும்** – ரகர முதன் மொழிக்கு அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்தும், **லவ்விற்கு இம் முதல் இரண்டும்** – லகர முதன்மொழிக்கு இ உ என்னும் இரண்டு குற்றெழுத்தும், **யவ்விற்கு இய்யும்** – யகர முதன்மொழிக்கு இகரமும், **மொழி முதலாகி முன் வரும்** – மொழிக்கு முதற்கண்ணாகி வரும், **எ—று.**

**உ—ம்.:** அரங்கம், இராமன், உரோமம் எனவும்; இலங்கை, இலாபம், உலோபம் எனவும்; இயக்கன், இயாத்திரை எனவும் முறையே காண்க.

## விசாகப் பெருமாளையர்

**இதுவுமது.**

**இ—ள்.: ரவ்விற்கு** – ரகரத்திற்கு, **அம்முதலாமுக்குறிலும்** – அ இ உ என்கிற மூன்று குற்றெழுத்துகளி லொன்றும், **லவ்விற்கு** – லகரத்திற்கு; **இம்முதலிரண்டும்** – இ உ என்கிற விரண்டி லொன்றும், **யவ்விற்கு**– யகரத்திற்கு, **இய்யும்**–இகரமும், **மொழிமுதலாகிய**–அவ்வெழுத்துகளை முதலிலுடைய வடமொழிகளுக்கு முதலாகி, முன்வரும் – அம்மூன்றெழுத்துக்களும் முன்னே வரும், **எ— று.**

**உ—ம்.:** அரங்கம், இராமன், உரோமம் எனவும்; இலாபம், உலோபம் எனவும்; இயக்கன் எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

தமிழ் வழக்கின்படி மொழிமுதலாகாத சில வெழுத்துக்களைத் தமக்கு முதலாகவுடைய வடமொழிகள் தமிழிலே வரும்போது இவற்றை முதலாகப் பெறுமென்றுணர்த்துஞ் சூத்திரம் யாது?

ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே

(ரவ்விற்கு அம் முதல் ஆம் முக்குறிலும்
லவ்விற்கு இம்முதல் இரண்டும், யவ்விற்கு
இய்யும் மொழிமுதல் ஆகி முன் வருமே)

**இ—ள்.: ரவ்விற்கு அம்முதல் ஆம் முக்குறிலும்** – ரகர லகர யகரங்களை முதலாகவுடைய வடமொழிகள் தமிழில் வரும்போது ரகரத்திற்கு அகர இகர உரகமாகிய முக்குறிலும், **லவ்விற்கு இம்முதல் இரண்டும்** –

வகரத்திற்கு இகர உகரங்களும், **யவ் விற்கு இய்யும் மொழிமுதல் ஆகிமுன் வரும்–** யகரத்திற்கு இகரமும் மொழிமுதலாகி முன்னே வரும், **எ–று.**

உ–ம்.: ரங்கம், ராமன் , ரோமம், என்பன அரங்கம், இராமன், உரோமன் எனவும், லாபம், லோபம் என்பன இலாபம், உலோபம், எனவும் யக்ஷன், இயக்கண் எனவும் வரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: ரவ்விற்கு** – (ரகர லகர யகரங்களை முதலாகவுடைய ஆரியமொழிகள் தமிழ்மொழியாங்கால்) ரகர முதல் மொழிக்கு, **அம்முதலா முக்குறிலும்** – அகர இகர உகரங்களாகிய மூன்று குற்றெழுத்துக்களும், **லவ்விற்கு** – லகர முதல் மொழிக்கு, **இம்முதலிரண்டும்** – இகர உகரங்களாகிய இரண்டு குற்றெழுத்துக்களும், **யவ்விற்கிய்யும்** – யகரமுதல் மொழிக்கு இகரமும், **மொழிமுதலாகி** – அந்த ஆரியமொழிகளுக்கு முதலாகி, **முன்வரும்** – அந்த மூன்று எழுத்துக்களுக்கும் முன்வரும், **எ – று.**

வ–று.: அரங்கம், இராமன், உரோமம், எனவும்; இலாபம், உலோபம்; எனவும், இயக்கன், இயமன், எனவும் முறையே காண்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– ரவ்விற்கு** – ரகரத்தை முதலில் உடைய மொழிக்கு, **அ முதல் ஆம் முக்குறிலும்** – அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களுள் ஒன்றும், **லவ்விற்கு** – லகரத்தை முதலில் உடைய மொழிக்கு, **இ முதல் இரண்டும்** – இ உ என்னும் இரண்டிலொன்றும், **யவ்விற்கு** – யகரத்தை முதலில் உடையமொழிக்கு, **இய்யும்** – இகரமும், **மொழிமுதல் ஆகி** – மொழிக்கு முதலாகி, **முன்வரும்** – (அம்மூன்றெழுத்துக்களுக்கும்) முன்னே வரும்.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| ... | அரங்கம் | |
| ... | இராமன் | ரவ்விற்கு அம்முதல் முக்குறிலும் வந்தன |
| ... | உரோமம் | |
| ... | இலாபம் | லவ்விற்கு இம்முதல் இரண்டும் வந்தன. |
| ... | உலோபம் | |
| ... | இயக்கன் | (யவ்விற்கு இகரம் வந்தது) |

குறிப்பு :– இனி, யுத்தம் – உயுத்தம் என ஒரோவழி யகரத்துக்கு உகரம் வருதலுங் கொள்க.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: ரவ்விற்கு அம் முதல் ஆம் முக்குறிலும்** – ரகரத்திற்கு அ இ உ என்னு மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும், **லவ்விற்கு இம் முதல்**

**இரண்டும்** – லகரத்திற்கு இ உ என்னும் இரண்டிலொன்றும், **யவ்விற்கு இய்யும்** – யகரத்திற்கு இகரமும், **மொழி முதல் ஆகி முன் வரும்** – அவ் வெழுத்துக்களை முதலிலுடைய வடமொழிகளுக்கு முதலாகி அம் மூன்றெழுத்துக்களுக்கு முன்னே வரும், **எ – று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ரவ்விற்கு அ முதலாம் முக்குறிலும்** – ரகரத்திற்கு அ இ உ என்னு மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும், – **லவ்விற்கு இ முதல் இரண்டும்** – லகரத்திற்கு இ உ என்னும் இரண்டில் ஒன்றும், – **யவ்விற்கு இய்யும்** – யரகத்திற்கு, இகரமும், – **மொழி முதலாகி முன்வரும்** – அவ்வெழுத்துக்களை முதலிலுடைய வடமொழிகளில் ரகர லகர யகரங்களுக்கு முதலாகி அம்மூன்றெழுத்துக்களுக்கும் வரும். **எ–று.**

அகர இகர உகரங்கள் முன்வருதல் ஏற்றபெற்றி கொள்ளப்படும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:** (ஆரியமொழி தமிழில் வரும்பொழுது) **ரவ்விற்கு** – ரகத்தை முதலிலே யுடைய மொழிக்கு, **அ முதல் ஆம் முக்குறிலும்** – அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களி லொன்றும், **லவ்விற்கு** – லகரத்தை முதலிலே யுடைய மொழிக்கு, **இ முதல் இரண்டும்** – இ உ என்னும் இரண்டி லொன்றும், **யவ்விற்கு** – யகரத்தை முதலிலே யுடைய மொழிக்கு, **இய்யும்** – இகரமும், **மொழிமுதல் ஆகி** – மொழிக்கு முதலாகி, **முன்வரும்** – (அம் மூன்றெழுத்துக்களுக்கு) முன்னே வரும்; **எ–று.** முன் – காலமுன்.

**உ–ம்.:** ரங்கம் – அரங்கம், ரத்நம் – அரதனம்; ராமன்–இராமன், ரவி – இரவி; ரோமம் – உரோமம், ரோஹிணி – உரோகிணி எனவும்; லாபம் – இலாபம், லக்ஷணம் – இலக்கணம், லோபம் – உலோபம், லோகம்–உலோகம் எனவும்; யமன் – இயமன், யக்ஷன் – இயக்கன் எனவும் வரும்.

இனி, சிறுபான்மை, யுத்தம் – உயுத்தம், யோகம் – உயோகம் என யகரத்துக்கு முன் உகரம், வருதலும், டம்பம் – இடம்பம் என டகரத்துக்கு முன் இகரம் வருதலும் உண்டு.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ரவ்விற்கு அம் முதல் ஆம் முக்குறிலும் – ரகரத்திறகு அ இ. உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும், லவ்விற்கு இம்முதல் இரண்டும் – லகரத்திற்கு இ உ என்னும் இரண்டிலொன்றும், யவ்விற்கு இய்யும் – யகரத்தி;றகு இகரமும், மொழி முதல் ஆகி முன் வரும் – அவ்வெழுத்துக்களை முதலிலுடைய வடமொழிகளுக்கு முதலாகி அம் மூன்றெழுத்துக்களுக்கு முன்னே வரும். எ–று.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ரவ்விற்கு – ரகரத்திற்கு, அம் முதலாம் முக் குறிலும் – அ இ உ என்கிற மூன்று குற்றெழுத்துக்களிலொன்றும், லவ்விற்கு – லகரத்திற்கு, இம் முதல் இரண்டும் – இ உ என்கிற இரண்டிலொன்றும், யவ்விற்கு – யகரத்திற்கு, இய்யும்– இகரமும், தொழி முதல் ஆகி–(அவ்வெழுத்துக்களை முதலிலுடைய) வடமொழிகளுக்கு முலாகி, முன் வரும் – (அம் :மன்றெழுத்துக்களுக்கு) முன்னே வரும். **எ—று.**

**பொ—ரை.:** ரகரத்திற்கு அ இ உ என்கிற மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும், லகரத்திற்கு இ உ என்கிற இரண்டில் ஒன்றும், யகரத்திற்கு இகரமும் (அவ்வெழுத்துக்களை முதலிலுடைய) வடமொழிகளுக்கு முதலாகி, அம் மூன்றெழுத்துக்களுக்கு முன்னே வரும்.

(உ–ம்.) அரங்கம் – ரகர முதன் மொழிகளுக்கு அ, இ, உ என்பவற்றில் ஒன்று முதலில் வந்தது.

இராமன்

உரோமம்

இலாபம் – லகர முதன் மொழிகளக்கு இ,உ என்னு மிரண்டில் ஒன்று முதலில் வந்தது.

இயக்கன் – யகர முதன் மொழிக்கு இகரம் முதலில் வந்தது.

இனிச் சிறுபான்மை யுத்தம்–உயுத்தம் என யகரத்திற்க முன் உகரம் வருதலும், டம்பம்–இடம்பம் என டகரத்திற்கு முன் இகரம் வருதலும் உண்டு.

(இதுவுமது.)

## கா. நமசிவாய முதலியார்

**ரவ்விற்கு** – ரகத்திற்கு, **அம்முதலாம் முக்குறிலும்** – அகரம் முதலாகிய மூன்று குற்றெழுத்துக்களிலொன்றும், **லவ்விற்கு** – லகரத்திற்கு, **இம்முதலிரண்டும்** – இகரமுதலாகிய இரண்டி லொன்றும், **யவ்விற்கு** – யகரத்திற்கு, **இய்யும்** – இகரமும், **மொழி முதலாகி** – (அவ்வெழுத்துக்களை முதலிலுடைய) வடமொழிக்கு முதலாகி, முன் வரும் – அம்மூன் றெழுத்துக்களுக்கு **முன்னே வரும்.**

**உதாரணம்**

- அரங்கம்
- இராமன்
- உரோமம்

- இலாபம்

– உலோபம்

– இயக்கன்

சிறுபான்மை யகரத்திற்கு உரகமும் வரும் :

யுத்தம் – உயுத்தம்

**மோசகு பொன்னையா**

ரகாரத்திற்கு அ, இ, உ என்பவற்றுள் ஒன்றும், லகரத்திற்கு இ, உ என்பவற்றுள் ஒன்றும், யகரத்திற்கு இகரமும், அவ்வெழுத்துக்களை முதலிற்கொண்ட தற்சம தற்பவ மொழிகளுக்கு முன்னே வரும், **எ–று.**

**எ–டு.**

அரங்கம், இராமன், உரோமம் – ரகர முன் அ, இ, உ.
இலாபம், உலோபம் – லகர முன் இ, உ.
இயக்கன் – யகர முன் இ

(21)

**148. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.**

**இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.**

iṇaintu iyal kālai ya ra lakku ikaramum
mavvakku ukaramum nakarakku akaramum
misaivarum ravvaḷi uvvum ām piṟa.

**இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)**

**Rule for y,r,l,m,v**

Whenever two (Sanscrit) consonants are combined into one letter, 'i' is inserted before the second consonant, if it is 'y', r or 'l' 'u', if it is 'm' or 'v', 'a', if it is 'n'; and 'u', if the first consonant is 'r'. There may be also other changes.

## மயிலைநாதர்

இதுவுமது.

**இ–ள்.:** இஃது இரண்டெழுத்து ஒன்றாய் வருமிடத்து யரலக்களின் மீதே இகரமும், மகர வகரங்கண் மீதே உகரமும், நகரமீதே அகரமும், ரகரத்தின் பின்னே உகரமும் வரும், **எ – று.**

**வ–று.:** வாக்கியம், வாச்சியம், நாட்டியம் எனவும்; வக்கிரம், வச்சிரம், சத்திரம், அப்பிரம் எனவும்;. சுக்கிலம், ஆமிலம் எனவும்; பதுமமெனவும்; பக்குவம், தத்துவமெனவும்; அரதநமெனவும்; அருக்கன், அருத்தம், தருப்பணம், [1]சருப்பம், சருக்கம், தருமமெனவும் முறையே காண்க. பிற வென்ற மிகையானே சத்தி, கட்சி, காப்பியம், பருப்பத மென்றற் றொடக்கத்துத் திரிபும், தூலம், அத்தம், ஆதித்தன், அநத்தம் என்றற் றொடக்கத்துக் கேடும், [2]மற்றும் விகாரத்தால் வருவனவும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** ஆரியமொழியுள் இரண்டு எழுத்து இணைந்து ஒரெழுத்து நீர்மையாய் நடக்குங்கால், பின்னிற்கும் ய ர லக்கள் மீதே இகரமும், மகர வகரங்கள் மீதே உகரமும், நகரமீதே அகரமும் வந்து வடமொழியாம்; இணைந்து முன்னிற்கும் ரகரத்திற்குப் பின்னர் உகரமும் வரும், **எ – று.**

**வ–று.:** வாக்கியம் வாச்சியம் நாட்டியம் எனவும், வக்கிரம் வச்சிரம் சத்திரம் அப்பிரம் எனவும், சுக்கிலம், ஆமிலம் எனவும், பதுமம் எனவும், பக்குவம் எனவும், அரதனம் எனவும், அருக்கன் அருத்தம் கருப்பம் சருக்கம் தருமம் எனவும் வரும்.

பிற என்றமையானே, சத்தி கட்சி காப்பியம் பருப்பதம் என்றற் றொடக்கத்துத் திரியும், தூலம் அத்தம் ஆதித்தன் அநத்தம் என்றற் றொடக்கத்துக் கேடும்; மற்றும் விகாரத்தால் வருவனவும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** வடமொழியிற் கூட்டெழுத்துத் தமிழில் வந்தால் வேறோர் எழுத்துப் பெறுமெனக் கூறியது.

**இ–ள்.: இணைந்தியல் காலை** – இரண்டெழுத்து ஒன்றாய் இணைந்து வருமிடத்து, **யரலக்கு இகரமும்** – யரலக்கண் மீதே இகரமும், **மவ்வக்கு உகரமும்** – மகர வகரங்கண் மீதே உகரமும், நகரக்கு அகரமும் – நகரத்தினுக்கு அகரமும், **மிசை வரும்** – மேலே வந்து பொருந்தும், **ரவ்வழி உவ்வுமாம் பிற** – ரகாரத்தின் உகாரமும் வரும், **எ–று.**

**உ–ம்.:** வாச்சியம், வச்சிரம், சத்திரம், சுக்கிலம், வாக்கியம், நாட்டியம் எனவும்; வக்கிரம் அப்பிரம் எனவும்; ஆமிலம் எனவும்; பதுமம் எனவும்; பக்குவம், தத்துவம் எனவும்; அருக்கன், அருத்தம், கருப்பம், தருமம் எனவும் முறையே

காண்க. 'பிற' வென்ற மிகையானே சத்தி, கட்சி, காப்பியம், பகுப்பதம் எனத் திரியும். தூலம், அத்தம், ஆதித்தன், அனத்தம் எனக் கெடும், மற்றும் விகாரத்தாலே வருவனவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: இணைந்து** – ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து, **இயல்காலை** – ஒரெழுத்தைப்போல நடக்கும்போது, **யரலக்கு** – பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு, **இகரமும்** – இகாரமும், **மவ்வக்கு** – மகர வகரங்களுக்கு, **உகரமும்** – உகாரமும், **நகரக்கு** – நகரத்திற்கு, **அகரமும்** – அகாரமும், **மிசை** – மேலே, **வரும்** – வந்து வடமொழிகளாகும், **ரவ்வழி** – இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப் பின், **உவ்வுமாம்** – உகாரமும் வரும், **எ–று.**

**உ–ம்.:** வாக்கியம் வக்கிரம் சுக்கிலம் எனவும், பதுமம், பக்குவம் எனவும், அரதநம் எனவும், அருத்தம் எனவும், வரும். "பிற" வென்றதனால் சத்தி கட்சி காப்பியம் பருப்பதம் இவை முதலாகிய திரிபும், தூலம் அத்தம் ஆதித்தன் இவை முதலாகிய கேடும் மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

இரண்டெழுத்திணைந்து ஒரெழத்தின் றன்மைபெற்று வரும் வடமொழியெழுத்துக்களுள் இவை இப்படிவருமென் றுணர்த்துஞ் சூத்திரம் யாது?

இணைந்தியல் காலை யரலக் கிகரமும்

மவ்வக் குகரமு நகரக் ககரமும்

மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

(இணைந்து இயல்காலை ய ரலக்கு இகரமும்

மவ்வக்கு உகரமும் நகரக்கு அகரமும்

மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற)

**இ–ள்.: இணைந்து இயல் காலை** – இரண்டெழுத்திணைந்து ஒரெழுத்து நீர்மையாய் வருமிடத்து, **யரலக்கு இகரமும்** – தமிழிலே பின்னிற்கும் யர லக்கண்மீதே இகரமும், **மவ்வக்கு உகரமும்** – மகர வகரங்கண்மீதே உகரமும் நகரக்கு அகரமும் மிசைவரும்– ககரமீதே அகரமும் வரும் ரவ்வழி உவ்வும் ஆம்– இணைந்து முன்னிற்கும் ரகரத்திற்குப் பின்னர் உகரமும் வரும், **எ–று.**

**உ–ம்.:** வாக்யம்– வாக்கியம், வாச்யம்– வாச்சியம் , நாட்யம்– நாட்டியம், எனவும், வக்கிரம், வச்ரம்–வச்சிரம், சத்ரம்– சத்திரம், அப்ரம்– அப்பிரம். எனவும், சுக்லம்–சுக்கிலம், ஆம்லம்–ஆமிலம், எனவும், பத்மம்–பதுமம், பக்வம்

பக்குவம்; எனவும் ரத்நம், அரதனம். எனவும் அர்க்கன், அருக்கன், எனவும் அர்த்தம் அருத்தம், எனவும். வரும். பிறவென்றமையானே, சக்தி –சத்தி கக்ஷி –கட்சி காவ்யம்–காப்பியம் பர்வதம் – பருப்பதம், என்றற்றொடக்கத்துக் திரிபும், ஸ்தூலம் – தூலம் என்றற்றொடக்கத்துக்கேடும், மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: இணைந்தியல்காலை** – (அந்த ஆரியமொழிகளுள்) இரண்டெழுத்துக் கூடி யோரெழுத்தா யிணைந்து நடக்குங்கால், **யரலக் கிகரமும்** – பின்னிற்கின்ற யகர ரகர லகரங்களுக்கு இகரமும், **மவ்வக்குகரமும்** – மகர வகரங்களுக்கு உகரமும், **நகரக் ககரமும்** – நகரத்திற்கு அகரமும், **மிசைவரும்** – மேலே வரும், **ரவ்வழியுவ்வுமாம்** – ரகரத்தின் பின் உகரமும் வரும், **எ–று.**

**வ–று.:** வாக்கியம், வாச்சியம், நாட்டியம்–எனவும்; வக்கிரம்–வச்சிரம்–சத்திரம்–எனவும்; சுக்கிலம்–ஆமிலம்–எனவும்; பதுமம்–எனவும், பக்குவம்–எனவும்; அரதனம்–எனவும்; அருத்தம்–கருப்பம்–எனவும்; வரும். பிறவென்று மிகுத்துச் சொன்னதினாலே சத்தி, கட்சி–காப்பியம், பருப்பதம் என்பன போலத் திரிந்து வருவனவும், தூலம், அத்தம், ஆதித்தன், அநத்தம் என்பனபோலக் கெட்டு – வருவனவும், பிற விகாரத்தால் வருவனவுங் கொள்க. இகரமும் உகரமும் அகரமும் வரும் எனவும், உவ்வும் ஆம் எனவும் இரு முடிபாக்குக.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

(சில சந்தியக்கரங்களுக்கு உயிர் வருமாறு உணர்த்துகிறது)

**உரை :– இணைந்து** – (ஆரியமொழியுள் இரண்டெழுத்து) இணைந்து, **இயல்காலை** – (ஒரெழுத்தைப்போல) நடக்கும்போது, **ய ர லக்கு** – (பின்நின்ற) யகர ரகர லகரங்களுக்கு, **இகரமும்** –, **மவக்கு** – மகர வகரங்களுக்கு, **உகரமும்** –, **நகரக்கு** – நகரத்துக்கு, **அகரமும்** –, **மிசை** – மேலே, **வரும்** – ; ரவ்வழி – (இணைந்து முன்நின்ற) ரகரத்துக்குப்பின், **உவ்வும் ஆம்** – உகரமும் வரும்.

**குறிப்பு :–** இணைந்து வரும் எழுத்தை 'ஸம்யுக்தாக்ஷரம்' என்பர் வடநூலார். 'பிற' என்றதனால் – இரத்தினம், – சக்கரம், – வாக்கு, – விராட்டு இவை முதலிய தோன்றலும்; சத்தி – காப்பியம், – பருப்பதம், – சுயம்பு, – உற்பலம், – பாவம், – தினம், – சினேகம், – சண்பகம் இவை முதலிய திரிதலும்; – தூலம், – அத்தம், – ஆதித்தன், – ஞானம், – சோதி இவை முதலிய கெடுதலும்; மற்றும், – அங்கி, பாரசி முதலாக வருவனவுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: இணைந்து இயல்காலை** – ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஒரெழுத்தைப் போல நடக்கும் போது, **ய ர லக்கு இகரமும்** – பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு இகாரமும், **மவ்வக்கு உகரமும்** – மகர வகரங்களுக்கு உகாரமும், **நகரக்கு அகரமும்** – நகரத்திற்கு அகாரமும், **மிசை வரும்** – மேலே வந்து வடமொழிகளாகும், **ரவ்வழி உவ்வும் ஆம்** – இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப் பின் உகாரமும் வரும், **எ – று**.

**உ–ம்.:** தியாகம், வாக்கியம், கிரமம், வக்கிரம், கிலேசம், சுக்கிலம் எனவும்; பதுமம், பக்குவம் எனவும், அரதனம் எனவும், அருத்தம் எனவும், வரும்.

பிறவென்றதனால் சத்தி, கட்சி, காப்பியம், பருப்பதம் இவை முதலாகிய திரிபும், தூலம், அத்தம், ஆதித்தன், இவை முதலாகிய கேடும் மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இணைந்து இயல் காலை** – ஆரியமொழியுள் இரண்டு மெய்கள் இணைந்து ஒரெழுத்துப்போல நடக்கும்போது; – **யரலக்கு இகரமும்** – அவ்விணைந்த எழுத்துக்களிற் பின்னின்ற யகரத்துக்கும் ரகரத்துக்கும் லகரத்துக்கும் இகரவுயிரும், – **மவ்வக்கு உகரமும்** – மரகத்துக்கும் வகரத்துக்கும் உகரமும், – **நகரக்கு அகரமும்** – நகரத்திற்கு அகரமும், – **மிசை வரும்** – மேலே வந்து வடமொழிகளாகும், – **ரவ்வழி உவ்வும் ஆம்** – இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப் பின் உகரமும் வரும். **எ–று.**

இடையில் உயிர் கலக்கப் பெறாமற் பல மெய்கள் இணைந்து அவ்விணைப்பின் ஈற்றுமெய்யின்மேல் உயிர் கலக்கப் பெற்றிருந்தால் அவ்விணைப்பிற்குச் சம்யுக்தாக்ஷரம் என்று பெயர். மெய் முன்னும் உயிர்மெய் பின்னுமாக இணைவது சம்யுக்தாக்ஷரமெனினுமாம். இணைந்தியல் காலை என்றது சம்யுக்தாக்ஷரங்களாய் வரும்போது என்றுணர்க. க்ய, ர்ய, ல்ய, த்ம, க்வ, த்ந, ர்வா என்பன முன்னே மெய்யும் பின்னே உயிர்மெய்யுமாக இணைந்து நின்றமையறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்

## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: இணைந்து இயல் காலை** – (ஆரிய மொழியுள் இரண்டெழுத்து) இணைந்து (ஒரெழுத்தைப் போல) நடக்கும் போது, **ய ர லக்கு** – (பின்நின்ற) யகர ரகர லகரங்கட்கு, **இகரமும்** –, **ம வக்கு** – மரக வகரங்கட்கு, **உகரமும்** –, **நகரக்கு** – நகரத்திற்கு அகரமும் –, **மிசை** – முன்னே வரும் –, **ர வழி** – (இணைந்து முன்நின்ற) ரகரத்திற்குப் பின், **உவ்வும் ஆம்** – உரகமும் வரும், **எ – று**. இணைந்து வருதலை, ஸம்யுக்தாக்ஷர மென்பர்.

**உ–ம்.:**

காவ்யம் – காவியம்

வக்ரம் – வக்கிரம் ய ர லக்கு இகரம்.

சுக்லம் – சுக்கிலம்

பத்மம் – பதுமம்

பக்வம் – பக்குவம் மவ் வக்கு உகரம்.

ரத்நம் –அரதனம் – நகரக்கு அகரம்.

அர்த்தம் – அருத்தம் – ரவ்வழி உ.

'பிற' என்றதனால், ரத்நம் – இரத்தினம், சக்ரம் – சக்கரம், வாக் – வாக்கு, விராட் – விராட்டு, ஸத் – சத்து இவை முதலாகிய தோன்றலும், சக்தி – சத்தி, காவ்யம் – காப்பியம், பர்வதம் – பருப்பதம், ஸ்வயம்பூ – சுயம்பு, ஸ்வயம்வரம் – சுயம்வரம், சுயமரம், உத்பலம் – உற்பலம், திநம் – தினம், பாபம் – பாவம், கல்பகம் – கற்பகம், ஸ்நேஹம் – சினேகம், சம்பகம் – சண்பகம், அக்நி – அங்கி, பங்க்தி – பந்தி, அஸ்த்ரம் – அச்சிரம், சூர்ணம் – சுண்ணம், க்ருஷ்ணன் – கண்ணன், கர்ணன் – கன்னன், பஸ்மம் – பற்பம், அக்ஷௌஹிணீ – அக்குரோணி, கர்மம் – கன்மம், இவை முதலாகிய திரிதலும்; ஸ்தூலம் – தூலம், ஜ்ஞாநம் – ஞானம், ஜ்யோதி – சோதி, ஸமரம் – சமர், அமர், சமம் இவை முதலாகிய கெடுதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். இணைந்து இயல்காலை – ஆரிய மொழியுள் இரண்டெபத்து இணைந்து ஒரெபத்தைப் போல நடக்கும் போது, ய ர லக்கு இகரமும் – பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு இகாரமும், மவ்வக்கு உகரமும்– மகர வகரங்களுக்கு உகாரமும், நகரக்கு அகரமும் – நகரத்திற்கு அகாரமும், மிசை வரும் – மேலே வந்து வட.மொழிகளாகும். ரவ்வழி உவ்வும் ஆம் – இணைந்து முன்னின்ற ரகரத்திறகுப் பின் உகாரமும் வரும். எ–று.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) இணைந்து இயல் காலை – (ஆரிய மொழியுள் இரண்டெழுத்து) இணைந்து (ஒரேழுத்தைப்போல) நடக்கும் போது, ய ர லக்கு– (பின்னின்ற) யகர ரகர லகரங்களுக்கு, இகரமும் – இகரமும், மவ் வக்கு – மகர வகரங்களுக்கு, உகரமும், – உகரமும், நகரக்கு – நகரத்திற்கு, அகரமும் – அகரமும், மிசை–மேலே, வரும்–வந்து வடமொழிகளாகும்; ரவ்வழி–(இணைந்து முன்னின்ற) ரகரத்திற்குப்பின், உவ்வும் ஆம்–உகரமும் வரும். **எ–று.**

**பொ–ரை.:** (ஆரிய மொழியுள் இரண்டெழுத்து) இணைந்து (ஒரேழுத்தைப்போல) நடக்கும்போது (பின்னின்ற) யகர ரகர லகரங்களக்கு இகரமும், மகர வகரங்களக்கு உகரமும், நகரத்திற்கு அகரமும் மேலே வந்து

வடமொழிகளாகும்; (இணைந்து முன்னிறை) சகரத்திற்குப்பின் உகரமும் வரும்.

(உ–ம்.) வாக்கியம்

வக்கிரம்

சுக்கிலம் – யகர ரகர லகரங்களுக்கு முன் இகரம் வந்தது.

பதுமம்

பக்குவம் – மகர வகரங்களுக்கு முன் உகரம் வந்தது.

அரதநம் – நகரத்துக்கு முன் அகரம் வந்தது.

அருத்தம் – ரகத்தின் பின் உகரம் வந்தது.

'பிற' என்றதனால் ரத்நம் – இரத்தினம், சக்ரம் – சக்கரம், வாக்– வாக்கு, விராட் – விராட்டு, ஸத்–சத்து இவை முதலாகிய தோன்றலும்; சக்தி – சத்தி, காவ்யம் – காப்பியம், பர்வதம் – பருப்பதம், ஸ்வயம்பூ – சுயம்பு, ஸ்வயம்வரம் – சுயம்வரம், சயமரம்; உத்பலம் – உற்பலம், திநம் – தினம், பாபம் – பாவம், கல்பகம் – கற்பகம், ஸ்நேஹம் – சினேகம், சம்பகம் – சண்பகம், அக்நி – அங்கி, பங்க்தி – பந்தி, அஸ்த்ரம் – அச்சிரம், சூர்ணம் – சுண்ணம், க்ருஷ்ணன் – கண்ணன், கர்ணன் – கன்னன், பஸ்மம் – பற்பம், அக்ஷௌஹிணீ – அக்குரோணி, கர்மம் – கன்மம் இவை முதலாகிய திரிதலும்; ஸ்தூலம் – தூலம், ஜ் ஞாகம் – ஞானம், ஜ்யோதி – சோதி, ஸமரம் – சமர், அமர், சமம் இவை முதலாகிய கெடுதலும் கொள்க.

## கா. நமசிவாய முதலியார்

**இணைந்து** – ஆரிய மொழியுள் இரண்டெழுத்து இணைந்து, **இயல்காலை** – ஒரெழுத்தைப் போல நடக்கும் போது, **யரலக்கு** – பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு, **இகரமும்** – இகரமும், மவ்வக்கு – மகர வகரங்களுக்கு, **உகரமும்** – உகரமும், **நகரக்கு** – நகரத்திற்கு, **அகரமும்** – அகரமும், **மிசை வரும்** – மேலேவரும், **ரவ்வழி** – இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப் பின், **உவ்வுமாம்** – உகரமும் வரும்.

## மோசசு பொன்னையா

ஆரிய மொழியில் இரண்டு எழுத்து இணைந்து ஒரெழுத்து நீர்மையாய் நடக்குமாயின், பின்நிற்கும் ய, ர, லக்களின் முன்னர் இகரமும், மகர வகரங்களின் முன்னர் உகரமும், நகரத்தின் முன்னர் அகரமும், இணைந்து முன்னர் நிற்கும் ரகத்தின் பின்னர் உகரமும் வந்து வடமொழியாம், **எ–று.**

**எ–டு.**

தியாகம், வாக்கியம், கிரமம், வக்கிரம், கிலேசம், சுக்கிலம் – ய, ர, ல முன்னர் இகரம் வந்தது.

பதுமம், பக்குவம் – மகர வகரங்கள் முன்னர் உகரம் வந்தது.

அரதனம் – நகர முன்னர் அகரம் வந்தது (ந்>ன்)

அருத்தம் – ரகரத்தின் பின்னர் உகரம் வந்தது.

பிற என்ற மிகையானே, சத்தி, கட்சி, காப்பியம், பருப்பதம் எனவும், தூலம், அத்தம், ஆதித்தன் எனவும், முறையே திரிந்தும், கெட்டும், விகாரப்பட்டும் ஒலிமுறைக்கேற்ப முடிவனவெல்லாம் கொள்க.

(22)

**149. றனழஎ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள**
**பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.**

**றனழஎ ஒவ்வு ம்உயிர்மெய்யு ம்உயிரளபு**
**அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுஏ.**

ṟa ṉa ḻa e ovvum uyirmeyyum uyiraḻapu
allās sārpum ṭamiḻ piṟa poṭuē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

## Letters peculiar to Tamil

Of the Tamil letters — r,n,l,e, and o; and all the Secondary letters except Vowel-consonants and Vowel-protractions are peculiar to Tamil: the rest are common (to both).

## மயிலைநாதர்

எ–ன், தமிழிற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்து முணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** முதலும் சார்புமான நாற்பதெழுத்துள்ளும், றகார னகார ழகார எகார ஒகாரமான முதலெழுத்தைந்தும், உயிர்மெய்யும் உயிராள பெடையு மொழித்த சார்பெழுத் தெட்டும் ஆகப் பதின்மூன்றும் தமிழிற்கே உரியவாம்; ஒழிந்த இருபத்தேழும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவாம், எ–று.

**வ–று.:** கறி, கனி, கழி, எண், ஒன்று, எஃகு, மங்கலம், நாகியாது, நாகு, மைப்புறம், மௌவல், வாழும் வளவன், கஃறீது எனச் சிறப்பெழுத்து வந்தவாறு. ஒழிந்த பொதுவெழுத்து வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் இருமொழிக்கண்ணும் கண்டு கொள்க. மெய்யை முற் கூறியவதனால், எகர ஒகரம் பிராகிருதத்துக்கும் உரியவெனக் கொள்க. பதவியலில் எழுத்து விதி கூறின், மயங்கக் கூறலாம் பிறவெனின், மேல் வடமொழிப்பதம் எழுத்துத் திரிந்தும் திரியாதும் வருவன உணர்த்துதற்கு வடவெழுத்துப் [3]பொதுவும்

சிறப்பும் வகுத்தவழித் தமிழிற்கு இவ் வேறுபாடில்லை கொல்லோவென்று ஐயுறுவார்க்கு ஐயமற ஈண்டுச் சொன்னமையாற் குற்றமாகா தென்க.
ஐயுறுவார்க்கு ஐயமற ஈண்டுச் சொன்மையாற் குற்றமாகாதென்க.

**[4]"றனழஎ ஒவ்வுந் தனியு மகாரமுந் தன்மைத்**
**தமிழ்பொது மற்று"**

என்றார்.[5] ஆசிரியரவிநயனார்.

**பா—டு.:** 1 கற்றி, கன்னி 2கஃறு 3 சிறப்பும் பொதுவும் 4றனஎ ஒவ்வுந் தனியும் ழகாரமும் 5 ஆசிரியர் அவினையனார், அவினயனார்.

## சங்கரநமச்சிவாயர்

**எ—னின்,** வடமொழி யாக்கம் கூறவேண்டி ஆரியத்திற்குப் பொதுவெழுத்துச் சிறப்பெழுத்து என விதந்தமையின், இவ் விதப்புத் தமிழிற்கு உண்டோ இன்றோ என்று ஐயுறுவார்க்கு ஐயமறுத்தல் நுதலிற்று.

**இ—ள்.:** முதலும் சார்புமான நாற்பதெழுத்துள்ளும், றகர னகர ழகர எகர ஒகரமான முதலெழுத்து ஐந்தும், உயிர்மெய்யும் உயிரளபெடையும் அல்லாத சார்பெழுத்து எட்டும், தமிழிற்கே சிறப்பெழுத்தாம்; ஒழிந்த இருபத்தேழும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது எழுத்தாம், **எ—று.**

மெய்யை முற்கூறினார், எகர ஒகரங்கள் பிராகிருத்தத்திற்கும் உரியவாதலின் என்க.

## கூழங்கைத்தம்பிரான்

**சூ்ம்,** தமிழிற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும் இவ்வளவென உரைத்தது.

**இ—ள்.: ற ன ழ எ ஒவ்வும்** – ற ன ழ என்னும் மூன்றுடலும் எ ஒ என்னும் இரண்டு உயிருமான முதலெழுத்து ஐந்தும், **உயிர்மெய்யும் உயிரளபல்லாச் சார்பும்** – உயிர்மெய்யும் உயிரளபெடையும் ஒழிந்த சார்பெழுத்து எட்டுமாகப் பதின்மூன்றும், **தமிழ்** – தமிழ்க்கே உரியனவாம், **பிற பொதுவே** – ஒழிந்த இருபத்தெட்டும் தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொது, **எ—று.**

**உ—ம்.:** கறி, கனி, என, ஒன்று எனவும் எஃகு, மங்கலம், நாகி, யாது, நாகு, மைப்புறம், மௌவல், வாழும் வளவன், கஃறீது எனச் சிறப்பெழுத்து வந்தவாறு காண்க. ஒழிந்த பொதுவெழுத்து வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் கண்டு கொள்க.

## விசாகப்பெருமாளையர்

**இது,** தமிழெழுத்துகளிற் சிறப்பெழுத்துகளும் பொது வெழுத்துகளும் உணர்த்துகின்றது.

**இ—ள்.: ற ன ழ எ ஒவ்வும்** – முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும், **உயிர் மெய்யு**

**முயிரள பல்லாச்சார்பும்** – உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத் தெட்டும், **தமிழ்** – தமிழுக்கே சிறப்பெழுத்துகளும், **பிற** – ஒழிந்த யிருபத்தே ழெழுத்துகளும், **பொது** – பொது வெழுத்துகளாம், **எ–று.**

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

117. தமிழிற்கேயுரிய சிறப்பெழுத்திவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

றனழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள

பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

(ற ன ழ எ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு

அல்லாச் சார்பும் தமிழ்; பிறபொதுவே).

**இ–ள்.: ற ண ழ எ ஒவ்வும்** – முதலும் சார்புமான நாற்பதெழுத்துள்ளும், றகர னகர ழகர எகர ஒகரமான முதலெழுத்தைந்தும், உயிர்மெய்யும் உயிர் அளவு அல்லாச் சார்பும் தமிழ் – உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும் தமிழிற்கே சிறப்பெழுத்தாம்; பிறபொது–ஒழிந்த இருபத்தேழுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம். **எ–று.**

எகர ஒகரங்கள் வடமொழியில் இல்லையாயினும் அவை, ஏகார ஓகாரங்களுண்மையின் அவற்றது குறுக்கமெனக் கொண்டு அவமதிக்கப்படுமென்பது நோக்கியே ஆண்டில்லாத ற ன ழ மெய்களைமுற்கூறினார்.

118. தமிழிற்கேயுரிய சிறப்பெழுத்தெவை?

"றனழஎ ஒவ்வுமுயிர் மெய்யுமல்லாச் சார்புந் தமிழ்"

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** ஆரியத்திற்குப் பொதுச் சிறப்பென வகுத்ததினாலே, தமிழற்குமுண்டோ இன்றோ வென்று ஐயப்படுபவர்க்கு ஐயமறுத்தலுணர்த்திற்று.

**இ–ள்.: றனழஎஒவ்வும்** – (முதலுஞ் சார்புமாகிய நாற்பதெழுத்துள்ளும்) இந்த ஐந்து முதலெழுத்தும், **உயிர்மெய்யு முயிரளபல்லாச் சார்பும்** – இந்த இரண்டு மல்லாத எட்டுச் சார்பெழுத்தும், **தமிழ்** – தமிழிற்குச் சிறப்பெழுத்தாம், **பிறபொது** – ஒழிந்த இருபத்தேழுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது வெழுத்தாம், **எ–று.**

எகர ஒகரங்கள் பிராகிருதத்திற்கு முரியவாதலால் மெய்யை முற்கூறினார், பிற பொதுவென்றதினால் தமிழிற்குச் சிறப்பென மிகைபடக் கூறா தொழிந்தார்.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– ற ன ழ எ ஒவ்வும்** – (முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுள்) ற ன ழ எ ஒ என்னும் இவ்வைந்தும், **உயிர்மெய்யும்** – , உயிரளபு – உயிரள பெடையும், **அல்லா சார்பும்** – நீங்கலான சார்பெழுத்தெட்டும், **தமிழ்** – தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம்; பிற ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும், **பொது** – ஆரியம் தமிழ் இரண்டிற்கும் பொதுவெழுத்துக்களாம்.

**குறிப்பு :** – மெய்யை முற்கூறினார் எகர ஒகரங்கள் பிராகிருதத் திற்கும் உரிய வாதலினென்க. 'பிறபொது' எனவே, 'தமிழுக்குச் சிறப்பு' என மிகைபடக் கூறாதொழிந்தார்.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: ற ன ழ எ ஒவ்வும்** – முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும், **உயிர்மெய்யும் உயிரளபு அல்லாச் சார்பும்** – உயிர்மெய்யும். உயிரளபெடையுமல்லாத சார்பெழுத்தெட்டும், **தமிழ்** – தமிழுக்கே சிறப்பெழுத்துகளாம், **பிற பொது** – ஒழிந்த இருபத்தேழெழுத்துக்களும் பொதுவெழுத்துகளாம், **எ–று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். றனழ எ ஒவ்வும்** – முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதிலே றகர னகர ழகர எகர ஒகரங்கள் ஐந்தும், – **உயிர்மெய்யும் உயிரளபு அல்லாச் சார்பும்** – உயிர்மெய்யும் உயிரளபெடையுமல்லாத எட்டுவகைச் சார்பெழுத்துக்களும், – **தமிழ்** – தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம், – **பிற பொது** – ஒழிந்த இருபத்தேழெழுத்துக்களும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்களாம். **எ–று.**

பிறபொதுவே என்றதனால் முற்கூறியவை சிறப்பென்று விளங்கிக் கிடத்தலால், தமிழ்ச் சிறப்பென்று கூறாது தமிழென வாளா கூறினார்.

ஆரிய எழுத்துக்களைத் தமிழெழுத்துக்களோடு நோக்கி ஆரியத்திற்கேயுரியனவாகிய சிறப்பெழுத்துக்களையும், ஆரியத்திலுந் தமிழிலுமிருக்கும் பொதுவெழுத்துக்களையும் **'இடையினான்கும்'** என்னுஞ் சூத்திரத்தாற் கூறினார். தமிழிலிருக்குமெழுத்துக்களையும் ஆரியவெழுத்துக்களோடு நோக்கித் தமிழிற்கேயுரியனவாகிய சிறப்பெழுத்துக்களையும், தமிழிலும் ஆரியத்திலுமிருக்கும் பொதுவெழுத்துக்களையும் இச்சூத்திரத்தால் வகுத்துக் கூறினாரென்றறிக.

முதலெழுத்தினுள், ற ன ழ எ ஒ என்னும் ஐந்தும் தமிழ்ச் சிறப்பெழுத்து. சார்பெழுத்துக்களுள்ளே உயிர்மெய் இருநூற்றுப் பதினாறில், ற ன ழ என்னு மூவருக்கங்களாலாகிய முப்பத்தாறு எழுத்துக்களும் ற் ன் ழ் என்னு மூன்று மெய்யுமொழிய நின்றமெய் பதினைந்தில் எகர ஒகரமாகிய இரண்டுயிர்களின் கலப்பினால் வந்த உயிர்மெய் முப்பதும் ஆகிய அறுபத்தாறு உயிர் மெய்யெழுத்துக்களும்,

ஆய்தமும், ஒற்றளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் தமிழ்ச் சிறப்பெழுத்துக்களாம்.

உயிரெழுத்துக்களுள்ளே அ ஆ இ ஈ உ ஊ எ ஐ ஒ ஔ என்னும் பத்தும், மெய்யெழுத்திலே க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ள் என்னும் பதினைந்தும், இப்பதினைந்து மெய்களோடு எகர ஒகர மிரண்டுமல்லாத பத்துயிருங் கலத்தலாலுண்டான உயிர்மெய் நூற்றைம்பதும், உயிரளபெடையும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாம்.

உயிர்மெய்யைப் பொதுவெழுத்தென்று சூத்திரங்கூறியிருக்கவும் உயிர்மெய் இருநூற்றுப் பதினாறையும் பொதுவெழுத்தென்று கொள்ளாமல் அவற்றுள் நூற்றைம்பதைமாத்திரம் பொதுவெழுத்தென்றுகொண்டு, மற்றை அறுபத்தாறுயிர்மெய்களையுந் தமிழ்ச் சிறப்பெழுத்துட் கொண்டதென்னை யெனின், ற் ன் ழ் என்னு மூன்றொற்றையுந் தமிழ்ச் சிறப்பெழுத்தென்றா ராதலின் இந்த மூன்றொற்றும் உயிரொடு கலந்துண்டாகு முயிர்மெய்யும் ஆரியத்திலில்லை யாமாதலினாலும், எ ஒ என்னு மிரண்டுயிரைத் தமிழிற்குச் சிறப்பெழுத்தென்றாராதலின் மெய்யொடு இவ்விரண்டுயிர் கலத்தலாலுண்டாகும் உயிர்மெய்யும் ஆரியத்திலில்லையாமாதலினாலும் அவற்றைக் கழித்து நின்றவற்றையே பொதுவெழுத்தாகக் கொள்ள வேண்டுதலாலென்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: முதலும் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதில் –, ற ன ழ எ ஒவ்வும்** – இவ்வைந்து முதலெழுத்துக்களும், **உயிர்மெய் உயிரளபு அல்லா சார்பும்** – உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்து எட்டும், **தமிழ்** – தமிழுக்கே (சிறப்பெழுத்துகளாம்), **பிற** – ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும், **பொது** – (தமிழுக்கும் ஆரியத்துக்கும்) பொது வெழுத்துகளாம்; **எ–று.** எகர ஒகரங்கள் பிராகிருத பாஷைக்கும் உரியனவாதலால், மெய்யை முற் கூறினார்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ற ன ழ எ ஒவ்வும் – (முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுள்) றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும், உயிர் மெய்யும் உயிரளபு அல்லாச் சார்பும் – உயிர் மெய்யும், உயிரளபெடையுமல்லாத சார்பெழுத்தெட்டும், தமிழ் – தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம். பிற பொது – ஒழிந்த இருபத்தேழெத்துக்களும் பொதுவெழுத்துக்களாம். எ–று. (23)

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ற ன ழ எ ஒவ்வும் – (முதலுஞ் சார்பு மாகிய தமிழெழுத்து நாற்பதில்) றகர னகர ழகர எகர ஒகரங்கள் ஐந்தும், உயிர்மெய்யும் உயிரளபு அல்லா சார்பும் – உயிர்மெய்யும் உயிரள பெடையு மல்லாத சார் பெழுத்தெட்டும், தமிழ்–தமிழுக்கே (சிறப்பெழுத்துக்களாம்); பிற – மற்ற இருபத்தே ழெழுத்துக்களும், பொது – தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது எழுத்துக்களாம். **எ–று.**

**பொ–ரை.:** (முதலும் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதில்) றகர னகர ழகர எகர ஒகரங்க ளைந்தும், உயிர்மெய்யும், உயரள பெடையு மல்லாத சார்பெழுத்து எட்டும் தமிழிற்கே சிறப்பெழுத்துக்களாம்; ஒழிந்த இருபத்தே ழெழுத்துக்களும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொது வெழுத்துக்களாம்.

(உ–ம்.) சிறப்பெழுத்து. பொதுவெழுத்து.

ற் மெய் – க், ங், ச், ஞ் ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ள்.

ன்

ழ்

எ உயிர் – அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஔ.

ஒ

ஃ

ஒற்றளபு சார்பெழுத்து.

குற்றியலிகரம் க, கா, கி, கீ முதலிய உயிர்மெய், உயிரளபு.

குற்றியலுகரம்

ஐகாரக்குறுக்கம்

ஔகாரக்குறுக்கம்

மகரக்குறுக்கம்

ஆய்தக்குறுக்கம்

இருபத்தேழு பொது வெழுத்துக்களாவன: மெய்யினுள் பதினைந்தும், உயிரெழுத்துள் பத்தும், சார் பெழுத்து ஒன்றும், உயிரளபெடை ஒன்றுமாம்.

## கா. நமசிவாய முதலியார்

றனழஎ ஒவ்வும் – (முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதுகளிலே) றகர னகர ழகர எகர ஒகரங்கள் ஐந்தும், உயிர்மெய்யும் உயிரள பல்லாச்சார்பும் – உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்து எட்டும், தமிழ் – தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம், பிற – ஏனைய இருபத்தேழெழுத்துக்களும், பொது – பொதுவெழுத்துக்களாம்.

## மோசசு பொன்னையா

தமிழ் எழுத்துக்களில் ன, ற, ழ, எ, ஒ என்ற ஐந்து முதல் எழுத்துக்களும், உயிர்மெய்யும், உயிரள பெடையுமல்லாத பிற எட்டுச் சார்பெழுத்துக்களும், தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம். ஒழிந்த முதலெழுத்துக்கள் இருபத்தைந்தும், சார்பெழுத்துக்கள் இரண்டும் கூடிய இருபத்தேழும் பொதுவெழுத்துக்களாம், எ–று.

(23)



பதவியல் முற்றிற்று

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை – 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| வல்லம் தலபுராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம்–விளிம்புநிலைமக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| அண்ணா ஒரு சமூகக் குறியீடு | 40.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| சுவடிப்பதிப்பாசிரியர்கள் | 45.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச் சொற்களும் இலக்கணக் கூறுகளும் | 85.00 |
| மதங்களும் மனிதநேயமும் | 90.00 |
| பெயரியல் | 55.00 |
| சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல் | 80.00 |
| தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும் | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| உலகச் செம்மொழிகள் | 90.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |
| சேக்கிழாரும் இசைத்தமிழும் | 50.00 |
| சித்தர்களின் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு | 105.00 |
| கவிஞர் புதுவைச் சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள் | 120.00 |
| பெ.நா.அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள்–தொகுதி–3 | 235.00 |
| சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தைபெரியாரும் | 105.00 |
| மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் பன்முக ஆளுமை | 50.00 |
| நரம்புக் கருவிகள் | 70.00 |
| திணை வரலாறு | 70.00 |
| பெரியாரிய நோக்கில் மு.வ. | 55.00 |
| திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும் | 75.00 |
| சுவடிப்பதிப்பு முன்னோடிகள் | 60.00 |
| விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல் பண்புகள் | 80.00 |
| அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி–1) | 175.00 |
| அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி–2) | 200.00 |
| உதயணகுமாரகாவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | 50.00 |
| பாணர் இனவரைவியல் | 110.00 |
| திராவிட மொழிகளும் திராவிட மொழி ஆய்வுகளும் | 135.00 |
| சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி–1) | 135.00 |
| சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி–2) | 140.00 |

**நன்னூல் உரை வளம்** பதவியல் **140.00**